கட்டி அணைத்துத் தீராத நோய்களை நீக்கி அருள் சுரக்கும் அம்மா !



மாதா அமிர்தானந்தமயி தேவியே நம :

A. Kumary

கட்டி அணைத்துத் தீராத நோய்களை நீக்கி அருள் சுரக்கும் அம்மா!

தொகுப்பு ஆசிரியை
திருமதி க.நாகேஸ்வரி

ஓம் ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி தேவியே நம:

Mrs. K.NAGESWARY
HASSEL RIEDE-9
BISSENDORF
30900 - WEDE MARK
GERMANY
TP : 671-800-8327
27.02.2011

Mrs. K.NAGESWARY
HASSEL RIEDE-9
BISSENDORF
30900 - WEDE MARK
GERMANY
TP : 671-800-8327
27.02.2011







ஹிந்துமதத்தை, "ஸநாதன தர்மம்" என்றே அழைக்கிறோம். ஏனெனில், அது எந்த தேசத்திற்கும், காலத்திற்கும் பொருந்துவதாகும். அனைவரது மேன்மைக்கும் உரிய நிலையான உண்மைகளை அது கற்பிக்கின்றது. அனைவரும் மேன்மை நிலையை அடைவதே ஹிந்து தர்மத்தின் குறிக்கோளாகும். அங்கே பிரிவுக்கும், குறுகிய மனப்பான்மைக்கும் இடமில்லை.

"அஸதோ மா ஸத்கமய" (பொய்ம்மை நிலையிலிருந்து மெய்யான நிலைக்கு அழைத்துச் செல்வாயாக): "தமஸோ மா ஜ்யோதிர் கமய" (அறியாமை இருளிலிருந்து ஞான வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்வாயாக) "ம்ருத்யோர் மா அம்ருதம் கமய" (மரணத்திலிருந்து இறவா பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்வாயாக) "லோகா ஸமஸ்தா: ஸுகினோ பவந்து" (அனைத்து உலகங்களும் சுகமாக இருக்கட்டும்) இவையே ரிஷிகள் உலகிற்கு நல்கியுள்ள மந்திரங்கள். இவற்றில் எதையும், எவரையும் வேறாகக் காணும் சிந்தனையின் ஒரு அணுவைக் கூடக் காண முடியாது.

உலகத்திற்கு சுயநலமற்ற சேவை செய்யும் போது நீங்கள் அம்மாவிற்குத் தான் தொண்டு செய்கின்றீர்கள்.

அம்மா

முன்னுரை

"கடவுளைக் கண்டதுண்டா?" என்று கேட்டுப் பலரிடம் சென்ற சுவாமி விவேகானந்தருக்கு "ஆம் பிள்ளாய் கடவுளைக் கண்டுள்ளேன்; உனக்கும் காட்டுவேன்" என்று கூறி தட்சணேசுவரக் காளியுடன் கதைக்கவும் வைத்தார். ஸ்ரீஇராமகிருஷ்ண பரமகம்சர். இது 120 வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம். தக்க பக்குவமுள்ளவர்களுக்கு அப்படிக் கடவுளைக் காட்டவும், ஏனையோருக்கு வாழ்க்கைப் பிரச்சனை, நோய், துன்பம், அல்லல் என அவரவருக்குரிய பிரச்சனை எதுவானாலும் அதை அறவே அகற்றி அவர்களை ஆண்டவன் சந்நிதியில் அமர்த்தவும் வல்ல ஒருவரை நாம் இப்பொழுதும் காணலாம். அவர் தான் மாதா அமிர்தானந்தமயிதேவி. கண்ணனின் நிறம் படைத்த காளியின் அம்சம். அவர் தூயவெண் ஆடையுடுத்தவர். அவர் அன்பும், கருணையும், ஞானமும் ஒருங்கே அமைந்த அன்னபூரணிதேவி, ஜாதி, ஏற்றத்தாழ்வு, படித்தவர், பாமரன், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் அம்மாவிடம் அறவே இல்லை. பார்ப்பதற்கு மிகவும் எளியவர். படாடோபம் அற்றவர். பல மடங்களில் முன் கூட்டியே அனுமதி பெற்றுத்தான் பார்க்க முடியும் என்கின்ற கட்டுப்பாடு அம்மாவின் மடத்தில் இல்லை. பிச்சைக்காரன் முதல் கோடீஸ்வரன் வரை யார் வந்தாலும் மகனே! மகளே! என்று அன்பால் அரவணைத்து அவர்களது பல பிரச்சனைகளைத் தனது திருக்கரத்தால் துடைத்து அருள்புரிபவர் இந்த அம்மா. பாமரர்களைக் கவர்ந்திழுப்பதில் சித்துக்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இங்கு அம்மாவோ சித்துக்களை அறவே வெறுக்கின்றார். ஆனால் அற்புதங்களைச் செய்கின்றார். சமூகசேவை, பஜனை, தியானம் போன்றவற்றிற்கு முக்கிய இடம் கொடுக்கின்றார். தீவிர சாதனை செய்கின்றவர்கள் வெளிநாட்டவர் உட்பட கடுமையான கட்டுப்பாட்டில் மிக எளியவாழ்க்கை வாழ்ந்து அம்மாவின் சந்நிதியில் சாதனையில் செயற்படுகின்றனர்.

அம்மாவின் அரவணைப்புக்கு நானும், எனது மனைவியும் பலமுறை ஆளானோம். இருமுறை அமிர்தபுரிக்குச் சென்று அவரைத் தரிசிக்கும் பேறும்

பெற்றோம். அப்போது அம்மா எங்கள் இருவரையும் தமதருகில் இருக்கும் படி கூறி பிரசாதங்களையும் வழங்கினார். அருகிலிருந்து அம்மையின் திருவுருவத்தை உற்று நோக்கிய போது கன்னங்கள் கண்டிக்கறுத்திருந்தது. காரணம் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களைக் கட்டி அணைத்து முத்தமிடுவதால் ஏற்பட்ட கண்டலே என யூகித்து அறிந்து கொண்டோம். அம்மாவின் தோள்பக்கம் பக்தர்கள் கதறி அழுது விட்ட கண்ணீரால் நனைந்திருந்தது.

இந்நூலின் தொகுப்பு ஆசிரியை சகோதரி நாகேஸ்வரி அவர்கள் முன்பு தெரியாத அம்மாவால் வலிந்து ஈர்க்கப்பட்டவர். எம்மைப் போன்ற சாமானியர்களுக்குக் கிடைக்காத பெரும் பேற்றை அவர் பெற்றுள்ளார். அவர் முன்செய்த நல்வினைப் பயன் போலும். அவர் பற்றிய விபரம் வெள்ளைச் சேலை கட்டிய கறுப்பு மாது என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். கொழும்பு மாநகரில் தலைநிமிர்ந்து நிற்கும் ஒரு சில அச்சகங்களில் லட்சுமி அச்சகமும் ஒன்று. ஆன்மீக சம்பந்தமான புத்தகங்களையும், பிரசுரங்களையும் இலாபநோக்கில்லாது மிகவும் மலிந்தவிலையில் அச்சிட்டுக் கொடுப்பவர்கள். அந்தவரிசையில் இந்த இலவச வெளியீட்டையும் தொகுப்பு ஆசிரியை சகோதரி நாகேஸ்வரி, லட்சுமி அச்சகம், இடைக்காடு இந்துநெறிக்கழகம் ஆகியவற்றின் உறுதுணையுடன் இவ்அரிய நூலை வெளியிடுகின்றார். அவரது சேவை மேலும் விரிவடைய அம்மா அருள்புரிய வேண்டுமென்று இறைஞ்சி நிற்கின்றோம்.

17B 1/3 மயூரா இடம்
வெள்ளவத்தை
கொழும்பு - 06
இலங்கை
தொ.பே.இல:011-2552285
கை.தொ.பே.இல:0777406484
27.02.2011

கைலைமணி வேல்.சுவாமிநாதன்
தலைவர்
இடைக்காடு
இந்துநெறிக்கழகம்

பொருளடக்கம்

1. அம்ருதேச்வரி திருப்பள்ளி எழுச்சி
2. தெய்வீகக் குழந்தை
3. இளம் கர்மயோகி
4. நல்ல நண்பர்கள்
5. ஆசிரமத்தின் உதயம்
6. என் மகள் என் அம்மா
7. அம்மாவின் அருளுரைகள்
8. வலது தோளில் கண்ணீர் உப்பு
9. ஜெய் ஜெய் காளிமா
10. என்னை விழிப்புறச் செய்த இன்னிசை
11. தெய்வீக அன்பு
12. நவராத்திரி
13. டாக்டரம்மா
14. உண்மை இன்பம்
15. கிருஷ்ணரது கிரீடம்
16. குஷ்டரோகி தத்தன்
17. முடமான நோயாளி குணமடைந்தார்.
18. அறுவைச் சிகிச்சையின் போது அம்மாவின் ஆதரவு
19. உயிர்த்தெழுந்த சியாமா
20. அம்மாவின் அமுதவாக்குகள்
21. சந்தனத்தின் மகிமை
22. நாமஜெபத்தின் மகிமை
23. தீபத்தின் தத்துவம்
24. விரதங்களின் மகத்துவம்
25. பாத பூசையின் மகத்துவம்

26. கோ பூசை

27. விபூதியின் மகிமை

28. இந்துக்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விஷயங்கள

29. அம்மா எழுதாத கடிதம்

30. அம்மாவின் தங்கவளையல்

31. அம்மாவுக்குக் கௌரவ டாக்டர்ப் பட்டம்

32. ஆன்மீகத்தின் விளக்கம்

33. ஒரு பத்து நிமிடம்

34. ஆத்மா உள்ள கல்வி முறை

35. தணியாத தாகம்

36. நன்மை நிறைந்த மனம்

37. காரணமற்ற கருணை

38. சிவப்பு நிற உடை அணிந்த வடிவம்

39. வாழ்வின் பயன்

40. அவல் முடிச்சு

41. நாமும் நல்லவர்களாவோம்

42. சமநோக்கு

43. அகத்தூண்டுதல்

44. வாழ்வின் பயன்

45. எப்பணியும் திருப்பணியே

46. குண்டலினி சக்தி

47. வெள்ளைச் சேலைகட்டிய கறுப்பு மாது

48. சுனாமியால் இலங்கைத் தீவில் திருப்பாதம் பதித்த மாதா அமிர்தானந்தமயிதேவி

1. அம்ருதேச்வரி திருப்பள்ளியெழுச்சி



பொழுது புலர்ந்தது கதிரவன் எழுந்தனன்
போற்றிப் பணிந்திட பக்தர் வந்தனர்
தொழுது திருவடி தூமலர் தூவித்
தோரண வாயில் மக்கள் திறந்தனர்
உழுத நிலமென உள்ளம் பண்பட
உன்னையே போற்றி வாயிலில் நின்றனர்
விழுதுகள் பரப்பிவிளங்கமு தேச்வரி
வேணியே! பள்ளி எழுந்தரு ளாயே!

பஞ்ச தசாட்சரி மந்திரப் பொருளே
பண்டனை வதைத்த லலித்தாம் பிகையே
நெஞ்சிலே வாழ்ந்திடும் நித்திய கல்யாணி
நெருப்பில் தவம்செய் காமாட்சித் தாயே
கஞ்சனை மாய்த்த மாதவன் சோதரி
காளியாய் வந்த அமுதேச் வரியே!
தஞ்சமாய் உன்றன் தாளிணைப் பணிந்தோம்!
தாரணி பள்ளி எழுந்தரு ளாயே!

பெருந்துணை யாக மக்களைக் காக்கும்
பிந்து மண்டல வாசினி பிராம்மி!
அருந்துணையாக ஆதர வீந்தே
அடியவர் அல்லல் தீர்த்திடும் அம்பிகே!
ஒருதுணை யாக உயர்ந்திடும் தேவி
உளத்தா மரையின் அமுதேச் வரியே!
வரும்துணை நீயே! வாகீஸ் வரியே!
வல்லி பள்ளி எழுந்தரு ளாயே!

அன்னையே என்றால் அருகினில் வருவாய்!
அன்பினைச் சொரிந்து பலநலம் தருவாய்!
என்னையே உனக்குத் தந்தேன் அம்மா!
எங்களைக் காப்பதோ உன்கடன் தாயே!

மன்னவர் போற்றிடும் மகேசி நீயே!
மங்கல நாயகி அமுதேச் வரியே!
கன்னலின் சுவையாய்க் கனிந்தவள் நீயே!
கனிவுடன் பள்ளி எழுந்தரு ளாயே!

அருமருந் தம்மை! பூங்கொடி நாயகி!
அழகுச் சடையாள்; மங்கள நாயகி!
அருந்தவ நாயகி; அழகாம்பிகையே!
சுரும்பார் குழலி; மரகத வல்லி!
சவுந்தர நாயகி; காந்த நாயகி
திருமறை விளக்காம் அமுதேச் வரியே!
தேவிநீ பள்ளி எழுந்தரு ளாயே!

சாந்த மூர்த்தி! அகண்ட ரூபிணி!
சச்சிதா னந்த வடிவம் நீயே!
சேந்தனைப் பெற்ற சிம்ம வாகினி
செல்வம் கொழிக்கச் செய்திடு வாயே!
மாந்தர் குலமெல்லாம் மற்றுள உயிரெலாம்
மண்ணில் உயர்த்திடும் அமுதேச் வரியே!
தாந்தி ரீகத்தின் தனியொளி நீயே!
தாயே பள்ளி எழுந்தருளாயே!

அங்கயற் கண்ணி ஏலவார்குழலி!
ஆவுடை நாயகி மதுரை மீனாட்சி!
பங்கயப் பொய்கைச் சிவகாமி அம்மை!
பாடும் நற்குயில் அமிர்த நாயகி!
பொங்கிடும் பரிவுக் கருணை நாயகி!
போற்றிடும் தேவை மலைவளர் காதலி!
எங்குமே நிறைந்த சொர்ண வல்லி!
எந்தாய் பள்ளி எழுந்தரு ளாயே!

வேதாம்பிகையே! பண்பொழி நாயகி!
வேண்டும் வரம்தரும் கருணாம்பிகையே



நாதாம் பிகையே! பாகம் பிரியாள்
நீலமலர்க் கண்ணி பண்ணேர் மொழியாள்!
மாதாம் பிகையே சிவபுரந் தேவி!
மங்கலம் தந்திடும் கிருபா நாயகி!
பாதாம் புயத்தில் பணிந்திடு வோமே!
பாலா பள்ளி எழுந்தருளாயே!



உலகினைத் தாங்கும் விசுவேச் வரியே!
உள்ளம் வாழும் காமேச் வரியே!
கலங்கிடும் மனத்தைக் காத்திடும் தாயே!
களிப்புடன் அருளும் அமுதேச் வரியே!
துலங்கிடும் வாழ்வின் சுடரொளி விளக்கே!
துணிவும் உரமும் தந்திடும் காளி!
நிலவுல கெல்லாம் உன்னருள் தானோ!
நிரஞ்சனி பள்ளி எழுந்தரு ளாயே!

முனிவர் மனமாம் பொய்கையில் நீந்தும்
மூகாம்பிகையாய் வந்தவள் நீயே!
கனிவுடன் மக்கள் உள்ளமே வாழும்
கருணா சாகரி குமரித் தாயே!
பனிமலை வந்த இமய வல்லி!
பார்வதி நீயே அமுதேச் வரியே!
இனிய பொற்பதம் இசைவுடன் பணிந்தோம்
ஈஸ்வரி பள்ளி எழுந்தரு ளாயே!

பாலினில் நெய்யாய் எள்ளில் எண்ணெயாய்
பரவியே உள்ள பர்வத வர்த்தினி
நூலினில் நயமாய் நுண்ணறி வான
நுவன்றிட அரிய தர்மசம் வர்தினி!
மேலினைத் தந்தே வெற்றி கொடுத்திடும்
வேலவன் தாயாம் சக்தி நீயே!
ஆலினைப் போலவே அறம்தழைத் திடவே
அம்மா பள்ளி எழுந்தரு ளாயே!

சமயம் கடந்த சக்தி மாகாளி
சத்திய தரிசனம் தந்திடும் தேவீ
இமயச் செல்வன் இனிய புதல்வி!
இன்னருள் சுரக்கும் மாதவச் செல்வி
யமனின் பாசக் கயிறும் அஞ்சும்
யாமளை நிரந்தரி அமுதேச் வரியே!
சமயமே தெரிந்து மக்களைக் காக்க
சங்கரி பள்ளி எழுந்தரு ளாயே!

தேங்கமழ் சோலைத் தென்னைகள் சூழத்
தினந்தொறும் அலைகள் இன்னிசை பாடும்
ஓங்கிய கோயில் மண்டபம் தன்னில்
ஒளிவிடும் நிலவாய் அமர்ந்திடும் தாயே!
பூங்கொடி மலரும் அமிர்த புரியின்
பொன்னொளிர் கதிரே அமுதேச் வரியே!
மாங்கனிச் சுவையாய் அமுத மொழிதரும்
மகேசி பள்ளி எழுந்தரு ளாயே!

கருமணிக் கண்கள் பார்வையினாலே
கவலைகள் போக்கும் திரிபுர சுந்தரி!
திருமணிக் குரலால் பரிவினைத் தந்து
தேறுதல் கூறும் தெய்வ மாமணி
குருமணி யாகநல்வழி காட்டிக்
கோயில் கொண்ட அமுதேச் வரியே!
அருமணி யாக வந்தெமைக் காக்கும்
அன்னையே பள்ளி எழுந்தரு ளாயே!



சிந்தா மணியாம் அமிர்த புரியின்
செல்வி எந்தாய் அமுதேச் வரியே!
செந்தா மரைப்பூ செழிக்கும் பொய்கையில்
செந்திரு மகளாய் வந்தவள் நீயே
சுந்தரக் கதம்ப வனத்தினில் வாழும்
ஜோதி மீனாட்சித் தாயும் நீயே

வந்தனை செய்ய மக்களும் வந்தோம்
வாணி பள்ளி எழுந்தரு ளாயே



நீல வண்ண மேனியைக் கொண்டாய்
நெடுமால் சோதரி பூவுல காள்வாய்
ஆலம் உண்டோன் முக்கண் பெற்றாய்!
அதற்கு மேலே பிறைநிலா தவழும்
கோல மகுடம் தரித்தாய் அம்மா!
கொஞ்சும் புன்னகை கொண்டாய் தாயே!
மூல முதலே அமுதேச் வரியே!
மோகினி பள்ளி எழுந்தரு ளாயே!

காலைக் கதிரவன் சுடர்விடும் முகத்தில்
கருணை பொழியும் பரிவுடைக் கண்கள்!
சோலை மலர்க்கணை கரும்புவில் பாசம்
சூழ அங்குசம் ஏந்தும் கரங்கள்!
வாலைக் குமரி அணிமாதி சக்திகள்?
வளைய நின்றிடும் தேவி பவானி!
மாலை மதியமே அமுதேச் வரியே!
மலரே பள்ளி எழுந்தரு ளாயே!

புவன நாயகி போற்றிடும் நாரணி!
பூரண மான சக்தி சாமளி!
பவள மல்லிகை பஞ்சணை மீதிலே
பாரினைக் காத்திட நின்றிடும் நிர்மலீ!
தவள நிலவெனப் புன்னகை சிந்திடும்
தாயே எங்கள் அமுதேச் வரியே!
கவலை போக்கிடக் கண்மலர்ந் தருள்வாய்
கவுரியே பள்ளி எழுந்தரு ளாயே!

ஆரிடர் செய்யினும் அதனைப் போக்கியே
ஆக்கமே தந்திடும் அமுதேச் வரியே!
பேரிடர் நீக்கிப் பெருமையே சேர்க்கும்

பிறைநிலா சூடிடும் உமையவள் நீயே!
யாரிடம் சொல்வேன் என்குறை அம்மா!
யாளியே ஏறும் சின்மயீ காப்பாய்!
சேரிடம் தெரிந்தேன் எங்களைக் காக்கச்
செல்வியே! பள்ளி எழுந்தரு ளாயே!

திருவே! மேற்றிசை தோன்றிய கதிரே!
தெய்வமாய் எம்மைக் காத்திடும் மாயே!
பொருளும் அருளும் பொழிந்திடும் முகிலே!
பொன்மறை பெய்திடும் பங்கயச் செல்வி!
பருவரை சூழ்ந்த கேரளம் தன்னில்
பனிமலைப் பாவையாய் வந்த சிலையே!
அருள்தரும் தாயே அமுதேச் வரியே!
அருளே பள்ளி எழுந்தரு ளாயே!


காரணம் நீயே! காரியம் நீயே!
காரண காரியம் கடந்தவள் நீயே!
ஆரணம் தந்த அம்பிகை நீயே!
ஆரணப் பொருளாய் அமைந்தளம் தாயே!
வாரணம் தன்னைப் பெற்றவள் நீயே!
வாரியாய் நலம்தரும் கணபதி தாயே!
தோரண மாகவே துலங்கிடும் அமுதே!
தூயவள்! பள்ளி எழுந்தரு ளாயே!

மேலைக் கடற்கரை அமிர்த புரியினில்
மேதினி புரந்திட வந்த புரந்தரி!
சோலை நடுவிலே சோதி மலரெனச்
சொல்லின் பொருளாய் வந்த நிரந்தரி!
காலையும் மாலையும் துன்பக் கடலினைக்
கடந்திட உதவும் எங்கள் தயாபரி!
ஆலைக் கரும்பெனும் அல்லல் நீக்கவே
அன்னையே பள்ளி எழுந்தரு ளாயே!



செண்பகக் காவினில் உன்னறம் வளரும்
செந்தமிழ்ப் பாவினில் உன்புகழ் பெருகும்!

விண்ணவர் உன்னை நாள் தோறும் பணிவர்!
வியனிலம் எல்லாம் உன்னடி தொழுமே!
மண்ணகம் செழிக்க உன்னருள் நாடும்!
மாதரர் வாழ்வில் மங்கலம் கூடும்
பண்பெலாம் பெருக்கும் அமுதேச் வரியே!
பரமே பள்ளி எழுந்தரு ளாயே!



தளரா உடலே தரவே வேண்டும்!
தவமே சிறக்க உன்னருள் வேண்டும்!
இளமை மாறா இதயமே வேண்டும்!
இனிய வாழ்வினை அருளவே வேண்டும்!
குளமாய்ப் பெருகி உதவிட வேண்டும்!
கும்பிடும் மக்கள் நலம்பெற வேண்டும்!
வளமே தருவாய் அமுதேச் வரியே
வானதி பள்ளி எழுந்தரு ளாயே!

குணங்கள் கடந்தாய் குறிகள் கடந்தாய்!
குவளைக் கண்ணி கோவிந்த ரூபிணி!
அணங்காய் வந்தே ஆதி மூர்த்தியின்
அருகில் அமர்ந்த ஆதி சக்திநீ!
கணங்கள் சூழக் கயிலை வாழ்ந்திடும்
கவுரி பரமேச்வரி நீயே அம்மா!
வணங்க நீயே வரங்கள் தருவாய்!
வைணவி பள்ளி எழுந்தரு ளாயே!

உள்ளம் தன்னை அகல்விளக் காக்கி!
கள்ளம் இல்லா உயிர்த்திரி யாகக்
காசினி போற்ற நெய்யிலே இட்டு
தெள்ளிய ஞானத் தீயால் ஏற்றித்
திருவடி பணிந்தோம் அமுதேச் வரியே
வெள்ளமாய் பரிவைப் பொழிந்திடத் தாயே
விரைந்து பள்ளி எழுந்தரு ளாயே!

மெய்யெலாம் உருக மேனி சிலிர்க்க
மெய்த்தவத் தாயே உன்னடி பணிந்தோம்!
பொய்யெலாம் அகலப் புதுமைகள் விளையப்


புவனேச் வரியே பொன்னடி தொழுதோம்!
செய்யெலாம் செந்நெல் செல்வமே கொழிக்கச்
சித்கலை உன்புகழ் பாடியே மகிழ்ந்தோம்
உய்யவே அம்மா உதவிடு வாயே!
ஓமெனப் பள்ளி எழுந்தரு ளாயே!


எண்ணும் எழுத்தும் எல்லாம் ஆனாய்!
எங்கள் சிந்தை நீங்கா திருப் பாய்!
பண்ணாய் இசையாய்ப் பரவி நின்றாய்!
பாவம் போக்கியே மக்களைக் காப்பாய்!
மண்ணும் விண்ணும் தொழுது நிற்கும்
மாலினி நீயே அமுதேச் வரியே!
கண்ணின் மணியாகக் காத்திட வேண்டிக்
காளியே பள்ளி எழுந்தரு ளாயே!

எல்லாப் பொருளும் ஆனாய் போற்றி
எந்தை சிவத்தின் சக்தியே போற்றி
கல்லார் காண அரியாய் போற்றி
கற்றவர் போற்றும் கலையே போற்றி
பொல்லார் மாசு அகற்றுவாய் போற்றி!
புனிதர் வணங்கும் புனிதையே போற்றி!
நல்லார் மனம்வாழ் அமுதேச் வரியே!
நாரணிபள்ளி எழுந்தரு ளாயே!

கற்பகப் பொழிலே காம தேனுவே!
கடல்தரு முத்தே காவினார் பவளமே!
சொற்பதம் கடந்த ஜோதி மலரே!
சுவையே குன்றாத் தெய்விகக் கனியே!
பொற்பதம் பணிவோர் பொற்குவை அடையப்
பொன்னொளிக் காட்சி தந்திடும் தேவீ!
அற்புதத் தெய்வம் அமிர்தேச்வரியே!
பொன்னெளி காட்சித் தந்திடும் தேவி!
அற்புதத் தெய்வம் அமிர்தேச்சவரியே!

திரு.சொக்கு சுப்பிரமணியம்.





தெய்வீகக் குழந்தை



2. தெய்வீகக் குழந்தை

பறயகடவு, தென் கேரளத்தின் கடற்கரையிலிருக்கும் ஓர் சிறிய கிராமம். இந்தக் கிராமத்திற்குக் கிழக்கே காயல் நீர் சூழ்ந்துள்ளது. மேற்கே அரபிக்கடல் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றது. சிறு தீவு போல் அமைந்துள்ள இக்கிராமத்தில் ஏராளமான தென்னை மரங்கள் பச்சைப்பசேலென அழகாக விளங்குகின்றன. நினைவு தெரிந்த காலம் முதல் இங்கே மீனவர்கள் தான் வசித்து வருகின்றனர். இந்தக் கிராமத்தின் புனிதத்தன்மையைக் குறித்துப் பல புராணக் கதைகள் உள்ளன. இங்குள்ள மீனவர்கள், தங்கள் பராசர மஹரிஷியின வழியில் வந்தவர்களெனப் பெருமிதத்தோடு கூறிக் கொள்வார்கள். பராசரர் மீனவக் குடும்பத்தில் பிறந்த சத்தியவதியை மணந்தார். இவர்களுக்கு மகனாக வேதவியாசர் தோன்றினார். பல்லாயிரம், வருடங்களுக்கு முன்பாக வேதங்களைத் தொகுத்தவர் மஹரிஷி வேதவியாசர் ஆவார்.

மீனவர்கள் தானம் வழங்குவதில் தாராள மனம் படைத்தவர்கள். அவர்கள் மீன் பிடித்து விட்டுக் கரைக்குத் திரும்பும் போது பல ஏழைகள் படகைச் சூழ்ந்து கொள்வார்கள். அவர்களுக்கு மீனவர்கள் தாங்கள் பிடித்து வந்த மீன்களில் ஒரு பகுதியை முதலில் தானமாகக் கொடுப்பார்கள். பிறகுதான் மீன்களை விற்பார்கள். மீன்களை விற்றுக் கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியைச் சிறுவர், சிறுமியர்களுக்குத் தானமாகக் கொடுப்பார்கள்.

இது போன்ற ஒரு மீனவப் பரம்பரையில் வந்த, பாரம்பரியம் மிக்க வம்சமாகப் பறயகடவில் இருந்த இடமண்ணேல் குடும்பம் விளங்கியது. இந்தக் குடும்பத்தினரின் அன்றாட வாழ்வில் கடவுள் வழிபாடு முக்கியமான இடம் வகித்தது. இக்குடும்பத்தில் பல பக்தர்கள் பிறந்துள்ளனர். அவர்களுள் வேலாயுதம் ஒருவராவார். அவர் இரக்க குணமும், தாராள மனதும் படைத்தவர். சத்தியத்தைக் கடைப்பிடித்தவர்.அது மட்டுமல்ல அஹிம்சை நெறியையும் கடைப்பிடித்தவர். எலியைக் கொல்வதற்குக் கூட அவர் சம்மதிக்க மாட்டார். மத அனுஷ்டானத்தில் சிறந்த மங்கை நல்லாள் மாதவி அவருக்கு மனைவியாக வாய்த்தார். மாதவி தினமும் அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன்பே எழுந்து விடுவார். வீட்டுப் பூஜையறையில் இருக்கும் சுவாமி படங்களுக்கு மாலை தொடுப்பார். அப்படி மாலை தொடுக்கும்

போது மந்திர ஜபம் செய்வார். எண்பது வயதான போதும், அம்மாவின் ஆசிரமத்து ஆலயத்தின் தாழ்வாரத்தில் அமர்ந்து, தினசரி பக்தியுடன் மாலை தொடுத்து வந்தார்.

வேலாயுதம், மாதவி தம்பதியரின் மூத்த மகனாகச் சுகுணானந்தர் பிறந்தார். சிறு வயதிலேயே அவருக்குக் கண்ணபெருமான் மீது பக்தி இருந்தது. கேரளத்தின் பாரம்பரிய நாட்டியமான கதகளியை இளம் வயதிலேயே கற்றார். கதகளி நாட்டிய நாடகங்களில் கண்ணனாக வேஷம் தரிப்பதை அவர் மிகவும் விரும்பினார்.

சுகுணானந்தருக்குப் பதின்மூன்று வயதிருக்கும். தனது உறவுப் பையன் ஒருவனுடன் பள்ளியிலிருந்து திரும்பி வந்து, வீட்டுத் தோட்டத்திலிருந்து ஒரு முந்திரி மரத்தில் ஏறி, இருவரும் அதன் பழங்களைப் பறித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அந்த மரத்தடிக்கு, நீண்ட முடியும், தாடியும் கொண்ட சந்நியாசி ஒருவர் வந்தார். சிறுவர்கள் இருவரும் அவரை இதற்கு முன்பு பார்த்ததில்லை. அவருடைய முகத்தில் அற்புதமான தேஜஸ் விளங்கியது. இதைக் கண்டு சிறுவர்கள் வியப்படைந்தனர். சந்நியாசி வாய்விட்டு மகிழ்வோடு சிரித்தபடி தனக்குத் தானே "இங்கு பல துறவியர் கடவுளைத் தரிசித்துச் சமாதிநிலையை அனுபவிப்பார்கள். இது ஒரு புனித ஷேத்திரமாகும்" என்று கூறினார். அதைக் கூறிய பிறகு அவர் மீண்டும் சிரித்தபடியே அங்கிருந்து போய்விட்டார். சிறுவர்கள் அவரை அதன் பிறகு பார்க்கவே இல்லை.

சிறுவர்கள் இருவரும் சந்நியாசி கூறியதைக் கேட்டுத் திகைத்துப் போனார்கள். சுகுணானந்தரின் வீடும், தோட்டமும் இருக்குமிடம் புனித ஷேத்திரமாவதா? பல வருடங்களுக்குப் பிறகு அங்கு ஓர் ஆசிரமம் உருவான போதுதான் சந்நியாசி அன்று கூறியதன் பொருளைச் சுகுணானந்தர் புரிந்து கொண்டார். சந்நியாசி கூறியதை எண்ணி வியந்தார்.

சுகுணானந்தர் வளர்ந்து வாலிபரானார். அவர் பரம்பரையாகக் குடும்பம் செய்து வந்த மீன் வியாபாரத்தைச் செய்ய ஆரம்பித்தார். தக்க வயதில் பக்கத்தில் கிராமத்தில் வாழ்ந்த தமயந்தியைத் திருமணம் புரிந்து கொண்டார்.

தமயந்தியின் தந்தை புண்ணியனும், தாயார் கருத்தகுஞ்சும் நல்ல பக்தர்கள். அவர்கள் தவறாமல், தினமும் தெய்வ வழிபாடு செய்து வந்தனர். அவர்களுடைய குடும்பத்திற்கென்றே சிறியதொரு கோவிலும் இருந்தது. சிறு வயது முதலே தமயந்தியும் நல்ல பக்தையாக வளர்ந்து வந்தார்.

தமயந்தியின் பக்தியைக் கண்டு கிராமத்தினர் அவரை மரியாதையாக பட்டத்தியம்மா (அந்தணப் பெண்மணி) என்றே அழைத்து வந்தனர். தமயந்தி பல விரதங்களை அனுஷ்டிப்பார். விரத நாட்களில் பகல் நேரத்தில் உணவு அருந்த மாட்டார். மாலையில் இளநீர் மட்டும் பருகுவார். சில விரத நாட்களில் மாலை நேரத்தில் தென்னை மரத்திலிருந்து இளநீர் பறித்துத் தர யாரும் இருக்கமாட்டார்கள். அது போன்ற சூழ்நிலைகளில் அவருக்காக இளநீர் மரத்திலிருந்து தெய்வாதீனமாகக் கீழே விழும்.

சுகுணானந்தரும், தமயந்தியும் தென்னங்கீற்றால் வேயப்பட்ட எளிய குடிசையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் நான்கு பெண் குழந்தைகள், நான்கு ஆண் குழந்தைகள். இந்த எட்டுக் குழந்தைகளுள் மூன்றாவது குழந்தை கருவில் இருந்த சமயம் தமயந்திக்கு பல அற்புதக்கனவுகள் வாய்த்தன. இந்தக் கனவுகளில் பகவான் கண்ணனும், சிவபெருமானும், அம்பிகையும் காட்சி அளித்தனர். ஒரு கனவில் இன்னாரென்று புரிந்து கொள்ள முடியாத ஒருவர் தங்கத்தாலான கண்ணனின் விக்கிரகத்தைத் தமயந்தியிடம் கொடுப்பது போன்ற காட்சி கிடைத்தது. சுகுணானந்தர் கண்ட ஒரு கனவில் அம்பிகையின் காட்சி கிட்டியது சுகுணானந்தரும், தமயந்தியும் தாங்கள் கண்ட கனவுகள் பற்றிப் பேசிக்கொள்வதுண்டு. இந்தக் கனவுகளின் பொருள் என்னவோ என இருவரும் வியந்தனர். தங்களுடைய வாழ்வில் சிறப்பானதொரு சம்பவம் நிகழக் கூடுமென இருவரும் கருதினர். ஆனால் அது எப்படிப்பட்ட உன்னதமான சம்பவம் என்பதை அவர்கள் சற்றும் அறிந்திருக்கவில்லை.

ஒரு நாள் இரவில் இந்தக் கனவுகளிலேயே அற்புதமான கனவு ஒன்று தமயந்திக்கு வாய்த்தது. பூமியிலேயே மிக்க எழில் வாய்ந்த குழந்தை தமயந்திக்குப் பிறக்கிறது . அந்தத் தெய்வீகக் குழந்தையை அவர் கைகளில் ஏந்தி இருக்கிறார். அது பகவான் கண்ணனாக, பால கோபாலனாக இருக்கிறது.

இந்தக் கனவிற்கு மறுநாள் தமயந்தி வழக்கம் போல் கடற்கரைக்குச் சென்று வேலை செய்து கொண்டிருந்தார். அவருக்குக் குழந்தை பிறக்க இன்னும் சில நாட்கள் இருந்தன. ஆனாலும் அன்று அவருக்கு பிரசவ வேதனை எடுப்பது போல் தோன்றியது. நேரமாக ஆக அது வலுவடைந்தது. எனவே அவர் உடனே வீட்டிற்குத் திரும்பினார். வீட்டிற்கு வந்ததும் குழந்தை பிறந்து விடுமென்று தோன்றியது. ஆகவே ஒரு பாயை விரித்துக் குடிசைக்குள்ளே படுத்தார். அதிகமான வேதனை இல்லாமல் விரைவில் குழந்தை பிறந்துவிட்டது. பிறந்த குழந்தை அழவில்லை. இதைக் கண்டு மனம் பதறிய தமயந்தி குழந்தையைப் பார்த்தார். அது பெண் குழந்தை அதன் முகத்தில் புன்னகை மலர்ந்திருந்தது. எல்லாக் குழந்தைகளையும் போல் பிறந்ததும் அழாது தனது குழந்தை சிரித்த முகத்துடன் இருந்ததைக் கண்டு தமயந்தி வியப்பில் ஆழ்ந்தார். அது மட்டுமல்ல அந்தக் குழந்தை அவரைப் பார்த்த பார்வையை அவரால் மறக்கவே முடியவில்லை. எல்லாவற்றையும் உணர்ந்த பார்வையாக அது தோன்றியது. அதே நேரத்தில் அதில் விவரிக்க இயலாத ஆற்றலும், கனிவும் இருந்தன. அந்தப் பார்வை தமயந்தியின் இதயத்தைக் கவர்ந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் பக்கத்து வீட்டுப் பெண்மணி தற்செயலாக அங்கே வந்தாள். தமயந்தி இருக்கும் நிலையைக் கண்டதும் அவருக்கும் பிறந்த குழந்தைக்கும் தேவையானவைகளைச் செய்தார். அன்று 27.9.1953ம் தேதியாகும். அம்மா என்று இன்று உலகம் போற்றும் தெய்வீகக் குழந்தை காலையில் ஒன்பது மணி, ஒன்பது நிமிடம், ஐம்பது விநாடிக்கு அவதரித்தது. அது மலையாளப் பஞ்சாங்கப்படி கன்னி மாதமாகும். அம்மா அவதரித்தது கார்த்திகை நட்சத்திர வேளையாகும். அம்மா அவதரித்த குடிசைக்குச் சற்றே தொலைவிலிருந்த கடல், மகிழ்வோடு ஆர்ப்பரித்தது, அலைகளாக எழுந்து, விழுந்து அம்மாவைப் பணிந்து வணங்கியது. குடிசைக்குக் கிழக்கே இருந்த காயல், கடலைப் பார்த்துத் தானும், தன்னால் இயன்ற சிற்றலைக் கரங்களால் அம்மாவை வணங்கியது. இந்த அலைகளால் எழுந்த ஓசை, அம்மாவின் அவதாரத்தை மங்கள இசையால் இயற்கைத் தாய் கொண்டாடியது போலிருந்தது.

பிறந்துள்ள குழந்தையின் தெய்வீக இயல்பைப் புலப்படுத்திய அறிகுறிகள் பல தோன்றின. ஆனால் அன்று அவைகளை யாரும் புரிந்து கொள்ளவில்லை.

குழந்தையின் கால்கள் பத்மாசனத்தில் இருந்தன. கைவிரல்கள் முத்திரை தாங்கி இருந்தன. மேனி குடும்பத்தின் மற்றக் குழந்தைகளின் நிறத்தைப் போல இல்லாமல் கருநீல வண்ணமாக இருந்தது. இவைகளால் மகிழ்வதற்குப் பதிலாக பெற்றோர் கவலையே கொண்டனர். அவர்கள் பல மருத்துவர்களிடம் குழந்தையைக் காட்டினர். அவர்களால் குழந்தையின் அசாதாரண நீல நிறத்திற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. குழந்தை ஏதோ ஒரு புதுமையான நோயால் பீடிக்கப்பட்டிருக்கக் கூடுமென்று அவர்கள் கருதினர். அவர்கள் குழந்தையை ஆறு மாதங்கள் நீராட்ட வேண்டாமென்று ஆலோசனை கூறினர். அதனால் குழந்தையின் நிறம் எவ்வாறேனும் இயல்பான வண்ணத்தைப் பெறலாமென அவர்கள் நினைத்தனர். தமயந்தியும் அவ்வாறே நடந்து கொண்டார். ஆனால் பலனேதும் விளையவில்லை. குழந்தை நீண்ட காலம் கருநீல வண்ணமாகவே இருந்தது.

பெற்றோர் குழந்தைக்குச் **சுதாமணி** என்று பெயரிட்டனர். சுதாமணி வளர வளர அவளிடம் பல தனிச்சிறப்புகள் வெளிப்பட்டன. ஆறு மாதக் குழந்தையாக இருந்த போதே சுதாமணி பேச ஆரம்பித்து விட்டாள். இதே சமயத்தில் அவள் நடக்கவும் செய்தாள். பொதுவாகக் குழந்தைகள் சில மாதங்கள் தவழ்ந்து விளையாடிய பிறகே மெல்ல மெல்ல நடக்கப் பழகுவார்கள். சுதாமணிக்கு ஆறு மாதமாகி இருந்த போது சுகுணானந்தர் புதிதாக வீடு கட்டி முடித்திருந்தார். ஒரு நாள் அந்த வீட்டுத் தாழ்வாரத்தில் சுதாமணி உட்கார்ந்திருந்தாள். ஆறு மாதக் குழந்தையான அவள் எவருடைய உதவியுமின்றித் திடீரென எழுந்து தாழ்வாரத்தில் நடந்தாள். அன்று முதல் அவள் எவ்வித சிரமமுமின்றி இயல்பாக நடந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

மேலும் சுதாமணி பேசப் பழகியதிலிருந்தே, கிருஷ்ணா, கிருஷ்ணா, என்று பகவானின் திருநாமத்தை ஓத ஆரம்பித்தாள். கிருஷ்ணரின் மீது அவளுக்கு இயல்பாக விருப்பமும். பக்தியும் இருந்தன. உலகில் வேறு எவர் மீதும் அவளுக்கு அந்த அளவிற்கு விருப்பம் இருக்கவில்லை. இரண்டு வயதான போது அவள் பகவானிடம் பக்தியோடு பிரார்த்தனை செய்தாள். மேலும் தானே இயற்றிய சிறிய பாடல்களை உணர்ச்சி ததும்பப் பாடுவாள். இது தினமும் நடைபெற்றது. நான்கு வயதான போது சுதாமணி பகவானது சிறிய திருவுருவப் படத்தின் முன் அமர்ந்து அன்பும், பக்தியும் பொங்கப்

பாடலானாள். அவை அவளே இயற்றிய பாடல்களாக இருந்தன. பகவானின் அந்தத் திருவுருவப் படத்தை விலை மதிக்க முடியாத சொத்தைப் போல் அவள் பாதுகாத்து வந்தாள். அதைத் தனது சட்டைக்குள்ளே செருகி வைத்துக் கொள்வாள். அடிக்கடி அதை வெளியே எடுத்து அன்போடு பார்ப்பாள்.

சுதாமணியின் பக்தி மழை காலத்துக் காட்டாற்று வெள்ளம் போல் பெருகி வந்தது. ஐந்து வயதிற்குள் அவளது பக்திப் பிரவாகம் பறயகடவுக் கிராமம் முழுவதும் பரவி விட்டது. அவள் பக்தி பொங்கப் பாடுவதைக் கிராமத்தினர் விரும்பிக் கேட்டனர். பாடும் போதெல்லாம் அவள் பகவானின் திருவுருவப் படத்தை அன்பு ததும்பப் பார்த்துக் கொண்டிருப்பாள். அப்படிப் பார்ப்பதில் அவளுக்குச் சலிப்புத் தோன்றுவதே இல்லை.

பகவானின் நினைவில் ஆழ்ந்துவிடும் சுதாமணி புறவுலகை மறந்து விடுவதுண்டு. எங்கேயாவது தனிமையில் அமர்ந்து கண்களை மூடியபடி கண்ணனின் நினைவில் தன்னை மறந்திருப்பாள். சில சமயங்களில் காயலின் கரையில் உட்கார்ந்து கொண்டு நீரைப் பார்த்த வண்ணமிருப்பாள் அல்லது நீல வண்ண வானத்தை நோக்கியவாறு இருப்பாள். அப்போதெல்லாம் அவள் ஏதோ வேறொரு உலகில் இருப்பவள் போல் தோன்றினாள்.

நாளடைவில் சுதாமணி பாடும் போது தன்னை மறந்து நடனமாடவும் செய்தாள். இதை எல்லாம் பார்த்துப் பெற்றோர் பெருமைப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனோ அவர்கள் அவளை விரும்பவில்லை. தங்களுடைய மற்றக் குழந்தைகளைப் போல் இல்லாமல் கருநிறமாக இருந்த சுதாமணியை அவர்கள் வெறுத்தனர். அவளது செயல்களும் அவர்களுக்கு விநோதமாகத் தெரிந்தன. நாள் செல்லச் செல்ல சுதாமணி பக்திப் பேரானந்தத்தில் தன்னை மறந்து விடுவதுண்டு. அதை ஏதோ பாசாங்கு என்று அவளது பெற்றோர் கருதினர். அதற்காக அவளைக் கண்டித்தனர். மற்றப் பிள்ளைகளைப் போல் இயல்பாக அவள் இல்லாத நேரமெல்லாம் கண்டனத்திற்கு ஆளானாள். அவள் செய்த அற்பத் தவறுகளுக்கும் அடிபட்டாள். அவளது பெற்றோர், உறவினர்களைப் பார்பதற்கோ, விழாக்களுக்கோ போகும் போது சுதாமணியை மட்டும் அழைத்துச் செல்ல மாட்டார்கள். மற்றப் பிள்ளைகளை அழைத்துச் செல்வர். சுதாமணியை

வீட்டில் இருந்து வேலைகளைச் செய்யவும், பசுக்கள், ஆடுகள், வாத்துக்களுக்குத் தேவையானவைகளைக் கவனிக்கவும் சொல்லி விட்டுப் போவார்கள். இதைப் பற்றிச் சுதாமணி வருந்துவதே இல்லை. வேலைகளைச் செய்து கொண்டே வேறு இடையூறு இல்லாமல் இறைவனை நினைக்க முடிகிறதே என்று மகிழ்ச்சியே அடைவாள்.

வீட்டை ஒட்டி மாட்டுத்தொழுவம் இருந்தது, அங்கே பசுக்களுக்கிடையே தன்னந்தனியாக அமர்ந்திருப்பதில் சுதாமணிக்கு மிகுந்த விருப்பம் இருந்தது. பிருந்தாவனக் கண்ணன் பசுக்களை நேசித்தது போலவே சுதாமணியும் பசுக்களை நேசித்தாள். பசுக்களோடு இருப்பதில் அவள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாள். தொழுவத்தில் அமர்ந்து பக்தி பொங்கக் கண்ணனைக் குறித்துப் பாடினாள். உணர்ச்சி ததும்பப் பிரார்த்தனை செய்தாள். மனம் குவியத் தியானம் புரிந்தாள்.

சுதாமணிக்கு ஐந்து வயதாயிற்று. அவள் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தாள். இந்தப் புதிய மாணவியின் புத்திக்கூர்மையைப் பள்ளி ஆசிரியர்கள் விரைவில் புரிந்து கொண்டனர். ஒருமுறை கேட்ட பாடத்தை அவள் அப்படியே நினைவில் வைத்துக் கொள்வாள். ஒரு முறை படித்த பாடத்தை அப்படியே திரும்பச் சொல்வாள். சுதாமணி இரண்டாம் வகுப்பிற்குச் சென்றாள். அப்போது மேல் வகுப்புப் பாடங்களைக் கேட்க நேர்ந்தால், அந்தப் பாடங்களையும் மனப்பாடமாகக் கூறுவாள். அவளுடைய அண்ணனும், அக்காவும் தாங்கள் மனப்பாடம் செய்ய வேண்டிய பாடல்களை மனப்பாடம் செய்ய முடியாமல் திணறுவார்கள். சுதாமணியோ அந்தப் பாடல்களை அவர்கள் படிக்கும் போது கேட்ட மாத்திரத்திலேயே மனப்பாடம் செய்து விடுவாள். அது மட்டுமல்ல அந்தப் பாடல்களை இசையோடு பாடியபடியே பட்டாம்பூச்சி போல் நடனமாடுவாள். சுதாமணியின் நினைவாற்றலைக் கண்டு ஆசிரியர்கள் வியந்தனர். இம்மாதிரிச் சிறப்பான ஆற்றலை அவர்கள் கண்டதே இல்லை. சுதாமணி வகுப்பிலேயே தலைசிறந்த மாணவியாக விளங்கினாள். பல நாட்களில் வீட்டு வேலை காரணமாக அவளால் குறித்த நேரத்திற்குப் பள்ளிக்குச் செல்ல முடியாது இருந்த போதிலும் அவள் எல்லாப் பாடங்களிலும் உயர்ந்த மதிப்பெண் பெற்றாள். ஆசிரியர்கள் அனைவரும் அவளை மிகவும் நேசித்தனர்.

சுதாமணி சுறுசுறுப்பே வடிவெடுத்தவளாக இருந்தாள். கிராமத்தினர் அவளை அன்போடு குஞ்சு என்று அழைத்தனர். சுதாமணியின் பக்தி, உணர்ச்சி ததும்ப, இனிமையாகப் பாடிய விதம், உயிர்களை எல்லாம் நேசிக்கும் பாங்கு, ஏழைகள் மீதும், துன்பப்படுபவர்கள் மீதும் அவள் காட்டிய இரக்கம் ஆகிய நற்பண்புகள் கிராமத்தினரை மிகவும் கவர்ந்தன. மேலும் சுதாமணி தன்னிடம் யாராவது அவர் படும் துயரத்தைக் கூறினால் அதைப் பொறுமையோடு கேட்பாள். அவளை விட வயது முதிர்ந்தவரும், அவள் சிறுமி தானே என்று எண்ணாமல், அவளிடம் தனது கவலைகளை எல்லாம் ஒளிவுமறைவின்றிச் சொல்லுவர். புதிதாகக் கிராமத்திற்கு வருபவர்களும் சுதாமணியைச் சந்திக்க நேர்ந்தால் அவள் மீது ஈடுபாடு கொண்டனர். அவளை நேசித்தனர்.

சுதாமணி தினசரி அதிகாலையில் எழுந்து விடுவாள். பக்தியோடு பாடுவது அவளுடைய முதல் வேலையாகும். இந்த மங்களகரமான இன்னிசை கேட்பவரைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும். எனவே சுதாமணி பாடுவதைக் கேட்பதற்கு பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் அதிகாலையில் எழுந்து விடுவார்கள்.

சுதாமணி இயற்றிய பல பாடல்கள் பகவான் கண்ணனைக் காணாத ஏக்கத்தை வெளிப்படுத்துபவைகளாக இருந்தன. பகவானைப் பிரிந்திருந்ததால் சுதாமணி சொல்லொண்ணாத் துயரை அனுபவித்தாள். இந்தத் துயரத்தையெல்லாம் பாடல்களில் கூறி, தனது துயரத்தைத் தணிக்க வருமாறு கண்ணனிடம் சுதாமணி உருக்கமாக வேண்டுவாள். பகவானைத் தரிசிக்கத் தான் தவிக்கும் தவிப்பை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடும் போது அவளது கன்னங்களில் கண்ணீர் அருவியாகக் கொட்டும். தனது இதயம் வெடித்து விடும் அளவிற்கு அவள் அழுவாள். இதைக் காண நேரும், அண்டை வீட்டார்கள் வருந்தி, அவளுக்கு ஆறுதலும், ஆனந்தமும், அளிக்க வேண்டிய நிலையில் அவள் இருந்தாள். இதை அவர்கள் ஓரளவு புரிந்து கொண்டார்கள்.

சுகுணானந்தரின் இதயத்தில் சுதாமணியின் மீது அன்பு இருந்தது. ஆனால் அவரால் அவளுடைய உன்னதமான பக்தியை பேருணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அவர் அவளைப் பலவாறு

இளம் கர்மயோகி



3. இளம் கர்மயோகி

சுதாமணி சத்குருவாக உலகோரால் கொண்டாடப்பட ஆரம்பித்த பின்னர், அவரிடம், எவ்வாறு அவரால் அவ்வளவு இளம் வயதிலேயே இறைவனை அடைய முடிந்தது? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் "சிறுகுழந்தையாக இருந்த போதே இறைவனின் திருநாமத்தின் மீது இதய பூர்வமாக ஈடுபாடு கொண்டிருந்தேன், ஒவ்வொரு சுவாசத்துடனும் கிருஷ்ணா என்று திருநாமத்தை ஓதினேன். அந்த அளவிற்குத் திருநாமத்தை விரும்பினேன். எங்கே இருந்தாலும், என்ன செய்தாலும் மனது இறைவனையே எண்ணியவாறு இருந்தது. இறைவனை அனுபூதியில் அடைய விரும்புகிறவர்கள். கண நேரம் கூட அவரை மறவாது, சதா அவரையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த இடைவிடாத சிந்தனை இறைவனை அடைய உதவும்" என்று கூறினார்.

பகவான் கண்ணனை அனுபூதியில் அடைந்த பிறகு சுதாமணியின் மனம் பக்தியில் முற்றிலும் தோய்ந்திருந்தது. 'கிருஷ்ணா' என்று பகவானது திருநாமத்தைக் கேட்க நேர்ந்தால், அவளது மனம் பகவானுடன் அந்தக் கணமே ஐக்கியமாகி விடும். மற்றதெல்லாம் மறைந்து விடும். எவ்வளவு நேரம் தனிமையாக இருக்க முடியுமோ, அவ்வளவு நேரம் தனிமையில் இருந்தாள். தனிமையாக இருக்கும் போது பகவானுடன் ஐக்கியமாக இருக்கும் சமாதி நிலையில் ஆழ்ந்து விடுவாள். பேரானந்தத்தை அனுபவிப்பாள். சில நாட்களில், சுதாமணி பகவானுடன் ஐக்கியமாக இருக்கும் நிலை உலகிற்குத் தெரிய வந்தது.

அது 1975ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நிகழ்ந்தது. அன்று பிற்பகல் நேரம் சுதாமணி பசுக்களுக்குப் புல் சேகரித்துக் கொண்டிருந்தாள். அவளது தம்பி சதீஷ் கூட இருந்தான். புல் சேகரித்ததும், அதைக் கட்டாகக் கட்டி சுதாமணி தலையில் சுமந்தவாறு தம்பியுடன் வீட்டிற்குப் புறப்பட்டாள். பக்கத்து வீட்டுக்காரர்கள் முற்றத்தில் அமர்ந்து பாகவத பாராயணம் செய்து கொண்டிருந்தார்கள். இது மாதந்தோறும் நடந்து வந்தது. சுதாமணியும், சதீஷும் பக்கத்து வீட்டைக் கடந்த போது பகவானின் அவதாரப் பகுதியைப் பாராயணம் செய்து விட்டுப் பக்திப்பாடல் ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட சுதாமணியின் மனது பகவானிடம் ஆழ்ந்த பக்தியில் தோய்ந்து விட்டது. அவள் அப்படியே நின்று விட்டாள். பாடலை உள்ளத்தால் பருகினாள். தன் நினைவை இழந்தாள். புற்கட்டு நழுவிக் கீழே விழுந்தது. சுதாமணி அந்த வீட்டு முற்றத்திற்குள்ளே சென்றாள். பாராயணத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் மத்தியில் நின்றாள். அவளுடைய கைகள் தெய்விக முத்திரையுடன் உயர்ந்தன. அவளுக்குள்ளே பேரானந்தம் பெருகியது. அவளுடைய மனம் கண்ணனிடம் முற்றிலும் ஒன்றிவிட்டது. ஆகவே அவளது முகம், கண்ணனது ஒளிதவழும் தெய்விகத் திருமுகமாகவே மாறி விட்டது. சுதாமணி கிருஷ்ணபாவத்தில் அதாவது, கிருஷ்ணனது பேருணர்வில் ஆழ்ந்த நிலையில் இருந்தாள். இதைக்கண்டு அங்கிருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர்.

சற்றே புறவுலக நினைவைப் பெற்ற சுதாமணி தண்ணீர் கொண்டு வருமாறு கூறினாள். அங்கிருந்தவர்களுள் ஒருவர் அவ்வாறே தண்ணீர் கொண்டு வந்தார். அதை ஸ்பரிசித்துப் புனிதத் தீர்த்தமாக்கிச் சுதாமணி அங்கிருந்தோர் மீது தெளித்தாள்.

சுதாமணி 'கிருஷ்ண' ஆவேசத்தில் இருப்பதாக கிராமத்திற்குள் செய்தி காட்டுத்தீ போல் பரவி விட்டது. இதைக் கேட்டவர்கள் எல்லோரும், சுதாமணி நின்று கொண்டிருந்த வீட்டு முற்றத்திற்கு வந்த விட்டனர். இவர்களுள் சிலர் சுதாமணி கிருஷ்ண ஆவேசத்திற்கு ஆட்பட்டிருப்பதை நம்பவில்லை. அவர்கள் சுதாமணி பாசாங்கு செய்வதாக எண்ணினர். எனவே அவர்கள் "சுதாமணி தனக்கு வந்துள்ள கிருஷ்ண ஆவேசத்தை நிஜமானது தான் என்று நிரூபிப்பதற்கு அவள் ஏதாவது சித்து செய்து காட்ட வேண்டும்" என்றனர்.

இதைக் கேட்ட சுதாமணி, 'சித்து எதுவும் செய்து காட்டி உங்களுக்கு எனது தெய்வீகத் தன்மையைப் புரிய வைக்க விரும்பவில்லை. அது உண்மையான ஆன்மிக வழியல்ல. மக்கள் இறைவனை அடையும் வழியில் செல்வதையே விரும்புகின்றேன். அதற்குத் துணை செய்வதையே விரும்புகின்றேன். அதுவே எனது இலட்சியமாகும். மேலும், ஒரு முறை சித்து செய்து காட்டினால், அதே போல் மீண்டும் மீண்டும் செய்யச் சொல்லுவீர்கள். இதனால் ஆசைகள் தான் அதிகமாகும். ஆசைகளை

வளர்ப்பதற்காக நான் வரவில்லை. ஆசைகளை நீக்குவதற்காகவே வந்திருக்கின்றேன். நீங்கள் ஆசைப்பட வேண்டிய உண்மையான செல்வம் உங்களுக்குள்ளே இருக்கின்றது. அதை விட்டுவிட்டுப் பொய்யானதை ஏன் நாடுகின்றீர்கள்? உங்களுடைய ஆத்மா உங்களுக்குள்ளேயே இருக்கின்றது அஞ்ஞானம் அதை மறைத்துக் கொண்டிருக்கின்றது' என்று சொன்னாள்.

ஆனால் சுதாமணியின் மீது நம்பிக்கை இல்லாதவர்களோ பிடிவாதமாக இருந்தனர். தங்களுடைய கோரிக்கையைத் திரும்பத்திரும்ப வலியுறுத்தினர். மீண்டும் சித்து செய்யுமாறு கேட்க மாட்டோமென்று உறுதி அளித்தனர். இறுதியில் சுதாமணி "சரி ஒரு முறை மட்டும் சித்து செய்து காட்டச் சம்மதிக்கிறேன். அடுத்த மாதம் இங்கே பாகவத பாராயணம் நடக்கும் நாளில் வாருங்கள்" என்றாள்.

அடுத்த மாதம் அந்த வீட்டில் பாகவத பாராயணம் நடக்க இருந்த நாளில் பெருந்திரளான மக்கள் கூடி விட்டனர். முற்றத்தில் இடமில்லாததால் பலர் வெளியே நின்றனர். வந்தவர்களுள் சுதாமணியை நம்பியவர்களும், நம்பாதவர்களும் ஆக இரு சாராரும் இருந்தனர். நம்பாதவர்கள் சிலர் சுதாமணி செய்வதைக் கூர்ந்து கண்காணிப்பதற்காக அருகிலிருந்த மரங்களிலும், பக்கத்து வீட்டு மாடியிலும் ஏறி அமர்ந்து கொண்டனர். அங்கே இருந்து அவர்களால் முற்றத்தில் நடப்பதைத் தெளிவாகப் பார்க்க முடியும். சுதாமணியிடம் தெய்வீக ஆவேசம் இல்லை என்றும் அவள் பாசாங்கு செய்கிறாளென்றும் விரைவில் தங்களால் நிரூபித்து விட முடியுமென்றும் அவர்கள் நம்பினர்.

சுதாமணி வந்து விட்டாள். பாகவத பாராயணம் ஆரம்பமானது. விரைவிலேயே சுதாமணி கிருஷ்ணபாவத்தில் ஆழ்ந்து விட்டாள். அந்தப் பேருணர்வு நிலையிலிருந்தபடியே அவள் நாஸ்திகர் ஒருவரிடம் பாத்திரத்தில் நீர் கொண்டு வரச் சொன்னாள். நீர் கொண்டு வரப்பட்டது, சென்ற முறை போலவே அதை ஸ்பரிசித்துப் புனிதத் தீர்த்தமாக்கினாள். அதை அனைவர் மீதும் தெளித்தாள். பாத்திரத்தில் மீதமிருந்த நீருக்குள், அந்த நீரைக் கொண்டு வந்தவரையே விரலை விட்டுப் பார்க்கச் சொன்னாள். என்ன விந்தை அவரது விரலில் பால் ஒட்டிக் கொண்டு வந்தது. பாத்திரத்தில் இருந்த பாலில் சிறிதளவை எடுத்துப் பிரசாதமாக எல்லோருக்கும் கொடுக்கச் சொன்னாள்.

பின்னர் சுதாமணி, நம்பிக்கை இல்லாத இன்னொருவரைப் பாத்திரத்திற்குள் விரலை விட்டுப் பார்க்கச் சொன்னாள் அற்புதம்! அற்புதம்! அவருடைய விரலில் பஞ்சாமிர்தம் ஒட்டிக் கொண்டு வந்தது. இதைப் பார்த்த பலர் பக்தி வசப்பட்டவர்களாகப் 'பகவானே! பகவானே!' என்று குரலெழுப்பினர். அவர்களுக்குச் சுதாமணி பகவான் கண்ணனாகவே காட்சி அளித்தாள். பாத்திரத்தில் இருந்த பஞ்சாமிர்தமும் பிரசாதமாக எல்லோருக்கும் வழங்கப்பட்டது. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக, நூற்றுக் கணக்கானவர்களுக்கும் கொடுத்த பிறகும் பாத்திரம் நிறையப் பஞ்சாமிர்தம் இருந்தது. அது மட்டுமல்ல. பஞ்சாமிர்தத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் கைகளில் அதன் நறுமணம் பல நாட்களுக்கு இருந்தது. அன்று சுதாமணியையும், அவளது அருளால் நிகழ்ந்தவைகளையும் பார்த்த பெரும்பாலோருக்கு அவள் மீது ஆழ்ந்த நம்பிக்கை பிறந்தது. **அவர்கள அவளை மகான் என்றே கருதலாயினர்.**

இவ்வாறு முதன் முதலில் உலகுக்கு வெளிப்பட்ட கிருஷ்ணபாவ நிலை பற்றிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு பேச நேர்ந்த போது சுதாமணி "அங்கிருந்தோரைப் பற்றி எல்லா விஷயங்களும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தன. மக்கள் படும் துயரங்களைக் கண்டு கருணை பெருகியது. பலர் பகவானே என்று பக்தியுடன் கூறி வழிபடுவதையும் உணர்ந்தேன். அவர்களுடைய பிரச்சனை என்ன என்பதை அவர்கள் கூறாமலே புரிந்து கொண்டேன். இவை எல்லாவற்றிற்கும் இடையிலும், **நானே கண்ணன் என்கிற அனுபூதி நிலை மாறவே இல்லை**" என்று கூறினார்.

இதற்குப் பிறகு சுதாமணி தன்னை நாடி வருவோர்க்குக் கிருஷ்ணபாவத்திலிருந்து அருள் புரிய ஆரம்பித்தார். இந்தக் கிருஷ்ணபாவ தரிசனம் ஆரம்பத்தில் கடற்கரையிலிருந்த ஓர் ஆலமரத்தடியில் நிகழ்ந்து வந்தது. கிருஷ்ணபாவ நிலையில் சுதாமணி, ஆலமரத்தின் சிறிய கிளையில் படுத்துக் கொண்டு தரிசனமளிப்பார். அது மிகவும் சிறிய கிளை. உண்மையில் சுதாமணியைப் போன்றவர் எவரேனும் ஏறினால் அது முறிந்து விடக் கூடிய அளவு பலஹீனமான கிளையாகும். ஆனால் கிருஷ்ணபாவ நிலையில் சுதாமணியின் உடல் பறவையின் இறகு போல் இலோசாகிவிடும். ஆகவே அந்தக் கிளையில் அவரால் படுத்திருக்க முடிந்தது.

கிருஷ்ணபாவ தரிசனத்தின் போது இந்த ஆலமரத்தடி ஒரு பிருந்தாவனம் போல் காட்சி அளித்தது. அங்கு வரும் பக்தர்கள் சுதாமணியின் முன் அமர்ந்து பக்திப்பாடல்களைப் பாடுவார்கள். அப்படிப் பாடிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் ஒவ்வொருவராகச் சுதாமணியிடம் செல்வார்கள். சுதாமணி அவர்கள் கூறும் துன்பத்தைக் கேட்டு, ஆறுதல் கூறி, ஆசி அளிப்பார். அங்கு தெய்வீக ஆனந்தம் நிறைந்திருக்கும்.

இந்தக் கிருஷ்ணபாவ தரிசனம் என்னும் அற்புதமான விஷயம் விரைவில் கேரளத்தில் மட்டுமல்லாது, பாரத நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாயிற்று. ஆங்காங்கிருந்து பக்தர்கள் தங்கள் துயர் தீரச் சுதாமணியை நாடி வரலாயினர். வறுமை, தீராத நோய் போன்ற பல பிரச்சனைகளால் வாடியோர் அங்கு வந்தனர். என்ன பிரச்சினையால் துன்புற்றவர்கள் வந்தாலும், அவர்கள் அனைவரும் சுதாமணியின் ஆசியால் தங்களுடைய துன்பங்கள் தீர்வதைக் கண்டனர். எனவே அவர்கள் அவரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றினர். ஆனால் சுதாமணியோ பணிவே வடிவாகத் திகழ்ந்தார். தான், பிறர் எவரையும் விட எந்த வகையிலும் உயர்ந்தவரென்று அவர் கருதவே இல்லை.

கிருஷ்ணபாவ தரிசனம் இல்லாத போது சுதாமணி முன் போலவே வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தார். ஆனால் அவரது மனம் அடிக்கடி உலக நினைவை இழந்து கண்ணனுடன் ஐக்கியமாகி வந்ததால் அவரால் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியவில்லை.

சுதாமணியின் பெற்றோர் அவருக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தனர். ஆனால் சுதாமணிக்கு இல்லற வாழ்வில் நாட்டம் சிறிதுமில்லை. ஆகவே அவர் பெற்றோரது கருத்தை ஏற்கவில்லை. இருப்பினும் பெற்றோர் பல வரன்களைப் பார்த்துப் பெண் பார்க்க ஏற்பாடு செய்யலாயினர். சுதாமணியோ மாப்பிள்ளையாக வர இருப்பவர் அல்லது அவரது வீட்டார்கள் முன் பித்துப் பிடித்தவள் போல் நடந்து கொள்வார். இதனால் அவர்கள் பயந்து ஓடி விடுவர். தொடர்ந்து இவ்வாறு நடந்தது. ஆகவே சுதாமணியின் ஜாதகத்தைப் பார்த்து ஆவன செய்யப் பெற்றோர் முடிவு செய்தனர். அவர்கள், தங்கள் குடும்பத்தையோ சுதாமணியையோ முன்பின் அறியாத ஒரு ஜோதிடரிடம் போய் அவருடைய ஜாதகத்தைக் கொடுத்தனர். ஜோதிடர் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்துவிட்டு "இந்தப் பெண் தெய்வீகப் பிறவி, இவளுக்குத் திருமணம் செய்து வைக்க முயற்சிக்காதீர்கள். அது நல்லதல்ல" என்று கூறினார். இதனால் சுதாமணியின் பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்யும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

சிறுபாராயத்தில் தியானத்தில்



4. நல்ல நண்பர்கள்

இயற்கையை அம்பிகையாகக் கண்ட சுதாமணி இயல்பாகவே இயற்கையிலுள்ள எல்லா உயிரினங்களையும் நோகிக்கலானார். ஏனெனில் அவையாவும் அம்பிகையாக அவருக்குத் தோன்றின. அவருடைய நேசத்தை உள்ளுணர்வால் புரிந்து கொண்ட பறவைகளும், விலங்குகளும் அவரை நேசித்தன. இந்த நேசம் சுதாமணி வெட்ட வெளியில் வாழ்ந்தபோது ஸ்தூலமாக வெளிப்பட்டது. பல பறவைகளும், விலங்குகளும் அவருக்கு அற்புதமாகச் சேவை செய்தன. அவருக்கு நெருங்கிய நண்பர்களாக விளங்கின. சுதாமணியின் குடும்பத்தினர் அவரைப் புறக்கணித்து விட்ட நிலையில், பறவைகளும், விலங்குகளும் அவரைப் பாதுகாத்தன. சுதாமணியின் ஆன்மிக உயர்வை உற்றார், உறவினர் புரிந்து கொள்ளாத போது, பறவைகளும், விலங்குகளும் அதைப் புரிந்து கொண்டிருந்தன போலும் அவை மழையோ, வெயிலோ, காற்றோ எனக் காலநிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், சுதாமணியை விட்டுவிட்டுப் பாதுகாப்பான இடத்திற்குப் போனதில்லை.

சுதாமணி, கிருஷ்ணபாவ தரிசனம் அளித்து வந்த கோயிலில் அமர்ந்து தியானம் புரிவது வழக்கம். அவர் தியானம் கலைந்து வெளியே வரும் போது. அவரது குடும்பத்திற்குச் சொந்தமான பசு ஒன்று அவருக்காகக் காத்திருக்கும். சுதாமணியைக் கண்டதும் தனது பாலைப் பருகுமாறு பசு அவருக்கு உடல் அசைவால் உணர்த்தும். அம்பிகையே இவ்வாறு அருள் புரிவதாகக் கருதிய சுதாமணி பசுவின் மடியிலிருந்து நேரே பாலைப் பருகுவார். அந்தப் பசு இவ்வாறு தொடர்ந்து சுதாமணியின் பசியையும், தாகத்தையும் தணித்து வந்தது. சுதாமணி பாலைப்பருகுவதற்கு முன்பு பசு தனது கன்றிற்குக் கூடப் பாலூட்டுவதில்லை. தானும் புல்லைச் சாப்பிடுவதில்லை. பசுவின் இந்தச் செயல் குடும்பத்தினருக்கு எரிச்சலூட்டியது. அது கோயிலுக்கு முன்பாகச் சுதாமணிக்காகக் காத்திருக்கும் நேரத்தில் அதை அங்கிருந்து விரட்டக் குடும்பத்தினர் பல வகையில் முயன்றனர். ஆனால் எதற்கும் பசு அசையவில்லை. சில நாட்களில், அதன் மீது தண்ணீரை ஊற்றி விரட்ட முயற்சி செய்வர். சில சமயங்களில் பசு துள்ளிக் குதித்து தென்னந்தோப்பில் இங்குமங்கும் ஓடும். குடும்பத்தினர் அதைப் பிடிப்பதற்காகப் பின்னே ஓடுவர். ஆனால் அது அவர்களிடம் அகப்படாமல் தப்பிச் சுதாமணியிடம் வந்து

சேர்ந்து விடும். சுதாமணி பாலைப்பருகிய பிறகு பசு சாந்தமாகத் தொழுவத்திற்குச் சென்று விடும்.

சுதாமணியின் பாட்டி வசிக்கும் பண்டாரத்துருத்து பறயகடவிலிருந்து ஆறு கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. பாட்டி வீட்டிற்குப் பக்கத்திலேயே மாமா இரத்தினதாசனின் வீடு இருக்கிறது. அவருடைய பசு ஒரு நாள் கட்டை அவிழ்த்ததும் கடற்கரையை நோக்கி ஓடியது. இரத்தினதாசன் அதைப் பிடிப்பதற்காக ஓடினார். கடற்கரை வழியே ஓடிய பசு பறயகடவை அடைந்ததும் இடமண்ணேல் இல்லத்தை நோக்கித் திரும்பியது. தயக்கமின்றி அங்கே வந்த பசு, நேரே சுதாமணி இருக்குமிடத்தை அடைந்தது. சுதாமணி அப்போது தியானம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு அருகே சென்ற பசு, அவரைத் தனது நெற்றியால் இலேசாக முட்டியும், நாவால் நக்கியும் தனது அன்பை வெளிப்படுத்தியது. சுதாமணியின் தியானம் கலையவில்லை. எனவே பசு அவரருகே படுத்துக்கொண்டது. பசுவின் பின்னே வந்த இரத்தினதாசன் மேலே என்ன நடக்கிறது என்று கவனிக்கும் ஆவலில் சற்று தள்ளி நின்று கொண்டார்.

பசு, சுதாமணியை உற்றுப் பார்த்தபடியே படுத்திருந்தது. சற்று நேரத்தில் தியானம் கலைந்த சுதாமணி தன் முன்னே படுத்திருந்த பசுவைக் கண்டார். அதை அன்போடு நோக்கியபடியே எழுந்து அதனருகே சென்றார். படுத்திருந்த பசு தனது பின்புறக் காலை இலேசாக உயர்த்தித் தனது விருப்பத்தை சுதாமணிக்கு உணர்த்தியது அதனை புரிந்துகொண்ட சுதாமணி தனது தாகம் தணிய அதன் பாலைப்பருகினார். அதைக் கண்ட இரத்தினதாசன் வியப்படைந்தார். அவர் சுதாமணி ஒரு தெய்விகப் பிறவி என்று அறிந்து கொண்டார். பாம்புகளும் சுதாமணியிடம் அன்பாகப் பழகின. சுதாமணி தியானம் செய்யும் போது ஒரு பாம்பு வந்து அவருடைய உடலைச் சுற்றிக் கொள்ளும். இது பல முறை நிகழ்ந்துள்ளது. விஷப்பாம்புகள் கூடச் சுதாமணியிடம் அன்பு காட்டின. அவை அவருக்குத் தீங்கு செய்ததே இல்லை. பாம்புகள் அவரருகே இருப்பதை மிகவும் விரும்பின. ஒரு நாள் பக்தர் ஒருவர் சுதாமணிக்குக் கிளி ஒன்றைக் காணிக்கையாக அளித்தார். அந்தக் கிளியைக் கூண்டில் அடைத்து வளர்க்கச் சுதாமணி விரும்பவில்லை. அதைச் சுதந்திரமாக விட்டு விட்டார். ஆனால் அந்தக் கிளி சுதாமணியைப் பிரிந்து செல்ல விரும்பவில்லை. அது அவருடனே தங்கி விட்டது. அந்தக்

கிளி அவருடன் விளையாடுவதைப் பலர் பார்த்திருக்கின்றனர். சில சமயங்களில் அது சுதாமணியைச் சுற்றிச் சுற்றி வருவது நடனமாடுவது போலிருக்கும். ஒரு நாள் சுதாமணி அம்பிகையை நோக்கிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்த போது, அம்பிகையைக் காணாத துயரம் தாங்காமல் அழலானார். அவர் தற்செயலாகத் தலையை நிமிர்த்திய போது கிளியும் அழுதவாறு இருப்பதைக் கண்டார். அது எப்படியோ சுதாமணியின் துயரத்தைப் புரிந்து கொண்டு அதனால் பாதிக்கப்பட்டுத் தானும் அழுதிருக்கிறது.

இந்தக் கிளியைப் போலவே, இரண்டு புறாக்களும் சுதாமணியுடன் விரும்பித் தங்கி இருந்தன. சில வேளைகளில் சுதாமணி பக்தி ததும்ப அம்பிகையைக் குறித்துப் பாடுவார். அப்போது இந்த மூன்று பறவைகளும் அவருக்கு முன்னே வந்து, இறகுகளை விரித்துக் குதித்து ஆனந்தமாக நடனமாடும். ஒரு தென்னை மரத்தில் கருடன் ஒன்று கூடு கட்டி இருந்தது. அது இரு குஞ்சுகளைப் பொரித்திருந்தது. ஒரு நாள் கூடு கலைந்து கீழே விழுந்து விட்டது. அது அப்படியே சிதறிப் போனது. குஞ்சுகள் இரண்டும் தரையில் கிடந்து தவித்தன. அந்த நேரம் அங்கே இருந்த சில குழந்தைகள் குஞ்சுகளின் மீது கற்களை வீசி அவைகளைக் கொல்ல முயன்றனர். அப்போது சுதாமணி அங்கே வந்தார். அவர் குஞ்சுகளை எடுத்து வைத்துப் பாதுகாப்புடன் வளர்த்தார். சில வாரங்கள் சென்றன. கருடக்குஞ்சுகள் பறக்கப் பழகி விட்டன. ஆகவே சுதாமணி அவைகளைக் கூட்டிலிருந்து வெளியே விட்டு விட்டார். இந்த இரு கருடன்களும் கிருஷ்ணபாவ தரிசன நாட்களில் கோயிலின் கூரையில் வந்து அமர்ந்து கொள்ளும். இது நீண்ட காலம் தொடர்ந்து நிகழ்ந்தது.

கருடன், பகவான் ஸ்ரீமந் நாராயணரின் வாகனமாகும். இதைத் தரிசிப்பது நல்ல சகுனமாகும். ஆகவே கிருஷ்ணபாவ தரிசனத்தின் போது இரு கருடன்களைத் தரிசித்ததைப் பக்தர்கள் பெரும் பாக்கியமாகக் கருதினர்.

அம்பிகையைக் காணாமல் சுதாமணி அழுது, புலம்பி, பக்திப் பித்தில் உலக உணர்வை இழந்து விடுவதுண்டு. அப்படிப்பட்ட நேரங்களில் இரு கருடன்களும் எங்கிருந்தாலும் பறந்து சுதாமணியிடம் வந்து அவருக்கருகே நிற்கும். அப்படி நிற்பதைப் பார்த்தால், அவை சுதாமணியைக் காவல்

காப்பது போலிருக்கும். ஒரு நாள் அவை அவ்வாறு சுதாமணியைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்த போது, அங்கே சில பெண்கள் வர நேர்ந்தது. அப்பெண்கள் இரு கருடன்களின் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்ததைக் கண்டு வியந்தனர். தங்களுடைய அன்பிற்குரிய சுதாமணியின் வேதனையைக் கருடன்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை போலும்.

ஒருநாள், தியானம் நிறைவுற்ற பிறகு சுதாமணிக்குப் பசித்தது. இதைப் புரிந்து கொண்டது போல் ஒரு கருடன் பறந்து சென்றது. சற்று நேரத்தில் மீன் ஒன்றைக் கொத்திக் கொண்டு வந்தது. அந்த மீனைச் சுதாமணியின் மடியில் மெல்லப் போட்டது. கிருஷ்ண தரிசனத்திற்காக ஏங்கித் தவித்த போது சுதாமணியால் மீன் சாப்பிடவே முடியவில்லை. இப்போது கருடன் மீனைக் கொண்டு வந்து போட்டது அம்பிகையின் திருவருளே என்று சுதாமணி கருதினார். ஆகவே, அந்த மீனை அம்பிகையின் பிரசாதமாக எண்ணிச் சாப்பிட்டார். கருடன் தொடர்ந்து பல நாட்கள் இவ்வாறு மீனைக் கொண்டு வந்தது.

பூனை ஒன்று சுதாமணியுடன் தங்கி இருந்தது. கிருஷ்ணபாவ தரிசனத்தின் போது இந்தப் பூனை சுதாமணியை வலம் வந்து, அவருக்கு அருகே அமர்ந்து கொள்ளும். அங்கேயே அது நீண்ட நேரம் கண்களை மூடி அசையாமல் இருக்கும். தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் பலர் அந்தப் பூனை தியானம் செய்வதாக நம்பினர். ஆயினும் ஒரு பக்தருக்கு பூனை அங்கே இருப்பது பிடிக்கவில்லை. அவர் பூனையைப் பிடித்துக் காயலின் மறு கரையில் விட்டு விட்டார். ஆனால் மறு நாளே பூனை சுதாமணியிடம் வந்து விட்டது. காயல் நீரை அது நீந்திக் கடந்து வந்திருக்கக் கூடும்.

கறுப்பும் வெள்ளையும் கலந்த பெரிய நாய் ஒன்று சுதாமணியிடத்தில் அன்பு கொண்டிருந்தது. அது சுதாமணியைப் போற்றி வழிபட்டது என்றே சொல்லலாம். அம்பிகையைக் காணாத ஏக்கத்தால் சுதாமணி அழுது, புலம்பி உலக நினைவை இழந்து விடும் போது நாய் பரிதாபமாக அழுவது போல் ஊளையிடும். அது சுதாமணியின் மீது தனது உடலைத் தேய்த்தும், அவருடைய முகத்தை நக்கியும் அவருக்கு உலக உணர்வை ஊட்ட முயலும். சுதாமணி எங்காவது போவதற்குப் புறப்பட்டால், அவருடைய பிரிவைத் தாங்க முடியாமல் குரைக்கும், அவரது ஆடையைத் தனது வாயால் கவ்வி அவரைத் தடுக்க முயற்சிக்கும்.

சில வேளைகளில் அந்த நாய் உணவுப் பொட்டலத்தை வாயால் எடுத்து வந்து சுதாமணியிடம் கொடுக்கும். அது எப்படி உணவுப் பொட்டலத்தைப் பெற்றது என்பது யாருக்கும் தெரியாது. அந்த உணவுப் பொட்டலத்தில் இருந்து சிறிது உணவைக் கூட அது சாப்பிடாது. இரவு நேரங்களில் நாய் சுதாமணிக்கு அருகே படுத்துக் கொள்ளும், சுதாமணி சில சமயம் நாயின் மீது தலையை வைத்துப் படுத்திருப்பார்.

ஒரு நாள் இரவில் சுதாமணி காயலில் கரையில் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். அவரது உடலைக் கொசுக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. ஆனால் உடல் உணர்வே இல்லாத நிலையில் தியானத்தில் மூழ்கி இருந்த சுதாமணி இதை உணரவே இல்லை. அப்போது அங்கே சுகுணானந்தர் வந்தார். மகள் இருக்கும் நிலையைக் கண்ட அவர் சுதாமணி சுதாமணி என்று பல முறை பலமாகக் கூப்பிட்டார். ஆனால் சுதாமணியின் தியானம் கலையவில்லை. ஆகவே சுகுணானந்தர் சுதாமணியை உலுக்கிப் பார்த்தார். அப்படி உலுக்கிய போது சுதாமணியின் உடல் இலவம்பஞ்சு போல் இலேசாக இருந்ததைக் கண்டு வியந்தார். அவர் உலுக்கியதாலும். சுதாமணியின் தியானம் கலையவில்லை. ஆகவே சுதாமணிக்குப் பாதுகாப்பாகச் சுகுணானந்தர் அங்கேயே அமர்ந்தார். சற்று நேரத்தில் சுதாமணியின் நாய் வந்தது. அது சுதாமணியின் முன் நின்று குரைக்கலாயிற்று. சில நிமிடங்களில் சுதாமணிக்கு உலக நினைவு திரும்பியது எவ்வளவு ஆழ்ந்த ஆன்மிக நிலையிலும், விலங்குகளால் அவருடைய கவனத்தைக் கவர முடிந்தது போலும்.

சுதாமணி பல சந்தர்ப்பங்களில் இந்த நாயை அம்பிகையாகவே கருதி இருக்கிறார். அப்படிப்பட்ட நேரங்களில் இவர் ஒரு குழந்தையைப் போல் நாயைக் கட்டிப்பிடித்து, முத்தமிட்டபடியே, அம்மா, அம்மா என்று அன்பு ததும்ப அழைப்பார். நாய்க்கும் அவர் மீது அந்த அளவிற்கு அன்பு இருந்திருக்கிறது.

ஒரு நாள் சுதாமணி தியானம் செய்து கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக அவருடைய மனதில் சஞ்சலம் தோன்றியது. தியானம் கலைந்து சுதாமணி எழுந்து பறயகடவு கிராமத்திற்குள்ளே சென்றார். அங்கே நாய் பிடிப்பவர்கள் அவருடன் இருந்து வந்த நாயைப் பிடித்துக் கொண்டு

செல்வதைக் கண்டார். அவர்கள் நாயைக் கொன்று விடுவர். அவர்களுடன் செல்ல மறுத்த நாய் நடக்கவில்லை. அதைப் பிடித்தவனோ சங்கிலியால் பிணைத்துத் தரதரவென இழுத்துச் சென்று கொண்டிருந்தான். நாய் பரிதாபகரமாக ஊளையிட்ட வண்ணமிருந்தது. நாயின் குரலைக் கேட்டு ஓடி வந்தவர்களுள் சில பெண்கள் சுதாமணியின் மீது அன்பு பூண்டவர்களாவர். அவர்கள் நாயைப் பிடித்திருந்தவனிடம், அந்த நாய் சுதாமணியுடன் இருப்பதென்று கூறி, அதை விட்டுவிடுமாறு வேண்டினர். ஆனால் அவன் அவர்கள் கூறியதைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் அவனுக்கு பணம் தருவதாகவும் நாயை விட்டுவிடும்படியும் சொல்லிக்கொண்டிருக்கும் போது, சுதாமணி அங்கு வந்து சேர்ந்தார். நாய் சோகம் ததும்பச் சுதாமணியைப் பார்த்தபடியே கண்ணீர் வடித்தது. இதைக் கண்ட நாய்பிடிப்பவனின் கல்நெஞ்சமும் கரைந்து விட்டது. ஆகவே அவன் நாயை விட்டு விட்டான். இதுபோல் மேலும் சிலமுறை வெவ்வேறு நாய் பிடிப்பவர்களின் கைகளில் சீக்கிய அந்த நாயைச் சுதாமணி காப்பாற்றி இருக்கின்றார்.

சுதாமணியைப் பக்தர்கள் எவரேனும் வீழ்ந்து நமஸ்காரம் செய்வதைப் பார்த்தால் நாயும் தனது முன் கால்களை நீட்டித் தலையைக் குனிந்து நமஸ்காரம் செய்யும். சுதாமணி பக்திப் பித்தில் தன்னை மறந்து ஆனந்தமாக நடனமாடுவதைக் கண்டால் நாயும் அவரைச் சுற்றிச் சுற்றி வந்து துள்ளிக் குதித்து நடனமாடுவது போல் செய்யும். கோவிலில் சங்கு ஊதும் ஒசையைக் கேட்டால், சங்கின் இனிய நாதத்திற்கேற்ப ஊளையிடும்.

இந்த நாய் நோய்வாய்ப்பட்டு உயிர் துறக்கப் போகிறது என்கிற உணர்வு ஒரு நாள் சுதாமணிக்கு ஏற்பட்டது. இதன் பின் சில நாட்கள் கழிந்தன. அந்த நாய்க்கு வெறி பிடித்துவிட்டது. ஆனால் நோயால் நாய் அதிகமாகத் துன்பப்படவில்லை. அது இறந்து விட்டது. அந்த நாயின் மறைவு குறித்துச் சுதாமணி வருந்தினாரா என்று அவரிடம் கேட்ட போது, "வருத்தம் எதுவும் இல்லை. அது இறந்து விட்டாலும் விரைவில் என்னிடம் வந்து சேரும்" என்று பதிலளித்தார். சில நாட்கள் சென்ற பிறகு அவர் அந்த நாயின் ஜீவன் அந்தக் கிராமத்திலேயே பிறந்திருப்பதாகத் தெரிவித்தார். மேற்கொண்டு அது பற்றிக் கூறுமாறு கேட்ட போது சுதாமணி அதற்குப் பதிலளிக்கவில்லை.

இறைவனோடு ஐக்கியமாக இருக்கும் அனுபூதிமான்கள்,

இறைவனுடைய சிருஷ்டியில் இருக்கும் எல்லா உயிர்களையும் இறைவனாகவே காண்கின்றனர். ஆகவே, அவர்கள் எல்லா உயிர்களிடமும் சமமாக அன்பு செலுத்துகின்றனர். இத்தகைய அன்பால் விலங்குகளும் கவரப்படுகின்றன. சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களும் அனுபூதிமான்களிடம் ஆட்டுக் குட்டியைப் போல் நடந்து கொள்கின்றன. அவர்களிடம் எல்லா உயிர்களும் நேசம் பாராட்டுகின்றன. தங்கள் பகைமை உணர்வை இழக்கின்றன. சுதாமணியுடன் பறவைகளும், விலங்குகளும் கொண்டிருந்த இணக்கம் இதையே காட்டுகிறது. அவை பேசுவதைக் கூடச் சுதாமணியால் புரிந்து கொள்ள முடிந்தது என்றால் வியப்பென்ன?

5. ஆசிரமத்தின் உதயம்

அம்மா கிருஷ்ணபாவ தரிசனமும், தேவிபாவ தரிசனமும் தருவது 1975ம் ஆண்டில் ஆரம்பித்தது. அந்த ஆண்டில் ஒருநாள் அம்மா சுகுணானந்தரிடம் "இங்கு வருபவர் எவரிடமும் எதையும் கேட்டுப் பெற வேண்டாம். கேட்காமலேயே தேவையானது தக்க நேரத்தில் வந்து சேரும். இறைவன் உங்களுக்கு வேண்டியதைத் தந்து அருள் புரிவார். வருங்காலத்தில் இந்த இடம் ஓர் ஆன்மிக நிலையமாக உருவாகும். உலகமெங்கும் இருந்து பக்தர்கள் இங்கே வருவார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் உங்களுடைய குழந்தைகளாகவும், குடும்பத்தினராகவும் உறவு கொண்டாடுவார்கள்" என்று கூறினார். இதைக் கேட்ட சுகுணானந்தர் அன்று இதைப் பித்துப்பிடித்த மகளின் பைத்தியக்காரத்தனமான பிதற்றல் என்று கூட எண்ணி இருக்கலாம்.

1976ம் ஆண்டில் இருபத்திரண்டு வயதான இளைஞர் உன்னிகிருஷ்ணன் அம்மாவைத் தரிசித்தார். அந்த முதல் தரிசனமே அவரிடத்தில் தீவிரமான ஆன்மிக நாட்டத்தை ஊட்டியது. இதை அம்மா உணர்ந்து கொண்டார். மறுவருடம் அவரை அன்றாட ஆலய வழிபாட்டைச் செய்து கொண்டு அங்கேயே தங்கி இருப்பதற்கு அனுமதித்தார். மேலும், அம்மா அவருக்குரிய ஆத்மசாதனைகளையும் போதித்தார். அவரும் அம்மா காட்டிய வழியில் ஆன்மிக வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டார். சாஸ்திரங்களைக் கற்றார். கவிதைகளின் வாயிலாகத் தனது பக்தி தாகத்தை வடித்தெடுத்தார். அவர்



ஸ்டேட் யூனிவர்ஸிடி நியூயார்க் 2010 மார்ச் 25

அடக்கமே வடிவெடுத்தவர். அதனால் அவர் அங்கே வாழ்ந்து வருவதைப் பலர் அறிந்திருக்கவில்லை. இரவில் ஆலயத் தாழ்வாரத்தில் ஒரு துண்டை விரித்துப் படுத்துக் கொள்வார். இவ்வாறு உன்னிக்கிருஷ்ணன் முதல் ஆசிரம வாசியானார்.

1978ம் ஆண்டில் அம்மாவைத் தரிசிக்கும் பேறு பெற்ற அந்தண இளைஞர் ஒருவர் அடிக்கடி அம்மாவிடம் வரலாயினார். அப்போதெல்லாம். இளைஞர்கள் அம்மாவுடன் நெருங்கிப் பழகுவதைச் சுகுணானந்தர் கண்டித்தார். இதனால் மன வருத்தத்துடன் இளைஞர் அம்மாவின் அருகே அமர்ந்திருந்தார். அம்மா அவருக்கு ஆறுதல் கூறித் திருவண்ணாமலைக்குப் போய் தவம் செய்யுமாறு சொன்னார்.

இளைஞர் அம்மாவிடம், "அம்மா, சுகுணானந்தர் உங்களுடைய பக்தர்களிடம் இவ்வாறு கடுமையாக நடந்து கொண்டால் இங்கே ஆசிரமம் எவ்வாறு உருவாகும்? அவர் இங்கே தங்க விரும்பும் பக்தர்களிடம் மட்டுமல்லாமல், உங்களிடமும் அன்பில்லாமல் நடந்து கொள்கிறார். அம்மா, இன்று தாங்கள் சந்தித்து வரும் எதிர்ப்புகளை எல்லாம் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உங்களுடைய தேவைகளைக் கவனித்து, உங்களுக்குச் சேவை செய்ய யாருமே இல்லையா?" என்று கவலையுடன் கேட்டார்.

அம்மா புன்னகை பூத்தவராக "மகனே கவலைப்படாதே எல்லாம் நன்மைக்கே, திருவண்ணாமலையில் நீ அம்மாவையும் வருங்கால ஆசிரமத்தையும் கவனித்துக் கொள்ளப் போகும் குழந்தைகளைச் சந்திப்பாய், அங்கே வெளிநாட்டிலிருந்து வந்து தங்கி இருக்கும் குழந்தைகள் சிலர் அம்மாவைப் பார்ப்பதற்குக் காத்திருக்கிறார்கள். உன்னையும், அவர்களையும் சுகுணானந்தர் அன்போடு வரவேற்கும் நாள் விரைவில் வரும்" என்றார்.

அம்மா கூறியபடியே இளைஞர் திருவண்ணாமலைக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் காயத்ரி என்னும் பக்தையை முதலில் சந்தித்தார். ஆஸ்திரேலியாவில் பிறந்தவரான அவர், நம் நாட்டின் மீதும், நமது மதத்தின் மீதும் ஈடுபாடு கொண்டு, திருவண்ணாமலைக்கு வந்து தங்கி இருந்தார். சில நாட்கள் கழித்து ரியூனியன் நாட்டைச் சேர்ந்த மது என்பவரை அந்த

இளைஞர் சந்தித்தார். மது இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். இவர்கள் இருவரும் அம்மாவின் குழந்தைகள் என்று இளைஞருக்குத் தோன்றியது.

ஆகவே, இளைஞர் அவர்கள் இருவரிடமும் அம்மாவைப் பற்றிக் கூறி, அம்மாவின் புகைப்படத்தைக் காட்டினார். படத்திலிருந்த அம்மாவின் ஆனந்தவதனம் காயத்ரியை மிகவும் கவர்ந்தது. அம்மாவின் பேரன்பையும், கருணையையும் பற்றி இளைஞர் கூறியது காயத்ரியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தது. அன்று அவர் தியானம் செய்த போது அவருடைய வாழ்வில் முதன் முறையாக ஓர் ஆன்மிக அனுபவம் வாய்த்தது. அதைப் பற்றிப் பின்னர் அவர், எனக்குள்ளே ஓர் ஒளிப்பிழம்பைக் கண்டேன். அதில் அம்மாவின் ஜீவன் ததும்பும் திருவடிவத்தைத் தரிசித்தேன். திடீரென்று எனக்குள்ளே இருந்து "அம்மா!, அம்மா!, அம்மா! என்னும் குரல் ஒலித்தது. மனதிலிருந்து எண்ணங்கள் எல்லாம் மறைந்தன. மனது அமைதியாக இருந்தது. இந்த நிலையிலிருந்து மீண்டு கண்களைத் திறந்து கடிகாரத்தைப் பார்த்தேன். இருபது நிமிடங்கள் கழிந்திருந்தன. அவ்வளவு நேரம் போனதை நான் உணரவில்லை" என்று கூறினார். காயத்ரி இதுவரை அம்மாவைத் தரிசிக்கவில்லை, எனினும் அவர் அம்மாவுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று ஆவல் கொண்டார்.

அம்மாவைப் பற்றிச் சிந்தித்தாலும், அல்லது யாராவது பேசினாலும் மதுவுக்கு மனதில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள அவர் விரும்பினார். அவர் கேரள இளைஞரை நீலு என்னும் அமெரிக்கருக்கு அறிமுகம் செய்து வைத்தார். நீலு கடந்த பதினோரு ஆண்டுகளாகத் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார். அவர் தனது குருவுக்குச் சேவை செய்வதில் ஈடுபாடு கொண்டிருந்தார். அண்மையில் அவருடைய குரு மகாசமாதி அடைந்து விட்டார். நீலுவுக்குத் தியானம் செய்வதில் நல்ல நாட்டம் இருந்தது. ஆனால் கடுமையான முதுகுவலியாலும், வயிற்றுவலியாலும், அவர் துன்புற்றார். ஆகவே அவரால் ஒரு சில நிமிடங்களே உட்காரவோ, நடக்கவோ முடிந்தது. பெரும்பாலும் அவர் படுத்தே இருந்தார். பல மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்து விட்டனர். ஆனால் அவருடைய வலிகளுக்கான காரணத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இளைஞர் நீலுவிடமும் அம்மாவைப் பற்றிக் கூறினார். ஆனால் நீலுவுக்கு

அம்மாவின் மீது ஆர்வம் ஏற்படவில்லை. அவர் பல சாதுக்களைத் தரிசித்திருக்கிறார். இப்போது அவருடைய நோக்கமெல்லாம் "தன்னை வருத்தி வரும் வலிகளிலிருந்து நிவாரணம் பெற்று, மீண்டும் தீவிரமாக ஆத்மசாதனைகளில் ஈடுபட வேண்டும்" என்பதாக இருந்தது. அவர் அம்மா தனது வலிகளிலிருந்து நிவாரணம் தரக் கூடுமென்று நினைத்தார். ஆகவே அவர் சில வாரங்கள் கழித்து, இளைஞருடன் பறயகடவிற்கு வந்தார். அம்மாவைத் தரிசித்ததும் அவருக்கு ஆனந்தம் மேலிட்டது. தனது அனுபவத்தைப் பிறிதொரு சமயம் அவர் "அம்மாவுடன் இருந்த முதல் நான்கு நாட்களும் நான் சொர்க்கத்தில் இருந்தது போன்ற ஆனந்தத்தை அனுபவித்தேன், ஒரு நாள் இரவில், தேவிபாவ தரிசன நிறைவில் அம்மா கோயிலின் வாயிலில் நின்று கொண்டிருந்தார். நான் வெளியே நின்று, கைகளைக் கூப்பியவனாக அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுள்ளே ஆனந்தம் பொங்கித் ததும்பியது. அப்போது அம்மாவின் திருமேனி, பரந்து விரிந்து கொண்டிருந்த ஓர் ஒளி வெள்ளத்தில் மறைந்தது. அந்த ஒளி வெள்ளம் சுருங்கி, கண்களால் காண இயலாத அளவு பிரகாசமாக ஒளிப்புள்ளியாகியது. அந்த ஒளிப்புள்ளி எனக்குள்ளே புகுந்ததாக உணர்ந்தேன். இதனால் பெற்ற பேரானந்தத்தால் என்னால் மூன்று நாட்கள் தூங்கவே முடியவில்லை. அதன் பின் என்னால் அல்லும், பகலும் அம்மாவையே எண்ண முடிந்தது. எனது வாழ்நாள் முழுவதும் அம்மாவுடன் இருந்து, அவருடைய ஆன்மிக வழிகாட்டுதலைப் பெறவும், அவருக்குச் சேவை செய்யவும் முடிவு செய்தேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

விரைவில், காயத்ரியும் அம்மாவுடன் வாழ்ந்து, அவருக்குச் சேவை செய்ய முடிவு செய்து பறயகடவிற்கு வந்தார். விந்தையிலும் விந்தையாகச் சுகுணானந்தர் அம்மாவுடன் தங்க வந்தவர்களை அன்புடன் வரவேற்றார். அவர்களைத் தனது குடும்பத்தினர் போலவே நடத்தினார். அம்மாவுடன் தங்கிய பிறகு நீலுவின் உடல்நிலை தேறியது. அவரால் நடக்கவும் சிறு வேலைகளைச் செய்யவும் முடிந்தது.

நீலுவும் காயத்ரியும் வந்து அம்மாவுடன் தங்கிய பிறகு மது ஒரு பிரெஞ்சுக்காரருடன் வந்தார். அவர்களும் அம்மாவுடன் வாழ்ந்து ஆத்ம சாதனை செய்ய முடிவு செய்தனர். அவர்கள் தங்களிடமிருந்த பொருளை எல்லாம், பக்தியுடன் அம்மாவுக்கு அளிக்க முன் வந்தனர். அம்மாவோ,

"குழந்தைகளே, நீங்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கி, ஆன்மிகத்தில் நிறைநிலையை எய்தினால், அதுவே அம்மாவுக்குரிய செல்வமாகும்" என்று கூறி அவர்கள் அளித்த பொருளை ஏற்கவில்லை.

சிறிது காலத்தில் பாலகோபால், வேணுகோபால், இராமகிருஷ்ணன், ஸ்ரீகுமார், இரமேஷ்ராவ் என்கிற இளைஞர்கள் ஒருவர் பின் ஒருவராக அம்மாவிடம் வந்து சேர்ந்தனர். பாலகோபாலும், வேணுகோபாலும் சகோதரர்கள் ஆவர்.

ஆன்மிக நாட்டத்துடன் வீடு, வாசலைத்துறந்து அம்மாவிடம் அடைக்கலம் புகுந்த பிரம்மசாரிகளும், பிரம்மச்சாரிணி காயத்ரியும் தீவிரமான ஆத்மசாதனைகளில் ஈடுபட்டனர். அம்மா அவரவருக்குரிய வழியை அன்போடு புகட்டி வந்தார். அவர்கள் அம்மாவின் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தனர். எனவே போதுமான உணவோ, உடையோ, உறங்க இடமோ இல்லை என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை. அவர்கள் வெட்டவெளியில் வாழ்ந்து வெறுந்தரையில் தூங்கினர். அத்தியாவசியமான பொருட்கள் தாமே வந்து கொண்டிருந்தன. அப்படி வந்தவைகளை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். ஆசிரமத்தில் பணம் இல்லாததால், எங்கேனும் போய் வரவேண்டியதிருந்தால் நடந்தே போய் வந்தனர். அது எவ்வளவு தூரமானாலும் நடப்பதற்கு அவர்கள் தயங்கியதில்லை. ஒவ்வொருவரிடமும் ஒரே ஒரு வேஷ்டி, சட்டை தான் இருந்தது. அதை வைத்துக் கொண்டே வாழப் பழகிக் கொண்டனர்.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் ஒரு பிரம்மசாரியின் வேஷ்டியும், சட்டையும் பழையதாகி, நைந்து விட்டது. இதனால் ஓரளவு மனம் வருந்திய அவர் "அம்மா நாம் இவ்வளவு சிரமத்துடன் இருக்கிறோமே" என்று அம்மாவிடம் சொன்னார். அவரிடம் அம்மா, "மகனே இறைவனிடம் இதுபோன்ற அற்ப விஷயங்களுக்காகப் பிரார்த்திக்கக் கூடாது. அவரிடம் பூரணமாகச் சரணடைந்து விடு, உனது தேவைகளை அவர் நிறைவேற்றுவார்" என்று சொன்னார். ஆசிரமத்தில் நிலவும் சிரமமான நிலையை அறியாதிருந்தும், ஒரு பக்தர், மறுநாள் எல்லா பிரமச்சாரிகளுக்கும் புதிய வேஷ்டியும், சட்டையும் கொண்டு வந்து தந்தார்.

ஆரம்ப காலத்தில் ஆசிரமத்தில் இருந்த கஷ்டமான சூழ்நிலையை விளக்குவது எளிதல்ல. ஆனால் இந்தச் சூழ்நிலையைத் துறவு மனப்பான்மையை வளர்ப்பதற்குரிய ஆத்மசாதனமாகப் பிரம்மசாரிகள் பயன்படுத்திக் கொண்டனர். அவர்களுக்குத் துறவின் எல்லாப் படித்தரங்களிலும் பயிற்சி அளிந்த அம்மா, "குழந்தைகளே! இங்கே நீங்கள் பெறும் பயிற்சியில் வெற்றி பெற்று விட்டீர்களானால், எங்கே சென்றாலும் திருப்தியுடன் இருப்பீர்கள். இங்குள்ள கஷ்டங்களைப் பொறுத்துப் பழகிவிட்டீர்களென்றால் எந்தக் கஷ்டத்திலும் தளர்ச்சி அடைய மாட்டீர்கள்" என்று கூறி அவர்களை உற்சாகப்படுத்துவார்.

முன் அத்தியாயத்தின் இறுதியில் குறிப்பிட்டபடி சுகுணானந்தர் அம்மாவின் மகிமையைப் புரிந்து கொண்டார். இதே போல், காலப்போக்கில் தமயந்தியம்மாளும், குடும்பத்திலிருந்த மற்றவர்களும் அம்மாவைச் **சாட்சாத் அம்பிகையே** என்று உணரலானார்கள். சுகுணானந்தரும், தமயந்தியம்மாளும், "அம்பிகையின் பெற்றோராக இருப்பதற்கு எத்தனை ஜன்மங்களில் எவ்வளவு தவம் செய்தோமோ" என்று எண்ணி வியக்கலாயினர்.

அம்மாவிடம், அவர் ஏன் இப்படிப்பட்ட சிரமங்கள் நிறைந்த சூழ்நிலையில், பெற்றோராலும், மற்றும் பலராலும் துன்புறுத்தப்படவும். நிராகரிக்கப்படவும் நேருமாறு பிறவி எடுத்தாரென்று கேட்கப்பட்டது. அதற்கு அம்மா, "கற்பனைக்கெட்டாத மிகமிக மோசமான சூழ்நிலையில் வாழ்ந்தாலும் கடவுளை அடைய முடியுமென்று மனித குலத்திற்கு எடுத்துக் காட்டவும், அதன் மூலம் மக்களுக்கு ஆன்மிக வாழ்வில் நாட்டத்தையும், உந்துதலையும் ஊட்டவுமே" தாம் இவ்வாறு பிறவியை எடுத்ததாகப் பதிலளித்தார்.

இவ்வளவு சிரமப்பட்ட அம்மாவை மையமாகக் கொண்டு உருவான ஆசிரமமும், ஆரம்ப காலத்தில் அளவற்ற கஷ்டதிசையோடு வளர்ந்ததில் வியப்பில்லை.

6. என் மகள் ~ என் அம்மா



(அம்மாவின் தந்தை சுகுணானந்தர் பூத உடலைத் துறப்பதற்கு
இரண்டு வருடங்களுக்கு முன்பு அளித்த பேட்டியிலிருந்து)

என் மகளை உலகம் முழுவதும் அம்மா என்று அழைக்கின்றது. உலகமே வணங்கும் அம்மா 84 வயதாகி விட்ட இந்த முதியவனின் வாழ்வில் மிகப்பெரிய அருள்மழையாக வந்தவர். வாழ்வின் இறுதிக் கட்டத்தில் நிற்கும் என் நினைவுகளில் ஒரு ஒழுங்கு முறை இருக்காது, இருப்பினும் நான் பிறந்து வளர்ந்த ஆலப்பாடு கிராமத்தினரை மட்டுமல்ல, துயரனுபவிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீரைத் துடைக்கும் அம்மாவைக் குறித்துக் கூற நான் முயற்சி செய்கின்றேன்.

கிழக்கில் காயங்குளத்தின் காயலுக்கும், மேற்கில் அரபிக் கடலுக்கும் இடையில் அமைந்துள்ளது தான் நான் பிறந்து வளர்ந்த கடலோரக் கிராமமான பறயக்கடவு என்ற இடம். மீனவர்கள் வாழும் இந்தக் கிராமத்தின் முக்கியத் தொழில் மீன்பிடிப்பது தான். அருகில் அமைந்துள்ள வீடுகள், அவற்றில் பெரும்பாலும் உற்றார் உறவினர்கள் அடங்கிய கிராமம் இது.

மிக முக்கியமான விஷயம் ஒன்றைச் சொல்கிறேன். வெகு காலத்திற்குப் பின்புதான் எங்கள் கிராமத்திலிருந்து மறுகரையான கருநாகப்பள்ளிக்குச் செல்லப் பாலம் கட்டப்பட்டது. ஆனால், வெள்ளனாத்துருத்து, பண்டாரத்துருத்து முதல் அழீக்கல் வரையுள்ள கடலோர கிராமங்களில்

பல ஆலயங்கள் இருந்தன. அத்துடன் கிறிஸ்தவ ஆலயங்களும் இருந்தன. ஒரு வேறுபாட்டையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இக்கடலோர கிராமங்களில் ஒரு மதுபானக் கடையும் அக்காலத்தில் இல்லை. அதுமட்டுமல்ல, அக்காலத்தில் திருட்டு, கொலை போன்ற குற்றங்கள் நடப்பது மிகவும் அரிதாக இருந்தது. இப்போது நினைத்துப் பார்த்தால் இவை அனைத்தும் பின்னால் வர இருந்ததற்கான ஒரு முன்னறிவிப்பாகத் தோன்றுகிறது. காரணம் புண்ணிய அவதாரம் நிகழ்வதற்காக என் ஊர் செய்த முன்னேற்பாடுகளாக அவை அமைந்தன.

எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் மிகுந்த தெய்வபக்தி உள்ளவர்களாக இருந்தனர். என் தந்தை வேலாயுதன் சிறந்த பக்தர். என் சிறுவயதில் தந்தையுடன் வந்த ஒரு சந்நியாஸியைப் பற்றி இலேசான நினைவு இருக்கிறது. தந்தை அந்த சந்நியாசியை மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார். எங்கள் வீடான இடமண்ணேலைச் சுற்றி நடந்து அவர் எதையோ பார்த்தார். அதன்பிறகு, **"இது ஒரு புனித பூமியாகும். இது யோகிகளும், சந்நியாசிகளும் சாதனை புரியும் இடமாக மாறும். அருள்நிறைந்த இப்பூமியின் ஒவ்வொரு மணல் துகளும் புனிதமானதாகும்"** என்றார். அன்று அந்த சந்நியாசியின் வார்த்தைகள் சிறிய பையனாக இருந்த எனக்குப் புரியவில்லை. ஆனால், இன்று வயதின் காரணத்தால் பார்வைக் குறைவு உள்ள என் முன்னால் ஜகத்குருவான அம்மாவும், சந்நியாசிகளும், ஆன்மிக சாதகர்களும் தவம் செய்வதை நான் காண்கிறேன்.

சிறுவயதில் இறை பக்தனாக இருந்த எனக்குக் கதகளியில் விருப்பம் இருந்தது. எட்டு வயதில் நான் கதகளி பயில ஆரம்பித்தேன். தெக்கய்யத்து ராமன் குஞ்ஞாசானின் கதகளி ஒன்றில் கிருஷ்ண வேடம் அணியும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. குருவின் வார்த்தைகள், செயல்கள் போன்றவை சில சமயங்களில் நமக்கு வேதனை அளிப்பவையாக இருக்கும். ஆனால், இறுதியில் அவை நமக்கேற்ற பாதையைக் காட்டித்தரும்.

ஒருமுறை கதகளிக்குச் சென்ற போது நடந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகின்றது. நான் கிருஷ்ணவேடம் அணிந்திருந்தேன். பல நாட்களாக கதகளிக்குச் சென்று வந்த காரணத்தால் சோர்வாக இருந்தது. மேடையில் பீமனுக்கும், துரியோதனனுக்குமிடையில் மல்யுத்தம் நடந்து கொண்டிருந்தது.

கிருஷ்ணவேடம் அணிந்திருந்த நான் மேடைக்குப் பின்புறமிருந்த தூணில் சாய்ந்தபடி உறங்கிவிட்டேன். துரியோதனனை வெல்வதற்கு அவனை அடிக்க வேண்டிய இடத்தைக் காட்டிக்கொடுப்பதற்கு மேடைமீது கிருஷ்ணன் வரவேண்டிய சமயம் ஆகிவிட்டது. அப்போது நான் உறக்கத்தில் இருந்தேன். குருநாதரின் அடியால் திடுக்கிட்டு விழித்து, மேடையை அடைந்தேன். மேடையில் நான் அமர்வதற்கு ஒரு உரலைப் போட்டிருந்தனர். (அக்காலத்தில் கிருஷ்ண வேடமணிந்தவர் உரலில் அமர்வது வழக்கம்) நான் உரலில் ஏறி அமர முயற்சித்த போது அது உருண்டு விழுந்தது. உருண்டு விழுந்த உரலை நேராக நிமிர்த்தி வைப்பதற்கு இடையில் என் குருநாதன் மீண்டும் என் முதுகில் நன்றாக ஒரு அடி வைத்தார். சங்கு, சக்கரம் அணிந்த பகவான் நடுங்கியபடி நடிக்கவேண்டியிருந்தது. குருநாதனிடமிருந்து கிடைத்த அடியால் எனக்கு அவமானமும், கோபமும் ஏற்பட்டது. அதனால் என் நடுக்கம் நூறுமடங்கு அதிகரித்தது. கோபத்தில் நடுங்கிக் கொண்டிருந்த நான் அதே மனநிலையுடன் கிருஷ்ணவேடத்தில் ஆடி முடித்தேன். கதகளி நிகழ்ச்சி முடிந்த பிறகுதான் அன்று நான் மிக நன்றாக நடித்ததை அறிந்தேன். என் கிருஷ்ணவேடத்திற்கு மக்களிடையில் நல்ல அங்கீகாரமும் கிடைத்தது. நிகழ்ச்சி முடிந்த உடன் அருகில் வந்த குருநாதர் அன்றைய எனது நடிப்பைப் புகழ்ந்ததுடன், எனக்குப் பரிசும் அளித்தார். இக்கதையைக் கூறுவதற்கு ஒரு காரணம் உண்டு. குருவின் அன்பென்பது அவரது உள்ளத்தில் மறைத்து வைத்திருக்கும் பொக்கிஷமாகும். குருவின் செயல்களை சாதாரண மனிதர்களான நம்மால் புரிந்து கொள்ள முடியாது. நம்முடைய, நமது சமூக, உலக நன்மைக்காக அம்மா அவதரித்தது முதல், மஹா குருவான அம்மாவின் செயல்கள் பலவற்றிற்கும் சாட்சியாக இருக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

கதகளியுடன் மீன் வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்த என் திருமணம் 21வது வயதில் நடந்தது. பண்டாரத்துருத்து கிராமத்தில் பிறந்த தமயந்தி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். தமயந்தி சிறந்த பக்தை சுற்றுப்புறத்தில் வசித்த மக்கள் தமயந்தியின் பக்தியைக் கண்டு பட்டத்தியம்மா (பிராமணத்தி) என்று அழைத்தனர். கணவன் என்ற நிலையில் என்மீது அவர் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். வியாபார நிமித்தமாக பயணங்கள் செய்யும் நான் பெரும்பாலும் நடுஇரவில் வீடு திரும்புவது வழக்கம். இருப்பினும். தமயந்தி உணவருந்தாமல் எனக்காகக் காத்திருப்பார். முதல் குழந்தை

பிரசவத்தின் போதே இறந்தது. அதன்பிறகு மூத்த மகள் கஸ்தூரி பிறந்தாள். மூன்றாவது குழந்தை சில தினங்களில் இறந்தது. இந்த சமயத்தில் நான் வீட்டிற்கருகில் ஒரு சிறிய பலசரக்குக்கடை வைத்தேன். தமயந்திதான் கடையை நடாத்தி வந்தார்.

தமயந்தியின் நான்காவது பிரசவத்தில் சில தனிச்சிறப்புகள் காணப்பட்டன. கர்ப்பம் தரித்திருந்தபோது தமயந்தி ஒருநாள் கனவில் கிருஷ்ணரைத் தரிசித்ததாகக் கூறினார். நான் அதை நம்பவில்லை. அதுமட்டுமல்ல, "எல்லாத் தெய்வங்களையும் எப்போதும் வழிபடும் வழக்கமுள்ள நீ கனவில் கிருஷ்ணரையும் காணக்கூடும்" என்றேன். பின்னர் ஒருநாள் பகல் வேளையில் தமயந்தி, **"ஒரு ஒளி அறைக்குள் வந்து என் உடலுக்குள் புகுந்தது"** என்றார். அத்தகைய ஒளி எதையும் நான் காணாத காரணத்தால் அதையும் நம்பவில்லை. நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தபோதும் அவர் கடைக்குச் சென்றார். வியாபாரத் தேவைகளுக்காக நான் பயணம் செய்வது வழக்கம். இவ்வாறு ஒருமுறை செய்த பயணத்தின் போது திருவன் வண்டூர் ஆலயத்திற்குச் சென்றேன். நான் அங்கே தங்கினேன். கிருஷ்ண ஆலயமான திருவன் வண்டூரில் தங்கிய போது என் இல்லத்தில் ஒரு தெய்வீக அவதாரம் நிகழ்ந்து கொண்டிருந்தது. காலையில் கடைக்குச் சென்ற தமயந்திக்கு அதிக சோர்வாக இருந்தது. கடையை மூடாமலேயே அவர் தனியாக வீட்டை அடைந்தார். வீட்டில் யாரும் இல்லை. பிரசவ வலி அதிகரித்தது. யாருடைய உதவியும் இன்றி அவர் ஒரு பெண்குழந்தைக்குத் தாயானார். இதைக் குறித்து அறியாமல் தற்செயலாக அங்கே வந்த, அருகில் வசிக்கும் ஒரு பெண்மணி குழந்தையை முதன்முதலாகக் கையில் எடுத்தார். பிறந்த குழந்தை உடனே அழவில்லை. "தெய்வமே இது உயிரற்ற குழந்தையா?" என்று அவர் அரற்றினார். ஆனால், உயிர்த்துடிப்பு இருப்பதைக் கண்ட அவர் குழந்தையைக் குளிப்பாட்டி தமயந்தியின் அருகில் படுக்கவைத்தார். காலம் இக்குழந்தையின் குரலுக்காகக் காத்திருக்கும் என்பதை நாங்கள் யாரும் அறிந்திருக்கவில்லை.

குழந்தைக்கு நாங்கள் சுதாமணி என்று பெயரிட்டோம். சுதாமணிக்கு நல்ல சுறுசுறுப்பும், அசாதாரணமான ஞாபக சக்தியும் இருந்தன. சுதாமணி நான்கு மாதக் குழந்தையாக இருந்தபோது ஒரு நாள் தமயந்தி வெளியில் சென்றிருந்தார். அப்போது குழந்தை அழ ஆரம்பித்தது. குழந்தையின்

அழுகையை நிறுத்துவதற்கு நான் வெகுநேரம் முயன்றேன். குழந்தையோ உரத்த குரலில் அழுதுகொண்டே இருந்தது. கோபம் தாங்காமல் நான் குழந்தையைக் கட்டிலை நோக்கி வீசிஎறிந்தேன். பல வருடங்களுக்குப் பிறகு அம்மா என்னிடம் கேட்ட கேள்வி இப்போதும் என் காதுகளில் ஒலிக்கின்றது. "அன்று என்னை நீங்கள் எதற்காக வீசி எறிந்தீர்கள்? கொல்வது போலல்லவா எறிந்தீர்கள்?" அதைக் கேட்ட நான் வாயடைத்து நின்றேன். ஆறேழு மாதம் ஆனதுமே சுதாமணி பேச ஆரம்பித்தார். சுற்றிலும் உள்ளவர்கள் சுதாமணியை அன்போடு குஞ்ஞே (குழந்தாய்) என்று அழைப்பது வழக்கம்.

எங்கள் வீட்டில் தமயந்தி பல தெய்வத் திருவுருவப் படங்களை சுவரில் மாட்டி வைத்திருந்தார். தமயந்தி, சுதாமணிக்கு கிருஷ்ணர், பரமசிவன் ஆகியோரின் படங்களைக் காட்டி, பல கதைகளை சொல்லிக் கொடுப்பார். சுதாமணி தெய்வங்களைப் பற்றிப் பல கேள்விகளை எழுப்புவார். ஐந்தாம் வயதில் குழித்துறை பிஷரீஸ் பள்ளியில் சுதாமணியை முதல் வகுப்பில் சேர்த்தோம். பள்ளியில் சேர்த்தபிறகு சுதாமணியின் மீது ஓர் புகார் வந்தது. காலையில் பிற சிறார்களுடன் பள்ளிக்குப் புறப்பட்டுச் செல்லும் அம்மா ஒருநாளும் சரியான நேரத்தில் பள்ளிக்குச் சென்றதில்லை. பள்ளி ஆசிரியர் என்னிடம் "என்ன சுகுணானந்தா உன் மகள் எப்போதும் தாமதமாகப் பள்ளிக்கு வருகிறாளே? சரியான நேரத்தில் அனுப்பிவைக்கக் கூடாதா?" என்று கேட்டார். நான் சுதாமணியை அழைத்துக் கேட்டபோது 'ஒன்றுமில்லை' என்ற பதில் தான் கிடைத்தது. சுதாமணியுடன் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளை அழைத்துக் கேட்டபோது அவர்கள் சுதாமணி எங்களுடன் இங்கிருந்து புறப்படுவது உண்மைதான். ஆனால், வழியில் பல வீடுகளுக்குச் செல்வாள், அங்கே உடல்நலமின்றிப் படுக்கையில் இருப்பவர்களுக்கு ஆறுதல் கூறுவதும், அவர்களுக்குத் தேவையானதைச் செய்வதும் தான் அவளது வேலை. அதனால் தான் சுதாமணி வகுப்பிற்கு வரத் தாமதமாகிறது என்றார்கள்.

பணவசதியற்ற குடும்பங்களுக்குச் சுதாமணி சென்று அவர்களது நிலையை விசாரித்து அறிவார். அன்று மாலை வீட்டிற்கு வந்தால், மறுநாள் ஓர் புத்தகம் வாங்கவேண்டும் அல்லது பென்சில் வாங்க வேண்டும் என்று சொல்லி என்னிடமிருந்து காசு வாங்குவார், மறுநாள் பள்ளிக்குச் செல்லும்

வழியில் அதை அவ்வீட்டாருக்குக் கொடுப்பார். அதுபோல், அரிசியில்லாத காரணத்தால் கஞ்சி வைக்காத வீடுகளைக் கண்டுபிடித்து எங்கள் வீட்டிலிருந்து அரிசியையும், பிற பொருள்களையும் திருடிச் சென்று கொடுப்பார். இத்தகு செயல்களைச் செய்வதால் தமயந்தி சுதாமணியை அடிப்பதுண்டு. இரவு வீட்டிற்கு நான் திரும்பி வந்ததும் தமயந்தி என்னிடம் மகளைப் பற்றிய புகார்களைக் கூறுவார். "மகள் நேரத்தில் பள்ளிக்குச் செல்வதில்லை. இங்குள்ள அரிசி, பிற பொருள்களைத் திருடி ஏழைகளின் வீடுகளுக்குச் சென்று கொடுக்கிறாள். அதுமட்டுமல்ல இவள் ஒரு பெண் குழந்தை அல்லவா? இப்படி ஒவ்வொரு வீடாக ஏறிஇறங்கி வந்தால் வெட்கக் கேடல்லவா?" அது ஒரு தாய் என்ற நிலையில் தமயந்திக்கு மகள் மீது உள்ள ஆதங்கமாக இருந்தது. இதை எல்லாம் கேட்ட நான் குழந்தையை எழுப்பினேன். புத்தகத்தை எடுத்துக் கொண்டு வருமாறு சொன்னேன். புத்தகத்தைக் கொண்டு வந்த சுதாமணி என்னிடம் "எனக்கு எல்லாம் தெரியும்" என்றார். அப்போது நான் புத்தகத்தை வாங்கிப் பார்த்தேன். சிறிதும் அழுக்காகாத புத்தம்புதிய புத்தகத்தைக் கண்ட என் மனதில் சந்தேகம் எழுந்தது. அப்போது சுதாமணி "எனக்குப் புத்தகத்தில் உள்ளது மட்டுமல்ல எல்லாம் தெரியும்" என்றார். இதைக் கேட்ட போது சிற்றறிவு படைத்த எனக்குக் கோபம் வந்தது. புத்தகத்தில் இதுவரை ஆசிரியர் சொல்லித் தந்தவற்றைக் கூறுமாறு கேட்டேன். உடனே இதுவரை ஆசிரியர் கற்பித்த,—கற்பிக்காத பாடங்கள் அனைத்தையும் ஒரேமூச்சில், பார்க்காமல் சுதாமணி ஒப்பித்தபோது நான் மகிழ்ச்சியில் ஆழ்ந்தேன். அறிவுக்கூர்மையுள்ள என் மகளை நான் நன்கு படிக்க வைப்பேன் என்று தமயந்தியிடம் கூறினேன்.

ஆனால் "எனக்கு எல்லாம் தெரியும்" என்று அந்தச் சிறுவயதில் கூறிய வார்த்தைகளின் பொருள் இப்போது தான் எனக்குப் புரிகிறது. இடையில் நடந்த ஒரு சம்பவம் இப்போது நினைவுக்கு வருகிறது. சிறிய பொன் கம்மல் ஒன்றை நான் ஒருமுறை சுதாமணிக்கு வாங்கிக் கொடுத்தேன். சில தினங்கள் அவள் அதை அணிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். பின்னர் கம்மல் காணவில்லை. "கம்மல் எங்கே?" என்று தமயந்தி மகளிடம் கேட்டபோது. "அங்கே வைத்தேன். இங்கே வைத்தேன்" என்று பதில் கிடைத்தது. சில தினங்களுக்குப் பிறகு உண்மை வெளியில் வந்தது சிறிது தூரத்தில் வசிக்கும் ஒரு பெண்மணி எங்கள் வீட்டிற்கு வந்தபோது தான் விவரம் தெரிந்தது. அவர்கள் வீட்டில் கஞ்சி குடித்து மூன்று

நாட்களாகிவிட்டன என்று சொன்ன போது சுதாமணி தனது கம்மலைக் கழற்றி அவர்களுக்கு கொடுத்திருக்கிறார். சுதாமணியின் வாயிலிருந்து உண்மையை வரவழைப்பதற்காக நான் அவரை அடித்தேன். அப்போது அவர் உண்மையைச் சொல்லவில்லை.

சுதாமணி குழந்தைப் பருவம் முதல் எங்கள் வீட்டு மாட்டுத் தொழுவத்தில் அமர்ந்து ஜபிப்பதைக் காண்பதுண்டு. பசுக்கள் கிருஷ்ணனுக்கு உரியவை. அதனால் பசுக்களை எனக்குப் பிடிக்கும் என்று அவர் சொல்வது வழக்கம் ஏழு வயது ஆனபோது தான் ஒரு பாடலை இயற்றிப் பாடினார்.

"பாஹி பராத்பரனே குருவாயூர்
புராதிபதே
பாலகோபாலகனே? ஜகந்நாயக
ஸ்ரீதரனே"

என்ற வரிகளைப் பாடியபடி அழுது கொண்டு நடனமாடுவார். இந்தநிலையில் சுதாமணிக்குப் புற உணர்வே இருக்காது. சில சமயங்களில் அறையை மூடிவிட்டு நடனமாடுவதைக் காணலாம். இதனிடையில் நான்காம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். ஆனால். பள்ளியில் வருகைப் பதிவு மிகவும் மோசமாக இருந்தது. காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டாலும் நேராகப் பள்ளிக்குச் செல்லாத காரணத்தால் வருகைப் பதிவு மிகவும் குறைந்துவிட்டது. பள்ளிக்குச் செல்லும் வழியில் பிறருக்கு உதவுவது என்பதுடன் பஜனையும், தியானமும் சேர்ந்து கொண்டன. கடைசியில் தலைமை ஆசிரியர் என்னை அழைத்தார். வருகை பதிவு மிகவும் குறைவாக இருந்த காரணத்தால் சுதாமணியின் பெயரைப் பதிவேட்டிலிருந்து நீக்கி விட்டனர். தலைமை ஆசிரியர், "இனிமேல் மீண்டும் பள்ளியில் சேர்க்க வேண்டுமெனில் கொல்லத்திற்குச் சென்று டி.இ.ஒ வைக்காண வேண்டும்" என்றார். நான் கொல்லத்திற்குச் சென்று விண்ணப்பம் எழுதிக் கொடுத்தேன். இருப்பினும் பள்ளியில் சேர்க்க முடியவில்லை. அப்போது சுபகனும், கஸ்தூரியும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். சுதாமணிக்குப் பிறகு மேலும் ஐந்து குழந்தைகளை ஈன்ற தமயந்தியின் உடல்நிலை மோசமாயிற்று. வீட்டு வேலைக்கு ஆள் இல்லை. அன்றையக் குடும்பச் சூழ்நிலையும், பிறவும் சுதாமணியின் படிப்பு நான்காம் வகுப்புடன் நிறைவடையக் காரணமாயின.

அப்போதெல்லாம் தமயந்தி எல்லா வேலைகளையும் சுதாமணிக்குக் கொடுத்தார். சோம்பேறித் தனமாக இருப்பது கூடாது என்ற தமயந்தி "என்றும் எனக்கு வேலை தா" என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று சுதாமணியிடம் கூறினார். இதைக் கேட்ட சுதாமணி "கண்ணா எனக்கு உன் வேலையைத் தா" என்று பிரார்த்தனை செய்வதை நான் கேட்பதுண்டு. பகவான் அந்தப் பிரார்த்தனையைக் கேட்டார். துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் அளித்தல் என்ற வேலை சுதாமணிக்கு இருக்கிறது என்பது இன்று தெளிவாகப் புரிகிறது.

இடையில் சுதாமணி தமயந்தியின் அக்காள் வீட்டிற்குச் சென்று அங்கும் வேலை செய்து கொடுப்பார். சிறிது காலம் தமயந்தியின் சகோதரனின் வீட்டிற்கும் சென்று வேலை செய்தார். அங்கே வேலை செய்த காலத்திலும் ஏழைகளுக்கு உதவுவதற்காக ஒவ்வொரு பொருளை எடுக்க ஆரம்பித்தார். சகோதரர் வந்து குறை சொல்ல ஆரம்பித்தார்.

வீட்டில் உள்ள போது அடுத்த வீடுகளில் உள்ள சிறார்களை அழைத்துப் பஜனை பாடச்செய்வது சுதாமணியின் வழக்கம். பசுவைப் பராமரிப்பதும் சுதாமணியின் வேலையே. அதற்காகக் கழுநீரும், புல்லும் கொண்டுவரச் செல்லும் போது பிறரது துயரத்தைக் கேட்டால், வீட்டிலிருந்து எதையாவது யாரும் காணாமல் எடுத்துச் சென்று கொடுப்பார். அதற்காகப் பல முறை அடியும் கிடைத்ததுண்டு. ஒருமுறை அவரது தோழிகள், "நீ எதற்காக சொந்த வீட்டிலிருந்து பொருள்களை எடுத்துப் பிறருக்குக் கொடுத்துவிட்டு அடிவாங்குகிறாய்?" என்று கேட்டனர். அதற்கு உடனே சுதாமணியிடமிருந்து "நான் எனக்காக அடிவாங்கவில்லை. ஏழைகளுக்காக அடி வாங்குகிறேன். அவர்களைக் காப்பது என் கடமை. அதனால் எனக்கு வலிக்கவில்லை" என்று பதில் வந்தது.

இந்நிலையில் சுதாமணிக்குத் திருமணம் செய்து அனுப்பிவிட்டால் என்ன? என்று நாங்கள் சிந்தித்தோம். ஒருநாள் பெண் பார்ப்பதற்காக ஒரு பையனிடம் வருமாறு கூறினோம். அவன் வீட்டிற்கு வந்த போது சுதாமணி உரலில் ஏதோ இடித்துக் கொண்டிருந்தார். வந்த பையன் பெண் பார்க்க வந்திருக்கிறான் என்று யாரோ கூறினார்கள். இதைக் கேட்டதும் சுதாமணி உலக்கையுடன் அந்தப்பையனுக்கு முன்னால் சென்றார். வந்தவன்

பயந்துவிட்டான். சுதாமணியின் முகபாவத்தைக் கண்ட பையனும், உறவினர்களும் உடனே வெளியேறிவிட்டனர். பின்னர் "எனக்குத் திருமணம் செய்ய நினைக்க வேண்டாம்" என்று என்னிடம் கூறினார்.

சுதாமணிக்கு 21வயதான போது அடுத்த வீட்டில் பாகவத பாராயணம் நடந்தது. பசுவிற்குப் புல்லறுக்கச் சென்ற சுதாமணி, திரும்பிவரும் வழியில் அந்த வீட்டிற்கு முன்னால் வந்த போது பாகவதம் முடிந்து பஜனை நடந்து கொண்டிருந்தது. புல்கட்டை சட்டென்று கீழே போட்டார். பஜனை நடக்கும் இடத்திற்குச் சென்று நின்றார். கைகள் இரண்டும் முத்திரை பிடித்தன. இதைப் பார்த்துக்கொண்டு நின்றவர்கள் மீதெல்லாம், சுதாமணி, தூய நீரை வரவழைத்துத் தெளித்தார். இதைத் கேட்டறிந்த மக்கள், சுதாமணியின் மீது கிருஷ்ணன் வந்து அருள்புரிந்தார் என்று கூறினர். ஆனால், அங்கே பகுத்தறிவுவாதிகளும் இருந்தனர். அவர்கள் "வந்தது பகவான் என்று சொன்னால் போதாது, ஏதாவது அற்புதம் காட்டவேண்டும்" என்றனர்.

கிருஷ்ணபாவத்தில் இருந்த சுதாமணி "சித்தியும், அற்புதமும் காட்டி நம்பச் செய்ய நான் விரும்பவில்லை. ஆன்மிக தத்துவம் என்பது சித்தியல்ல. ஒருமுறை சித்து காட்டினால் பின் நீங்கள் மீண்டும் மீண்டும் காட்டுமாறு வற்புறுத்துவீர்கள்" என்றார். "இல்லை ஒருமுறை காட்டினால் போதுமானது" என்றனர் மக்கள்.

அப்படியானால், "நாளை இந்த வீட்டில் நடக்கும் பாகவத பாராயணத்திற்கு எல்லோரும் வாருங்கள்" என்றார். சுதாமணி, மாலையில் நான் வீட்டிற்கு வந்தபோது தமயந்தி என்னிடம் இதையெல்லாம் கூறினார். எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. வயது வந்த மகள் இப்படியெல்லாம் நடந்து கொள்வது எந்த ஒரு சாதாரணமான தந்தையாலும் தாங்கிக் கொள்ள முடியாததாகும். ஆனால் பாகவத பாராயணம் நடந்த வீட்டில் மறுநாள் ஒரு மகா அற்புதம் நடந்தது. அன்று பஜனைக்குப் பிறகு 'கிருஷ்ண பாவம்' மேற்கொண்ட மகள், ஒரு பாத்திரத்திலிருந்த சுத்தமான நீரைப் பஞ்சாமிர்தமாக மாற்றி, அங்கிருந்த அனைவருக்கும் அளித்தார். பின்னர். பாக்கி இருந்ததை கடற்கரையிலிருந்த கிருஷ்ண விக்கிரகத்திற்கு அருகில் இருந்த அனைவருக்கும் கொடுத்தார்.

இந்த அற்புதத்தைக் காண நான் அங்கு இல்லாத காரணத்தால் என்னால் இதை நம்ப முடியவில்லை. அதனால் உண்மையை அறிய என் வீட்டிலேயே பாகவத பாராயணம் நடத்த ஏற்பாடு செய்தேன். பாராயணத்தின் முடிவில் சுதாமணி கிருஷ்ணபாவத்தை மேற்கொண்டார். இந்த பாவதரிசன வேளையில் சுதாமணி முதன்முதலாக சில விஷயங்களைக் கூறினார். என் பக்தர்கள் வெகுதூரத்திலிருந்தெல்லாம் இங்கே வருவார்கள். அவர்கள் அனைவரும் இங்கேயே நிரந்தரமாகத் தங்குவார்கள். உங்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படும். எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டும். உலகில் எல்லாப் பாகத்திலிருந்தும் மக்கள் வருவார்கள் என்றார்.

அதன் பிறகு மற்றொரு அனுபவமும் வாய்த்தது. ஒருநாள் மாலை தமயந்தி அம்மாவை அழைத்து, களரியில் (குடும்பக் கோயில்) விளக்கு ஏற்றுமாறு சுதாமணி கூறினார். "இங்கே திரிமட்டுமே உள்ளது. எண்ணெய் இல்லை" என்று தமயந்தி அம்மா கூறினார். "பரவாயில்லை, திரியை தண்ணீரில் நனைத்து ஏற்றுங்கள்" என்றார். தமயந்தி அம்மா அப்படியே செய்தார். நீரில் நனைத்து எடுத்த திரி நல்ல ஒளியுடன் எரிவதை நாங்கள் முதன்முதலாகக் கண்டோம். நாளடைவில், கிருஷ்ணபாவ தரிசனம் காணவும், தங்கள் துன்பங்களுக்குப் பரிகாரம் தேடவும் மக்கள் சுதாமணியிடம் வர ஆரம்பித்தனர். அக்காலத்தில், ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய மூன்று தினங்களில் பாவதரிசனம் நடைபெறுவது வழக்கம். மாலை நான்கு மணிக்குக் களரியின் முன்னால் பஜனைக்கு மக்கள் கூடுவர். சிலரிடம் நான், "எதற்காக நீங்கள் இவ்வளவு தூரத்திலிருந்து இங்கே வருகிறீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் "எங்கள் வீட்டின் பல பிரச்சனைகள் அம்மாவின் அருளால் விலகின" என்றனர். இதற்கிடையில் எங்கள் வீட்டின் மாட்டுத்தொழுவம் களரியாக மாறி இருந்தது. அங்கே இருந்தபடிதான் அனைவரும் பஜனை பாடுவர். பூஜை, தீபாராதனை என எல்லாம் நடக்கும். அதன்பிறகு, கிருஷ்ணபாவ தரிசனம் நடைபெறும்.

1976ம் ஆண்டில் தான் அம்மாவிடம் முதன்முதலாக தேவிபாவகத்தைத் தரிசித்தோம். அக்காலத்தில், அம்மா தேவி உபாசனை செய்திருந்தார். இதற்கிடையில் தரிசன சமயத்தில் வந்து கலகம் விளைவிக்க முயன்ற பலர் பின்னாளில் அம்மாவின் பரம பக்தர்களாக மாறினர். 1976ம் ஆண்டின் முடிவில், அதாவது அம்மாவின் 23வது வயதில் பிரம்மசாரி சீடர்கள் வர

ஆரம்பித்தனர். மாவேலிக்கரையிலிருந்து பாலகோபால் (ஸ்வாமி அம்ருதஸ்ரூபானந்த புரி) என்ற இளைஞர் அம்மாவைக் காணவந்தார். அவர் மாவேலிக்கரை கல்லூரியில் பி.ஏ.இறுதி வருடத்தேர்வு எழுதிவிட்டு, தேர்வின் முடிவுக்காக காத்திருந்த சமயம் அது. பிரார்த்தனை வேளையில் வந்து சேர்ந்த பாலகோபால் களரியின் முன்னால் நின்று வணங்குவதைக் கண்ட அம்மா, அவரிடம் பஜனை பாடுமாறு கூறினார். பாலகோபால் பஜனை பாடினார். பாலுவுடன், வங்கியில் வேலைபார்த்த, பாலக்காடைச் சேர்ந்த ராமகிருஷ்ணானந்த புரி, பாலுவின் தம்பி வேணு (ஸ்வாமி ப்ரணவாம்ருதானந்த புரி), செப்பாடிலிருந்து ஸ்ரீகுமார் (ஸ்வாமி பூர்ணாம்ருதானந்த புரி), ஹரிப்பாடைச் சேர்ந்த ரமேஷ்ராவ் (ஸ்வாமி அம்ருதாத்மானந்த புரி) ஆகியோரும் வந்து சேர்ந்தனர்.

அக்காலத்தில், வவ்வாக்காவில் இருந்த தனது தோட்டத்தில் குழி தோண்டிய ஒருவருக்கு ஒரு சிலை கிடைத்தது. அவர் அதை அம்மாவுக்குக் கொடுத்தார். அம்மா அதைக் களரியில் வைத்தார். தேவி பாவத்திற்கு வந்த சில பக்தர்கள் அம்மாவுக்கு வாளும், சூலமும் கொடுத்தனர். ஒருமுறை கருநாகப் பள்ளியில் வேலை செய்து வந்த ஒரு வங்கி மானேஜர் இங்கே வந்தார். ஆனால், அவர் களரிக்கு வராமல் படகுத்துறையிலேயே நின்றார். அப்போது அம்மா தேவிபாவ தரிசனம் அளிக்க ஆரம்பித்தார். அம்மா, அந்த மானேஜருடன் வந்தவர்களை அனுப்பி, அவரை அழைத்துவரச் சொன்னார். அம்மா அவரிடம் கூறிய வார்த்தைகள் இப்போதும் என் நினைவில் பசுமையாக உள்ளன. "அம்மா வேஷம் போடுவதாக நீ சந்தேகப்பட்டாய் அல்லவா? இப்போது நான் அணிந்திருப்பவை எல்லாம் பக்தர்கள் எனக்குத் தந்தவை. அவர்கள் தரும் ஒரு பழைய துணியைக் கூட அம்மா அணிவேன் என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த மனிதர் வியப்பில் ஆழ்ந்தார். தன் மனதில் இருப்பதை அம்மா அறிந்திருக்கின்றார். பின்னர் அவர் அம்மாவின் பக்தராக மாறினார்.

ஆரம்பத்தில் வந்த பிரம்மச்சாரிகள் பல கஷ்டங்களை அனுபவித்தனர். பாலு ஹார்மோனியத்தைச் சுமந்து கொண்டு வவ்வாக்காவு முதல் வள்ளிக்காவு வரை நடந்தே வருவார். வழியில் பலர் அவரை அவமானப்படுத்துவர். இதையெல்லாம் சகித்தபடி அவர்கள் இங்கே வந்தனர். கையில் பணம் இல்லையெனில், தங்கள் உடையை விற்றுக் கிடைக்கும்

பணத்தில் இங்கே வருவர். ஆனால் இவர்கள் வருவதை நான் எதிர்த்தேன் உயர்கல்வி பயின்ற இளைஞர்கள் வீட்டிற்கு வருகிறார்கள் பஜனை பாடுகின்றார்கள். பின்னர் இரவில் சத்சங்கம் என்று கூறிக் கொண்டு இங்கேயே தங்குகிறார்கள். எனக்கு மிகவும் பயமாக ஆகிவிட்டது. நான் அவர்களிடம் கோபித்துக் கொண்டேன். ஆனால் அம்மா இவர்களுக்கு எல்லா சுதந்திரமும் அளித்தார். நான் திட்டும் போதெல்லாம் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல எங்களுக்குத் தோன்றவில்லை'' என்று அவர்கள் பதிலளித்தனர். அம்மா அவர்களிடம், ''இனிமேல் நீங்கள் இங்கே தங்கலாம்'' என்று கூறிய பிறகுதான் அவர்கள் குடிசை கட்டி இங்கேயே தங்க ஆரம்பித்தனர்.

அப்போதெல்லாம் எனக்கு அதிக வருமானம் ஒன்றும் இருக்கவில்லை. ஆனால், பெரிய வீடுகளிலிருந்து வந்த இந்த பிள்ளைகள் கஞ்சியை மட்டும் குடித்து மகிழ்ச்சியுடன் இங்கே குடிசையில் வசித்தார்கள். மெல்ல மெல்ல ஆசிரமம் எங்கள் கண்முன்னால் வளர்ந்தது.

இதற்கிடையில் தான் திருவண்ணாமலையில் வைத்து, அம்மாவைக் குறித்து அறிந்த நீலு என்ற வெளிநாட்டு வாலிபர் இங்கே வந்தார். அம்மாவுடன் சிலநாட்கள் தங்கிவிட்டுத் திரும்பிச் சென்றார். இரண்டாவது முறை வந்தபோது நீலு ''அம்மா என்னால் இங்கிருந்து திரும்பிச் செல்ல முடியவில்லை இங்கேயே வசிக்க வேண்டும் என்று தோன்றுகிறது'' என்றார். அம்மா, ''எனக்கென இங்கே இடம் ஏதுமில்லை. அப்பாவிடம் கேள், நீ தங்குவதற்கு இடம் தருவார்'' என்றார். நீலு என்னிடம் கேட்ட போது நான் அனுமதி அளித்தேன். இவ்வாறு வேதாந்த வித்யாலயத்துடன் சேர்ந்து களரியின் தெற்கில் 8 அடி அகலமும் 12 அடி நீளமும் கொண்ட ஒரு குடில் கட்டப்பட்டு இருந்தது. அம்மா, நீலு, காயத்ரி, பாலு, ஆகியோர் குடிலின் ஒவ்வொரு மூலையில் படுத்து உறங்குவர். ஒரு பக்கம் அடுக்களை இருந்தது. இதுதான் இன்று நீங்கள் காணும், உலகம் முழுவதும் கிளைகள் உள்ள ஆசிரமத்தின் ஆரம்பம். ஆலப்பாடைச் சேர்ந்தவரும், எங்கள் உறவினருமான உண்ணி கிருஷ்ணன் (ஸ்வாமி துரீயாம்ருதானந்தபுரி) இவர்களுக்கு முன்பே இங்கே வசிக்க ஆரம்பித்தார். எனினும், அவர் களரித் திண்ணையிலும், வெளியிலும் படுத்து உறங்குவார். நீலு வந்த பிறகு இடையிடையில் வீட்டுக்குச் சென்றுவந்த பாலு இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். காயத்ரிக்கும், நீலுவுக்கும் மலையாளம் தெரியாது. பாலு மொழிபெயர்ப்பாளராக மாறினார்.

பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பிரம்மசாரிகள் அதிகமாக வர ஆரம்பித்த காரணத்தால் ஆசிரமத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று இல்லற பக்தர்கள் கூற ஆரம்பித்தனர். ஹரிப்பாடு நாராயண பிள்ளை நடைமுறை விதிகளை எழுதிக் கொண்டு வந்தார். இவ்வாறு 1981மே மாதம் மாதா அமிர்தானந்தமயி மிஷன் பதிவு செய்யப்பட்டது. அப்போது அம்மாவுக்கு 28 வயது. அன்று தான் சுதாமணி **மாதா அமிர்தானந்தமயி தேவியாக** ஆனார். அதற்குமுன்பு வள்ளிக்காவு அம்மா என்றே அனைவரும் அவரை அழைத்தனர். பிர.உண்ணிகிருஷ்ணன் தான் அம்மாவுக்கு இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தார். இதைப்பற்றி அம்மா ஒருமுறை, "எல்லா இடங்களிலும் குரு, சீடர்களுக்குப் பேர்வைப்பார். இங்கே அது மாறிவிட்டது" என்றார். ஆசிரமம் பதிவு செய்த போது சொந்தமாக ஒரு சென்ட் நிலம் இல்லை. சொத்து இல்லை. அதனால் நாங்கள் வசித்த 10 சென்ட் நிலத்தை அம்மாவின் பெயரில் எழுதிவைத்தேன். அதில் தான் நீலு ஓலைக்குடில் கட்டினார்.

நீலு இடையில் ஒருமுறை அமெரிக்காவுக்குச் சென்று வந்தார். கையில் தனது பணத்தையும் கொண்டு வந்தார். அந்தப் பணத்தால் 1982ம் வருடம் தியான மண்டபம் கட்டப்பட்டது. கீழே உள்ள அறை தியானத்திற்கும், மேலே உள்ள அறை அம்மா ஓய்வெடுக்கவும் ஒதுக்கப்பட்டது. களரியின் தரைக்கு சிமெண்ட் போடப்பட்டது. 1982ம் வருடம் வேதாந்த வித்யாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 1983ம் வருடம் நானும், தமயந்தியும் வடக்கிலிருந்த ஒரு வீட்டிற்கு குடிபெயர்ந்தோம். இவ்வாறு எங்களுடைய வீடு, அதாவது அம்மா பிறந்துவளர்ந்த இடமண்ணேல் வீடு **மாதா அமிர்தானந்தமயி மடமாக** மாறியது.

இதற்கிடையில் முதன்முதலாக அம்மா அக்கரையிலிருந்து ஒரு வீட்டிற்குச் சென்று பஜனை நடத்தினார். தொடர்ந்து பக்தர்களின் வீடுகளுக்குச் சென்று சத்சங்கமும், பஜனையும் நடத்த ஆரம்பித்தார். இன்று உலகின் எல்லா மூலைகளுக்கும் அம்மா பயணம் செய்கிறார். அங்கெல்லாம் பக்தர்கள் அம்மாவைத் தரிசிக்க வருகின்றார்கள்.

1982 ஆகஸ்ட் மாதம் தான் வேதாந்த வித்யாலயம் துவங்கியது. பிரம்மச்சாரிகள் கல், மண், சிமெண்ட் ஆகியவற்றைச் சுமந்து உருவாக்கிய கட்டிடம் அது. சிறிது காலத்திற்குப் பின் அம்மா மேலும் மூன்று குடில்கள்

கட்டுமாறு பிரம்மச்சாரிகளிடம் கூறினார். இதில் அம்மாவுக்கு ஏதோ ஒரு நோக்கம் இருப்பதாக அனைவரும் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். குடில்கள் கட்டி முடிந்தபோது சுமார் பத்து புதிய பிரம்மசாரிகள் வந்தனர். நெடுமுடி (பிர.தியாகாம்ருதசைதன்யா) சௌம்யா (ஸ்வாமினி கிருஷ்ணாம்ருத பிராணா), உண்ணிகிருஷ்ணதாஸ் (ஸ்வாமி ஞானாம்ருதானந்த புரி) ஆகியோர் அவர்களில் சிலர். அப்போது ஆசிரமத்தில் தினசரி செலவுகள் மிகவும் கஷ்டப்பட்டே நிறைவேறி வந்தன. அம்மா. சாதகர்கள் வாழும் இடம்தேடி அனைத்தும் வந்து சேரும். 'பணமில்லை என்பதால் ஆசிரமத்தில் எதற்கும் குறைவு வராது. அனைத்தையும் தெய்வம் பார்த்துக்கொள்ளும்' என்று உறுதி கூறினார். ஆசிரமத்தின் தோற்றமும், வளர்ச்சியும் எல்லாம் அம்மாவின் இந்த வார்த்தைகளில் அடங்கி உள்ளன. பின்னர், மாதா அமிர்தானந்தமயி மடத்திற்குப் பல இடங்களிலும் கிளைகள் தோன்றின. ஏழைகளுக்கு உதவப் பல திட்டங்களையும் அம்மா தீட்டினார். அது இன்று இப்போது சுனாமி சீற்றத்திற்கு ஆட்பட்டு, அனைத்தையும் இழந்த மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது வரை வளர்ந்துவிட்டது. அம்மா உலகம் முழுவதற்கும் ஒளியாகத் திகழ்கிறார். கலங்கரைவிளக்கமாக உள்ளார். இந்தக் கூட்டத்திற்கிடையில் நானும், தமயந்தி அம்மாவும், அம்மாவின் பிறந்தநாள் விழா அன்று அம்மாவிடம் செல்வோம். எங்கள் மகள் இன்று உலகிற்கே அம்மா, ஆதரவற்றவர்களுக்கு அடைக்கலம், துன்பப்படுபவர்களின் கண்ணீரைத் துடைக்கும் அமிர்தானந்தமயி தேவி, அம்மாவின் பெற்றோரானதால் எங்கள் வாழ்வின் பயனை அடைந்துவிட்டோம். விவேகமற்றவர்களான எங்களுக்கு, முதலில் அம்மாவின் உண்மையான சொரூபத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அப்படிப்பட்ட எங்களுக்குக் கூட எல்லாம் அறியவல்ல அம்மா வழிகாட்டியாக மாறினார்.

கேட்டு எழுதியவர்
முரளிகைமல்

7.அம்மாவின் அருளுரைகள்

இன்று வேடிக்கைக்கும், உல்லாசத்திற்கும் பல வழிகள் உள்ளன. ஆனால், இதயத்திலிருந்து மலரும் ஒரு புன்னகைக்கும், அன்பின் மணம் பரப்பும் ஒரு வார்த்தைக்கும் மிக அதிகமான அளவு பற்றாக்குறை உள்ளது. இன்று இளைஞர்களில் பெரும்பாலோரால் அன்பு மற்றும் காமத்திற்கு இடையிலுள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அன்பு என்ற முகமூடி அணிந்த காமமே இன்று எங்கும் காணப்படுகிறது. இன்று புன்னகை கூட மார்க்கெட்டில் விலைமதிப்புள்ள அலங்காரப் பொருளாக மாறியிருக்கிறது. எப்படி சிரிக்க வேண்டும், என்று கற்பிக்கும் நிறுவனங்கள் கூட உள்ளன. ஆனால், அன்பின் இனிமை நிறைந்த ஒரு வார்த்தையோ, இல்லாவிடில் அன்பு நிறைந்த சிரிப்போ தரக் கூடிய அமைதியையும், நிம்மதியையும் வேறு எவற்றாலும் தர முடியாது.

இதைக் கூறும் போது அம்மாவுக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. சீறிப்பாயும் ஆற்றின் மேலே அமைக்கப்பட்டுள்ள பாலத்தில் ஒரு மனிதன் வாழ்வில் ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்களால் வாழ்க்கையை வெறுத்து நதியில் மூழ்கி இறந்து விடலாம் என்ற முடிவுடன் நின்று கொண்டிருக்கிறான். அந்த நிமிடத்தில், "இவ்வுலக வாழ்வில் என்னிடம் யாரும் அன்பு செலுத்தவில்லை என்பது உண்மையே, இப்போது வரும் ஒரு மனிதனைக் கூட பார்த்துவிடலாம். ஒரு புன்னகையோ, ஒரு நல்ல வார்த்தையோ அவனிடமிருந்து கிடைத்தால் எதிர்பார்ப்புடன் வாழலாம் என்று தீர்மானிக்கலாம். அதற்கு நேர்மாறாக நடந்தால் இந்த நதியில் மூழ்கி இறந்துவிடலாம்" என்ற சிந்தனை எழுந்தது.

நாம் ஒவ்வொருவரும் இக்கதையை நிறைவு செய்ய வேண்டியவர்கள் ஆவோம். அந்த மனிதன் காணப் போகும் ஆள் நாமாக இருந்தால் அவன் எடுக்கும் முடிவு என்னவாக இருக்கும்.

ஒரு வேளை உணவுக்குக் கூட வழியில்லாதவர்கள் இருக்கிறார்கள். தாங்க முடியாத வாழ்க்கைப் பிரச்சனைகள் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆறுதல் கூறவும், தைரியம் அளிக்கவும், உதவி செய்யவும் அருகில் உள்ளவர்கள் முன்வருவதில்லை என்பது தான் கஷ்டம். ஆனால்,

நம் முன்னோர்கள் இப்படி இருக்கவில்லை. இன்று மனித உறவுகள் சிதிலமடைந்து வருகின்றன. இதனால் நம்பிக்கையை இழந்த மனிதன் தற்கொலையை அடைக்கலம் அடைகிறான். தற்கொலை எந்த பிரச்சனைக்கான தீர்வும் இல்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியே தற்கொலை செய்து கொள்ளும் சிந்தனை தோன்றினாலும் அதிலிருந்து விடுபட வேண்டும்.

நாம் நமது வங்கிக் கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பார்ப்பதுண்டு. அதில் அதிக பணம் இருந்தால் நாம் மகிழ்ச்சி அடைவோம். கடனாக இருந்தால் அதை அடைப்பது எப்படி என்று சிந்தித்து வருந்துவோம். ஆனால், அதைவிட முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு கணக்குப் புத்தகம் இருக்கிறது. அதைப் பெரும்பாலும் நாம் திறந்து பார்ப்பதே இல்லை. அது நமது கலாசாரமெனும் கணக்குப் புத்தகம், நம்முடைய திறமை, முயற்சியால் வெற்றியின் சிகரத்தை அடைய முடியும். ஆனால் கீழே விழுந்துவிடாமல் அங்கேயே உறுதியாக நிற்க வேண்டுமெனில் நம்முடைய வாழ்வில் கலாசார மதிப்பீடுகள் தேவையாகும்.

நாம் நல்லவர்கள் ஆகவும், நம்முடைய சிந்தனையாலும். வார்த்தையாலும் நன்மையைக் கொண்டுவரவும் முயற்சிக்க வேண்டும். தவறு ஏற்பட்டால் அதைத் திருத்தி, தன்னிரக்கத்துடன் முன்னேற இயல வேண்டும். அதுதான் சரியான வழி. நமக்கு அது தெரியாது. நாம் எப்போதும் குறுக்கு வழியையே தேடுகிறோம். பிறருடைய தவறுகளை சுட்டிக்காட்டுவதுடன், தான் பெரிய ஆள் என்று பெருமை பேசுகிறோம். அவர்கள் எந்தவிதத் தவறும் செய்யவில்லை என்றாலும், இல்லாத பழியை அவர்கள் மீது சுமத்தி, தனது உயர்வைப் புரியவைக்க முயற்சிப்பதையே பெரும்பாலும் காண்கிறோம். வெற்றியாக இருந்தால், அது எனக்கு சொந்தம், தோல்வியெனில் அதற்குக் காரணம் பிறராவர்.

ஒரு இடத்தில் விருந்து நடந்து கொண்டிருந்தது. ஒரு ஆள் பலமுறை எழுந்து சென்று உணவு வாங்கிச் சாப்பிட்டான். ஏழாவது முறை அவன் உணவு வாங்க எழுந்த போது அவனது மனைவி, "ஐயோ! நீங்கள் இப்படிச் சென்று உணவு வாங்கி சாப்பிடுவது நன்றாக இருக்கிறதா? பரிமாறுபவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்?" என்றாள். "நீ வருந்தாதே. எனக்காக

அல்ல, உனக்காகவே உணவு வாங்குவதாக நான் அவர்களிடம் சொல்கிறேன்" என்றான்.

நம் வாழ்வில் நான்கு விஷயங்கள் தேவை எனலாம். தர்மம், அர்த்தம் (பொருள்), காமம்(ஆசை), மோஷம், வாழ்வை நன்முறையில் வாழ உதவும் நான்கு தூண்கள் இவை. அறஉணர்வு இன்று உலகில் நசித்துக் கொண்டிருக்கிறது. மோக்ஷத்தை அடையும் ஆசையும் இப்போது குறைந்து வருகிறது. மீதமிருப்பது அர்த்தமும், காமமுமாகும். இதனால் இன்றைய சமூகம், இரண்டு சக்கரங்கள் பழுதான ஒரு வாகனத்தைப் போல் ஆகி இருக்கிறது. உண்மையான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனில் அர்த்தமும், காமமும் மட்டும் போதாது. நமக்கு வாழ்வைப் பற்றிய சரியான கண்ணோட்டம் இருக்க வேண்டும். அந்தக் கண்ணோட்டம் எல்லாப் பிரிவுகளையும் நன்கு புரிந்துகொள்வதாக, முழுமையானதாக இருக்க வேண்டும். இன்று மக்களின் புத்தியும், சாமர்த்தியமும் வளர்ந்துவிட்டது. இளைஞர்களுக்கு கல்வி அறிவு இருக்கிறது; ஆனால் கலாச்சாரம் இல்லை. செல்வத்தின் மீதுள்ள பற்றுதல் அன்பெனும் செல்வத்தை நாசம் செய்கிறது. நம்முடைய கண்ணோட்டம் நமக்கும், பிறருக்கும் நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும். கண்ணோட்டம் மட்டும் போதாது. அதற்கேற்ப முயற்சியும் தேவை.

வாழ்வில் இருவிதமான வளர்ச்சி இருக்கிறது. ஒன்று, வயதால் வரும் வளர்ச்சி; மற்றொன்று, பக்குவத்தால் வரும் வளர்ச்சி, வயதால் ஏற்படும் வளர்ச்சிக்கு தனிப்பட்ட முயற்சி எதுவும் தேவை இல்லை. அது மனிதனுக்கும், மிருகங்களுக்கும், அனைத்து உயிரினங்களுக்கும் இயல்பாக நிகழும் ஒன்றாகும். பக்குவத்தால் வரும் வளர்ச்சி மனிதனுக்கு மட்டுமே உள்ள சிறப்பாகும். வயதால் ஏற்படும் வளர்ச்சி மரணத்தை நோக்கியும், பக்குவத்தால் வரும் வளர்ச்சி அழியா நிலைக்கும் நம்மை அழைத்துச் செல்கிறது. பக்குவத்தால் வரும் வளர்ச்சி அகமுகமாக நடக்கவேண்டிய செயலாகும். ஆன்மிக அறிவே அந்த வழியை நமக்குக் காட்டித் தருகிறது.

ஒரு டம்ளர் தண்ணீர் கிடைத்தால் அதைக் குடிக்கவும், குடிக்காமல் இருக்கவும் கூடிய சுதந்திரம் நமக்கு உண்டு. ஆனால் எல்லாச் செயல்களைச் செய்யவும் நமக்கு சுதந்திரம் இல்லை. திடீரென்று ஒரு நிமிடம் கோபப்படுமாறு கூறினால் நமக்கு முடியாது. அப்படியே கோபித்தாலும் அது வெறும்

நடிப்பாகவே இருக்கும். ஏனெனில், கோபம் எப்போது, எப்படி வந்துபோகிறது என்பதை அறிய முடிவதில்லை. இந்த விழிப்புணர்வு நமக்கு இருந்தால் ஒரு உணர்ச்சியாலும் நம்மை அடிமையாக்க முடியாது.

உலகில் மிகப்பெரிய வியாபாரி மனம் என்று சொல்வார்கள். எந்த கருத்தையும் நம்மீது திணிக்க மனதால்தான் முடியும். அது அளிக்கும் வாக்குறுதிகளை அது நிறைவேற்றாது, எனினும் நாம் அதன் பிடியில் அகப்பட்டுவிடுவோம்.

இதைக்கூறும் போது அம்மாவுக்கு ஒருகதை நினைவுக்கு வருகிறது. ஒரு வியாபாரி இருந்தார். அவர் தனது முதலாளியிடம் "நான் சமீபத்தில் ஒருவருக்கு நிலம் விற்றேன். நிலத்தை வந்து பார்க்காமலே அவர் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டார். இங்கு வந்தபோதுதான் நிலத்தை வந்து பார்த்தார். நீர் நிறைந்து நிற்கும் பள்ளமான இடம். சில இடங்களில் ஆறடி வரை தண்ணீர் தேங்கி நிற்பதைக் கண்ட அவர் பணத்தைத் திருப்பித் தருமாறு கூச்சல் போடுகிறார். நான் என்ன செய்வது?" என்று கேட்டார். அப்போது முதலாளி "நீ ஒன்று செய். பம்ப்செட்டின் ஏஜென்ஸி எடுத்துவிட்டு இரண்டு பம்புசெட்டுகளை அந்த மனிதருக்கு விற்கும் வழியைப் பார். அந்த மனிதர் பம்ப்செட் உபயோகித்து நீரை வெளியேற்றிக் கொள்ளட்டும்" என்றார்.

பிறருக்கு தொல்லை கொடுத்தாவது நாம் பெரிய ஆளாக வேண்டும் என்ற ரீதியில் தான் இன்று நம்முடைய திறமைகளை நாம் உபயோகிக்கிறோம். நாம் விரும்பினால் இதற்கு மாறாகவும் நாம் செயல்படலாம்.

நம்முடைய மனம் பழங்காலக் கடிகாரத்தைப் போன்றது. இடையிடையே சாவி கொடுத்தால் தான் அது இயங்கும். அதுபோல் நம் மனதிற்கும் இடையிடையில் சத்சங்கம் கொடுக்க வேண்டும். அப்போது தான் நம்முடைய மனமும் விரைவில் விவேக புத்தி உதிக்கும். விவேக புத்தி வந்தால் பின்னர் வெளியில் இறைவனைத் தேட வேண்டிய அவசியமில்லை.

பலர் அம்மாவிடம், "அம்மா இப்பிறவியில் நாங்கள் ஒரு தவறும்

செய்யவில்லை. எங்கள் அடுத்த வீட்டுக்காரர் எண்ணற்ற தவறுகள் செய்கிறார். அவர் இறைவனை வணங்குவதுமில்லை. அவர் மலைபோல் வளர்கிறார். நாங்கள் கஷ்டப்படுகிறோம். இதைக்கண்ட எங்களுக்கு இறை நம்பிக்கையே போய்விட்டது" என்கின்றனர். இதுபோல் சிந்திக்காதீர்கள். அவர்கள் முற்பிறவியில் டிபாசிட் செய்துவிட்டு வந்தவர்களாக இருப்பார்கள். நாம் ஒருவேளை கடன் வாங்கிவிட்டு வந்தவர்களாக இருப்போம். இவ்வாறு சிந்தித்து அவர்கள் முறையின்றி நடந்துகொள்ளக் கூடாது. ஒரு பிறவியுடன் வாழ்க்கை முடிந்து விடவில்லை. மரணம் அடுத்த பிறவிக்கான தொடக்கமாகும். நாம் ஒரு வாக்கியம் எழுதி முடித்துவிட்டு புள்ளி வைப்பது அடுத்த வாக்கியத்தை எழுத ஆரம்பிப்பதற்காகவே ஆகும்.

உலக வாழ்வில் நமக்கு உலகிலிருந்து நல்லது மட்டுமே கிடைக்கும் என்று சொல்ல முடியாது. நல்ல அனுபவங்களை விடக் கெட்ட அனுபவங்களே நமக்காகக் காத்திருக்கக் கூடும். அதுதான் உலகின் இயல்பு, அத்தகைய சந்தர்ப்பங்களை நம்முடைய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் உள்ள படிகளாக மாற்ற நாம் கற்க வேண்டும். அதற்கு ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட பகுத்தறிவு தேவை.

ஒருமனிதன் வளர்த்த கழுதை அருகிலிருந்த பாழுங்கிணற்றில் விழுந்தது. அவன் அதை வெளியில் கொண்டுவரப் பல விதத்தில் முயன்றான் முடியவில்லை. கடைசியில் அவன், "இனிக் கஷ்டப்பட்டு வெளியில் கொண்டு வந்தாலும் அதன்பின்னர் இந்தக் கழுதை வேலைக்கு உதவாது. இந்தக் கிணற்றிலேயே இதை மூடிவிடுவது தான் அதைவிட எளிதான செயல்" என்ற முடிவுக்கு வந்தான். கிணற்றை மூடுவதற்காக வேலைக்காரர்களை அமர்த்திவிட்டு அவன் அறைக்குச் சென்றான். சிறிதுநேரத்திற்குப் பிறகு பலரின் குரலொலி கேட்டது. வெளியில் சென்று பார்த்த போது தனது கழுதை வீட்டை நோக்கி நடந்து வருவதைக் கண்டான். அங்கே நடந்தது என்ன? கிணற்றை மூடுவதற்காக வேலைக்காரர்கள் மண்ணைக் கொண்டு வந்து கொட்டும் போது கழுதையின் மீது மண் விழும். கழுதை தன்மீது விழுந்த மண்ணை உடலைக் குலுக்கி உதறித்தள்ளும். அதன்பின் கீழே விழுந்த மண்ணின் மீது ஏறி நிற்கும். இவ்வாறு தன்மீது விழுந்த மண்ணை உதறித்தள்ளி விட்டு அதன்மீது ஏறி நின்றது. இறுதியில் கிணறு மூடப்பட்டது. கழுதையும் வெளியில் வந்தது.

இது போல் உலகில் பிறர் வார்த்தைகளாலும், செயல்களாலும் நம்மீது பழி சுமத்தலாம். மனம் சோர்ந்துவிட்டால் அவற்றை உதறித் தள்ள வேண்டும். அப்போதுதான் பிறர் உருவாக்கும் பிரச்சினைகள் என்னும் பாழுங்கிணற்றிலிருந்து வெளியேறி வாழ்வில் வெற்றி பெற முடியும். நமக்கு முன்னால் நாற்புறமும் இருள் சூழ்ந்து நிற்கும் சில சூழ்நிலைகள் வருவதுண்டு. அந்நிலையில் மனம் தளரக் கூடாது. முன்னேறிச் செல்வதே நமது இலட்சியமாக இருக்க வேண்டும்.

ஒருமுறை பல நத்தைகள் ஊர்ந்து சென்று கொண்டிருந்தன. எதிரில் பறவைகள் பறந்து வந்தன. அவை நத்தைகளைப் பார்த்து, "நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?" என்று கேட்டன. அருகில் ஒரு காடு இருக்கிறது. அங்குதான் செல்கிறோம் என்றன. அதைக் கேட்ட பறவைகள் "நாங்கள் அங்கிருந்து தான் வருகிறோம். அந்தக் காட்டில் ஒரு பழமோ, இலையோ இல்லை. எல்லாம் உலர்ந்து போய் நிற்கின்றன. எதற்காக வீணாக அங்கே போகிறீர்கள்?" என்று கேட்டன. நத்தைகள் "இல்லை நாங்கள் அந்த இடத்தை அடைவதற்குள் மரங்கள் எல்லாம் தளிர்விடும். மொட்டுகள் அரும்பும்" என்றன.

பாருங்கள்! அவை கண் முன்னால் எதையும் காணவில்லை என்றாலும், தன்னம்பிக்கையை விடவில்லை. அது போல் நீங்கள் மனம் சோர்ந்துவிடக் கூடாது. முன்னேறிச் செல்ல வேண்டும். இறை அருள் நிச்சயமாக நம்மைக் காக்கும்.

பலர், தியானித்த பிறகும் ஜபித்த பிறகும் மன ஒருமைப்பாடு கிடைக்காத காரணத்தால் நாங்கள் அதைத் தொடரவில்லை என்று சொல்வதுண்டு. அவ்வாறு செய்வது கூடாது. நம் மனம் ஒரு பல்பொருள் அங்காடியைப் போன்றது. அங்கே நமக்குத் தேவையானவையும், தேவையற்றவையும் இருக்கும். நமக்குத் தேவையானவையும் நாம் வாங்க வேண்டும். கிராமப்புறத்தில் காணப்படும் சாலைகளைப் போன்றது நம் மனம் என்று சொல்வர். அங்கே கோழி, வாத்து, நாய், பூனை என அனைத்தும் காணப்படும். காளை வண்டி போகும். குதிரை வண்டி போகும். வழியில் சண்டை நடக்கும். திருவிழா நடக்கும். இவை அனைத்தும் இருந்தாலும் நாம் முன்னேறிச் செல்வோம். அதுபோல் நம் மனதில் தேவையானவையும்,

தேவையற்றவையுமான பல சிந்தனைகள் எழக்கூடும். அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். மன ஒருமைப்பாட்டைப் பெற முயல்வது என்பது கடலை வற்றச் செய்ய முயல்வதற்குச் சமமாகும். நாம் முயன்று கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் இலட்சியத்தை அடைய முடியும்.

இப்போது நம் அனைவரின் கையிலும் தொலைபேசி இருக்கிறது. உண்மையில் மற்றொரு தொலைபேசியும் நமக்குத் தேவை. அது மந்திர ஜபமென்னும் தொலைபேசியாகும். சாதாரண தொலைபேசிக்கு எல்லா இடத்திலும் ரேஞ்ச் கிடைக்காது போகலாம். ஆனால், இறைவனை எங்கிருந்து எப்போது அழைத்தாலும் அவர் நிச்சயமாகக் கேட்பார். அன்பு உள்ள இடத்தில் தூரம் ஒரு பொருட்டல்ல என்று சொல்வார்கள். சூரியன் ஆகாயத்தில் இருந்தாலும் பூமியில் தாமரை மலரவில்லையா? மனமுருகிப் பிரார்த்தித்தால் நிச்சயமாக இறைவன் நமது குரலைக் கேட்பார். நாம் எங்கே இருக்கிறோம். எப்படி இருக்கிறோம் என்ற கேள்வியே இல்லை. இறைவன் நம் இதயத்தில் வசிப்பவரல்லவா? சேற்றில் தாமரை மலரும் என்றால், இந்த அழுக்கில் (உடலில்) இறைவன் இருக்கிறார் என்றால், நாம் குளியலறையில் இருந்து அழைத்தாலும் இறைவன் அதைக் கேட்பதில் என்ன தடை இருக்கிறது? இந்த மனோபாவம் இருந்தால் வேறு எதைப் பற்றியும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. முழு மனதுடன் பிரார்த்திக்க வேண்டும். அவ்வளவுதான். அதன் மனோபாவத்தையே நாம் விழிப்புறச் செய்ய வேண்டும்.

கேள்வி: ஆலயங்களில் நேர்த்திக்கடன் செலுத்துவது ஏன்?

அம்மா: இறைவனுக்கு நம் மனதையே சமர்ப்பிக்க வேண்டும். பிரபஞ்சத்தின் தலைவரான அவருக்கு என்ன குறை இருக்கிறது? சூரியனுக்கு மெழுகுவர்த்தி ஒளியின் தேவை இல்லை அல்லவா? இறைவனுக்கு நம் மனதை சமர்ப்பிப்பதன் மூலம் மனம் பரிசுத்தமாகின்றது. அதனால் விளையும் நன்மையும் நமக்குத் தான் கிடைக்கிறது. ஆனால், மனதை எடுத்துக் கொடுப்பது நடக்காத காரியம். நம் மனம் எதன் மீது பற்று வைக்கிறதோ அதை இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் மூலம் மனம் தான் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதுதான் நேர்த்திக்கடன் செலுத்துவதன் தத்துவமாகும்.

இன்று நம்முடைய மனம் சொத்திலும், பணத்திலும் தான் பற்று வைத்திருக்கின்றது. 98 வயதுள்ள தாயைக் கூட பணத்திற்காக நீதிமன்றத்திற்கு அலைய வைப்பதற்குத் தயங்காத பிள்ளைகள் இருக்கிறார்கள் அப்படியானால் நமது பற்றுதல் சொத்தின் மீது அல்லவா இருக்கிறது? மேலும் நமக்கு விருப்பமானவை நல்ல ஆடைகள், ஆபரணங்கள், இனிப்புகள் ஆகியவையாகும். அதனால் அவற்றை இறைவனுக்கு சமர்ப்பிக்கிறோம். அதன் மூலம் அவற்றின் மீது உள்ள விருப்பத்திலிருந்து நாம் நாளடைவில் விடுபடுகிறோம்.

பூவையும், அதன் மணத்தையும் விரும்பாதவர்கள் இல்லை. நம்முடைய மனதை மிகவும் கவரும் மலர் நமது மனதின் சின்னமாகும். மனதை அல்லவா இறைவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும்? அதனால் நாம் பூவை சமர்ப்பிக்கின்றோம். இறைவனுக்குத் தேவையான பூவிற்காக செடிகளை நட்டு வளர்ப்பதன் மூலம் இயற்கையைப் பாதுகாக்கவும் முடிகிறது. இறைவனுக்குப் பாயசத்தை நைவேத்தியம் செய்வதன் காரணமும், நாம் எதை சாப்பிடும் போதும் அதை இறைவனது பிரசாதமாக சாப்பிடவேண்டும் என்பதாகும். நமக்குத் தேவையானவற்றைத் தருபவர் இறைவனே அல்லவா? நம்முடைய முன்னோர் உணவு சமைத்தால் முதலில் இறைவனுக்கு நைவேத்தியம் செய்வார்கள். அதன் பிறகே சாப்பிடுவார்கள். இப்படி இறை வழிபாட்டின் மூலம் நமது முன்னோர் மனிதனிடம் தர்ம உணர்வை வளர்த்தனர். எதையும் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் நல்ல கருத்தையே இதன் மூலம் சநாதன தர்மம் கற்பிக்கிறது.

'இறைவனுக்கு பாயஸம் படைப்பது ஏன்?' என்று கேட்டவர்கள் ஒரு விஷயத்தை சிந்திக்க வேண்டும். எந்த இறைவனும் நேரில் வந்து பாயஸம் சாப்பிட்டதாகத் தெரியவில்லை. அதை பிரசாதமாக பிறருக்குத்தான் கொடுக்கிறோம். இறைவனின் பெயரில் நம்மை அறியாமல் நாம் தர்மம் செய்கிறோம். அதன் மூலம் பிறருக்கு உணவும், கொடுத்த நமக்கு புண்ணியமும் கிடைக்கிறது. மனித மனதில் தர்ம உணர்வை வளர்க்க இது

போன்ற ஆசாரங்கள் உதவி செய்கின்றன.

நாம் மிகவும் விரும்பும் ஒருவருக்கு நமக்கு மிகவும் பிடித்த பொருளை அளிப்போம். பக்தனுக்கு இறைவனே எல்லாமாக இருக்கிறார். அனைத்தையும் அவருக்கு நல்கிய பிறகு உபயோகிப்பதில்தான் பக்தன் மகிழ்கிறான். ஒரு புத்தாடை வாங்கினால் அதையும் இறைவனுக்கு முன்னால் வைப்பான். முதலில் இறைவன் அணியட்டும் என்பது அவன் விருப்பம். இதனால் மனதில் தர்ம உணர்வும் வளர்கிறது. எவ்வாறெனில். உலகிலுள்ள எந்தப் பொருளை அனுபவிக்கும் போதும் முதலில் அதற்கு சொந்தக்காரனான இறைவனை மனதால் வணங்குகிறான். அப்பொருளை இறைவனுக்கு சமர்ப்பிக்கிறான். அதன்பிறகு தான் அவன் அனுபவிக்கிறான். இதன் மூலம் மனம் பரந்ததாகிறது. இவ்வாறு நமக்கென உள்ளதை பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு ஆலய வழிபாட்டின் மூலம் நாம் கற்கிறோம்.

கேள்வி: ஆலயங்களில் விக்கிரகங்களுக்கு விலைமதிப்புள்ள ஆபரணங்களை அணிவிப்பது ஏன்?

அம்மா: பழங்காலத்தில் குடிமக்கள் அரசர்களை இறைவனுக்கு சமமாகக் கருதினர். அரசர் எல்லா அலங்காரத்துடனும் சிம்மாசனத்தில் சேவகர்கள் புடைசூழ இருந்து அரசாள்கிறார். குடி மக்களுக்குத் தேவையானவற்றை வழங்குபவர் அரசர். அப்படியானால், அரசர்களுக்கெல்லாம் அரசரான இறைவனை, பூமியிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் தேவையானவற்றை அளிக்கும் இறைவனை, எப்படிக் காண வேண்டும்? பக்தன் இறைவனை சக்கரவர்த்தியாகக் கண்டு, எல்லாவித ஆடை, ஆபரணங்களாலும் அலங்கரிக்கிறான். இறைவன் அழகின் இருப்பிடமல்லவா? இப்படிப்பட்ட இறைவனை மிக அழகான வடிவில் அலங்கரித்து, வழிபட அவன் விரும்பினான். இதன் மூலம் மனதில் பக்தி பாவனையும், ஒருமுகப்பாடும் வளர்ந்தது. அனைவரையும் காத்து, தேவையானதை வழங்கி வரும் இறைவனை வேறு எப்படி வழிபடுவது

கேள்வி: இறைநாம ஜபம், கீர்த்தனம் ஆகியவற்றால் விளையும் பயன் என்ன?

அம்மா: ஓடும் கோழிக்குப் பின்னால் அதைப் பிடிப்பதற்காக ஓடினால், சோர்ந்து போவோம்: கோழி பிடிபடாது. அது ஓடிவிடும். அதே சமயம் அதற்கு விரும்பமான தீனியைக் காட்டினால் அது நமக்கு அருகில் வரும். அப்போது அதைப் பிடிக்கலாம். அதுபோல் அங்குமிங்கும் அலையும் மனதிற்குப் பின்னால் ஓடினால், அதைப்பிடிக்க முடியாது. அதற்காகவே மந்திர ஜபம். இன்று நம்முடைய மனம் பல பொருள்களுக்குப் பின்னால் செல்கிறது. அதை இறைவனுடன் பிணைப்பதற்கான எளிய வழியே மந்திர ஜபம். விளம்பரம் எழுதாதே என்ற இரண்டு வார்த்தைகளைச் சுவரில் எழுதுவதால் அதில் பல விளம்பரங்கள் எழுதுவதைத் தடுக்க முடிகிறது. விளம்பரம் எழுதாதே என்பதும் விளம்பரம்தான், ஆனால் அதனால் ஒரு பெரிய பயன் விளைகிறது. இதுபோன்றதுதான் மந்திரஜபம், மந்திரம் ஜபிப்பதால் மற்ற சிந்தனைகள் எழாமல் தடுக்க முடிகிறது. பல கிளைகளாகப் பிரியும் நதியை ஒரே வழியில் செலுத்தினால், அந்த சக்தியை உபயோகித்து மின்சார உற்பத்தி செய்யலாம். பல கிளைகளாகப் பிரிந்து சென்றால் அவ்வளவு சக்தி கிடைக்காது. பல சிந்தனைகளினால் சிதறி நஷ்டமாகும். மனசக்தியை ஜபத்தாலும், தியானத்தாலும் ஒருமுகப்படுத்தலாம். சக்தி நஷ்டமாகாமல் காக்கலாம். அதை உலகிற்குப் பயன்படும் வகையில் செலவிடலாம். மந்திரம் ஜபிக்கும் போது மற்ற சிந்தனைகள் நீங்குகின்றன. இதனால் சிந்தனைகளில் வரும் மன இறுக்கம் ஏற்படுவதில்லை. மனம் தூய்மையாகிறது. சுயநலம் குறைந்து மனம் பரந்ததாகிறது. தன்னையே உலகிற்கு அளிப்பதற்குரிய மனதைப் பெறுவதற்கான பயிற்சியே இதுவாகும். இது போன்ற அனுஷ்டானங்கள் எதுவும் இல்லாமலே உலகநன்மைக்காக தன்னுயிரையே தர முன்வருபவர் யாரோ, அவருடைய பாதங்களைக் கழுவிய நீரைக் குடிக்கவும் அம்மா தயாராக இருக்கிறேன்.

சிலர் மௌனமாகப் படிக்க விரும்புகிறார்கள், சிலருக்கோ

வாய்விட்டுப் படித்தால்தான் புரியும். அனைவரும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்று சொல்ல முடியாதல்லவா? அவரவருக்கு விருப்பமானதை அவரவர் செய்கிறார்கள். சிலர் மனதிற்குள் மந்திரம் ஜபிக்கிறார்கள். சிலர் வாய்விட்டு கீர்த்தனைகள் பாடுகிறார்கள்.

ஒரு மகன், தனக்கு பஜனைகள் கேட்க விருப்பமில்லை என்று சொன்னான். அம்மா அவனிடம், "மகனே,! உனக்கு உன் தோழியுடன் பேச விருப்பம் உண்டல்லவா? எத்தனை மணிநேரம் வேண்டுமானாலும் அவளோடு பேசுவாய் அல்லவா? அது போலவே நாங்கள் பஜனை பாடுகிறோம். அது நாங்கள் இறைவனோடு பேசும் பேச்சாகும். இறைவன் எங்களுக்கு காதலனும், காதலியும், எல்லாமும் ஆவார்" என்றேன்.

பஜனை பக்தனின் ஆனந்தமாகும். அனைவரின் உள்ளத்திலும் ஆனந்தம் மறைந்துள்ளது. அதை அறிந்துவிட்டால் வெளியிலுள்ள சுகத்தைத்தேடி அலைய மாட்டார்கள். வீட்டிலேயே நாம் விரும்பும் உணவு கிடைத்தால் அதைத் தேடி வெளியில் செல்வோமா?

கேள்வி: மனிதனிடம் பயபக்தியை வளர்க்கும் மதத்தைவிட, இயற்கையைப் பற்றிக் கற்பிக்கும் நவீன அறிவியலல்லவா சிறந்தது?

அம்மா: மதத்தில் இல்லாத எதையும் அறிவியலில் காண முடியாது. மதம் இயற்கையைக் காப்பாற்றுமாறுதான் கூறுகிறது. அனைத்தையும் இறைவனாகக் கண்டு அன்பு செலுத்தவும், தொண்டு செய்யவுமே மதம் கற்பிக்கிறது. மலைகளையும், நதிகளையும், மரங்களையும், காற்றையும். சூரியனையும், பசுக்களையும் ஒவ்வொரு விதத்தில் நம் முன்னோர் ஆராதித்து வந்தனர். பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் அனைத்தும் நமக்குக்கிடைப்பதுபோல், மதத்திலிருந்து நமக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும்.

மதத்தில் கூறப்படும் பயபக்தி என்பது நம்மைப்

பயமுறுத்துவதற்காக அல்ல, நம்மிடம் சிரத்தையை வளர்ப்பதற்காக ஏற்பட்டதாகும். எச்செயலும் சரியான பலனைத் தரவேண்டுமெனில் அதில் சிரத்தை இருக்கவேண்டும். சிரத்தை இருந்தால்தான் பொறுமை இருக்கும். பொறுமையுள்ளவர் செய்யும் செயலே சரியான செயலாக இருக்கும். இறைவனிடம் பயபக்தி என்பதைக் கொண்டு நீங்கள் பாவனை செய்வது என்ன? இறைவனிடம் காட்டும் பயபக்தி என்பது, ஒரு ஆசிரியரிடம் காட்டும் மரியாதை, தனது தாயுடன் உள்ள நெருங்கிய உறவு என இரண்டும் ஒருங்கே இணைந்ததாகும். இந்த மனோபாவம் தான் பரமாத்மாவின் மீது நமக்கு இருக்க வேண்டும். அது வெறும் பயமல்ல, மாறாக நம்மிடம் விவேகத்தை வளர்க்க உதவும் தத்துவமாகும்.

தீயசெயல்கள் செய்தால் அதற்கான தண்டனையை அனுபவிக்க நேரும் என்று கூறுவது, நமது விவேகசக்தியை விழிப்புறச் செய்வதற்காகவேயாகும். அல்லாது நமது கையை வெட்டுவதற்கு, எங்கோ ஆகாயத்தில் ஒரு சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் இறைவன் வாள், கதையுடன் வருவார் என்பதல்ல அதன் பொருள். அனைத்து உயிரினத்தையும் பாதுகாத்து. பராமரிப்பதன் மூலம் நாம் இறைவனையே வணங்குகிறோம்.

"உன்னிடம் வைரக்கல் இருக்கிறது. அது அறியாமை என்ற எண்ணெயில் விழுந்து கிடப்பதால் அதன் ஒளி மங்கியிருக்கிறது. அதன் ஒளியை மீண்டும் பெறு நீ உன்னைப் பார்; நீ யாரென்பதை அறிந்துகொள். அகந்தையைத் துறந்து உன் உள்ளுணர்வை விழிப்புறச் செய். உனது தர்மம் என்ன என்பதைப் புரிந்து கொள். நீ ஐந்து அல்லது ஆறடி உயரத்தில் அடங்கும் மனிதனல்ல, அழிவற்ற இறை தத்துவமாவாய், அதைப் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்து" என்றே மதம் சொல்கிறது. பூனையைக் கண்டால் பயந்து ஓடுகின்ற எலிக்குஞ்சைப் போல் ஆகாமல், விலங்குகளின் தலைவனான சிங்கத்தைப் போல் ஆகவே நாம் முயல வேண்டும். இதைத்தான் மதம் கற்பிக்கிறது. மதம் என்பது சக்தியின் மந்திரமாகும், மதம் என்பது மனிதனிடமுள்ள மதத்தை (அகந்தையை) நீக்குவதற்குரிய தத்துவமாகும்.

இறைவன் மீதுள்ள பயபக்தி நமது பலவீனத்தைக் கடந்து செல்ல நமக்கு உதவுகிறது. ஒரு நோயாளியின் முன்னால் அவன் சாப்பிடக்கூடாத உணவுப்பொருள் இருந்தால், ஆசையை அடக்க முடியாமல் அவன் அதை எடுத்துச் சாப்பிட்டுவிடுவான், இதுதான் நமது மனோவாசனை, அந்தச் சமயத்தில், அதைச் சாப்பிடுவதால் ஏற்படும் பின்விளைவுகளைப் பற்றியோ, மரணத்தைப் பற்றியோ கூட அவன் சிந்திப்பதில்லை, நாம் நம்மைவிட நமது மனோவாசனைகளுக்குத்தான் அடிமையாகி இருக்கின்றோம். இந்தப் பலவீனங்களிலிருந்து விடுபட இறைவன்மீது உள்ள பயபக்தி உதவுகிறது. வெகுநாட்களாகப் புகைபிடித்துப் பழகிய ஒருவன், இனி புகைபிடிக்க மாட்டேன் என்று கூறும்போதே அவனது உதடுகளில் சிகரெட் இருப்பதைக் காணலாம். காரணம் புகைபிடிப்பது என்ற மனோவாசனைக்கு அவன் அடிமையாகிவிட்டான். அதிலிருந்து விடுபட வேண்டுமெனில், சிகரெட் மீது வெறுப்பு வராமல் முடியாது. புகைபிடிப்பதால் ஏற்படும் பின்விளைவுகளை நினைவுகூர்ந்து மனதிற்கு அந்த வாசனையை வெறுக்கக்கூடிய ஆற்றலை அளிக்கவேண்டும். இதேபோல், இறைவன்மீது கொள்ளும் பயபக்தி மனதிற்கு ஆற்றல் அளிப்பதற்காகவே ஆகும்.

மத தத்துவங்கள் மிகக் கடுமையாகத் தோன்றலாம். "இவ்வளவு கடுமையாக இருக்க வேண்டுமா?" என்று நாம் சிந்திக்கலாம். ஆனால் தளர்வில்லாத இந்தக் கடுமைக்குக் காரணம் நம்மீது உள்ள உண்மையான அன்பாகும். அறுவைச் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட ஒரு சிறுவனிடம் மருத்துவர், "அன்புக் குழந்தாய் அறுவைசிகிச்சை செய்தால் உனக்கு வலிக்கும், அதனால் நீ போய்விடு" என்று கூறினால், அது அந்தச் சிறுவனின் மீது காட்டும் கருணையா அல்லது துரோகமா? அதுபோல், தர்மத்தின் பாதையிலிருந்து நாம் விலகும்போது தெய்வத்தின் மீது உள்ள பயபக்தி நம்மை நேர்வழிக்குத் திருப்பிவிடுகிறது. அது நம்மிடமுள்ள மாசை அகற்றுகிறது இறைவன் தண்டிப்பார் என்ற பயமே நம்மிடம் சிரத்தையை ஏற்படுத்துகிறது. இறைவனின் தண்டனையும் உண்மையில் நமக்குப்

பாதுகாப்பே ஆகும். சொல்வதைக் கேட்காமல் தவறு செய்யும் பிள்ளையைத் தாய் தண்டிப்பது, பிள்ளை மீது அன்பு குறைவாக உள்ளதால் அல்ல, அப்போது அனுபவிக்கும் வேதனை பின்னர் அவனைப் பெரிய ஆபத்துக்களில் அகப்படாமல் காப்பாற்றும்.

இறைவன் மீதுள்ள பயபக்தியைக் குறித்துப் பலர் தவறாக கருத்துக் கொண்டுள்ளனர். தவறு செய்யாத மனிதர் யாருமில்லை. தவறு செய்தால் இறைவன் தண்டிப்பார். எனவே, அதிலிருந்து தப்பிப்பதற்காகக் கோயிலில் பத்து ரூபாய்க்கு விளக்கு வழிபாடு செய்தால் போதும் என்பது தான் பலரின் எண்ணம். எனது விளக்கின் வெளிச்சத்தில் அவர் இரண்டு கிலோமீட்டர் நடந்த பின் இறைவனுக்கு என் மீது அன்பு தோன்றும் என நினைப்பது சரியான இறை நம்பிக்கையல்ல, இருக்கும் நம்பிக்கையையும் அழிக்கும் சிந்தனை ஆகும். பின் எதற்காக ஆலயங்களும், வழிபாடுகளும் என்று கேட்டால், நம் மனதில் தர்ம சிந்தனையை வளர்ப்பதற்காகவும், நமது மனதைப்பரந்ததாக மாற்றுவதற்காகவுமே ஆகும். மாறாக, இறைவனுக்குப் பாதை தெரிவதற்கு நாம் விளக்கேற்றத் தேவையில்லை. இது சூரியனுக்கு வழிகாட்டுவதற்காக, மெழுகுவர்த்தி வெளிச்சம் தருவது போன்றதாகும்.

மாலை நேரத்தில் நல்ல எண்ணெய் விளக்கு ஏற்றுவது இயற்கைக்கு நலன் செய்யும். அதிலிருந்து வரும் புகை, சுற்றுப்புறத்தில் காணப்படும் தீய கிருமிகளை அழிக்கும். இந்த ஆசாரங்களின் மூலம், மறைமுகமாக இயற்கைப் பாதுகாப்பையே நமது முன்னோர் கருத்தில் கொண்டிருந்தனர்.

பெரிய புலமையோ, கல்வித்தகுதியோ இல்லாவிடிலும் நமது முன்னோர் காட்டித்தந்த அத்தகு பயனுள்ள ஆசாரங்களுக்குத் தடைவராமல் இருக்க மத உணர்வே நமக்கு வழிவழியாக உதவி வருகிறது. வீட்டில் பட்டினி என்றாலும், பத்துப் பைசா கிடைத்தால் எண்ணெய் வாங்கி வந்து மாலைநேர விளக்கு ஏற்றுவர், மாலையில் தீபம் ஏற்றுவதை நிறுத்தவில்லை. இறைவன் மீது கொண்ட

பயபக்தியே இதன் காரணமாகும்.

கேள்வி: தனது பிரச்சனைகளுக்குத் தானே பரிகாரம் தேடுவதற்குப் பதிலாக, மனிதன் ஆன்மிகத் தலைவர்களை நாடுவது அவர்களுக்குத் தொல்லை தருவதாக இருக்குமா?

அம்மா: நாம் வளர்த்த ஒரு செடி கருகிப் போனால் நாம் அழுவோம். ஆனால் அதை நினைத்து அழாமல், மற்றொரு செடியை நட்டு வளர்க்க வேண்டும். சிரத்தையுடன், அதே சமயம் பற்றின்றிக் கர்மம் செய்யுமாறே ஆன்மிகத்தலைவர்கள் கூறுகின்றார்கள். நடந்ததை நினைத்து மனிதன் சோர்ந்துவிடக் கூடாது. தன்னைப் போல் பிறரை நேசிக்கவும், தனக்குச் செய்து கொள்வதைப்போல பிறருக்கும் சேவை செய்யவுமே மகான்கள் கற்பிக்கின்றனர். இதை ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து படிக்க முடியாது. இதற்கு ஆன்மீகத் தலைவர்களையே நாட வேண்டும்.

மகான்களின் மனம், உலகியல் சுகத்தை மட்டும் தேடுகின்ற நமது மனதைப் போன்றதல்ல, தன்னை வெட்டுபவனுக்கும் நிழல் மற்றும் இனிய பழங்களைக் கொடுக்கும் மரத்தைப் போன்றவர்கள் அவர்கள். மெழுகுவர்த்தியைப் போல், தான் உருகி, சமுதாயத்திற்கு, அன்பு மற்றும் அமைதியின் ஒளியைப் பரப்புவதே அவர்களுக்கு சந்தோஷம் தரும் விஷயமாகும். அகந்தையும் பற்றும் நிறைந்த நம்மைச் சரியான பாதையிலும், தர்ம மார்க்கத்திலும் அழைத்துச் செல்ல அவர்களால் தான் முடியும். அது அவர்களுக்குக் கஷ்டமான காரியமுமல்ல. அவர்கள் ஒரு தனி மனிதனுக்காக வாழ்வதில்லை. மனிதன் நல்லவனாவதால் அவர்களுக்கு ஆனந்தமே



கேள்வி: சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனை எந்த அளவு முற்றியிருக்கிறது?

அம்மா: இன்று சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சனை முன் எப்போதையும் விட மிக

மோசமானதாக இருக்கிறது. மக்கள் தொகை அதிகரிக்கிறது. தொழிற்சாலைகள் பெருகுகின்றன. ஆனால் இவற்றிற்கு ஏற்ப இயற்கைக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்கும் விஷயத்தை மட்டும் நாம் மறக்கிறோம். இன்று நமது முன்னோர்கள் நட்டு வளர்த்த மரங்களை வெட்டி அழிப்பதன்றி ஒரு செடியை நட்டு வளர்க்க நம்மால் முடியவில்லை. இது இனியும் தொடர்ந்தால் இயற்கை நமக்கு எதிராகத் திரும்பும், அதில் சந்தேகமில்லை. அதன்பிறகு அதற்கு அறிவியல் பூர்வமான காரணங்களைக் கண்டுபிடிப்பதால் பயனென்ன? அனுபவிக்க நேர்ந்த விபத்திற்கும், அழிவுகளுக்கும் அது பரிகாரமாகாது.

பழங்காலத்தில் இந்த மாதத்தில் விவசாயம், இந்த மாதத்தில் அறுவடை என்று ஒரு முறை இருந்தது. அன்று குழாய்க் கிணறுகள் ஒன்றுமில்லை. இயற்கை கனிவுடன் நல்கிய நீரும், வெயிலுமே இருந்தன. அன்றைய மக்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர்; இயற்கையுடன் பலப்பரீட்சையில் இறங்கவில்லை எனவே, அன்று இயற்கை மனிதனுக்கு உதவியாக இருந்தது. நண்பனாக இருந்தது. இந்த மாதத்தில் விதை விதைத்தால் இந்தச் சமயத்தில் மழை கிடைக்கும்; இந்தச் சமயத்தில் அறுவடை செய்யலாம் என்ற நிலையிருந்தது. இன்று அப்படியல்ல குழாய்க் கிணறுகளும், பிறவும் இருப்பதால் எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் விவசாயம் செய்யலாம் என்று ஆகிவிட்டது. ஆனால் அறுவடை வேளையில் மழை வரும். சில சமயம் பூ கதிராகும் நேரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். எல்லாம் நீரில் மூழ்கும். மனிதனின் சுயநலம் ஏற்படுத்திய அழிவு இது. இயற்கையின் இயல்புக்கு எதிராக நாம் என்ன செய்தாலும் இது போன்ற எதிர்விளைவுகள் ஏற்படும். அறிவியல் முன்னேற்றம் வேண்டாம் என்பதல்ல இதன் பொருள். அறிவியலுக்கு அதற்கே உரிய எல்லைகளுண்டு. இயற்கைக்கு அதற்கென ஒரு பாதையுண்டு. ஒன்று மற்றொன்றிற்குத் தடையாகாமல் இருந்தால் போதும் அவற்றை ஒன்றிணைக்க மனிதனிடம் ஆன்மிகப் பண்பாடு இருந்தால் தான் முடியும்.

அறிவியல் கண்டுபிடிப்புகளை இயற்கைக்கு எதிராக உபயோகிக்காதீர்கள். மனிதன் எப்போதும் துரோகமிழைத்த காரணத்தால் இயற்கையன்னையின் பொறுமை போய்விட்டது. இயற்கை தண்டிக்க ஆரம்பித்துள்ளது. தேவையான சமயத்தில் மழை இல்லை. வறட்சி அதிகரித்துள்ளது. இயற்கைச் சீற்றம் அதிகரித்துள்ளது. இயற்கை தனது தாண்டவத்தை ஆரம்பித்துவிட்டது. இயற்கையின் மீது மனிதன் காட்டும் அதர்மத்தால் இயற்கையின் சமநிலை சீர்கெட்டுவிட்டது. அதனால் விளைந்த கஷ்டங்களையே மனிதன் இன்று அனுபவித்து வருகிறான்.

பழங்காலத்தில் அம்மை குத்திய இடத்தில் கொப்புளம் வந்தால் அது ஆறுவதற்கு சாணத்தைத் தடவுவார்கள்; இன்று சாணத்தை உபயோகித்தால் சீழ்பிடிக்கும்; ஆள் இறக்க நேரிடும், உடல் அவ்வளவு பலவீனமாகிவிட்டது. உடலில் எதிர்ப்புச் சக்தியில்லை. இரண்டாவது, பசுவின் சாணத்திலும் விஷ அம்சம் கலந்துவிட்டது. பூச்சிமருந்து தெளித்த வைக்கோலைப் பசு தின்கிறது. சுற்றுப்புறத் தூய்மை விஷயத்தில் மற்ற நாடுகளைவிட இங்கு மோசமான நிலை நிலவுகிறது. காலணியின்றி பாதையில் நடக்க முடியவில்லை. நடைபாதையில் எச்சில் துப்ப யாரும் தயங்குவதில்லை; எச்சில் மீது நடந்தால் எப்படி வியாதிக் கிருமிகள் பாதிக்காமல் இருக்கும்? பாதை ஓரத்தில் மலமும் சிறுநீரும் கழிப்பர். சாக்கடையைச் சுத்தம் செய்வதில்லை. மற்ற நாடுகளில் இதுபோன்ற நிலை இல்லை.

இன்று எங்கு பார்த்தாலும் புதுவித நெல் விதைகளே கிடைக்கின்றன. அவற்றிற்கோ பாரம்பரிய விதைக்கு இயல்பாக இருந்த எதிர்ப்புச் சக்தி சிறிதும் இல்லை; பூச்சிமருந்துகளின் உதவி இருந்தால்தான் அவை வளரும் சாதாரணச் செடிகள், பறவை, மிருகங்களுக்கு இயற்கையுடன் இருந்துவந்த இயல்பான இணக்கம் இவற்றிற்கில்லை. நாளை மனிதனின் நிலையும் இதிலிருந்து மாறுபடப் போவதில்லை. குளிர்சாதன அறைகளிலிருந்து வெளியில் வந்தால் மயங்கி விழுவான். உடலும், மனமும் அவ்வளவு பலவீனமாகும்.

சுற்றுப்புறம் முழுவதும் தொழிற்சாலை மற்றும் வாகனங்களின் புகையால் மாசடைந்துவிட்டது. தொழிற்சாலைகள் தேவைதான். அவை மக்கள் நெருக்கம் அதிகமுள்ள இடங்களில் இருக்கக் கூடாது. மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்க வழிவகுக்கக் கூடாது. அதுபோல் தொழிற்சாலைகள் லாபத்தில் ஒரு பங்கை இயற்கையின் பாதுகாப்பிற்காகச் செலவிட வேண்டும். பழங்காலத்தில் கிராமங்களும், மலைப்பிரதேசங்களும், புண்ணிய நதிகளும், தொழிற்சாலைகளிடமிருந்தும், மாசடைவதிலிருந்தும் விடுபட்டிருந்தன. ஆனால் இன்றோ அவையும் மாசடைந்துவிட்டன. இனியாவது நாம் இதை உணர்ந்து அதற்குப்பரிகாரம் செய்ய முன்வரவில்லை என்றால், அது நமக்கு நாமே தீங்கை ஏற்படுத்திக் கொள்வதாக இருக்கும்.

இன்று பெரும்பாலோர் கையில் ஒரு பையுடன் நடக்கின்றனர். அதனுள் சாப்பிட வேண்டிய, மாத்திரைகள், ஊசி மருந்துகள் முதலியவை இருக்கின்றன. காரணம் ஆரோக்கியம் அவ்வளவு நலிந்துவிட்டது. பணக்காரர்களும் பலவித நோய்களால் கஷ்டப்படுகின்றனர். எத்தனை அனுபவங்கள் ஏற்பட்டபோதும், அவற்றின் மூலம் நாம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பது தான் உண்மை. தற்காலிக சுகத்தில் நாம் அனைத்தையும் மறக்கின்றோம்.

சாம்லா: அம்மா, மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள உறவு என்ன?

அம்மா: மகனே! மனிதன் இயற்கையிலிருந்து வேறுபட்டவனல்ல. அவன் இயற்கையின் அங்கமாவான். உண்மையில் இயற்கையை நாம் பாதுகாக்கவில்லை; இயற்கை தான் நம்மைப் பாதுகாக்கிறது. பூமியில் இயற்கையை சார்ந்தே மனிதன் உயிர்வாழ்கிறான். காற்றைத் தூய்மைப்படுத்துதல் நடக்க வேண்டுமெனில் மரம், செடி, கொடிகள் தேவை. சுற்றுப்புறம் தூய்மையை இழக்கும்போது நம்முடைய ஆரோக்கியம் கெடுகின்றது, ஆயுள் குறைகிறது, பலவித நோய்களுக்கு அடிமையாகிறோம். இயற்கையில் ஏற்படும் எந்த மாற்றமும் மனிதனைப் பாதிக்கிறது. அதுபோலவே, மனிதனின்

செயல்களும், சிந்தனை அலைகளும் இயற்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும். இயற்கையின் சமநிலை தவறினால் மனித வாழ்வின் சமநிலை தவறும். அதேபோல், மனிதனின் சமநிலை தவறும் போது இயற்கையின் சமநிலையும் தவறும்.

கேள்வி: மனிதனுக்கும், இயற்கைக்கும் இடையிலுள்ள உறவு உருக்குலையக் காரணம் என்ன?

அம்மா: மனிதனின் களங்கமற்ற தன்மையே அவனை இயற்கையுடன் பிணைக்கும் சங்கிலியாகும். வானவில்லைக் காணும் போதும், கடல் அலைகளைக் காணும் போதும் சிறு குழந்தைக்கு ஏற்படும் மகிழ்ச்சி நமக்கு ஏற்படுவதுண்டா? சுயநலம் அதிகரிக்கும் போதும், குருட்டுபுத்தி வளரும் போதும் நமது களங்கமற்ற தன்மை அழிகிறது. அப்போது மனிதன் இயற்கையை விட்டு விலகுகிறான். இயற்கையைச் சுரண்ட ஆரம்பிக்கிறான். இயற்கைக்குக் கலக்கம் உண்டாக்குவதன் மூலம் தனது அழிவிற்குத் தானே காரணமாகிறான் என்பதை அவன் அறிவதில்லை.

மனிதனுடைய குழந்தைப்பருவத்தின் கள்ளங்கபடமற்ற தன்மையை என்றென்றும் நிலைநிறுத்த உதவுவது இறை நம்பிக்கையாகும். இறைபக்தியும், நம்பிக்கையுமுள்ள ஒருவன் இயற்கையின் ஒவ்வொரு பொருளிலும், பறவை, மிருகங்களிலும் தனது இஷ்ட தெய்வத்தையே தரிசிக்கிறான். இயற்கையுடன் அவன் இணங்கிவாழ வல்லவனாக இது வழிசெய்கின்றது. உண்மையான இறை நம்பிக்கையுள்ள ஒருவரிடமிருந்து சர்வ சராசரங்களை நோக்கிப் பெருகிவரும் அன்பானது, இயற்கையின் உள்ளத்தைக் குளிர்விக்கிறது. அதுதான் உண்மையான இயற்கைப் பாதுகாப்பாகும். இன்று மனிதன் தனது சுயநலத்தால் இயற்கையைத் தன்னிலிருந்து வேறுபட்டதாகக் காண்கிறான். இரண்டு கைகளும் என்னுடையவையே என்ற உணர்வு இருப்பதால்தான் இடதுகையில் காயப்பட்டால் வலதுகை ஆறுதலளிக்க முன்வருகிறது. தனது கையிடம் காட்டுவது போல், மற்றொரு மனிதரின் கையில் காயப்பட்டால் நாம் அன்பு

காட்டுவதில்லை. அது என் கையல்ல என்ற எண்ணமே இதற்குக் காரணம். இயற்கையைத் தனது சுயநலத்தை நிறைவேற்றும் கருவியாகவே மனிதன் காண்கிறான். அறிவியல் வளர்வதற்கேற்ப, விஷயங்களை அறிவுபூர்வமாகப் புரிந்து கொள்ள முயல்வதற்கேற்ப மனிதனின் பரந்தமனப்பான்மை அழிந்துவருவதையே நாம் காண்கிறோம். பத்து தக்காளி கிடைக்கும் செடியிலிருந்து நூறு தக்காளியை விளைவிக்க அவன் படித்தான். அதன் பருமனை இருமடங்காக்கவும் அவனுக்கு முடிந்தது. விளைச்சல் அதிகரித்த போது ஏழ்மை குறைந்தது என்பது சரிதான். ஆனால், ஒரு இடத்தில் பட்டினி மரணம் குறைந்தது எனில், மற்றொருபுறம் புதிய நோய்களால் நூற்றுக்கணக்கில் மனிதர்கள் அணு அணுவாக இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

புதிய காய்கறிகள் பசியை நீக்கியதோடு கூட, உடலின் இயல்பான நோய் எதிர்ப்புச் சக்தியும் அழிந்துவிட்டது. செயற்கை உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் உணவுடன் செல்வதன் மூலம் ஏற்படும் பின்விளைவைப் பற்றி நாம் சரியாக உணரவில்லை, இந்த ரசாயனப் பொருள்கள் உடலிலுள்ள உயிரணுக்களை அழிக்கின்றன. அவனை நோய்களுக்கு அடிமையாக்குகின்றன. வழக்கத்திற்கு மாறாக விளைச்சலை அதிகரித்ததுடன் மருத்துவமனைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அறிவியல் வளர்ச்சிபெற்றது என்றாலும், அதன் விளைவுகளை முன்கூட்டியே அறிந்து செயல்படுவதற்கு, சுயநலத்தால் மனிதன் முன்வர மறுக்கிறான்.

விவசாயத்திற்கு செயற்கை உரங்களை உபயோகிக்கக் காரணம் மனிதனின் சுயநலமே அன்றி, பயிர்கள்மீது அவன் கொண்ட அன்பல்ல. ஒரு பலூனை ஊதுவதற்கு எல்லை உண்டு. அளவுக்கதிகமாக ஊதினால் பலூன் வெடித்துவிடும். அதுபோல் ஒரு விதை அளிக்கும் விளைச்சலுக்கு எல்லை உண்டு. அதைச் சிந்திக்காமல் செயற்கை உரங்களையும், பிறவற்றையும் சேர்த்து விளைச்சலை அதிகரிக்கச் செய்தால் விதையின் சக்தியும், குணமும் குறையும். அதை உண்ணும் மனிதனின் உயிரணுக்களையும் அது

மோசமாகப் பாதிக்கும். பழங்காலத்தில், விவசாயத்திற்கு நீரும், இயற்கை உரமும் மட்டும் போதுமானதாக இருந்தது. இன்றோ, மருந்தடிக்க வேண்டும். செடிக்கு நோய் எதிர்ப்பு சக்தி போய்விட்டது. அவற்றின் நோய் எதிர்ப்பு சக்தி அழிக்கப்படுகிறது. அனைத்தையும் மரியாதையுடன் அன்பு செய்யவே மதம் கூறுகிறது. அறிவியல், அனைத்தையும் இருமடங்கு உண்டாக்கக் கண்டுபிடித்தது. ஆனால், அதில் அவ்வளவு குணமில்லை. இட்லியில் ஈஸ்ட் சேர்த்து இருமடங்கு பெரியதாக்கும் போது இட்லியின் குணம் குறையத்தானே செய்யும்?

கோழிக்கு ஹார்மோன் ஊசி போட்டு பெரிய முட்டையைப் பெறுவார்கள். இருளடைந்த கூண்டில் அடைத்துவைத்து தினசரி இரண்டு முட்டைகளை இடச் செய்வர். இதன் பயன் என்ன? கோழியின் ஆயுள் பாதியாகக் குறையும். நாட்டு முட்டையின் சத்து இந்த முட்டைக்கு வரவும் வராது. லாப நோக்கத்தால் மக்களின் நன்மையைக் குறித்து மனிதன் சிந்திப்பதில்லை. எதன்மீதும் கருணை தோன்றுவதில்லை. உற்பத்தியை அதிகரிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை; அதே சமயம், அனைத்திற்கும் ஒரு எல்லை இருக்கிறது. பண ஆசையால் அந்த எல்லையைக்கடந்து செல்வது இயற்கையை அழிப்பதற்கு நிகராகும். பறந்து அருகில் வரும் கிளிகளை, நமது மன மகிழ்ச்சிக்காகக் கூண்டில் அடைத்து வைப்பது போலவே, இயற்கையை நம்முடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்துகிறோம். இது இயற்கையைச் சிறையில் அடைப்பதற்கு நிகராகும். இயற்கையின் மூச்சுத்திணறல் மனிதகுலத்தின் அழிவிற்குக் காரணமாகும் மனிதன் வாழ வேறு வழியில்லாத நிலையில் இயற்கையை நோக்கிக் கோடாரியை ஏந்தினால் அதைப்புரிந்துகொள்ளலாம். ஆனால், இது அப்படிப்பட்டதல்ல, பேராசையால் காட்டும் அக்கிரமங்களை இயற்கை எவ்வாறு பொறுத்துக் கொள்ளும்?

அறிவியல் கண்டுபிடிப்புக்களை வானளாவப் புகழவும், ஆன்மிகத்தைக் கண்களை மூடிக்கொண்டு குறைசொல்லவும்

செய்யும் மக்கள், அறிவியலின் கண்டுபிடிப்புகளால் ஏற்பட்ட தீய விளைவுகள், மத தத்தவங்களால் ஏற்படவில்லை என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். வெடிமருந்து முதல் அணுகுண்டு வரை உள்ள போர்க் கருவிகள் எவ்வளவு பெரிய அழிவை ஏற்படுத்தி உள்ளன. இன்று ஒவ்வொரு நாட்டின் கையிலுள்ள அணுகுண்டுகளைக் குறித்துச் சிந்தித்தால் நிம்மதியாகப் படுத்து உறங்க முடியுமா?

மதங்களுக்கிடையில் கலகங்கள் ஏற்படவில்லையா என்று கேட்கலாம். அங்கும் ஆன்மிக தத்தவங்களின் எந்தக் குறையும் இல்லை: அதைச் சுயநல லாபத்திற்காகத் தன் விருப்பத்திற்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தும் மனிதனின் குறைபாடாகும். நாட்டுத் தலைவர்கள் பரஸ்பரம் போர் செய்தது போல், சத்குருமார்கள் தங்களுக்குள் சண்டை போட்டதாக வரலாறு இருக்கின்றதா?

அறிவியல் கண்டுபிடிப்புகளை அம்மா நிந்திக்கவில்லை. அவை தேவையே, ஆனால், மனிதன் மனதின் கல்வியையும் கற்க வேண்டும். இன்று அதற்கு எங்குமே வழி இல்லை. எங்கும் மனிதனின் மிருக உணர்ச்சிகளை வளர்க்கக் கூடிய சூழ்நிலைகளே உள்ளன. தினமும் நாளிதழ்களில் வரும் செய்திகளைப் படித்தால், குற்றச் செயல்கள் எவ்வளவு பெருகியுள்ளன என்பதைக் காண முடியும். மனதை இத்தகு தாழ்ந்த நிலையிலிருந்து மீட்பதற்குரிய செயல்களே தியானம், ஜபம் போன்றவை. ஆனால், இதற்கு யாருக்கும் நேரம் இல்லை 24 மணி நேரத்தில் ஒரு மணிநேரமாவது சாதனைக்காக ஒதுக்கிவைக்க எத்தனை பேரால் முடிகிறது?

விமானத்தைக் கண்டுபிடித்ததால் 100 மணிநேரம் ஆகும் பயணத்திற்கு ஒருமணி நேரம் போதுமானதாக உள்ளது. ஆனால், இதனால் வாழ்க்கையில் நெருக்கடி குறைந்ததா? இல்லை. அதிகரிக்கவே செய்துள்ளது. அப்படியிருக்க கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையத் தெரியாத மனதிற்கு எவ்வளவு பெற்றாலும் பயன் ஏது? எதிலும் அதிருப்தி மட்டுமே எஞ்சும், மனதின் அமைதி இவற்றைச் சார்ந்து இருக்கவில்லை. அமைதி

வேண்டுமா? மனதின் கல்வியைப் பெற வேண்டும். உலகியல் பொருள்களில் எதை அடைந்தாலும் அமைதி இல்லையெனின் பயன் ஏது? அன்பிற்குரிய மனைவி அருகில் இருந்தாலும் வெறுப்பு; சுவைமிகுந்த உணவிலும் சுவையின்மை.

அனைத்தையும் திறந்த மனதுடன் நேசிக்கவும், இயற்கையிடமிருந்து விஷயங்களை கற்றுக் கொள்ளவும் நாம் முன்வர வேண்டும். ஒரு மணிநேரம் சாதனைக்காகச் செலவிட முடியவில்லை எனில், பலனை எதிர்பாராது தொண்டுபுரிவதற்காவது சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும். மீதமுள்ள நேரத்தில் உண்ணவும், உறங்கவும், பொழுதுபோக்கவும் செலவிட்டுக் கொள்ளுங்கள். ஜபம், தியானம், பலனை எதிர்பாராத தொண்டு ஆகியவையே வாழ்வில் விலைமதிப்புள்ளவை ஆகும். மீதமுள்ளவை அனைத்தும் வெறும் பூஜ்யங்கள்! ஒன்று என்ற எண் முன்னால் இருந்தால் தான் பூஜ்யத்திற்கு மதிப்பு உள்ளது.

அனைவரும் அகந்தையின் அடிமைகளாவர், ஆனால், இறைவனின் அடிமையாவது மிகக் கடினம், அகந்தையின் அடிமையாவதால் அமைதியின்மையும், இறைவனின் அடிமையாவதால் அமைதியும் கிடைக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் மீது நமக்குள்ள பயபக்தி ஒருநாளும் பலவீனமல்ல. நம்முள் உள்ள நிலையானது எதுவோ அதன் மீது உள்ள அன்புதான் உண்மையான பக்தி, அல்லாது, ஆலயத்திற்கு முன்னால் நின்று அடுத்த வீட்டுக்காரர்களிடம் உள்ள பொறாமை, வெறுப்பு ஆகியவற்றைச் சொல்லிப் பிரார்த்தனை செய்வது ஒருநாளும் பக்தியல்ல. "அனைவருக்கும் நல்ல மனதைக் கொடுக்க வேண்டும்; அமைதியும், நிம்மதியும் நிலவ வேண்டும்" என்று பிரார்த்திப்பதே உண்மையான பக்தி; அதுதான் உண்மையான இறை தத்துவம்; அந்நிலையில், பிரார்த்தனை செய்பவனின் மனதிலும் அமைதி நிறைகிறது. மாறாக, துரோக சிந்தனை உள்ளவன் தனது அழிவுக்குத் தானே காரணமாகின்றான்.

கேள்வி: மனிதனுக்கும், இயற்கைக்கும் இடையிலுள்ள உறவினைப் பற்றி மதம் கூறுவது என்ன?

அம்மா: மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலும், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலும் சரியான உறவை வளர்க்க மதம் கற்பிக்கின்றது. இயற்கைமீது அன்பு செலுத்தவும், அதை வணங்கவுமே மத ஆசாரங்கள் உபதேசிக்கின்றனவே அன்றி, அவற்றை அழிக்குமாறு கூறவில்லை. இயற்கைக்கு நன்மை செய்வதன் மூலம் மட்டுமே மனித சமுதாயத்திற்கு நன்மை ஏற்படும் என்று ஆன்மிக சாஸ்திரம் சுட்டிக்காட்டுகின்றது.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள உறவு அண்டத்திற்கும், பிண்டத்திற்கும் உள்ள உறவு போன்றதாகும். இதை நமது முன்னோர்கள் அறிந்திருந்தனர். அதனால்தான் மத ஆசாரங்களில் இயற்கை வழிபாட்டிற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தனர். மனிதனை இயற்கையோடு இணைப்பதே ஒவ்வொரு ஆசாரத்தின் நோக்கமாக இருந்தது. அதன் மூலம் மனிதனின் உடல் ஆரோக்கியத்தையும், இயற்கையின் சமநிலையையும் நம் முன்னோர்கள் உறுதிபெறச் செய்தனர்.

ஒரு நெல்லை விதைத்தால் அது ஆயிரம் நெல்மணிகளாகத் திரும்பக் கிடைக்கும். மரம் தன்னை வெட்டுபவனுக்கு நிழல் கொடுக்கிறது. கல்லால் அடிப்பவனுக்கும் இனிய பழங்களை நல்குகிறது. ஆனால், இன்றோ நாம் செடியை நடும் போதோ, மிருகத்தை வளர்க்கும் போதோ அவற்றால் கிடைக்கும் லாபத்தைக் குறித்து மட்டுமே சிந்திக்கிறோம். லாபம் குறைந்தால் அவற்றை அழிக்கத் தயங்குவதில்லை. பசுவின் கறவை குறைந்தால் அதை உடனே இறைச்சிக்கு விற்றுப் பணமாக்குவோம். மரத்தினால் கிடைக்கும் வருமானம் குறைந்தால் அதை வெட்டி மரச் சாமான்கள் செய்வோம். எங்காவது சுயநலமற்ற, பிரதிபலன் எதிர்பாராத அன்பைக் காண முடிகிறதா? நமது முன்னோர்கள் இப்படி இருக்கவில்லை. மரங்களும். மிருகங்களும் உயிர்வாழ்வது மனிதநன்மைக்கு அவசியமென்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

மனிதனின் சுயநலம் அதிகரிக்கும் போதுஅவன் இவற்றை மறந்துவிடுவான் என்பதையும், வருங்காலத் தலைமுறை அதன் பலனை அனுபவிக்க நேரிடும் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டனர். அதனால் அவர்கள் ஒவ்வொரு மத ஆசாரத்தையும் இயற்கையுடன் இணைத்தனர். இவ்வாறு மத தத்துவங்களின் மூலம் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உணர்வுபூர்வமான நெருக்கத்தை ஏற்படுத்த அவர்களால் முடிந்தது.

மரத்தினால் ஏற்படும் பலனை நினைத்து மட்டும் அவர்கள் அவற்றின் மீது அன்பு செலுத்தவில்லை. அரசமரம், வில்வமரம், துளசிச்செடி போன்றவையை அனைவரும் ஆதாயத்திற்காக அவர்கள் வழிபடவில்லை. பசு விற்பனைக்குரிய வெறும் விலங்காக இருக்கவில்லை. பஞ்சமாதாக்களில் ஒன்றாக அது கருதப்பட்டது. (வேதமாதா, பூமாதா, தேசமாதா, தேகமாதா, கோமாதா என இவையே ஐந்து மாதாக்கள்) சோலைகளில் அத்தி, ஆல், அரசு முதலிய மருத்துவ குணங்கள் நிறைந்த மரங்களை நட்டு வளர்த்தனர். விடியற்காலையில் எழுந்து குளத்தில் குளித்துவிட்டு ஈரத்துணியுடன் மந்திரங்களை ஜபித்தவாறு சோலையை வலம்வருவது என்பது ஒருகாலத்தில் நமது வாழ்வின் ஒரு பாகமாக இருந்தது. விடியற்காலையில், மருத்துவ குணமுள்ள செடிகளில் பட்டுவரும் காற்றைச் சுவாசித்ததன் மூலம் அன்று அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருந்தது. முதுமையிலும், இளமையின் உற்சாகமும், ஆரோக்கியமும் நிலைத்திருந்தன. சோலையில் வளரும் மரங்களை வெட்டுவதை அன்று யாராலும் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. அங்கு வாழ்ந்துவந்த பறவை, மிருகங்கள் மீது அன்பு செலுத்துவதன்றி, அவற்றிற்குத் தொல்லைகொடுக்க முனைந்ததில்லை. பறவைகள் மரங்களில் கூடுகட்டி வாழலாம். அவை உணவுதேடி வேறு எங்கும் அலைந்து திரிய வேண்டாம். அவற்றிற்குத் தேவையான காய்களும், கனிகளும் அளவின்றிக் கிடைத்தன. விஷப்பாம்புகள் கூடச் சோலையிலுள்ள புற்றுக்களில் சுகமாக வாழலாம். அவற்றைக் கண்டு யாரும் பயப்படவில்லை. அவற்றைத் தேவதைகளாக எண்ணி வணங்கவே அவர்கள் கற்றிருந்தனர்.

ஆனால், இன்றைய நிலையோ, ஒரு சாரைப் பாம்பைக் கண்டால் போதும், அதைக் கல்லால் அடித்துக் கொல்லாமல் விடுவதில்லை. சோலையில் வளர்ந்துள்ள மரங்களை வெட்டி விற்றுக் காசாக்காமல் உறக்கம் வருவதில்லை. பசு தரும் பாலின் அளவு சிறிதளவு குறைந்தாலும் உடனே பசுவை விற்கத் தயங்குவதில்லை. மனிதனின் சுயநலம் அதிகமானபோது, பிற உயிர்களின் வேதனையைப் பற்றிச் சிந்திப்பதை விட்டுவிட்டான். நாம் உணவு உண்பதற்கு முன் செடிகளுக்கு நீர் விட்டோமா, பசுவிற்குத் தீனி கொடுத்தோமா, அடுத்த வீட்டுக்காரன் பட்டினியா என்பதையெல்லாம் இன்று யார் சிந்திக்கின்றனர்?

குடும்ப அங்கத்தினர் அனைவரும் சேர்ந்து மாலையில் இறை நாமங்களைப் பாடியது குடும்பச் சூழ்நிலையில் அமைதியையும், ஒற்றுமையையும் நிலவச் செய்தது. எண்ணெய் விளக்கிலிருந்து வரும் புகையும், தோப்பிலுள்ள மரங்களில் பட்டுவரும் இளங்காற்றும், ஒருமுகப்பட்ட மனதுடன் செய்யும் பிரார்த்தனையும், பாடலின் சுருதியும், தாளமும் மாலை நேரத்தின் மாசடைந்த சுற்றப்புறத்தைத் தூய்மையாக்கும். எண்ணற்ற வேலைகளுக்கு இடையிலும் இறைவழிபாட்டிற்கு நேரம் ஒதுக்கியதால், மன இறுக்கமில்லாமலும், மன அமைதியுடனும் உறங்கவும், எந்த சூழ்நிலையையும் புன்சிரிப்புடன் எதிர்கொள்ளவும் நம் முன்னோர்களால் முடிந்தது.

ஆனால், இன்றோ? அதிகம்போனால் ஒரு கடவுள் படமுள்ள காலண்டரை வைத்து, அதன் முன்னால் ஒரு பல்பை எரியவிடுவர். வீட்டிலுள்ளவர்கள் அந்திவேளையில் தொலைக்காட்சியில் திரைப்படம் பார்ப்பார்கள். தொலைக்காட்சியில் எல்லா நிகழ்ச்சிகளும் மோசமானவை என்று சொல்லவில்லை, நல்லவையும் உண்டு. ஆனால், பெரும்பாலானவை மனதைக் கெடுப்பவையாகவும், பேராசை, பொறாமை, போட்டி முதலியவற்றை வளர்ப்பவையாகவும் உள்ளன. பெரும்பாலோர் சினிமாவைப் பார்த்துவிட்டு அதில் வரும் வீடு, கதாநாயகியின் புடவை, கதாநாயகனின் கார் ஆகியவை வேண்டுமென விரும்புகிறார்கள். அது கிடைக்காதபோது ஏமாற்றம். சினிமா என்பது கற்பனை உலகம் என்பதை அவர்கள் அடியோடு

மறந்து விடுகின்றார்கள். தொலைக்காட்சியையும், சினிமாவையும் பார்த்துவிட்டு சிறுபிள்ளைகள் மனதில் திருட்டு, கொலை, பாதகம் இவற்றிற்கான தூண்டுதல் அதிகரிப்பதன்றி, வயதில் பெரியவர்களை மதிக்க யாரும் முன்வருவதாகத் தெரியவில்லை. அதே சமயம், மத தத்துவத்தைப் புரிந்து கொண்டு வாழ்பவர்கள் அப்படி இருக்கவில்லை. "மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ" என்றே அவர்கள் முதலில் கற்கிறார்கள்.

பெற்றோர், குரு இவர்களை வணங்குவதுடன், அவர்கள் கூறுவதைப் பின்றபற்றக் கூடிய பண்பாடே அவர்களுக்குக் கிடைத்தது. முதியோரைப் பின்பற்றி இயற்கையின் மீது அன்பு செலுத்தவும், இயற்கையோடு இணைந்து வாழவும் சிறுவர்களால் முடிந்தது. முற்றத்திலுள்ள முல்லைச் செடிக்கு நீர்விடவும், பசுவிற்குப் புல் கொடுக்கவும், மாலைதீபம் ஏற்றி இறை நாமங்களைப் பாடவும் அவர்களுக்கு யாரும் கற்பிக்க வேண்டி இருக்கவில்லை; "பகுத்தறிவுவாதிகள்" என்று கூறி அகங்காரத்துடன் நடப்பவர்கள், குருட்டு நம்பிக்கை என்று கிண்டல் செய்வார்கள்; என்றாலும், நன்கு சிந்தித்தால், மதத்தின் ஒவ்வொரு தத்துவமும் இயற்கை மற்றும் மனிதனின் நன்மையை மட்டும் இலட்சியமாகக் கொண்டவை என்பதை எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். "பொய் சொன்னால் கண் குருடாகும்" என்று குழந்தைகளிடம் நாம் கூறுவதுண்டு. அது உண்மையாக இருந்தால் இன்று உலகில் கண்பார்வை உள்ளவரைக் காணவே முடியாது. ஆனால் "விளம்பரம் எழுதாதே" என்ற ஒரு வரி விளம்பரத்தால், மற்ற விளம்பரங்கள் எழுதுவதைத் தடுத்து நிறுத்துவது போல, இந்தச் சிறிய பொய்யின் மூலம் சிறுவர்களிடம் பொய் கூறும் இயல்பு வளராமல் பார்த்துக் கொள்ள முடியும்.

பெரியவனான பிறகு பெற்றோர் இவ்வாறு சொன்னது உண்மையல்ல என்று அறிந்தாலும், பொய் சொல்வது தவறென்பதை அவன் தானே புரிந்துகொண்டிருப்பான். மதங்களில் ஏதாவது கண்மூடித்தனமானது இருந்தால் அது சாதாரண மனிதரிடம் உள்ள பலவீனங்களை நீக்குவதற்காகவே என்பதைப் புரிந்து கொள்ளத்

தெளிந்த அறிவுள்ளவர்களால் மட்டுமே முடியும். சூஷ்ம புத்தி உள்ளவர்களுக்கே முடியும். மத தத்துவத்தைப் புரிந்து கொண்டு வாழும்போது, நமக்கு இறைவனிடம் உள்ள பயபக்தி நாளடைவில் இறை அன்பாக வளர்கிறது. அனைத்திலும் இறைவன் குடியிருக்கிறார் என்ற உணர்வானது, எல்லா உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்த வலிமை அளிக்கிறது. பழங்காலத்தில் நூறுபேர் ஒற்றுமையுடனும், அன்புடனும் ஒரே குடும்பமாக வாழ்ந்தனர். ஆனால், இன்று மூன்று பேருள்ள குடும்பத்தில் மூவரும் மூன்று வழிகளில் போகின்றனர். பரஸ்பரம் புரிந்துகொள்வதோ, ஒற்றுமையோ இல்லை. பழங்காலத்தில் குடும்பங்களிலும், சமுதாயத்திலும் காணப்பட்ட பரஸ்பர அன்பைப் பற்றியும், அவர்கள் அனுபவித்த அமைதியைப் பற்றியும் நினைத்துப் பார்க்கும்போது கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நனையும், அவற்றை இனி கனவுதான் காண முடியும். அன்று அவ்விதம் ஒரு சமூகம் இருந்ததென்றால், மதத்திற்கு வாழ்விலும், சமூதாயத்திலும் முதலிடம் அளிக்கப்பட்டதே அதன் முக்கிய காரணம் ஆகும். நானும், நீயும் வேறுவேறு என்ற வேற்றுமை உணர்வைக் கைவிட வேண்டும் என்றே மதம் கூறுகிறது. மனிதனின் உள்மன இயற்கையை, வெளியிலுள்ள இயற்கையுடன் அன்பெனும் சங்கிலியால் மதம் பிணைக்கிறது.

சாம் லா: ஆத்திகர்கள் அல்லவா பூஜைக்காகப் பூக்களைப் பறிப்பது, மிருகங்களைப் பலியிடுவது, இயற்கையை அழிப்பது போன்றவற்றைச் செய்கின்றார்கள்?

அம்மா: இறைவா! அடுத்த வீட்டுக்காரனைக் குருடனாக்க வேண்டும்; அவன் வேலையை இழக்கச் செய்ய வேண்டும்; அவனை அழிக்க வேண்டும் என்பது போல் பிரார்த்தனை செய்பவர்களை ஆத்திகர்கள் என்று அழைக்கக் கூடாது. தனது நலனிற்காக இறைவனை அவர்கள் ஒரு கருவியாக ஆக்குகிறார்கள். துரோக சிந்தனை உள்ளவர்களின் கடவுள் நம்பிக்கை, தூய பக்தியிலிருந்து தோன்றுவதல்ல. அது தனது காரியம் நடப்பதற்காகக் காட்டும் பொய்யான நம்பிக்கையாகும். உண்மையான பக்தன் இறைவனின் நோக்கத்தை

உணர்ந்து, அதற்கேற்பச் செயல்படுவான். இடதுகை காயமடைந்தால் வலதுகை ஆறுதல் அளிக்க வருவது போல், பிறரது துயரைக் கண்டு, தன்னை மறந்து உதவ ஓடிச்செல்லும் மனோபாவம் அவனுக்கு இருக்கும் உண்மையான ஆத்திகன் இயற்கையையும், மனிதரையும் இறைவனின் பிரத்யட்ச வடிவமாகக் கண்டு, அவர்களுக்குத் தொண்டு செய்யவும், அன்பு செலுத்தவும் செய்கிறான். அவன் யாரையும் தன்னிலிருந்து வேறுபட்டவராகவும் காண்பதில்லை. பிறரது குற்றம், குறைகளைக் காணாமல், பிறரது தவறுகளை மன்னிக்கும் திறனுள்ள இதயத்தில் தான் இறைவனால் வசிக்க முடியும்.

அந்த அளவு கருணை உள்ள மனமுடைய ஒருவனால் இறைவனைத் திருப்திப்படுத்துவதற்காக எங்ஙனம் மிருகபலியும், பிறவும் நடத்தமுடியும்? தனது மனதில் உள்ள மிருகத்தனமான வாசனைகளையே அவன் இறைவனுக்குப் பலியிடுவான். தனது அகந்தையையே கொல்வான்.

குழந்தைகளே, ஹிம்சை என்பது இயற்கை நியதியின் ஒரு பாகமாகும். அதை முற்றிலும் நீக்கமுடியாது. தனது உணவிற்காக வேட்டையாடுவதையும், இதுபோன்ற பிறவற்றையும் அதர்மம் என்று கூறமுடியாது. ஆனால் தேவைக்கதிகமாக எதையும் அழிப்பது ஹிம்சையாகும். ஒருவன் கஞ்சி குடிப்பதற்காக ஒரு பலா இலையைப் பறிப்பது தவறல்ல. ஆனால் அதற்காக ஐந்தாறு இலைகளைப் பறிப்பது அதர்மமாகும். இவ்வாறு இறைவனுக்குப் பூஜை செய்வதற்காகச் செடிகள் நட்டு, நீர்விட்டு வளர்த்து அவற்றிலிருந்து பூக்களைப் பறிப்பதைத் தவறென்று கூற முடியாது.

துளசிச் செடிக்கு நீர்விடும்போது பக்தன் ஒருவன் ஸ்ரீகிருஷ்ணனையே வணங்குகிறான். அரசமரத்தைச் சுற்றிவரும்போதும், பசுவிற்குப் புல் கொடுக்கும்போதும் அவனது மனம் கிருஷ்ணனிடம்தான் லயித்திருக்கிறது. வில்வ மரத்திற்கு உரமிடுகையில் அது சிவனை மகிழ்விக்கும் என்றே சிவபக்தன் நம்புகிறான். இயற்கையை வழிபடுவதன் மூலம் பன்மை நிறைந்த

இவ்வுலகில் உள்ள ஏகமான மெய்ப்பொருளைத் தரிசிக்க அவனால் முடிகிறது.

வழிபடுவது என்றால் தொட்டு வணங்கி, நமஸ்கரிப்பது என்பதல்ல; பறவை மிருகங்களையும், செடிகொடிகளையும் அன்போடு கவனிப்பதும், பராமரிப்பதும் முன்பு இறை வழிபாட்டின் ஒரு பாகமாக இருந்தது. காலையில் எழுந்ததும் குளத்தில் குளித்துவிட்டு வந்து துளசிச் செடி, அரச, வில்வ மரங்களுக்கு நீர்விட்டு வலம் வந்து வணங்குவதும், அகல்விளக்கில் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி இறை நாமங்களைப் பாடுவதும், சூரிய உதயகாலத்தில் கிழக்கு நோக்கி நின்று சூரிய நமஸ்காரம் செய்வதும் உடல் மற்றும் மனதின் சோர்வைப் போக்கவும், புத்திக்கு உற்சாகம் மற்றும் ஆரோக்கியத்தை நல்கவும் மிகவும் உதவின. தினசரி அனுஷ்டானங்களின் மூலம் மனதின் இறுக்கம் அகன்று, அமைதியும், நிம்மதியும், உற்சாகமும் கிடைக்கிறது. இன்று நம்மில் எத்தனைபேர் தினமும் சூரிய உதயத்தையும், பூக்கள் மலர்வதையும் பார்க்கின்றோம்? பறவைகளின் கலகலவென்ற சப்தத்தைக் காதுகொடுத்துக் கேட்பவர் எத்தனைபேர்?

கேள்வி: மதங்களின் பெயரால் நடந்த உயிர்ப்பலியை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

அம்மா: சரியான தத்துவ உணர்வை மக்களிடையில் எடுத்துச் சொல்ல இயலாதிருந்ததே மிருகபலியும், நரபலியும் பிறவும் ஒரு காலத்தில் பழக்கத்திலிருந்ததன் காரணமாகும். முன் காலத்தில் மத நூல்கள் மக்களிடையே பிரசாரம் செய்யப்படவில்லை. பண்டிதர்களான பிராமணர்கள் அவற்றைப் பாதுகாத்து வைத்தனர். சாதாரண மக்கள் தங்களுக்குத் தோன்றிய விதத்தில் இறைவழிபாடு செய்து திருப்தியடைந்தனர்.

அம்மா ரீயூனியனுக்குச் சென்றபோது அங்குள்ள ஒரு மொழியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். பழங்காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவிலிருந்து ரீயூனியனிற்கும்,

மொரீஷியஸிற்கும் அடிமைகளாக ஆட்களைக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு அங்குள்ள மொழி தெரியாது. அவர்கள் தாங்கள் கேட்டதைப் பேசிப்பேசிப் பழகியதால் ஒரு புதிய மொழி உருவாயிற்று. அதுபோல், அறிவுள்ளவர் செய்துவந்த ஆசார, அனுஷ்டானங்களைக் கண்ட சாதாரண மக்கள் அவர்களுடைய ரீதியில் ஒவ்வொன்றையும் செய்தனர். பின்னர் வந்தவர்கள் அதைப் பின்பற்றினர்; அவ்வளவே.

நமக்கு மிக விருப்பமான பொருளைத்தான் இறைவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பல வருடங்கள் காணாதிருந்த ஒரு நண்பன் திடீரென ஒருநாள் வீட்டிற்கு வந்தால் நாம் அவனை எப்படி வரவேற்போம்? நண்பனுக்கு விருப்பமான உணவு வகைகளை எல்லாம் எவ்வளவு விரைவில் தயாரித்துக் கொடுப்போம்? ஒரு நண்பனது விஷயத்தில் அப்படி என்றால், அன்பே வடிவான இறைவனின் விஷயத்தில் எப்படி இருப்போம்? வேட்டையாடி வாழ்ந்து வந்த காட்டுவாசிகளுக்குப் பறவை, மிருகங்களின் மாமிசம் மிக விருப்பமானவையாகும். அதை அவர்கள் இறைவனுக்குச் சமர்ப்பித்தனர். பால் பாயஸத்தை விரும்பியவர்கள் அதை இறைவனுக்குப் படைத்தனர். பால் பாயஸத்தைக் குறித்துக் கேள்விப்படாதவரால் அதை எப்படிப் படைக்க முடியும்? அவர்கள் தங்கள் உணவான மாமிசத்தைப் பகவானுக்குப் படைத்தனர். அதை அவர்களின் சந்ததியினரும் பின்பற்றினர். சரியான அறிவைப் பெற்றவர்கள் இவர்களுக்குத் தேவையான தத்துவத்தை உபதேசிக்கவில்லை.

உண்மையில் நமது மனதை இறைவனுக்குச் சமர்ப்பிக்குமாறுதான் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால், மனம் என்பது எடுத்துக் கொடுக்கக்கூடிய ஒரு பொருளல்ல, அதனால் மனம் எதை மிகவும் விரும்புகின்றதோ, அதைச் சமர்ப்பிக்கும் போது மனதைச் சமர்ப்பிப்பதற்குச் சமமாகிறது. அதுவே யாகங்களின் போது செல்வத்தைத் தானம் செய்வதன் தத்துவம். மனிதனின் மனம் செல்வத்தையல்லவா அதிகம் விரும்புகிறது?

ஒவ்வொருவரும் அவரவர் அறிந்த விதத்தில், தங்கள்

இயல்புக்கேற்ப இறைவனை வழிபட்டனர். ரிஷிகள் தேவியைத் தூய சத்துவ வடிவமாகக் கண்டு வணங்கினர். பணத்தை விரும்பியவர்கள் லஷ்மியாக, செல்வத்தின் தேவதையாகக் கண்டனர். மாணவர்கள் சரஸ்வதியாக எண்ணி வழிபட்டனர். போர்வீரர்களும், காட்டுவாசிகளும் காளியாக வாளும், சூலமும் ஏந்தியவளாகத் தேவியை வணங்கினர். எல்லாம் ஒரே சக்திதான். ஒவ்வொருவரும் தங்கள் மனோபாவத்திற்கேற்ப அதற்கு வடிவம் கொடுத்தனர். எல்லாம்வல்ல இறைவனால் எந்த வேடமும் அணியமுடியும். அதனால் இறைவனையோ, மத தத்துவங்களையோ குறைகூறுவதால் பயனேதுமில்லை. மதத்தின் பெயரால் சமூகத்திற்கும், இயற்கைக்கும் எதிரான ஏதாவது அனாசாரங்கள் இருக்கின்றதெனில், சரியான தத்துவத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களை சரியான பாதைக்குக் கொண்டுவரவே நாம் முயற்சிக்க வேண்டும். காலக்கிரமத்தில் ஏற்பட்ட அனாசாரங்களின் பெயரால் மத தத்துவங்கள் முழுவதையும் தவறெனக் கூறுவது என்பது, ஒரு போலி மருத்துவர் தவறான மருந்தை எழுதிக் கொடுத்த காரணத்தால், ஒரு நோயாளி இறந்துவிட்டார் என்பதால், எல்லா மருத்துவர்களையும் குறை கூறுவது போன்றது. குழந்தையைக் குளிப்பாட்டிய பின், நீருடன் குழந்தையையும் தூர எறிந்துவிடுவதற்கு நிகராகும் இது.

நமது எல்லாச் செயல்களிலும் பயபக்தியைக் காணலாம். பயம் இருப்பதால் தான் நாம் எதையும் கவனமாகச் செய்கிறோம். இல்லாவிடில், நமக்குச் சிரத்தை வருவது கடினம். நடக்கும் போது கவனமாக இருப்பது, விழுந்துவிடுவோம் என்ற பயத்தால் ஆகும். ஒவ்வொருவரும் அவரவர் இயல்புக்கேற்ப மனதில் தோன்றியதைப் பேச ஆரம்பித்தால், அனாவசியமான பலவற்றைப் பேசநேரிடும். அது பின்னர் வழக்கானால் சிறைக்குச் செல்ல நேரிடும். அந்தப் பயத்தால் பேச்சிலும், செயலிலும் கவனம் செலுத்துகிறோம். சிரத்தையுடன் படிப்பது தேர்வில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தால்தான். இப்படிப் பார்த்தால் ஒவ்வொரு நிமிடமும் நாம் பயந்துதான் வாழ்கிறோம்.

விதை விதைத்தால் சரியான நேரத்தில் நீரும், உரமும் இட வேண்டும். இல்லையெனில், விதை அழிந்துவிடும். நாம் பட்டினி கிடக்க நேரிடும். பட்டினியைக் குறித்து நினைத்தபோது, மனிதரிடம் சிரத்தை வந்தது; விவேகமும், வைராக்கியமும் விழிப்படைந்தன. இவ்வாறு ஒரு விதை, ஆயிரக்கணக்கில் பழங்களும், விதைகளும் தரும் பெரிய மரமாக மாறியது. பட்டினியைக் குறித்து இருந்த பயமானது, சிரத்தையுடன் வேலை செய்யத் தூண்டுதல் அளித்தது. இறைவன்மீதுள்ள பயபக்தியும் இது போன்றதே. அது விவேகத்துடன் வேலை செய்ய மனிதனுக்குத் தூண்டுதல் அளிக்கிறது. அந்தப் பயம் நம்மைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்கிறது.

அதேசமயம், வேறு எல்லாப் பயங்களும் மனதின் அமைதியைக் குலைக்கும் போது, இறைவன்மீதுள்ள பயபக்தி அமைதியை அளிக்கிறது. இதுவே மற்ற பயங்களுக்கும், இறைபக்திக்கும் இடையிலுள்ள முக்கியமான வேறுபாடாகும். இறைபக்தி உள்ளவன் அம்மாவின் மடியில் இருக்கும் குழந்தையைப் போல் கவலையின்றியும், மகிழ்ச்சியுடனும் இருக்கிறான். அதனால், அவன் தவறை நோக்கிச் செல்வதில்லை. அவனுடைய செயல் தனக்காக உரியதல்ல, இறைவனுக்கு உரியதாகும். அத்தகு செயல்கள் அனைத்து உயிரினங்களுக்கும் நலன்புரிவதாக இருக்கும். சொர்க்கம் எங்கே இருக்கிறது என்று கேட்டால், வேலை இருக்குமிடத்தில் இருப்பதாக அம்மா கூறுவேன். உழைப்பு எங்கே இருக்கிறதோ அங்கே சொர்க்கம் இருக்கிறது. உழைப்பு இல்லாத இடம் நரகமாகும். ஆனால், செய்யும் செயல் தர்மத்தோடு கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறு, தர்மத்தோடு கூடிய செயல் செய்யுமாறு மதம் தூண்டுகிறது.

இறைவன் எப்போதும் கருணை பொழிந்து கொண்டிருக்கிறார். அதை முறையாகப் பயன்படுத்துமாறு மதம் கூறுகிறது. பகல்வேளையில் கதவுகளை எல்லாம் அடைத்துவிட்டு, அறைக்கு உள்ளே இருந்துகொண்டு, இருளாக இருப்பதாகக் கூறி, சூரியனைப் பழிசொல்வதால் பயனேதுமில்லை. கதவைத் திறந்து,

நாம் ஒளி உலகிற்கு வரவேண்டும். அதற்கு இறைவன் தந்த ஆரோக்கியமும் இருக்கிறது. சிலர், "நமது மனோவாசனைகளை அடக்குவது தவறு; மனவாசனைகளுக்கேற்றவாறு செயல்பட வேண்டும்" என்று கூறுவர். ஒருவன் அடுத்த வீட்டுக்காரனைக் கொல்ல விரும்பக்கூடும். அந்த மனோவாசனைக்கேற்ப நடக்க அவன் தீர்மானித்தால், அதன் பலன் என்னவாக இருக்கும்? எனவே, மனோவாசனைகளைச் சரியான பாதையில் திருப்பிவிட முயல வேண்டும். இறைவன் மீது பயபக்தி வேண்டும் என்று கூறுவது அதற்குத்தான்.

இன்று இயற்கைப் பாதுகாப்பின் அவசியத்தைப் பற்றி எத்தனையோ விஷயங்களை அறிவியல் சொல்லிக் கொடுத்தாலும், அவற்றில் ஒன்றையாவது நடைமுறையில் கொண்டுவர நாம் முயல்கிறோமா? இருக்கும் சோலைகளையும். காட்டையும் வெட்டி அழிக்கவல்லவா செய்கிறோம்? அதற்குப்பதில் விவசாயத்திற்கு ஏற்ற, லாபம் தரும் சில மரங்களை நடுகிறோம். அவை வளர்வதற்குச் செயற்கை உரங்களும், கிருமிநாசினிகளும் தேவை. நாட்டு மரங்களுக்குள்ள கிருமிகளை எதிர்க்கும் சக்தி அவற்றிற்கில்லை. மாலையில் இறைபூஜையை நினைவுபடுத்தும் நறுமணம் கமழும் முல்லை, மல்லிகை இவற்றிற்குப் பதிலாக இன்று வீட்டு முற்றத்தைக் கள்ளி, முள் செடிகள் அலங்கரிக்கின்றன. மனிதனின் மனதில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையே அவன் வளர்க்கும் செடிகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுகிறது.

துளசி, வில்வம், அறுகு போன்ற இலைகள் இட்ட நீரை, காலையில் பிரசாதமாக அருந்திய நம் முன்னோர்களுக்கு வேறு டானிக் தேவைப்படவில்லை. இவற்றின் மருத்துவ குணங்களைப் பரிசோதனை நடத்தி இன்று நிரூபித்துள்ள போதும், முன்னோர் தினசரி வாழ்க்கையில் அவற்றிற்குக் கொடுத்திருந்த இடத்தை இன்று யாராவது கொடுக்கிறார்களா? எந்த வீட்டிற்கு விருந்தினர் சென்றாலும், முன்பெல்லாம் முதலில் நீர்மோரோ, இளநீரோ கொடுப்பார்கள். இன்றோ, காபி, தேநீர் அல்லது செயற்கை

பானங்களில் ஏதாவது ஒன்றைக் கொடுக்கிறார்கள். சிறிது காலம் முன்புவரை எலுமிச்சப்பழ சர்பத் கிடைக்காத பெட்டிக்கடை இல்லை. இன்று அதற்குப் பதிலாக, பல நிறமும், சுவையுமுள்ள செயற்கையான குளிர்பானங்கள் கிடைக்கின்றன. பலமடங்கு அதிக விலை கொடுத்து. உடல் நலத்திற்குக் கெடுதல் என்பது தெரிந்தும் அதை வாங்கிக் குடிக்க நாம் தயங்குவதில்லை. தென்னை, எலுமிச்சை மரங்கள் இருந்த இடங்களில் இன்று ரப்பர் போன்ற மரங்கள் பயிரிடப்படுகின்றன. எதனால்? லாப நோக்கத்துடனா அல்லது இயற்கை மீது கொண்ட அன்பாலா?

சென்ற தலைமுறையைச் சேர்ந்தவர்கள் கூட பயபக்தியால் வயதில் பெரியவர்களுக்கு முன்னால் புகைபிடித்ததில்லை. இன்று புகைபிடிப்பதால் ஏற்படும் தீங்கைப் பற்றி அறியாதவர் யாருமில்லை. புகைபிடிக்கக் கூடாது என்று கூறும் மருத்துவரின் உதட்டிலும் ஒரு சிகரெட் புகைந்து கொண்டிருக்கும். சிகரெட் பெட்டியின் மேல் "இது உடல்நலத்திற்குத் தீங்கானது" என்று எழுதியிருந்த போதும், யாராவது அதைப் பொருட்படுத்துகிறார்களா? புகைபிடிப்பவர் தனக்கு ஏற்படுத்திக் கொள்வதை விட, தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு அதிகத் தீங்கை ஏற்படுத்துகிறார் என்று அறிவியல் கூறுகிறது. மனிதனை நோ்வழியில் செல்ல உதவியதும், இயற்கைக்கு நன்மை தருவதாக அமைந்ததும், பயபக்தியுடன் கூடிய ஆசாரங்களா அல்லது வெறும் அறிவா? அறிவு வேண்டாம் என்று கூறவில்லை. அறிவைப் போலவே ஆசாரமும், அனுஷ்டானமும் வேண்டும். அவ்வளவுதான், நமக்கு அறிவு இருக்கிறது. ஆனால், விவேக புத்தியில்லை. இந்த இடத்தில் தான் பயபக்தியின் முக்கியத்துவம் வருகிறது. அறிவு புத்தியோடு மட்டும் நின்றுவிட்டால் போதாது: இதயத்திலும் நிறைய வேண்டும்; வாழ்க்கையில் செயலாக வெளிப்படவேண்டும். அதற்கு மதம் அவசியம்.

இயற்கையை இறைவனின் அம்சமாகக் காணவும், அன்பு செலுத்தவும். வழிபடவும், அதனுடன் இணைந்து வாழவும் நமக்குப் பாதை வகுத்துத் தருவது மதமாகும். தான் இயற்கையின் பிரிக்க முடியாத அங்கமென்ற உணர்வை மனிதனிடம் ஏற்படுத்தவும்,

அத்துடன் இயற்கையை கடந்து நிற்கும் பரம தத்துவத்தை அனுபூதியில் அறியவும் கூடிய சக்தியை மனிதனிடம் விழிப்புறச் செய்யவும் மதம் உதவுகிறது.

மத உணர்வின் மூலம் மனிதனுக்குக் கிடைத்த பயபக்தி அவனுக்கும், இயற்கைக்கும் நன்மையையே செய்துள்ளது. அதன்மூலம் இயற்கையின் மீது அன்பு செலுத்தவும், அதைப் பாதுகாக்கவும் அவன் கற்றுக்கொண்டான். ஒரு இடத்தில் சட்டத்தைக் காக்கும் காவலர் இருந்தால், காவலர் மீதுள்ள பயத்தால் அங்கு திருட்டு மிகவும் குறையும், பாதுகாப்பு உணர்வு ஏற்படும், அது போல் இறைவனிடம் உள்ள பயபக்தி சமூகத்தில் தர்மத்தை நிலைநிறுத்த உதவும், சரியான மத உணர்வைப் பெறுவதன் மூலமும், ஆசாரங்களைப் பின்பற்றுவதன் மூலமும் மனிதனால் தவறுகளிலிருந்து விலகிநிற்க முடிகிறது.

மதம் என்பது குருட்டு நம்பிக்கை என்று கூறி, சிலர் கேலியாகச் சிரிப்பதைக் காணலாம். ஆனால் இப்படிக் கூறுபவர்களின் செயல்களே இயற்கைக்கு மிகவும் கெடுதலாக மாறுகின்றன. இந்தப் பொய்யான பகுத்தறிவுவாதிகளைவிட இயற்கையின் மீது அன்பு செலுத்துவதும், அதைப் பாதுகாப்பதும் மத உணர்வைப் பெற்றுள்ள சாதாரண மக்களே, மதத்தில் கூறப்படும் சில விஷயங்கள் தவறென்று நிரூபிக்க அறிவியலை உதாரணம் காட்டச் சிலர் முயல்வதைக் காணலாம். ஆனால், பௌதிக அறிவியல் தெரிந்து கொள்வதற்கு இன்னும் எத்தனையோ விஷயங்கள் உள்ளன என்பதை அவர்கள் மறுக்கின்றனர்.

மதம் வெறும் குருட்டு நம்பிக்கை என்று சொல்பவர்கள் அதன் ஆசாரங்களின் பின்னே உள்ள சாஸ்திர தத்துவத்தைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. மத தத்துவங்கள் ஏதாவது ஒரு பிரிவைச் சேர்ந்தவருக்காக மட்டும் கூறப்படுபவை அல்ல. எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் தேவையானது அதில் உண்டு. சிறு குழந்தைக்குத் தேவையானதும், பத்து வயதுச் சிறுவனுக்கு வேண்டியதும், இளைஞனுக்குப் பொருந்துவதும், நூறு

வயதுள்ள கிழவருக்குத் தேவையானதும், பைத்தியக்காரர்களுக்கும், அறிவாளிகளுக்கும் தேவையானவையும் சாஸ்திரங்களில் உள்ளன. ஒவ்வொருவரின் இயல்பிற்கு ஏற்ப, அவற்றிற்குப் பொருந்தும் ரீதியிலுள்ள தத்துவங்களே மதத்தில் உள்ளன. ராணுவத்திலும், காவல் துறையிலும், அலுவலகத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான தகுதிகளில் வித்தியாசமுண்டு. அதுபோல், மாறுபட்ட இயல்புள்ளவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட பல தத்துவங்கள் மதத்தில் உள்ளன. அனைத்தும் ஒன்றாக இருக்கும்போது, சில நேரங்களில், சில தத்துவங்கள் நமக்குப் பொருந்தாதவையாக இருக்கும். ஆனால், ஒவ்வொன்றும் ஒவ்வொருவரையும் கருத்தில் கொண்டு கூறப்பட்டதாகும். மத தத்துவங்களை அறிய முற்படுகையில் இந்தத் தெளிவு நமக்கு இருக்க வேண்டும்.

நம்பிக்கையின்றி யாரால் வாழ முடியும்? எத்தனையோ பேர் விபத்துக்களிலும் வேறு விதங்களிலும் இறக்கின்றனர். பேசிக்கொண்டு நிற்கும் போது இறந்து விடுகின்றனர். இருந்த போதும் நாம் இப்போது சாகமாட்டோம் என்ற குருட்டு நம்பிக்கையே நமக்கு இருக்கிறது. இது போல் எந்த ஒரு செயலிலும் - அவ்வளவு ஏன்! - ஒவ்வொரு நிமிடத்திலும் நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்வது நம்பிக்கையே ஆகும். இங்கே குண்டு விழாது என்ற நம்பிக்கையால்தான் இப்போது நாம் இங்கே இருக்கிறோம், எத்தனையோ விபத்துக்கள் நிகழ்ந்திருக்கின்றன; நேரில் கண்டிருக்கிறோம். இருந்த போதும் வாகனங்களில் பயணம் செய்வது, நாம் பயணம் செய்யும் வாகனம் விபத்துக்குள்ளாகாது என்ற நம்பிக்கையால் தான். தனது மகளைக் கண்கலங்காமல் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையில் தான் ஒருவர் தன் மகளை ஒரு ஆடவனுக்குத் திருமணம் செய்து வைக்கிறார். நாம் குடிக்கும் தண்ணீரில் விஷமில்லை என்ற நம்பிக்கையே அதைக் குடிக்க நமக்கு வழிசெய்கிறது. இப்படிப் பார்க்கும் போது வாழ்க்கையின் எந்த நிலையிலும் நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்வது நம்பிக்கையே ஆகும். எதையும் நம்பிக்கையுடன் பார்க்கும்போது தான் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். தான் விரும்பும் பெண்

தருகின்ற கசப்பையும், இனிப்பாக எண்ணி அருந்த முடியும்; அதே சமயம் நாம் விரும்பாத ஒருவர் தரும் இனிப்பும் நமக்குக் கசப்பாகத் தோன்றும். எதையும் விரும்ப முடிந்தால் மட்டுமே வாழ்வில் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். அதற்குத் தடையாக நிற்பது நமது சுயநலமாகும். அதைத் துறக்க வேண்டும் என்றே மதம் கூறுகிறது.

மேகங்களில் ஏதோ உப்பைத் (சில்வர் அயோடைடு) தூவி மழை பெய்யச் செய்யலாம் என்று இன்றைய அறிவியல் கூறுகிறது. ஆனால், அவ்வாறு கிடைக்கும் மழைநீர் சுத்தமானது என்று கூற முடியாது. அதே சமயம், சில குறிப்பிட்ட செடிகள் மற்றும் பிறவற்றை முறையான மந்திர ஜபத்துடன் அக்னியில் ஆஹுதியாக அளிக்கும் போது இயற்கையில் அதற்கேற்ப நல்ல மாற்றம் ஏற்படுகிறது. ஹோமப்புகை மேலே செல்லும்போது அது மழை பெய்விக்க உதவுகிறது. செயற்கை மழையால் கிடைக்கும் மழைநீரைவிட யாகங்கள், ஹோமங்களால் பெய்யும் மழைநீர் சுத்தமானதென்று அனுபவித்து அறிந்தவர்கள் கூறுகின்றனர். இயற்கை இழந்துவிட்ட சமநிலையை ஹோமங்கள், யக்ஞங்கள் போன்றவை மீண்டும் உருவாக்குகின்றன. மூலிகை மருந்துகள் உடலின் நோயைப் போக்குவதுபோல், தூப, தீப, நைவேத்தியங்களும், ஹோமங்களும் பிறவும் சுற்றுச்சூழலில் தூய்மை ஏற்படச்செய்கின்றன.

கிருமிகளைக் கொல்வதற்குக் கிருமிநாசினிகளையும், நீரைத் தூய்மைப்படுத்த குளோரினையும் உபயோகிப்பதால் சுற்றுச்சூழல் மாசடைகிறது. மாறாக, நஸ்யம் (ஆயுர்வேத சிகிச்சை முறைகளில் ஒன்று) செய்யும்போது சளித் தொல்லை நீங்கி, நுரையீரல் சுத்தமடைவதுபோல், அத்தி, இத்தி, அரசு, தர்ப்பைப்புல் போன்றவற்றை உபயோகித்துச் செய்யும் ஹோமத்தில் எழும் புகையானது சுற்றுப்புறத்திலுள்ள மாசுகளை அகற்றுகிறது. கிரகண சமயத்தில் சூரியனை நேரடியாகப் பார்த்தால் கண்ணிற்குக் கெடுதல் என்று இன்றைய அறிவியல் கூறுகிறது. கிரகண சமயத்தில் சாண நீரில் தெரியும் சூரியனின் பிரதிபிம்பத்தை மட்டுமே பார்க்கலாம் என்ற மத ஆசாரத்தைப் பின்பற்றுவதன் மூலம், இந்த அறிவியல்

கூற்றின் பயன்தான் நமக்குக் கிடைக்கிறது. இயற்கை மற்றும் சமூகத்துடன் அன்புடனும், பரஸ்பர ஒற்றுமையுடனும் வாழவே மதம் கூறுகின்றது. இயற்கை அன்னைக்குத் தான் செய்ய வேண்டிய கடமையைப் பற்றிப் புரிந்து கொள்வதன் மூலம் மனிதனின் அகந்தை நீங்குகிறது. தன்னையே இயற்கையின் அங்கமாகக் காண்பதன் மூலம் எல்லாம் ஒரு ஆத்மாவே என்பதை அவன் அறிகிறான். உண்மையில் மதம் என்றால் நூறு சதவிதம் இயற்கைப் பாதுகாப்பாகும். இயற்கைப் பாதுகாப்பு இருந்தால் தான் நம்மால் வாழ முடியும்.

கேள்வி : ஹிந்துமதத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களை வணங்குகிறோம். உண்மையில் இறைவன் ஒருவரே அல்லவா?

அம்மா : ஹிந்து மதத்தில் பல தெய்வங்கள் இல்லை ஹிந்து மதம் இறைவன் ஒருவரே என்று நம்புவது மட்டுமல்லாது அந்த இறைவனைத்தவிர இவ்வுலகில் வேறு எதுவுமே இல்லை. எனவும், எங்கும் நிறைந்திருக்கும் சைதன்யமே இறைவன் எனவும் கூறுகிறது. இறைவன் பெயருக்கும் உருவத்திற்கும் அப்பாற்பட்டவர். இருந்தாலும் பக்தனுக்கு அருள்புரிவதற்காக அவர் எந்த வடிவத்தையும் எடுக்கவல்லவர் எந்த பாவத்தை வேண்டுமானாலும் வெளிப்படுத்தவல்லவர். காற்று இளம் தென்றலாக வரலாம்; வேகமாக வீசலாம், புயல்காற்றாகவும் மாறலாம். அந்தக் காற்றையும் கட்டுப்படுத்தும் சர்வேஸ்வரனால் எந்த பாவத்தையும் மேற்கொள்ள முடியுமல்லவா? அவருடைய மகிமைகளை வர்ணிக்க யாரால் முடியும்? காற்றால் சலனமற்றிருக்கவும். வேகமாக வீசவும் முடிவது போல், நீரால் நீராவியாகவும், ஐஸ்கட்டியாகவும் மாற முடிவது போல் இறைவனால் சகுண பாவமும், நிர்குண பாவமும் மேற்கொள்ள முடியும் அவ்விதம் ஒரே இறைவன் சிவன், விஷ்ணு, கணபதி, முருகன், துர்க்கை, காளி, சரஸ்வதி என பல நாமங்களிலும், பல வடிவங்களிலும் ஆராதிக்கப்படுகிறார்.

ஒவ்வொருவரின் விருப்பங்களும் வேறுபட்டவை. அவர்களது பண்பாடு வளர்ந்த சூழ்நிலை போன்றவை மாறுபட்டவை. அவரவரின் விருப்பத்திற்கும், மனோபாவத்திற்கும் ஏற்ப இறைவனை எந்த வடிவிலும் வணங்கும் சுதந்திரம் ஹிந்து மதத்தில் உண்டு. இதனால் தான் ஹிந்து மதத்தில் இறைவனின் பல வடிவங்கள் தோன்றினவே அன்றி, அவை வெவ்வேறு தெய்வங்கள் அல்ல.

கேள்வி : மனித வாழ்வில் இறை நம்பிக்கையின் அவசியம் என்ன?

அம்மா : இறை நம்பிக்கை இல்லாமலும் வாழ முடியும். ஆனால், வாழ்வில் எதிர்பாராத துயரங்கள் வரும்போது மனம் தடுமாறாமல் உறுதியுடன் முன்னேற வேண்டுமெனில், நாம் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தே ஆக வேண்டும். அவருடைய பாதையைப் பின்பற்ற முன்வர வேண்டும்.

இறைவனை வணங்குவது, தெய்விக குணங்களை நம்மிடம் வளர்ப்பதற்காகவே ஆகும். இறைவனை வணங்காமலே அந்தக் குணங்களை நாம் பெற முடிந்தால், பின்னர் இறை நம்பிக்கை வேண்டும் என்ற அவசியமில்லை. இறைவனை நாம் நம்பினாலும், நம்பாவிடிலும் இறைவன் மெய்ப்பொருளாக எங்கும் நிறைந்திருக்கிறார். அந்த உண்மையை நாம் ஏற்றுக்கொண்டாலும், மறுத்தாலும் மெய்ப்பொருளுக்கு எந்தவிதக் குறைவும் ஏற்படுவதில்லை, புவிஈர்ப்பு சக்தி மாறாத உண்மையாகும். அதை நாம் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் அது இல்லாமல் போவதில்லை. அதை ஏற்க மறுத்துவிட்டு, உயரத்தில் இருந்து கீழே குதிக்கும் போது, ஏற்படும் விபத்தின் மூலம் அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை வரும், அவ்வளவுதான். எந்த உண்மையையும் ஏற்றுக்கொள்ள மறுப்பது என்பது, கண்களை மூடி, பகலை இரவாக்குவதற்கு நிகராகும். இறைவன் என்ற நிலையான மெய்ப்பொருளை ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை முறையாக அமைத்துக் கொள்வதன் மூலம் கஷ்டமின்றி வாழ்க்கையை நடத்த முடியும்.

கேள்வி :— மதமாற்றத்தைக் குறித்து அம்மாவின் அபிப்பிராயம் என்ன?

அம்மா : அது அவரவர் தீர்மானிக்க வேண்டிய விஷயமாகும். அது சரியா அல்லது தவறா என்று சொல்ல அம்மா விரும்பவில்லை. ஒரு கிறிஸ்தவரை கிறிஸ்தவராக வாழுமாறே அம்மா கூறுவேன். வெளிநாடுகளுக்குச் செல்லும்போது பலர், கிறிஸ்துவ மதம் வேண்டாம், இந்து மதத்தில் சேர வேண்டும் என்று சொல்வதுண்டு இம்முறை பாகிஸ்தானிலிருந்து வந்த ஒரு முஸ்லிம் பெண் ஹிந்து ஆக மாற வேண்டும் என்றாள். அம்மா அதற்குச் சம்மதிக்கவில்லை. எந்த மதத்தில் பிறந்தாரோ அதே மதத்தைப் பின்பற்றுமாறுதான் அம்மா கூறினேன். அம்மா யாரிடமும் மதம் மாறச் சொல்வதில்லை. தான் யார்? என்பதை அறிந்தால் போதும். அதற்கு முயலாமல் போவதுதான் முட்டாள்தனம்.

கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்துவின் மந்திரத்தைக் கொடுப்பேன். முஸ்லிம் குழந்தைகளுக்கு அவர்களுக்குத் தேவையான மந்திரத்தைக் கொடுப்பேன். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அன்பு, கருணை, இரக்கம் போன்ற குணங்கள் உள்ளவர்களாக வாழ்ந்தால் போதும். அவர்கள் மனநிம்மதியுடன் வாழ முடியும் என்றே அம்மா கூறுகிறேன். இதற்கு மதம் மாற வேண்டிய அவசியமில்லை.

உலகில் உள்ளவர்கள் எல்லாம் ஒரே அளவிலுள்ள செருப்பை அணிய வேண்டும். ஒரே அளவும், வடிவமைப்பும் உள்ள உடையை அணிய வேண்டும், ஒரே உணவை அருந்த வேண்டும் என்றெல்லாம் பிடிவாதம் பிடிப்பது நடைமுறைக்கு ஒவ்வாதது. ஒரே குருவை, ஒரே தலைவரை, ஒரே நூலை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பதும் அதுபோன்றது தான். பருவகாலத்திற்கும், வாழும் சூழ்நிலைக்கும், உடலுக்கும் ஏற்பக் குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் அணியும் உடையும். காலணிகளும் அமைகின்றன. ஒரு ஆன்மிகப் பாதையைப் பின்பற்ற ஆரம்பித்துவிட்டால் பின்னர் அதையே உறுதியாகப் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். பல பாதைகளைப் பின்பற்றுபவர்கள்

எதையும் அடைய முடியாது. எந்தப் பாதையாக இருந்தாலும் சரியான யோசனைக்குப் பிறகே அதைப் பின்பற்ற வேண்டும் என்றே அம்மா கூறுவேன்.

மதங்கள் மனிதனின் படைப்பாகும். இறைவன் ஒரு மதத்தையும் படைக்கவில்லை. ஸ்ரீராமரும், ஸ்ரீகிருஷ்ணரும், கிறிஸ்துவும் மதங்களை உருவாக்கவில்லை. ஒவ்வொரு காலத்திலும், வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த, வேறுபட்ட நிலையிலிருந்த மக்களை முன்னேற்றுவதற்கு அங்கங்கே தோன்றி அருளிய உபதேசங்களைப் பின்பற்றிய சீடர்களே பிற்காலத்தில் அவற்றை ஒவ்வொரு மதமாக உருவாக்கினர்.

மக்களின் கலாசாரங்களும், தேவைகளும் வேறுபட்டவையாக இருந்த காரணத்தால் பல மதங்கள் தோன்றின. ஒவ்வொரு மதமும் அதற்கே உரிய தனித்தன்மையுடன் திகழ்கிறது. பொருளற்ற மதம் எதுவும் இல்லை. அதே சமயம் மனிதகுலம் முழுவதற்கும் ஏற்றதாகத் திகழும் மதம் எதுவுமே இல்லை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டால், அனைவரையும் "எனது" மதத்தில் சேர்க்க வேண்டும் என்ற பகுத்தறிவற்ற சிந்தனை நம் மனதிலிருந்து அடியோடு நீங்கிவிடும்.

ஆன்மிகமே மதத்தின் உயிர்நாடி, ஆசாரங்களும், நம்பிக்கையும் அதன் மேல்தோலாகும். ஆன்மிகம் என்பது ஒவ்வொருவரும் "நான் யார்?" என்பதை உணர்வதாகும். தன்னை அறிபவனே உண்மையான மத நம்பிக்கை உள்ளவன். தன்னை அறியும் ஆன்மிகப் பாதையில் முன்னேறுபவன் மத ஆசாரங்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடுகிறான். தன்னை முழுமையாக அறியும் போது, தானும் மெய்ப்பொருளும் ஒன்றே என்றும், அதிலிருந்து மாறுபட்டதாக இப்பிரபஞ்சத்தில் எதுவுமே இல்லை என்றும் அறிகிறான். எல்லா வேறுபாடுகளும், எல்லா மாறுபட்ட சிந்தனைகளும், பயமும் அங்கே நீங்கி விடுகின்றன. இதைக்கூறும்போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு சர்க்கஸ் கம்பெனியில் புலி இறந்துவிட்டது. புதிய புலி ஒன்றைத் தேடிப் பல இடங்களில் அலைந்தனர். ஆனால் கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் ஒரு மனிதன் வேலை தேடி சர்க்கஸ் கம்பெனிக்கு வந்தான். அதன் நிர்வாகி அவனிடம், "இங்கே எல்லா வேலைகளுக்கும் தேவையான வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். இப்போது வேலை காலி இல்லை" என்றார். "எந்த வேலையாக இருந்தாலும் பரவாயில்லை நான் செய்கிறேன். என்னைக் கைவிட்டுவிடாதீர்கள்" என அவன் கெஞ்சினான். "அப்படியானால் சர்க்கஸ் கூடாரத்திலிருந்த ஒரு புலி இறந்துவிட்டது. புலி வேடம் அணியத் தயாரா?" என நிர்வாகி அவனிடம் கேட்டார். ஏழ்மையின் காரணத்தால் அவன் உடனே அதற்கு சம்மதம் தெரிவித்தான். அந்த மனிதனுக்குப் புலித்தோல் அணிவித்தனர். புலியைப் போல் நடந்து கொள்ள அவனுக்குப் பயிற்சி அளித்தனர். சர்க்கஸ் நடக்கும் வேளையில் அவன் கழுத்தில் கயிற்றைக் கட்டிக் கூட்டிச் செல்வார்கள். நிகழ்ச்சி முடிந்ததும் ஒரு மூலையில் கட்டிப் போடுவார்கள். ஒருநாள் புலியை ஒரு சிங்கத்தின் அருகில் கட்டிப் போட்டார்கள். புலிக்கு மிக அருகில் சிங்கம் நிற்கிறது. சிங்கம் தன்னையே நோக்கியவாறு நடப்பதைக் கண்ட புலி நடுங்கியது. சிங்கம் நடப்பதை நிறுத்திவிட்டு தன்னையே பார்க்கிறது. எந்த நிமிடத்திலும் அது தன் மீது பாயலாம் என்று புலி நம்பியது. எது எப்படி இருந்தாலும், சிங்கத்திற்கு இரையாவதற்கு முன் ஒருமுறை இறைவனிடம் பிரார்த்திக்கலாம், இனி இறைவனால் மட்டுமே என்னைக் காப்பாற்ற முடியும் என்று சிந்தித்த புலி வேடமணிந்த மனிதன் கண்களை மூடி, கைகளைக் கூப்பி, தரையில் விழுந்து நமஸ்கரித்தான். அவன் மனம் சிங்கம் தன்மீது பாயும் நிமிடத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

பிரார்த்திப்பதற்கு இடையிலும் மனதில் பயம் அதிகரித்து வந்தது. அதனால் நமஸ்கரித்த நிலையிலேயே இடையிடையே ஓரக்கண்ணால் சிங்கத்தின் அசைவுகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு சிங்கம் நடக்கவில்லை. அது தன்மீது பாய்வதற்குத் தயாராகிறதோ?

பயத்துடன் சிங்கத்தைப் பார்த்த அவன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். சிங்கமும் தரையில் நமஸ்கரித்தபடியே ஓரக்கண்ணால் இவனைப் பார்த்துக் கொண்டிருந்தது. சிங்கம் படுத்திருந்த விதத்தையும், அதன் நோட்டத்தையும் கண்டபோது அது ஒரு மிருகமென அவனுக்குத் தோன்றவில்லை. அது ஒரு மனிதனின் நோட்டமாகவே அவனுக்குத் தோன்றியது. நன்றாகக் கூர்ந்து கவனித்தான். அப்போது அவனுக்கு, அது சிங்கமல்ல, தன்னைப் போலவே சிங்க வேடம் அணிந்த ஒரு மனிதன் தான் என்பது புரிந்தது. சிங்கத்திற்கும் உண்மை புரிந்தது. இருவரும் ஓடிச்சென்று கட்டிப் பிடித்துக்கொண்டனர். எப்போதும் தன் மீது பாயும் என்று பரஸ்பரம் பயந்திருந்த அவர்கள் உண்மையைப் புரிந்துகொண்ட உடனேயே பயத்தைத் துறந்து அன்புடன் ஆலிங்கனம் செய்தனர்.

இறைவனிடம் அனைத்தையும் சமர்ப்பித்துவிட்டு பணிவுடன் நமஸ்கரித்த போதுதான் அவர்கள் உண்மையை உணர்ந்தனர். இறைவனிடம் சரணடைவதன் மூலமும், பணிவின் மூலமும் மட்டுமே நமக்கு நமது உண்மையான சொரூபத்தைப் புரிந்து கொள்ள முடியும். பிறரைப் பற்றிய நமது கருத்துக்கள், முடிவுகள் முதலியவற்றை அடியோடு நீக்கும்போது அவரை நம்மால் மனிதராகக் காண முடியும். அத்துடன் பயம் நீங்கும்.

நாம் அனைவரும் ஒரே மெய்ப்பொருளே. அது சாந்தியாகும், அன்பாகும். அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றே. இங்கே பயம், வெறுப்பு, போட்டி ஆகியவை தேவையே இல்லை. வேறுபாடுகள் எல்லாம் மேல்மட்டத்தில் காணப்படுபவை. மெய்ப்பொருளை அறிந்தவர் மனதில் வேறுபாடுகள் எதுவும் இல்லை. வேறுபாடுகள் காணப்படும் இடத்தில் ஆத்மானுபூதி இல்லை. தன்னைத் தான் அறிவதற்கேற்ப மனிதனின் மனம மதமெனும் பிணைப்பிலிருந்து விடுபடுகிறது. மதத்தோடு பிணைந்திருத்தல் என்பது அக்கரையை அடைந்த பிறகும் இறங்காமல் படகிலேயே அமர்ந்திருப்பது போன்றதாகும். படகு என்பது நாம் நதியைக் கடக்க உதவும் ஒரு கருவி மட்டுமே. அதுபோல் மதமும், அதில் கூறப்படும் ஆசார,

அனுஷ்டானங்களும் இறைவனை அடைவதற்கான கருவிகள் மட்டுமே. எப்போதும் அதையே இறுகப் பிடித்துக்கொண்டிருக்கக் கூடாது. மதம் எதுவாக இருப்பினும், ஆன்மிக தத்துவங்களைப் புரிந்துகொண்டால் அந்த மதத்தை அனுஷ்டித்தவாறே யாரும் இலட்சியத்தை அடைய முடியும். உதாரணமாக கிருஷ்ணனை வணங்கினாலும், கிறிஸ்துவை வணங்கினாலும். அல்லாவை வழிபட்டாலும் அனைத்திலும் அடிப்படையில் பக்தி மார்க்க தத்துவமே பின்பற்றப்படுகிறது. நாம, ரூபங்கள் முக்கியம் அல்ல, இதயத் தூய்மையும், சமர்ப்பண மனோபாவமுமே முக்கியம்.

மெய்ப்பொருளை அறிவதற்கு ஒவ்வொருவருக்கும் தான் விரும்பும் பாதையைப் பின்பற்றும் உரிமையும், சுதந்திரமும் உண்டு. அதே சமயம் விவேகத்துடன் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அது அறிவை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அறியாமை மற்றும் தவறாகப் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் பாதையைத் தேர்ந்தெடுப்பது கூடாது. அதற்கு முதலில் அவரவர் பிறந்து, வளர்ந்த மதத்தைப் பற்றிய அறிவும், ஆன்மிகம் என்றால் என்ன என்ற அறிவும் தேவை. ஆன்மிகம் என்றால் என்ன என்று புரிந்துகொண்டால் மதத்தின் புற ஆசாரங்களுக்கு நாம் அளவற்ற முக்கியத்துவம் அளிக்க மாட்டோம். மதத்தைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது முக்கியமல்ல, மதம் கூறும் சத்தியம், தர்மம், அன்பு, கருணை, அஹிம்சை, தியாகம் போன்ற விலைமதிப்பற்ற குணங்களை வாழ்வில் பின்பற்றுவதற்கே நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மதத்தைப் பின்பற்றுபவர்களின் குணமும், நன்மையுமே முக்கியம். இதை மறந்துவிட்டு, மதத்தில் ஒருவரைச் சேர்த்ததால் மட்டும் யாருக்கும் எந்தவிதப் புண்ணியமும் கிடைக்கப் போவதில்லை. "என்னை பிரபு, பிரபு என்று அழைப்பவரல்ல,

என் உபதேசங்களை வாழ்வில் பின்பற்றுபவர்களே எனக்கு விருப்பமானவர்" என்று கிறிஸ்து சொன்னதை நாம் இங்கே நினைவுகூர வேண்டும்.

ஒருவரின் நம்பிக்கையைக் குலைப்பது மிகப்பெரிய பாபமாகும். ஒருவரின் நம்பிக்கையைக் குலைத்தால் பின் அவரிடத்தில் மற்றொரு நம்பிக்கையை வளர்ப்பது எளிதான செயலல்ல. தூண்டுதலாலோ, பேராசையாலோ ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறும் பலரால் பழைய நம்பிக்கைகளை முற்றிலும் கைவிட முடிவதில்லை. அவர்கள் மனதில் குற்ற உணர்வு உண்டாகும். பழைய மத நம்பிக்கை குலைந்தும், புதிய மத நம்பிக்கை உறுதியற்றும் இருக்கும். அது மனதளவில் பாதுகாப்பின்மை உணர்வை ஏற்படுத்தும், ஒரு குடும்பத்திலிருந்து இருவர் மதம் மாறவும், மற்றவர்கள் பழைய மதத்தையே பின்பற்றவும் செய்யும்போது குடும்பங்கள் சிதைந்து போகின்றன. அனைத்திற்கும் மேலாக ஒரு மதப்பிரிவு பரவலாக மதமாற்றத்திற்கு முயற்சி செய்யும் போது, மற்றொரு மதப்பரிவு பரம்பரையாக வந்து தனது மத நம்பிக்கையைக் காக்க முயற்சிக்கும். இது பெரும்பாலும் போராட்டத்திற்கு வழிவகுக்கும். இத்தகைய பல பிரச்சனைகள் மதமாற்றத்தால் ஏற்படும்.

மெய்ப்பொருளை அறிவதற்கான பாதைகள் என்ற நோக்கத்துடன் ஆரம்பித்த மதங்கள் பின்னர் இயக்கங்களாக மாறியபோது, இயக்கத்தின் வலிமையைக் காப்பதில் கருத்துச் செலுத்தப்பட்டது. மதத்தின் நோக்கத்தைப் புரிந்துகொள்வதில் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. இயக்கத்திற்கு நடைமுறை நியதிகள் உண்டு. நம்பிக்கைகளும், ஆசாரங்களும் உண்டு. சிலருக்குத் தங்கள் அதிகாரம், தலைமை ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு உரிய ஸ்தாபனங்களாக இயக்கங்கள் மாறிவிட்டன. அவர்கள் மதத்தின் தத்துவங்களுக்குத்

தங்கள் விருப்பப்படி விளக்கமளித்தனர். பெரும்பாலும் அவற்றைப் பிறர்மீது திணிக்க முயன்றனர். இவ்வாறு மனிதனை முக்தியை நோக்கி அழைத்துச் செல்வதற்காகத் தோன்றிய மதங்கள் அவனைப் பிணைக்கும் சங்கிலியாக மாறிவிட்ட காட்சியை நாம் காண நேரிட்டது. உலகில் சாந்தியையும், சமாதானத்தையும் வளர்க்க வேண்டிய மதங்களே உலகில் ஏற்பட்ட பல போருக்கும், போராட்டத்திற்கும் காரணமாக அமைந்தன.

நாம் எந்த மதத்தை நம்புகிறோமோ அதில் இருந்தவாறே ஆன்மிகத்தில் முன்னேற முயற்சி செய்ய வேண்டும். பிறரையும் அவர்கள் விருப்பப்படி நடந்து கொள்ள அனுமதிக்க வேண்டும். அதுதான் தார்மிகமான முறை. கிறிஸ்து, "உன்னைப் போல் உன் அயலானையும் நேசிக்க வேண்டும்" என்றே உபதேசித்தார். அதை வாழ்வில் பின்பற்றினால் சமூகத்தில் உள்ள பிரச்சனைகள் பலவும் நீங்கிவிடும். அயலானான கிறிஸ்தவனை மட்டுமே நேசிக்க வேண்டும் என்று கிறிஸ்து கூறவில்லை. அயலான் என்பதில் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவார்கள். இதைப் புரிந்துகொள்ளும் அளவு பரந்த மனம் இல்லையெனில் மதத்தால் பெறும் பயன்தான் என்ன? நாம் உலகிலிருந்து எதை எதிர்பார்க்கிறோமோ அதுபோல் பிறரும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அனைவரும் ஒருதாய்மக்கள் என்று அறிய வேண்டும். அப்போது பரஸ்பர வெறுப்பைக் கைவிட முடியும். எல்லா வெறுப்பையும் துறந்து பரஸ்பரம் ஆலிங்கனம் செய்ய முடியும். நாம் மதங்களின் இதயமாக உள்ள நோக்கத்தை அறிந்து, அன்பு, ஒற்றுமை, பரஸ்பர மரியாதை எனும் புதுயுகத்தை நோக்கிக் காலெடுத்து வைக்கவே இனி முயற்சிக்க வேண்டும்.

கேள்வி :பிற மதங்களை விட ஹிந்துமதத்தின் தனிச்சிறப்பாகத் திகழ்வது எது?

அம்மா :ஹிந்துமதம் அனைத்திலும் தெய்வீகத்தை தரிசிக்கிறது. அனைவரையும் இறைவடிவங்களாகக் காண்கிறது. மனிதனும், இறைவனும் இரண்டல்ல, ஒன்றே. ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் தெய்விகத்தன்மை இரண்டறக் கலந்துள்ளது. சுயமுயற்சியால் எவரும் அதை அனுபூதியில் அறிய முடியும் என்று ஹிந்துமதம் கற்பிக்கிறது. படைப்பும், படைத்தவனும் இரண்டல்ல, படைப்பாக ஆகியிருப்பவனும் இறைவனே. இந்த அத்வைத உண்மையை அறிவதுதான் வாழ்வின் மேலான குறிக்கோள் என்று ஹிந்துமதம் கூறுகிறது. நாமும், பிரபஞ்சமும். இறைவனும் ஒன்றே என்ற இந்த தரிசனமே இந்துமதத்தின் உயிர்நாடி, எல்லாம் இறைவனே என்றாலும், அந்த உணர்வு நமக்கு முழுமையாக ஏற்படாத காரணத்தால் சுற்றிலும் உள்ளதைப் பலவாகக் கருதுகிறோம். சிலவற்றிடம் விருப்பமும், சிலவற்றின் மீது வெறுப்பும் தோன்றுகிறது. இதனால் இன்பமும், துன்பமும் வாழ்வின் இயல்பாக மாறுகிறது. ஆனால் நாம் நமது உண்மையான சொரூபத்தை அறியும் போது, ''நானும், நீயும் வெவ்வேறானவர்கள்'' என்ற வேற்றுமை உணர்வு இருக்காது. எல்லாம் இறைவனே என்பது அனுபூதியாகும். அதன்பின் ஆனந்தம் மட்டுமே எஞ்சி நிற்கும். இந்த அனுபூதியைப் பெற ஒவ்வொருவரின் மனப் பண்பாட்டிற்கும் ஏற்பப் பல வழிகளை ஹிந்துமதம் உபதேசிக்கிறது. வழிகளும், ஆசாரங்களும், அனுஷ்டானங்களும் இத்தனை அதிகமுள்ள வேறு மதம் ஏதாவது இருக்கிறதா என்பது சந்தேகமே.

களிமண்ணில் கழுதை, குதிரை, எலி, சிங்கம் எனப் பல வடிவங்களை உருவாக்கலாம். அவை பெயராலும், வடிவாலும் வேறுபட்டிருந்தாலும் உண்மையில் அவையனைத்தும் களிமண்ணே ஆகும். அந்தப் பெயர்களுக்கும், வடிவாலும் வேறுபட்டிருந்தாலும் உண்மையில் அவையனைத்தும் களிமண்ணே ஆகும். அந்தப் பெயர்களுக்கும், உருவங்களுக்கும் அடிப்படையாக உள்ள களிமண்ணைக் காணும் பார்வை நமக்குத் தேவை, அவ்வளவுதான். இதுபோல், நாமரூபங்களால் நிறைந்த பிரபஞ்சத்தைப் பலவாகக் காணும் பார்வை மாற வேண்டும்.

உண்மையில் மெய்ப்பொருளே இவை அனைத்துமாக ஆகியுள்ளது. அதனால் ஹிந்துமதத்தில் எல்லாம் இறைவனே. இதனால் இறைவனல்லாத பொருள் எதுவும் இல்லை. மிருகங்களையும் பறவைகளையும், ஊர்வனவற்றையும், மரங்களையும், செடிகளையும், அனைத்தையும், கொடிய விஷமுள்ள நாகத்தைக் கூட இறைவனாகக் கண்டு அன்பு செலுத்தவும், சேவை செய்யவுமே ஹிந்துதர்மம் கற்பிக்கிறது.

உடலில் உறுப்புகள் நம்மிலிருந்து வேறுபட்டவை அல்லவே! அதுபோல், இந்தப் பிரபஞ்சம் நம்மிலிருந்து வேறுபட்டது அல்ல என்பதை நாம் அனுபூதி நிலையை அடையும் போது உணர்வோம். 'நான் உடல்' என்னும் எண்ணம் பரந்ததாகிறது. அதில் அனைத்தும் அடங்குகிறது. காலின் விரல் நுனியில் முள் குத்தும் போது ஏற்படும் வலியை நாம் உணர்வது போல், மெய்பொருளை அறிந்தவர்கள் பிறரது துக்கத்தைத் தங்கள் துக்கமாக உணர்கிறார்கள். தீயின் சூடு போல், நீரின் குளிர்மை போல் கருணை அவர்களின் இயல்பாக மாறுகிறது. பிறருக்கு ஆறுதல் அளிப்பது என்பது அவர்களுடைய இயல்பான குணமாக மாறுகிறது. நமது விரல் நம் கண்ணைக் குத்திவிட்டால் நாம் விரலின் செயலை மன்னித்து, கண்ணைத் தடவிக் கொடுப்போம். ஏனெனில் விரலும், கண்ணும் நம்மிலிருந்து வேறுபட்டவை அல்ல. அதுபோல், அனைவரையும் தன்மயமாகக் காணும் நிலைக்கு ஒவ்வொரு மனிதனையும் உயர்த்துமாறே இந்து மதம் கூறுகிறது. உடலே 'நான்' என்றுள்ள உணர்வை உலகளவு பரந்ததாகச் செய்து, தானும், இறைவனும் ஒன்றென்ற அனுபூதி நிலையை அடைவதால் ஒரு மனிதன் இறையனுபூதி பெறுகிறான். இவ்வாறு தானும் இறைவனும் இரண்டல்ல. ஒன்றே என்ற அனுபூதி நிலையை அடைவதற்குரிய வழியை ஹிந்துதர்மம் உபதேசிக்கிறது. இந்நிலையை அடைவதற்கு கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம் போன்ற பல வழிகளை ஹிந்துமதம் காட்டித் தருகிறது.

ஹிந்துமதத்தை, "ஸநாதன தர்மம்" என்றே அழைக்கிறோம். ஏனெனில், அது எந்த தேசத்திற்கும், காலத்திற்கும் பொருந்துவதாகும். அனைவரது மேன்மைக்கும் உரிய நிலையான உண்மைகளை அது கற்பிக்கிறது. அனைவரும் மேன்மை நிலையை அடைவதே ஹிந்துதர்மத்தின் குறிக்கோளாகும். அங்கே பிரிவுக்கும், குறுகிய மனப்பான்மைக்கும் இடமில்லை. "அஸதோ மா ஸத்கமய (பொய்மை நிலையிலிருந்து மெய்யான நிலைக்கு அழைத்துச் செல்வாயாக) தமஸோ மா ஜ்யோதிர் கமய (அறியாமை இருளிலிருந்து ஞான வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்வாயாக) ம்ருத்யோர் மா அம்ருதம் கமய (மரணத்திலிருந்து இறவா பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்வாயாக) லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து (அனைத்து உலகங்களும் சுகமாக இருக்கட்டும்)" இவையே ரிஷிகள் உலகிற்கு நல்கியுள்ள மந்திரங்கள். இவற்றில் எதையும், எவரையும் வேறாகக் காணும் சிந்தனையின் ஒரு அணுவைக் கூடக் காண முடியாது.

ஏகமாக, பரமமாக விளங்கும் மேலான மெய்ப்பொருளை தரிசித்தவர்கள் ரிஷிகள். அவர்கள் கூறும் வார்த்தைகள் சத்தியமாகின்றன. தந்தையின் கேள்விக்கு, "இந்தத் தூணிலும் இறைவன் வசிக்கிறான்" என்று பிரகலாதன் பதிலளித்தான். அது உண்மையாயிற்று; தூணிலிருந்து இறைவன் வெளிப்பட்டார். இதனால்தான் ரிஷிகளின் வார்த்தைகள் சத்தியமாகின்றன என்று சொல்லப்படுகிறது. சாதாரணமாக தாயின் கர்ப்பத்தின் மூலமே புதிய சிருஷ்டி உண்டாகிறது. ஆனால், ரிஷிகளின் சங்கல்பமே புதிய சிருஷ்டியாக வடிவெடுக்கிறது. அதாவது அவர்கள் கூறுவது மெய்யாகிறது. முக்காலங்களையும் அறியவல்ல அவர்களின் ஒவ்வொரு வாக்கும், எதிர்காலத் தலைமுறையையும் கண்முன்னால் கண்டுகொண்டு கூறுபவையாகும். குளிர்சாதனப் பெட்டி பொருள்களைக் குளிர்ச்சியடையச் செய்கிறது. ஹீட்டர் சூடாக்குகிறது. விளக்கு வெளிச்சம் தருகிறது. மின்விசிறி காற்று தருகிறது. இவற்றை எல்லாம் இயங்கச் செய்வது ஒரே மின்சாரம் தான்.

அவை இயங்கும் முறையும், பயனும், விலையும் மாறுபடுவதால், ஒன்றின் மூலம் செயல்படும் மின்சாரமானது, மற்றொன்றின் மூலம் செயல்படும் மின்சாரத்தை விடச் சிறந்தது என்றோ, மோசமானது என்றோ கூறுவதில் பொருள் இருக்கிறதா? கருவிகள். பலவெனினும், அவற்றை இயக்கும் மின்சாரம் ஒன்றே என்பதை அறிந்துகொள்வதற்கு விஞ்ஞானத்தைப் படித்திருக்க வேண்டும். அந்த விஷயத்தில் செயல்முறை பயிற்சியும் இருக்க வேண்டும். அதுபோல், பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் வெளிப்பார்வைக்குப் பலவாகத் தோன்றினாலும், அவை அனைத்திலும் வசிக்கும் சைதன்யம் ஒன்றே ஆகும். அதைக் காண்பதற்கான ஞானக்கண்ணை சாதனையின் மூலமே பெற வேண்டும். அதை அனுபூதியில் அறிந்த ரிஷிகள், தாங்கள் தரிசித்த உண்மையை வருங்காலத் தலைமுறைகளுக்கு அளித்துச் சென்றனர். அந்த ஆர்ஷதர்சனமே பாரதத்தின் சாதாரண மக்களுடைய வாழ்க்கை முறைக்கு ஒரு வடிவம் அளித்தது. அந்த தர்மத்தைப் பின்பற்றியவர்களைக் குறிப்பிடும் பொதுவான பெயரே ஹிந்து என்பதாகும். உண்மையில் அது ஒரு மதமல்ல. மதமென்றால் அபிப்பிராயம் என்பதே பொருளாகும்.

ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு தேசத்திலும் வாழ்ந்திருந்த குருமார்கள் தங்கள் சிஷ்யர்களுக்கு உபதேசித்த ஆன்மிகப் பாதைகளையே மதங்கள் என்று நாம் சாதாரணமாகச் சொல்கிறோம். ஆனால், ஹிந்துதர்மத்திற்கு ஒரு குறிப்பிட்ட குருவோ அல்லது ஒரு மதஸ்தாபகரோ இல்லை. இறைவனை இந்தப் பெயரால் அழைக்க வேண்டுமென்றோ, இறைவனை அனுபூதியில் அறிய இந்தப் பாதையைப் பின்தொடர வேண்டுமென்றோ ஹிந்து தர்மம் கட்டளையிடவில்லை. பல காலகட்டங்களில் வாழ்ந்திருந்த, மெய்ப்பொருளைத் தரிசித்த பல ரிஷிகள் தங்களுடைய அனுபவங்களின் அடிப்படையில் அனைவரின் நன்மையையும் கருத்தில் கொண்டு உபதேசித்த தத்துவங்களும், பாதைகளுமே ஸநாதனதர்மமென்ற அல்லது ஹிந்துமதம் என்ற பெயரில் பிரசித்தி

அடைந்திருக்கிறது. எந்தக் காலத்திற்கும், எந்த நேரத்திற்கும், எந்த மனிதனுக்கும் தேவையானது அதில் இருக்கிறது. ஆகவே, ஏதாவது ஒரு மனிதன் உருவாக்கிய மதமல்ல ஹிந்துதர்மம், அது ஏதாவது ஒரு நூலில் அடங்கும் தத்துவமல்ல, அனைத்தும் நிறைந்த வாழ்க்கைக் கோட்பாடாகும் அது.

கேள்வி :விக்கிரக ஆராதனையின் தத்துவம் என்ன?

அம்மா :ஹிந்துக்கள் உண்மையில் விக்கிரகத்தை ஆராதிக்கவில்லை. எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளையே விக்கிரகத்தின் மூலம் அவர்கள் ஆராதிக்கிறார்கள். தந்தையின் சித்திரத்தைக் காணும் மகன் தனது தந்தையை நினைக்கிறானே அன்றி, அதை வரைந்த ஓவியனை நினைப்பதில்லை. காதலி அளித்த பேனாவையோ, கைக்குட்டையையோ காணும் போது காதலன், தனது காதலியை நினைக்கிறானே அன்றி, அந்தப் பொருள்களை நினைப்பதில்லை. அவற்றிற்குப் பதிலாக வேறு எதை வேண்டுமானாலும் தருகிறேன் என்று சொன்னாலும் அவன் அவற்றைக் கொடுக்க முன்வர மாட்டான். காதலி தந்த பேனா, வெறும் பேனா அல்ல, கைக்குட்டை வெறும் கைக்குட்டை அல்ல, அவற்றில் அவன் தனது காதலியையே காண்கிறான். சாதாரணமான காதலால் வாலிபன் ஒருவனுக்கு இப்படிப்பட்ட மனோபாவம் வருமெனில், சர்வேச்வரனை நினைவுறுத்தும் விக்கிரகம் பக்தனுக்கு எவ்வளவு உயர்ந்ததாக இருக்கும்? விக்கிரகம் பக்தனைப் பொறுத்தவரை வெறும் சிலையல்ல. அது சைதன்யம் ததும்பும் மூர்த்தியாகும்.

சிலர், "திருமணம் என்பது தாலி கட்டும் வெறும் சடங்கே அல்லவா?" என்று சொல்லக்கூடும். உண்மைதான் சாதாரண மதிப்புள்ளதொரு மஞ்சள் கயிற்றையே அந்தச் சமயத்தில் மணமகன் மணமகளின் கழுத்தில் கட்டுகிறான். ஆனால் அந்தக் கயிற்றிற்கும், அந்த முகூர்த்தத்திற்கும் நாம் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறோம். இல்லற வாழ்வின் அஸ்திவாரத்தை உருவாக்கும் முகூர்த்தமாகும் அது, அந்தச்

சடங்கிற்கு நாம் கயிற்றிற்குரிய அற்பமான மதிப்பைக் கொடுப்பதில்லை. இல்லற வாழ்க்கை முழுவதற்குமான மதிப்பைக் கொடுக்கிறோம். அற்பமான மதிப்பைக் கொடுப்பதில்லை, இல்லற வாழ்க்கை முழுவதற்குமான மதிப்பைக் கொடுக்கிறோம். அதுபோல் விக்கிரகத்தின் மதிப்பு, வெறும் கல்லுக்கு உரிய மதிப்பல்ல, அது விலைமதிப்பற்றதாகும். சர்வேச்வரனுக்குச் சமமான இடத்தை அதற்கு அளிக்கிறோம். விக்கிரகத்தை வெறும் சிலையாக மட்டும் காண்பது அஞ்ஞானமாகும். இதன் மூலமாக "நான் இறைவனை வணங்குகிறேன்" என்ற சங்கல்பத்துடன் தான் நாம் பூஜை செய்ய ஆரம்பிக்கிறோம்.

எங்கும் நிறைந்துள்ள இறைவனின் சைதன்யத்தை, எந்தவிதமான சின்னத்தின் உதவியும் இன்றி வணங்குவது என்பது சாதரண மனிதனுக்கு இயலாத செயல். பக்திபாவத்தை வளர்க்கவும், மனதை ஒரு முகப்படுத்தவும் விக்கிரகம் மிகவும் உதவுகிறது. விக்கிரகத்திற்கு முன்னால் நின்று, கண்களை மூடியே நாம் பிரார்த்திக்கிறோம். அப்படி மனதை உள்முகமாக்கவும், நமது அகத்தின் உள்ளே இருக்கும் சைத்தன்யத்தை விழிப்புறச் செய்யவும் விக்கிரம் உதவியாக இருக்கிறது.

அத்துடன், நாம் இதன் அடிப்படைத் தத்துவத்தையும் அறிந்திருக்க வேண்டும். வளையலும், தோடும், கழுத்தணியும், மோதிரமும் தயாரிக்கத் தங்கம் பயன்படுகிறது. அதுபோல, வடிவங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது ஒரே இறைவனே ஆகும். பன்மையில் ஒருமையைக் காண வேண்டும். சிவனென்றாலும், விஷ்ணு என்றாலும், முருகன் என்றாலும், அவற்றில் ஒருமையைத் தரிசிக்க வேண்டும். எல்லா வடிவங்களும் ஒரே இறைவனின் பலவித பாவங்களே என்பதை அறிய வேண்டும். மக்கள் பல்வேறு மனோபாவனைகளைக் கொண்டவர்களாக இருப்பதால் தான் பல வடிவங்களை வணங்குகின்றனர். இவற்றில் தங்களுக்கு விருப்பமான வடிவத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது. கண்ணாடியில் நம்முடைய முகத்தைத்

தெளிவாகக் காண வேண்டுமெனில், அதில் படிந்துள்ள தூசியையும், கரியையும் நன்றாக துடைத்து நீக்க வேண்டும். அதுபோல், மனதில் படிந்திருக்கும் அழுக்குகளை (வாசனைகளை) துடைத்து நீக்கினால் தான், அங்கு இறைவனைத் தரிசிக்க முடியும். மனதிலுள்ள அழுக்கை நீக்குவதற்கும், மனதை ஒருமுகப் படுத்துவதற்கும் உதவுவதாற் தான் விக்கிரக ஆராதனையும் பிற ஆசாரங்களையும் பின்பற்றுமாறு சனாதன தர்மத்தில் நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். சனாதன தர்மத்தைப் பின்பற்றும் நாம் இறைவனை வெளியில் தேடவில்லை. நமது உள்ளத்தில் தேடுகிறோம். உள்ளத்தில் இறைவனைத் தரிசிக்க முடிந்தால் எங்கும், எதிலும் அவரைத் தரிசிக்க முடியும்.

உண்மையில் இறைவனுக்கு அகம், புறம் என்பது இல்லை, எங்கும் நிறைந்த சைதன்யமாக அவர் திகழ்கிறார். நமக்கு 'நான்' என்கிற உடலுணர்வு இருக்கும் காரணத்தால் தான், அகம், புறம் என்று தோன்றுகிறது. இப்போது நம்முடைய மனம் புறத்தில் சஞ்சரிக்கிறதே அன்றி, அகத்தில் இல்லை. பல பொருள்களிலும், அவற்றின் மீது கொண்ட பற்றுதலிலும் பின்னிப் பிணைந்திருக்கிறது. அத்தகு மனதை திரும்பவும் நம் அகத்திற்குள்ளே திருப்பிக் கொண்டுவந்து, நம்முள்ளே இருக்கும் இறைவனின் சைத்தன்யத்தை விழிப்புறச் செய்வதற்காகவே விக்கிரக ஆராதனை செய்கிறோம்.

கேள்வி: விக்கிரக ஆராதனையைச் சுட்டிக் காட்டி, சிலர் ஹிந்துமதத்தை இழிவாகப் பேசுகிறார்களே? இதில் பொருள் இருக்கிறதா?

அம்மா : எதைக் கருத்தில் கொண்டு அவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. ஒருவிதத்தில் இல்லாவிட்டால், மற்றொரு விதத்தில் விக்கிரக ஆராதனை எல்லா மதங்களிலும் பின்பற்றப்படுகிறது. கிறிஸ்துவ மதத்தில் உண்டு, இஸ்லாம் மதத்தில் உண்டு, புத்த மதத்தில் உண்டு. கிறிஸ்துவ மதத்தில்

பாயஸம் போன்றவற்றை நைவேத்தியமாகப் படைப்பதில்லை. ஆயினும் அப்பத்தில் கிறிஸ்துவின் உடலையும், வைனில் கிறிஸ்துவின் இரத்தத்தையும் கண்டு சமர்ப்பிக்கிறார்கள். ஹிந்துக்கள் கற்பூர ஆராத்தி செய்கிறார்கள் என்றால், கிறிஸ்துவ மதத்தில் மெழுகுவர்த்தி ஏற்றுகிறார்கள். அவர்கள் சிலுவையை தியாகத்தின் சின்னமாகக் காண்கிறார்கள். கிறிஸ்துவின் வடிவத்தின் முன்னால் முழந்தாளிட்டுப் பிரார்த்திக்கிறார்கள். முஸ்லிம் மதத்தில் மக்காவைப் புனிதமான இடமாகக் கருதி அது உள்ள திசையை நோக்கி வணங்குகிறார்கள். காபாவுக்கு முன்னால் அமர்ந்து இறைவனின் குணங்களைச் சிந்தித்துப் பிரார்த்திக்கிறார்கள். இத்தகைய பிரார்த்தனைகள் எல்லாம் நம்மிடமுள்ள நல்ல குணங்களை விழிப்புறச் செய்வதற்காகவே ஆகும். அ, ஆ, இ, ஈ என்று எழுத்துக்களை படிப்பது பின்னர் வார்த்தைகளைப் படிப்பதற்காகவே ஆகும். ஏ, பி, ஸி, டி என்று படிப்பது, ஆங்கில வார்த்தைகளைப் படிப்பதற்காகவே ஆகும். அதுபோல் இப்படிப்பட்ட ஆராதனைகள் எல்லாம் இறைவனின் குணங்களை நாம் பெறுவதற்காகவே ஆகும்.

கேள்வி : விக்கிரகத்தை ஆராதிப்பதை விட, அதை உருவாக்கிய சிற்பியைப் போற்றுவதல்லவா பொருத்தமாகத் தோன்றுகிறது?

அம்மா : ஒரு கட்சியின் கொடியைக் காணும் போது, அதைத் தைத்த தையல்காரரையா வணங்குகிறோம்? அல்லது அந்தத் துணியை நெய்த நெசவாளியை வணங்குகிறோமா? அல்லது துணியை நெய்வதற்குத் தேவையான பருத்தியைப் பயிர் செய்த விவசாயியை வணங்குகிறோமா? யாரும் இவர்களை நினைப்பது கூட இல்லை. நமது நினைவில் அந்தக் கட்சியின் நினைவே வருகிறது. அதுபோல், விக்கிரகத்தைக் காணும் போது அதை உருவாக்கிய சிற்பியை நினைக்காமல், இப்பிரபஞ்சத்தை உருவாக்கிய சிற்பியான இறைவனையே நாம் நினைவு கூர்கிறோம். சிற்பிக்கு விக்கிரகத்தை உருவாக்குவதற்கான தூண்டுதலும், திறமையும் எங்கிருந்து கிடைத்ததோ அந்த சக்தியே

இறைவனாகும். விக்கிரகத்தை உருவாக்க ஒரு சிற்பி வேண்டும் என்பதை நாம் ஒப்புக் கொண்டால், இப்பிரபஞ்சத்தை உருவாக்க ஒரு சிற்பி இருக்கிறார் என்று கூறுவதில் என்ன தவறு இருக்கிறது.

சிற்பியின் மீது மட்டுமல்லாமல் சகல ஜீவராசிகளின் மீதும் அன்பு செலுத்தவும், அவற்றை மதிக்கவும் கூடிய பரந்த மனதை விக்கிரக ஆராதனையின் மூலம் பெறுகின்றோம். விக்கிரகத்தில் சர்வேச்வரனைக் கண்டு ஆராதிப்பதன் மூலம் மனத்தூய்மை பெற்று, அனைத்திலும் இறைவனை தரிசிக்கவும், ஆராதிக்கவும் கூடிய மனநிலையைப் பெற முடிகிறது. இதுதான் விக்கிரக ஆராதனையின் இலட்சியம். பௌதிக உலகைக் குறித்து நினைவுறுத்தும் பொருள்கள் எல்லாம் மனிதனை எல்லைக்குள் கட்டிப் போடும் போது, இறைவனின் நினைவை விழிப்புறச் செய்யும் விக்கிரகங்கள் மனிதனைப் பரந்த மனப்பான்மையை நோக்கி அழைத்துச் செல்கின்றன. அனைத்திலும் இறைவனைத் தரிசிக்கும் மனோபாவத்தை அளிக்கின்றன.

கேள்வி : இறைவன் எங்கும் நிறைந்திருப்பவர் எனில் ஆலயங்கள் தேவையா?

அம்மா : ஒவ்வொருவரையும் அவரவரது மனநிலைக்கு ஏற்ற வகையில் முன்னேற்றுவது தான் சநாதன தர்மத்தின் சிறப்பு அம்சமாகும். மக்கள் பலவிதமான இயல்புள்ளவர்கள். ஒவ்வொருவரையும் அவரவரது இயல்பிற்கு ஏற்ப வழி நடத்திச் செல்ல வேண்டும். தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு மாமிச உணவு கொடுத்தால் ஜீரணமாகாது. குழந்தைக்கு ஜீரணமாகக் கூடிய உணவையே கொடுக்க வேண்டும் சில நோயாளிகளுக்கு ஊசி குத்தினால் எதிர்விளைவு (அலர்ஜி) ஏற்படும். அவர்களுக்கு மாத்திரை கொடுக்க வேண்டும். இதுபோல் ஒவ்வொருவரின் உடலில், மனதின் இயல்புக்கேற்ப அவர்களின் பண்பாட்டைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். இவ்வாறு பல சம்பிரதாயங்கள் பழக்கத்திற்கு வந்தன. சகுண சங்கல்பமும், நிர்குண சங்கல்பமும். பக்தியோகமும், கர்மயோகமும் இப்படி

வந்தவையே. இவற்றின் அடிப்படை தத்துவமாக இருப்பது நிலையான, நிலையற்ற பொருள்களை அறியும் விவேகமே ஆகும். அர்ச்சனை, பூஜை, பஜனை என அனைத்தின் இலட்சியமும் இதுவே ஆகும். கண்பார்வையற்ற குழந்தையின் கைவிரல்களைப் பிடித்து எழுத்துகளில் வைத்து (பிரெய்ல் எழுத்து) படிக்கக் கற்பிக்க வேண்டும். காது கேட்காத குழந்தைக்கு சைகை மூலம் கற்பிக்க வேண்டும். ஒவ்வொருவரையும் அவரவர்களின் நிலையைப் புரிந்துகொண்டு வழிநடத்த வேண்டும். சாதாரண மக்களை அவர்களின் நிலைக்குச் சென்று உயர்த்துவதற்கு ஆலயங்கள் அவசியமாகும். அவற்றை ஒதுக்கிவிட முடியாது.

காற்று எல்லா இடங்களிலும் இருக்கிறது என்றாலும் மின்விசிறிக்கு அருகில் இருக்கும் போது அதை நன்கு உணர்கிறோம் அல்லவா? மரத்தின் அடியில் வேறு எங்கும் இல்லாத குளிர்மை இருக்கிறது. அங்கே காற்றை நன்கு அனுபவிக்க முடியும். அதுபோல் இறைவனை ஒரு உருவத்தில் கண்டு வணங்கும் போது இறைவனின் சாந்நித்தியத்தை மேலும் தெளிவாக அனுபவிக்க முடிகிறது. சூரிய ஒளி எங்கும் பரவி இருந்தாலும், மூடிக் கிடக்கும் அறையில் விளக்கை ஏற்றினால் தான் ஒளி கிடைக்கும். பசுவிடம் பால் இருப்பது உண்மை என்றாலும், காதைப் பிடித்துக் கறந்தால் பால் கிடைக்காது. மடியிலிருந்து தான் பால் கிடைக்கும். இறைவன் எங்கும் நிறைந்தவர் எனினும் ஆலயங்களில் அவரது சாந்நித்தியத்தை நம்பிக்கை உள்ளவனால் எளிதில் உணர முடிகிறது. நம்பிக்கை என்பது மனதின் இணக்கமாகும். ஆலயங்களில் இறைவனின் சாநித்தியம் இருந்தாலும் நம்பிக்கை இல்லாதவனுக்கு அதை அனுபவிக்க முடிவதில்லை. நம்பிக்கையே அனுபவத்தை அளிக்கிறது.

ஆசிரமத்தில் ஒருமுறை நடன நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் வெளிநாட்டு தம்பதிகள் தங்கள் நாட்டு வழக்கப்படி கைகோர்த்து நடனம் ஆடினர். அவர்களின் நடனத்தைக் கண்ட ஒரு மகள்,

"ஐயோ! இது என்ன நடனம்? ஆணும் பெண்ணும் இணைந்து ஆடுகிறார்களே!" என்றாள். அம்மா அவளிடம், "சிவனும்,பார்வதியும் இணைந்து நடனமாடினால் உனக்கு இப்படித் தோன்றுமா?" என்று கேட்டேன். அதில் நாம் தெய்விகத்தைக் காண்பதால் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆக, இதற்கெல்லாம் காரணம் நமது மனமே ஆகும். சிவ-பார்வதி என்று சொல்லும் போது அதில் தெய்வீகமுண்டு, நம்பிக்கை உண்டு. அதனால் அதை உயர்ந்ததாகக் காண்கிறோம். தம்பதிகளிடம் தெய்வீகத்தைத் தரிசிக்காத காரணத்தால் அது தவறென நமக்குத் தோன்றுகிறது. நமது மனப்பான்மையே இதற்குக் காரணமாகும். அதுபோல் நமக்கு எந்த வழிபாட்டில் நம்பிக்கை இருக்கிறதோ அதில் உறுதியுடன் முன்னேறினால் இறை அனுபூதியைப் பெறலாம். நம்பிக்கையே இதற்கு அடிப்படையாகும்.

பலர் ஒன்றாகக் கூடிப் பிரார்த்திக்கும் ஆலயங்களுக்கு மற்ற இடங்களுக்கில்லாத தனிச்சிறப்பு உண்டு. ஒரு அலுவலகத்தின் சூழ்நிலை மதுபானக்கடையில் இருப்பதில்லை. மதுபானக் கடையின் சூழ்நிலை ஆலயத்தில் இருப்பதில்லை. மதுபானக் கடை மனஆரோக்கியத்தைக் கெடுக்கும் போது, ஆலயங்கள் மன ஆரோக்கியத்தை அளிக்கின்றன. வழிபாடு நடக்கும் இடங்களில் நற்சிந்தனை அலைகள் நிறைந்துள்ளன. போராட்டம் நிறைந்துள்ள மனதில் அமைதி நிலவ அது உதவுகிறது. நறுமணப் பொருள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலைக்குச் சென்றால், சுற்றுப்புறம் எங்கும் நல்ல நறுமணம் நிறைந்திருக்கும். ஆனால் ரசாயனப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் சுற்றுப்புறம் மாறுபட்டிருக்கும். ஆலயத்தில் காணப்படும் பக்தி நிறைந்த, தூய்மையான சூழ்நிலை மனதை ஒருமுகப்படுத்தவும், நம் மனதில் பக்தி உணர்வு ஏற்படவும் உதவுகிறது. ஆலயம் கண்ணாடி போன்றதாகும். தெளிவான கண்ணாடியில் நம்முடைய முகத்திலுள்ள அழுக்கைத் தெளிவாகக்

காணவும், அதைத் துடைத்து நீக்கவும் முடியும். இது போல் நம் இதயத்தைத் தூய்மைப்படுத்த ஆலய வழிபாடு உதவுகிறது.

இறைவனை வணங்குவதன் முதற் கட்டமாக ஆலய வழிபாடு விளங்குகிறது. ஒரு ரூபத்தில் இறைவனை வழிபடவும், இறைவனிடம் பக்தி செலுத்தவும் ஆலயமும், அதிலுள்ள விக்கிரகமும் உதவுகின்றன. என்றாலும், காலப்போக்கில் எங்கும் இறை சைத்தன்யத்தை தரிசிக்கும் மனநிலையைப் பெற வேண்டும். சரியான ஆலய வழிபாட்டின் இலட்சியமாகும், சிறு வயதில் குழந்தைகளிடம் கிளி, மைனா போன்ற பறவைகளின் படங்களைக் காட்டி, "இது கிளி, இது மைனா" என்று கற்பிப்போம். குழந்தை வளர்ந்துவிட்டால் கிளியையோ, மைனாவையோ புரிந்து கொள்வதற்கு இந்த சித்திரங்கள் தேவையில்லை. ஆனால் ஆரம்பத்தில் அது தேவையாக இருக்கிறது. உண்மையில் அனைத்தும் இறைவனே. ஒதுக்கி விடுவதற்கு எதுவுமில்லை. மாடியையும் அதை அடைவதற்கு உதவும் படிகளையும், கட்டுவதற்கு செங்கல்லையும், சீமென்டையுமே உபயோகிக்கிறோம். மாடியை அடையும் போதுதான் இரண்டையும் கட்டுவதற்கு ஒரே விதமான பொருள்களை உபயோகித்ததை நாம் அறிகிறோம். என்றாலும் மாடியை அடைய நமக்குப் படிகள் தேவையாக இருந்தன. ஆலயங்களின் பயனும் இது போன்றது தான்.

"ஆலயத்தில் பிறக்கலாம்; ஆனால், அங்கேயே இறந்துவிடக் கூடாது" என்று சொல்வதுண்டு. ஆலயத்திற்குச் சென்று வழிபடலாம் ஆனால், அதிலேயே மனம் கட்டுப்பட்டிருக்கக் கூடாது. எல்லா கட்டுகளிலிருந்தும் விடுபடுவதுதான் ஒருவன் விடுதலைபெற வழிவகுக்கிறது. விக்கிரகத்தில் மட்டுமே இறைவன் இருப்பதாகக் கருத வேண்டாம். எல்லாம், சைதன்யமே. ஜடப் பொருள்கள் என எதுவுமில்லை. அனைத்திலும் இறைவனைக் கண்டு அன்பு செலுத்தும், சேவைபுரியும் மனோபாவத்தையே ஆலய வழிபாட்டின் மூலம் நாம் பெற வேண்டும். அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனோபாவமாகும். அது தானும், தன்னைச் சுற்றியுள்ள

அனைத்தும் இறைவனே என்பதை அறிய வேண்டும். அவ்வளவுதான். அனைத்திலும் இறைவனைக் காண முடிந்தால் பின் நம்மால் எதை வெறுக்க முடியும்? ஒரு மனிதனை இந்நிலைக்குக் கைபிடித்து அழைத்துச் செல்வதே ஆலயங்களின், அதில் பின்பற்றப்படும் ஆசாரங்களின் நோக்கமாகும்.

கடலும், அலையும் வெவ்வேறாகத் தோன்றலாம். ஆனால் இரண்டும் நீர்தான். தோடும், வளையலும், மோதிரமும் பலவாகத் தோன்றலாம். வடிவங்கள் பலவாயினும் அவை அனைத்தும் தங்கமே. தங்கத்தில் எந்தவித வித்தியாசமும் இல்லை. இதுபோல் நம்மைச் சுற்றிலும் இருப்பவை எல்லாம் பலவாகத் தோன்றினாலும், உண்மையில் அனைத்தும் ஒன்றே, பிரம்மமே. பிரம்மம் மட்டுமே உள்ளது. இதை அனுபவத்தின் மூலம் அறிவதுதான் மனித வாழ்வின் இலட்சியம். இந்த உண்மையை அறிவதுடன், சூரியன் உதயமாகும் போது இருள் நீங்குவது போல் ஒருவனின் பிரச்சனைகள் எல்லாம் நீங்குகின்றன. இன்று விஞ்ஞானிகளும், எல்லாம் சக்தியே என்று சொல்கிறார்கள். ரிஷிகள் அதையே சைதன்யம் என்று சொன்னார்கள். ஸர்வம் ப்ரஹ்மமயம் என்பதே அவர்களின் அனுபவம்.

இதை அனுபூதியில் அறிய வேண்டுமெனில் ஆலயத்திலுள்ள விக்கிரகத்தில் மட்டுமே இறைவன் குடியிருக்கிறார், என்ற எண்ணத்தைக் கடந்து செல்ல வேண்டும். அனைத்திலும் இறை சைத்தன்யத்தைத் தரிசிக்க இயல வேண்டும். இதற்கு நாம் ஆலய வழிபாட்டின் பொருளை அறிந்து கொண்டு இறைவனை வழிபட வேண்டும். உண்மையில் நம்முள்ளே குடியிருக்கும் ஆத்ம சைதன்யத்தையே நாம் வழிபட வேண்டும். ஆனால், சாதாரண மனிதர்களுக்கு இது இயலாத செயலாகும். ஆகவே, ஒரு கண்ணாடியில் முகத்தைக் காண்பது போல் ஆலயத்திலுள்ள விக்கிரகங்களில் இறை சைத்தன்யத்தைக் கண்டு வழிபடுகிறார்கள். ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதன் மூலம் நம் உள்ளத்தில்

நாம் ஆலயம் அமைக்க வேண்டும். பின்னர் எங்கும் இறைவனை தரிசிக்க நம்மால் முடியும். இதுவே ஆலய தரிசனத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். திருக்கோயில் சென்று விக்கிரகத்தை தரிசித்த பிறகு கண்களை மூடுவதன் மூலம் நாம் அதைத்தான் செய்கிறோம். வெளியில் கண்ட இறை வடிவத்தை இதயத்தில் காண வேண்டும். பின்னர் கண்களைத் திறந்து அனைத்திலும் இறைவனைத் தரிசிக்க வேண்டும். இப்படி வடிவங்களை எல்லாம் கடந்து சென்று, எங்கும் நிறைந்துள்ள ஆத்ம தத்துவத்தை அனுபூதியில் அறிய நம்மால் முடிகிறது.



8.வலது தோளில் கண்ணீரின் உப்பு

திரு.பெருமுடியூர் சந்திரன்

அம்மாவின் வலது தோளைக் கவனித்திருக்கிறீர்களா? கவனிக்காதவர்கள் மிகச் சிலரே இருக்கக் கூடும். என்றும் தூய வெள்ளை ஆடை அணியும் அம்மாவின் வலது தோள் எப்போதும் அழுக்காகவே இருக்கும். கண்ணீரில் நனைந்து அது துயரம், பெருமூச்சு, கஷ்டங்கள் ஆகியவை சங்கமிக்கும் இடம்.



அம்மா நமக்காக காத்திருக்கிறார். வருந்தும் மனங்களுக்கு இளந்தென்றல் காற்றாக அம்மா மாற ஆரம்பித்து எத்தனையோ வருடங்கள் கடந்து சென்றுவிட்டன. அம்மாவுக்கு முன்னால் உள்ள தரிசன வரிசை முடிவடையவில்லை. இடைவிடாமல் பெருகும் அமைதியின்மையின் சக்தி நிறைந்த கண்ணீர் ஓடைகளால் அம்மாவின் வலது தோள் நனைகிறது.

அம்மாவுக்கு முன்னால் வருபவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம், சிலர் சிரத்தையுடன், மந்திரம் ஜபித்தவாறு வருகிறார்கள். அவர்களுக்கு சொல்வதற்கோ, வெளிப்படுத்தவோ ஒரு விஷயமும் இருக்காது. மெய்ப்பொருளை சிறிதளவாவது தனதாக்குவதே அவர்களின் நோக்கம். அவர்கள் வருவது, போவதை யாருமே அறிவதில்லை.

சிலர் இதற்கு நேர்மாறாக இருப்பார்கள். வெகுநாட்களாக மனதில் சுமந்து கொண்டிருந்த துன்பச் சுமையை இறக்கிவைக்கும் நோக்கத்துடன் இவர்கள் வருகிறார்கள். அம்மாவின் தோள் இவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற உரிமையுடன், அங்கு தலைசாய்த்து, தோளைக் கண்ணீரால் அபிஷேகம் செய்கிறார்கள். அதன்பின் அவர்கள் அமைதி அடைகிறார்கள். மழை பெய்து ஓய்ந்த நிம்மதியுடன் திரும்பிச் செல்கிறார்கள்.

எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அம்மாவின் சாந்நித்தியத்தை அவர்கள் விரும்புகிறார்கள். உலகியல் வாழ்வின் எந்த நிலையிலும் அம்மாவே அவர்களுக்கு அடைக்கலம், அம்மாவைக் காணும்போது, அக்குரலைக் கேட்கும் போது, அந்த தரிசனத்தை அனுபவிக்கும் போது, அதன் பிரதிபலனாக கண்ணீர் பெருகுகிறது.

துயரத்தின் அடையாளமோ, சந்தோஷத்தின் சின்னமோ எதுவாக இருந்தாலும் தனது கண்ணீர் உப்பை அம்மாவின் வலது தோளில் சமர்ப்பித்த பிறகே அவர்கள் திரும்புகின்றனர்.

இக்கண்ணீரின் பொருளை பலர் ஆராய்ந்திருக்கிறார்கள். தெளிவான பதில் இதுவரை கிடைக்கவில்லை. தனது திருப்திக்காக பகுத்தறிவு என்ற பெயரில் இதை விமரிசிக்க முயல்வது முட்டாள் தனமல்லவா?

பெரும்பாலும் ஒவ்வொரு நிமிடமும் தாங்க முடியாத பாரத்தைச் சுமந்து கொண்டிருப்பவர்களே நம்மைச் சுற்றிலும் காணப்படுகிறார்கள். நஷ்டமானதைக் குறித்து எண்ணி அழவும், வரப் போவதை எண்ணிப் பெருமூச்சு விடவும் செய்பவர்கள் இவர்கள். இக்காலகட்டத்தில் இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே செய்துள்ளது.

இவற்றை எல்லாம் யாரிடம் மனம்விட்டுச் சொல்வது? எந்த சுமைதாங்கியின் மீது இந்த சுமையை இறக்கி வைப்பது? இத்தேடல் வாழ்வில் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியிலும் உண்டு. ஆனால், அதற்குப் போதுமான சக்தி இல்லை. மீண்டும் கிடக்கும் இடத்திலேயே புரளுகிறார்கள். கட்டுக்களை அறுத்துவிட்டு, வாய்விட்டு அழுவதற்கும் இயலாத நிலை.

அம்மாவின் வலது தோளில் சரணடைவது கூட அவருடைய அருளாகும். பெய்வதற்கும், தெளிவதற்கும் காத்துநிற்கும் மேகங்களுக்கு இடமளிக்கும் ஆகாயத்தைப் போன்றது அம்மாவின் வலது தோள்.

நண்பர்களையும், மனைவியையும், பெற்றோரையும் பெற்று மனம் மகிழ்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாரிடமாவது நமது நெருக்கம்

அதிகமாகும் போது அவரைப் பற்றி எப்போதும் பேசுவது வழக்கமாக மாறும். அதன் பலனாக சுமை அதிகரிக்கிறது என்பதன்றி வேறில்லை. ஏனெனில் நாம் விரும்புவர்களின் நிலையும் இதிலிருந்து வேறுபட்டதல்ல. தனது அனுபவங்களையும், தனது துயரங்களையும் சுமந்து வளைந்து நடக்கும் ஒருவரிடம், மற்றொருவரின் துயரக் கதையை அனுதாபத்துடன் கேட்குமாறு சொல்வதில் பொருளில்லை அல்லவா? உறுதியான அடிமரம் உள்ள மரத்தின் மீது சாய்ந்து நிற்பதுதான் பாதுகாப்பான வழி. பலமில்லாத செடிகளின் மீது சாய்ந்து நிற்கும் போது செடியுடன் நாமும் கீழே விழுவோம் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை அல்லவா?

இலட்சக்கணக்கான மக்களின் துன்பச் சுமையை தனியாகச் சுமக்கும் சக்தி வடிவாக அம்மா திகழ்கிறார். அனைவரும் அவரது குழந்தைகள், உடலின் இயற்கைத் தேவைகளைக் கூட அலட்சியம் செய்து, துன்பச் சுமையுடன் வரும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதில் நேரத்தைச் செலவிடும் அம்மா இவ்வுலக வரலாற்றில் ஒரு அற்புதமாகத் திகழ்கிறார்.

பல வருடங்களாக அம்மாவின் வலது தோளில் படியும் கண்ணீர் உப்பு உலர்வதே இல்லை. உலகம் இருக்கும் வரை மனிதன் இருப்பான். மனிதன் இருக்கும் வரை துன்பமும் இருக்கும். உலகின் துயரக் கண்ணீரை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பதிலாக ஆறுதலின், அன்பின் இனிமையை வழங்க ஒரு அம்மாவும், அம்மாவின் தோளும் கிடைத்தது. காலத்தின் புண்ணியமாகும். நம்முடைய பாக்கியமாகும்!.

9.ஜெய் ஜெய் காளிமா

பிர.பத்மநாபன்

"அம்மா..." என்று நான் அலறிய உடனே வானில் கண்களைப் பறிக்கும். ஒளியுடன் காளி தேவி தோன்றினாள். அவள், எண்ணற்ற கரங்களில் பல்வகை ஆயுதங்களுடன் சிம்மவாகனத்தில் அமர்ந்திருந்தாள். அவளை நான் கண் இமைக்காது பார்த்தேன். காளியின் கிரீடம், அவிழ்த்து விட்ட தலைமுடி, முகம், ஆகியவை தேவிபாவத்தின் போது இருக்கும் அம்மாவின் தோற்றமாக இருந்தது..... என்னை அறியாமல் என் நாக்கு காளியின் நாவைப் போல் வெளியே தொங்கியது விழிகள் விரிந்து, அளவற்ற ஆற்றல் என்னுள் நிறைந்து, இடி முழக்கம் போல் அட்டகாச சிரிப்பு என்னிடமிருந்து வெளிப்பட்டது.

இது 1981-ல் சரசம்மா என்ற பக்தைக்கு ஏற்பட்ட அனுபவமாகும். நமது அம்மா காளியின் உருவில் வந்து, பக்தைக்கு ஏற்படவிருந்த ஆபத்திலிருந்து அவரைக் காப்பாற்றினார்.

10.என்னை விழிப்புறச் செய்த இன்னிசை

சுவாமி. அம்ருதஸ்வரூபானந்தபுரி



புல்லாங்குழலின் இன்னிசையைப் பற்றிக் கேட்கும் போது மனதில் முதலில் தோன்றுவது கண்ணன் புல்லாங்குழலை இசைக்கும் காட்சியாகும். முரளியும் (புல் லாங் குழல்) முரளிதரனும் (புல்லாங்குழலை ஏந்தியவன்) பக்தனுக்கும், பகவானுக்கும் இடையில் நிலவும் இணக்கத்திற்கு நிகராவர். ஆயினும் எனது கண்ணன் துவாபர யுகத்தில் வாழ்ந்தவரல்ல. அவர் வசுதேவனின் மகனுமல்ல. அமிர்தபுரியில் வாழும் ஸ்ரீ மாதா அமர்தானந்தமயி தேவிதான் எனது கண்ணனாவார்.

அப்படியானால் மேலே குறிப்பிட்ட புல்லாங்குழலிசை எது? இது எதிர்பார்க்க வேண்டிய கேள்விதான். கண்ணனின் கைகளிலிருந்த மூங்கிலால் ஆன புல்லாங்குழலிலிருந்து வெளிப்பட்டது வெறும் இசையல்ல; அது உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் என அனைத்தையும் கவர்ந்திழுத்த, அழிவற்ற, பரம பிரேமையின் இன்னிசையாகும்.

கிருஷ்ணா என்னும் சொல் சம்ஸ்கிருதத்தில் உள்ள 'க்ருஷ்' என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதற்கு, கவர்தல், உழுதல், வேரோடு களைதல் எனப் பல பொருள்கள் உண்டு. அம்மாவின் முன்னிலையிலும் இந்தப் பொருள்கள் சிறகை விரித்துப் பறக்கின்றன. இச்சிறகில் ஆன்மிக உலகின் அளப்பரும் ஆகாயத்தில் நம்மால் பறக்க முடியும். அம்மா தூய அன்புமயமானவர். அதனால் அந்த அன்பு, அவரை அடைக்கலம் அடையுமாறு நம் இதயத்தைக் கவர்கிறது. நமது மனமெனும் வயலை உழுது பண்படுத்தும் சத்குரு அம்மா. அவர் நம் மனதிலுள்ள மாசுகளாகிய கற்களையும், கட்டிகளையும் பொடிப் பொடியாக்கிவிடுகிறார். அம்மனதில் நற்பண்புகளை விதைக்கிறார். அதன் மூலமாகப் படிப்படியாக ஆத்மானுபூதியை அடைவதற்கு நமக்கு உதவுகிறார். இக்கண்ணோட்டத்தில் காணும்போது பகவான் கண்ணனின் தெய்விகப் புல்லாங்குழலும், எல்லையில்லா அன்பின் ஆதாரமான அம்மாவின் புனிதமான சந்நிதியும் ஒன்று என்பது விளங்கும். மனித குலத்திடையே உள்ள தெய்வீகத்தைத் தொட்டு விழிப்புறச் செய்யும் பரம பிரேமையின் புனிதமான இசையாக அம்மா திகழ்கிறார்.

1979ம் ஆண்டின் ஒருநாள் மாலையில் நான் முதன்முதலாக அம்மாவைத் தரிசித்தேன். அப்பொழுது நான் பல கேள்விகளுடன் வந்திருந்தேன். நான் இளங்கலைப் பட்டப்படிப்பில் எப்படித் தேர்வு பெறுவேன். எனது வருங்காலம் எவ்வாறு இருக்கும் போன்ற சில கேள்விகளை மட்டும் அம்மாவிடம் கேட்பதென முடிவு செய்திருந்தேன். என்னோடு அம்மாவை தரிசிக்க வந்தவர்கள். "நீ அம்மாவிடம் எதுவும் கேட்கத் தேவையில்லை. அவரே எல்லாம் சொல்லுவார்" என்று சொன்னார்கள். இது உண்மைதானா என்பதையும் அறிந்து கொள்ள முடிவு செய்தேன்.

அந்தக் காலத்தில் ஆன்மிக வாழ்வின் அரிச்சுவடி கூட எனக்குத் தெரியாது. அம்மா எவ்வளவு உயர்ந்த சத்குரு என்பதையும் நான் அறியேன்.

என்னோடு வந்தவர்கள் அம்மாவைப் பற்றிக் கொடுத்திருந்த அரைகுறை விஷயமே நான் அறிந்ததாகும். அது மட்டுமல்ல. எனக்கிருந்த மனநிலையில் வாழ்க்கையில் அடுத்து என்ன செய்வது என்பதற்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தேன்.

அன்று மாதா அமிர்தானந்தமயி மடமோ, ஒரு ஆசிரமமோ தோன்றியிருக்கவில்லை. அம்மாவின் பெற்றோர் வாழ்ந்த வீடும், அதற்கடுத்து ஒரு சிறிய கோயிலும், அதையொட்டிக் குடிசை ஒன்றும் மட்டுமே இருந்தன. இருந்தபோதிலும் அங்கு மனம் கவரும் ஒரு சூழ்நிலை நிலவியது.

நான் கோயிலுக்கு முன்பிருந்த வெளியில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது என்னோடு வந்திருந்தவர்களுள் ஒருவர் மெல்லிய குரலில், "சில பஜனைப் பாடல்களைப் பாட விரும்புகிறாயா?" என்று கேட்டார். இச்சந்தர்ப்பத்தை ஏன் இழக்க வேண்டும்? என எண்ணிய நான் சில பக்திப்பாடல்களைப் பாடினேன். கோயிலின் முன்பிருந்த சிறிய தாழ்வாரத்தில் அமர்ந்து நான் பாடினேன். என்னை அறியாமலேயே என் மனம் பாடலில் ஒன்றிவிட்டது. அம்மா கோயிலுக்குள் அமர்ந்து தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார். அவர் ஓரிருமுறை என்னைப் பார்த்ததாக எனக்குத் தோன்றியது. ஆமாம் அது உண்மை, ஏனெனில் அதைப் பின்னர் அம்மாவே என்னிடம் கூறினார்.

நான் பாடி முடித்தேன். அம்மாவைத் தரிசிக்கும் தருணம் எனக்கு வந்தது. நான் அம்மாவுக்கு அருகில் சென்றேன். அதற்குச் சற்று முன்வரை என் மனதில் நான் அம்மாவிடம் கேட்க நினைத்திருந்த கேள்விகள் சூரியனைக் கண்ட பனி போல் கரைந்து போய்விட்டன. அம்மாவிடம் என்னால் எதுவும் கூற முடியவில்லை. அம்மாவின் திருவிழிகளிலும், திருமுகத்திலும் கருணைக் கடலைக் கண்டேன். அந்தக் கடலிலிருந்து வந்த பேரலை என்னைச் சூழ்ந்தது. அதைத் தொடர்ந்து நிகழ்ந்ததை வார்த்தைகளில் கூற இயலாது. பல நாட்களாக எதிர்பார்த்திருந்ததைக் கண்டதற்கு நிகராக எனது அனுபவம் இருந்தது. என்னை அறியாமலேயே எனது இதயக் கதவுகள் திறந்து கொண்டன. அதிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. என்னை இறுக அரவணைத்தபடி அம்மா எனது காதில் "குழந்தாய், நீ எதைத் தேடுகிறாய்? நீ என்னுடையவன். எனது மகன் நான் உனது தாய் உனது

குரல் இறைவனில் கலப்பதற்குரியது" என்று கூறினார். அதன்பின் எனது மனதில் இருந்தவைகளை எல்லாம் அம்மா கூறினார். நானோ எனது மனமும் பேச்சும் செயலற்றுப் போன நிலையில் இருந்தேன். அத்தருணத்தில் அது வரை நான் வாழ்வில் இன்றியமையாதவை எனக் கருதியவை எல்லாம் அற்பமானவை என்பதை உணர்ந்தேன்.

28 ஆண்டுகள்..... காலம் எவ்வளவு விரைவாகக் கடந்தது. எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. உலகமெங்கும் கிளைகளைக் கொண்ட பெரிய நிறுவனமாக ஆசிரமம் வளர்ந்து வருகிறது. கோடிக்கணக்கான பக்தர்கள் அம்மாவுக்கு உள்ளனர். தேசங்களைக் கடந்து நிற்கும் மனிதநேயச் சேவைகள் ஆற்றப்படுகின்றன. அச்சேவைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் அளித்துள்ளது. கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அம்மா வியக்கத்தக்க மாறுதல்களைச் செய்து வருகிறார். சர்வதேசக் கௌரவங்கள் அவரைத்தேடி வருகின்றன. இத்தகைய சாதனைகள் இன்னும் தொடர்கின்றன.

நமது நாட்டின் கலாசார, ரிஷிகளின் வழியிலான உயரிய பண்புகளுக்குப் பிரதிநிதியாக அம்மா திகழ்கிறார். இதைக் குறித்து நாம் பெருமிதம் கொள்ளலாம். ஆயினும் எவ்வளவு வளர்ச்சி அடைந்த போதிலும் அம்மா அன்று போலவே இன்றும் இருக்கிறார். பகவான் கீதையில் கூறியுள்ள "கூடஸ்தம், அசலம், துருவம்" (மாறுதலற்றது, அசைவற்றது, நிரந்தரமானது) என்கிற வர்ணனைக்கு விளக்கமாக அம்மாவின் வாழ்க்கை விளங்குகிறது.

வகுப்பறையில் ஆசிரியர் இல்லையென்றால் எவ்வளவோ கூச்சலும், குழப்பமும் நிலவக் காணலாம். ஆசிரியர் தூரத்தில் வரும் நிழல் தெரிந்தாலே போதும், மாணவர்கள் நிசப்தமாக இருப்பார்கள். இது போன்ற நிகழ்வை அம்மாவைப் போன்ற மகான்களின் முன்னிலையில் உணரலாம். அவர்களுடைய சாந்நித்தியம் ஒன்றாலேயே எல்லாம் ஒழுங்காக நிகழ்கின்றன.

இந்தப் பிரபஞ்சத்தை இறைவன் அவருடைய புருவ அசைவால் இயக்கி வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இது எவ்வாறு சாத்தியமாகும்? இறைவனுக்குப் புருவங்கள் உள்ளனவா? புருவங்கள் இருந்தாலும், அவைகளை அசைப்பதன் மூலமாக இறைவன் எப்படி இந்தப் பிரபஞ்சத்தை

இயக்க இயலும்? இத்தகைய சந்தேகங்கள் எழலாம். உள்ளதைச் சொல்ல வேண்டுமென்றால் இதைப்பற்றி எனக்குப் போதுமான அறிவு இல்லை. ஏனெனில் உங்களைப் போலவே இறைவனைக் குறித்து அதிகமாக நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் எல்லாம் சரியாக, சரியான நேரத்தில் அம்மாவின் முன்னிலையில் நிகழ்வதை நான் கண்டு வருகிறேன்.

அம்மா ஒரு கிரியா ஊக்கி ஆவார். கிரியா ஊக்கி (Catalyst) இரசாயன மாறுதல்களைத் தூண்டிவிட்டு, அது மாறாமல் இருக்கும். அம்மாவின் சந்நிதியும் இதற்கு நிகரானது. அவரைச் சுற்றி எல்லாம் இயல்பாக நடைபெறுகின்றன. ஆயினும் அவர் அந்தச் செயல்கள் நடைபெறுவதற்கு ஆதாரமான அசையாத அடிப்படையாக இருக்கிறார். அவர் பூரணமான பேரானந்தம் ஆவார்.

ஒரு கதை எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒருவர் சத்குருவை அணுகி, "சுவாமி, நீங்கள் எனக்குத் தியானத்தைக் கற்றுத்தருவீர்களா?" என்று கேட்டார். அப்போது குரு தோட்டத்தில் ஒரு குழியைத் தோண்டிக் கொண்டிருந்தார். அதை நிறுத்தாமலே அவர், "சரி, நான் எப்படிக் குழி தோண்டுகிறேன் என்பதைக் கவனித்து அதைக் கற்றுக்கொள்" என்றார்.

தியானம் பயில வந்தவர், "குழி தோண்டுவதைப் பார்த்து நான் தியானத்தைக் குறித்து எப்படிக் கற்றுக்கொள்ள முடியும்? அப்படிக் கற்க முடியுமென்றால் நானே கற்றுக் கொண்டிருப்பேனே. பலர் குழி தோண்டுவதைப் பார்த்திருக்கிறேன். அதுமட்டுமின்றி நானே சில குழிகளைத் தோண்டியும் இருக்கிறேன். ஆயினும், குரு அவர் செய்வதைக் கவனிக்கச் சொன்னாரல்லவா? சிறிது நேரம் அவர் செய்வதைக் கவனிக்கலாம் எனத் தனக்குள்ளே நினைத்துக் கொண்டார். அவர் தரையில் அமர்ந்து குரு செய்வதைக் கவனித்தார். வெகுநேரமான பிறகும் குரு தியானத்தைக் குறித்து எதுவுமே கூறவில்லை. வந்தவர் பொறுமையை இழந்தார். அவர், "சுவாமி, தயவு செய்து என்னை மன்னியுங்கள். குழி தோண்டுவது எப்படி என்பதைக் கற்பதற்காக அல்ல, தியானம் புரிவது எப்படி என்பதைக் கற்பதற்காகவே இங்கே வந்தேன். அதை நீங்கள் புகட்டும் விதம் இதுவானால். நான் போய் வருகிறேன். வணக்கம், சுவாமி" என்று கூறிவிட்டுப் புறப்படத் தயாரானார்.

குருவோ "அவசரப்படாதே நீ என்னுடன் சில நாட்கள் தங்கலாமே. அதன்பிறகு என்ன செய்வது என்பதை நீ முடிவு செய்யலாம்" என்றார்.

மூன்று நாட்கள் கடந்தன. குருநாதர் சில சமங்களில் பூமியை உழுவார், மற்றும் சில சமயங்களில் தோட்ட வேலை செய்வார். பறவைகளுக்குத் தீனி போடுவார். பசுக்களுக்குத் தீவனம் அளிப்பார். நாய்களுக்கு உணவைக் கொடுப்பார். கிராமங்களுக்குச் செல்வார். அங்குள்ள மக்களுடன் பேசி , வேடிக்கை செய்து சிரிப்பார். சாப்பிடுவார். ஓய்வெடுப்பார். இவை தவிர அவர் தியானத்தைக் குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. தியானம் பயில வந்தவர் முற்றிலும் பொறுமையை இழந்தார். அவர் குருவிடம், "சுவாமி, போதும் நீங்கள் தினசரி செய்யும் செயல்களைக் கற்பதற்கு நான் இங்கே தங்க வேண்டியதில்லை, எனக்கு உத்தரவு கொடுங்கள், நான் போய் வருகிறேன்" என்றார்.

குரு "எனது செயல்களை எல்லாம் கூர்ந்து கவனித்த பிறகும் எப்படித் தியானிப்பது என்பதை நீ புரிந்து கொள்ளவில்லை என்றால், நீ ஒருபோதும் தியானிக்க முடியாது. உழவுத் தியானத்தை நீ கற்க விரும்பினால் நான் பூமியை உழுவதைக் கவனித்தால் போதும். நான் தோட்டவேலை செய்யும் போது அது தான் தோட்டவேலைத் தியானம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இவை போலவே நான் பேசுவதையும் சிரிப்பதையும், ஓய்வெடுப்பதையும் காணும் போது இத்தகைய செய்கைகளில் ஈடுபடும் போது எவ்வாறு தியானிப்பது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நான் தியான வடிவமாவேன்" என்று விளக்கினார்.

இதற்கு நிகராக, அம்மா தியானத்தின் மிக உயர்ந்த நிலையின் சொரூபமாவார். அவருடைய எல்லாச் செயல்களிலும் தியானத்தின் அமைதியும், ஆனந்தமும், அழகும் வெளிப்படுகின்றன. நாம் இதயபூர்வமாக அம்மாவைக் கவனித்தால் இதை நாமும் அனுபவத்தால் உணரலாம். படிப்படியாக இப்பெருநிலைக்கு வாரிசுதாரர்கள் ஆகலாம். இதற்குச் சிறந்த இடம் அம்மாவின் புனிதமான சந்நிதியே ஆகும்.

அம்மா "ஆப்பிள் மரங்களைப் பயிரிடவும். அவை நல்ல பழங்களைத் தரவும் குளிர்ந்த சீதோஷ்ண நிலை அவசியமாகும். ஆப்பிள் மரம்

தமிழ்நாட்டில் வளராது. அப்படியே வளர்ந்தாலும் அவை நல்ல பழங்களைத் தராது. ஆயின், காஷ்மிரில் நிலவும் சீதோஷண நிலை ஆப்பிள் பயிரிடுவதற்கு ஏற்றதாக இருப்பதால் அங்கே அவை நன்றாக வளர்ந்து. சிறந்த பலனைத் தரும். இதுபோலவே சாதகனுக்குப் பொருத்தமான, மிகச் சிறந்த சீதேஷ்ண நிலையானது சத்குருவின் சந்நிதியே ஆகும். அப்போது சாதகன் ஆன்மீக வளர்ச்சி பெற்று, தியானத்தின் முதிர்ச்சி அடையலாம்" என்று கூறுவார்.

அம்மாவின் ஒவ்வொரு செயலிலும் ஒரு கலைநயம் இருக்கிறது. அவர் கலைவல்லுநர் என இதன் மூலம் நான் கூறவில்லை. மாறாக அவர் கலையின் வடிவமே ஆவார். அம்மா ஒரு பாடகி அல்ல. ஆனால் அவர் பாடும் போது அது கேட்பவர்களின் இதய ஆழத்திற்குச் சென்று அங்கே அன்பு மற்றும் ஆனந்த அலைகளை எழுப்பவல்லதாக உள்ளது. அம்மா ஒரு சொற்பொழிவாளரோ. உபந்யாசகரோ அல்ல. ஆனால் அவரது பேச்சானது கேட்பவர் உள்ளத்தில் நல்ல மாறுதலை உண்டாக்குகிறது. அம்மா ஒரு நடனக்கலைஞர் அல்ல, ஆனால் அவர் நடனமாடும் போது ஆனந்தத்தில் நம்மை நாம் மறந்து விடுகிறோம்.

சாதகர்களுக்கு இரு பிறப்புகள் இருக்கின்றன. முதலாவது தாயார் நமக்குத் தரும் பிறப்பாகும். இரண்டாவது நாம் நமக்குரிய சத்குருவைக் காணும் போது ஏற்படும் பிறப்பாகும். பிறந்த குழந்தை கள்ளங்கபடமில்லாமல் இருக்கிறது. ஆனால் இது தொடர்ந்து நீடித்திருப்பதில்லை. குழந்தை வளரவளர அதன் அகங்காரமும் வளர்கிறது. ஆனால் நாம் சத்குருவைத் தரிசிக்கும் போது நமது அகத்திலுள்ள கள்ளங்கபடமில்லாத இயல்பு மீண்டும் விழித்தெழ ஆரம்பிக்கிறது. அங்கிருக்கும் களங்கமில்லாத 'குழந்தை' மீண்டும் பிறப்பெடுக்கிறது. நாம் இவ்வுலகை அந்தக் கள்ளமில்லாத கண்களோடு காண்கையில், ஒவ்வொன்றும் நற்பண்பென்னும் புத்தகத்தின் ஒரு பக்கமாகவும், இறைவனுடைய அருள்மொழியாகவும் விளங்கும்.

1979ம் ஆண்டு ஜூன் மாதம் நான் முதன்முதலாக அம்மாவைத் தரிசிக்க வந்த போது எனக்கு 22 வயதாகி இருந்தது. அதைத் தொடர்ந்து நான் அம்மாவின் புடவை முந்தானையைப் பிடித்துக் கொண்டு நடக்கும் சிறு குழந்தையாக மாறினேன். அது இன்று வரை தொடர்கிறது. 28 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் நான் அம்மாவின் முன்னிலையில் ஒரு சிறு

குழந்தையே, அதைத்தான் நான் விரும்புகிறேன். குழந்தை பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளும். குழந்தைக்கு கற்பிப்பது தாய்க்கும் எளிதானது. இல்லையா? "நான் பெரியவனாகி விட்டேன்" என எண்ணினால் கற்பது நின்றுவிடும். அறிவு மாளிகையின் கதவுகள் நம் முகத்தில் அடித்தாற் போல் மூடிக் கொள்ளும். ஆகவே, நமது இதயம் பரந்ததாகவும், நமது அகங்காரம் சுருங்கியதாகவும் ஆகும் போது நம்மால் சுலபமாக வளர முடியும்.

28 ஆண்டுகள் கழிந்து விட்டாலும் முதல் தரிசனத்தின் போது அம்மா என் காதுகளில் கூறிய இனிய சொற்கள் இன்னும் என் இதயத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. அது அமிர்த கிருஷ்ணனின் அன்பெனும் குழலிலிருந்து வெளிப்பட்ட நிலையான இன்னிசையாகும். அதுதான் எனது தியானம். என்னைப் பொறுத்த வரை அம்மாவின் குரலும், சொற்களுமே தெய்வீக புல்லாங்குழலின் இன்னிசையாகும். அந்த இன்னிசை என்னை ஆழ்ந்த அஞ்ஞான உறக்கத்திலிருந்து விழிப்புறச் செய்தது.

ஓம் தத் ஸத்



11. தெய்வீக அன்பு

ஸ்வாமி.பூர்ணாம்ருதானந்தபுரி

ஆத்மானுபூதி பெற்ற சற்குருவின் சாந்நித்தியத்தில் இருப்பது தான் உண்மையான சத்சங்கமாகும். இது ஆழ்ந்த மௌனத்தில் நிகழ்கிறது. அம்மாவின் தரிசன ஆனந்தத்தைப் பெற்று எழுந்துவரும் வேளையில் மௌனத்தையே நாம் விரும்புவோம். தரிசனம் என்ற வார்த்தையின் பொருள் என்ன? ஆத்மானுபூதி பெற்றவரின் ஆன்மிக ஆற்றல் வளையத்தில் இருத்தல் என்பதாகும். இங்கே நாம் அம்மாவின் தெய்வீக சந்நித்தியத்தில் அவரது அழகு விழிகளில் அமிர்தத்தைப் பருகுகிறோம். தரிசனத்தின் போது அம்மா கூறும் அமுத மொழிகளைக் கேட்டு, அம்மாவின் அமைதியான, ஆழம் நிறைந்த மௌனத்தில் லயிக்கின்றோம்.

மனித வாழ்க்கை மிகவும் புனிதமானது. "ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்" (மனிதப்பிறவி வாய்ப்பது மிக அரிது) தர்மத்தை செயல் படுத்துவதற்குரிய முதல் ஊடகமாக பௌதிக உடல் திகழ்கிறது. மனித வாழ்க்கை, உடல், மனம், ஆத்மா ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும். ஞானம் பெறுவதற்கு அடிப்படையாகத் திகழ்வது உடலாகும். எனவே, இதைத் தவறாக உபயோகிக்கக் கூடாது. மனிதன் தனது உடல் மற்றும் மனதை நற்செயல்கள் மூலம் தூய்மையாக்க வேண்டும். அம்மாவின் சாந்நித்தியத்தில் தான் இந்தத் தூய்மையாக்கும் செயல் நடைபெற இயலும்.

நம்மைப் பொறுத்தவரை இந்த உடல்தான் உண்மை. எனவே, நாம் உணர்வுநிலையைத் தேட வேண்டும். அதற்கு, நாம் நமக்குள்ளே பயணம் செய்யவேண்டும். பழங்காலத்தில் மக்கள் ஆத்மானுபூதி பெற்ற மகான்களைத் தரிசிப்பதற்காக ஆயிரக்கணக்கான மைல்கள் நடந்து பயணம் செய்தனர். அவர்கள் மகான்களிடம் ஒரு கேள்வியும் கேட்பதில்லை. தரிசன பாக்கியம் ஒன்றுக்காகவே அவர்கள் சென்றார்கள். இன்றைய நாகரிக மனிதர்களால் இதன் பொருளைப் புரிந்துகொள்ள முடியாது. அவர்கள், "கேட்பதற்கு ஒன்றுமில்லை என்றால் எதற்காகப் போகிறீர்கள்?" என்று கேட்பார்கள். நாகரிக மனிதர்களுக்குப் புத்திபூர்வமான அணுகுமுறை ஒன்றுதான் தெரியும். அவர்களுக்கு இதயத்திற்கான வாயில்கள் இருப்பது தெரியாது. இதயத்தையும், புத்தியையும் இணைக்கும் வழி வார்த்தைகளுக்கு

அப்பாற்பட்டதாகும். இந்நாட்களில், நாம் தொலைதொடர்பு சாதனங்களைப் பெற்றிருக்கிறோம். ஆனால், தொடர்புதான் இல்லை. பழங்காலத்தில் மக்கள், கிருஷ்ணர் போன்ற மகான்களைத் தரிசிக்க விரும்பினர். ஏனெனில், ஸ்ரீகிருஷ்ணர் போன்றோர் திரும்பவும் அவதரிக்கக்கூடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. கடவுள் இந்த உலகைக் கைவிட்டுவிடவில்லை என்ற உண்மையை உறுதிசெய்து கொள்ள அவர்கள் விரும்பினர். பகவான் கிருஷ்ணர் போன்றோரின் கதைகள் வெறும் கதைகளல்ல. அவை இன்றும் நிகழும் உண்மையாகும். அன்பு நதியானது அம்மாவின் மூலம் பெருகிக் கொண்டிருக்கிறது. அந்த நதியில் கரைந்து இணைந்துவிட முயற்சிசெய்ய வேண்டும். இது, அனைவரும் இந்த அன்புநதியில் குதித்து, தங்களைத் தூய்மைப்படுத்திக்கொண்டு பேரானந்தம் எனும் கடலை அடைவதற்காக கிடைத்துள்ள அரிய வாய்ப்பாகும்.

இவ்வுலகில் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் சிறிதும் அறிமுகமில்லாதவர்கள் போல் வாழ்கிறோம். நாம் ஒருவரை ஒருவர் அறிவதில்லை. நம்மை நாம் அறிவதில்லை. அப்படியிருக்க, பிறரை அறிவது எப்படி? தன்னைத் தான் அறிந்தவர் எவரோ, அவரே அனைவரையும் அறிவார். தன்னைத் தான் அறியாத ஒருவரால் யாரையும் அறிந்துகொள்ள முடியாது.

தனக்கு ஒரு துணை வேண்டுமென விரும்பிய முதல் மனிதனின் கதை இது. கடவுள் முதன் முதலாக மனிதனைப் படைத்தார். அந்த மனிதனுக்குத் தனது தனிமை சலிப்பை அளித்தது. அவன் இறைவனிடம் தனக்கு ஒரு துணையைத் தருமாறும், தனிமை சலிப்பை அளிப்பதாகவும் கூறினான். கடவுள், காடுகள், மலைகள், பறவைகள், மிருகங்கள் என அனைத்தையும் படைத்துவிட்டு, இறுதியில் தான் மனிதனைப் படைத்தார். இதனால் படைப்புத் தொழிலுக்குப் பயன்படுத்திய எல்லாப் பொருள்களும் தீர்ந்துவிட்டன. கடவுள் தனது இயலாமையை மனிதனிடம் விளக்கினார். ஆனால் அவன் தொடர்ந்து அழுது அடம்பிடித்தான். வேறுவழியின்றி கடவுள், சிறிது பொறுத்திருக்குமாறும், பெண்ணைப் படைப்பதற்கு முயற்சி செய்வதாகவும் கூறினார். படைப்புக்குத் தேவையான பொருள்கள் எதுவும் அப்போது இல்லை. எனவே, கடவுள், மிருகங்கள், பறவைகள், மலர்கள், செடிகள் என அனைத்திடமும், அவர்களுக்கென அளிக்கப்பட்டதிலிருந்து சிறிதளவு திரும்பித்தருமாறு கேட்டார். அப்படிப் பெற்றதைப் பயன்படுத்தி அவர்

பெண்ணைப் படைத்து, மனிதனிடம் கொடுத்தார்.

ஒரு வாரம் கழிந்தது. அந்த மனிதன் திரும்பி வந்து இறைவா பெண் பெரிய தொல்லை. எனக்குத் துணை கிடைத்தது என்பது உண்மை தான். ஆனால், சில வேளைகளில் அவள் கிளியைப் போல் இனிய மொழி பேசுகிறாள். மற்றும் சில வேளைகளில் புலியைப் போல் சீறுகிறாள். இனிமையாக நடந்துகொள்ளும் அவளே கொடூரமானவளாகவும் இருக்கிறாள். எப்போதும் சண்டை போடுகிறாள். முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறாள். நான் வெறுத்துவிட்டேன். தனிமையே மேல். தயவுசெய்து அவளைத் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

கடவுள், பெண்ணைத் திரும்ப அழைத்துக் கொண்டார். ஏழு தினங்களுக்குப் பிறகு மீண்டும் வந்த மனிதன், "அவள் என் வாழ்வைக் கடுந்துயர் நிறைந்ததாக்கினாள் என்பது உண்மைதான். ஆனால், அவளை இழந்த நான் மிகவும் வருந்துகிறேன். இந்த ஏழு தினங்களாக நான் உண்ணவோ, உறங்கவோ இல்லை. அவள் நினைவாகவே இருக்கின்றேன். அவளை எனக்குத் திருப்பித் தரவேண்டும்" என்றான்.

அடுத்த ஏழு தினங்களில் திரும்பவும் இறைவனை நாடிவந்த அவன் "என்னால் அவளுடன் வாழவும் முடியவில்லை. அவள் இல்லாமல் வாழவும் முடியவில்லை" என்றான்.

கடவுள் அவனிடம் "எத்தனை நாள் உனது முட்டாள்தனமான பேச்சை நான் கேட்டுக் கொண்டிருப்பது? உனக்குத் தேவையானது எது என்பதை நீயே தீர்மானித்துக் கொள்" என்றார். அன்று முதல் மனிதன் தனக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுக்க முயன்று கொண்டிருக்கிறான். ஆனால், இன்று வரை அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை.

இம்முயற்சி வெற்றிபெறுவது இயலாத செயல். ஏனெனில், நாம் தனிமையில் இருக்கும் போது, அந்தத் தனிமையைக் கண்டு பயப்படுகிறோம். நம்முடன் யாராவது இருக்கும் போதோ. அவரது அருகாமையே நமது அமைதியைக் குலைக்கிறது.

ஆனால், அம்மாவின் சாந்தித்தியம் மிகவும் வித்தியாசமானதும்,

வேறுபட்டதுமாகும். அம்மாவின் தெய்வீக சாந்நித்தியத்தால் நமது மனதின் இயக்கத்தை நிறுத்தவும், நம்மை தியானநிலைக்கு அழைத்துச் செல்லவும் முடியும். அனைவரும் அம்மாவின் திருசந்நிதியில் குழந்தைகளைப் போல் ஆகிவிடுகிறார்கள். அது ஏன்? ஏனெனில், தெய்வீக அன்புக்கு முன்னால் அகங்காரம் செயல்பட முடியாது.

பல வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. இது நான் ஆசிரமத்தில் நிலையாகத்தங்க ஆரம்பிப்பதற்கு முன்பு நிகழ்ந்தது. அந்நாட்களில் அம்மாவின் தேவைகளைக் கவனித்துக்கொள்ள யாரும் இல்லை. இல்லற பக்தர்கள் அம்மாவின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முன்வந்தனர். ஆனால், அம்மா யாருடைய சேவையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர் அனைவருக்கும் சேவை செய்ய விரும்பினார். அம்மாவுக்கு சேவைசெய்யும் வாய்ப்பைத் தங்களுக்கு அளிக்குமாறு பக்தர்களில் சிலர் அம்மாவிடம் இடைவிடாது வேண்டி வந்தனர்.

அக்காலத்தில் அம்மாவின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்த ஒரு குடும்பத்தினர் அம்மாவுக்கு எப்போதும் சேவைசெய்ய விரும்பினர். மாதத்தில் ஒருமுறை, அவர்கள் அம்மாவைத் தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். அம்மா ஓய்வெடுப்பதற்குத் தங்கள் இல்லமே மிகவும் பொருத்தமான இடம் என அவர்கள் எண்ணினர். பல பக்தர்களும் இதே எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர். ஏதாவது வாய்ப்பு கிடைத்துவிட்டால், அவர்கள் அம்மாவைத் தங்கள் இல்லத்திற்குக் கடத்திச் சென்றுவிடுவார்கள். இதனால், அவர்களது குடும்ப அங்கத்தினர்கள் அம்மாவின் ஆனந்தமயமான சாந்நித்தியத்தை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். உண்மையில், அம்மா அங்கு சிறிதும் ஓய்வைப் பெறமுடிந்ததில்லை. ஒருமுறை அம்மாவைத் தங்கள் இல்லத்தில் அழைத்துச் சென்றவர்கள், அம்மாவுக்குத் தங்களை விட நெருங்கிய பக்தர் வேறு எவரும் இல்லை என்று நினைப்பார்கள். இந்த நினைவால் அவர்கள் அம்மாவைக் கட்டுபடுத்தவும் முயற்சி செய்வதுண்டு. அம்மா எங்கு செல்லலாம், எங்கு செல்லக் கூடாது என்பது குறித்து அம்மாவுக்கு அவர்கள் அறிவுரை வழங்குவார்கள்.

நாளடைவில் ஒரு குடும்பம் அம்மாவின் மீது ஆதிக்கம் செலுத்தத் துவங்கியது. அவர்கள் அம்மாவை அடிக்கடி தங்கள் இல்லத்திற்கு அழைத்துச்

சென்றனர். ஆனால் தங்கள் குடும்ப அங்கத்தினர்களைத் தவிர வேறு எவரும் வீட்டிற்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. வேறு யாரும் தொல்லையும் இன்றி, அக்குடும்பத்தினர் மட்டும் அம்மாவைச் சுற்றிலும் அமர்ந்து, அவரது அன்பை அனுபவிக்க விரும்பினர். இதனால், எவ்விதக் கஷ்டமுமின்றி அவர்கள் தங்கள் வீட்டில் அம்மாவின் தரிசனத்தை வெகுநேரம் பெறும் வாய்ப்பைப் பெறமுடியும்.

ஒருநாள் பாவதரிசனம் நிறைவுற்றது. நான் களரியின் முன் மண்டபத்தில் பாலுவுடன் (சுவாமியுடன் அம்ருதஸ்வரூபானந்த புரி) அமர்ந்திருந்தேன். அம்மா களரியிலிருந்து வெளியில் வந்தார். மண்டபத்தில் அமர்ந்திருந்த எங்களைக் கண்ட அம்மா அருகில் வந்து, எங்கள் காதுகளில் மெல்லிய குரலில், "அம்மா கொல்லத்திலுள்ள பக்தரின் வீட்டிற்குப் போகிறேன். நீங்கள் இருவரும் என்னுடன் வரலாம்" என்றார். இதைக் கூறிவிட்டு, உடை மாற்றிக் கொள்வதற்காக அறைக்குள் சென்றார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு அம்மா கொல்லத்தைச் சேர்ந்த பக்த குடும்பத்தினரிடம், எங்கள் இருவரையும் தன்னுடன் காரில் அழைத்து வருவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டோம். ஆனால், குடும்பத் தலைவர், தங்கள் கார் மிகவும் சிறியது என்றும், எங்கள் இருவரையும் காரில் ஏற்றிக் கொள்ள முடியாது என்றும் கூறிவிட்டார். அம்மா அவர்களை வற்புறுத்தவில்லை. அவர் எங்களிடம் வந்து "குழந்தைகளே, அவர்கள் காரில் இடமில்லையாம்" என்றார். நாங்கள் அம்மாவிடம், எங்களைப் பற்றி வருந்த வேண்டாம் என்றும், பஸ்ஸில் வருவதாகவும் கூறிவிட்டு, பஸ்நிறுத்தத்தை நோக்கி நடந்தோம்.

ஒரு மணிநேரத்திற்குப் பிறகு நாங்கள் அந்த பக்தரின் வீட்டை அடைந்தோம். ஆனால், அதுவரை அம்மா வந்து சேரவில்லை, அம்மா வருவதற்கு ஏன் தாமதமாகிறது. என்பது புரியாமல், கவலையுடன் வெகுநேரம் நாங்கள் காத்திருந்தோம். அம்மா வந்து சேர்ந்த போது நடந்த கதையை அறிந்தோம்.

அக்குடும்பத்தினர் எங்களைக் காரில் அழைத்துவராதது அம்மாவுக்கு வருத்தத்தை அளித்தது. எனவே, அம்மா அவர்களுடன் பேசவே இல்லை.

மௌனமாகக் காரில் ஏறி அமர்ந்தார். அமர்ந்ததும் கண்களை மூடிக்கொண்டார். இதுபோல் இதுவரை நடந்ததில்லை. காரில் பயணம் செய்யும் வேளையில் அம்மா பஜனை பாடுவார். நகைச்சுவையாகப் பேசுவார். இவ்விதம் அனைவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவார். ஆனால் இம்முறை அவரது மனநிலை முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

அம்மாவிடம், காரில் இடமில்லை என்று சொன்னவர் காரைக் கிளப்ப முயற்சி செய்தார். ஆனால், கார் இயங்க மறுத்தது. அவர் திரும்பத் திரும்ப முயற்சி செய்தார். காரிலிருந்து விசித்திரமான ஒலி புறப்பட்டது. அவ்வளவு தான் தனது முயற்சிகள் அனைத்தும் பயனளிக்காத நிலையில் அவர் பின்புறம் திரும்பி அம்மாவைப் பார்த்தார். அம்மாவோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அந்த மனிதர் கிராம மக்களை உதவிக்கு அழைத்தார். காரின் பேட்டரி பலவீனமாகிவிட்டதாகக் கருதி, அவர்களிடம் காரைப் பின்னாலிருந்து தள்ளிவிடுமாறு கூறினார். சிலர் காரைத் தள்ளிவிட உதவினர். ஆனால் அம்முயற்சியும் தோல்வியடைந்தது. அம்மா உறங்கிக் கொண்டிருந்த காரணத்தால் அம்மாவை எழுப்பிவிட்டு, காரை ரிப்பேர் செய்ய விரும்பவில்லை. அதனால், அவர்கள் அம்மா விழிக்கும்வரை காத்திருந்தனர். ஆனால் நேரம் கடந்து கொண்டிருந்தது. இறுதியில் அவர்கள், அம்மாவை வாடகைக்காரில் அழைத்துச் செல்ல முடிவுசெய்தனர். ஆனால், அம்மாவை உறக்கத்திலிருந்து எழுப்புவது நல்லதல்ல என்பதை அவர்கள் அறிவர். ஏனெனில், மிகவும் அபூர்வமாகவே அம்மாவுக்கு உறங்குவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

நாங்கள் கொல்லத்திலுள்ள வீட்டை அடைவதற்கு வாய்ப்பளித்த அம்மா நான்குமணி நேரத்திற்குப் பிறகு கண்களைத் திறந்தார். அம்மா கண்களைத் திறந்த போது காரைச் சுற்றிலும் மக்கள் கூட்டம் கூடியிருந்தது. குடும்பத்தலைவர் நடந்ததை அம்மாவுக்கு விளக்கிவிட்டு, வாடகைக் காரில் வந்து அமருமாறு அழைத்தார். அம்மாவோ மீண்டும் ஒருமுறை முயற்சி செய்யுமாறு கூறினார். அம்மா கூறியபடி அவர் முயற்சி செய்ய, எந்தவிதத் தடங்கலுமின்றி கார் உடனே புறப்பட்டது. இது எப்படி சாத்தியம்? அவர் மிகுந்த வியப்புடன் அம்மாவின் முகத்தைப் பார்த்தார். அவரது முகத்தில் கம்பீரமான புன்னகை காணப்பட்டது. அம்மாவின் புன்னகையின் பொருளை அவர் புரிந்துகொண்டார். தனது தவறை மன்னிக்குமாறு அம்மாவிடம் வேண்டினார். அம்மா வீட்டை அடைந்தபோது நாங்கள் வீட்டு வாயிலில்

காத்து நின்றோம். அம்மா நேரடியாக எங்கள் அருகில் வந்து இருவரையும் அணைத்துக் கொண்டார். அதன் பிறகு அவர்களை நோக்கித் திரும்பி "என் குழந்தைகள் இவ்விதம் அவமதிக்கப்படுவது இது முதன்முறையல்ல. ஆனால், பிறர் செய்யும் அவமரியாதை அவர்கள் என்னை நாடி வருவதைத் தடுத்து நிறுத்த முடியாது. என் குழந்தைகள் ஒருநாளும் என்னிடம் புகார் சொன்னதில்லை. அன்பு இருக்குமிடத்தில், புகாரோ, கோரிக்கையோ இருக்க இயலாது."

யாராவது அம்மாவின் அன்பைக் குறித்து கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஒவ்வொருவரையும் மகிழ்விப்பதற்காக அவர் தான் எவ்வளவு கஷ்டப்படுகிறார். இந்நிலையில் ஒருவர் அம்மாவை நோக்கி கேட்ட கேள்வியானது சூழ்நிலையின் இறுக்கத்தை அடியோடு மாற்றிவிட்டது. "அம்மா, உங்களுக்குக் கார் மெக்கானிக் வேலை தெரியுமா?"

இந்தக் கேள்வியைக் கேட்ட அம்மா வாய்விட்டுச் சிரித்துவிட்டார். அவரைத் தொடர்ந்து அனைவரும் சிரித்தனர். அம்மா எங்கள் மீது வைத்துள்ள அன்பை எண்ணிக் கண்களில் கண்ணீர் பெருக நின்ற நாங்கள் இருவரும் அச்சிரிப்பில் கலந்து கொண்டோம். இது தான் தெய்வீக அன்பின் வியத்தகு ஆற்றலாகும். தெய்வீக அன்பானது நம்மை பேரானந்தப் பெருங்கடலுக்கு அழைத்துச் செல்லமுடியும். இதை ஒருவர் தனது மரணத்திற்குப் பிறகு அனுபவிக்க முடியாது. இவ்வுடலில் வாழ்ந்திருக்கும் போதே, இப்பேருண்மையை நாம் அனுபவிக்கமுடியும். நாம் அனைவரும் தெய்வீக ஆனந்தத்தை அனுபவிப்பதற்கு அம்மா நமக்கு அருள்புரியட்டும்.

12. நவராத்திரி



நவராத்திரி பாரதம் முழுவதும் கொண்டாடப்படும் விழாவாகும். நவராத்திரி என்று சொல்லும் போதே ஒன்பது இரவுகள் என்பது தெளிவாகிறது. நாம் இப்போது இரவில்தான் வாழ்கிறோம்: அதாவது, அறியாமை இருளில், அறியாமை இருளை நீக்கி ஞான ஒளியை உள்ளத்தில் பரவச் செய்வதுதான் நவராத்திரி பூஜை. இவ்வாறு ஒன்பது இரவுகள் முடிந்து பத்தாவது நாளான விஜயதசமி வருகிறது. இங்கே "விஜயம்" (வெற்றி) சாதாரண விஜயமல்ல. மனதின் பலவீனங்கள் மற்றும் எல்லைகளின் சங்கிலியை உடைத்து, பரிபூரண சுதந்திரம் பெறும் போது ஏற்படும் விஜயமாகும்.

நவம் என்ற வார்த்தைக்கு 'புதியது' என்றும் பொருளுண்டு. மனதின் பாபங்கள் எல்லாவற்றையும் கழுவி சுத்தம் செய்யும் போது புதிய பிறவி கிடைக்கிறது - ஒரு மறுபிறவி. இந்த உடல் பராசக்தியின் வாசஸ்தலமாகும் என்பதை அறிகிறோம். பின்னர் ஆத்மாவின் புதுமையை மட்டுமே எங்கும் தரிசிக்க முடிகிறது.

நவராத்திரி பூஜையின் முதன் மூன்று தினங்கள் சிம்மவாகினியான துர்க்கையை வழிபடுகின்றோம். துர்க்கை சக்தியே வடிவானவள்! உக்கிர மூர்த்தி, துர்க்கையை வழிபடுவது நம்முடைய உள்ளத்திலுள்ள விருப்பு வெறுப்புக்கள், ஆசை கோபங்கள் ஆகியவையை நசிப்பற்காகவே ஆகும். சக்தி இருந்தால்தான் மன உறுதி வரும். அப்போதுதான் நம் உள்ளத்தில் உள்ள எதிரிகளை அழிக்க முடியும். மனம் சலனமற்று இருக்கும் போது பிறக்கும் சக்தியே துர்க்கை, தேவியின் கையிலுள்ள வாள் வைராக்கியத்தின் சின்னமாகும். அது ஞானவாள், இறைவனை அறிவதற்கான தீவிரமான தாகமே வைராக்கியம். அந்த வாளால்தான் மனதின் அசுர குணங்களை அழிக்க

முடியும். மஹிஷாசுரனை தேவி அழிப்பதன் தத்துவம் இதுவே ஆகும். உண்மையில் துர்க்காதேவியை வழிபடுவதன் மூலம் நம்முடைய அகத்தில் உள்ள சக்தியையே நாம் விழிப்படையச் செய்கிறோம். அந்த சக்தி விழிப்படைந்தால் தான் மனதின் பலவீனங்களை போர் செய்து தோல்வியுறச் செய்ய முடியும்.

இவ்விதம் ஆத்மசக்தியால் தீயவாசனைகளை அகற்றிவிட்டால் அடுத்தபடியாக நற்குணங்கள் உள்ளத்தில் நிறையும். அதற்காகவே அடுத்த மூன்று தினங்கள் ஐஸ்வரியத்தின் சின்னமான லஷ்மியை வழிபடுகிறோம். லஷ்மி பூஜையின் மூலம் அன்பு, கருணை, இரக்கம், தானம். பொறுமை. சகிப்புத்தன்மை போன்ற தெய்வீக செல்வத்தைப் பெற வேண்டும். மனமாசுகளை அகற்றி, அங்கே நற்குணங்கள் தோன்றிவிட்டால் பின்னர் ஞானம் உதயமாகும். அதனால் தான் கடைசி மூன்று தினங்களில் வித்யா வடிவான ஸரஸ்வதி தேவியை வழிபடுகிறோம்.

பத்தாவது நாள் விஜயதசமி, இதை தசரா என்றும் சொல்வர், தச பாப ஹர என்பதே இதன் பொருள் , ஞானேந்திரியங்களின் மூலமும். ஐந்து கர்மேந்திரியங்கள் மூலமுமே மனம் உலகியல் சுகங்களை அனுபவிக்கின்றது. அதனால் தான் எங்கும் நிறைந்துள்ள இறைவடிவை நம்மால் உணர முடியவில்லை. வெளிமுகமாக நிற்கும் இந்த பத்து இந்திரியங்களே தசபாபங்களை (பத்து பாபங்கள்) செய்கிறது. அதை அழித்து, ஞானத்தின் வெற்றியைப் பெறும் நாளே விஜயதசமியாகும்.

நவராத்திரியின் கடைசி மூன்று தினங்கள் தொழிலாளியும், முதலாளியும், பண்டிதரும், பாமரரும், பணக்காரரும், ஏழையும், பிராமணரும், அல்லாதாரும், மாணவமணிகளும், ஆசிரியர்களும் தாங்கள் வேலை செய்ய உபயோகிக்கும் ஆயுதங்களை பூஜைக்கு வைக்கிறார்கள். ஜப தியானங்களுடன் இந்த நாட்களை செலவிடுகிறார்கள். அனைத்தையும் (உயிருள்ள, உயிரற்ற பொருள்களை) இந்நாட்களில் வழிபடுகின்றனர். அறிவின் ஆதாரமான அக்ஷரத்தை, அழிவற்ற பராசக்தியை அனைவரும் வணங்குகின்றனர். முதல் அக்ஷரங்களான 'ஹரி, ஸ்ரீ' எழுதி குழந்தை முதல் முதியோர் வரை அனைவரும் எல்லையற்ற அறிவின் முன்னால் சிறுகுழந்தைகள் ஆகின்றனர். இதை எப்போதும் நினைவுகூர முடிந்தால் வாழ்க்கை பொருளுள்ளதாகும்.

பின்னர் சக்தி வடிவான தேவி நமக்கு என்றும் வெற்றியை வழங்குவாள்.

மூன்றிற்கும் அவற்றின் பெருக்குத் தொகைக்கும் ஹிந்து சாஸ்திரத்தில் குறிப்பிட்ட இடமுண்டு . குறிப்பாக 18க்கு தனி இடமுண்டு . நம்முடைய சாஸ்திரத்தின்படி (எண் ஜோதிடம்) 18க்கு ஜயம், விஜயம் என்ற பொருளுண்டு. மஹாபாரதத்தின் மற்றொரு பெயர் ஜய என்பதாகும். பகவத்கீதைக்கு 18 அத்தியாயங்கள் உள்ளன. 18 அக்ருரோனி படை மகாபாரதப் போரில் பங்கெடுத்தது. குருக்ஷேத்திரப் போர் 18 தினங்கள் நடைபெற்றன. பகவான் 18 இலட்சணங்களின் மூலம் ஸ்திதப்ரக்ஞனை விவரிக்கிறார். நம்முடைய புராணங்களும், உபபுராணங்களும் 18 ஆகும். நவராத்திரியிலும் 9 உண்டு. 18ன் பாதியே ஒன்பதாகும். சுருக்கமாகக் கூறினால், அனாத்மாவை தோல்வியுறச் செய்து ஆத்மஞானம் பெறுவதுதான் நவராத்திரியின் தத்துவமாகும்.

13. டாக்டர்.அம்மா

திரு.பாலா

பட்டமளிப்பு விழாவை நேரில் காணும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் பெற்ற அனுபவத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இது ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும். ஒரு விஞ்ஞானியையோ, பொறியியல் வல்லுநரையோ தேர்ந்தெடுக்காமல், ஒரு மகானை, ஆன்மிகத் தலைவியைத் தேர்ந்தெடுத்த நியூயார்க் பல்கலைக் கழகத்தின் சரித்திரத்தில் இது மிக முக்கியமான நிகழ்ச்சியாகும்.

ஒரு பல்கலைக்கழக நிர்வாகி (ஸ்டேட் யுனிவர்ஸிடி நியூயார்க் 64 பல்கலைக்கழக மையங்கள் கொண்டது) தமது உரையின் போது "அம்மாவைக் கௌரவிப்பதன் மூலம், அம்மா பிரதிநிதியாக வந்துள்ள பாரத நாட்டின் பரம்பரையான பண்பாடு மற்றும் ஆன்மிகத்தையும் நாங்கள் கௌரவிக்கிறோம்" என்றார். இது ஸநாதன தர்மத்திற்கு மிக சிறப்புமிக்க தினமாகும்.

நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பு விழா ஹாலில் அம்மாவின் புகைப்படங்கள்

மற்றும் எட்டிமடை கல்லூரி, அமிர்தபுரி கல்லூரி, ஸ்டேட் யுனிவர்ஸிடி நியூயார்க் ஆகியவற்றின் புகைப்படங்களும் ஸ்லைட் - ஷோவாகக் காட்டப்பட்டன.

தொடர்ந்து முக்கிய நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. திரு.ஸ்டிபன் அவர்கள் முன்னறிவிக்க, விழாக்குழுவானது மேடையை நோக்கி அணிவகுத்து வந்தது. அவ்வமயம் ராகுல் இசையமைத்த புதிய பாடல் ஒலிபரப்பப்பட்டது. பிரஸிடென்ட் டாக்டர் ஜான் சிம்சன், கல்லூரிகளின் தலைவர் டாக்டர் சதீஷ் த்ரிபாடி மற்றும் நியூயார்க் யுனிவர்ஸிடியின் முக்கியப் பிரமுகர்களுடன், நமது விச்வ வித்யா பீடத்தின் துணைவேந்தர் டாக்டர் வெங்கட்ரங்கன் அவர்களும், பிறரும் மேடைக்குச் சென்றனர்.

அம்மா ஹாலுக்குள் நுழைந்த போது, ஹாலில் அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து மகிழ்வுடன் கரவொலி எழுப்பினர். அம்மா தமக்குரிய இருக்கையில் அமர்ந்தபின் பிரசிடென்ட் டாக்டர் ஜான் சிம்சன் அவர்கள், பார்வையாளர்களுக்கு அம்மாவை அறிமுகப்படுத்த முயன்றார்.

"அம்மாவைப் பற்றி ஒரு சில வரிகளில் விவரிப்பது என்பது மிகவும் கடினமான செயல்" என்று பிரசிடென்ட் குறிப்பிட்டதே அவர் முயன்றார் என்பதன் காரணமாகும். கல்வித்துறையில் அம்மாவின் பங்கு, மனிதநேயத் தொண்டு மற்றும் ஆன்மிகத்தில் அம்மா ஆற்றிவரும் அளப்பரும் பங்கைப் பற்றி விவரித்த அவர், "தொடர்ந்து ஒளிபரப்பப்படும் வீடியோ உலகுக்கு அவர் ஆற்றிவரும் தொண்டுகளைப்பற்றி தெளிவாக விவரிக்கும்" என்றார்.

தொடர்ந்து புதியதாக வடிவமைக்கப்பட்ட 'அகிலத்தை அரவணைத்தல்' என்ற வீடியோ ஒளி பரப்பப்பட்டது. அதில் அம்மாவின் தரிசனம் முதல், இயற்கைச் சீற்றத்தால் (சுனாமி, பூகம்பம், சூறாவளி, விவசாயிகள் தற்கொலை போன்றவற்றால்) பாதிக்கப்பட்டவர்களுக்கு மடம் வழங்கிய நிவாரணப் பணிகள் விரிவாக ஒளிபரப்பப்பட்டன.

பிரசிடென்ட் மேலும், "நம்புதற்கரிய மனிதநேயத் தொண்டுகளை ஆற்றிவரும் வியக்கத்தக்க தனித் தன்மை வாய்ந்த ஆன்மிகத் தலைவியான அம்மாவுக்கு மிக உயர்ந்த கௌரவ டாக்டர் விருது

அளிப்பதில் நாங்கள மகிழ்ச்சி அடைகிறோம்" என்றார்.

அதனைத் தொடர்ந்து அவர் அம்மாவை மேடைக்கு வருமாறு அழைத்தார். ஸ்டேட் யூனிவர்ஸிடி நியூயார்க்கின் அறங்காவலர் யூனைஸ் லெவின் அம்மாவுக்கு டாக்டர் விருது பெறுவதற்காக அணியும் கோட்டை அணிவித்தார். அவ்வமயம், ஹாலில் அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பினர். பலரது கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

இதனைத் தொடர்ந்து அம்மா அருளுரை வழங்கினார். தமக்கு விருந்தளித்த பல்கலைக்கழகத்திற்கு நன்றி செலுத்திய அம்மா, "நிறுவனத்தின் தொண்டுப் பணிகள் நல்லவகையில் நடப்பதற்கு, ஆயிரக்கணக்கான அம்மாவின் குழந்தைகளின் சுயநலமற்ற சேவையே காரணம். ஆகவே, இந்த விருது அவர்களுக்குரியது" என்றார்.

மேலும், அறிவியல் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் உலகம் முன்னேறி வருகிறது; ஆனால், குடும்ப உறவு பிரிகிறது. தீவிரவாதம் அதிகரித்து வருகிறது; இயற்கை மாசடைகிறது போன்ற இன்றைய அவல நிலையையும் எடுத்துக் காட்டினார்.

ஆன்மிகமும் ஒரு அறிவியலாகும். பழங்கால ரிஷிகள் தங்கள் உள்ளார்ந்த பயிற்சியின் மூலம் அறிந்த உண்மையை விவரிப்பதாகும். இது இன்றைய முக்கிய தேவை எனவும் குறிப்பிட்டார்.

அம்மாவின் உரைக்குப் பிறகு சுவாமிஜி பாடிய, 'வாகதீச்வரி' என்ற பாடலுக்கு பாரத சிறுமிகள் நடனமாடினர். மாலையில் சிறப்பு விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்தின் நிறைவில் அம்மா அங்கு வந்திருந்த அனைவருக்கும் தரிசனமளித்தார்.

அம்மாவுக்கு நியூயார்க் பல்கலைக்கழகம் டாக்டர் விருது அளித்து கௌரவித்த போதும், அம்மா இந்த விருதை ஏற்றுக் கொண்டதை தங்களுக்குக் கிடைத்த அருளாக அவர்கள் கருதினர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

14.உண்மை இன்பம்

திருமதி. மீனாட்சி பழனியப்பன்

15 வருடங்களுக்கு முன் அம்மாவை நான் முதன்முதலாகத் தரிசித்தேன். ஒருமுறை நான் அம்மாவைத் தரிசிக்க ஆசிரமம் சென்றேன். அன்று தேவிபாவதரிசன நாள், அம்மா அருளுரை வழங்கிய போது, "பக்தர்கள் தங்களது பொறுப்பை முழுமையாக இறைவனின் கைகளில் ஒப்படைத்து விட்டால் அவர்களின் தேவைகளை இறைவன் நிறைவேற்றுவார் எனறும், நாம் தினசரி இருவேளை அருந்தும் தேநீரில் ஒருவேளைத் தேநீரைத் தியாகம் செய்து, அதில் மிஞ்சும் பணத்தை, துன்பத்தால் வாடும் ஏழைக்குக் கொடுத்து உதவலாம், ஒரு வேளைத் தேநீர் அருந்தாத காரணத்தால் ஒன்றும் ஆகிவிடாது என்றும் கூறினார்." இதைக் கேட்ட நான் திடுக்கிட்டேன். ஏனெனில் அம்மா மேடைக்கு வந்துவிட்டார் என்பதை அறிந்த நான் அம்மாவைத் தரிசிக்கும் ஆவலில் தேநீர் அருத்தாமல் ஹாலுக்கு ஓடிச் சென்றேன். அம்மாவின் அருளுரையைக் கேட்பதற்கு இடையிலும் என் மனம், தேநீர் குடிக்காமல் வந்துவிட்டதையே சிந்திந்துக் கொண்டிருந்தது. அம்மா தேநீரைப் பற்றி எனக்காகவே குறிப்பிட்டார் என்று எனக்குத் தோன்றியது. அத்துடன் ஒருவேளை உணவிற்குக் கூட வழியில்லாமல் கஷ்டப்படும் ஏழைகளைப் பற்றிச் சிந்தித்தேன். அம்மாவின் அருளுரையைக் கேட்பதற்கு முன்பும் ஏழைகளின் நிலை குறித்து நான் இரங்குவதுண்டு. என்னால் முடிந்த உதவியைச் செய்வதுண்டு. ஆனால், "எனது தேவையைக் குறைத்துக் கொண்டு, அதன்மூலம் கிடைக்கும் பணத்தை பிறருக்கு கொடுத்து உதவலாம் என்றோ, அதன் மூலம் அளவற்ற மகிழ்ச்சியை அனுபவிக்கலாம் என்றோ அப்போதுதான் நான் உணர்ந்தேன்" அம்மா சொல்வது மட்டுமல்ல, தனது வாழ்வையே அதற்கு உதாரணமாக மாற்றியவர். இதை அம்மாவைக் காணும் ஒவ்வொருவரும் நேரடியாகக் கண்டு உணர முடியும்.

நாம் பொதுவாக, மூன்று வேளை சிலர் நான்கு வேளை உணவு உண்ணும் வழக்கம் உள்ளவர்கள். அம்மாவின் ஆசிரமத்தில் மிக எளிய உணவே வழங்கப்படுகிறது. ஓய்வு நேரங்களில் நாம் வம்பு பேசியும், தொலைக்காட்சி, திரைப்படம் முதலியவைகளைப் பார்த்தும், பொருளற்ற சினிமா பாடல்களைக் கேட்டும் நேரத்தைச் செலவிடும் போது, அமிர்தபுரியில் வசிக்கும் அனைவரும் கடுமையாக உழைப்பதை நாம் காணலாம். 80, 90 வயதான முதியவர்கள் கூட ஊதுவத்திகளைப் பாக்கெட்டில் இடும் பணியைச் செய்கிறார்கள்.

ஆசிரமத்தில் தயாராகும் ஊதுவத்தி, கற்பூரம் போன்ற பூஜைப் பொருள்கள் முதல் ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஆசிர வெளியீடுகளான **மாத்ருவாணி, அம்மாவின் அருளுரைகள் அடங்கிய நூல்கள்** முதலிய அனைத்தும் ஆசிரமவாசிகளின் பிரதிபலன் எதிர்பாராத சேவையால் உருவாகின்றன. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் பல சமூகநல சேவைகளுக்கு உருவம் கொடுக்கின்றன.

அம்மாவின் அருளுரையைக் கேட்டதும் என்னால் இயன்ற அளவு அதைப் பின்பற்ற முடிவு செய்தேன். ஆசிரமத்திற்கு வரும் போது கொண்டுவரும் பணம் பயணம் மற்றும் உணவுச் செலவுக்கே சரியாக இருக்கும். அம்மாவின் புத்தகங்களை வாங்க நினைத்தாலும் அதற்குப் பணம் இருக்காது. தில்லையைக் காண விரும்பும் தனது ஆவலை நாளைக்கு என மாற்றிவைத்த 'திருநாளைப் போவாரைப்' போல நானும் அடுத்த முறை வாங்கலாம் என்று எண்ணியபடி ஊருக்குத் திரும்புவேன். இம்முறை, நான் தங்கியிருக்கும் இரண்டு நாளும் காலை உணவைத் தியாகம் செய்ய முடிவு செய்து, அந்தப் பணத்தில் அம்மாவின் அருளுரைகள் அடங்கிய புத்தகத்தை வாங்கிக் கொண்டு அறையை நோக்கிச் சென்றேன். அப்போது ஆசிரமத்தில் தங்கியிருந்த ஒரு பெண்மணி என்னை அழைத்து, தனது மகனுக்குக் கொடுப்பதற்காக இட்லி வாங்கியதாகவும் அவன் ஏதோ அவசர வேலையாக வெளியில் சென்று விட்டதால் அது இனி தேவைப்படாது என்றும் சொல்லி, தன்கையிலிருந்த உணவுப் பொட்டலத்தை எனக்குத் தந்தார். மறுநாள் காலை அர்ச்சனை தியானம் முடித்து அறையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த என்னிடம் அதே பெண்மணி முதல்நாள் கூறிய காரணத்தையே கூறி இட்லியைத் தந்தார். இரண்டு நாட்களும் ஒரே மாதிரி நிகழவே இது எதிர்பாராத நிகழ்ச்சியல்ல, அம்மாவின் கருணையே இதன் காரணம் என்பதை எண்ணி மனம் உருகினேன்.

அம்மா கூறியது போல் என் ஒருவேளை உணவைக் குறைத்துக் கொண்டு அம்மாவின் நூலை வாங்கிய எனக்கு நூலுடன் உணவும் கிடைத்தது. இதையே நான் ஏழை எளியோருக்கும் உதவச் செலவழித்தால் இறை அருள் (அம்மாவின் அருள்) என்றென்றும் என்னை வாழ வைக்கும் என்பதை உணர்ந்து கைகூப்பினேன். **ஒன்றைப் பெறுவதை விட, பிறருக்குக் கொடுப்பதில்தான், உண்மையான இன்பம் இருக்கிறது** என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தால் பூமியே சொர்க்கமாகி விடும். அந்நாள் விரைவில் வர அம்மாவின் திருவருளை வேண்டுவோம்.

15. கிருஷ்ணரது கிரீடம்



ஷீஜா ஒரு ஏழு வயதுக் குழந்தை. அம்மா அவளைச் செல்லமாகத் தக்காளி என்று கூப்பிடுவார். அவள் தனது மனதிற்குள், "இறைவா, அம்மா கிருஷ்ணபாவ தரிசனத்தின் போது அணியும் கிரீடத்தை நான் அணியும் பாக்கியத்தைத்தர வேண்டும்" என்று பிரார்த்தித்து வந்தாள். ஆனால், தனது பிரார்த்தனையை யாரிடமும் அவள் சொல்லியதில்லை. ஏனென்றால் அந்தக் கிரீடத்தை அம்மாவைத் தவிர வேறு எவரும் அணிந்ததில்லை. எனவே தனது பிரார்த்தனை நிறைவேறாது என்பதைத் தக்காளி அறிவாள்.

அந்த ஆண்டு கிருஷ்ண ஜயந்தி அன்று தக்காளி தனது பெற்றோருடன் ஆசிரமத்திற்கு வந்தாள். காயல்நீரைப் படகில் கடந்து ஆசிரமக் கரையை அடைந்தாள். அங்கே அம்மா அவர்களுக்காக காத்திருந்தார். அம்மா தக்காளியின் கையைப் பிடித்தவாறு அவளை ஆசிரமத்திற்குள் அழைத்துச் சென்றார். ஆசிரமத்திற்குள்ளே சில குழந்தைகள் பாலகிருஷ்ணனின் பிருந்தாவன லீலைகள் நாடகமாக நடிப்பதற்காக அழகாக வேஷம் தரித்துக் கொண்டிருந்தனர். அம்மா தக்காளியைக் கோயிலுக்குள்ளே கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவளுக்குத் தாமே கண்ணன் வேஷம் போட்டு விட்டார். அதன் நிறைவாகத் தாம் கிருஷ்ணபாவ தரிசனத்தின் போது தரிக்கும் கிரீடத்தைத் தக்காளிக்கு அணிவித்தார். இதைக் கண்டு தக்காளி பரவசம் அடைந்தாள். அவளை அம்மா மற்றக் குழந்தைகள் இருந்த இடத்திற்கு அழைத்து வந்தார். அந்தக் குழந்தைகளை வட்டமாக நிற்கச் செய்தார். தக்காளியை நடுவில் நிற்க வைத்தார். தக்காளியைப் பாலகிருஷ்ணனாகப் பாவித்துக் குழந்தைகளை நடனமாடச் சொன்னார். தக்காளியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தன்னுடைய பிரார்த்தனையை யாரிடமும் சொல்லாத போதும், அதை அம்மா தாமே உணர்ந்து, நிறைவேற்றி வைத்ததை நினைத்து

நினைத்து அந்தப் பிஞ்சு உள்ளம் மகிழ்ந்தது. களங்கமற்ற, தூய மனமுடையவர்களின் பிரார்த்தனையை இறைவன் எளிதில் நிறைவேற்றி வைக்கிறார்.

16. குஷ்ட ரோகி தத்தன்

தத்தன் இளம் வயதிலேயே குஷ்ட நோயால் பாதிக்கப்பட்டான். அவனை வெறுத்த பெற்றோர் வீட்டை விட்டே விரட்டி விட்டனர். சுற்றத்தார், எவரும் அவனுக்கு உதவவில்லை. வேலையும் கிடைக்கவில்லை. வேறு வழியின்றி அவன் பிச்சையெடுத்துப் பிழைத்தான். ஒரு கோயில் மண்டபத்தில் தங்கினான். நாளடைவில் நோய் அவனது உடல் முழுவதும் பரவி விட்டது, தலையிலிருந்த முடி முழுவதுங் கொட்டி விட்டது. நோயின் கடுமையால் கண்கள் பாதிக்கப்பட்டுச் சுருங்கி விட்டன. அதனால் பார்வை மிகவும் குறைந்து விட்டது. உடலெங்கும் புண்களும், அவற்றிலிருந்து வடியும் சீழுமாக அவன் கோரமாகக் காட்சி அளித்தான். அவன் அருகில் வந்தாலோ துர்நாற்றம் வீசியது. அதனால் மக்கள் அவனுக்கு உணவளிக்கத் தயங்கினர். ஆகவே அவன் பல நாட்களில் பட்டினி கிடக்க நேர்ந்தது. புண்களை மறைக்க மூடிய துணி சீழால் உடலோடு ஒட்டிக் கொள்ளும். ஈ போன்ற பூச்சிகள் அவனை மொய்த்துத் தொல்லை கொடுத்தன. அவனை எவரும் பேருந்தில் ஏற அனுமதிப்பதில்லை. மற்றப் பிச்சைக்காரர்கள் கூட அவனை வெறுத்தனர். அவனது நோயாலும், அதன் கடுமையாலும், அவனுக்கு அருகே வர நேருபவர்கள் தங்களுடைய மூக்கைப் பொத்திக்கொள்வார்கள். சிலர் காறி உமிழ்வதுமுண்டு. தத்தனிடம் எவரும் அன்பாகப் பேசுவதில்லை. உலகிலேயே மிகவும் கொடுமையான துன்பத்தை அனுபவிக்கப் பிறந்தவனாகத் தத்தன் தன்னை எண்ணி வந்தான்.

ஒரு நாள் சிலர் அம்மாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததைத் தத்தன் தற்செயலாகக் கேட்க நேர்ந்தது. அதனால் அவனுடைய உள்ளத்தில் சிறிதளவு நம்பிக்கை துளிர்விட்டது. அவன் அம்மாவைத் தரிசிக்க முடிவு செய்தான். எப்படியோ ஒரு தேவிபாவ தரிசன நாளன்று மாலையில் அவன் ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தான். கோயில் தாழ்வாரத்திலிருந்த பக்தர்கள் அவனைக் கர்ப்பக்கிருகத்திற்குள்ளே போய் அம்மாவைத் தரிசிக்க விடாமல் தடுத்தனர். அங்கிருந்து போகச் சொல்லி உரக்கக் கத்தினர். தத்தன் மனமொடிந்து போனான்.

அவனுடைய இதயம் சுக்கல் சுக்கலாகத் தெறித்து விடும் போலிருந்தது. "கடவுள் கூடத் தன்னைப் புறக்கணிக்கிறாரோ?" என்கிற எண்ணம் அவனைத் துடிக்கச்செய்தது. அப்போது கர்ப்பக்கிருகத்திற்குள்ளே இருந்து தரிசனமளித்துக் கொண்டிருந்த அம்மா அவனைப் பார்த்தார். அவர், "மகனே, மகனே அம்மாவிடம் வா மகனே" என்று அவனை அழைத்தார். தத்தன் தயங்கியபடியே அம்மாவை அணுகினான். அம்மாவும், தன்னை அருகே இருந்து பார்த்தால் வெறுத்துவிடுவாரே என்று அவன் பயந்தான். ஆனால் அருகே சென்ற போது அம்மாவின் முகத்தில் தவழ்ந்த அன்பையும் கருணையையும் கண்டதும் அவன் திக்கு முக்காடிப் போனான். "இது உண்மையா? என்னையும் ஒருவர் நேசிப்பாரா?" என்று எண்ணி எண்ணி வியந்தான். அதையும் விடப் பேரதிசயமாக அம்மா அவனைத் தமது திருக்கரத்தால் அன்போடு அரவணைத்துக் கொண்டார். ஒரு தாய் தனது செல்லக் குழந்தையை அன்பு பொங்கப் பார்ப்பதையும் விடப் பேரன்பு தவழ அம்மா அவனைப் பார்த்தார். அந்த அன்பு வெள்ளத்தில் தத்தன் தன்னை மறந்தான்.

இதைப் பார்த்து வியந்து கொண்டிருந்த பக்தர்கள், அடுத்ததாக அம்மா செய்த செயலைக் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தனர். அம்மா தத்தனின் புண்களிலிருந்து சீழையும், இரத்தத்தையும் தமது வாயால் உறிஞ்சி எடுத்து, ஒரு பாத்திரத்தில் உமிழலானார். பின்னர் அம்மா அவனைக் கோயிலுக்குப் பின்புறம் அழைத்துச் சென்றார். அங்கே பல குடம் நீரால் அவனை நீராட்டினார். அதன் பிறகு அவனுடைய புண்களில் விபூதியைப் பூசியதோடு, அவனது உடல் முழுவதும் விபூதியைப் பூசினார். அம்மாவின் பேரன்பால் தத்தனின் மனம் சொல்லொண்ணாத அமைதியை அனுபவித்தது.

அதன் பிறகு தத்தன் ஒவ்வொரு பாவதரிசன நாளிலும் அம்மாவைத் தரிசிக்க வந்தான். ஒவ்வொரு முறையும் அம்மா அவனுடைய புண்களைத் தமது வாயால் சுத்தம் செய்து, அவனை நீராட்டி, அவனுடைய புண்களிலும், உடம்பிலும் விபூதி பூசி அவனை அனுப்பி வைத்தார். தனது விசேஷமான அன்பிற்குரிய குழந்தையைப் போல் அவனை அம்மா நடத்தி வந்தார். இவ்வாறு எப்படி அவரால் நடந்து கொள்ள முடிகிறதென்று பக்தர்கள் அம்மாவிடம் கேட்ட போது "அவன் மீது அன்பும் அக்கறையும் காட்ட வேறு யார் இருக்கிறார்கள். அம்மா அவனுடைய உடலைப் பார்க்கவில்லை அவனது இதயத்தைத் தான் பார்க்கிறேன். அம்மா அவனைப் புறக்கணிக்க இயலாது. அவனும் அம்மாவின் மகனே ஆவான்.



2004இல் பார்சிலோனாவில் நடைபெற்ற அகில உலக சமய மகாநாட்டில் தலைமைச் சொற்பொழிவு ஆற்றுகின்றார் அம்மா



குஷ்டரோகியை அரவணைத்து முத்தமிட்டு ஆறுதல் தரும் அம்மா

மகனை அம்மா கைவிட்டு விடுவாளா?' என்று பதிலளித்தார்.

நாளடைவில் தத்தனது நோய் படிப்படியாகக் குணமாகி வந்தது. அம்மாவின் எச்சிலே அவனைக் குணப்படுத்திய தெய்வக மருந்தாகியது. அவனுடைய கண்களும் குணமாகின. அவனால் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவனது தலையில் முடி முளைத்தது. அவன் பேருந்தில் பிரயாணம் செய்வதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. மக்கள் அவனுடன் பேசினர். அவனுக்கு உணவளித்தனர். அவனது புண்கள் ஆறி, வெறும் தழும்புகள் மட்டுமே இருந்தன. அதனால் அவன் உடலிலிருந்த துர்நாற்றம் நீங்கி விட்டது. அவனால் வேஷ்டியும். சட்டையும் அணிந்து கொள்ள முடிந்தது. தத்தன் புதிய பிறவி எடுத்தவனானான். ஒரளவு மகிழ்வுடன் வாழ ஆரம்பித்தான்.

17. முடமான நோயாளி குணமடைந்தார்.

இந்தியாவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் அமெரிக்காவிலுள்ள பாஸ்டன் நகரில் வாழ்ந்து வருகின்றனர். இளைஞனான அவர்களுடைய மகன் ஒருநாள் அந்த நகரத்து வீதி ஒன்றில் நடந்து சென்று கொண்டிருந்தான். அந்த வீதியில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு வந்தது. அதன் கட்டுமானப் பணிக்காக இரும்புக் குழாய்களால் சாரம் அமைக்கப்பட்டிருந்தது. இளைஞன் அந்தக் கட்டடத்தின் முன் நடந்து போன போது எதிர்பாராமல் சாரம் விழுந்து விட்டது. சாரத்தின் இரும்புக் குழாய்கள் இளைஞனைப் பலமாகத் தாக்கின. பலத்த காயத்துடன் அவன் பாஸ்டனுக்குகருகே இருந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். அவனது கால்கள் செயலிழந்து விட்டன. மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றும் அவனைக் குணப்படுத்த முடியவில்லை.

இது 1998ம் ஆண்டு நிகழ்ந்தது. அந்த ஆண்டு அமெரிக்க விஜயத்தின் போது அம்மா நியூயார்க் நகரில் தரிசனமளித்துக் கொண்டிருந்தார். இளைஞனின் பெற்றோர் அங்கே வந்து அம்மாவைத் தரிசித்தனர். அவர்கள் அம்மாவிடம் பாஸ்டன் மருத்துவமனையில் இருக்கும் தங்களது மகனை அம்மா வந்து பார்க்குமாறு வேண்டினர். அம்மா அதற்கு சம்மதித்தார். அவர் நியூயார்க்கிலிருந்து பாஸ்டன் சென்றபோது வழியிலிருந்த அந்த மருத்துவமனையில் இளைஞன் இருந்த அறைக்குள்ளே வந்த போது, அவன் ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அறையில் அம்மா

அமர்வதற்காக ஒரு நாற்காலியில் பட்டுத்துணி விரித்து வைத்திருந்தனர். அம்மா அதில் அமராமல், இளைஞன் உட்கார்ந்திருந்த சக்கரநாற்காலியின் முன்னே தரையில் அமர்ந்தார். அம்மா இளைஞனை அளவற்ற அன்பு ததும்பப் பார்த்தார். அவனது செயலிழந்த கால்களைத் தமது கரத்தால் தடவிவிட்டார். பின்னர் ஒரு காலைத் தம்முடைய திருக்கரத்தால் மெல்லத் தூக்கி, அதை முத்தமிட்டார். அந்தக் காலை மெதுவாகக் கீழே வைத்து விட்டு, அடுத்த காலையும் அதே போல் தூக்கி முத்தமிட்டார். அம்மாவின் கருணையால் மனம் நெகிழ்ந்த இளைஞனும், அவனுடைய பெற்றோரும் கண்ணீர் வடித்தனர். அம்மாவுடன் வந்திருந்தவர்களும் உள்ளம் உருகிக் கண்ணீர் மல்க நின்றனர். அதன் பிறகு சிறிது நேரம் அங்கிருந்து விட்டு அம்மா பாஸ்டன் நகருக்குள் சென்றார். அம்மா சென்று இரண்டு மணி நேரம் ஆகியிருக்கும், இளைஞனுக்குத் தன்னால் நடக்க முடியுமென்கிற உணர்வு தோன்றியது. அவன் மெல்ல எழுந்தான். நின்றான். நடந்தான்! அவனும், அவனது பெற்றோரும் அம்மாவின் அருளாற்றலை எண்ணி எண்ணி வியந்தனர். அதன் பின் அவன் முற்றிலும் குணமடைந்தான்.

18. அறுவைச் சிகிச்சையின் போது அம்மாவின் ஆதரவு

கிருஷ்ணன் உண்ணி தனது பெற்றோருடன் அமெரிக்காவில் இருக்கும் லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகரில் வாழ்ந்து வந்தான். உண்ணிக்கு ஐந்து வயதான போது குடலிறக்க நோய்க்கு ஆளானான். அதற்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடிவானது. இது குறித்து அவனது பெற்றோர் கவலை கொண்டனர். அவர்கள் உண்ணிக்கு அறுவைச்சிகிச்சை நடக்க இருப்பது குறித்து அம்மாவின் ஆசியை வேண்டினர். அறுவைச் சிகிச்சைக்கு முதல்நாள் அம்மா தொலைபேசியில் அவர்களிடம் "குழந்தைகளே கவலைப்படாதீர்கள் அறுவைச் சிகிச்சையின் போது அம்மா கிருஷ்ணன் உண்ணியுடன் கூடவே இருப்பேன்" என்று ஆறுதல் கூறினார்.

மறுநாள் உண்ணியை அவனது பெற்றோர் காரில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். காரில் செல்லும் போது உண்ணியிடம் அவர்கள் அம்மாவைப் பற்றியும், கண்ணனைப் பற்றியும் பேசிக் கொண்டே சென்றனர். இதனால் உண்ணியின் மனம் அமைதி பெறுமென அவர்கள் எண்ணினர்.

அறுவைச் சிகிச்சை அறைக்குள்ளே உண்ணியைக் கொண்டு செல்ல இருந்தனர். அப்போது அவனுடைய தாயார் "உண்ணி, நேற்று அம்மா போனில் பேசியதை நினைவில் வைத்துக் கொள். அறுவைச் சிகிச்சையின் போது என்னால் உன்னுடன் இருக்க முடியாது. ஆனால் அம்மா உன்னோடு இருப்பேனென்று கூறினாரல்லவா? அதோடு, நீ குணமடைவாய் என்றும் சொன்னாரல்லவா? அதை மறக்காதே" என்று கூறினார். உண்ணியும், சரி என்று மெல்லச் சொன்னான்.

அறுவைச் சிகிச்சை முடிந்து உண்ணி ஓர் அறைக்குக் கொண்டு வரப்பட்டான். அவனுக்கு மயக்கம் தெளிந்த போது அவனுடைய தாயார் அருகே இருப்பதைப் பார்த்தான். அவன் மயக்கம் தெளிந்து விட்டதைக் கண்ட அவனது தாயார், புன்முறுவல் பூத்தவராக, "உண்ணி நீ நன்றாக இருக்கிறாய், நீ குணமடைவாய் என்று அம்மாவே போனில் சொன்னாரல்லவா?" என்று சொன்னார்.

உண்ணி தாயாரை நிமிர்ந்து பார்த்தபடியே "எனக்கு நினைவிருக்கிறது; அம்மா அறுவைச்சிகிச்சை நடந்த போது நான் அம்மாவைப் பார்த்தேன். அவர் என் தோளில் கையை வைத்தபடியே சிகிச்சை முடியும் வரை எனக்கு அருகே நின்று கொண்டிருந்தார்" என்றான்.

அதன் பிறகு உண்ணியுடன் அவனது பெற்றோர் அமிர்தபுரிக்கு வந்து ஆசிரமவாசிகளாகி விட்டனர். கொச்சி அமிர்தா மருத்துவமனையின் மருத்துவ நிர்வாகியாக உண்ணியின் தகப்பனார் சேவை செய்து வருகிறார்.

• •

19. உயிர்த்தெழுந்த ஷியாமா

ஆசிரமத்திற்கு அருகே வாழ்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி ஷியாமா ஆவாள். அவள் கடும் ஆஸ்த்மா நோயால் அவதிப்பட்டு வந்தாள். ஒருநாள் ஷியாமா ஆஸ்த்மாவால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டாள். அவளுடைய பாட்டி அவளை ஒரு மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு போனார். மருத்துவமனையில் ஷியாமாவைப் பரிசோதித்த மருத்துவர் அவள் இறந்து விட்டதாகப் பாட்டியிடம் தெரிவித்தார். இதைக் கேட்ட பாட்டி மிகவும் வேதனைப்பட்டார். பறயகடவிற்கு வந்தார். வந்தவர் நேரே ஆசிரமத்துக் கோயிலுக்குப் போனார். கர்ப்பக்கிருகத்தில் அம்மா தேவிபாவ தரிசனத்தின் போது அமரும் பீடத்தில் ஷியாமாவின் உடலைக் கிடத்தினார். துக்கம் தாங்காமல் அழலானார்.

அப்போது அம்மா வேறொரு பக்தரின் வீட்டில் பஜனை பாடிக் கொண்டிருந்தார். திடீரென்று அம்மா பஜனை பாடுவதை நிறுத்தி விட்டுக் கோயிலுக்கு விரைந்து வந்தார். அங்கே ஷியாமாவின் உடலருகே அமர்ந்திருந்த பாட்டி ஓலமிட்டு அழுது கொண்டிருந்தார். அம்மாவைக் கண்டதும், அவரை வணங்கிய பாட்டி, தனது பேத்திக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படி அம்மாவிடம் மன்றாடினார்.

அம்மா தரையில் அமர்ந்து ஷியாமாவின் உடலைத் தூக்கித் தம்முடைய மடியில் கிடத்தினார். அம்மாவின் திருவிழிகள் மூடிக் கொண்டன. அவர் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கினார். நீண்ட நேரம் இவ்வாறு கழிந்தது. பின்னர் ஷியாமா தூக்கத்திலிருந்து விழிப்பவள் போல் கண்களைத் திறந்தாள், படிப்படியாக ஷியாமாவின் உணர்வு திரும்பியது. அவள் புதுப்பிறவி பெற்றதைக் கண்ட பாட்டியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவருடைய துன்பக் கண்ணீர், ஆனந்தக் கண்ணீராக மாறியது. அவர் அம்மாவை மகிழ்ச்சி பொங்கப் பல முறை தழுவித் தனது நன்றியைத் தெரிவித்தார்.

20. அம்மாவின் அமுத வாக்குகள்

1. குழந்தைகளே! அறிவுள்ள இளைஞர்களே! இன்றையச் சமுதாயத்திற்குத் தேவை. நீங்களே வருங்கால உலகமும், அதன் நமபிக்கையுமாவீர்கள். உங்களுக்குள்ளே இருக்கும் மலர் மலர்ந்து உலகெங்கும் அதன் நறுமணத்தைப் பரப்பட்டும். துன்பப்படுபவர்களின் கண்ணீரைத் துடைக்கவும், ஆன்மிக ஒளியைப் பரப்பவும் வாருங்கள்.

2. குழந்தைகளே! ஏழைகள் மீதும், துன்பப்படுபவர்கள் மீதும் கருணை காட்டுவதே உண்மையான அன்பும், பக்தியுமாகும். பசித்திருப்போர்க்கு உணவளியுங்கள். திக்கற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள். கவலைப்படுபவர்களுக்கு ஆறுதல் அளியுங்கள். துயரப்படுவோருக்கு நிவாரணம் அளியுங்கள். எல்லோர் மீதும் இரக்கம் காட்டுங்கள். உங்களுக்கு அம்மா வழங்கும் அறிவுரை இதுவே

3. தங்கம் அழகானது. மதிப்பு மிக்கது. அதற்கு நறுமணமும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதன் மதிப்பு எவ்வளவு அதிகரிக்கும். இதை எண்ணிப் பாருங்கள். தியானம், பிரார்த்தனை போன்ற ஆத்மசாதனைகள் மதிப்பு மிக்கவை தான். அவற்றோடு நம்மிடம் அன்பு, கருணை, பிறர் மீது அக்கறை போன்ற பண்புகளும் இருந்தால் நறுமணம் மிக்க பொன்மலரைப் போல் விளங்குவோம். நாம் சிறப்பும், நல்ல பண்பாடும் மிக்கவர்களாவோம்.

4. குழந்தைகளே, பிறருக்கு நம்மால் பொருளுதவி செய்ய முடியாவிட்டாலும், அவர்களிடம் புன்முறுவல் தவழ, அன்பாகப் பேசலாம். இதற்கு நாம் செல்வம் படைத்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. கருணை உள்ள இதயம் இருந்தால் போதும். ஆன்மிக வாழ்வின் முதல் படி இதுவேயாகும். பிறர் மீது அன்பும், கருணையும் படைத்தவர்கள் பகவானைத் தேடி அலைய வேண்டியதில்லை. 'கருணை, கருணை' என்பதே துடிப்பாக உள்ள இதயத்தைத் தேடிக் கடவுள் ஓடி வருவார். அத்தகைய இதயமே அவர் விரும்பிக் குடியிருக்கும் கோயிலாகும்.

5. தரையில் நீண்ட நேரமாகக் கிடந்த வாழைப்பழத் தோலைப் பார்த்த பிரம்மசாரி அதை அப்புறப்படுத்தவில்லை. இதைக் கவனித்த அம்மா அவரிடம் கூறியதாவது; "மகனே வாழைப்பழத் தோலொன்று தரையில் கிடப்பதைப் பார்த்த பிறகும் அதை நீ அப்புறப்படுத்தவில்லை. அந்தத் தோல் மீது யாராவது கவனக் குறைவாகக் காலை வைக்க நேர்ந்தால் வழுக்கி விடக் கூடும். அப்படி நிகழ்ந்தால், உனது பொறுப்பின்மையே அதற்குக் காரணமாகும். அல்லவா? ஏனெனில் அது அங்கே கிடப்பதைப் பார்த்த பிறகும் அதை நீ அப்புறப்படுத்தவில்லை".

நீ சாலையில் நடந்து செல்லும் போது கவனமாக இருக்க வேண்டும். கண்ணாடித்துண்டு போன்றவை வழியில் கிடந்தால் அவைகளை அப்புறப்படுத்த வேண்டும். இதனால் பிறர் புண்படுவது தவிர்க்கப்படும். சுயநலம் மிக்கவர்கள் தான் இம்மாதிரி விஷயங்களில் அக்கறை செலுத்தாமல் இருப்பார்கள் அத்தகையவர்களும் புண்பட்டு விடாமல் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

6. நாம் ஒருவரையொருவர் சந்திக்கும் போது 'ஓம் நமசிவாய' என்று கூறி வணங்குகிறோம். இது ஏன்? "மங்களமானவருக்கு வணக்கம்" என்பது இந்த மந்திரத்தின் பொருளாகும். உலகிலுள்ள எல்லா மனிதரும் இறைவனின் அம்சமே. எனவே. நாம் ஒருவரை 'ஓம் நமசிவாய' என்று கூறி வணங்கும் போது "உங்களுக்குள்ளே இருக்கும் இறைவனைப் போற்றுகிறேன். அந்த இறைவனின் மீது எனக்கு அன்பும் மரியாதையும் இருக்கின்றன." என்பதை நீங்கள் புரிந்து கொள்ள விரும்புகிறேன் என்று அவரிடம் கூறுவதாகப் பொருள்படும்.

7. உலகப் பொருள்களிலிருந்தும், புலனின்பங்களிலிருந்தும் பெறும் அற்ப சுகங்கள், உங்களுடைய ஆத்மசொரூபத்தின் எல்லையற்ற பேரின்பத்தின் மிகமிகச் சிறிய பிரதிபலிப்பே ஆகும்.

8. பணத்தையும், மற்ற உலகப்பொருள்களையும் பிறருக்குக் கொடுக்கும் போது அவை உன்னை விட்டு நிரந்தரமாக நீங்கி விடுகின்றன. ஆனால் அன்பு அப்படிப்பட்டதல்ல. நீ எவ்வளவு அதிகமாக அன்பை வழங்குகிறாயோ அவ்வளவு அதிகமான அன்பு உனது இதயத்தில்

நிரம்புகிறது. அன்பு ஒரு வற்றாத ஜீவநதி. அம்மா, தமது குழந்தைகள் அனைவரும் அன்பை வழங்கும் ஆதார ஊற்றுக்களாக மாறி, மக்களுக்குச் சதா அன்பையும், கருணையையும் வழங்க வேண்டுமென்றும், இதன் மூலம் மற்றவர்களும் இவ்வாறு இருக்கப் போதிக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன்.

9. ஒருவர் அம்மாவிடம் "மக்கள் இவ்வளவு துன்பப்படும் போது இறைவன் ஏன் சும்மா இருக்கிறார். அம்மா? துன்பங்களைத் துடைப்பதற்கு அவர் ஏதாவது செய்யக் கூடாதா?" என்று கேட்டார். இதற்கு அம்மா பின்வருமாறு பதிலளித்தார்.

"இறைவன் செய்திருக்கிறார். மகனே துன்பப்படுவர்களுக்கு உதவுவோமென்கிற நம்பிக்கையில் தான் அவர் நம்மைப் படைத்திருக்கிறார். நாம் துன்பப்படுபவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்களுடைய துன்பத்தை உணர வேண்டும். அவர்களது நிலையில் நம்மை வைத்துக் பார்க்க முயல வேண்டும். ஆனால் நாம் நமது பிரச்சனைகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறோம். மற்றவர்களது பிரச்சனைகளைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. இரக்கப்படுவதில்லை. இது தான் நமது பெரிய பிரச்சனையாகும்.

10. எந்த வேலையும் முக்கியமற்றதோ, பொருளற்றதோ இல்லை. அந்த வேலையை இதயபூர்வமாகவும், அன்புடனும் செய்தால் அது முக்கியமானதாகவும், அழகானதாகவும் மாறி விடுகிறது.

11. உனது மனதைக் கட்டியாளும் திறமையைப் பெறுவதே நீ பெற வேண்டிய முக்கியமான கல்வியாகும். இதுவே ஆன்மிகக் கல்வி

12. பழக்கங்கள், நல்லவையானாலும், தீயவையானாலும் வலிமை மிக்கவைகளாக இருக்கக் கூடும். நாம் நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொண்டால் மோசமாகச் சிந்திக்கவோ, செயல்படவோ சிரமமாக இருக்கும். தீயது எதையாவது செய்ய விரும்பினாலும், நமது நல்ல பழக்கங்கள் நாம் அதைச் செய்ய விடாமல் தடுத்து விடும். நல்லொழுக்கத்தை வளர்ப்பது மிக முக்கியம். நல்ல எண்ணங்கள் இதற்குத் துணை புரியும்.

13. குழந்தைகளே! நீங்கள் தினமும் பஜனை பாட வேண்டும். கண்களை மூடி, இறைவா, என்னை நல்லவனாக்கு. நான் பெற்றோருக்குக் கீழ்ப்படிதலுள்ள பிள்ளையாக வளருமாறு ஆசீர்வதிக்க வேண்டுகிறேன். அன்பு, பொறுமை போன்ற நல்ல குணங்களை எனக்குத் தந்தருள் என்று இறைவனிடம் பிரார்த்தித்துத் தியானம் செய்ய வேண்டும்.

14. ஆத்மசாதகரின் சுயநலமும் உலகிற்கு நலனே செய்யும். ஒரு கிராமத்தில் இரு இளைஞர்கள் இருந்தனர். அந்தக் கிராமத்திற்கு வந்த சந்நியாசி ஒருவர் அவர்கள் இருவரிடமும் விதைக்குரிய தானியத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார். இருவரும் அதைப் பெற்றுக் கொண்டனர். ஒரு இளைஞர் அந்தத் தானியத்தை வறுத்துச் சாப்பிட்டார். அவரது பசி அடங்கியது. மற்றொரு இளைஞர் தானியத்தை நிலத்தில் விதைத்தார். அதைப் பராமரித்து வளர்த்தார். நல்ல அறுவடை கிடைத்தது. அந்தத் தானியங்களை பசித்திருந்த கிராமத்தவருக்குக் கொடுத்தார். குழந்தைகளே! சுயநலத்துடன் தான் இரு இளைஞர்களும் தானியத்தைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் இரண்டாவது இளைஞரின் நல்ல இயல்பால் பலர் பயன் பெற்றனர்.

15. உங்களுடைய இதயமே கோயில், அங்கு தான் இறைவனைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். நல்ல எண்ணங்களே அர்ச்சனைக்குரிய மலர்கள். நல்ல செயல்களே பூஜையாகும். பிறரிடம் அன்பாகப் பேசுவதெல்லாம் நீங்கள் இறைவனைப் போற்றிப் பாடுவதாகும். உங்களது அன்பே நைவேத்தியமாகும்.

16. குழந்தைகளே. பிறருக்குத் துன்பமும், வேதனையும் தரக்கூடிய எதையும் ஒரு போதும் நீங்கள் செய்யக்கூடாது. அத்தகைய செயல்கள் உங்களுக்கே கேடு விளைவிக்கும். நாம் யாரையாவது புண்படுத்தும் போது, பெரும்பாலும் அவர் குற்றமற்றவராக இருக்கக்கூடும். அவர், தான் தவறு செய்யாத போது புண்படுத்தப்பட்டதாக நொந்த இதயத்துடன் வருந்துவார். அவருடைய எண்ணமும், பிரார்த்தனையும் உங்களைப் பாதிக்கும். பிற்காலத்தில் நீங்கள் துன்பப்பட அவை காரணங்களாகி விடும்.

எனவே தான் யாரையும் எண்ணத்தாலோ. சொல்லாலோ, செயலாலோ புண்படுத்தக்கூடாதென்று வற்புறுத்தப்படுகிறது. பிறருக்கு மகிழ்ச்சி அளிக்க முடியாவிட்டாலும், எந்த வகையிலும் புண்படுத்தாமல் இருக்க வேண்டும். இதில் நாம் கவனமாக இருந்தால் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாவோம்.

17. பிறருடைய பிழைகளை எப்போதும் மன்னிக்க வேண்டும். நாம் செய்யாத பிழை குறித்துப் பிறர் நம்மைக் குறை கூறினால் விமரிசித்தாலோ நாம் கோபப்பட்டு எதிர்செயலில் ஈடுபடுகிறோம். அவ்வாறு செய்யாமல் அவரை நாம் மன்னித்து விட வேண்டும். நம்மைக் குறை கூறுபவரையும், நம்மையும் இறைவன் சோதித்துப் பார்க்கிறார். எவர் மீதும் ஒரு போதும். கோபம் கொள்ளலாகாது.

18. சுயநலத்திற்காகப் பிறருக்குத் தீங்கு செய்பவர்கள், தாங்கள் விழுவதற்கான குழியைத் தாங்களே தோண்டிக் கொள்கிறார்கள். இது, மல்லாந்து படுத்துக் கொண்டு எச்சில் துப்புவதற்கு நிகராகும். அந்த எச்சில் துப்பியவர், முகத்திலேயே விழும்.

19. குழந்தைகளே! வாழ்க்கையில் தோல்விகள் ஏற்படத் தான் செய்யும். கால் இடறிக் கீழே விழுந்து விட்டீர்களென்று வைத்துக் கொள்வோம். சரி விழுந்து விட்ட நான் தரையிலேயே கிடக்கிறேன். எழுந்து நடக்கப் போவதில்லை. என்று எண்ணுவோமா? அப்படி எண்ணுவது நகைப்பிற்குரியதல்லவா?

குழந்தை நன்றாக நடக்கப் பழகுவதற்கு முன்னர் எண்ணற்ற தடவை கீழே விழும். இதைப் போலவே தோல்விகள் வாழ்க்கையின் இயற்கையே. ஒவ்வொரு தோல்வியும் வெற்றிக்குரிய வழியைக் காட்டுகிறது என்பதை மறக்காதீர்கள். நன்றாக நடப்பதற்கு முன் குழந்தை விழுவதைப் போல் தோல்விகள் வெற்றிப்படிகளில் ஏறுவதற்கான ஆரம்பமே ஆகும். ஆகவே, தோல்வியைக் கண்டு ஏமாற்றமோ, மனத்தளர்ச்சியோ அடையத் தேவையில்லை.

20. ஒரு மனிதன் பெரிய பெட்டி ஒன்றைத் தலையில் சுமந்தபடி

புகைவண்டியில் ஏறினான். வண்டி புறப்பட்டது. அந்த மனிதனால் பெட்டியின் சுமையைத் தாங்க முடியவில்லை. அவன் "அப்பா என்ன கனம் பெட்டியைச் சுமக்க முடியவில்லையே.." என்று வாய்விட்டுச் சொன்னான்.

இதைக் கேட்ட பிரயாணி ஒருவர் "நீ பெட்டியைக் கீழே வைத்து விடலாமே? புகைவண்டி உன்னுடைய பெட்டியைச் சுமந்து கொண்டு வருமே?" என்றார்.

இது போலவே நாம் அனைத்தையும் இறைவனின் திருவடிகளில் சமர்ப்பித்து விட்ட பிறகு, நமது வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நம்முடைய சுமைகளை எல்லாம் நமக்காக இறைவன் சுமந்து வருவார்.

21. இராமபிரான், பகவான் கண்ணன், புத்தபெருமான், கிறிஸ்துநாதர் ஆகியோரது சரித்திரத்தைப் பார்த்தால், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பல தடைகளை சந்திக்க நேர்ந்திருப்பதைக் காணலாம். அவர்கள் பொறுமையாகவும், உற்சாகமாகவும் இருந்ததால் அவர்களால் வெற்றி பெற முடிந்தது.

ஆயினும், அவர்கள் எல்லோரும் பெரிய மகான்கள் என்றும், ஆகவே அவர்களோடு நம்மை ஒப்பிட முடியாதென்றும் சிலர் சொல்லக் கூடும். நாம் சாதாரண மனிதர்கள், நாம் அவர்களைப் போல இருக்க எவ்வாறு முடியும்? என்று அவர்கள் பேசலாம். நாம் சாதாரணமானவர்கள் அல்ல என்று அம்மா சொல்கிறேன். நாம் உன்னதமானவர்கள். நமக்குள்ளே அளவில்லாத ஆற்றல் உள்ளது. நாம் சிறிய மின்கலங்கள் அல்ல. அழிவில்லாத ஆற்றலின் மூலாதாரத்துடன் நாம் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஆற்றலை வெளிப்படுத்தி, வளப்படுத்தி, நாமே அது என்று அனுபூதியில் அறிய வேண்டும். இதனால் நாமும் வாழ்வில் வெற்றிகரமானவர்களாக இருப்போம்.

22. குழந்தைகளே! நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தால் நம் நாட்டிலிருந்து வறுமையை விரட்டி விடலாம்.

23. சேவையில் ஈடுபடுவதையும், ஆன்மிக ஞானத்தைப் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளவர்களை ஒன்று திரட்டி உலகிற்குப் பணி புரியக் கிராமம் ஒன்றிற்கு இரு இளைஞர்கள் வீதம் புறப்பட்டால் போதும் இந்த உலகம் நல்லதாக மாறி விடும்.

24. குழந்தைகளே, இயற்கை கற்பதற்குரிய ஒரு நூலாகும். இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளும் அந்த நூலின் ஒவ்வொரு பக்கமாகும்.

25. எந்தத் தடையையும் இயற்கை எவ்வளவு சுலபமாகத் தாண்டி வருகிறது. என்பதையும் பார்க்க முடிந்தால், நாம் அதிலிருந்து நிறையக் கற்றுக் கொள்ள இயலும். உதாரணமாக, எறும்பொன்று செல்லும் பாதையில் ஒரு கல் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த எறும்பு கல்லின் மீது ஏறியோ, அல்லது அந்தக் கல்லைச் சுற்றியோ அதைத் தாண்டிச் செல்லும். ஒரு மரம் வளரும் நிலத்தில் பாறையொன்று இருந்தால், அந்த மரம் பாறையைச் சுற்றிக் கொண்டு வளரும். நதி செல்லும் வழியில் மரமோ; பாறையோ இருந்து தடை செய்தால், அது பாறையையோ, மரத்தையோ சுற்றி வளைத்துக் கொண்டு பாய்ந்து செல்லும். நாமும் வாழ்க்கையில் வந்தமையும் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப மாறி அமைந்து, பொறுமையோடும், உற்சாகத்தோடும் அவைகளை வெற்றி கொள்ளக் கற்க வேண்டும்.

26. யாராவது நம்மைத் திட்டினாலும், நம்மோடு சண்டை போட்டாலும் அவர் மீது கோபம் கொள்கிறோம். இதனால் அவரை நாம் அடித்து விடக் கூடச் செய்யலாம். ஆனால் மகான்கள் யாரையும் எதிரியாக எண்ணுவதே இல்லை. தங்களை எதிர்ப்பவர்களையும் அவர்கள் நேசிக்கிறார்கள். நம் நாட்டின் இதிகாசங்களில் இடம் பெற்றுள்ள மகான்களும் சான்றோர்களும் இவ்வாறுதான் வாழ்ந்துள்ளனர்.

27. ஒரு விதை முளை விட்டுப் பெரிய மரமாக வளர வேண்டுமானால் முதலில் அது மண்ணிற்குள் பணிந்து செல்ல வேண்டும். பணிவு மற்றும் அடக்கத்தால் மட்டுமே நாம் ஆன்மிக முன்னேற்றத்தைப் பெறலாம். கர்வமும், சுயநலமும் நம்மை அழித்து விடும். எல்லோருடைய தொண்டன் என்கிற மனநிலையோடு அன்பும், கருணையும் மிக்கவர்களாக

இருக்க வேண்டும். அப்போது உலகமே உங்களை வணங்கும்.

28. பெரும் புயலில் பெரிய மரங்கள் வேரோடு சாய்கின்றன. மாளிகைகள் மண்ணோடு மண்ணாகின்றன. ஆனால், அந்தப் புயல் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் புல்லைச் சேதப்படுத்த இயலாது. பணிவின் பெருமை இதுவேயாகும்.

29. குழந்தைகளே, நீங்கள் ஏதாவது வேலையாக வீட்டை விட்டுச் செல்லும் முன்பு, வீட்டிலிருக்கும் பெரியவர்களிடம் சொல்லிக் கொண்டு விடைபெற்றுச் செல்லுங்கள். காலையில் பள்ளிக்குச் செல்வதற்கு முன்னர் பெற்றோரிடம் விடைபெற்றுச் செல்லுங்கள். பணிவுள்ளவர்கள் மீது இறைவன் கருணையைப் பொழிகிறார்.

30. உலகிற்குத் தொண்டர்களே தேவை. தலைவர்கள் அல்ல. ஆனால் ஒவ்வொருவரும் தலைவராகவே விரும்புகின்றனர். உண்மையில் தலைவர்களாக இல்லாத தலைவர்கள் போதுமான அளவிற்கு நம்மிடையே இருக்கின்றனர். இதற்கு மாறாக நாம் உண்மையாக தொண்டர்களாக வேண்டும். உண்மையாக தலைவராவதற்கு இது ஒன்றே வழி.

31. இறைவன் மனிதர்களிடம் மட்டுமல்லாமல் எல்லாவற்றிலுமே இருக்கிறார். அவர் மலைகளிலும், மரங்களிலும், நதிகளிலும், மேகங்களிலும், பறவைகளிலும், மிருகங்களிலும், சூரியனிலும், நிலவிலும், நட்சத்திரங்களிலும் இருக்கிறார்.

இயற்கையில் இருக்கும் ஒவ்வொன்றும் நிறைவேற்ற வேண்டிய காரியம் ஒன்றுள்ளது. இறைவனுடைய சிருஷ்டியில் பிழை எதுவுமில்லை. அவர் சிருஷ்டித்துள்ள ஒவ்வொரு ஜீவனும், ஒவ்வொரு பொருளும் சிறப்பானது. இதைப் புரிந்து கொள்பவரால் எவ்வாறு எதையும் அழிக்கவோ, கொல்லவோ முடியும்?

32. குழந்தைகளே, இயற்கையிலுள்ள அற்புதமான அதிசயங்களை எல்லாம் எண்ணிப் பாருங்கள். பாலைவனத்தில் நீண்ட தூரம் செல்லும் போது

பயன்படுத்துவதற்கு நீரைச் சேமித்து வைத்துக் கொள்வதற்கான பை ஒட்டகத்தின் உடலில் அமைந்துள்ளது. குழந்தையைச் சுமந்து செல்லக் கங்காருவின் உடலில் தொட்டில் அமைந்துள்ளது. அற்பமான ஜீவராசிகளும், கேடு செய்யக் கூடிய ஜீவராசிகளும் உலகில் செய்ய வேண்டிய சிறப்பான காரியமொன்று இருக்கிறது. உதாரணமாக, சிலந்திகள், பூச்சிகள் பெருகிவிடாமல் பார்த்துக் கொள்கின்றன. பாம்புகள், எலிகள் பெருகாமல் தடுக்கின்றன. கடலில் வாழும் சிற்றுயிர்கள் திமிங்கிலங்களுக்கு உணவாகின்றன. பயனற்ற களைகளைப் போலத் தென்படும் பல தாவரங்கள் கொடுமையான நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளாகப் பயன்படுகின்றன. எல்லாவற்றின் பயனும் நமக்குத் தெரியாது. இயற்கை நமக்குப் புரியாத ஒரு புதிர். இயற்கை இல்லாமல் மனிதனோ, மற்ற உயிரினங்களோ, வேறு எவையுமோ வாழ இயலாது. ஆகவே எல்லா உயிரினங்களையும் அன்போடு பராமரிப்பது நமது கடமையாகும்.

33. மரம், செடி, கொடிகளுக்கும் உணர்ச்சி இருக்கிறது. அவை அச்சப்படவும் செய்கின்றன. மரத்தை வெட்டும் நோக்கத்தோடு ஒருவன் கோடாரியோடு அருகே வரும் போது அந்த மரம் அஞ்சி நடுங்குகிறது. அதைப் பார்க்க முடியாது. ஆனால் கருணை உள்ள இதயம் இருந்தால் அதை உணர முடியும்.

34. ஒவ்வொருவருக்கும் அனுபவமே ஆசிரியராக இருக்கிறது. குழந்தைகளே, துன்பம் உங்களை இறைவனை நோக்கிச் செலுத்தும் ஆசிரியராக உள்ளது.

35. குழந்தைகளே, ஒவ்வொருவரிடமும் உள்ள நல்லதையே காணுங்கள். எங்கு சொன்றாலும் தேனை மட்டும் சேகரிக்கும் தேனீயைப் போல் இருங்கள்.

36. பிறருடைய குறைகளைப் பார்க்கும் போது நாம் மனதால் பலஹீனர்களாகிறோம். மாறாக, ஒவ்வொருவரிடமும் இருக்கும் நல்லதைப் பார்க்கப் பழகும் போது நாம் மேல்நிலை எய்துகிறோம். எவரைப் பற்றியும், அவர் கெட்டவர் என்று சொல்லும் போது நாமே

கெட்டவர்களாகிவிடுகிறோம். ஒருவர் 99% கெட்டவராக இருக்கலாம். இருந்த போதிலும் அவரிடமுள்ள 1% நல்லதை மட்டுமே நாம் காண வேண்டும். இதனால் நாம் நல்லவர்களாக மாறி அமைகிறோம். ஒருவரிடமுள்ள தீயதைப் பார்க்கும் போது நம்மை நாமே தாழ்த்திக் கொள்கிறோம். நாம் எப்போதும், "இறைவா, எனது கண்கள் எல்லோரிடமும் இருக்கும் நல்லதை மட்டும் காணுமாறு அருள்புரியுங்கள். சுயநலமின்றி உலகுக்குச் சேவை செய்யும் ஆற்றலை அளியுங்கள்" என்று பிரார்த்திக்க வேண்டும். அத்தகைய ஆத்ம சமர்ப்பணத்தால் மட்டுமே நாம் நிஜமான மனஅமைதியைப் பெற இயலும் இவ்வாறு படிப்படியாக நாம் இறைவனின் நல்ல தொண்டர்களாக ஆவதற்கு முயல வேண்டும்.

37. குழந்தைகளே, பிறரது குறைகளைச் சுட்டிக்காட்டி, விமர்சிப்பதற்குப் பதிலாக, முதலில் உங்களைத் திருத்தி அமைக்க முயற்சி செய்யுங்கள்.

38. தன்னை வெட்டிக் கொண்டிருப்பவருக்கும் மரம் நிழல் தருகிறது. ஆன்மீகவாதி இதைப் போல் இருக்க வேண்டும். தனக்குத் துன்பம் தருபவர் உட்பட எல்லோருக்கும் நலன் விளைய வேண்டுமென்று பிரார்த்திப்பவர் தான் உண்மையான ஆன்மீகவாதியாவார்.

39. நூறு நல்ல காரியங்களைச் செய்தவர், ஒரே ஒரு தவறு செய்துவிட்டாலும் மக்கள் அவரை வெறுப்பார்கள். அவரை நிராகரித்து விடுவார்கள். ஆனால் இறைவனோ நூறு தவறுகளைச் செய்தவன் ஒரேயோரு நல்லது செய்தாலும் அவன் மீது அன்பைச் சொரிந்து, அவனை ஏற்றுக்கொள்கிறார். எனவே நீங்கள் இறைவன் மீது பற்று வைக்க வேண்டும் எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணியுங்கள்.

40. இறைவன் ஒருவரே, பாலை வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு சொல்லால் குறிப்பிடுகின்றனர். ஆங்கிலத்தில் அதை மில்க் என்கின்றனர். ஹிந்தியில் அதைத் தூத் என்கின்றனர். பாலை, எந்த மொழியில் என்ன சொல்லால் குறிப்பிட்டாலும், அதன் சுவையும், நிறமும் மாறுவதில்லை. கிறிஸ்தவர்கள் இறைவனைப் 'பரமமண்டலத்திலுள்ள பிதா' என்கிறார்கள். இஸ்லாமியர்கள் இறைவனை அல்லா என்கின்றனர்

ஹிந்துக்கள் அவரைச் சிவன், கண்ணன், அம்பிகை, என்றெல்லாம் அழைக்கின்றனர். பெயர் எதுவானாலும் இறைவன் ஒருவரே ஒவ்வொருவரும் அவரவரது கலாசாரத்திற்கேற்ப இறைவனைப் புரிந்து கொள்கின்றனர். அதற்கேற்ப அவரை வழிபடுகின்றனர்.

41. தியானம் பயில்வதால் சிறு குழந்தைகள் கூடப் பயன் பெறுவார்கள். அவர்களுடைய புத்தி, கூர்மை பெறும்; நினைவாற்றல் பெருமளவு அதிகரிக்கும்; இவை அவர்கள் நன்றாகப் படிப்பதற்கு மிகவும் உதவும்.

42. பத்மாசனத்தில் அமர்ந்து, கண்களை மூடியவாறு இருப்பது மட்டுமே தியானமும், ஜபம் போன்றவை மட்டுமே ஆத்ம சாதனைகளாகாது. துன்பப்படுவோர்க்குச் சுயநலமின்றிச் சேவை செய்வதும். மனவேதனைப் படுபவர்களுக்கு ஆறுதல் அளிப்பதும், பிறரைப் பார்த்துப் புன்முறுவல் தவழ அன்பாகப் பேசுவதும் ஆத்ம சாதனைகளே ஆகும்.

43. பிறர் துன்பப்படுவதை மக்கள் கண்டு கொள்வதே இல்லை என்று தோன்றுகிறது. 'பிறர் தானே துன்பப்படுகின்றனர். நானல்ல' என அவர்கள் எண்ணுகின்றனர். இந்த மனநிலையை நாம் மாற்ற வேண்டும். உலகில் எவருமே துன்பப்பட வேண்டாமென நாம் விரும்புவோமாக. "நான் துன்பப்படலாகாது" என்று எண்ணாமல். எவராயினும் ஏன் துன்பப்பட வேண்டும்? என்று நாம் எண்ணுவோமாக. நம்மைப் பற்றி எண்ணுவதற்கு முன்பாகப் பிறரைப் பற்றி எண்ணுவதற்குக் கற்றுக் கொள்வோமாக!

44. உண்மையான ஞானத்தின் அடையாளம் பணிவேயாகும்.

45. பல வண்ணக் காகிதங்களால் சுற்றப்பட்டுள்ள ஒரே வகை மிட்டாய்களைப் போல ஒரே ஆத்மாவின் பல்வேறு வடிவங்களாக நாம் அனைவரும் இருக்கிறோம். பச்சை நிறக் காகிதத்தால் சுற்றப்பட்டுள்ள மிட்டாய், சிகப்பு நிறக் காகிதத்தால் சுற்றப்பட்டுள்ள மிட்டாயிடம், "நான் உன்னிலிருந்து மாறுபட்டவன்" என்று சொல்லலாம். சிவப்பு வண்ணக் காகிதத்தால் சுற்றப்பட்டுள்ள மிட்டாய் பச்சையிடம், "நீயும், நானும் வேறானவர்கள்" எனலாம். ஆனால் காகிதங்களை நீக்கி விட்டால்

எல்லா மிட்டாயும் ஒரே மாதிரியானவை என்பது புரியும். இதைப் போலவே மக்களுக்கிடையே உண்மையில் வேறுபாடில்லை. ஏழை, பணக்காரன், கறுப்பன் வெள்ளையன், அழகன் அழகற்றவன், ஆரோக்கியமானவன் நோயாளி என நாம் எப்படி இருந்தாலும், அகத்தில் நாம் அனைவரும் ஒரே மாதிரியானவரே ஆவோம். ஆனால் இதை நாம் மறந்து விட்டுப் புறத்தோற்றத்தில் மயங்கி விடுகிறோம். இன்றைய உலகில், இத்தகைய மயக்கத்தாலேயே நாம் பிரச்சனைகளை உருவாக்குகிறோம்.

46. அம்மாவின் குழந்தைகள் அனைவரும், அவர்கள் சந்திக்கும் எல்லோருக்கும் ஆன்மிக ஒளியையும், அன்பையும் பரப்பத் தக்க அளவிற்குத் தூயவர்களாக வேண்டும் என்பதே அம்மாவின் விருப்பமாகும். இன்று உலகிற்குப் பேச்சாளர்கள் தேவை இல்லை. தங்களுடைய வாழ்வின் மூலம் போதிப்பவர்களே தேவை.

47. குழந்தைகளே! மனித குலமே- இந்த உலகமே - உங்களுடைய குடும்பம் என்பதைச் சதா நினைவில் வையுங்கள். உங்களது இடது கையில் காயம்பட்டு விட்டால் வலது கை உதவிக்கு வரும். இரண்டு கைகளும் ஒரே உடலின் அங்கங்களே. நீங்கள் அவைகளோடு ஐக்கியப்பட்டவர்களென்று உணர்கிறீர்கள். இதே போன்ற ஐக்கிய மனோபாவத்துடன் நாம் உலகிலுள்ள நமது சகோதர, சகோதரியர்களை நேசித்து, உதவ வேண்டும்.; அவர்களுடைய தவறுகளை மறந்து விட வேண்டும்; அவர்களுக்காகத் துன்பப்படவும் தயாராக இருக்க வேண்டும். இதுவே ஆன்மிகத்தின் சாரம்.

48. உலகில் அன்பும், பேரன்பும் இருக்கின்றன. நீங்கள் உங்களுடைய குடும்பத்தினர் மீது அன்பு செலுத்துகிறீர்கள். ஆனால் அண்டை வீட்டார் மீது அன்பு காட்டுவதில்லை. உங்கள் பெற்றோர் மீது அன்பு செலுத்துகிறீர்கள். ஆனால் அதே மாதிரி அனைவர் மீதும் அன்பு காட்டுவதில்லை. உங்கள் மதத்தின் மீது அன்பு செலுத்துகிறீர்கள், ஆனால் எல்லா மதங்களின் மீதும் அன்பு காட்டுவதில்லை. பிற மதத்தவரை வெறுக்கக் கூடச் செய்கிறீர்கள். உங்கள் நாட்டின் மீது அன்பு செலுத்துகிறீர்கள். ஆனால் எல்லா நாடுகளின் மீதும் அன்பு காட்டுவதில்லை. இது நிஜமான பேரன்பாகாது இது குறுகிய அன்பாகும்.

இந்தக் குறுகிய அன்பைத் தெய்வீகப் பேரன்பாக மாற்றுவதே ஆன்மீகத்தின் இலட்சியமாகும். இந்தப் பேரன்பின் நிறைநிலையில் அழகிய, நறுமணம் மிக்க கருணை என்னும் மலர் மலர்கிறது.

49. நீங்கள் இறைவனை நோக்கி ஓரடி வைத்தால், அவர் உங்களை நோக்கி நூறடி வருவதை அனுபவத்தால் அறியலாம்.

50. குழந்தைகளே! இந்த உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் நம் மீது அன்பு செலுத்தினாலும் அந்த அன்பு, இறைவனிடமிருந்து நாம் ஒரு விநாடி அனுபவிக்கும் தூய அன்பின் அணுவளவிற்குச் கூடச் சமமாகாது. இறைவனின் தூய அன்போடு ஒப்பிடக் கூடிய அன்பு எதுவுமே இல்லை.

ஓம் லோகா: ஸமஸ்தா:
ஸுகினோ பவந்து!

21.சந்தனத்தின் மகிமை

ஆசாரங்களை அனுஷ்டிக்கும் ஹிந்துவுக்கு சந்தனம் மிகவும் புனிதமான பொருளாகும். தெய்வ பூஜைக்கு சந்தனம் இன்றியமையாததாகும். பித்ரு கர்மங்களிலும் இது உபயோகிக்கப்படுகிறது. பகவான் ஸ்ரீகிருஷ்ணரை நினைக்கும் போது அவருடைய சந்தனம் பூசிய கார்மேக மேனி நம் நினைவுக்கு வருகிறது. லலிதா ஸஹஸ்ரநாமம் தேவியை சந்தனக் குழம்பு சாத்திய அங்கங்களை உடையவள், சந்தனத்ரவதிக்தாங்கீ என்று சொல்கிறது. இவ்விதம் எல்லா தெய்வங்களுடனும் குளிர்ச்சிக்கு மறுபெயரெனத் திகழும் சந்தனத்திற்கு ஹிந்து கலாசாரத்தில் மிக முக்கியமான இடம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை இவை எடுத்துரைக்கின்றன. ஒரு ஹிந்துவானவன் தனது வாழ்வில் ஏதாவது ஒரு முறையில் சந்தனத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை.

சந்தனத்திற்கு நமது கலாசாரத்துடன் உள்ள உறவை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். மிகவும் குளிர்ச்சியும், நறுமணமும் உள்ள சந்தனத்தின் மகிமையை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. மதச் சடங்குகளிலும்,

வரவேற்பு போன்ற நல்ல முகூர்த்தங்களிலும் சந்தனம் கொடுப்பது மிகவும் முக்கிமான ஒன்றாகும். இது நம்முடைய அனுஷ்டானத்தின், ஆன்மிகத்தின் மற்றும் சுயநம்பிக்கையின் சின்னமாகும். இதற்கு அறிவியல்பூர்வமான மகிமையும் உண்டு. சந்தனத்தின் மருத்துவ குணங்களைக் குறித்து பழங்கால நூல்களிலும், நவீனகால நூல்களிலும் விபரித்திருப்பதைக் காணலாம். "நோய்க் கிருமிகள், தோல்வியாதிகள் போன்றவற்றை அழிப்பதும், குளிர்ச்சி அளிப்பதும், இதயத்திற்கு நலமளிப்பதும், நாவின் ருசியின்மையை அகற்றுவதும், மலம், பித்தம் ஆகியவற்றை முறைப்படுத்துவதும் சந்தனத்தின் குணங்களாகும்" என்று ஆரோக்கிய சாஸ்திரம் கூறுகிறது. பலம், நிறம், உடல்நலம், நல்ல மன உணர்வு, ஐசுவரியம் ஆகியவற்றைச் சந்தனம் அளிப்பதாகவும் கூறப்படுகிறது. சந்தனப் பொட்டு வைக்கும் போது ஒரு மந்திரம் சொல்ல வேண்டும் என்ற நியதியுண்டு.

"காந்திம் லஷ்மிம் த்ருதிம் சௌக்யம்
சௌபாக்யமதுலம் பலம்
ததாதி சந்தனம் நித்யம் ஸததம்
தாரயாம்யஹம்"

(சந்தனம் - காந்தி, ஐசுவரியம், மனசக்தி, சௌக்கியம், சௌபாக்கியம், அளவற்ற பலம் போன்றவற்றை நல்கும். நான் சந்தனத்தை நெற்றியில் வைத்துக் கொள்கிறேன்.)

தினமும் பூஜை செய்யும் வீடுகளில் எல்லாம் சந்தனத்தையும் வைத்திருப்பர். பகவானுக்கு சந்தனம் சார்த்திய பிறகு பக்தன் அதைத் தனது நெற்றியில் வைத்துக் கொள்கிறான். மருத்துவ குணங்கள் உள்ள சந்தனத்தை அணிவது நமது உடலுக்கு நன்மை பயக்கும். அதனால் தான் ஆலயங்களிலும், பூஜை சமயங்களிலும் இதைக் கட்டாயமாக உபயோகிக்கின்றனர். சந்தனக் கட்டையில் விலை அதிகமாக இருந்தாலும் சிறிய துண்டு சந்தனமாவது ஒவ்வொருவரின் இல்லத்திலும் வைத்திருப்பர். மரணத்திற்குப் பிறகு இறுதிக் கிரியைகள் செய்யும் போது சந்தனக்கட்டை (சிறிய துண்டாவது) உபயோகிப்பது வழக்கம். சந்தன வகையைச் சேர்ந்த இரக்த சந்தனம் பெரும்பாலும் வழக்கத்திலுள்ளது. இது அழகை அதிகரிக்கச் செய்வதுடன் பல மருத்துவ குணங்களும் உள்ளதாகும். கோபி சந்தனம்

இவற்றுடன் சேர்ந்தல்ல. அது ஒருவகை மண். கோபி சந்தனம் விஷ்ணு பகவானிடமிருந்து தோன்றியது என்று சொல்லப்படுகின்றது. கோபி சந்தனம் வைக்கும் போது சொல்ல வேண்டிய ஒரு பிரார்த்தனை இருக்கிறது.

"கோபி சந்தன பாபக்ன
விஷ்ணுதேஹஸமுத்பவ
சக்ராங்கித நமஸ்துப்யம்
தாரணாமுக்திதோ பவ

(பாவத்தை அழிப்பதும், விஷ்ணுவின் உடலிலிருந்து தோன்றியதும், சக்கரத்தை ஏந்தியவனுமான கோபி சந்தனமே, உனக்கு நமஸ்காரம். உன்னை நெற்றியில் சூடும் எனக்கு நீ முக்தியை அளிப்பாயாக)

நம்முடைய பண்பாட்டில் சொத்தாகத் திகழ்வது சந்தனம். எங்கும் நறுமணம் பரப்பி, அனைவருக்கும் குளிர்ச்சியை நல்கும் சந்தனம் நமக்கு ஒருவகையில் முன்னுதாரணமாகவும் திகழ்கிறது. சந்தனத்தைத் தண்ணீருடன் சேர்த்து அரைத்து பகவானுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் நம்முடைய சமர்ப்பண மனோபாவம் வெளிப்படுகிறது. சந்தனம் நீருடன் சேரும் போது தனக்கென ஒரு தனித்தன்மை இல்லாமல் மறைகிறது. சர்வ சமர்ப்பணம் ஒன்றால் மட்டுமே இது கை கூடும்.

சந்தனம் தான் தேய்ந்து பிறருக்கு மணம் பரப்புகிறது. சந்தனமரம் தனது கிளைகளை வெட்டும் போதும் நறுமணம் பரப்புகிறது. எந்த ஆபத்தையும் புன்னகையுடன் எதிர்கொண்டு, பிறருக்கு நன்மை செய்யும் மகான்களைப் பற்றி விவரிக்கும் போது சந்தனத்தை உதாரணமாகச் சொல்வதுண்டு. தன்னை வெட்டும் கோடரியின் முனையைக் கூட நறுமணம் மிக்கதாகச் செய்யும் சந்தன மரத்தின் சிறப்பை மேன்மக்களின் இயல்பாக விவரிக்கும் ஒரு சுலோகத்தை சொல்லி நிறைவு செய்கிறேன்.

ஸுஜனோ ந யாதி வைரம்
பரஹிதநிரதோ விநாசகாலே
சேதேfபி சந்தனதரு; ஸுரபயதிமுக குடாரஸ்

எப்போதும் பிறருக்கு நன்மை செய்பவர்களான நன்மக்கள் கஷ்டகாலத்தில் தங்களை நாசம் செய்பவர்களிடம் கூட பகைமை பாராட்டுவதில்லை. தன்னை வெட்டும் கோடாரியின் முனைக்குக் கூட சந்தனமரம் நறுமணம் அளிக்கிறது.

22.நாமஜபத்தின் மகிமை

திரு.பி.ஏ.சங்கரநாராயணன்

மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாக இருந்தாலும் அக்பர் சாதாரண மனிதரைப் போல் எல்லா இடங்களுக்கும் சென்று வருவது வழக்கம். பெரும்பாலும் அவருடன் பீர்பாலும் செல்வார்.



ஒருமுறை அவர் அடர்ந்த காட்டுவழியாகப் பீர்பாலுடன் பயணம் செய்தார். பசியாலும், தாகத்தாலும் சோர்ந்த அவர் மரநிழலில் அமர்ந்தார். அவர் மனதில், அருகில் எங்காவது வீடு இருக்கிறதா? உணவு கிடைக்குமா? என்ற சிந்தனை வட்டமிட்டது.

பீர்பால், அரசே எனக்கு இக்காட்டில் அமைதியான சூழ்நிலை மிகவும் பிடித்துவிட்டது. நான் ஓரிடத்தில் அமர்ந்து இறைநாமத்தை ஜபிக்கட்டுமா? என்று கேட்டார்.

அக்பர், "இறைநாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தால் உணவு கிடைக்குமா பீர்பால்? பசி தீருமா? என்னுடன் வா. அருகில் எங்காவது வீடுகள் காணப்படலாம். அவர்களிடம் சென்று உணவு கேட்கலாம்" என்றார்.

"என்னை இங்கே அமர்ந்து ஜபிக்க அனுமதி தாருங்கள். இந்த மரத்தடியில் அமர்ந்து நான் தியானிக்க விரும்புகிறேன். பக்தனின் தேவைகளைப் பகவான் அறிந்து, தேவையானதை அளிப்பார் என்று பகவத்கீதை கூறுகிறது. தேவையெனில் நீங்கள் போய் வாருங்கள். நான்

இங்கேயே அமர்ந்திருக்கிறேன்.'' என்றார் பீர்பால்.

இவரோடு தர்க்கம் செய்வதால் பயனில்லை என்று தோன்றவே அக்பர் ஒற்றையடிப் பாதை வழியாக நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரம் சென்ற போது ஒரு வீடு தெரிந்தது. அவர் அவ்வீட்டிற்குள் சென்றார்.

அவ்வீட்டார், சக்கரவர்த்தி அக்பர் தங்கள் இல்லத்திற்கு வந்திருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். அவர் தனது பசிக்கு உணவு தருமாறு தங்களிடம் கேட்டதை மகாபாக்கியமாகக் கருதினர் அவ்வீட்டார் தங்களிடமிருந்த மிகச் சிறந்த உணவு வகைகள் அனைத்தையும் வழங்கி மகிழ்ந்தனர். அக்பர் திருப்தியுடன் உணவு உண்டார்.

''பீர்பால் தன்னுடன் வந்திருக்கிறாரே அவருக்கும் பசிக்குமல்லவா? அதனால் அவ்வீட்டாரிடம் கேட்டுச் சிறிது உணவை வாங்கிக் கொண்டு போகலாம்'' என அக்பர் தீர்மானித்தார்.

பீர்பால், ''இதோபார், சிங்கமாக இருந்தாலும் சும்மா இருந்தால் இரை ஒன்றும் அதன் வாய்க்குள் வந்துவிழாது வேட்டையாடித் தனது இரையை அது பிடிக்க வேண்டும். நான் உறுதியான முடிவுடன் உணவைத் தேடி நடந்தேன். ஒரு வீட்டைக் கண்டுபிடித்து நன்றாக உணவருந்தினேன். ஆனால் நீங்களோ? இறைநாமத்தை ஜபித்தபடி பட்டினியல்லவா கிடக்கிறீர்கள்? பாவம் எது எப்படியோ நான் உங்களுக்காகச் சிறிதளவு உணவு கொண்டு வந்திருக்கிறேன். இதைச் சாப்பிடுங்கள்'' என்றார் அக்பர்.

சக்கரவர்த்தி பரிகசித்ததால் எந்தவித முகமாற்றமும் பீர்பாலிடம் ஏற்படவில்லை. தன் முன்னால் வைத்த உணவை எடுத்து உண்ட பிறகு அவர் அக்பரை நோக்கி, ''பிரபு முன்பு இருந்ததை விட இறைநாம ஜபத்தின் மகிமையை இன்று நான் நன்கு புரிந்து கொண்டேன்'' என்றார். ''இந்த அமைதியான வனத்தில், இப்பெரிய மரத்தின் நிழலில் தியானிக்க முடிந்ததால் சொல்கிறீர்களா?'' என்று அக்பர் அப்பாவியாகக் கேட்டார்.

''இல்லை அரசே சக்கரவர்த்தியான தங்களுக்கு இன்று ஒரு வேளை உணவை யாசித்துச் சாப்பிட நேர்ந்ததல்லவா? இறைநாமத்தை ஜபித்துக்

கொண்டிருந்த இந்த பக்தனுக்கோ? பகவான் சக்கரவர்த்தியின் கைகளில் உணவைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அது தான் இறைநாம ஜபத்தின் மகிமை. பகவான் பக்தன் மீது காட்டும் அன்பிற்கும், பாதுகாப்பிற்கும் வேறு விளக்கம் தேவையா? என்றார் பீர்பால். அக்பரின் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளிவரவில்லை. அவர் பீர்பாலைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

23.தீபத்தின் தத்துவம்

பிர.சிவாம்ருத சைதன்யா



சந்தி வேளைகளில் குத்துவிளக்கு போன்ற விளக்கை ஏற்றாத வீடுகளில் லஷ்மி வாசம் செய்ய மாட்டாள் என்று முதியோர் கூறுவதுண்டு. இன்று கிராமப் பகுதிகளில் கூட மின்வசதி உள்ள நிலையில் விளக்கைத் தேய்த்துக் கழுவி, எண்ணெய் ஊற்றி, விளக்கேற்றுவதற்கு நேரமும், பொறுமையும் யாருக்கு இருக்கிறது? உண்மைதான்; மின் வசதி வந்ததுடன் வெளியிருந்து ஓடி ஒளிந்த இருளானது மனித மனங்களில் குடியேறிவிட்டது. மின்சாரவிளக்கால் ஒளிசிந்தும் வீடுகள் பலவற்றிலும், குத்துவிளக்கு ஒரு மூலையில் கவனிப்பாரின்றிக் கிடக்கிறது. இது, வெகுகாலமாகப் பழக்கத்தில் இருந்து வந்த பண்பாடானது, விளக்கின் திரி கரிந்து நிற்பது போன்ற தீய சகுனமாகும்.

நாம் விளக்கேற்றுவது ஏன்? இருளில் இருக்கும் தெய்வத்திற்கு வெளிச்சம் கொடுப்பதற்காக அல்ல. ஒளிக்கு ஒளி நல்கும் இறைவனுக்கு நம்முடைய விளக்கால் என்ன பயன்? நாம் விளக்கு ஏற்றுவது நம்முடைய உள்ளத்தில் உள்ள அஞ்ஞான இருளை நீக்குவதற்காகவே ஆகும். இந்த உணர்வுடன் விளக்கு ஏற்றும் போது தான் அது ஒரு பூஜையாக மாறுகிறது. எந்த நோக்கத்துடன் நாம் ஒரு செயலைச் செய்கிறோமோ அதற்கேற்ற பலனே அதிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. ஆனால் பெரும்பாலும் குறிப்பிட்ட

நோக்கமோ, பிரார்த்தனையோ இல்லாமல்தான் நாம் விளக்கு ஏற்றுகிறோம். இவ்வாறு விளக்கு ஏற்றுவதால் சுற்றுப்புறத் தூய்மையைத் தவிர நமக்குக் குறிப்பிட்ட பலன் எதுவும் கிடைக்காமல் போகிறது. எப்போதும் தூய்மையான நோக்கத்துடன், நமக்குத் தெரிந்த ஒரு மந்திரத்தைச் சொல்லியவாறு நாம் விளக்கை ஏற்ற வேண்டும். பழங்காலத்தில் வீடுகளில் இறை நினைவுடன் தான் அடுப்பில் நெருப்பை மூட்டுவது வழக்கம். உலையில் அரிசி இடுவதும் அப்படித்தான். அறிந்தோ, அறியாமலோ தினசரிக் காரியங்கள் அனைத்திலும் இறை நினைவு இடையறக் கலந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நமது முன்னோர் ஆசார அனுஷ்டானங்களைப் பின்பற்றி வந்தனர்.

விளக்கு ஏற்றுவது முதல் நாம் செய்யும் ஒவ்வொரு கர்மத்திலும் நாம் காட்டும் சிரத்தையே நம்முடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. சிரத்தையும், நல்ல நோக்கமும் கொண்ட எந்தக் கர்மமும் நன்மையைத் தரும். சிரத்தையின்றி, எந்தவித நோக்கமுமின்றிச் செய்யும் கர்மங்கள் எவ்வளவு சிறந்தவையாக இருந்தாலும் அவை துன்ப அனுபவங்களைத் தருபவையாக அமைகின்றன. உண்மையில், நம்முடைய எல்லாக் கஷ்டங்களும், சிரத்தை என்ற பாடத்தை நமக்குக் கற்பிப்பதற்காக இயற்கையன்னை அனுப்பி வைக்கும் குருமார்களே ஆகும்.

எந்தக் கர்மமும் முழுமை பெறுவதற்குத் தெளிவான புத்தி (பிரகாசமாக எரியும் திரி), செயல் திறமை (எண்ணெய்), தகுதியுள்ள கருவி (விளக்கு) ஆகிய மூன்றும் ஒன்றாக இணைய வேண்டும் என்பதால்தான் விளக்கேற்றி நாம் மங்கல காரியங்களை ஆரம்பிக்கிறோம். விளக்கு ஏற்றுவதை ஒரு மதநூலும் எதிர்க்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

பூஜை செய்யும் போது ஒரு திரி ஏற்றினால் அது சாதகனை நோக்கி இருக்க வேண்டும். நம்முடைய உள்ளத்தில் ஒளி பரவ வேண்டும் என்ற உணர்வு நமக்கு ஏற்படுவதற்காகவே இவ்வாறு செய்கிறோம். இரண்டு திரிகள் ஏற்றினால் ஒன்று நம்மை நோக்கியும், மற்றொரு திரி பூஜா மூர்த்தியை நோக்கியும் இருக்க வேண்டும். உள்ளத்தில் மட்டுமல்ல, வெளியிலும் இஷ்ட தெய்வத்தையே காண நமக்கு இயல வேண்டும் என்பதே இதன் பொருள்; ஹோமத்திலும், பொங்கல் இடும் போதும், திறந்த இடத்தில் விளக்கு ஏற்றும் போதும், நிலைப்படி அருகில் விளக்கு வைக்கும் போதும் கிழக்கு

மேற்காக இரண்டு திரிகள் ஏற்றுவதுண்டு. ஜீவாத்ம ஸ்வரூபமான தீபம் (அக்னி) பரமாத்ம ஸ்வரூபியான சூரியனிடமிருந்து தோன்றி, அதே சர்வஸாஷியில் இலயிக்கிறது என்ற தத்துவத்தையே இது விளக்குகிறது.

விளக்கில் எத்தனை திரி இடுகிறோம் என்பதல்ல, எந்த நோக்கத்துடன் இடுகிறோம் என்பது தான் முக்கியம். திரிகரண சுத்தியையோ, மூன்று தாப நிவாரணத்தையோ, மூன்று சந்த்யைகளையோ, மூன்று அக்னிகளையோ, மும்மூர்த்திகளையோ, சக்திஸ்வரூபிணியின் மூன்று பாவங்களையோ, மூன்று காலங்களையோ, தர்மஅர்த்த காமங்களையோ, சரீர த்ரயங்களையோ, அவஸ்தாத்ரயங்களில் மறையாமல் நிற்கும் பேருணர்வையோ மனதில் கொண்டு மூன்று திரிகளை ஏற்றலாம். அவை கிழக்கு, மேற்கு, வடக்கு திசைகளை நோக்கியவாறோ, சமத்ரிகோணமாகவோ இருக்கலாம். பஞ்ச ப்ராணசுத்திக்காக பஞ்சாஷர மந்திரத்தை ஜபித்தவாறோ, ஜம்புலன்களும் இறைவனை நோக்கித் திரும்பும் நோக்கத்துடனோ ஐந்து திரிகளை ஏற்றலாம். ஆலய வழிபாட்டில் சங்கு, மணி ஆகியவற்றின் நாதம் செவியையும், பிரசாதம் நாவையும். அலங்கரிக்கப்பட்ட சிலையும், தீபமும், ஆரத்தியும் கண்ணையும், பூ; சாம்பிராணி போன்றவை மூக்கையும். தீர்த்த ஸ்நானம், விபூதி அணிவது ஆகியவை மெய்யையும் இறைவனை நோக்கித் திரும்புவதற்கு வழி செய்கின்றன. தோல், இரத்தம், மாமிசம், மஜ்ஜை போன்ற சப்த தாதுக்களைக் கருத்தில் கொண்டு ஏழு திரி ஏற்றலாம். ஒன்பது துவாரங்கள் உள்ள உடலும் அகமும், புறமும் ஒளிபெறுவதற்காக வாயிற்படியில் ஒன்பது திரியுள்ள தீபம் ஏற்றலாம். ஏகாதச ருத்ர சங்கல்பத்தில் பதினொரு திரிகளை ஏற்றலாம். ஒரு திரி மஹா வியாதியையும், மூன்று திரி சோம்பலையும் உண்டாக்கும் என்று சொல்லும் சில கருத்துக்களுக்கு சாஸ்திரீய அஸ்திவாரம் இருப்பதாகச் சொல்ல முடியாது.

தீபத்திற்கு, ஆலயப் பிரதிஷ்டை, வைபவத்தோடு சம்பந்தமுண்டு, விளக்கு கோயில் என்றால் திரி விக்கிரகம்; எண்ணெய் மந்திர சைதன்யம் எனில் தீபம் ஏற்றுவது பிராணப் பிரதிஷ்டை ஆகும். பிரதிஷ்டை செய்யும் ஆச்சாரியார் விக்கிரகத்தில் தேச மங்கலத்திற்காகத் தெய்வ சைதன்யத்தை மந்திர தந்திரத்தால் ஆவாஹிக்கும் அதே செயலையே, குடும்பத்தின் ஐஸ்வரியத்தைக் கருத்தில் கொண்டு, காலை, மாலை சந்தியா வேளைகளில் பிரார்த்தனையுடன் தீபம் ஏற்றும் குடும்பத் தலைவிகள் செய்கிறார்கள்.

இதுவே ஏற்றி வைத்த விளக்கை லஷ்மி வடிவாகக் கண்டு வணங்குவதற்குக் காரணமாகும். ஹோமகுண்டத்தில் ஆஜ்யாஹுதி செய்வதும், நெய்விளக்கு ஏற்றுவதும் இதே பொருளைத் தரும் செயல்களாகும். பஞ்ச பூதங்களை ஒன்றாக இணைத்துத் தெய்வத்தின் அர்ச்சாவதார வடிவை நிர்மாணிக்கும் செயலின் சிறு வடிவமாகவே ஐந்து திரியிட்ட விளக்கில் தேவதையை எழுந்தருளச் செய்கிறோம்.

குரு என்ற வார்த்தையின் பொருள் இருளை நீக்குபவர் என்பதாகும், இருளால் மூடப்பட்டிருக்கும் நமது வாழ்க்கைப் பாதையில் ஒளிசிந்தும் உயிருள்ள தீபமே குரு. மனத்தூய்மைக்காகக் குரு அருளிய மந்திரத்தைச் சொல்லியவாறு தீபம் ஏற்றுவது மிகவும் நன்மை பயக்கும் செயலாகும்.

தேவதையின் ஆத்மாவாக உள்ள காரணத்தால் தீபத்தை ஊதி அணைக்கவோ, ஆட்டவோ, நகர்த்தவோ, தரையில் வைக்கவோ, விளக்கைச் சுத்தம் செய்யாமல் ஏற்றவோ, நாற்றமடிக்கும், கலப்படமுள்ள எண்ணெயை உபயோகிக்கவோ, ஒருமுறை உபயோகித்த திரியை மீண்டும் உபயோகிக்கவோ கூடாது. தீப்பெட்டியால் தீபம் ஏற்றாமல் கொடி விளக்கை உபயோகித்தோ, இன்னொரு திரியை உபயோகித்தோ பிரதஷிணமாக விளக்கு ஏற்ற வேண்டும். அது போல் எரியும் விளக்கிலிருந்து ஊதுவத்தியையோ, மெழுகுவத்தியையோ ஏற்றுவது கூடாது. தீபம் என்பது சர்வ தேவதைகளின் வடிவமாகும். அது நமக்கு ஒளி வழங்குவதாகும்.

24.விரதங்களின் மகத்துவம்

நம் ஆன்மீக உயர்வையும், நமது நல்ல இயல்பையும், சமூக மேன்மையையும் உறுதிப்படுத்த பரம்பரையாக நாம் பல உபாயங்களைக் கையாண்டு வருகிறோம். அவற்றில் மிக முக்கியமானது விரத அனுஷ்டானமாகும். எல்லா மதங்களிலும் விரத அனுஷ்டானங்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. எனினும், ஹிந்து தர்மத்தில் இருப்பது போன்ற பலவித விரதங்கள் வேறு எந்த மதத்திலும் இல்லை. விசேஷ காலங்களில் அனுஷ்டிக்கக் கூடிய பல விரதங்கள் நமக்கு உண்டு. பகலில் உறங்காமல் இருத்தல், மாலை வேளையில் உலகியல் படிப்பு, உணவு, உறக்கம் போன்றவற்றைத் தவிர்த்தல் போன்றவை; தினமும் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களாகும், மேலும், வாரத்தில் ஒருமுறை அனுஷ்டிக்கும் வியாழன், திங்கள், சனிக்கிழமை விரதங்களும் 15தினங்களுக்கு ஒருமுறை வரும் ஏகாதசிவிரதம், பிரதோஷவிரதம், சஷ்டிவிரதம் போன்றவையும் மிகவும் பிரசித்தமானவை. பலதினங்கள் தொடர்ந்து இருக்கும் விரதங்களும் உண்டு. ஒன்பது தினங்கள் இருக்கும் நவராத்திரி விரதம், ஒரு மாதம் இருக்கும் சாந்த்ராயண விரதம், 41 தினங்கள் இருக்கும் மண்டல விரதம் போன்றவை இவற்றில் சிலவாகும். இரண்டு மாதம், ஒரு வருடம் தொடர்ந்து இருக்கும் விரதங்களையும் பலர் அனுஷ்டிப்பதுண்டு. பெற்றோர் இறந்துவிட்டால், ஒரு வருடம் வீட்டில் எந்தவித சுபகாரியங்களோ, விழாக்களோ கொண்டாடாமல் இருப்பது ஹிந்துக்களின் வழக்கம். பழங்கால மக்கள் அனுஷ்டித்து வந்த கடினமான விரதங்களின் மிகச் சிறிய அளவையே இப்போது நாம் காண்கிறோம் 12 வருடமும், 14வருடமும், வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிக்கப்படும் விரதங்களைப் பற்றிப் புராண, இதிகாசங்களில் காணலாம்.

ஸ்ரீ ராமனின் 14 வருட வனவாஸம் ஒரு நீண்டகால விரதமாக இருந்தது. முனிவர்களைப் போல் ஜடாமுடி தரித்து, மரவுரி அணிந்து, கிழங்கு, பழங்களை உணவாகக் கொண்டு வாழ்ந்த அவர், மக்கள் வசிக்கும் நாடு, கிராமம் போன்ற இடங்களில் வசிப்பதைத் தவிர்த்தார். அதே சமயம், லஷ்மணன் 14 வருட பிரம்மச்சரியத்துடன், உறக்கத்தைத் துறந்து ராமருக்கு சேவை செய்யும் விரதத்தில் ஈடுபட்டான். இதுபோல் வாழ்நாள் முழுவதும் நைஷ்டிக பிரம்மசரிய விரதத்தை நூற்றாண்டுகளாக அனுஷ்டித்த, பீஷ்ம

பிதாமகர் விரதம் இருப்பவர்களுக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். இதனால் இவர் "இச்சா ம்ருத்யு" என்கிற, தான் விரும்பும் போது உயிரைத் துறக்கும் வரத்தைப் பெற்றார். அவரது விரதத்தைக் குலைப்பதற்குப் பல சூழ்நிலைகளும், நிகழ்ச்சிகளும் ஏற்பட்ட போதும் அவர் தனது விரதத்தில் உறுதியாக இருந்து, வாழ்வில் ஏற்பட்ட கஷ்டங்களை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார். எல்லா மகான்களும் விரதங்களை அனுஷ்டித்து, மகிமை பெற்றவர்களே ஆவர். இத்தகைய மகான்கள் விரத நிஷ்டையால் பெற்ற ஆன்மீக சக்தி ஒன்றுதான் இவ்வுலகம் நிலைத்து நிற்பதற்கு ஆதாரமாக உள்ளது.

புலன்களைக் கட்டுப்படுத்துவதுதான் விரதத்தின் முக்கிய நோக்கம். புலனடக்கத்தால் நமக்கு விரும்பிய நல்வாழ்வும், மோக்ஷமும் கிடைக்கும். புலன்களை விருப்பம் போல் அலைய விட்டால் அவை கடிவாளம் இல்லாத குதிரைகளைப் போல் பாயும். அப்போது நாம் வீழ்ச்சியை அடைவோம். இவ்விஷயத்தை மகானான சாணக்கியன் எவ்வளவு தெளிவாகக் கூறியிருக்கிறார் என்று பாருங்கள்:

"ஆபதாம் கதித பந்தா
இந்த்ரியாணாமஸம்யம:
தஜ்ஜய; ஸம்பதாம் மார்கோ
யேனேஷ்டா தேன கம்யதாம்"

சாணக்கிய நீதி - 74

புலன்களின் கட்டுப்பாடின்மை ஆபத்திற்கான வழி என்று சொல்லப்படுகின்றது. அவற்றை வெல்வது செல்வத்திற்கான வழியாகும். இவற்றில் எதை விரும்புகிறீர்களோ அதைப் பின்பற்றுங்கள்.

விரத அனுஷ்டானங்களின் மூலம் புலனடக்கம் மிகப்பெரிய எல்லை வரை விரிகிறது.

சாதாரண மக்கள் புண்ணியத்தை சம்பாதிக்கவோ, பாவத்தை நீக்கவோ, விரும்பியதைப் பெறவோதான் விரதங்களை அனுஷ்டிக்கிறார்கள். விரத தினங்களில் உடல் தூய்மை, வழிபாடு, உபவாசம், உறங்காதிருத்தல்,

பிரம்மசரியம் போன்றவற்றை விதிப்படி அனுஷ்டிப்பதுதான் விரதத்தின் சாதாரண நியதியாகும்.

மௌனம், மிதமான பேச்சு போன்றவையும் பெரும்பாலும் விரதத்தில் முக்கியமான அம்சங்களாகும். ஒவ்வொரு பக்ஷத்திலும் (15 தினங்களில்) வரும் ஏகாதசி, சஷ்டி, பிரதோஷம் மற்றும் ஒவ்வொரு வருடமும் வரும் கிருஷ்ணாஷ்டமி, மகாசிவராத்திரி போன்ற தினங்கள் விரதமிருக்கச் சிறந்த தினங்களாகும். நவராத்திரி, மண்டலம் போன்ற விரதங்களுக்கும் சிறப்பான முக்கியத்துவம் உண்டு.

விரதங்களின் முக்கியத்துவம் இக்காலத்தில், பழங்காலத்தில் இருந்ததை விட அதிகமாகி இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். இன்றைய பிரச்சனைகளும், அவசரமும், மனஇறுக்கமும் நிறைந்த வாழ்க்கை சூழ்நிலைகள் மனிதனின் ஆயுள், ஆரோக்கியம் மற்றும் மனநிம்மதிக்கு எதிராக உள்ளன. மனநிம்மதி இல்லாத நவீனகால மனிதனின் உடலும் பலவித நோய்களால் பாதிக்கப்பட்டு சக்தியிழந்திருக்கிறது. மனஇறுக்கம் நோயாக மாறுகிறது. என்பது தற்கால மனிதனைப் பொறுத்தவரை முற்றிலும் சரியாக இருக்கிறது. இதனால் மனிதன் அற்ப ஆயுளில் இறக்க நேரிடுகிறது. இல்லாவிடில் வேதனை நிறைந்த வாழ்க்கை வாழ நேரிடுகிறது. இந்த நிலையில் விரத அனுஷ்டானங்கள். இவற்றிலிருந்து விடுபட மனிதனுக்கு ஒரு வழியாக இருக்கிறது. விரதங்கள் உடலிலும், மனதிலும் ஏற்படுத்தும் நற்பலன்கள் மனிதனுக்கு நல்ல ஆரோக்கியத்தையும், தீர்க்காயுளையும் அளிக்கிறது.

இவ்வாறு மனிதனின் உடல், மனவளர்ச்சிக்கு உதவி, அவனை ஆன்மிக முன்னேற்றம் பெறச் செய்து, வாழ்வின் இலட்சியமான மோஷம் வரை அழைத்துச் செல்லும் விரதங்களுக்கு நம் வாழ்விலும் முறையான முக்கியத்துவம் அளிக்க முயற்சிப்போம்.

"யோ வை வாங்மனஸீ யதி;
தஸ்ய வ்ரதம் தபோ தானம்
ஸ்ரவத்யாமகடாம்புவத்"

பாகவதம் 11-16-43

பேச்சையும், மனதையும், புத்தியையும் முறையாகக் கட்டுப்படுத்தாத மனிதனின் விரதமும், தவமும், தானமும் சுடாத மண்குடத்தில் சேகரித்த நீர் போல் வீணாகும்.

25.பாத பூஜையின் மகத்துவம்

பிர.பத்மநாபன்

சுவாமி : பக்தர்கள் எதற்காக அவர்களுடைய குருவிற்கு பாதபூஜை செய்கிறார்கள்?



சுவாமி : ஒரு சமயம் ஸ்ரீ ராமானுஜர், தன்னுடைய குரு, அறையின் கதவுகளையெல்லாம் மூடிவிட்டு நீண்ட நேரம் தியானித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவருடைய தியானத்திற்குப் பிறகு ஸ்ரீ ராமானுஜர், "தேவரீர், யாரை தியானித்துக் கொண்டிருந்தீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவருடைய குரு எவ்விதத் தயக்கமும் இல்லாமல், "என்னுடைய குருவின் பாதகமலங்களைத் தியானித்தேன்" என்றார். அன்று முதல் ஸ்ரீ ராமானுஜர், குருவின் திருப்பாதங்களை பகவானை விட உயர்வாகக் கருதலானார்.

நம்முடைய சாஸ்திரங்கள் குருவின் திருப்பாதங்களை சிவசக்திக்கு இணையாகக் கருதுகின்றன; குருவின் பாதங்களிலிருந்து வெளிப்படும் அருள் சக்தி சிஷ்யனுடைய முக்திக்கு வழிவகுக்கும் என்கின்றன. இதிலிருந்து குருவின் திருப்பாத மகிமை நமக்கு விளங்குகிறது.

குருகீதை, "குருவின் திருப்பாத கமலங்கள் மிகவும் புனிதமானவை. அந்தப் பாதங்களுக்கு அபிஷேகம் செய்த நீர் (பாதோதகம்) அதாவது பாத தீர்த்தம் அதைப் பருகுபவர்களைப் புனிதமாக்கும்" என்று சொல்கிறது. மேலும், பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வதாலும். ஏழு கடல் மற்றும் புண்ணிய நதிகளில் நீராடுவதாலும்

கிடைக்கும் புண்ணியத்தின் பலன், குருவின் பாத தீர்த்தத்தை அருந்துவதால் கிடைக்கும், புண்ணிய பலனில் ஆயிரத்தில் ஒரு பங்குக்கு இணையாகாது என்கிறது.

பிரம்மா, விஷ்ணு பகவானின் திருப்பாதங்களுக்கு அபிஷேகம் செய்ததன் பயனான பாத தீர்த்தமே கங்கையாகும். இதனால் நதிகளில் கங்கை மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது. இப்போதும் பெரும்பாலோர் தங்கள் பாபங்களை எல்லாம் நீக்கி புனிதமாவதற்காகக் கங்கையில் நீராடுகிறார்கள். ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியார், "குருவின் பாத தீர்த்தம் கங்கையைப் போலப் புனிதமானது" என்கிறார்.

மேலும், நம்முடைய உடலிலிருந்து பெரும்பாலான சூக்ஷும அலைகள் பாதத்தின் வழியே வெளியேறுகின்றன. அவை அவ்வாறு வெளியேறி பூமிக்குள்ளே செல்வதைத் தடுக்க நாம் காலணிகளை அணிகிறோம்.

சத்குருவின் திருப்பாதங்களில் இருந்து வெளிப்படும் புனிதமான அருள் சக்தியைப் பெற்றுக் கொள்ளவே பக்தர்கள் அவருடைய பாதங்களுக்குஅபிஷேகம் செய்தல், பாத தீர்த்தத்தை அருந்துதல், பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தல் மற்றும் பிடித்து விடுதல் போன்ற சேவைகளைச் செய்கிறார்கள்.

பாத பூஜை செய்வது இந்து மதத்தில் மட்டுமல்ல மற்ற மதங்களிலும் உண்டு. ஒரு சமயம் விலைமகள் ஒருத்தி இயேசுவின் திருப்பாதங்களை தன்னுடைய கண்ணீரால் கழுவி, தலைமுடியால் துடைத்து நறுமணத் தைலம் கொண்டு அபிஷேகம் செய்தாள், அவள் பக்தியுடன் செய்த பாத பூஜையால் மகிழ்ந்த இயேசுபிரான், "உன்னுடைய பாபங்கள் மன்னிக்கப்பட்டன; உன்னுடைய நம்பிக்கை உன்னைக் காப்பாற்றியது; சமாதானத்துடன் செல்" என்றார். (லூக் 7:50) இவ்வாறு அந்த விலைமகள் பாத பூஜையால் ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றாள். இது பக்தியுடன் செய்யும் பாத பூஜையின் மகிமையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

நமது அம்மாவின் தேவிபாவ தரிசனத்தின் இறுதியில் பக்தர்கள் அம்மாவிற்குப் பாத பூஜை செய்வதை நாம் காணலாம். அவர்களின் பக்தி அளவிடற்கரியது. பாதபூஜையின் இறுதியில் ஆர்த்தி செய்யும் போது, அதுவரை அவர்கள் அடக்கி வைத்திருந்த கண்ணீர் வெளிப்படுவதைக் காணலாம். நீ அதைக் கண்டிருக்கிறாயா?

ஆம் சுவாமிஜி, நான் கண்டிருக்கிறேன். அதனால் தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். உண்மையில், அவர்கள் செய்யும் பாத பூஜையைக் காண்பதன் மூலம் பக்தி இல்லாதவர்களுக்கும் பக்தி ஏற்படும். அவ்வளவு உருக்கத்துடன் செய்கிறார்கள். மேலும் அவர்கள் மிகவும் பணிவானவர்கள்.

ஆம், அது உண்மைதான் ஆனால், உண்மையான பணிவுடைமை என்பது நம்மை விட உயர்ந்தவர்களுக்குக் காட்டும் மரியாதை மட்டுமல்ல; எல்லோருக்கும், எல்லாவற்றுக்கும் மரியாதை காட்டுவதுதான் என்பதை நினைவில் வைக்க வேண்டும். ஒருவனுடைய பணிவுடைமையை அவன் கூட இருப்பவர்களிடம் அவன் பழகும் விதத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு வேலைக்காரன் தன்னுடைய எஜமானனிடம் பணிவுடன் நடந்து கொள்வதில் ஒரு வியப்பும் இல்லை. ஆனால், ஒரு எஜமானன் தன்னுடைய வேலைக்காரனைப் பூஜித்தால், அல்லது உயர்ந்த நிலையிலிருப்பவர்கள், தாழ்ந்த நிலையிலிருப்பவர்களைப் பூஜித்தால், அதுதான் உண்மையான பணிவுடைமை ஆகும்.

மகாபாரதத்தில், பாண்டவர்கள் செய்த இராஜசூய யாக சமயத்தில், பகவான் ஸ்ரீகிருஷ்ணரைத் தவிர மற்ற எல்லோருக்கும் பணிகள் ஒதுக்கப்பட்டன. பகவானோ, தன்னுடைய சுய விருப்பப்படி, யாகத்துக்கு அழைக்கப்பட்டவர்களின் பாதங்களைக் கழுவி வரவேற்கும் பணியை மேற்கொண்டார். இது மிகவும் கடினமான செயலாகும். ஏனென்றால் யாகத்துக்கு ஆயிரக் கணக்கானவர்கள் வந்தார்கள். இருந்தாலும் பகவான் தான் மேற்கொண்ட சேவையைக் கைவிடவில்லை. இது அவருடைய பணிவுடைமையை நமக்குக் காட்டுகிறது.

இதைப் போல, இயேசுவும் தன்னுடைய சீடர்களின் பாதங்களைக் கழுவினார். அப்போது அவர், "நீங்கள் என்னை போதகர், பகவான் என்று அழைக்கிறீர்கள் அல்லவா? அப்படி உங்களால் அழைக்கப்படும் நான், அதாவது உங்களுடைய போதகர், பகவான் உங்களுடைய பாதங்களைக் கழுவுவது போல நீங்களும் மற்றவர்களின் பாதங்களைக் கழுவ வேண்டும்.

நான் உங்களுக்கு ஒரு முன்னுதாரணமாகச் செய்வது போல நீங்களும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். உண்மையாக நான் சொல்கிறேன். ஒரு வேலையாள் தன்னுடைய எஜமானை விட உயர்ந்தவன் அல்ல . ஒரு தூதுவன் அவனை அனுப்பியவரை விட உயர்ந்தவன் அல்ல" என்றார் (யோவான் 13:12:17) இவ்வாறு இயேசு பாத பூஜை செய்ததன் மூலம் பணிவுடமையை அவர்களுக்குப் போதித்தார்.

நம்முடைய அம்மா பக்தர்களின் வீடுகளுக்குச் செல்லும் போது அவருக்குப் பாத பூஜை செய்வது பக்தர்களின் வழக்கமாகும். ஒரு முறை அவர்கள் அம்மாவின் பாத தீர்த்தத்தை அருந்துவதைக் கண்ட அம்மா "என்ன முட்டாள்தனம், பாதங்களைக் கழுவிய நீரை அருந்துவதன் மூலம் முக்தி கிடைத்து விடுமா? பணிவுடைமையே அதை விட முக்கியமானதாகும்" என்றார். இந்தச் சம்பவத்தின் மூலம், அம்மா, வெளிப்பகட்டாக நாம் காட்டும் பணிவை விரும்பவில்லை என்பது தெளிவாகிறது. ஒருவரின் வெளிப்புறச் செயல்களை மட்டும் வைத்து அவருடைய பணிவை நம்மால் எடைபோட முடியாது. ஒரு மகாத்மாவினால் தான் மற்றவர்களின் செயல்களை மட்டுமல்லாமல், அதைச் செய்பவர்களின் மனநிலையையும் சரியாக எடைபோட்டு அவர்களின் அகங்காரத்தை அழிக்க முடியும்.

அது மிகவும் சரிதான் சுவாமிஜி, எனக்கு இன்னொரு சந்தேகமும் உள்ளது. அதாவது பாதுகை பூஜையானது பாத பூஜையை விடச் சிறந்ததா?

சிலர் அப்படியும் நினைப்பது உண்டு. பொதுவாக, நாம் காலணிகளை வீட்டுக்குள்ளோ அல்லது புனிதமான இடங்களிலோ அணிவதில்லை. ஏனென்றால் அந்த இடங்களை அசுத்தமாக்க விரும்புவதில்லை. ஆனால் ஒரு குரு அணியும் காலணிகள் பூஜை அறையில் வைத்துப் பூஜிக்கத்தக்கவை; குருவின் பாததூளி (பாததூசி) நம் சிரசின் மீது அணியத்தக்கவை; பாததீர்த்தம் பிரசாதமாகப் பருகத் தகுந்தது. நம்முடைய சாஸ்திரங்கள், குரு பாதுகையில் பதிந்துள்ள அருள் பல தலைமுறைகள் நிலைத்து நிற்கும் என்கிறது. அதனால் தான் நாம் குருவின் பாதுகையை பூஜையறையில் வைத்து பூஜிக்கிறோம்.

இராமாயணத்தில், பரதன் ஸ்ரீராமபிரானை வனத்தில் சந்தித்து, அயோத்திக்கு வந்து அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் படி வேண்டியும் சம்மதம் கிடைக்காததால், கடைசியில், சகோதரா, நீ தான் என்னுடைய தந்தையும், கடவுளும் ஆவாய். உன்னுடைய பாதுகையை எனக்குத் தர வேண்டும். அதை நீயாகக் கருதி, நீ மீண்டும் அயோத்திக்குத் திரும்பும் வரை, 14வருடங்களும் நான் நகரத்துக்கு வெளியே தங்கியிருந்து அரசுப் பொறுப்பை உனது பாதுகையின் பிரதிநிதியாக இருந்து நிர்வகிக்கிறேன் என்று கூறி காலில் விழுந்து நமஸ்கரித்தான். ஸ்ரீ ராமபிரானும் பரதனுக்குத் தன்னுடைய பாதுகையைக் கொடுத்தார். அவன் அதை பயபக்தியுடன் பெற்று தலையில் சுமந்து கொண்டு திரும்பினான். ஸ்ரீ ராம பாதுகையை நந்தி கிராமத்தில் பிரதிஷ்டை செய்து அங்கேயே தங்கினான். தினமும் ஸ்ரீ ராமபிரானை நேரில் பூஜிப்பது போல அந்தப் பாதுகையைப் பூஜித்து, அவருக்காக, அயோத்தியின் அரசுப் பொறுப்பை நிர்வகித்தான். இவ்வாறு பரதன் ஸ்ரீ ராமபிரானின் பாதுகைக்கு முக்கியத்துவம் கொடுத்தான். பாதுகையின் மகிமைகளை விளக்கி ஸ்ரீ வேதாந்த தேசிகர் பாதுகாஸஹஸ்ரம் என்னும் காவியத்தை இயற்றியுள்ளார்.

மேலும், பரதனுக்கு ஸ்ரீ ராமபிரானின் பாதுகையின் மீதுள்ள பயபக்தி குரு பாதுகா ஸ்தோத்திரத்தில் சொல்லப்பட்ட ஸ்ரீ குரு பாதுகையின் மகிமையை நமக்கு நினைவுபடுத்துகிறது. "பிறப்பு, இறப்பு என்ற பரந்த, முடிவற்ற சம்சார சாகரத்திலிருந்து நம்மைக் கரை சேர்க்கும்

தோணியாகவும்., பூஜிப்பவர்களுக்கு பற்றற்ற தன்மையை அருளுவதாகவும் விளங்கும் குருவின் திருப்பாதுகைக்கு நமஸ்காரம்".

நாம் விரும்பும் போதெல்லாம் குருவுக்குப் பாத பூஜை செய்ய முடியாது. ஆனால், பாதுகா பூஜையை நாம் எந்தச் சமயத்தில் வேண்டுமானலும் செய்ய முடியும். குரு இல்லாத சமயத்தில் பாதுகா பூஜை உயர்ந்தது தான். ஆனால் குரு இருக்கும் போது அவருக்குப் பாத பூஜை செய்வது தான் மிகவும் சிறந்தது. இந்த இரண்டிலும் முக்கியமானது நாம் அப்பூஜையில் காட்டும் அன்பும், பக்தியுடன் கூடிய ஈடுபாடுமாகும். இல்லாவிட்டால் பூஜையால் நமக்கு அதிக பலன் கிடைக்கமால் போகும். அப்படிப் பார்க்கும் போது மானஸபூஜை மிகவும் சிறந்ததாகும். நம்முடைய அம்மாவும் "மானஸ பூஜையின்" முக்கியத்துவத்தை மிகவும் வலியுறுத்தி வருகிறார்.

சுவாமிஜி, பாத பூஜையை எப்படி மானஸ பூஜையாகச் செய்வது?


ஜாதி - மத - பால் வேறுபாடு இல்லாமல் யார் வேண்டுமானாலும் மானஸ பூஜையைச் செய்யலாம் சாஸ்திர முறைப்படி பூஜை செய்யும் அறிவோ, அனுபவமோ இல்லாதவர்கள் கூட இதைச் செய்யலாம். இது நம் மனம் ஒருமுகப்படுவதற்கு மிகவும் உதவி செய்கிறது. புலன்களில் மனம் மிகவும் உயர்ந்ததாகும். ஸ்ரீமத் பகவத் கீதையில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், "இந்திரியங்களில் நான் மனமாவேன் (10-22)" என்கிறார். அதனால், மனத்தில் மூலம் செய்யும் மானஸ பூஜை, பூஜைகளில் மிகவும் சிறந்ததாகும். மனமாகிய மலரைக் குருவுக்குப் பூரணமாக அர்ப்பணித்தவன் வேறு எந்த பூஜையையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால், சூரியனின் சுயம்பிரகாசத்தைப் போன்ற நம்முடைய நிஜமான ஆனந்த சொருபத்தை மறைக்கும் மேகமாக இருப்பது நம்முடைய மனமே ஆகும்.


சரி, இனி மானஸ பூஜையைப் பற்றிக் கூறுகிறேன்; கவனமாகக் கேள். முதலில், உனது உடலுக்கு உகந்த ஸ்திரமான எந்த

நிலையிலாவது நேராக நிமிர்ந்து அமரவும். உன்னுடைய மனமும், உடலும் இறுக்கமில்லாமல் சாந்தமாக இருக்கவும். கண்களை மூடிக் கொண்டு, மூன்று முறை 'ஓம்' என்று உச்சரிக்கவும். உன்னுடைய இஷ்ட தெய்வத்தை அல்லது குருவை, இதயத்திலோ அல்லது உனக்கு முன்பாகவோ ஒரு தங்க சிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்வதாக மனதால் பாவிக்கவும். அவருடைய திருப்பாதங்களை ஒரு தங்கத் தட்டின் மீது வைக்கவும். பிறகு அவருடைய பாதத்திற்கு அபிஷேகம் செய்யவும், இடது கையால் மெதுவாகத் தடவிக் கொண்டு, வலது கையால் பால், தயிர். நெய், தேன் மற்றும் பன்னீர் இவைகளால் அபிஷேகம் செய்யவும். பிறகு ஒரு பட்டுத் துணியால் அத் திருப்பாதங்களை மெதுவாகத் துடைத்து, சந்தனத்தை தடவி குங்குமத்தால் பொட்டிடவும். இந்தப் பூஜை சமயத்தில் தொடர்ந்து உன்னுடைய மந்திரத்தை ஜபிக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

பிறகு மனத்தால் குரு முன்பு நமஸ்கரித்து, "குருவே நான் உமது கையில் இப்போது தான் பிறந்த ஒரு குழந்தையைப் போல இருக்கிறேன். எனக்கு சாஸ்திர ஞானமோ, உலக வாழ்வு பற்றிய அறிவோ இல்லை. நான் என்னுடைய அகங்காரத்தால் உமது கையை விட்டு விலக முயன்றாலும், தயவு செய்து நீங்கள் என்னை விடாமல் பிடித்துக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்திக்கவும். பிறகு மனதிற்குள் கற்பூர ஆரத்தி காட்டவும் மனமாகிய மலரை குருவின் பாதத்தில் அர்ப்பணித்து சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கவும். பிறகு பாத தீர்த்தத்தை மனதால் பக்தியுடன் அருந்தி, சிறிது நேரம் குருவின் திருப்பாத கமலங்களைத் தியானிக்கவும்.

இவ்வாறு மானஸ பாத பூஜையைச் செய்யலாம். மானஸ பூஜையை இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற வரைமுறை இல்லை. உன்னுடைய பக்தியானது எப்படி வழிகாட்டுகிறதோ அப்படி நீ பூஜை செய்யலாம். இதை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் செய்யலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்திலும், நேரத்திலும் செய்வது மிகவும் நல்லது. மனதை வற்புறுத்தி மானஸ பூஜை செய்யாமல், விருப்பத்தோடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால்





இது உனக்கும் சுமையாகத் தோன்றும் உண்பதையும் உறங்குவதையும் எப்படி மகிழ்வுடன் செய்கிறாயோ அவ்விதம் இந்த மானஸ பூஜையையும் மகிழ்வுடன் செய்ய வேண்டும். இந்த மானஸ பூஜையில் மிகவும் முக்கியமானது, நம்முடைய முழுமனமும் அதில் ஈடுபட்டு, குருவின் திருப்பாத கமலங்களை நினைப்பது ஆகும்.

மனத்தின் அலைபாயும் தன்மை மானஸ பூஜையால் குறையும். மனக்கட்டுப்பாடு இல்லாதவர்களால் கூட இந்த பூஜையின் மூலம் விரைவில் மனக்கட்டுப்பாட்டைப் பெற முடியும்.

நன்றி சுவாமிஜி, இப்போது தான் எனக்கு மானஸபூஜையின் முக்கியத்துவம் புரிந்தது. மேலும், எவ்விதப் பணச்செலவும் இல்லாமல் நாம் இதைச் செய்யலாம். அப்படியிருக்கும் போது, மக்கள் ஏன் அவர்களுடைய குருவுக்குப் பாத பூஜை செய்ய இவ்வளவு அதிகமாகப் பணம் செலவழிக்கிறார்கள்? அந்தப் பணத்தைக் கொண்டு எத்தனையோ ஏழைகளுக்கு உதவி செய்யலாம் அல்லவா?

நான் சொன்னதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை ஆன்மிக சாதனையின் துவக்க நிலையில் இருக்கும் சாதகர்களுக்குப் புறவழிபாடு மிகவும் அவசியம். இது மானஸ பூஜைக்குச் செல்ல உதவும் ஒரு படிக்கட்டு ஆகும். நாம் மானஸ பூஜையைச் செய்வதற்கேற்ற பக்குவத்தைப் புறவழிபாடு நமது மனதிற்குத் தருகிறது. புறவழிபாட்டை விட மானஸ பூஜையில் நமது மனம் அதிகமாக ஒருமுகப்பட்டிருக்கிறது. இதனால் தான் மானஸ பூஜை சிறந்ததாகக் கருதப்படுகிறது.

செலவு எதுவும் இல்லாத காரணத்தால் தான் மானஸ பூஜை சிறந்தது என்று நினைத்தால், அது தவறு, பொதுவாக மக்களுக்கு பணத்தின் மீது மோகம் அதிகம். அவர்கள் லௌகிக காரியங்களுக்கு அதிகப் பணம் செலவழிப்பார்கள். ஆனால் ஆன்மிகக் காரியத்துக்கு செலவு செய்யக் கணக்குப் பார்ப்பார்கள். தயங்குவார்கள். ஆன்மிகக் காரியத்துக்கு பணம் செலவழிப்பது நம்மிடமுள்ள உலகப்பற்றைப்


பகவானுக்கு அர்ப்பணிப்பதற்குச் சமமாகும். குருவிற்கோ அல்லது பகவானுக்கோ நம்மிடமிருந்து எதுவும் தேவையில்லை. ஆனால், நமக்கு மிகவும் பிரியமானதை நம் மனம் மிகவும் பற்று கொண்டுள்ள பொருளை அவர்களுக்கு அர்ப்பணிப்பது நம்மையே பகவானுக்கு அர்ப்பணிப்பதற்குச் சமமாகும்.

ஒருமுறை, யுவதி ஒருத்தி அதிக விலைமதிப்புள்ள நறுமண தைலத்தால் இயேசுபிரானுக்கு அபிஷேகம் செய்தாள். அவருடைய சீடர்கள், ஏன் இந்த வீண் செலவு? இந்த தைலத்தை நல்ல விலைக்கு விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உதவலாம் அல்லவா? என்று எதிர்ப்பு தெரிவித்தனர். அதற்கு இயேசுபிரான், "ஏழைகள் எப்போதும் உங்களுடன் இருப்பார்கள். ஆனால் நான் எப்போதும் உங்களுடன் இருக்க மாட்டேன்" என்றார் (யோவான் 12:7) ஆம், அது உண்மைதான், ஏழைகளுக்கு நாம் எப்போது வேண்டுமானலும் சேவை செய்ய முடியும். ஆன்ால் ஒரு மகாத்மாவிற்குச் சேவை செய்யும் பாக்கியம் நமக்கு எப்போதும் கிடைப்பதில்லை.

அவதாரபுருஷராகிய நம்முடைய அம்மாவிற்குப் பாத பூஜை செய்யும் பெரும்பேறு கிடைத்திருப்பது பல ஜன்மங்கள் செய்த புண்ணியத்தால் ஆகும். ஆதலால் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

26.கோ பூஜை

பிர.சிவாமிர்தசைதன்யா



நமது பாரத நாட்டில் ரிஷிகள் படைப்பும் படைத்தவனும் ஆத்ம நிலையில் ஒன்றே என்பதை அனுபவத்தில் அறிந்திருந்தனர். ஆனால் தன்னை உடலாகக் கருதுகின்ற, போதுமான அளவு மனத்தூய்மையும், சாதனை செய்வதால் ஏற்படும் வலிமையும் இல்லாத பாமர மக்கள் இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொண்டு வாழ்வது கடினமாகும். அப்படிப் பட்ட மக்களுக்காகவே தர்ம நூல்களும், ஆலய வழிபாடுகளும், . திருவிழாக்களும். பிறவும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சமுதாயத்தில் பண்டிதர் முதல் பாமரர் வரை எந்த நிலையிலுள்ள மனிதரையும் ஆத்ம தத்துவத்தை நோக்கி படிப்படியாக வழிநடத்திச் செல்வதே வேதங்களில் கூறப்பட்டுள்ள எல்லா ஆசார, அனுஷ்டானங்களின். நம்பிக்கையின் பொது லட்சியமாகும். அதன் ஒரு பகுதியே நாம் நடத்தும் கோ பூஜை (பசு வழிபாடு) ஆகும்.

தெய்வ மொழியாக சமஸ்கிருத மொழியிலுள்ள சொற்கள் ஒவ்வொன்றும் நமது அறிவு வளர்வதற்கேற்ப அதிக ஆழமுள்ள பொருளைத் தரக் கூடியவை. ஆத்ம பிரகாசத்தின் முதல் படியான சொற்களின் ஸ்தூல வடிவமே பதார்த்தங்கள் (பொருள்) ஆகும். அதனால் தான் ரிஷிகளுக்கு சொற்களும், பொருளும் மெய்ப்பொருளை (பரமாத்மாவை) உணர்த்தும் சுட்டுப் பலகைகளாக இருந்தன.

கோ சொல்லை எடுத்துக் கொள்வோம். அது சாதாரணமாக பசு என்றும் காளை என்றும் பொருள் படும். மேலும் அதை விலங்குகளையும், புலன்களையும் அறிவையும் ஜீவாத்மாவையும் குறிக்கப் பயன்படுத்துகிறோம். நமது ஆத்ம சைதன்யமே ஐம்புலன்களின் மூலமாக அறிவாக வெளிப்படுகின்றது என்பதையும், மீண்டும் அவையே ஸ்தூல வடிவமெடுத்து நாம் காணும் இந்தப் பிரபஞ்சமாக விளங்குகின்றது எனவும் பொருள்படும். ஆன்மிக தத்துவங்களை வெறும் கோ என்று சொல்லி நமது ரிஷிகள்

மறைத்து வைத்தது இவ்விதமே ஆகும்.

ஆனால், இந்தத் தத்துவம் நமது அனுபவமாக மாற வேண்டுமானால் இடைவிடாத பயிற்சி (ஆத்ம சிந்தனை) அவசியம். அதனால்தான் பசுவை கோமாதாவாகக் காண ரிஷிகள் நமக்குக் கற்பித்தனர். அது, அன்னத்திலிருந்து தோன்றிய அன்னத்தால் நிலைநின்று பிற உயிர்களுக்கு அன்னமாக (உணவு) மாறுகின்ற நமது உடலுக்குப் பிறப்பளித்து, பாதுகாக்கும் இயற்கையை நமது அன்னையாக, தேவியாகக் காணும் பாரதப் பண்பாட்டின் ஒரு பகுதியே ஆகும். பூமா தேவி என்றும் பூமித்தாய் என்றும் கூறும் போதும் அதைச் சிற்றறிவு படைத்தவர்கள் புரிந்து கொள்வது கடினமாகும். அதனால் தான் புராணங்களில் பூமாதேவி ஒரு பசுவின் வடிவம் எடுத்து படைப்புக் கடவுளின் முன்பு தனது குறைகளை எடுத்துரைப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இயற்கையில் காணப்படும் அனைத்து வளங்களையும், இயற்கையைப் பேணுவது மூலமாகப் பெறுகிறோம் என்பதை நமக்குப் புரியவைப்பதற்காக கேட்பதை வழங்கும் காமதேனுவில் எல்லாத் தேவ தேவியரையும் குடியிருப்பதாக நாம் சித்திரம் வரைந்தோம். தூய உள்ளத்துடன், பரஸ்பரம் உதவும் மனப்பான்மையுடன் கூடிய முயற்சியால் தான் செல்வத்தைப் பெற வேண்டும் என்பதைக் கற்பிக்கவே பாற்கடலைக் கடைந்த போது காமதேனு வெளிப்பட்டதாக அதன் தோற்றம் கூறப்படுகிறது. உருவமற்ற தர்மத்தை நம்முடைய மனோபாவனையில் கொண்டு வருவதற்காக அதை சிவனின் வாகனமான ரிஷபமாக 'காளை' (கோ) காண்பித்துள்ளனர்.

ஜீவாத்மா பரமாத்மா, குரு - சிஷ்ய உறவின் உட்பொருள் சீடனுக்கு குருவிடம் தோன்றும் வஞ்சனையற்ற நன்றியுணர்வு, திருப்தி என்பதை சிவனின் வாகனமும், சேவகனுமான நந்தி எனும் சொல் குறிக்கிறது. கோபாலன் மாடு மேய்க்கும் இடையன் மட்டுமல்ல, எல்லா ஜீவாத்மாக்களையும் காக்கும் இறைவன் என்பதை அறிவதற்கும் "கோ" எனும் சொல் போதுமானது. "நமசிவாய" என நாம் ஒருவருக்கொருவர் அழைப்பதன் மூலமாக எவ்வுயிரும் ஒரே பரம்பொருளான பரமேஸ்வரனின் வாகனமே என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்வதுடன் பிறருக்கும் அதை நினைவூட்டுகிறோம். ஒவ்வொரு உயிரும் இறைநிலைக்கு உயர முடியும் என்பதை நந்தீஸ்வரர் சுட்டிக்காட்டுகிறது. சிவாலயங்களில் நந்தி சிவனை நோக்கி அமர்ந்திருக்கும்

நிலையானது, உயிர்களின் அழியாத ஒரே லட்சியம் இறைவன் மட்டுமே என்பதைக் குறிக்கிறது. இறைவனின் வாகனமாகத் திகழும் தர்மத்தின் வடிவமே நாம் கலப்பையின் பூட்டும் காளை என்பதை பாரத விவசாயிகள் அறிந்துள்ளனர். இந்த உணர்வுடன் அதன் மீது அன்பு செலுத்தவும், அதைப் பாதுகாக்கவும், கல்வியறிவற்ற விவசாயிகளுக்குக் கற்பிப்பது நமது பண்பாடு. கோகுலத்தில் கோவர்த்தன மலைக்குப் பூஜை செய்ததன் மூலம் கிருஷ்ணன் ஒவ்வொரு சமூகத்தையும் அவரவருடைய வாழ்க்கையுடன் தொடர்புடைய உயிரினங்களிலேயே இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்பதை உணர்த்தினார்.

இயற்கையில் பயனில்லாத பொருள் ஒன்றுமில்லை என்று நமக்கு உணர்த்தவே பசுவில் இருந்து கிடைக்கும் பால் மற்றும் பால் பொருள்கள் மட்டுமல்ல, அதிலிருந்து கிடைக்கும் கோமயம், சாணம் முதலியவை யாகம் மற்றும் சிகிச்சைகளிலும் தோல் செருப்பு, இசைக்கருவிகளை செய்வதற்கும் பயன்படும் என பாரத மக்கள் அதன் பயன்பாடுகளைக் கண்டறிந்தனர். நாம ரூபங்கள் எல்லாம் மாறிக் கொண்டிருக்கும் உபகரணங்களே. அவற்றிற்கு ஆதாரமாக, அவற்றின் மூலம் வெளிப்படும் நிலையான சைதன்யமே (இறைவன்) எல்லோராலும் வணங்கப்படும் பரமேஸ்வரன் என்று அவர்கள் நம்புகின்றனர். இக்காரணத்தால் பசுவின் பின்புறத்தில் லட்சுமி தேவியைக் குடியேற்ற அவர்களுக்கு எந்தவித தயக்கமும் இல்லை. சாணத்தை உருட்டி விநாயகரைப் போல உருவம் செய்து அதைச் சுட்டுச் சாம்பலாக்கி விபூதியாகப் பூசுவதற்கும் பாரத மக்களால் இயலக் காரணம், உபகரணத்தையும், சைதன்யத்தையும் வேறுபடுத்தி அறியும் இறை நம்பிக்கையே ஆகும். அனைத்திலும் இறை சைதன்யத்தைத் தரிசிக்கவும், அந்த மதிப்பு, மரியாதையுடன் அனைவருடன் பழகவும் செய்யும் ஒருவனுக்கு தடைகள் வர வழியேது? சித்தமலம் (மன அழுக்குகள்) ஞானாக்கினியால் எரிக்கப்படும் போதுதான் அது ஜீவனின் நெற்றியில் திலகமாக அழகு செய்கிறது. என்பதை நாம் பூசும் விபூதி நமக்கு நினைவுபடுத்துகிறது.

மனித உடலமைப்பு அவனது இயல்பான உணவு தாவர உணவே என்பதை வெளிப்படுத்துகின்றது. எனவே தாவரத்தின் சாற்றைக் குடித்து வாழும் கொசுவிற்கு ரத்தத்தையும் குடிக்க முடிவது போல் தாவர உணவு கிடைக்காத நிலை வரும்போது மட்டும் மனிதன் உயிர் வாழ்வதற்காக

மாமிச உணவை அருந்தலாம் என்று நமது தர்ம சாஸ்திரங்களும், ஆயுர் வேதமும் கூறுகின்றன. ஒரு சீடன் தனது தனித்தன்மையை மகா வக்கியமெனும் யக்ஞ முளையில் (யாகத்தில் பலியிடும் மிருகங்களைக் கட்டிவைக்கும் மரத்தூண்) குருசேவை எனும் கயிற்றால் கட்டி, ஞான வாளால் வெட்டி ஆத்ம திருப்தியைப் பெறும் போது பக்தன் தனது சரீர உணர்வை கடவுள் எனும் முளையில் அன்பு எனும் கயிற்றால் கட்டி ஆத்ம நிவேதனத்தால் முக்தி அடைகிறான். யோகி தனக்குள்ளே உள்ள விலங்கியல்புகளை பிராணாயாமத்தின் மூலம், புலன், மனக் கட்டுப்பாடுகள் மூலம் அடக்கி சமாதி சுகத்தை அனுபவிக்கிறான். அந்த அளவு அறிவோ. திறமையோ, மனத்தூய்மையோ அடையாதவர்கள் தங்கள் மனதைப் பிணைத்திருக்கும் பசுக்களை யாகபலியாகக் கொடுத்து திருப்தி அடைந்தனர்.

இன்றைய காலகட்டத்தில் சைவ உணவு உண்பவனுக்குத் தேவைப்படுவதை விட அசைவஉணவு உண்பவனுக்கு ஐந்து மடங்கு அதிகமாக இயற்கைச் செல்வம் தேவை என ஒரு அறிவியல் ஆய்வு கூறுகின்றது. உலகில் அதிக அளவில் சைவ உணவு உண்ணும் மக்கள் இந்தியாவில் இருப்பதால் தான் இன்னும் பலவித அரிய மிருகங்கள் உயிரோடு இருக்கின்றன. காலரா, மூளைக்காய்ச்சல், பிளேக் நோய் போன்ற தொற்று நோய்கள் பரவுவதை அதிக அளவில் தடுக்க முயன்ற மேலைநாட்டினரால் அவர்களது வாழ்க்கையில் பெருகி வரும் மனப்போராட்டம் மற்றும் அவற்றிற்குக் காரணமான ரத்த அழுத்த நோய், நீரிழிவு, புற்றுநோய் மற்றும் இதய நோய்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அதற்கு முக்கியக் காரணம் அவர்களிடம் சாதாரணமாகக் காணப்படும் மாமிச உணவுப் பழக்கமே என ஒரு புள்ளி விவர ஆய்வு தெரிவிக்கிறது.

எந்தவொரு அறிவும் மனோபாவனையுடன் கூடிய அனுஷ்டானத்தின் மூலமே அறியப்படுகிறது. விவேகத்தை மறைக்கும் தமோ குணத்தையும், ரஜோகுணத்தையும் தூண்டும் மாமிச உணவு உண்பதை நமது ஆன்மிகச் சான்றோர்கள் ஊக்கப்படுத்தவில்லை. பாரதப்பண்பாடு ரத்தத்தில் ஊறிய ஒருவனுக்கு, பெற்ற தாயின் இறந்த உடலைச் சமைத்து உண்பதற்குத் தோன்றும் அருவருப்பு பசு மாமிசத்தை சாப்பிடுவதற்கும் தோன்ற வேண்டும். தைத்திருநாளில் பொங்கல் வைத்து கடவுளுக்குப் படைத்து நாம் உண்பதை விட நமக்கு விருப்பமான அசைவ உணவு சாப்பிடுவதை அடியோடு நிறுத்தி

விடுவதாக விரதம் எடுப்பது பொருள் பொதிந்ததாக இருக்கும். இந்த விரதம் எடுப்பதும், அதை என்றென்றும் கடைப்பிடிப்பதும் பிற உயிரினங்களிடம் மனிதனுக்குள்ள ஆத்ம பந்தத்தை உறுதியாக்குவதற்கு எந்த மதத்தைச் சேர்ந்தவனுக்கும், அவ்வளவு ஏன் நாஸ்திகவாதிக்கும் உதவும்.

27.விபூதியின் மகிமை

ஸ்ரீகுமாரி. ராமசந்திரன்

நெற்றியில் திலகம் அணிவது என்பது பாரத மக்களின் தினசரி வழக்கமாகும். நம்மைப் பொறுத்தவரை அது ஆசாரமாகும், நம் முடைய பண்பாட்டின் சின்னமாகும்.



விபூதி, குங்குமம், சந்தனம், கோரோசனை, சாந்து, மை போன்ற நெற்றியில் அணியும் பல பொருள்கள் உள்ளன. பரிசுத்தமான விபூதியை நெற்றியில் அணிவது மிகவும் சிறப்பானது என்பது பாரத மக்களின் நம்பிக்கையாகும். பரமசிவனின் நெற்றியிலுள்ள ஞானக்கண்ணைக் குறிப்பதற்காகவே நாம் நெற்றியில் திலகம் அணிகிறோம் என்பதும் பாரத மக்களின் நம்பிக்கையாகும்.

உலர்ந்த பசுஞ்சாணியில் பச்சைக் கற்பூரத்தைச் சேர்த்துச் சுட்டெடுத்தால் சுத்தமான, மணமுள்ள விபூதி கிடைக்கும்.

நோயை நீக்கவும், பாபத்தைப் போக்கவும், தீய கனவுகளை அகற்றவும் விபூதி அணிய வேண்டும். இம்மூன்று வரிகளும் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வரியம் ஆகியவற்றைக் குறிப்பிடப்பட்டவையாகும். நெற்றியில் மட்டுமன்றி கழுத்திலும், மார்பிலும், தொப்புளுக்கு மேலேயும், கை முட்டிகள், கால் முட்டிகள், முதுகு ஆகிய இடங்களிலும் விபூதி அணிதல் சிறப்பாகும். காலையில் விபூதியை நீரில் குழைத்து அணிய வேண்டும். உலர்ந்த விபூதியை

அணியும் போது சிவ பஞ்சாஷரம், காயத்ரி மந்திரம் ஆகியவற்றில் ஒன்றை ஜபிப்பது உத்தமம்.

பாபத்திலிருந்து விடுபடவும் சந்தான பாக்கியத்திற்கும், புகழுக்கும், மோஷத்தை அடையவும் விபூதி அணிவது நல்லது. விபூதி ஸ்நானம் செய்தாலும், விபூதியை அருந்தியதாலும் கரு நிறமான நாராயணனின் திருமேனி முத்தைப் போன்ற நிறத்தைப் பெற்றதாகப் பத்மபுராணம் கூறுகிறது.

சிவமாஹாத்மியத்தில் பஸ்மத்தை அணிவதைக் குறித்து விவரிக்கும் ஒரு கதை உண்டு யவனர்களின் அரசனான துர்ஜயன் பல மகா பாபங்களைச் செய்து, பின் துர்மரணம் அடைந்தான். பிறவியற்ற பேற்றை அடையாத காரணத்தால் 23 முறை பூச்சி புழு போன்ற பிறவிகளை எடுத்தான். 24வது முறை பயங்கர வடிவும், நர மாமிசம் தின்பவனுமான பிரம்மராஷஸனாகப் பிறந்தான். பிற உயிர்களையும், மனிதர்களையும் கொன்று தின்று காடு, மலைகளில் அலைந்து திரிந்தான். கிரவுஞ்ச மலைத்தொடரில் அவன் அலைந்து கொண்டிருந்த போது வாமயோகி என்ற சிவபக்தர் அவ்வழியாக வந்தார். தெளிந்த மனமும், நன்னடத்தையுமுள்ள அவர் உடல் முழுவதும் விபூதி அணிந்திருந்தார்.

பசியால் வாடியிருந்த ராஷஸன் யோகியைக் கண்டதும் பூமி நடுங்குமாறு சிரித்தான். பின்னர் குகை போன்ற வாயைத் திறந்து, யோகியைப் பிடித்தான். அந்த நொடியே அவனது பயங்கர வடிவம் மாறியதுடன், மனதைக் கவரும் திவ்வியமான வடிவமும் அவனுக்குக் கிடைத்தது. அதைக் கண்டு ராஷஸன் வியப்படைந்தான். அவன் வாமயோகியின் பாதங்களை வணங்கினான்.

"ஐயா! யவன அரசனாக இருந்து துர்ஜயன் நான். 24 பிறவிகளாக சாபத்தால் பீடிக்கப்பட்டு வாழ்ந்து வந்தேன். தங்களைத் தொட்ட மறுநிமிடமே நான் சாபத்திலிருந்து விடுபட்டுவிட்டேன். இது மாயமா அல்லது மந்திரமா?" என்று கேட்டான். வாமதேவயோகிக்கு இது அதிசயமாகத் தோன்றவில்லை.

"இது மந்திரமோ மாயமோ அல்ல, என் உடலில் அணிந்திருக்கும் விபூதியின் மகிமையாகும். விபூதியைத் தீண்டியதும் உனது சகல பாபங்களும் நீங்கிவிட்டன. நீ முக்தி நிலையை அடைந்திருக்கிறாய்" என்று

கூறிவிட்டு யோகி அங்கிருந்து புறப்பட்டார். துர்ஜயனும் சிவலோகத்தை அடைந்தான்.

தேவிபாகவதம் 11-ம் ஸ்கந்தத்தில் விபூதியின் மகிமையை கூறும் மற்றொரு கதை இருக்கிறது.


ஒருமுறை துர்வாசர் உடல் முழுவதும் விபூதி பூசி, ருத்தராஷமணிந்த சிவசங்கர ஸர்வாதமன் ஸ்ரீமாதா புவனேச்வரி என்ற திருநாமங்களை ஜபித்தவாறு பித்ரு உலகிற்குச் சென்றார். அவ்வுலகின் தலைவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது எங்கிருந்தோ சிலர் முனகும் சப்தம் தீனமாகக் கேட்டது. அதன் காரணத்தை விசாரித்த போது, அந்த சப்தம் அருகில் இருக்கும் ஸம்யமனி என்ற எமபுரியிலிருந்து வருவதாகவும் அங்கே கும்பீபாகம் என்ற நரகத்தில் கிடந்து தண்டனைகளை அனுபவிக்கும் மஹா பாபிகள் வேதனை தாங்க முடியாமல் அரற்றுகிறார்கள் என்றும் புரிந்தது. மகரிஷி உடனே பித்ரு உலகிலிருந்து விடைபெற்று, அந்த நரகத்தைக் காணப் புறப்பட்டார். கும்பீபாகத்தின் வாயில் சென்று நின்ற அவர் நன்றாக குனிந்து அதன் உள்ளே உற்றுப் பார்த்தார்.

என்ன ஆச்சரியம், ஒரே நிமிடத்தில் அந்த நரகம் சொர்க்கமாக மாறியது. நரகவாசிகள் ஆடவும், பாடவும் ஆரம்பித்தனர். பாபிகளைத் தண்டித்துக் கொண்டிருந்த எமகிங்கரர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். விவரத்தை அறிந்த எமதர்மன் எருமை மீது ஏறி கும்பீபாகத்திற்கு வந்தார். நிலைமையை நேரடியாக அறிந்தார். இந்த மகா அற்புதத்தைப் பற்றி அறிந்த பிரம்மா, விஷ்ணு, ருத்ரரும் மற்ற தேவ, தேவதைகளும், அஷ்டதிக் பாலகர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

கேட்டது உண்மைதான்! ஆனால் இது எப்படி நடந்தது. எல்லோரும் வாயடைத்து நின்ற நேரத்தில் பரமேச்வரன் துர்வாஸரை நோக்கினார். துர்வாஸர் அங்கிருந்தவர்களை நோக்கி, "யாரும் வியப்படைய வேண்டியதில்லை. விபூதியின் மகிமையால் தான் இவ்வாறு நிகழ்ந்தது. நரகத்தை நான் குனிந்து நோக்கிய போது, அடித்த காற்றில் எனது உடலிலிருந்து விபூதி பறந்து நரகத்தில் விழுந்தது. அதனால் கும்பீபாகத்தில் வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களின் பாபங்கள் எல்லாம் நீங்கின. இவ்விதம் நரகம்

சொர்க்கத்திற்கு நிகராக ஆயிற்று. இன்று முதல் இது பித்ரு தீர்த்தம் என்ற பெயரில் விளங்கும். இங்கே குளிக்கும் பித்ருக்கள் எல்லாம் புண்ணிய ஆத்மாக்களாக மாறுவர். இந்த தீர்த்தக் கரையில் சிவனின் வடிவமாகத் திகழும் சிவலிங்கத்தையும் சக்தி ஸ்வரூபிணியான உமாதேவியையும் பிரதிஷ்டை செய்ய வேண்டும்" என்றார். தேவர்கள் அக்கட்டளையை உடனே நிறைவேற்றினர். நாமும் விபூதி முதலான மங்களச் சின்னங்களை நெற்றியில் அணிந்து மங்களமாக வாழ்வோம்.

28.இந்துக்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய விஷயங்கள்.



1. **ஸநாதன (ஹிந்து) தர்மம் - காலத்தைக் கடந்து நிற்பது**

ஹிந்துமதம் என்று அறியப்படும் மதம் உண்மையில் ஸநாதன தர்மமாகும். ஆதியற்ற வேதமே இதன் ஆதார நூலாகும். ஸநாதனம் என்றால் "என்றும் உள்ளது" என்று பொருள். இந்த தர்மம் எப்போது ஆரம்பமாயிற்று என்று கூறுவது இயலாத செயல். அதே போல் இதற்கு முடிவும் இல்லை. காலத்தின் ஓட்டம் நேரான கோடாகச் செல்லவில்லை: அது சக்கர கதியில் செல்கிறது. அதனால், யுகங்கள் மீண்டும் மீண்டும் ஆரம்பமாகும். பிரளயங்கள் மீண்டும் மீண்டும் தோன்றும். ஆனால், ஸநாதன தர்மம் என்றும் நிலைத்திருக்கும் காரணம், அது பிரபஞ்சத்தைக்

கட்டுப்படுத்தும் நியதிகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது. அதனால் தான் ஹிந்து தர்மத்தை நிறுவியவர் எனச் சொல்ல யாருமில்லை.

2. **ஹிந்து தர்மம் பல தெய்வங்கள் இருப்பதாக நம்பவில்லை இறைவன் ஒன்றே என்றுதான் கூறுகிறது.**

ஹிந்து தர்மம் பல தெய்வங்களை நம்பும்படி கூறுவதாகச் சொல்வது தவறாகும். ஒரே இறைவனின் பல்வேறு இயல்புகள் வெவ்வேறு தெய்வங்களாகக் கூறப்படுகின்றன. படைக்கும் குணத்தைப் பிரம்மாவாகவும், காக்கும் குணத்தை விஷ்ணுவாகவும், அழிக்கும் குணத்தை ருத்திரனாகவும் குறிப்பிடுகின்றனர். உலக அன்னையின் இயல்பைத் தேவி வெளிப்படுத்துகிறார். செல்வத்தைத் தரும் குணாதிசயம் லஷ்மியாகவும், கல்வியைத்தருவது ஸரஸ்வதியாகவும், தீயவரை அழிப்பது துர்க்கையாகவும் வெளிப்படுகிறது. இவ்வாறு கணபதி, முருகன், சூரியன், சந்திரன், இந்திரன், வருணன் போன்ற ஒவ்வொரு தெய்வங்களும் இறைவனின் ஒவ்வொரு குணத்தின் வெளிப்பாடாகும்.

3. **தெய்வ வடிவங்கள் அறிவியல் பூர்வமானவை.**

தெய்வ வடிவங்கள் மஹரிஷிகளின் அருட்தரிசனங்களில் உணரப்பட்டவை ஆகும். காக்கும் தெய்வமான விஷ்ணுவின் நான்கு கரங்களும், ருத்திரனின் மூன்றாவது கண்ணும், ஸரஸ்வதியின் வீணை, புத்தகங்களும், காளியின் கபால மாலையும் அந்தந்தத் தெய்வங்களின் குணாதிசயங்களை வெளிப்படுத்துவதற்காக உள்ளவையாகும். கணபதியை யானைமுகனாகவும், மூஞ்சூறு வாகனனாகவும் வர்ணித்துள்ளது. இது ஆழ்ந்த அறிவியல் பூர்வமானது என்பது சிந்தித்தால் புரியும். அறிவின் இருப்பிடமும், விக்கினங்களை (தடைகளை) நீக்குபவனுமான கணபதிக்கு பெரிய தலையும், தடைகளை நீக்கும் தும்பிக்கையும் மிகவும் பொருத்தமானவையே.




4. **மும்மூர்த்திகள் ஒரே தெய்வத்தின் மூன்று குணங்கள்.**

சநாதன தர்மத்தில் இறைவனின் நிர்குணபாவமும், சகுணபாவமும் தனிச்சிறப்புகளுடன் விவரிக்கப்பட்டுள்ளன. படைத்து, காத்து, அழித்து பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்தும் இயல்பு சற்குண இறைவனுக்கு உரியதாகும். அதே சமயம், படைப்புக்கு அப்பாற்பட்ட நிலையானதும், மாற்றம் ஏதுமில்லாததுமான இறைகுணமே பிரம்மமாகும். அது நிர்குணம் என்று சொல்லலாம். பிரம்மம் படைப்பெனும் லீலை புரிய சங்கல்பிக்கும் போது இறைவனின் சகுணபாவங்கள் தோன்றுகின்றன. அவையே பிரம்மா, விஷ்ணு, மகேச்வரன், இவை மூன்றும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றை நடத்தும் பிரம்மத்தின் பாவங்களாகும். ஒரே சைதன்யமே மும்மூர்த்திகள் வடிவத்தில் வெளிப்படுகிறது.



5. **அவதாரங்கள்**

இறைவன் உலகின் மீது கொண்ட கருணையால் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மனித உலகிற்கு வருகிறார் என்ற தெய்விக ரகசியம் சநாதன தர்மத்தின் தரிசனமாகும். உலகில் அதர்மம் அதிகரிக்கவும், நன்மக்கள் வருந்தவும் செய்யும் போதுதான் இறைவன் அவதரிக்கிறார். ஸ்ரீமத் பகவத்கீதையின் கூற்றுப்படி தர்மத்தை நிலைநிறுத்துவதும். நல்லோரைக் காப்பதும், தீயோரைத் தண்டிப்பதும் தான் இறை அவதாரத்தின் திவ்வியமான லட்சியங்கள் ஆகும். இது விச்வ பிரேமையின் மூலமே சாத்தியமாகிறது. எல்லாம்வல்ல இறைவனுக்கு எவ்வடிவத்தையும் எடுக்கவும், விரும்பியது போல் லீலைகள் நடத்தவும் இயலும் என்பது தான் அவதாரத்தின் பொருள்.



6. விக்கிரகத்தை வழிபடுவதன் தத்துவம்

இறைவனின் அர்ச்சாவதார வடிவங்களாக விளங்குபவை விக்கிரகங்கள். மகான்கள் பிராணப் பிரதிஷ்டையின் மூலமாக விக்கிரகப் பிரதிஷ்டை செய்தால் அங்கே இறைசக்தியின் சாந்நித்தியம் உண்டாகும். விக்கிரகங்களைப் பக்தியுடன் வழிபட்டால் நிச்சயமாகப் பலன் கிடைக்கும். விக்கிரகத்தைத் தெய்வமாகக் கருதித்தான் பக்தர்கள் வழிபடுகிறார்கள். அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியம் போன்றவற்றை ஒரு மனிதனுக்குக் கொடுப்பது போன்ற பாவனையுடனும், நம்பிக்கையுடனும் தான் விக்கிரக வடிவிலுள்ள தெய்வத்திற்குக் கொடுக்கிறார்கள். இதற்கு சாஸ்திரபூர்வமான முத்திரைகளும், அனுஷ்டானங்களும் உள்ளன. இருப்பினும் அன்புடன் கூடிய வழிபாடுதான் இறைவனுக்கு விருப்பமானது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் போன்றவர்கள், விக்கிரக ஆராதனையின் மூலமே இறை அனுபூதி பெறமுடியும் என்பதற்கு நேரடி உதாரணங்களாவர்.



7. சிவலிங்கத்தை வழிபடுவதன் தத்துவம்

பிரபஞ்சப் படைப்பின் ஆரம்பத்தில் முட்டை வடிவில்தான் படைப்புத் தோன்றியது. அது அருவுருவாகும். சிவலிங்கம் இந்த உருவத்திற்கும், அருவத்திற்கும் இடைப்பட்ட நிலையையே குறிப்பிடுகிறது. இறைவனைத் தூய்மையான ஆதிவடிவில் வழிபடுவதற்கு மிகச்சிறந்த சின்னமாகத் திகழ்வது சிவலிங்கமாகும்.

நவீன அறிவியலை அனுசரிக்கும், சிவலிங்க வடிவிற்கு சிறந்த மகிமை இருக்கிறது. சக்தியை (ஆற்றலை) சேகரித்து வைப்பதற்கு மிகவும் ஏற்ற வடிவம் இதுவே ஆகும் என்று அறிவியல் கண்டுபிடித்திருக்கிறது. சிவலிங்க பிரதிஷ்டையில் தெய்விக சக்தியின் சாந்நித்தியம் மிக அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.



8. **கணபதி, ஹனுமான் ஆகிய வடிவங்களின் தத்துவம்**

ஹிந்து தெய்வங்களில் விசித்திரமென்று தோன்றுகின்ற வடிவங்கள் உள்ளன. அவற்றிற்கெல்லாம் அறிவியல்பூர்வமான விளக்கங்கள் உண்டு. உதாரணமாக, விக்னங்களை (தடைகளை) நீக்கும் கணபதியின் வடிவம் விக்னங்களைத் தீர்த்து வித்யாபுத்தியையும், காரியசித்தியையும் நல்கும் கணேசனுக்கு ஞானம் உள்ளதன் அடையாளமாகப் பெரிய தலையும், அதை உட்கொண்டதன் அடையாளமாகப் பெரிய உடலும் அளிக்கப்பட்டுள்ளன. தும்பிக்கை தடைகளை நீக்குவதைக் குறிக்கிறது. வாகனமாகத் திகழும் எலி கட்டுக்குட்பட்ட மனதைக் காட்டுகிறது. இதேபோல் ஹனுமான் மனதின் சின்னமாவார். மனதின் இயல்பு சலனமடைவதாகும். அதனால், அலைபாயும் இயல்புள்ள குரங்கு வடிவத்தை அதற்குக் கொடுத்தனர். ஆனால், அந்த மனதை இறைவனுக்குச் சமர்ப்பித்தால் எல்லா சித்திகளையும் அடையமுடியும். அதனால் பக்த ஹனுமான் சர்வசக்திகளின் இருப்பிடமானார்.



9. **ஹிந்து மதத்தில் ஜாதிப் பிரிவினையில்லை. வர்ண வேறுபாடே உள்ளது.**

ஹிந்து தர்மம் ஜாதிபேதத்திற்கு இடமளித்த தர்மமென்று குற்றச் சாட்டு ஆதாரமற்றது. உபநிஷதங்களிலும், கீதையிலும் வர்ணங்களைப் பற்றியே விவரிக்கப்படுகிறது. ஒரு ஜீவாத்மா தனது தகுதிக்கு ஏற்ற ஒரு பிறவியை எடுக்கிறது. அப்படி எடுத்த பிறவியே வர்ணமாகும். அது ஜீவாத்மாவின் மன அமைப்பிற்கு ஏற்ப அவனுக்குக் கிடைக்கும் சூழ்நிலைகளைக் காட்டுகிறது. பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்கள் ஜீவாத்மாவின் மனதின் குணங்களையே குறிப்பிடுகின்றன. தவத்தின் மூலம் தனது மனநிலையை மாற்றினால் ஒரே பிறவியிலேயே பிற



வர்ணங்களில் இடம்பிடிக்க ஒருவனுக்கு இயலும், புராண, இதிகாசங்களிலும், வரலாற்றிலும் இதற்கு எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன.

10. இயற்கை சக்திகள் நாம் வணங்கக்கூடியவை ஆவது எதனால்?

ஹிந்துக்களின் வாழ்க்கை, யக்ஞத்தை அடிப்படையாகக் கொண்டவை. மனிதனும், படைப்பின் பிற பாகங்களும் ஒன்றோடொன்று இயைந்து சென்றால் தான் உலக வாழ்க்கை நடத்த இயலும். இந்த தத்துவத்தையே யக்ஞம் என்று சொல்கிறோம். யக்ஞத்தில் மனிதர் சமூகமாகச் சேர்ந்து இயற்கை சக்திகளை வளப்படுத்தும் கர்மங்களைச் செய்கிறார்கள். இயற்கைச் சக்திகள் இறைவனின் அருளை வாரிவழங்கும் பிரதிரூபங்கள் ஆகும். அதனால் அவற்றை நாம் புனிதமாகக் காண்கிறோம். அவற்றை அசுத்தமாக்காமல் பார்த்துக் கொள்கிறோம்.



வழிபடுகிறோம். அக்னி, இந்திரன், (மழை தேவதை). வருணன் (ஜலதேவதை) வாயு, மலை, மரங்கள், பாம்பு, மிருகங்கள் என இயற்கையில் அனைத்திலும் தெய்வத்தைத் தரிசித்து. அவற்றை வழிபடுவதன் மூலம் இறைவனை மகிழ்விக்கவும், பிரபஞ்சத்தின் சமநிலை நிலைநிற்கவும் செய்கிறோம்.

11. சூரிய வழிபாடு

ஹிந்துக்களின் கண்ணோட்டத்தில் சூரியன் கண்கண்ட தெய்வமாகும். பூமி, உயிரினங்கள் நிலைத்திருக்க ஆதாரமாகத் திகழ்வது சூரியன் என்பது அனைவரும் அறிந்த உண்மை. பூமி முதல் எல்லாக் கிரகங்களும் சூரியனின் பாகங்களே என்று அறிவியல் நிரூபித்துள்ளது. நம்முடைய எல்லா சக்தியின் அடிப்படை ஊற்றாகத் திகழ்வது சூரியனே. அதனால் நாம் நம்மைப் படைத்தவனாகவும், பாதுகாப்பவனாகவும் கருதி சூரியனை



இறைவடிவில் வணங்குகிறோம். சூரிய உபாசனை ஆரோக்கியம், ஆயுள், அறிவாற்றல் ஆகியவற்றை அளிக்கிறது என்பது நேரடியான அனுபவமும். அறிவியல்பூர்வமாக நிரூபித்துள்ள உண்மையுமாகும். தினசரி சூரியனை நோக்கி நின்று சூரிய காயத்ரி(ஸவித்ரு காயத்ரி) மந்திரம் சொல்லி சந்தியாவந்தனம் செய்வது ஹிந்துதர்மத்தில் ஒரு முக்கியமான உபாஸனா சம்பிரதாயமாகும்.

12. மரங்களை வழிபடுதல்


ஹிந்துதர்மத்தில் வழிபாட்டிற்குரியவை பலவாகும். தெய்வங்கள், பெற்றோர், குரு, மலைகள், நதிகள், ஆகியவற்றுடன் மரங்களுக்கும் நாம் வழிபாட்டிற்குரிய இடத்தை அளித்திருக்கிறோம். அரசமரம், ஆலமரம், வில்வமரம், வேப்பமரம் நெல்லிமரம், பாலைமரம், அசோகமரம் போன்ற பல மரங்களை பல்வேறு ரீதியில் நாம் வழிபடுகிறோம். துளஸி, அறுகம்புல் போன்றவற்றிற்கும் நாம் பூஜைக்குரிய இடம் அளித்திருக்கிறோம். இவற்றை எல்லாம் ஏதாவது தெய்வங்களுடன் இணைத்தும் வைத்துள்ளோம். மரங்கள் உலகிற்கு நல்கும் விலை மதிப்பற்ற தானமான **பிராணவாயு தானம** ஒன்றுமட்டும் நாம் அவற்றை வழிபடுவதற்குப் போதுமான காரணமாகும். நிழல், பழங்கள், மருந்து முதலியவற்றை அளிப்பதுடன் மழை பெய்யக் காரணமாகின்றன. மேலும், மணல் அரித்துச் செல்லாமல் தடுப்பதன் மூலம் அவை பூமிக்கு உதவுகின்றன. இவ்வாறு அவை உயிரினங்களுக்குச் செய்யும் உதவிகள் எண்ணற்றவையும், வர்ணனைக்கு அப்பாற்பட்டவையுமாகும். மரங்கள் எக்காரணம் கொண்டும் நாம் வழிபடுவதற்குரியவை.



13. பாம்பு, பறவைகள், மிருகங்கள் போன்றவை வணங்கப்படுவது எதனால்?

இறைவனின் சைதன்யம் எங்கும் நிறைந்திருக்கிறது என்று ஸநாதன தர்மம் கூறுகிறது. இயற்கை எங்கும் நாம் இறைவனைத் தரிசிக்கிறோம். மரங்களிலும், பறவை மிருகங்களிலும் இறைவனைத் தரிசிக்க நாம்


முயற்சி செய்கிறோம். பாம்பு, பறவைகள், மிருகங்கள் நீர்வாழ்வன என அனைத்தையும் நாம் வழிபாட்டு மனோபாவத்துடன் தான் காண்கிறோம். அதனால் நம்முடைய தர்மத்தில் நாக வழிபாடு, பறவைகளுக்கு மகிமை, யானை, குதிரை, பசு முதல் எலி வரை உள்ள உயிரினங்களை நாம் வழிபடுவதைக் காணலாம்.



இயற்கைப் பாதுகாப்பு என்ற மிக உயர்ந்த கடமையும் இதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது.


14. நதிகளையும், மலைகளையும் வழிபடுவது ஏன்?

நதிகள், மலைகள் போன்றவை பூமியில் உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு ஆதாரமாகத் திகழ்பவை. உலகிற்குத் தேவையான நீர் மழையாகப் பொழியவும், அதைப் பங்கிட்டு அளிக்கவும் நதிகளும், மலைகளுமே வழிசெய்கின்றன. இவை பலனை எதிர்பாராத சேவையின் யக்ஞத்தின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். தவம் செய்வதற்கும், குருகுலங்களின் மூலம் ஞானத்தைப் புகட்டுவதற்கும் மலைகளும், நதிக்கரைகளுமே பயன்பட்டு வந்தன. உலகில் மிகச்சிறந்த நாகரிகங்கள் நதிக்கரைகளில் உருவாயின. இவற்றை எல்லாம் பார்க்கும் போது நதிகளும், மலைகளும் இறைவனின் தெய்விக மகிமை பொருந்தியவை என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அதனால் அவை வழிபாட்டுக்குரியவை.



15. கோமாதா என்ற சங்கல்பத்தின் அடிப்படை

பசுவை தெய்வீகம் நிறைந்ததாகக் காண்பது என்பது ஹிந்துவின் அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்றாகும். பசுவை நாம் கோமாதா என்றே



அழைக்கிறோம். ஒவ்வொருவருக்கும், அவரவரின் தாய் தெய்விகமான தியாகத்தின் நேரடியான உதாரணமாகத் திகழ்கிறார். இதே தியாகத்தைப் பசுவிடமும் நாம் காணலாம். பழங்காலத்தில் புல்வெளிகளில் புல்மேய்ந்துவிட்டு, நதி அல்லது குளங்களில் சென்று நீரருந்தி விட்டு வீட்டிற்கு வரும் பசுக்கள் அமிர்தத்திற்கு நிகரான பாலைத் தருவது வழக்கம். பாலில் தயாரிக்கப்பட்ட பொருள்களும், கோமூத்திரமும், சாணமும் விலைமதிப்புள்ளவை. பிரதிபலனாக எதையும் பெறாமல் விலைமதிப்புள்ள பொருள்களை வழங்கும் பசுவைத் தாய்க்கு நிகராகக் கருதாமல் வேறு எப்படிக் கருதமுடியும்? எல்லாத் தெய்வங்களின் சாந்நித்தியமும் பசுவில் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

16. **ஆசாரங்களும் அனுஷ்டானங்களும்.**

பலநூறு ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் ஸநாதன தர்மத்தில் உள்ளன. தாய், தந்தை, குரு, அதிதி ஆகியோரை இறைவனாகக் காணுதல். வயதில் முதிர்ந்தவர்களை வணங்குதல், உடலையும், மனத்தையும் தூய்மையாக வைத்திருத்தல், பணம், பொருள் ஆகியவற்றை நேர்மையான முறையில் சம்பாதித்தல், தூய உணவை உண்ணுதல், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருத்தல், கணவன் - மனைவி உறவை தெய்வீகமாகக் காணுதல் என பல ஆசாரங்கள் உள்ளன. விரதங்கள் இருத்தல், புண்ணிய ஆலயங்கள், தீர்த்தங்களுக்குச் செல்லுதல், பண்டிகைகள் கொண்டாடுதல் போன்ற அனுஷ்டானங்களும் நமக்குப் பலப்பல உள்ளன. இவை அனைத்தும் வாழ்க்கையை எப்போதும் இறைவனுடன் இணைப்பதற்காக உள்ளவையாகும். அதுமட்டுமல்ல, இவற்றைப் பின்பற்றுவதால் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், குடும்பநலன், ஐஸ்வரியம்,



சமூகநன்மை, மனநிம்மதி, அழகு போன்ற உலகியல் நலன்களையும் பெறமுடியும்.

17. நாமகரணம் - பெயர்களின் முக்கியத்துவம்

ஹிந்து குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தால், விரைவிலேயே குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா நடைபெறும். ஒரு அனுஷ்டானமாக இறை வழிபாட்டுடன் கூடிய சடங்குகளுடன் இது நடாத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு இறைவனின் பெயர்களோ, இறைவனோடு சம்பந்தப்பட்ட பெயர்களோ சூட்டப்படுகின்றன. "யதா நாம ததா குண" பெயர்களுக்கு ஏற்ற குணங்கள் குழந்தைகளுக்கு வளரட்டும் என்ற எதிர்பார்ப்பே இதுபோன்ற நல்ல பெயர்களை சூட்டுவதன் காரணமாகும். ஒருவரை நல்ல பெயரால் அழைக்கும் போது அந்த மனிதனிடம் நல்ல குணங்கள் விழிப்படைய வாய்ப்புக்கள் உண்டு என்று ரிஷிகள் கூறியதால் தான் இவ்விதம் செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, அந்தப் பெயரைச் சொல்லி அழைப்பவர்களுக்கும் அது புண்ணியத்தை அளிக்கிறது.

18. அன்னப்ராசனம் - சோறூட்டுதல்



குழந்தைகளுக்கு ஆறு அல்லது ஏழு மாதம் ஆகும்போது கட்டாயம் அன்னப்ராசனம் நடத்த வேண்டும். ஒரு தார்மிக சடங்காகவே இதை நடத்துகிறார்கள். அன்னம் அல்லது உணவுதான் மனிதனின் மனதை உருவாக்குகிறது. அன்னம் இறைதன்மை உள்ளது. உண்பது யக்ஞமாகும். ஒரு மனிதன் சாத்விகமும், தூய்மையுமான உணவை உண்ண வேண்டும். அதுவும் இறை அர்ப்பணமாகவே அதை உண்ணவேண்டும். இந்த விஷயங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது, முதல்முதலாக குழந்தைக்கு அன்னம் ஊட்டுவதை எவ்வளவு சிரத்தையுடனும், பக்தியுடனும் செய்யவேண்டும் என்பது தெளிவாகும். அதனால், சுபமுகூர்த்தத்தில் இறைவனுக்குப் பூஜை செய்து, பெற்றோர் குழந்தைக்கு முதலில் உணவை ஊட்டுகின்றனர்.

19. **வித்தியாரம்பம்**



குழந்தைக்கு எழுத்துகளைப் புரிந்து கொள்வதற்குரிய அறிவு வளர்ச்சி அடைந்தவுடன் வித்யாரம்பம் செய்து வைக்கப்படுகின்றது. அறிவும், நன்னடத்தையும் உள்ள ஆசார்யர் ஒருவர்தான் குழந்தையின் நாவின் நுனியில் முதல்முதலாக எழுதி, குழந்தையின் கையைப் பிடித்து நிலத்தில் எழுதச் செய்கிறார். "ஹரி ஸ்ரீ" என்றுதான் முதலில் எழுதவைக்கிறார். இறை நினைவுடன் ஆரம்பிக்கப்படும் வித்யை, இறை அருளைப் பெறுவதற்கு உதவுவதாக அமையவேண்டும். அது அகங்காரம் வளர்வதற்கான வித்யையாக ஆகிவிடக் கூடாது என்பதுதான் "ஹரி ஸ்ரீ" என்பதன் பொருளாகும். இத்தகைய சிறந்த கல்வியே நன்மையை நோக்கி அழைத்துச் செல்கிறது. தொடர்ந்து, இத்தகைய அறிவை தடைகளின்றிப் பெறுவதற்காக "கணபதயே நம:" என்ற கணபதியின் மந்திரத்தை எழுதச் செய்கின்றனர். இவ்வாறு அறிவின் மூலம் ஐஸ்வர்யத்தையும், பரம ஞானத்தையும் பெறுவதற்குரிய பயணத்திற்கான நல்ல ஆரம்பத்தைக் குறிப்பதே வித்யாரம்பமாகும்.

20. **குருவிடமிருந்து தீக்ஷை - உபநயனம்**




குருவை நாடிச் சென்று, குருகுலத்தில் வசித்தே பழங்காலத்தில் கல்வி பயின்றனர். வேத வேதாங்கங்கள், குலத்தொழில்களான ஆயுதக்கல்வி (தனுர்வேதம்), வைத்திய சாஸ்திரம் (ஆயுர்வேதம்), சங்கீதம் போன்ற கலைகளை எல்லாம் குருகுலக் கல்வியின் மூலம் மட்டுமே பெற்றனர். குருவின் ஆசிரமத்தில் வசிப்பதற்கான சடங்காக உபநயனம் அமைந்தது. பின்னர், குருவுக்கு சேவை செய்வதன் மூலம் கல்வி அறிவைப் பெற்று, பல வருடங்களுக்குப் பிறகு, நல்ல குடிமகனாக சமூக சேவை

செய்வதற்காக அந்த மாணவன் இல்லறத்தை மேற்கொள்கிறான். இவற்றிற்கு ஆரம்பமாக அமைவதே உபநயனமாகும்.

21. திருமணத்தின் புனிதத்தன்மை.

ஹிந்து தர்மப்படி, புலனின்பத்தைப் பெறுவதற்காகவோ, சந்ததியைப் பெறுவதற்காகவோ மட்டும் ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு உறவல்ல திருமணஉறவு. இருவர் தெய்வீகபாவத்தில், ஒன்றாக இணைந்து அறநெறியுடன் வாழ்ந்து, இறைவனை நோக்கிச் செல்லுதல் என்பதுதான் திருமணத்தின் நோக்கமாகும். கணவன், மனைவியின் ஸஹதர்மசாரி ஆவான். மனைவி, கணவனின் ஸஹதர்மசாரிணி ஆவாள். இவ்வாறு தர்மத்தைப் பின்பற்றுவதில் ஒருவருக்கொருவர் உதவுவதே திருமண உறவின் நோக்கமாகும். அத்துடன், சிறந்த சந்ததிகளை வார்த்தெடுத்து, உலகிற்கு நல்குவது என்ற கடமையும் அவர்களுக்கு உண்டு. திருமணத்திற்குப் பிறகு, அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் பரஸ்பர அன்பெனும் நூலில் ஒன்றாக இணையவேண்டும்.



29.அம்மா எழுதாத கடிதம்

பிர - சிவாம்ருத சைதன்யா

"அம்மாவைக் காண இரண்டு வருடங்களுக்குப் பிறகு வந்தேன். அப்படியிருந்தும் தரிசன சமயத்தில் அம்மா என்னுடன் பேசவே இல்லை. முன்னெல்லாம் எவ்வளவு நேரம் பல விஷயங்களைப் பற்றி அம்மா என்னிடம் பேசுவார்கள்? இப்போது அம்மாவுக்கு அன்பு செலுத்த எத்தனையோ பக்தர்கள் இருக்கிறார்கள். என்மீது அம்மாவுக்கு இப்போது அன்பில்லை."

கடிதத்தைப் படித்துக் காட்டிய பிறகு, அம்மாவின் பதிலுக்காகக் காத்திருந்த லஷ்மி டேப் ரிகார்டரைத் தயாராக வைத்தார். உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் தினமும் அம்மாவுக்கு

வருகின்றன. அவற்றில் அம்மா நேரடியாகப் பதில் அளிக்க வேண்டிய கடிதங்களை மலையாளத்தில் மொழிபெயர்த்து அம்மாவுக்குப் படித்துக் காண்பித்தபின், அம்மாவிடமிருந்து கிடைக்கும் பதிலை மீண்டும் அந்த அந்த மொழியில் மொழிபெயர்த்து அனுப்புவது வழக்கம். பெரும்பாலும் பல்தேய்க்கும் போதும், குளித்துவிட்டு தலைசீவும் போதும், தேநீர் அருந்தும் போதும் ஏதாவது ஒரு கடிதத்தைப் படித்தவாறு லஷ்மி அருகில் நின்று கொண்டிருப்பார். பல வேலைகளுக்கிடையிலும் அம்மா சுருக்கமாகப் பதில் அளிப்பார். சில சமயங்களில், பதில் கூறுவதில் கவனம் செலுத்தும் காரணத்தால், தான் செய்து கொண்டிருக்கும் நித்திய கர்மத்தைத் தொடர்ந்து செய்வதற்கு அம்மா மறந்து போவதுண்டு.

இந்தக் கடிதத்தைப் படிக்கக் கேட்ட அம்மா உணவருந்துவதை நிறுத்திவிட்டு ஒரு நிமிடம் மௌனமாக அமர்ந்திருந்தார். பின்னர் எதிரில் அமர்ந்திருப்பவரோடு பேசுவது போல் பதிலளிக்க ஆரம்பித்தார்.

"மகளே, அம்மாவுக்கு உன்னிடம் அன்பில்லை என்றா நீ சொல்கிறாய்? இரண்டு வருடங்களுக்குப் பிறகு வந்த உன்னுடன் பேசவில்லை என்கிறாய். அம்மாவுக்கு அன்பு செலுத்தத் தெரியுமே அன்றி, அன்பைக் காட்டத் தெரியாது. மகளைக் கண்ட போது மனம் நிறைந்து விட்ட காரணத்தால் பேச முடியவில்லை. இரண்டு வருடங்களாகப் பேச நினைத்தவை அனைத்தையும் இரண்டு நிமிடத்தில் பேச முடியுமா? அன்புக் கடலை வார்த்தையெனும் சிமிழிற்குள்ளே அடக்க முடியுமா? இருந்தாலும், சென்ற பல வருடங்களாக இரவும், பகலும் அம்மா உன்னுடைய நிழல் போல் தொடர்ந்திருந்தேன். இப்போதும், எப்போதும் உன்னுடன் இருக்கின்றேன் என்பதை நீ அறிய வேண்டும். நீயும் அம்மாவிடம் சிறிதளவாவது அன்பு காட்ட வேண்டும். உனது ஒரு வார்த்தையைக் கேட்க அதுதான் போகட்டும். அம்மாவைப் பற்றிய சிறு நினைவாவது உனது மனதில் மின்னி மறைவதைக் கண்டு மகிழ அம்மா எவ்வளவு தவிக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா?

"நேற்று நடைபெற்ற சில விஷயங்களை அம்மா உனக்கு நினைவூட்டுகிறேன். பொழுது புலர்ந்தது. 'எழுந்திரு எழுந்திரு' என்று எத்தனை முறை அம்மா உன் செவியருகில் வந்து கூறினேன்? அப்போதெல்லாம் நீ போர்வையை இழுத்து மூடிக் கொண்டு சுருண்டு படுத்துக் கொண்டாய்.

பின்னர் அரைமனதுடன் மெல்ல எழுந்த போது, ஒரு நிமிடம் அம்மாவைப் பற்றிச் சிந்திப்பாய் என நினைத்தேன். இல்லாவிடில், மேசை மேல் இருக்கும் அம்மாவின் புகைப்படத்தையாவது ஒருமுறை பார்ப்பாய் என்று நினைத்தேன். போகட்டும். நீ அப்போது எத்தனையோ முக்கிய காரியங்களைப் பற்றி சிந்தித்திருக்கலாம். மகளைப் பற்றி அம்மா மட்டும் நினைத்தால் போதுமல்லவா? இருந்தாலும் உனக்கு ஒரு அம்மா இருப்பதை நினைவுபடுத்துவதற்காக, உனது மகளைக் கொண்டு, "குட்மார்னிங் மம்மி" என்று சொல்ல வைத்தேன் உம்! என்ன பலன்? "சரி, இன்னும் நேரம் இருக்கிறது." என்று சமாதானத்துடன் அடுப்படிக்குச் சென்றேன். நீ காஸ் அடுப்பைத் திறந்து வைத்துவிட்டுத் தீப்பெட்டியைத் தேட ஆரம்பித்தாய். அது கிடைக்காததால், கண்ணில் பட்டவர்களை எல்லாம் திட்ட ஆரம்பித்தாய். முகச்சவரம் செய்து கொண்டிருந்த மகனின் கவனத்தை அம்மா காஸின் மணத்தை நோக்கி த் திருப்பிய காரணத்தால், ஒரு பெரிய விபத்திலிருந்து தப்பினாய். அம்மாவுக்கு நிம்மதி ஏற்பட்டது. ஆனால், நீ அம்மாவுக்கு நன்றி சொல்லாவிடினும், இறைவனுக்காவது நன்றி சொல்வாய் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். குளிப்பதற்காகக் கழுத்திலிருந்த செயினைக் கழற்றி வைத்த போது, டாலரிலிருந்து அம்மா சிரித்தேன். அது உன் கண்ணில் பட்டபோதும், பார்த்ததாகத் தெரியவில்லை. குளியலறையில் உனக்குக் கால் வழுக்கிய போது தாங்கிப் பிடித்தேன். அலுவலகச் சாவியை நீ மறந்துவிட்டுப் புறப்பட்ட போது நினைவூட்டினேன். புறப்பட்டுவிட்ட பஸ்ஸிலிருந்த டிரைவரின் மனதில் கருணை தோன்றச் செய்தேன். இவ்வாறு ஒவ்வொரு நிமிடமும் அம்மா உன்னுடன் இருந்தேன்.

"உனக்கு முன்பே! அலுவலகத்துக்குச் சென்று பார்த்தபோது, உனது மேலதிகாரி கோபமாக இருந்தார். உன்னைத் திட்டத் தயாராக இருந்தார். என்ன செய்வது? உடனே அவருடைய நெருங்கிய நண்பரை போன் செய்ய வைத்து, அவருக்கு ஒரு நல்ல செய்தியை அறிவித்தேன். அதைக் கேட்ட சந்தோஷத்தில் இருந்த போதுதான் நீ உள்ளே நுழைந்தாய். அப்பாடா அதிகாரி உன்னைத் திட்டவில்லை".

அலுவலகத்தில் உனக்குப் பொறுப்புள்ள பல வேலைகள் இருப்பது அம்மாவுக்குத் தெரியும். இருந்தாலும், சில முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது நீ அம்மாவுடன் ஒருமுறை கலந்து ஆலோசித்திருந்தால்

எவ்வளவு நன்றாக இருக்கும் என்று என்னை அறியாமல் சிந்தித்தேன். உன் கையிலிருக்கும் பேனாவின் முனையில் எத்தனை பேருடைய வாழ்க்கையின் ஆசைகளும், எதிர்பார்ப்புகளும், கண்ணீரும், கனவுகளும் அடங்கியுள்ளன என்பதை நீ அறியவில்லையே! அம்மா சரியான விஷயத்தை மகளின் காதுகளில் மெல்ல உரைக்கிறேன். ஆனால், உனது சிந்தனைகளின் சப்தத்தில் அம்மாவின் அந்த மெல்லிய ஒலி பெரும்பாலும் கேட்பதே இல்லை.

மதியம் உணவருந்தும் போதாவது அம்மாவை ஒருமுறை நினைத்துப் பார்ப்பாய் என்று நினைத்தேன். அருகில் இருந்தவர் மந்திரம் சொல்லிவிட்டுச் சாப்பிடுவதைக் காட்டிக் கொடுத்த போதும் மகளின் மனதில் அத்தகு சிந்தனையே எழவில்லை. உனது கையிலிருந்து ஒரு உருண்டை சாதத்தை வாங்கிச் சாப்பிட விரும்பி, அம்மா அறைக்கு வெளியிலிருந்து கை நீட்டினேன். ஆனால், அதை நீ பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாய். பசித்திருக்கும் வயிறுக்கு உணவளிக்காமல் சாப்பிடும் உனது விரலில் அணிந்திருந்த மோதிரத்தில் இருந்த அம்மாவின் புகைப் படத்தில் தோன்றிய கண்ணீர்த்துளியை நீ பார்த்திருக்க மாட்டாய். கடைசியில், சாப்பிட்டுப் விட்டு பாக்கியிருந்த எச்சில் உணவை நீ தொட்டியில் போட்ட போது, நாய்களிடமிருந்து பறித்து வாங்கிய ஒரு உருண்டைச் சோற்றைச் சாப்பிட்டு அம்மா திருப்தியடைந்தேன். குழந்தைகளின் எச்சில் அம்மாவுக்கு பிரசாதமே அல்லவா! "உணவுக்குப் பிறகு சிறிது ஓய்வு நேரம் இருக்கிறதே! அப்போது மகள் அம்மாவிடம் ஏதாவது சொல்வாள்" என்று நினைத்துக் காத்திருந்தேன். ஆனால், தோழிகளுடன் சேர்ந்து பிறரது குறைகளைப் பற்றிப் பேசுவதில் தான் நீ முழுக் கவனம் செலுத்தினாய். தோழிகளின் மீது காட்டும் அன்பில் சிறிதளவாவது அம்மாவின் மீது.... இல்லை இல்லை. ஒரு அம்மா அப்படி ஆசைப்படவே கூடாது. குழந்தைகளுக்கு, அவர்களுக்கென ஒரு உலகம் இருக்கிறது. அதில் பெற்ற தாய் நுழைவதைக் கூட அவர்கள் சில நேரங்களில் விரும்புவதில்லை.

நீ அலுவலகத்திலிருந்து இறங்கி சாலையில் நடந்த போது, அம்மாவின் கண்கள் உன்னையே தொடர்ந்தன. சாக்கடையை மூடியிருந்த சீமெண்ட் பலகை உடைந்து விழும் நிலையில் இருந்ததைப் பார்க்காமல் கால் வைத்துவிடுவாயோ என்றும், சாலையைக் கடக்கும் போது, வேகமாக வரும்

காரைக் கவனிக்காமல் போய்விடுவாயோ என்றும் தவிக்கும் இதயத்துடன் உன்னைப் பின்தொடர்ந்தேன்.

இரவில் நீ செய்த வேலைகளில் அம்மாவும் பல கைகளின் மூலம் பங்கு கொண்டு, சோர்வடைந்திருந்த உன் மனதிற்கு உற்சாகம் அளிக்கும் வகையில் நடந்து கொண்டேன். குடும்ப வாழ்வில் உனக்குப் படுக்கச் செல்லும் போது தான் அம்மாவை ஒருமுறை நினைத்துப் பார்க்க முடியும் என்பது எனக்குத் தெரியும். ஒருவிதமாக அடுப்படியின் விளக்கை அணைத்துவிட்டாய். படுக்கும் நேரம், பூஜை அறையில் ஒரு அனாதையைப் போல், தூசு படிந்த கண்ணாடிக்குப் பின்னால் இருக்கும் அம்மாவை ஒரு முறை பார்ப்பாய் என்று காத்திருக்கும் போது தொலைக்காட்சியின் சப்தம் கேட்டது. மிக மோசமான நாடகத் தொடர், உறக்கம் வந்த போதும் விடாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாய், வீட்டுப் பாடங்களைச் செய்து கொண்டிருந்த உன் மகளும் அருகில் வந்து அமர்ந்து அதைப் பார்க்க ஆரம்பித்தாள். தோட்டக்காரனே, பூமொட்டுக்களைப் புழு தின்ன அனுமதித்தால் யாரிடம் சென்று சொல்வது, மனதின் வேதனைகளை எல்லாம் பெருமூச்சின் மூலம் வெளிப்படுத்த மட்டுமல்லவா அம்மாவால் முடியும்! படுக்கை அறைக்குச் சென்ற போது மகள் பின்னாலேயே ஓடிவந்து, 'குட்நைட் மம்மி' என்றாள். அப்போது உன் முகத்தில் ஒளிபடர்ந்தது. உனது வாயிலிருந்து இது போன்ற வார்த்தையைக் கேட்க விரும்பும் ஒரு அம்மா அருகில் இருக்கிறேன் என்று சொல்ல மனம் தவித்தது. படுக்கையில் படுக்கும் போதாவது, உறங்காமல் உனக்குக் காவலிருக்கும் அம்மாவுக்காக, ஒரு வார்த்தை, ஒரு சிந்தனை, ஒரு பிரார்த்தனையாவது...!

"நாள் முழுவதும் இப்படிக் கழிந்தது." நாளை.... நாளை என் மகள் நிச்சயமாக அம்மாவை நினைக்காமல் இருக்கமாட்டாள். உறங்கு மகளே, உறங்கு, நீ அறியவில்லை எனினும் உன் நெற்றியில் அம்மாவின் முத்தத்தைப் பதிக்கிறேன். அத்துடன் அறியாமல் சிந்திய ஒரு துளி கண்ணீரும்.....!

ஏதோ கனவிலிருந்து விழித்து எழுந்தது போல் அம்மா சட்டென எழுந்தபடியே, "நான் என்னவெல்லாம் சொன்னேன்? அவற்றை நீ எழுத வேண்டாம். மகளின் மனம் வருந்தும். கூட்டம் அதிகமாக இருந்த காரணத்தால் அம்மாவால் பேச முடியவில்லை. நீ வருந்தாதே! அம்மா


எப்போதும் உடன் இருக்கிறேன். மகளுக்கு முத்தங்கள் என்று மட்டும் எழுதினால் போதும்" என்று லஷ்மியிடம் கூறினார்.

லஷ்மி : "அம்மா, அம்மா ஒன்றும் சாப்பிடவில்லையே! எப்போது சாப்பிடுவது?"

அம்மா : "பரவாயில்லை. தரிசனத்திற்கு நேரமாகிவிட்டது. குழந்தைகள் காத்திருப்பார்கள்"

30.அம்மாவின் தங்க வளையல்

சுவாமி ராமகிருஷ்ணானந்தபுரி



சிறுவர் சிறுமியர் குதூகலத்துடன் சுறுசுறுப்பாக வளைய வந்து கொண்டிருந்தனர். எங்கும் கலகலப்பும், சிரிப்பும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ஏழைகள் வாழ்ந்த அந்தப் பகுதியில் இருந்த எல்லாக் குடிசைகளும் பலவண்ணக் காகிதத் தோரணங்களாலும், பலூன்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒரு ஓரத்தில் அமைந்திருந்த சிறிய குடிசை இந்த விழாவின் நடு நாயகமாக விளங்கியது. அக்குடிசையில் ஒரு அறைதான் இருந்தது. அதில் சிலரே அமர முடியும். ஆகவே பெரும்பாலோர் குடிசைக்கு வெளியே கூடி நின்றனர்.

குடிசைக்குள் ஒரு படம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. படத்திற்கு முன்னே குத்துவிளக்கு ஒளிசிந்தியது. அதனருகில் வெள்ளைப் புடவை அணிந்த ஒரு இளம் பெண் அமர்ந்திருந்தாள். சிறுவர்கள் அவரருகில் அமர போட்டி போட்டனர். அவள் கைகளால் தாளமிட்டபடி பஜனை பாட ஆரம்பித்தாள். அங்கிருந்தோர் அனைவரும் அவளைப் பின்பற்றிப் பாடினர். பஜனை பாடும்போது அவளது கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. அந்த அறையின் ஒரு மூலையில், நிறம் மங்கிய படம் ஒன்று காணப்பட்டது. அப்படத்தின் மீது அவளது பார்வை பதிந்ததும், அவளது மனதில் கடந்த கால நிகழ்ச்சிகள் விரிந்தன.

ஆதவன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான் எங்கும் இருள் சூழ்ந்து

கொண்டிருந்தது. மயானத்தில் எரிந்து கொண்டிருந்த சிதையிலிருந்து எழும் நெருப்பைப் பார்த்தவாறு, கந்தல் துணியணிந்த ஒல்லியான ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவளது நம்பிக்கை எனும் ஆகாயத்திலும் இருள் சூழ்ந்தது. அவளது மெலிந்த கையில் ஒரு வெள்ளி வளையல், கையிலிருந்து நழுவி கீழே விழுந்து விடும் போலிருந்த அதை அவள் மார்போடு அணைத்துக் கொண்டாள். அந்த வளையல் மெல்லிய குரலில் ஏதோ கூறுவதை அவள் உற்றுக் கேட்டாள்: "அழாதே, அன்பு மகளே! நான் உன்னை தெய்வத்தாயிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவர் உன்னை மிக அன்பாகக் கவனித்துக் கொள்வார். அவரிடம் பிரார்த்தனை செய். அவர் நிச்சயமாக செவிசாய்ப்பார். அது அவளது தாயின் குரலல்லவா? அவர் எங்கே இருக்கிறார்? சிதையில் காணப்படும் நீறுபூத்த தணலிலா? அதிலிருந்து எழும் புகையிலா? காற்றில் எழும் சாம்பலிலா? அந்தப் பெண் வெள்ளி வளையலை அன்புடன் நெஞ்சோடு சேர்த்துக் கொண்டாள். ஏனெனில், அவளது தாய் இவ்வுலகத்தில் அவளுக்கென விட்டுச் சென்ற ஒரே சொத்து அது.

இரவு காவல்காரன் நெருங்கி வருவது தெரிந்தது. இனி அவள் எங்கே செல்வாள்? சில மணி நேரங்களுக்கு முன்பு அவளது தாய் உயிருடன் இருந்த வரை அவர்கள் ஒரு சேரியில் வாழ்ந்து வந்தனர். சேரி தீய செயல்களின் உறைவிடமாக இருந்தது. அங்கே இருந்த குடிசை, துணை யாருமற்ற இளம் பெண் வாழ்வதற்கு பாதுகாப்பற்ற இடமாகும்.

"அம்மா, நீ எங்கே இருக்கிறாய்? நான் எங்கே போவேன்? நீ கூறிய தெய்வத்தாய் ஏதாவதொரு ஆலயத்தில் எனக்கு இடமளிப்பாரா?" என அவளது மனம் புலம்பியது. இல்லை என்ற பதில் தான் எதிரொலியாக வந்தது. தெய்வத் தாயே அனுமதித்தாலும், கீழ்க் குலத்தவளான அந்தப் பெண்ணை எந்தத் கோயில் பகுதியிலும் தங்குவதற்குப் பூசாரி எவரும் அனுமதிக்கப் போவதில்லை என்பதை அவள் அறிவாள். மயானத்தை விட்டு அவள் வெளியே வந்தாள். அவளுக்கு முன்னே பரந்துகிடந்த நகரம், கொடிய விலங்குகள் நிறைந்த நரகமாக அவளை வரவேற்றது.

மயானத்தின் பெரிய வாயிலைக் கடந்து வந்துவிட்ட அவள் தலைநிமிர்ந்து பார்த்தாள். வெறிச்சோடிக் கிடந்த அவளது விழிகள் எதிரே காணப்பட்ட சுவரொட்டியில் பதிந்தன. அதில் எழிலே வடிவான ஒரு

பெண்மணியின் படம் இருந்தது. அவரது கண்களில் கருணையும், அன்பும் நிறைந்திருந்தன. அக்கண்கள் தன்னையே நோக்குவதாக அவளுக்குத் தோன்றியது. அவள் மார்போடு அணைத்திருந்த வளையலின் மென்குரல் திடீரென நின்றது. சுவரொட்டியிலிருந்து பெண்மணியின் உருவம் தெளிவான, உரத்த குரலில், "என் அன்பு மகளே! ஓடி வா, எவ்வளவு நேரமாக உனக்காகக் காத்திருக்கிறேன்!" என்று சொல்வது கேட்டது. கேட்பவரின் இதயத்தை நெகிழச் செய்யும் குரல், அவ்வளவு அன்பு ததும்பும் குரலை அவள் கேட்டதே இல்லை, அவள் இப்போது, தான் யாருமற்ற அனாதை என்பதையும், அதனால் தோன்றிய அளவுற்ற வேதனையையும், மறந்தவளாக அப்படியே அசைவற்று நின்று விட்டாள்.

கார் ஹாரன் ஒலித்தது. அவள் அசையவில்லை. இடித்துவிடுவது போல் அவளைக் கடந்துசென்ற கார் சற்று தூரத்தில் நின்றது. காரில் ஜன்னல் வழியால் எட்டிப் பார்த்த ஒரு மூதாட்டி அவளைக் கைதட்டி அழைத்தார். அந்த அழைப்பும் அவளது காதுகளில் விழவில்லை. அவள், "இவ்வுலகில் இப்படி ஒரு அம்மா உயிரோடு இருக்கிறாரா? அவரை நான் பார்க்க முடியுமா? அவர் என்னை அணைத்து, என் இதயத்துக்கு ஆறுதல் அளிப்பாரா?" என்ற எண்ணத்தில் மூழ்கி இருந்தாள், தொடர்ந்து, "இந்தக் கனவு நனவாகுமா இறைவா! ஒரு நொடியாவது அந்த அன்பு எனக்குக் கிடைக்க அருள்புரிய மாட்டாயா?" என்று பிரார்த்தித்தவாறு சுவரொட்டியை நோக்கி நடந்தாள்.

காரின் பின்புறமிருந்த மூதாட்டி, முன்புறம் அமர்ந்திருந்த முதியவரிடம், "அவளைப் பார்த்தால் அனாதை போல் தெரிகிறது. அவள் விரும்பினால் நம் வீட்டில் வேலை செய்யட்டுமே. அவளிடம் கேட்டுப் பார்க்கவா?" என்றார். முதியவரும் சம்மதித்தார். வீட்டு வேலைக்காரியின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட பிறகு, வீட்டிற்குத் திரும்பும் வழியில் தான் அவர்கள் இவளை சந்தித்தனர். புனே நகரில், நம்பிக்கையான ஒரு வீட்டு வேலைக்காரி கிடைப்பது மிகவும் சிரமம், அதனால் மூதாட்டி அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு காருக்கு வந்தார். அவளது கையில் சுவரொட்டியில் இருந்த பெண்மணியின் படம் இருந்தது.

ராஜேஸ் புனேயில் வேலை கிடைத்திருப்பதாகக் கூறி, அவன் சேர இருந்த கம்பெனியின் முகவரியை என்னிடம் காட்டினான். நான் அவனிடம்,

"அந்தப் பகுதியில்தான் மல்கோத்ராவின் வீடு இருக்கிறது. மறவாமல் சென்று அவரைப் பார். அவரும், அவரது மனைவியும் அம்மாவின் நீண்ட கால பக்தர்கள், எல்லா வருடமும் அம்மாவின் பிறந்த நாளுக்கு அவர்கள் அமிர்தபுரிக்கு வருவதுண்டு. இப்போதெல்லாம் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால் என்னால் அவர்களுடன் தனித்துப் பேச முடிவதில்லை. அவர்களைப் பார்க்கும் போது எனது வணக்கத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்றேன். சட்டென்று மனதில் ஒரு நினைவு வரவே அவனிடம், "அவர்கள் வீட்டு வேலைக்காரியிடம் அம்மாவின் அன்பையும், ஆசியையும் தெரிவிக்க வேண்டும். அவளிடம் அம்மாவின் இந்த பிரசாதத்தையும் கொடுக்க வேண்டும்" என்றேன்.

ராஜேஸ் சிறிது வியப்புடன், "என்ன சுவாமி இது? ஒரு வேலைக்காரியை நினைவில் வைத்துக் கொண்டு அவளுக்கு பிரசாதம் கொடுக்கும் அளவு அவளிடம் என்ன சிறப்பு இருக்கிறது?" என்று கேட்டான். "அவளிடம் தனிப்பட்ட அக்கறை எதுவும் எனக்கு இல்லை. மல்கோத்ராவும், அவரது மனைவியும் அந்த வேலைக்காரியை இங்கே அழைத்து வந்ததில்லை. நான் அவளைப் பார்த்ததுமில்லை. அவள் அம்மாவைத் தரிசித்திருப்பாளா என்பதும் சந்தேகமே. ஆயினும் அம்மா அவளை எவ்வளவு நேசிக்கிறார் என்பதைப் புலப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியை என்னால் மறக்க முடியாது" என்று நான் தொடர்ந்தேன்.

பல ஆண்டுகளுக்கு முன் ஆசிரமத்தில் தியான மண்டபமும், அதன் மாடியில் அம்மாவின் அறையும் கொண்ட ஒரு கட்டிடம் தான் இருந்தது. அதைச் சுற்றிலும் இருந்த குடிசைகளில் நாங்கள் வாழ்ந்து வந்தோம். அம்மா தரிசனம் அளிப்பதற்கு ஒரு பெரிய குடிசை இருந்தது. அப்போதெல்லாம் ஆசிரமத்தில் ஓரிரண்டு தினங்கள் தங்குபவர்கள் வெகுசிலரே. பக்தர்களை தங்கச் செய்வதற்கு, பிமச்சாரிகளாகிய நாங்கள் எங்கள் குடிசைகளை விட்டு வெளியேற நேரிடும். திறந்தவெளியிலோ மழையாக இருந்தால் தரிசனக் குடிலிலோ படுப்போம். ஆகவே, வரும் பக்தர்களை நாங்கள் நன்றாக அறிவோம். அம்மாவின் பிறந்தநாள் விழாவிற்கு அதிகமான பக்தர்கள் வருவார்கள். பிற மாநிலங்களிலிருந்து வருபவர்கள் ஒருசில நாட்களுக்கு ஆசிரமத்தில் தங்குவார்கள். ஒருமுறை புனேயிலிருந்து வந்த மல்கோத்ரா தம்பதியினர் தங்குவதற்காக என் குடிசையை ஒதுக்க நேர்ந்தது. அன்று தான் அவர்கள் எனக்கு அறிமுகமானார்கள்.

அம்மா தேவிபாவ தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார். அப்போது அம்மாவின் தரிசனத்திற்கு சென்ற இவர்கள் ஒரு தாம்பாளம் நிறைய பழங்களை எடுத்துச் சென்றனர். பழங்களில் மேலே ஒரு காகித உறையில் காணிக்கை வைத்திருந்தார்கள். அதன் மேல் வெள்ளி வளையல் இருந்தது. அந்தக் காலத்தில் தேவிபாவ தரிசனத்தின் போது, அம்மா சில நாட்களில் வளையல் அணிந்திருப்பார். மல்கோத்ரா தம்பதியினர் ஓரளவு செல்வந்தர்களே. அவர்கள் அம்மாவுக்கு வெள்ளி வளையலைக் காணிக்கையாகக் கொடுப்பதைக் கண்ட நான், "இவர்கள் கருமிகள் போலிருக்கிறது" என்று நினைத்துக் கொண்டேன். அம்மா அந்தத் தட்டிலிருந்த வெள்ளீ வளையலை எடுத்து அணிந்து கொண்டார். தமது கரத்திலிருந்து தங்க வளையல் ஒன்றைக் கழற்றி மல்கோத்ராவின் மனைவியிடம் கொடுத்து விட்டு "இதை என் மகளிடம் கொடுத்துவிடு" என்றார்.

தேவிபாவ தரிசனம் நிறைவுற்றதும் மல்கோத்ரா தம்பதியினர் எனது குடிசைக்கு வந்தனர். அவர்களிடம் நான், "உங்கள் மகள் பாக்கியசாலி! தனது வெள்ளி வளையலுக்குப் பதில் அம்மாவின் தங்க வளையலைப் பெற்றுவிட்டாளே!" என்றேன். அதற்கு அவர்கள், "எங்கள் மகளல்ல, வீட்டு வேலைக்காரி தான் இந்த வளையலுக்கு சொந்தக்காரி, நாங்கள் இங்கு வர புறப்படுவதற்கு முன் அவளிடம் அம்மாவின் புகைப்படத்தைக் காட்டி, நாங்கள் இந்த அம்மாவை தரிசிக்கப் போகிறோம் என்றோம். உடனே அவள், தான் அணிந்திருந்த வெள்ளி வளையலைக் கழற்றித் தந்து இதை அம்மாவிடம் கொடுக்க வேண்டும். ஏழையான இவளை அவருடைய மகளாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுங்கள் என்றாள். இதை அம்மாவிடம் சொல்ல நாங்கள் மறந்து விட்டோம். ஆயினும், எல்லாம் அறிகின்ற அம்மா, இதைத் தெரிந்து கொண்டு, அவளது வளையலை ஏற்றுக் கொண்டிருக்கிறார்" என்றார்.

இதைக்கேட்டு வியந்த நான் அவர்களிடம், "அம்மாவின் மீது இந்த அளவு அன்பும், நம்பிக்கையும் அவளுக்கு எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டேன்.

"எங்களுக்குத் தெரியாது. ஆனால், ஒரு சுவரொட்டியிலிருந்த அம்மாவின் படத்தைக் கையில் வைத்திருக்கிறாள். அவள் தனியாக இருக்கும் போது

அந்தப் படத்திடம் பிரார்த்திக்கிறாள். அவள் ஒரு அனாதை, ஒருவேளை அம்மாவிடம் அவளது தாயாரின் சாயை இருக்கக் கூடும்" என்றனர்.

ராஜேஸ் மனதில், இன்று அம்மாவின் பிறந்தநாள், விடுமுறை கிடைக்காத காரணத்தால் அமிர்தபுரிக்குச் செல்ல முடியவில்லை என்ற ஏக்கம் இருந்தது. அலுவலகத்திலிருந்து திரும்பிய அவன் களைப்புடன் படுத்தான். அப்போது திடீரென மல்கோத்ரா தம்பதிகளின் நினைவு அவனுக்கு வந்தது. உடனே அவன் மேஜை டிராயரிலிருந்து சிறிய பொட்டலத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் வீட்டை நோக்கி விரைந்தான். அவர்கள் வீட்டிற்கு செல்வது இதுவே முதல்முறை என்பதால் சிறிது தயக்கமாக இருந்தது. ஆனால், அன்றைய தினம் அம்மாவின் பக்தர்களுடன் இருக்க வேண்டும் என்ற ஆவல் அவனது தயக்கத்தை நீக்கியது.

மல்கோத்ராவின் வீடு பூட்டியிருந்தது. காவல்காரர், அவர்கள் கேரளா சென்றிருப்பதாகத் தெரிவித்தார். அவர்கள் அம்மாவின் பிறந்த நாள் விழாவுக்கு அமிர்தபுரி செல்வது வழக்கம் என்பதை மறந்து விட்டதை நினைத்து நொந்து கொண்டு திரும்பிய அவன், காவல்காரரை நோக்கி, "இந்த வீட்டு வேலைக்காரி எங்கே? அவளிடம் ஒரு சிறிய பொருளைக் கொடுக்க வேண்டும்" என்றான். அதற்கு அவர், "அவள் குடிசையில் அருகிலுள்ள சேரியில் தனது குடிசையில் இருப்பாள். இன்று ஏதோ ஒரு மாதாஜியின் பிறந்தநாள் விழாவை அவள் கொண்டாடுகிறாள். அதனால் அவள் குடிசையை சுலபமாகக் கண்டுபிடிக்கலாம்" என்றார்.

ராஜேஸ் குடிசைக்குள் நுழைந்து, அம்மாவின் படத்திற்கு அருகில் அமர்ந்திருந்த பெண்ணிடம் சென்றான். அப்போது அங்குள்ளவர்கள் அம்மாவின் பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர். இதனால், ராஜேஷின் தயக்கம் நீங்கியது. தனக்கு எதிரே பழக்கமில்லாத ஆடவர் நிற்பதைக் கண்டு தயக்கத்துடன் எழுந்து நின்ற அந்தப் பெண்ணிடம் ராஜேஸ் அம்மாவின் பிரசாதமுள்ள சிறு பொட்டலத்தைக் கொடுத்தான். "நான் கேரளத்திலிருந்து வந்திருக்கிறேன். இது அம்மாவின் பிரசாதம், இந்நன்னாளில் இதை உங்களுக்குக் கொடுப்பதற்காகவே வந்தேன்" என்றான்.

அம்மாவின் பெயரைக் கேட்ட அப்பெண் முகம் மலர்ந்தாள்.

பக்தியுடனும், சந்தோஷத்துடனும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டாள், தனது ஆர்வத்தை அடக்க இயலாத ராஜேஷ், "அம்மா உங்களுக்குக் கொடுத்த வளையல் எங்கே இருக்கிறது?" என்று கேட்டான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு சிறுவன் அவர்களை நெருங்கி வந்தான். அவனை அருகில் சேர்த்துப் பிடித்துக் கொண்ட அந்தப் பெண், "அந்த வளையலை விற்று விட்டேன்" என்றாள். திடுக்கிட்ட ராஜேஷ், "விற்றுவிட்டீர்களா? ஏன்? அம்மா அளித்த வளையலை விற்க வேண்டிய காரணம் என்ன?" என்று கேட்டான்.

"இந்தச் சிறுவனின் சகோதரி புற்றுநோயால் வருந்தினாள். சிகிச்சை செய்ய பணமில்லை."

"அப்படியா! அதனால் ஒரு உயிரைக் காப்பாற்ற முடிந்ததல்லவா? அம்மா இதை அறிந்தால் மகிழ்ச்சியே அடைவார். இல்லை அம்மா என்னை மன்னிக்கக்கூடும். ஆனால் இவனது சகோதரியைக் காப்பாற்ற முடியவில்லை. நோய் இருப்பதை அறிந்தபோது அது முற்றிய நிலையை அடைந்திருந்தது. நான் அளித்த பணத்தால் அவளது வேதனையை ஓரளவு குறைக்க முடிந்தது. அவ்வளவு தான். அப்படியானால் இப்போது அந்தப் பெண்ணும் இல்லை. வளையலும் இல்லை".

இதுவரை மௌனமாக நின்று கொண்டிருந்த அந்தச் சிறுவன், ராஜேஷின் ஏமாற்றம் நிறைந்த இந்த வார்த்தைகளைக் கேட்டதும், "அக்காவுக்கு தங்க வளையல் எதற்கு? அம்மா எங்களுக்குத் தந்த தங்க வளையலாக அக்கா இருக்கிறாரே!" என்றான்.

ராஜேஷ், "சுவாமிஜி, இதைப் பற்றி நீங்கள் மாத்ருவாணியில் எழுத வேண்டும்" என்றான். "சரி, நான் எழுதுகிறேன். அந்தப் பெண்ணின் பெயர் என்ன?" என்று கேட்டேன். "பெயரா? அதைக் கேட்க மறந்துவிட்டேனே! இப்போது என்ன செய்வது? "கவலைப்படாதே, ராஜேஷ். அந்தப் பெண்ணுக்கு பெயரோ, அடையாளமோ காண முகமோ இல்லை போலும், நாம் அவளை, அம்மாவின் தங்க வளையல் என்று குறிப்பிடலாம்".

31.அம்மாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம்

ஸ்டேட் யூனிவர்ஸிடி நியூயார்க் 2010 மார்ச் 25



சத்குரு ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயி தேவி - அம்மா - உலகம் தழுவிய சேவை செய்து வருவதை போற்றும் வகையில் அமெரிக்காவிலுள்ள ஸ்டேட் யுனிவர்ஸிடி நியூயார்க் 2010 மார்ச் 25ம் தேதி அன்று அமிர்தா விச்வவித்யா பீடத்தின் தலைமை வேந்தரான அம்மாவுக்கு கௌரவ டாக்டர் விருது அளித்து கௌரவித்தது. 4,40,000 மாணாக்கர்கள் படிக்கும் 64 கல்விமையங்கள் அடங்கிய பல்கலைக்கழகமாகும் இது. அமெரிக்காவிலுள்ள மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான இப்பல்கலைக்கழகத்தின் 164வருட வரலாற்றில் இரண்டு உலகத் தலைவர்களுக்கே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ஒருவர், நமது அம்மா, மற்றொருவர், தலாய்லாமா ஆவார்.

ஸ்டேட் யுனிவர்ஸிடி நியூயார்க்கின் (SUNY) பிரஸிடென்ட் டாக்டர் ஜான் சிம்சன் அவர்கள் தமது உரையில், "உலக மக்களால் அன்புடன் அம்மா என அழைக்கப்படும் மாதா அமிர்தானந்தமயி தேவி, உலகப்புகழ் பெற்ற, உலக மக்களால் விரும்பப்படும் ஒருவராவார். பாரதத்தில் மட்டுமல்ல, இவ்வுலகம் முழுவதும் அமைதி நிறையவும், கல்விவளம் ஓங்கவும், ஏழ்மையை அகற்றவும், மனிதகுலத்

துயர்களை நீக்கவும் இடைவிடாது முயன்று வருகிறார். தனிச்சிறப்புமிக்க அமிர்தாவிச்வ வித்யாபீடத்தின் தலைமை வேந்தரும், முதன்மையான மனிதநேயத் தொண்டுகளை நடத்துபவரும், பெருமதிப்பிற்குரிய ஆன்மிகத் தலைவியுமான அம்மாவுக்கு இந்த விருதை அளிப்பதன் மூலம் எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

ஸ்டேட் யுனிவர்ஸிடி நியூயார்க்கின் அறங்காவலர் (ட்ரஸ்டீ) யூனைஸ் லெவினுடன் சேர்ந்து, டாக்டர் ஜான் சிம்சன் அவர்கள். டாக்டர் விருது பெறுவதற்கு முன் அணிவிக்கும் வெள்ளையும், நீலமும் கலந்த அங்கியை அம்மாவுக்கு அணிவித்தார். அப்போது உற்சாகக் கையொலி எழுப்பிப் பார்வையாளர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

டாக்டர் விருதை ஏற்றுக்கொண்டபின் வழங்கிய அருளுரையின் போது அம்மா, இந்தக் கௌரவத்தை அளித்த நியூயார்க் யுனிவர்ஸிடிக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார். தொடர்ந்து, "கல்வியை இருவிதமாகப் பகுக்கலாம். ஒன்று உயிர்வாழ்வதற்குத் தேவையான கல்வி, இரண்டாவது வாழ்க்கைக் கல்வி, இவற்றில் வாழ்க்கைக் கல்வியே ஆன்மிகமாகும்" என்றார். அத்துடன், "நவீன கல்விமுறையில் ஆன்மிகத்தையும் இணைப்பதன் முக்கியத்துத்தை விளக்கினார். தியானம் புரிவதன் மூலம் மனக் கட்டுப்பாட்டைப் பெறுவதுடன், விஞ்ஞான அறிவுடன், ஆன்மிக ஞானத்தையும் பெறலாம்" என்றார் அம்மா.

நியூயார்க் பல்கலைக்கழகத்தின் முக்கிய நிர்வாகிகளாகிய டாக்டர் சதீஷ் த்ரிபாடி மற்றும் டாக்டர் ஸ்டிபன் டன்னட் போன்றோரும் சொற்பொழிவாற்றினர்.

•••••••••••••••••••••••••

32.ஆன்மிகத்தின் விளக்கம்

கா.பா.சுரேந்திரன்

அகண்டானந்த சுவாமிகளின் ஒரு சந்நியாசிச் சீடர் கொல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகச் சென்றார். அவர் தனது அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு இளைஞன் அவரைக் காணச் சென்றான். 'என்ன வேண்டும்?' என்று கேட்ட போது, சட்டென்று, 'ஆன்மிகத்தின் விளக்கம் என்ன?' என்று கேட்டான். கேள்வியைக் கேட்ட சந்நியாசி புன்னகை புரிந்தார். அவ்வளவுதான். பதிலுக்காகக் காத்திருந்த இளைஞன் பதில் கிடைக்காமல் திரும்பினான்.

மாலை நேர நிகழ்ச்சி முடிந்து, உணவு உண்டபின் சந்நியாசி உறங்கச் சென்றார். அப்போது கதவருகில் காலடி சப்தம் கேட்டது. சந்நியாசி பார்த்த போது, காலையில் வந்த இளைஞன் நின்றிருந்தான். "அது சரி, நீ இதுவரை போகவில்லையா?" என்று அவர் இளைஞனிடம் கேட்டார். இல்லை, என் கேள்விக்கான பதில் கிடைக்கவில்லை என்றான் இளைஞன், Thinking less and less about ours, thinking more and more about others. This is Adhyatma. இவ்வாறு கூறிவிட்டு கதவைச் சாத்தினார் அவர். அதற்கான விளக்கத்தைக் கேட்கவோ, சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளவோ இளைஞனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அந்த மாணவன் தனக்குக் கிடைத்த பதிலைக் குறித்து சிந்தித்தான். தன்னைப் பற்றி சிறிதளவே சிந்திக்கவும், பிறரைப் பற்றி அதிகமாக சிந்திக்கவும் வேண்டும். திரும்பத் திரும்ப இதையே மனதில் உருவிட்ட போது அதன் பொருள் தெளிவாயிற்று: "சுயநலத்தைக் குறைத்துக் கொண்டு பிறர் நலனை நாட வேண்டும்."

ஆன்மிகத்தின் அடிப்படைத் தத்துவங்களை விவரிக்கும் நாராயண குரு ஆத்மோபதேச சதகத்தில் பல இடங்களில் கூறுவதும் இந்த உண்மையையே ஆகும். "தனது நலனை நாடிச் செய்யும் எந்த செயலும் பிறருக்கும் பலன் அளிப்பதாக அமையும் போது தான் அது ஆன்மிகமாகும்." நமது முன்னோர்களான ரிஷிகளும் இதையே கூறினார்கள்.

"அயம் நிஜ பரோ வேதி கணனா
லகுசேதஸாம்
உதாரசரிதானாம் து வஸுதைவ
குடும்பகம்"

என்னுடையது என்றும், உன்னுடையது என்றும் சிந்திப்பது குறுகிய மனப்பான்மையாகும். பரந்த மனமுள்ளவர் இவ்வுலகம் முழுவதையும் ஒன்றாகக் காணுபவர்கள் ஆவர். அதுவே ஆன்மிகம்.

இக்காலத்தில் இத்தகு சிந்தனை வளர்கிறதா? ஆன்மிக சிந்தனை தனக்கு இருப்பதாகச் சொல்பவர்களிலும், தனது காரியத்தைப் பற்றி மட்டுமன்றி அனைவரது நலனையும் சிந்திப்பவர்கள் இன்று எத்தனை பேர் இருக்கின்றார்கள்? பிறர் நலனைக் கவனிக்க நமக்கு நேரம் இருக்கிறதா?

பேருந்திலோ, புகைவண்டியிலோ பயணம் செய்யும் போது மற்ற பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்தாமல் இருப்பதில் நாம் கவனம் செலுத்துவதுண்டா? இல்லாவிடில் ஆன்மிகத்தைப் பற்றி பேச நமக்கு தகுதியில்லை. தண்ணீரை உபயோகிக்கும் போது தேவைக்கு அதிகமான நீரை உபயோகிக்காமல் இருக்கிறோமா? இல்லாவிடில் ஆன்மிக சிந்தனை இருப்பதாகக் கூற நமக்குத் தகுதியில்லை. நாம் உபயோகிக்கும் அறையையோ, அலுவலகத்தையோ முறையாகக் கையாள்வதில் கவனம் செலுத்துவதுண்டா? இல்லாவிடில் நமக்கு ஒவ்வொரு செயலும் பிறருக்கு நன்மை பயப்பதாக அமைய வேண்டும் என்ற சிந்தனையோடு செய்கிறோமா? அல்லது சம்பளம், கூலியை மட்டும் விரும்பிச் செய்கிறோமா? அப்படியானால் நாம் சுயநலமற்றவர் என்று கூற வழியில்லை.

ஆன்மிகத்தின் செயல்முறை வடிவம் இதுதான். இதைப் புரிந்து கொள்ளும் போதுதான், நாம் உண்மையில் ஆன்மிக உணர்வு உள்ளவர்கள் என்று சொல்ல முடியும்.

'நான்' பிறந்த போது எனக்கு என்னைக் குறித்த உணர்வில்லை. சில மாதங்களுக்குப் பிறகுதான் எனது உணர்வுநிலையில் 'நான்' என்ற சிந்தனை

பதிந்தது. எனக்குப் பசித்த போது நான் கைகால்களை ஆட்டி அழுதேன்; சந்தோஷம் ஏற்பட்ட போது சிரித்தேன். வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. மேலும் சில மாதங்கள் சென்றதும் என் உணர்வு நிலையில் என் ஆம்மா, என் அப்பா, என் அக்கா போன்ற உருவங்கள் பதிந்தன. அவர்கள் எல்லாம் என்னுடையவர்கள். அவர்கள் வருந்தினால் நானும் வருந்தினேன். அவர்கள் சிரித்தால் நான் மகிழ்ந்தேன். இந்த எல்லைக்குட்பட்ட மனநிலை மாறி, என் உணர்வில், என் உறவினர்கள், என் ஊரைச் சேர்ந்தவர்கள், என் நாட்டைச் சேர்ந்தவர்கள், மனிதர்கள் என அனைவரும் என் சகோதரர்கள், எல்லா உயிரினங்களும் நானே என்ற மனநிலை வருவதுதான் ஆன்மிகம்.

யோ மாம் பச்யதி ஸர்வத்ர
ஸர்வம் ச மயி பச்யதி (கீதை)

சர்வ சராசரங்களிலும் நானே, அனைத்தும் என்னிடமே என்ற உணர்வு ஏற்படும். அப்போது நான் செய்யும் எந்த செயலும் பிறருடைய சுகத்தைக் கருத்தில் கொண்டதாக அமையும், பிரபஞ்சம் நிலைநிற்கவும், அதன் செழுமைக்கும் உதவும்.

அம்மாவின் 49ம் பிறந்த நாளை பெரும்பாலோர் பலவிதத்தில் கொண்டாடத் தீர்மானித்தனர். இளைஞர்கள் பலர் பல இடங்களில் பஜனை நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்தனர். ஒரு பக்தர் தங்கள் முடிவைப் பற்றி அம்மாவிடம் அறிவித்தார். அம்மாவின் பதில் சரியான வழியைக் காட்டிக் கொடுப்பதாக இருந்தது. "ஏதாவது சேவையில் ஈடுபடுங்கள். ஏழைகளுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள். இதுதான் அம்மா கொடுத்த உபதேசம்." இது தான் உண்மையான ஆன்மிகம், இதுவே நாம் வளர்க்க வேண்டியதும், பிரசாரம் செய்ய வேண்டியதுமாகும்.

33.ஒரு பத்து நிமிடம்

பிரம்மசாரி ப்ரியா

உலகின் எந்தப் பாகத்திற்குச் சென்றாலும் மனம் நிறைந்த வரவேற்பு; மக்களின் ஆரவாரம், நமது ஒரு பார்வைக்காக ஏங்கும் பல்லாயிரக்கணக்கானோர். நமது ஒரு புன்னகைக்காவும், ஒரு அரவணைப்பிற்காகவும் பலமணி நேரம் தவமிருக்கத் தயாராக இருக்கும் மக்கள்கூட்டம். ஒன்று சிந்தித்துப் பாருங்கள். நமது மனநிலை எப்படி இருக்கும்? மகிழ்ச்சியாலும், பெருமையாலும் நம்மை மறந்துவிடுவோம். அல்லவா! உண்மையைச் சொல்வதென்றால், நிச்சயமாக எனது நிலை இப்படித்தான் இருக்கும்.

இதற்கு நேர்மாறாக இவ்வளவு பெருமையையும் பெறும் அம்மா பணிவின் வடிவாகத் திகழ்கிறார். தமது ஆத்ம வடிவையே எங்கும் எவரிடத்திலும், எதிலும் காண்பதால்தான் அவரால் இப்படி இருக்க முடிகிறது.

இதை விளக்கும் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளை அம்மாவுடன் செலவிடும் நேரங்களில் நான் நேரடியாகக் காண்கிறேன். அம்மா அஹிம்சைக்கான காந்திகிங விருதைப் பெறுவதற்காக ஸ்விட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவிற்குச் சென்ற போது, அவருடன் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்குள்ள ஐ.நா.சபை அரங்கில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. அம்மாவின் தெய்வீக உரையைக் கேட்பதற்காக அரங்கம் முழுவதும் மக்கள் வெள்ளம் நிறைந்திருந்தது. அரங்கின் பக்கவாட்டில் அமைந்துள்ள வாயில் வழியாக உள்ளே வந்த அம்மா, மற்றொரு சிறப்பு விருந்தினரின் உரையைக் கேட்டுக் கொண்டிருக்கும் பார்வையாளர்கள் நடுவில் சென்று அமர்ந்தார். சுமார் 20 நிமிடங்களுக்குப் பிறகு, விருதைப் பெறுவதற்காக அம்மா மேடைக்கு அழைக்கப்பட்டார். உண்மையில், அம்மா ஒரு போதும் தமது கரங்களால் விருதைப் பெறுவதில்லை தமக்கு அளிக்கப்படும் விருதைக் கரங்களால் தொட்டுத் தலையில் ஒற்றிக் கொள்வதன் மூலம் அந்த விருதின் மீது தமக்குள்ள மரியாதையை வெளிப்படுத்துவார். பலத்த கைத்தட்டலுக்கு இடையே விருதைப் பெற்ற பின் அம்மா மெதுவாகப் பேச்சு மேடையை (Podium) நோக்கி நடந்தார். அம்மா மிகக் குள்ளமானவர் என்பது அனைவருக்கும் தெரியும். அம்மாவின் உயரமும் பேச்சுமேடையின் உயரமும்

சமமாக இருந்தது. யாரோ ஒருவர் அம்மா ஏறி நிற்பதற்கு வசதியாக சிறியமரக்கட்டை ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். அதன் மீது ஏறி நிற்பதற்கு முன்பு அம்மா மெதுவாகத் தமது காலணியை பேச்சுமேடையின் ஓரத்தில் கழற்றிவைத்தார். அம்மாவின் செயலைப் பார்வையாளர்களால் காணமுடியாது. நான் அம்மாவின் அருகில் நின்றுகொண்டிருந்த காரணத்தால் இதைக் காண முடிந்தது. அம்மாவிடம், "அம்மா, நீங்கள் முன்பே குள்ளமாக இருக்கிறீர்கள். அப்படியிருக்க காலணியையும் கழற்றிவிட்டால்....." என்று சொல்ல விரும்பினேன். ஆனால், பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் தேவையற்ற செயலைச் செய்ய விரும்பாமல் மௌனமாக இருந்துவிட்டேன்.

இந்நிகழ்ச்சி நடந்து முடிந்த சில நாட்களுக்குப் பிறகு, அம்மாவிடம் இதைப்பற்றிப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பேச்சுமேடையின் மீது ஏறுவதற்கு முன்பு அம்மா ஏன் காலணியைக் கழற்றினார் என்பதை அப்போது கேட்டேன். ஒருநொடி என்னை நோக்கிய அம்மா, "நீ ஒரு ஆலயத்திற்குச் செல்லும்போது உன் காலணியைக் கழற்றுவாய் அல்லவா? அது ஏன்? ஏனெனில், நீ தெய்வ சந்நிதிக்குச் செல்கிறாய். அம்மா மக்கள் கூட்டத்திற்கு முன்பு நிற்கையில், அனைவரிடத்திலும் தெய்வீகத்தைக் காண்கிறேன். அப்படியிருக்க, காலணியை அணிந்துகொள்வதன் மூலம் அம்மாவால் அந்தந் தெய்வீகத்திற்கு அவமரியாதை செய்ய முடியாதல்லவா? அதனால்தான் கழற்றி வைத்தேன்" என்றார்.

உண்மையில், அம்மா நம் அனைவருக்கும் நல்ல முன்னுதாரணமாகத் திகழ்கிறார். "கடவுள் என்பவர் ஆகாயத்திற்கு அப்பால் தங்க சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஒருவரல்ல. அவர் பேருணர்வின் வடிவில் நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் உறைகிறார் என்று சொல்வதன் மூலம் அம்மா நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் உறையும் தெய்வீகத்தை நாம் காண வழிசெய்ய முயல்கிறார்.

மற்றொரு நிகழச்சி சில வருடங்களுக்கு முன்பு ஆஸ்திரேலியா சென்ற போது, சிட்னியில் நடைபெற்ற மூன்று நாள் ஆன்மிக முகாமிற்காக நாங்கள் ஓட்டலில் தங்கினோம். மூன்றாவது நாள் தேவிபாவ தரிசனம் நிறைவுற்றதும். சிலமணி நேரம் உறங்குவதற்காக அனைவரும் வேகமாகப் படுக்கைக்குச் சென்றோம். வழக்கம் போல், தாமதமாக எழுந்து நாங்கள்.

விமானநிலையத்திற்குச் செல்வதற்காக அவசர அவசரமாகத் தயாரானோம். பெட்டிகளைத் தயாராக்கிய பின், அவற்றை எடுத்துக் கொண்டு அம்மாவின் வருகைக்காக அவரது அறைக்கு வெளியில் சென்று காத்திருந்தோம். ஆசிரமத்தின் சில மூத்த துறவியருடன் மேலும் இருவரே அங்கு நின்று கொண்டிருந்தோம். நாங்கள் விமான நிலையத்திற்குச் செல்ல 3.00 மணிக்குப் புறப்பட வேண்டும். இப்போதோ மணி 3.15 ஆகிவிட்டது. ஒருவேளை அம்மா உறங்கிக் கொண்டிருக்கலாம் என்று நினைத்த சுவாமிஜி என்னிடம் கதவை மெல்லத் தட்டிப் பார்க்குமாறு கூறினார். நான் கதவைத் தட்டியவுடன் அம்மாவுடன் வசிக்கும் லஷ்மி அக்கா வந்து கதவைத் திறந்தார். அவரது முகத்தோற்றம் மிகவும் மாறுபட்டிருந்தது. நான் அவரிடம், "அம்மா 15நிமிடங்களுக்கு முன்பே விமான நிலையத்திற்குப் புறப்பட்டிருக்க வேண்டும்" என்பதைத் தெரிவித்தேன். அவர் சற்றே சோர்வுற்ற குரலில் "எனக்குத் தெரியும்! நான் அம்மாவைப் புறப்படச் செய்ய எவ்வளவோ முயன்றேன். ஆனால், அவர் நான் சொல்வதைக் கவனிக்கவே இல்லை" என்றார். அம்மா என்னதான் செய்கிறார் என்று கேட்பதற்கு நான் வாயைத் திறக்கவும். அம்மா என்முன் வரவும் சரியாக இருந்தது. கை துடைப்பத்தை ஏந்தியிருக்க புடவையைத் தூக்கிச் செருகிய அவரது தோற்றமானது சிரிப்பை வரவழைப்பதாக இருந்தது. அம்மாவின் அறைவாயிலில் நின்ற எங்களை நோக்கி, "அறையைத் துப்புரவு செய்தீர்களா?" என்று அம்மா கேட்டார். இருவரும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றோம். பதில் சொல்ல வழியில்லை. படுத்திருந்த துணியை மடித்து வைத்ததல்லாது நாங்கள் வேறு ஒன்றும் செய்யவில்லை. முகத்தில் அதிருப்தி நிலவ அம்மா மௌனமாக அறைக்குள் திரும்பிச் சென்றார். மூத்த சுவாமிகளுடன் நாங்கள் அம்மாவைத் தொடர்ந்து அறைக்குள் சென்றோம். அம்மா குனிந்து பெருக்க ஆரம்பித்தார். நாங்கள் உதவுவதாகப் பலமுறை சொல்லியும் அம்மா செவிசாய்க்கவில்லை. "இது நான் தங்கியிருந்த அறை. இதைத் துப்புரவு செய்வது என் கடமை" என்றார். தொடர்ந்து தரையைத் துடைத்தார். படுக்கையை நேராக விரித்தார். கழிவறையைக் கழுவினார். குப்பைக் கூடையைக் காலிசெய்தார். மேசையைத் துடைத்தார். அனைத்தையும் செய்துமுடித்தஅம்மா வியர்த்து விறுவிறுக்க ஒருநிமிடம் ஓய்வாக அமர்ந்தார். லஷ்மி அக்காவை அழைத்து, சில பழங்களைக் கொண்டுவருமாறு கூறினார். 24 மணிநேரத்திற்குப் பிறகு அம்மா ஏதாவது சாப்பிட விரும்புவதைக் கண்ட நாங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். ஆனால், எங்களை வியப்பில்

ஆழ்த்தும் வகையில், பழங்களை நன்கு கழுவிய அம்மா, ஒரு தட்டில் அவற்றை அழகாக அடுக்கி, அதை மேசையின் நடுவில் வைத்தார். அதன் பிறகு புன்னகை தவழும் முகத்துடன், "உங்களுக்குத் தெரியுமா? இந்த அறைகளைத் துப்புரவு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஏழைப்பெண்களுக்கு மிகக் குறைவான ஊதியமே கொடுக்கப்படுகிறது. நாள் முழுவதும் மனிதர்களின் கழிவுப் பொருட்களையும், குப்பைகளையும் தூய்மை செய்யும் இவர்கள், வேலை முடிந்தபின் தங்களது வீடுகளுக்குச் சென்று வீட்டு வேலைகளைச் செய்கிறார்கள். அப்படியிருக்க, அவர்களைக் கொண்டு அம்மாவின் அறையைத் துப்புரவு செய்விக்க அம்மாவால் எப்படி முடியும்? அதனால் தான் அம்மா இந்த அறையைத் துப்புரவு செய்ய விரும்பினேன். அத்துடன் ஒரு நாளில் மூன்று வேளை சாப்பாடு அவர்களுக்குக் கிடைப்பது மிகவும் கடினமாகும். அதனால், அம்மா சில பழங்களை அவர்கள் சாப்பிடுவதற்காக வைத்தேன். அறையைத் தூய்மை செய்வதற்காகக் கிடைக்கும் நேரத்தில் அவர்கள் இவற்றை உண்ண முடியுமல்லவா?" என்றார்.

இதைக் கேட்ட எங்கள் கண்களில் கண்ணீர் பெருகியது சுமார் எட்டுமணி நேரத்திற்கும் மேலாக ஒரே இடத்தில் அமர்ந்து அம்மா தரிசனம் கொடுத்திருக்கிறார் இருப்பினும், அவரது சிந்தனை, அறையைத் துப்புரவு செய்யும் ஏழைப் பெண்களின் மீது சென்றிருக்கிறது. எங்களால் இவ்வளவு மேலான, சுயநலமற்ற சிந்தனையைக் குறித்துச் சிந்திக்கவும் முடியவில்லை. அம்மா தமது வாழ்வை, தமது ஒவ்வொரு மூச்சையும் குழந்தைகளின் நலனிற்காக அர்ப்பணம் செய்து வருகிறார். நாமும் இதேபோல் செய்ய வேண்டும் ஆனால், குறைந்தது ஒரு தினத்தில் 10 நிமிடமாவது, தியானமே வடிவான அம்மாவை நினைத்தாவது. தேவையுள்ள யாராவது ஒருவருக்கு சுயநலமற்ற சேவை செய்ய நாம் முயற்சி செய்யலாம் அல்லவா? இவ்வுலகிலுள்ள அனைவரும் சுமார் 10 நிமிடம் சுயநலமற்ற சேவை செய்ய முன்வந்தால், இவ்வுலகின் முகத்தோற்றமே மாறிவிடும். இது சொர்க்கமாக மாறும், முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டும் அம்மாவைப் பின்பற்றி, ஓரளவாவது அவ்வழியில் நடப்பதற்கான சக்தியை நம் அனைவருக்கும் அம்மா தந்து அருள்புரியட்டும் என்ற பிரார்த்தனையுடன் நிறைவு செய்கிறேன்.

34.ஆத்மா உள்ள கல்விமுறை

திரு.என்.ஆர்.மேனன்



"கல்விமுறையில் பாரத மக்களுக்கு ஒரு ஆத்மா இருக்கிறது" என்று கூறியது. ஆங்கில மாதுவான, சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிதா ஆவார். பிரம்மஞான சபையின் புகழ்பெற்ற அன்னிபெஸன்ட்டும், காந்தியின் சிஷ்யையாக மாறிய மீராபஹனும் பாரதத்தின் கல்வி முறையைப் புகழ்ந்துள்ளனர். நல்லியல்பை உருவாக்க உதவாத கல்விமுறை பயனற்றது என்று மகான்கள் பல நூற்றாண்டுகளாக பாரத பூமியில் கூறி வருகின்றனர். சுவாமிவிவேகானந்தர், "நற்குணமும், பிறருக்கு உதவும் தாகமும், சிங்கத்தின் தைரியமும் அளிக்க வேண்டியதே கல்வி, அவ்வாறின்றி, மனிதனை வெறும் இயந்திரமாக மாற்றும், சுயநலத்தின் தந்திரங்களைக் கற்பிக்கும், குறுகிய புத்தியுள்ளவர்களாக ஆக்கும் கல்வியால் நாட்டிற்கு என்ன பயன்?" என்று கூறியுள்ளார்.

இங்கு தான் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வியின் முக்கியத்துவம் வருகிறது. விஷயங்களைக் கற்பிப்பதுடன் மற்றும் சில விஷயங்களையும் மிகவும் அன்பு, விழிப்புணர்வு, உறுதியான நம்பிக்கை மற்றும் சாதனையுடன் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மாணவர் மாணவிகளுக்குக் கற்பிக்க வேண்டும் இந்தப் பாடங்கள் எவை?

ஒன்று! இறைவன் மீது உறுதியான நம்பிக்கை வையுங்கள் உற்ற நண்பன் இறைவனே.

இரண்டு; அம்மா கூறுவது போல், பொறுப்புகளிலிருந்து தப்பி ஓடுவதல்ல பக்தி உண்மையான பக்தன் தனது கடமைகளை மனசாட்சியின் கட்டளையை அனுசரித்து நிறைவேற்றுபவனும், பலனை எதிர்பாராமல் கர்மம் செய்பவனுமாக இருப்பான், எளிமையான வாழ்க்கை வாழ்பவனும், பணிவு நிறைந்தவனும், பிறருக்கு உதவும் குணமுள்ளவனுமாக இருப்பான்.

மூன்று, பெற்றோரையும், குருவையும் அவ்வளவு ஏன், அனைத்து உயிரினங்களையும் மதிப்பவனும், சமர்ப்பண மனோ பாவத்துடன் வாழ்பவனும் எவனோ அவனே உத்தமன்.

நான்கு, எப்போதும் சிரத்தை உள்ளவனாக இருக்க வேண்டும். வகுப்பறையின் முன்னால் செருப்பைக் கழற்றி வைப்பதிலும், வகுப்பு முடிந்து போகும் போது மின்விசிறியின் ஸ்விட்சை நிறுத்துவதிலும், தெருவைக் கடந்து செல்லும் போதும், வகுப்பில் இருக்கும் போதும் கவனமாக இருப்பதிலும், உணவை வீணாக்காமல் இருப்பதிலும், மெல்ல பேசுவதிலும், தீயநட்புடன் சேராதிருப்பதிலும், புலன்களின் பிடியில் பட்டு மனமும், உடலும், புத்தியும் வீணாகாமல் கவனமாக இருப்பதிலும் எல்லாம் நாம் இந்த விழிப்புணர்வையே கொண்டு வருகிறோம். அளவற்ற சிரத்தை இதுவே.

அம்மாவின் நிறுவனங்களில் இளம் உள்ளங்கள் நேரான பாதையில் நடப்பதற்கான இந்த பால பாடங்கள் ஒரு இளம் காற்றாக, போராட்டமில்லாத மனங்களைத் தழுவிச் செல்கின்றன. அம்மா, ஆசிரியருக்கும் மாணவ மாணவிகளுக்கும் இடையில் ஒரு ஆத்மபந்தம் இருக்க வேண்டும் என்று சொல்கிறார். இன்று அது இல்லை, ஒவ்வொருவரும் அவரவரின் அகங்காரத்தில் பரஸ்பரம் நெருங்க முடியாத தூரத்தில் இருக்கிறார்கள். அன்பின் தெய்விகமான உறவு நிலை அங்கில்லை. ஆசிரியர்கள் மாணவர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பிடிவாதம் பிடிக்கிறார்கள். மாணவர்களோ அந்தக் கட்டுப் பாட்டில் அடங்கப் பிடிவாதமாக மறுக்கிறார்கள். அதன் பலனாக அன்பு மற்றும் பரஸ்பர மனோபாவத்தின் இயல்பான போக்குத் தடைப்படுகிறது. ஆசிரியரும் மாணவர்களும் எதிரெதிர் திசைகளில் நிற்கிறார்கள். அருகருகில் இருந்தபோதும் மனதளவில் வெகுதூரத்தில் இருக்கும் தீவுகளாக இருக்கிறார்கள். அடைபட்ட இதயம் மற்றொரு அடைப்பட்ட இதயத்துடன் பேச முயல்வதால் என்ன பயன் விளைய முடியும்? இவ்விதமான ஆசிரியமாணவ உறவால் ஒரு மனித வளர்ச்சியும் நடப்பதில்லை. மாறாக, மனதில் காயங்களே ஏற்படுகின்றன.

மாணவர்கள் பலவித போராட்டங்களுக்கு நடுவில் இருக்கிறார்கள். அவர்களுடைய மனங்களுக்கு அமைதி கிடைக்கவில்லை. இந்நிலை மாற வழி என்ன?

அம்மாவின் தெய்வீகமான அன்பிலிருந்து தோன்றிய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைகள் அங்கே ஆசிரியரும் பல பாடங்களைப் படிக்கிறார். அது ஒரு வழிப் பாதையல்ல; பாலமாகும். பல பிரச்சனைகளும், வேதனைகளும் அங்கு பங்கு வைக்கப்படுகின்றன. சிந்தனைகளை பிரார்த்தனைகளாக்கி பரஸ்பரம் பயணம் செய்யும் அன்புப் பாலம், பண்பாட்டை அறிவுறுத்தும் வகுப்புகள்வெறும் பிரசங்க மேடைகள் அல்ல விவாதங்கள், சிந்தனைகள், மெய்ப் பொருளை ஆழமாக விசாரித்தல், பிரார்த்தனை, தியானம், தனக்குள்ளே திரும்புதல் போன்றவையே அங்கு இடம்பெறும் இத்தகு வகுப்புகளின் மூலம் தொண்டு செய்யும் மனப்பான்மை வளர்கிறது. பிறர் கண்ணீரைக் காணும் மனம் ஏற்படுகிறது அம்மாவின் ஒவ்வொரு நிமிட வாழ்வும் வழிகாட்டி ஆகிறது. அம்மாவின் வாழ்வே அவர் வழங்கும் செய்தி என்ற அறிவு ஏற்படுகிறது. பணிவு வருகிறது. பரந்த புதிய தொடுவானம் கண் முன் தெரிகிறது.

இந்த வகுப்புக்களுக்கு சிறார்கள் வருகிறார்கள். மன இறுக்கமில்லாத இவர்கள் நன்றாக ஒத்துழைக்கிறார்கள், பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வி வகுப்புகளில் நடத்தப்படும் போதனைகளில் மிகுந்த விருப்பத்துடன் பங்கு கொள்கின்றனர். இந்த நவீன நாகரிகத்தின் கடுமையில், சுயநலமெனும் பாலைவனத்தில் அன்பெனும் ஒடைகள் பெருகுகின்றன. எம்.எஸ்ஸி. பி.காம். போன்ற பட்டப் படிப்பு படித்தவர்கள் எல்லாம் பலனை எதிர்பாராமல் கர்மம் செய்தல், உண்மையான பக்தி, தினசரி வாழ்வின் நடைமுறைகள், ஆன்மிகத்தின் அவசியம், நம்பிக்கையின் சக்தி போன்ற விஷயங்களை மிக அழகாகப் புரிந்து கொள்கின்றனர். வெறும் மனப்பாடம் மட்டும் செய்யாமல், நன்கு புரிந்துகொண்டு அவைகளைப் பற்றி எழுதுகின்றனர். தேவையானதை அறிவுறுத்த யாரும் இல்லாததால் மட்டும் பாதை தவறிப் போகும் இளம் தலைமுறைக்கு அம்மா நல்கும் அழிவற்ற கல்வியாக ஆத்மா உள்ள கல்விமுறை திகழ்கிறது.

அமிர்த விச்வ வித்யாபீடத்தின் கொச்சி வளாகத்தில் அம்மாவின் அருளால் மிகவும் அழகாக, அன்புடன், நட்புடன், பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்துடன் கல்விமுறைக்கு புதிய பரிமாணங்கள் வருகின்றன.

இன்றைய தலைமுறை மோசமானவர்கள் அல்ல, பலவிதமான மனப்

போராட்டங்களுக்கும், கருத்து வேறுபாட்டிற்கும், அன்பு இல்லாத நிலைக்கும் ஆட்பட்டு உழலும் நமது குழந்தைகளுக்கு அன்பெனும் அருமருந்தை நாம் அளிப்போம். அம்மா நமக்கு எப்போதும் அதையே அளிக்கிறார். அந்த தீபத்தைப் பகிர்ந்தளிக்கும் நல்ல மனம் நமக்கு இருக்கிறதா? "தல்லானல்ல, தலோடுவானல்லோ தந்நூ ஞானீ கைகள் (அடிப்பதற்கல்ல, அன்போடு தடவிக்கொடுப்பதற்காகவே நான் இந்தக் கைகளைத் தந்திருக்கிறேன்)" என்ற பழைய பாடல் வரிகளைக் கேட்டதில்லையா?

அம்மா, "பண்பாட்டுப் பயிற்சி முதலில் வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும்" என்று சொல்கிறார். பெற்ற தாயே முதல் குரு, தாய்மார்களின் கவனத்தைப் பெறாத குழந்தைகள் வழிதவறிச் செல்லக் கூடும். பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூகமும் மாணவ மாணவிகளின் தனித்தன்மை வளர்ச்சியில் உதவ வேண்டும்.

வெறும் அறிவை மட்டும் வளர்க்கும் கல்வி ஆபத்தை விளைவிக்கும். இதயம் வளர்ச்சியடைவதுதான் முக்கியம் தனது வாழ்க்கையை வாழிகாட்டியாக மாற்ற பெற்றோரும், ஆசிரியர்களும் முன்வந்தால், இன்றைய தலைமுறையை வழிதவறிச் செல்லாமல் நிச்சயமாகக் காப்பாற்ற முடியும், வெறும் பேச்சு மட்டும் போதாது. அதை செயலில் மூலம் வெளிப்படுத்தவும் வேண்டும். தினசரி வாழ்வில் சத்தியம் தர்மத்தைப் பின்பற்ற வேண்டும். தியாகம் வேண்டும். அன்பு வேண்டும். இவை அனைத்தையும் வயதில் பெரியவர்கள் பின்பற்றினால் அதுவே பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்விமுறையாகும்.

அம்மாவின் அருள் எப்போதும் உண்டு. நாம் அதைப் பயன்படுத்தி சத்தியத்தின் பாதையில் சென்றால் அதுதான் மிகச் சிறந்த இறை வழிபாடு.

• •

35.தணியாத தாகம்

பிர இராம்குமார்.

(I)

கண்ணபிரான், ஒருநாள் தனது பக்தைகளான கோபியரிடம், "எனது தலைமுடி, நகம், நான் உபயோகித்த மயில்பீலி போன்ற பல பொருட்களை என் நினைவாக நீங்கள் பாதுகாத்து வருகிறீர்கள் அல்லவா? அவற்றை இங்கே கொண்டு வாருங்கள்" என்றார். கோபியரும் தங்களிடம் இருந்த, பகவான் உபயோகித்த பொருட்களை எல்லாம் கொண்டு வந்தனர். கிருஷ்ணர், "இவற்றை மூட்டைகட்டி யமுனையில் எறிந்து விடுங்கள்" என்றார். "என்ன சொன்னாய்! இவை உனது ஸ்பரிசம் பெற்றவை. எங்கள் உயிரினும் மேலானவை" என்று ஒரே குரலில் கோபியர் கூறினர். அதற்கு பகவான், "ஓ! அப்படியானால், உங்கள் ஒவ்வொருவரையும், நான் எத்தனை முறை தொட்டிருப்பேன்! எவ்வளவு நேரம் உரையாடியிருப்பேன்! அத்தகு பாக்கியம் பொருளற்றதா? அப்படியிருக்க, நீங்கள் பரஸ்பரம் அன்பு செலுத்த முடியாதது ஏன்? எனது இணக்கத்தை அனுபவித்த மனிதர்கள் மீது அன்பு செலுத்த இயலாத உங்களுக்கு இந்த உயிரற்ற பொருட்கள் எதற்கு?" என்றார். தங்கள் தவறை உணர்ந்த கோபியர்கள் அன்றோடு போட்டி பொறாமையை அடியோடு துறந்து விட்டனர்.

பகவான் உபயோகித்த பட்டாடை மற்றும் மயில்பீலியை மிகவும் புனிதமானதாகக் கருதிப் பாதுகாத்த கோபியர்கள், பகவானின் இணக்கத்தைப் பெற்ற தாங்கள் ஒவ்வொருவரும் புண்ணியசாலிகளோ! என்பதை மறந்ததால் தான் அவர்களுக்கிடையே பொறாமையும் வெறுப்பும் நிலைவியது. அம்மாவின் அன்புக் குழந்தைகளாகிய நாம், அனைவரையும். குறைந்தபட்சம் அம்மாவின் தரிசனம் பெற்றவர்களையாவது புனிதமானவர்கள் என்று கருதி நேசிக்கத் தொடங்கலாமே! ஆசிரமத்தின் பல்வேறு கிளைகளைச் சேர்ந்த பக்தர்கள் பலருக்கு இடையில் போட்டியும் பொறாமையும் ஒற்றுமையின்மையும் நிலவுவதாக சொல்லக் கேட்டிருக்கிறேன். அம்மாவின் அன்புக் குழந்தைகளாகிய நாம், ஒருவரை ஒருவர் நேசிப்பவராக இருக்க வேண்டாமா? அம்மா உபயோகித்த பொருட்களை புனிதமானவையாகக் கருதி நாம் நமது பூஜை அறையில் பத்திரமாக பாதுகாத்து வருவதுண்டு. ஆனால், அம்மாவின் தரிசனம் பெற்ற, அவரது அரவணைப்பையும், பிரசாதத்தையும்

பெற்ற பக்தர்களை நாம் புனிதமானவர்களாகக் கருதுவது கிடையாது.

எல்லோரையும் நேசிப்பது என்பது சொல்வதற்கு மிகவும் எளிதாக இருக்கும். ஆனால், இதை நடைமுறைப்படுத்துவதில் தான் எத்தனை எத்தனை இன்னல்கள்! நம்மீது பொறாமை கொள்பவர்களையும், நம்மை வெறுப்பவர்களையும் எப்படி நேசிப்பது? நம்மை எதிரியாகக் கருதாதவர்கள் மீது அன்பு செலுத்துவதே கடினமான செயல்! அந்த அளவுக்கு நமது அன்பு மிகவும் குறுகியதாகும்.

மதுரை மருந்துவக்கல்லூரியில் முதல் நாள் மாலை தொடங்கிய அம்மாவின் தரிசனம், மறுநாள் காலை சுமார் 9.00 மணியளவில் முடிந்தது. அன்று மாலை, தியானிப்பதற்கு அம்மா வருவார் என்ற எதிர்பார்ப்பில் ஆசிரமத்து மொட்டை மாடியில் ஆசிரமவாசிகள் காத்திருந்தனர். நான் பிரம்மஸ்தான ஆலய வளாகத்தின் அருகே, சில பிரம்மசாரிகளோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு சகோதரர், எனது சட்டைப்பையில் வைத்திருந்த நீல நிறப் பேனாவை சட்டென எடுத்துவிட்டார். எனக்கு திக் கென்றது. அம்மா அந்தப் பேனாவை சுமார் பத்து பதினைந்து முறையாவது உபயோகித்திருப்பார். அதனால் அந்தப் பேனாவை எப்போதும் எனது சட்டைப்பையில் வைத்திருப்பேன்.. அது, அம்மா எப்போதும் என் கூடவே இருப்பது போன்ற உணர்வை எனக்குத் தந்தது. இந்நிலையில், அந்தப் பேனாவை சகோதரன் திடீரென எடுத்த போது மனது துடித்தது.

ஆன்மிக வளர்ச்சியின் அடையாளமான பரந்த மனது எனக்கு இருந்திருந்தால், "நம்மிடம் தான் அம்மா உபயோகித்த பல பேனாக்கள் இருக்கின்றனவே, இதை இவன் எடுத்துக் கொள்ளட்டுமே" என்று நினைத்திருப்பேன். ஆனால், ஆன்மிக வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இருந்ததால் தானோ என்னவோ சிறிதும் சிந்திக்காமல், "பத்திரம்! அம்மா பலமுறை உபயோகித்த பேனா அது" என்று சொல்லிவிட்டேன். இதைக் கேட்டதும் எப்போதும் கலகலப்பாக, சிரித்த முகத்துடன் பேசிப்பழகும் அந்த இளைய சகோதரனின் முகபாவம் மாறியது.

"என்ன பெருசா அலட்டிக்கிறீங்க! என்னையும் தான் அம்மா எத்தனையோ தடவை தொட்டிருக்காங்க. எத்தனையோ தடவை மடியில் கிடத்தி இருக்காங்க. எத்தனையோ தினங்கள், பலமணி நேரம் அம்மாவின்

அருகில் அமர்ந்திருக்கேன். இந்தப் பேனாவைக் காட்டிலும் அதிக நேரம் அம்மாவோட கூட நான் இருந்திருக்கேன். ஒங்களோட பேனாவை விட நான் விலைமதிப்புள்ளவன்" என்றான். எதிர்பாராமல் ஒரு மின்னல் தாக்கியது போலிருந்தது. என் முகத்தில் ஈயாடவில்லை. என் நிலையைப் புரிந்துகொண்ட அந்த சகோதரன், "சும்மா தமாஷ் பண்ணினேன். என்ன இப்படி சீரியஸாயிட்டீங்க?" என்று சொல்லியவாறு பேனாவை என் சட்டையில் சொருகினான்.

எப்போதும், சிரிக்கச் சிரிக்கப் பேசும் அவன் சொன்னவை தான் எவ்வளவு கருத்தாழம் நிறைந்த வார்த்தைகள்? அவனது வார்த்தைகள், எனது ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் நடைமுறைப் பயிற்சியை சில ஆண்டுகளுக்கு முன் அம்மா எனக்கு உபதேசித்ததை நினைவூட்டியது. அன்று அம்மா அளித்த உபதேசத்தை, இன்று இச்சகோதரன் மீண்டும் எனக்கு நினைவூட்டியதாகத் தோன்றியது.

ஆம், அம்மாவைக் கண்டது முதல், என்னைக் காணும் போதே அம்மாவின் முகம் மகிழ்ச்சியால் மலர வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. நாளாக, நாளாக அந்த விருப்பம் வலுப்பட்டு வந்தது. ஒருநாள் அம்மாவிடமே, "என்னைக் கண்டாலே அம்மாவின் மனம் குளிர வேண்டும். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டுவிட்டேன். அப்போது மிக முக்கியமான உபதேசத்தை அம்மா நல்கினார். "நீ எந்த அளவு பிறர் மீது அன்பு செலுத்துகிறாயோ, அந்த அளவு அம்மாவின் மனம் குளிரும்" என்றார். "அம்மா! இந்த உபதேசத்தை எப்படி பின்பற்றுவது என்பதையும் எனக்கு சொல்லித் தரவேண்டும்" என்றேன். "முதலில் உனது சகோதரர்கள் மீது அன்பு செலுத்து. வெளிமாநிலங்களிலிருந்து ஆசிரமத்தில் புதிதாக சேரும் பிரம்மசாரிகளுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய். மலையாளம் தெரியாத அவர்களுடன் சில மாதங்கள் நீ அன்பாகப் பழகினால், அது அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும். ஆசிரமத்திற்கு வரும் பக்தர்களுடன் இன்முகத்தோடு பேசு" என்றார் அம்மா.

உபதேசத்தோடு நிறுத்திவிடாமல், அதை நான் கடைப்பிடிப்பதற்கும் அம்மாவே வழி வகுத்தார். ஒரு தியான நாள். வழக்கம் போல் அம்மாவின் அருகில் அமர்ந்திருந்தேன். தியானம் முடிந்து அம்மாவின் தரிசனம்

தொடங்கியது. தமிழ்நாட்டிலிருந்து ஒரு இளைஞர், ஆசிரமவாசியாவதற்கு அம்மாவின் அனுமதியை வேண்டினார். அதற்கு சம்மதமளித்த அம்மா என்னை சுட்டிக்காட்டி "இவனும் தமிழ் தான் இவனிடம் பேசு" என்று சொன்னார். சில நாட்கள் சென்றதும், "உன்னிடம் ஒப்படைத்த மகன் எப்படி இருக்கிறான்?" என்று என்னிடம் கேட்டார். எனது ஆசிரம வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை அம்மா இதோ தொடக்கி வைத்துவிட்டார். புதிதாக எந்த பிரம்மசாரி வந்து சேர்ந்தாலும் அம்மா உடனே என்னைக் கூப்பிடுவார். அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைப்பார். பிறகு அவரைப் பற்றி என்னிடம் விசாரிப்பார். மெல்ல மெல்ல அம்மா சொன்னபடி புதிதாக வந்து பிரம்மசாரிகளிடம் பேசிப் பழகலானேன். அம்மாவின் உபதேசத்தைப் பின்பற்றுகிறோம் என்ற மனநிறைவு எனக்குக் கிடைத்ததோடு, புதியவர்களுக்கு உதவி, அவர்களோடு கலந்துரையாடுவதால் அவர்களுக்கு ஏற்படும் சந்தோஷத்தையும் உணர முடிந்தது.

கல்லூரியில் எல்லோருடனும் சரளமாகப் பேசிப்பழகும் இயல்புடைய நான், ஆசிரமத்தில் சேர்ந்த பின், யாருடனும் அதிகம் பேசாமல், நான் உண்டு, என் வேலை உண்டு என்று இருந்தேன். இப்போது அம்மா மீண்டும் என்னை எல்லோருடனும் சரளமாகப் பழகச் செய்துவிட்டார். இரண்டு மூன்றாண்டுகளுக்குள், அம்மா மற்றொரு பொறுப்பைத் தந்தார். இதனால் யாருடனும் பேசவோ, அவர்களின் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளவோ இயலாமல் போனது. இந்த நிலையில் தான், அம்மா தனது உபதேசத்தை, மதுரையில், பிரம்மச்சாரியின் வாயிலாக மீண்டும் எனக்கு நினைவுபடுத்தினார்.

"ஒரு கள்வன், கொலைகாரனால் கூட அம்மாவின் மீது எளிதில் அன்பு செலுத்த முடியும். ஆனால், அம்மா நாம் காணும் ஐந்தடி உடலிற்குள் அடங்குபவர் அல்ல. அம்மா, எங்கும், எதிலும் சைதன்ய வடிவில் குடிகொள்கிறார், என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எல்லோர் மீதும் அன்பு செலுத்துவது என்பது அம்மாவின் மனதைக் குளிரச் செய்யும் சிறந்த வழியாகும். எல்லோர் மீதும் அன்பு செலுத்துவது என்ற இலக்கை அடைவதற்கு, முதலில் நாம் நம்மைச் சுற்றியுள்ளவர்களை நேசிக்கத் தொடங்க வேண்டும். நம்மை நாடி வருபவர்களை நேசிக்க வேண்டும். இதனால் நமது தன்னலம் குறைவதை நாம் உணரலாம். நம்மோடு பேசவும், நம்மோடு தொடர்பு கொள்ளவும் அனைவரும் விரும்புவர். இது ஆன்மிக வளர்ச்சியின்

முக்கிய அடையாளமாகும். நாம் பிறரிடம் அன்பு செலுத்தும் அளவு நமது தன்னலம் குறைகிறது. நமது தன்னலம் குறைவதற்கேற்ப நாம் அம்மாவின் அன்புக் குழந்தையாக மாறுகிறோம்" என்று கூறலாம்.

(II)

அன்று பகல் உணவு அருந்த பகல் மூன்றரை மணியாகிவிட்டது. நானும் சில பிரம்மசாரிகளும் உணவருந்திக் கொண்டிருந்தோம். ஒரு சிறுமி என்னருகில் வந்து, "சேட்டன் விஸ்வாசியானோ?" (அண்ணா நீங்கள் இறைநம்பிக்கை உள்ளவரா?) என்று வினவினாள். அவளை அருகே அழைத்து, "அதே மோளே! எந்தானு காரியம்?" (ஆமாம் மகளே! ஏன் இப்படிக் கேட்கிறாய்?) என்று நான் வினவ, சற்றே தயங்கியவளாய், ஒன்றுமில்லை எனச் சொல்லிவிட்டு அங்கிருந்து செல்ல முயன்றாள். அவளிடம் மெல்ல பேச்சுக் கொடுத்தேன்.

உன் பெயரென்ன? எங்கிருந்து வந்தாய்? என்ன படிக்கிறாய்? போன்ற சில கேள்விகள் கேட்க, அவள் திருச்சூரில் ஐந்தாம் வகுப்பு படிக்கிறாள் என்று புரிந்தது. அம்மாவைப் பார்த்திருக்கிறாயா? என்று யான் வினவ, ஓ! பலமுறை, அம்மாவை எனக்கு ரொம்ப பிடிக்கும் அவளுக்கே உரிய கபடமின்மையுடன் கூறினாள். "சரி எனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறதா? என்று ஏன் கேட்டாய்?" என்று அவளிடம் கேட்டேன்.

"என்னிடம் உள்ள புனித நீரை உங்களுக்கு அளிப்பதா வேண்டாமா என்று தீர்மானிப்பதற்காகத் தான் அப்படிக் கேட்டேன்" என்றாள் சிறுமி. அவள் தன்னிடமுள்ள ஒரு மினரல் வாட்டர் குப்பியை என்னிடம் காண்பித்தாள். அதற்குள் அம்மாவின் தலைமுடியைப் போட்டு வைத்திருக்கிறாள். தினமும் அக்குப்பியில் நீர் நிறைப்பாளாம். அன்று அவள் காணும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கெல்லாம் அந்நீரைக் கொடுப்பாளாம். இதை ஒரு சாதனையாகவே கருதி அவள் செய்துவருகிறாள். அம்மாவின் தலைமுடி உனக்கு எப்படி கிடைத்தது? என்று அவளிடம் கேட்டேன். அதற்கு அவள், "ஒருநாள் அம்மாவின் அருகில் அமர்ந்திருந்தேன். அப்போது, ஒரு பக்தர் அம்மாவிற்கு மாலை அணிவித்தார். சற்று நேரத்திற்குப் பின், அம்மா அம்மாலையை என்னிடம் தந்தார். அம்மாலையில், அம்மாவின் தலைமுடி

இருக்கிறது. ரொம்ப நாளாகவே அம்மாவின் தலைமுடி கிடைக்க வேண்டும் என்று நான் பிரார்த்தித்து வந்தேன். அதன் பலனாக அம்மாவே அன்று என் கையில் தந்தார்'' என்றாள் கண்கள் படபடக்க.

''அம்மாவின் தலைமுடி புனிதமானது என்று உனக்கு யார் சொல்லித் தந்தார்கள்?'' என்று நான் கேட்டேன். அதற்கு அவள் ''பகவான் கிருஷ்ணரின் தலைமுடி எவ்வளவு புனிதமானது என்று ஒரு பாகவத உபன்யாசத்தின் போது கேட்டேன். பகவானின் தலைமுடி நமது தலைமுடி போல, வெறும் ஜடமல்ல, அது மிகவும் புனிதமானது, மூவுலகையும் காத்துவரும் பகவானின் உடலிலுள்ள ஒவ்வொரு உரோமமும் ஒவ்வொரு மகரிஷியைக் குறிக்குமாம். பகவானின் ஒரு தலைமுடியாவது தனக்கு வேண்டும் என்று கோபியர் அழுது பிரார்த்திப்பார்களாம். அம்மா இறை அவதாரம் அல்லவா? அப்போது அம்மாவின் தலைமுடியும் பவித்ரமானது தானே!'' என்றாள் அவள். அவளின் பக்தியைக் கண்டு பொறாமைப்படாமலிருக்க முடியவில்லை. ''இவ்வளவு புனிதமான தலைமுடியை உனது பூஜை அறையில் வைக்காமல், இப்படி ஏன் கையில் பிடித்து நடக்கிறாய்?'' என நான் கேட்க, ''பூஜை அறையில் வைத்தால் அதன் பலன் எனக்கு மட்டும்தான் கிடைக்கும். இந்த விலைமதிப்பற்ற சொத்து எல்லோருக்கும் பயன்படட்டும் எனக்கருதி இப்படிச் செய்கிறேன்'' என்றாள்.

வயதில் சிறுமியாக இருந்தாலும் செயலால், உள்ளத்தால் எத்தனையோ உயர்ந்து நிற்கும் அவளை மனதால் வணங்கினேன்.

அம்மாவின் பக்தர்களான நாம் நம் வாழ்வில் ஓரளவு தியாகம் பழகி வருகிறோம் என்பது உண்மையே. ஆனால், அம்மாவின் அருகாமையைப் பெறும் விஷயத்தில் அல்லது இறை தரிசனத்தின் போது நம்மால் மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கக் கூட முடிவதில்லை. ஆலயத்தில், நெருக்கும் பக்தர் கூட்டத்திற்கிடையே போட்டிபோட்டு, முன் சென்று மனங்குளிர தீபாராதனையைக் கண்டு வணங்கும் போது, பகவானின் எழில் உருவை ஒரு முறை காண தலையை உயர்த்தி எட்டிப் பார்க்க முயலும் மற்றவர்களைப் பற்றி நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. நாம் தரிசித்ததும் பிறருக்கு வழி கொடுக்க மறந்துவிடுகிறோம். நம்மில் சிலர், தலைக்கு மேல் கைகூப்பி வணங்கும் பழக்கம் உள்ளவர்கள். தலைக்கு மேல் நாம்

கையைத் தூக்கினால் நமக்கு பின்னால் நிற்பவர்கள் தரிசனம் செய்யத் தடையாக இருக்கக் கூடும் என்பதையும் நாம் எண்ணிப் பார்ப்பதில்லை.

இத்தகு பக்தியால் நமது மனம் குளிரலாம். ஆனால் பகவானின் மனது இப்படிப்பட்ட பக்தியால் மகிழுமா என்பது ஐயமே!.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பரந்த மனம் பரந்தாமனுக்கு மிகவும் உகந்ததாகும். எப்படிப்பட்ட பக்தர்களை தனக்கு மிகவும் பிடிக்கும் என்று பெரியதொரு பட்டியலை பார்த்தனுக்குப் பரந்தாமன் பகவத்கீதையில் தருகிறார். அப்பட்டியலைப் பார்க்கும் போது நமக்கு இவ்வுண்மை விளங்கும்.

அம்மாவின் அருகில் அமரும் வாய்ப்பு கிடைக்கும் போதும், அம்மாவை நன்றாகக் காணக் கூடிய இடத்தில் நிற்கும் வாய்ப்பு கிடைக்கும் போதும் நாம் யாரைப் பற்றியுமே சிந்திப்பதில்லை. முதியவர்களோ, உடல் ஊனமுற்றவர்களோ நம் அருகிலிருந்தால் கூட நாம் கடமையே கண்ணாக இருப்போம். அவர்களுக்கு வழி கொடுக்க நாம் முயலுவதில்லை. ஆசிரமத்தில், தியான தினங்களில் எத்தனையோ முறை அம்மா இதை எங்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

அம்மாவைக் காண வரும் பக்தர்களில் எத்தனையோ பேர் கடல் கடந்து, ஆயிரக்கணக்கான டாலர்களை செலவு செய்து வருபவர்கள் இருப்பர். ஒரு நேர உணவைத் துறந்து, அதில் மிச்சமாகும் பணத்தில் வரும் ஏழைகள் இருப்பர். வெளிநாடுகளில் வேலை செய்பவர்களில் ஆறு மாதத்திற்கு ஒருமுறை தாயகம் வரக் கிடைக்கும் விடுமுறையை அம்மாவோடு செலவிட எண்ணி வருபவர்கள் இருப்பர். இப்படி பலவிதத்தில் தியாகங்களை செய்து இங்கு வருபவர்களுக்கு அம்மாவின் அருகில் அமர வேண்டும், அம்மாவை மனங்குளிரக் காண வேண்டும் என்று எவ்வளவு ஆசையாக இருக்கும்! அவர்களுக்கு வழிகொடுக்காமல் ஆசிரம மக்கள் "பிரம்மஸ்தானப் பிரதிஷ்டை" போல் ஆடாமல் அசையாமல் இப்படி அம்மாவைச் சுற்றியே நிற்கிறீர்களே! என்று அம்மா சுட்டிகாட்டுவார். அம்மா இன்முகத்தோடு சொல்வதை நாங்கள் கேட்க மறுத்து அடம்பிடிக்கும் போது, அம்மா சற்று கடிந்து கொள்வார்.

அம்மா கடிந்து கொள்ளும் போது கூட நம் குழந்தைகள் சுயநலவாதிகளாக இருந்தால் ஆன்மிகமாக வளர முடியாமல் போய் விடுமே என்ற கவலையும் கருணையும் அவர் மனதில் நிறைந்து தளும்புவதைக் கண்கூடாகக் காண முடியும்.

அம்மாவின் அருகாமை மிகவும் இனிமையானது. நம் மனதிற்கு ஆனந்தத்தைத் தரக்கூடியது. இரும்பு துகள்களை காந்தம் இழுப்பது போல் அம்மா தனது தாயன்பால் நம்மை ஒரேயடியாக இழுத்துவிடுகிறார். பிறருக்கும் அம்மாவின் அருகில் இருக்க நீ வாய்ப்பு கொடுக்காதது தவறல்லவா? என்று கேட்டால், வேண்டுமென்று நான் இப்படி செய்வதில்லை என்பதே அனைவரின் பதிலாக இருப்பதைக் காணலாம். இவ்வாதத்தில் உண்மை இல்லாமல் இல்லை. அம்மாவைக் கண்குளிரக் கண்டு மகிழும் போது வேறு ஒருவருக்கு இடம் கொடுப்பது என்பது மிகவும் கடினமான செயல் என்று எனக்குத் தோன்றுவதுண்டு. ஆனால், அம்மாவின் பேரன்பின் ஒரு சிறு அம்சமாவது நம்மிடம் இருந்தால் இது அத்தனை கடினமான செயலாக நமக்குத் தோன்றாது.

அம்மா சொல்லும் ஒரு கதை நினைவிற்கு வருகிறது. பகவான் கிருஷ்ணர் ஒரு பாலகோபாலனைப் போல், வேஷம் தரித்து, நெற்றியில் விபூதி அணிந்து கோபியர்களின் வீடுகளுக்கெல்லாம் சென்று, "கோபியரே! விரைந்து செல்லுங்கள். பகவான் உங்களுக்காக காத்திருக்கிறார். முதலில் யார் அங்கு செல்கிறார்களோ அவர்களோடு பகவான் நடனமாடப் போகிறார்" என்று சொன்னானாம். அவன் சொன்னதைக் கேட்ட ஒவ்வொரு கோபிகையும் பகவானோடு நடனமாடும் பேராவலோடு, தான் செய்த வேலையை அப்படியே விட்டுவிட்டு விரைந்தோடத் தொடங்கினராம். உரலில் நெல்குத்திக் கொண்டிருந்தவள் உலக்கையோடும், ஒரு கண்ணுக்கு மைதீட்டிக் கொண்டிருந்தவள் மையைக் கையில் பிடித்தவாறும், முற்றம் பெருக்கிக் கொண்டிருந்தவள் துடைப்பத்தைக் கையில் பிடித்தபடியும், கணவனுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தவள் கரண்டியோடும் ஓடினராம். இப்படி ஒவ்வொரு கோபிகையும், தன்னை மறந்து ஓடிச் சென்றாளாம், ராதாவின் வீட்டிற்கு சென்று அவன் விவரம் அறிவித்த போது, ராதா, கோபாலனிடம், "நீ ஓடிவந்த காரணத்தால் மிகிவும் களைத்திருக்கிறாய். உள்ளே வா,

ஒரு குவளை பால் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றாள். அவன் உள்ளே சென்ற போது நொண்டி நடப்பதைக் கண்ட ராதா, அதன் காரணத்தைக் கேட்டாள். அதற்கு அவன் காலில் முள் குத்திவிட்டதாகக் கூறினான். உடனே ராதா, "நீ உட்கார். உனது காலிலுள்ள முள்ளை எடுத்துவிடுகிறேன்" என்றாள். அதற்கு அவன், "அக்கா, கண்ணன் முதலில் வருபவருடன் தான் நடனமாடுவான் நீ விரைந்து செல்லாவிடின் உனக்கு அந்த வாய்ப்பு கிடைக்காது" என்றான். "முள் தைத்த வலியால் நீ துடிக்கும் போது, உன்னை விட்டுவிட்டு நான் சென்றால், பகவானோடு நடனமாடும் போது எனது நெஞ்சில் முள் குத்தும்" என்ற ராதா சிறுவனின் காலில் உள்ள முள்ளை எடுக்கத் தொடங்கினாள். அப்போது இடுப்பில் மறைத்து வைத்திருந்த புல்லாங்குழலை எடுத்து கண்ணன் வாசித்தான். ராதாவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. இக்கதையைச் சொன்ன அம்மா, "பகவான் யாருடன் நடனமாடினார்? உண்மையில் ராதாவுடன் தான் நடனமாடினார். பிறர் பாதையிலிருந்து முள்ளை அகற்றுபவன் தனது பாதையில் மலர் தூவுகிறான்" என்றார்.

அண்மையில், ஆசிரமக் கிளை ஒன்றிலிருந்து ஒரு சகோதரர் அமிர்தபுரிக்கு வந்தார். அம்மா பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்த போது, அவரது அருகில் அமர்ந்து அவருடன் பேசும் வாய்ப்புக் சகோதரருக்கு கிடைத்தது. அம்மாவும் அவருடன் பேசிக் கொண்டிருந்தார். திடீரென பிரம்மசாரி எழுவதைக் கண்ட அம்மா, "ஏன் எழுந்துவிட்டாய்?" என்று வினவினார். வேறு ஒரு பிரம்மசாரியின் பெயரைச் சொன்ன அவர், அம்மா, அவர் இங்கே அமரட்டும், அவர் மிகவும் மன வருத்தத்தோடு இருக்கிறார். அம்மா அவருடன் சற்று நேரம் பேசினால் அவரது மனது அமைதியடையும், அவருக்கு அம்மாவின் அருகில் அமரும் வாய்ப்பைக் கொடுக்க எண்ணி எழுந்தேன் என்றார். இதைக் கேட்டதும் அம்மாவின் முகத்தில் மந்திரப் புன்னகை மலர்ந்தது. "நான் கேட்டது உண்மையா?" என்று கேட்ட அம்மா "என் மனது நிறைந்து விட்டது" என்றார். நான் திகைத்துப் போனேன். இப்பிரம்மசாரியின் செயல் அம்மாவிற்கு மகிழ்ச்சி அளித்திருக்கிறது என்பதை மேலும் விளக்கும் விதமாக அம்மா ஒரு லட்டுப் பிரசாதத்தை அவருக்கு அளித்தார். இந்நிகழ்ச்சி என்மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

அம்மாவின் மனங்குளிரும் வண்ணம் அச்சகோதரர் நடந்து கொண்டார்.

அம்மாவின் மனங்குளிர்ந்தால், இவ்வுலகிலுள்ள சகல உயிரினங்களின் உள்ளங்களும் குளிர்ந்ததற்கு சமம். இதற்கு மேலான புண்ணியத்தை நம்மால் ஈட்ட முடியுமா என்ன?

அம்மா பூர்ண பிரம்ம ஸ்வரூபிணி, அம்மாவின் மனங்குளிர்ந்தது என்று சொல்வது சரியல்ல என்று சிலர் வாதிடக் கூடும். அம்மா பரமாத்மாவோடு ஒன்றானவர் என்பது மெய்யே என்றாலும், நாம் நம்மை உடலாகவும், உள்ளமாகவும் கருதும் காலம் வரை அம்மாவை நமது பெற்ற தாயாகக் காண்பதே நமக்கு எளிதாக இருக்கும். எனவே, தாயின் மனதைக் குளிர்விக்க முயற்சிக்கும் சேயைப் போல நம் அம்மாவின் மனங்குளிரும் விதத்தில் நாம் நடக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறேதுமில்லை. இப்படி நாம் முயல்வதால், ஆன்மீக வளர்ச்சி ஏற்படும். நமது மனமாசுகள் குறையும்.

பராசக்தியிடம் பிராத்தித்த பாரதியாரைப் போல் அம்மாவிடம் பிரார்த்திப்போம் வாருங்கள் -

என்று தணியும் இந்த சுதந்திர (ஆத்மானுபூதி) தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் (ஐம்புலன்களின்) மோகம்?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?



36.நன்மை நிறைந்த மனம்

திரு.அமிர்தாபன்

அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் நடந்து கொண்டிருந்தது காயமடைந்த போர் வீரர்களுக்கு ஆறுதல் கூறவும் உற்சாக மளிக்கவும் அந்நாட்டு அதிபர் ஆபிரகாம் லிங்கன் மருத்துவமனை களுக்குச் சென்று கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த ஒரு வாலிபப் போர் வீரனைக் கண்டார்.



தளர்ந்து கிடக்கும் போர்வீரனின் படுக்கைக்கு அருகில் லிங்கன் சென்று அமர்ந்தார். யாரோ ஒருவர் தன் அருகில் வந்து அமர்வதை அவன் புரிந்துகொண்டான் ஆனால். மிகவும் மோசமான நிலையில் இருந்த காரணத்தால் அவன் ஒன்றும் பேசவில்லை.

"உங்களுக்கு நான் செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா?" என்று அன்பு நிறைந்த குரலில் லிங்கன் கேட்டார்.

"என் அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும்" என மிகவும் பலவீனமான குரலில் அவன் பதிலளித்தான். தன் அருகில் அமர்ந்திருப்பது அதிபர் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

லிங்கன் அவன் கூறியதை எழுதத் தயாரானார். "என் அன்புள்ள அம்மாவுக்கு," அவன் சொல்லச் சொல்ல லிங்கன் எழுதினார்.

"தாய் நாட்டைக் காக்கும் எனது முயற்சியில் மோசமான நிலையில் காயமடைந்துள்ளேன். நான் இனி பிழைப்பேன் என்று தோன்றவில்லை. என்னைக் குறித்து வருந்த வேண்டாம் அம்மா, அப்பா, மேரி, ஜானி அனைவருக்கும் இறைவன் அருள் புரியட்டும்."

அந்தப் போர்வீரனுக்குச் சோர்வால் அதிகமாகப் பேச முடியவில்லை. கடிதத்திற்கு அடியில் கையொப்பம் இடவும் முடியாத நிலையில் அவன் இருந்தான். அதனால் லிங்கனே கையொப்பமிட்டார். உங்கள் மகனுக்காக "ஆபிரஹாம் லிங்கன்" என்று தனது பெயரையும் எழுதினார்.

போர்வீரன் கடிதத்தைக் காண வேண்டும் என்று கேட்டபோது லிங்கன் அதை அவன் கையில் கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்த போது ஆச்சரியத்தில் அவன் கண்கள் விரிந்தன. தனக்காகக் கடிதம் எழுதியவர் ஆப்ரஹாம் லிங்கனா?

"நீங்கள் உண்மையில் எங்கள் அதிபர் லிங்கன்தானா?" அவன் வியப்பு நிறைந்த குரலில் கேட்டான்.

"ஆம் இனியும் நான் உங்களுக்காகச் செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா?"

"நீங்கள் என் கரத்தைப் பிடித்துக் கொள்வீர்களா? இந்தக் கடைசி நேரத்தில் எனக்கு அது மிகவும் ஆறுதல் அளிப்பதாக இருக்கும்" மிகவும் பலவீனமான குரலில் அவன் வேண்டினான்.

இரக்க குணம் கொண்ட லிங்கன் அவன் சொன்னதுபோல் செய்தார். இறந்து கொண்டிருந்த அவனது கையைத் தனது கரங்களில் பிடித்தவாறு அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியவாறு அங்கே அமர்ந்திருந்தார். வெகுநேரத்திற்குப்பின் அவன் கண்களை மூடினான். அதுவரை லிங்கன் அவன் கரங்களைப் பிடித்தபடியே இருந்தார்.

நமக்குப் பெரும்பாலும் அசாத்தியமான வீரச் செயல்களோ; பெருமளவில் தானமோ செய்ய முடியாமல் போகலாம்; ஆனால், எப்போதும் எளிதில் செய்யத் தகுந்த நூற்றுக்கணக்கான 'நற்செயல்கள்' உள்ளன. மிகச்சிறியதாகத் தோன்றும். பெரிய காரியங்கள். இத்தகு சிறிய நற்செயல்கள் செய்வதற்கான வாய்ப்பு நமக்கு எப்போதும் கிடைக்கிறது. அவற்றை உபயோகப்படுத்தினால் நமக்குப் பற்பல நற்செயல்களைச் செய்ய முடியும். அவை எல்லாம் சேரும்போது நம்மால் வாழ்வின் பயனை அடைய முடியும்.

அதேசமயம் இத்தகு சிறிய நற்செயல்களைச் செய்யும் வாய்ப்புகளை வீணாக்கினாலோ? நமக்கு ஒருநாளும் வாழ்வின் பயனை அடைய முடியாது. சில்லறைச் செலவுகளை பொருட்படுத்தாதவர்கள். எப்போதும் சிறிய தொகையாக நஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் செல்வந்தராக முடியாது என்பார். அதுபோலவே சிறிய நற்செயல்களில் அலட்சியமாக இருப்பவர்கள் ஒருநாளும் பெரிய நற்செயல்களைச் செய்வது இயலாது மகான்களின் வரலாறுகளை ஆராய்ந்தால் இவ்விஷயம் தெளிவாகும். மேலே கூறப்பட்ட ஆப்பிரஹாம் லிங்கனின் கதை அவரது வாழ்வில் இது போன்ற பல சம்பவங்களில் ஒன்று மட்டுமே. "ஒரு மனிதனுக்கு அவனது ஹுக்காவை நிறைத்துக் கொடுப்பது கூட ஒருலட்சம் இறைநாம ஜபத்தைவிடச் சிறந்தது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளும் காலம் வரும்" என்று சுவாமி விவேகானந்தர் கூறும் போது. சிறிய சிறிய பரோபகாரச் செயல்களின் மகிமையை அறுதியிட்டுக் கூறுகிறார், அவ்வளவுதான்.

நம்மால் செய்யக் கூடிய எத்தனையோ சிறிய நற்செயல்கள் உள்ளன. சொந்த வீட்டையும், சுற்றுப் புறத்தையும் துப்புரவு செய்வது போல் பிறருக்காகவும் நாம் துப்புரவு செய்யலாம். நமக்கு எழுதவும் படிக்கவும் தெரியுமெனில் அவற்றைப் பிறருக்குக் கற்பிக்கலாம். நமக்கு ஏதாவது கைத்தொழில் தெரியுமெனில் அதைப் பிறருக்காக நல்லவிதத்தில் உபயோகப்படுத்தலாம். நமக்கு மருத்துவம், பொறியியல், நிர்வாகயியல், விவசாயம், பேச்சுக் கலை, எழுத்துக்கலை போன்றவற்றில் திறமை இருந்தால் அவற்றை உபயோகித்துப் பரோபகாரச் செயல்களில் ஈடுபடலாம். இவற்றைப் பெரிய அளவில் தொடங்கலாம் என்று சிந்திக்காமல் ஒருவருக்காவது, ஒரு சிறிய எல்லைக்குள்ளாவது செய்ய முன்வந்தால் போதுமானது. அவ்வளவு ஏன், அன்பான ஒரு வார்த்தை, ஒரு புன்னகை, அன்பு நிறைந்த செயல் இவை போதுமானது. அவை பெரிய பலனை அளிக்கும்.

சிறிய நற்செயல்களிலிருந்து தான் மிக உயர்ந்த செயல்கள் தோன்றுகின்றன என்ற அறிவு நம்மை எதையும் அற்பமானதாகக் காணாமல் இருக்கக் கற்பிக்கிறது. எல்லா மகான்களும் இப்பாடத்தைத் தங்கள் வாழ்வின் மூலம் காட்டித் தருகிறார்கள். அம்மாவின் வாழ்வைப் பாருங்கள். நாம் சிறியதாகக் கருதும் செயல்களுக்கு அம்மா தமது சிறுவயது முதலே முக்கியத்துவம் அளித்து வந்திருக்கிறார். அம்மாவின் சந்நிதியை அடையும்

ஒவ்வொருவரின் சிறிய விஷயங்களைக் கூட அம்மா மிகவும் கவனத்துடன் கேட்கிறார். லஷ்மி என்ற அனாதைப் பெண், அம்மா தரிசனம் அளிப்பதற்கிடையில் தனக்கு எழுதக் கற்பித்த சம்பவத்தை விவரிக்கிறார். தரிசனம் அளிப்பதற்கிடையில் அருகில் நிற்கும் என் கையைப் பிடித்துக் கொண்டு எழுத்தை உச்சரித்தபடி எழுதுவார். அ சிலேட்டை என் கையில் தந்துவிட்டுத் தரிசனத்தைத் தொடர்வார். நான் அதைப் பலமுறை சிலேட்டில் எழுதிய பிறகு அம்மா தரிசனத்தை நிறுத்துவார். மீண்டும் சிலேட்டை வாங்கி எழுதுவார். ஆ சிலேட்டைத் திருப்பித் தந்துவிட்டு தரிசனத்தைத் தொடர்வார். அம்மா எனக்கு எழுதக் கற்பிப்பதற்கு இப்படித்தான் சமயம் தேர்ந்தெடுத்தார்.

சிறியதாகத் தோன்றினாலும் நல்ல காரியங்கள் ஒவ்வொன்றும் மிகப்பெரிய முக்கியத்துவம் வாய்ந்தவையே என்று மகான்கள் காட்டித் தருகிறார்கள். ஆன்மீக சாதனைகளிலோ சிறிய செயல்களுக்கே அதிக முக்கியத்துவம். எப்போதும் செய்யும் சுய கட்டுப்பாடு. சிறிய உண்மை பேசுதல், சிறிய கருணை போன்றவையே ஆன்மிக வாழ்வின் அஸ்திவாரம். ஒருநாளில் மிகக் குறைவான நேரத்தையே நாம் அனுஷ்டானங்களுக்காகச் செலவிடக்கூடும். ஆனால், அந்த சிறிய நேரமே, நம்முடைய வாழ்வின் மதிப்பையும், பாக்கியத்தையும் நிர்ணயிக்கிறது. இறைவனின் முன்னால் கர்மங்களில் இது பெரியது, இது சிறியது என்பதில்லை. மனோபாவமே முக்கியம் ராமாயணத்தில் அணில் மற்றும் வாலியின் அனுபவங்களைச் சிந்தித்துப் பாருங்கள். வாலி பெரிய செயல்களைச் செய்யும் திறமை பெற்றவனாக இருந்தான். சீதையையும், ராவணனையும் இலங்கையையும், திரிகூட மலையையும் ஸ்ரீராமரின் பாதங்களில் கொண்டு வந்து வைக்கத் தன் ஒருவனால் முடியும் என்றான் வாலி. ஆனால் அந்தப் பெரிய செயல் பகவானுக்குத் தேவைப்படவில்லை. காரணம், வாலி அதைவிட முக்கியத்துவம் நிறைந்த நல்ல செயல்களில் முறையான கவனம் செலுத்தவில்லை. அதற்கான தண்டனையையே பகவான் வாலிக்கு அளித்தார். அதே சமயம், சில மணல்துகள்களை பாலம் கட்டுவதில் தனது பங்காக, இதயபூர்வமாக சமர்ப்பித்த அணிலின் முதுகில் அருளின் மறையாத வரிகளை அவர் தமது கரங்களால் அளித்து மகிழ்ந்தார். சிறிய செயல்களின் மகிமையை உலகில் என்றென்றும் நினைவுறுத்துவதற்காக இச்செயல் நிகழ்ந்ததோ என்று மனதில் தோன்றும்.

பெரிய செயல்களின் மகிமை அவற்றின் ஆரம்பத்தில் செய்யப்படும் சிறிய செயல்களின் தரத்தையே சார்ந்திருக்கிறது என்பது நாம் அறியும் உண்மையல்லவா? ஒரு பெரிய மாளிகையின் மகிமை அதைக் கட்டுவதற்கு உபயோகித்த கல், சிமெண்ட் கம்பி இவற்றின் தரத்தையும், ஒவ்வொரு கட்டத்திலும் செய்யப்படும் ஒவ்வொரு பணியின் சிறப்பையுமே சார்ந்துள்ளது. இப்படியெல்லாம் பார்க்கும்–போது சிறிய காரியங்களே உண்மையில் பெரிய காரியங்கள் என்பது தெளிவாகும்.

நம்மால் இயன்ற சிறிய சிறிய நற்செயல்களில் நாம் எப்போதும் ஈடுபடுவதுதான் நமது கடமை, சட்டென மறந்துபோகக் கூடியவையாக இவை இருக்கலாம். இருந்த போதிலும் இத்தகு செயல்கள் நம் வாழ்வில் மகிழ்ச்சியின் ஊற்றாகத் திகழ்கின்றன. இத்தகு மகிழ்ச்சி ஊற்றுகள் வாழ்நாளில் கணக்கற்று உண்டாகட்டும் வாழ்வெனும் கட்டிடம் உறுதியாக அமைவதற்கு உதவும் கற்கள், அவை பிறருக்கு உதவுவதுடன் நமது வாழ்வுக்குப் பொருளை அளிக்கும் இத்தகு வழியைச் சென்ற நூற்றாண்டில் வட இந்தியாவில் வாழ்ந்த மகான் ஹனுமான் பிரசாத் போதார் என்பவர் ஒரு கவிதையின் மூலம் விவரித்துள்ளார். கவிதையின் பொருள் பின்வருமாறு:

செய்ய இயலும் நன்மையைச்
செய்து கொண்டே இருங்கள்

செய்ய இயலும் அளவு நன்மை
யைச் செய்துகொண்டே இருங்கள்

செய்ய இயலும் இடத்தில் நன்மை
யைச் செய்துகொண்டே இருங்கள்

முடிந்தவர்களுக்கெல்லாம் நன்மை
யைச் செய்து கொண்டே இருங்கள்

செய்ய இயலும் வரை நன்மை
யைச் செய்துகொண்டே இருங்கள்.

37.காரணமற்ற கருணை

பிர.இராம்குமார்.



மகாபாரத காலகட்டத்தில் டிடிஹரி என்றொரு பறவை இனம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவை சிட்டுக்குருவி போலிருக்குமாம். இந்தப் பறவை நீர் நிலைகளை ஒட்டிய மணற்பாங்கான இடங்களிலும் புல்தரைகளிலும் முட்டைகளை மேலோட்டமாகப் புதைத்து வைத்து அடைகாத்தன. அது பாரதப் போர் தொடங்கிய தருணம். பாண்டவர்கள், கௌரவர்கள் என இருதரப்பு சேனைகளும் குருஷேத்திரத்தில் குவிந்தன. வெட்டவெளியாக இருந்த பெரிய நிலப்பரப்பில் யானைகளும், குதிரைகளும், வீரர்களும் கூடுவதைக் கண்ட பறவை ஜோடி அரண்டு போனது. யாருடைய காலடியிலாவது சிக்கி முட்டைகள் உடைந்துவிடுமோ என்று பீதியில் செய்வதறியாது திண்டாடின. மண் நிறத்தை ஒத்துள்ள அந்தச் சிறு முட்டைகள் நிலத்தில் புதைந்திருப்பதை யார் கவனிப்பார்? பாவம்! பிறர் கவனத்தை ஈர்க்கத் தங்களால் இயன்றவரை முயன்று களைத்துப் போன அவை இரண்டும், அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் அருகிலிருந்த மரத்தின் மீது அமர்ந்தன.

போர் துவங்கியது வாட்கள் உராய்ந்தன. அம்புகள் பறந்தன. பாண்டவர் சேனைக்கு அர்ஜுனன் தலைமை தாங்கினான். அர்ஜுனனுடைய தேருக்கு பகவான் சாரதியானார். பகவானைக் கண்ட பறவைகளுக்கு சொல்லொணா மகிழ்ச்சி ஏற்பட்டது. பரமனின் பேரெழில் வதனம் கண்ட பறவைகள் திக்கற்றவர்க்கு தெய்வம் தானே துணை! அவரடி பணிவோம், என நினைத்து அர்ஜுனனின் தேரைச் சுற்றி வட்டமிட்டன!

"தெய்வமே. எங்களுக்கு நீயே கதி முட்டைகளுக்கு ஒரு தீங்கும் நேராமல் காக்க வேண்டும். உன்னை விட்டால் எங்களுக்கு வேறு யாருமில்லை. அருள்புரிவாய்" என்று தங்கள் இயலாமையை வெளிப்படுத்தி

உருக்கமாகப் பிரார்த்தித்தன. பகவானின் அருட்பார்வை பறவைகளின் மீது விழுந்தது. அவர் அறியாதது ஏதும் உண்டோ? பறவைகளின் தவிப்பைக் கண்ட பகவான் அவற்றின் குறை தீர்க்கத் திருவுளம் பூண்டார். அப்போது, எதிரித் தரப்புப் படையிலிருந்து மலைபோல் உருவம் கொண்ட பெரிய யானையொன்று, கழுத்தில் கட்டப்பட்ட பெரிய மணி கிண்கிணி ஒலிக்கப் படையைத் துவம்சம் செய்தபடி வந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட பகவான், "அர்ஜுனா! அந்த யானையின் கழுத்தில் உள்ள சங்கிலிமீது குறிவைத்து அம்பைவிடு!" என்றார். அர்ஜுனனின் வில்லிலிருந்து சீறிப்பாய்ந்த அம்பு, யானையின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த சங்கிலியை அறுத்தது. சங்கிலியுடன் மணி கீழே விழுந்தது. விழுந்த மணி, பறவை முட்டைகள் இருந்த இடத்தைக் கனகச்சிதமாக ஒரு அரண்போல் மூடியது! பறவை முட்டைகள் பாதுகாக்கப்பட்டன. அந்தி மயங்கியபோது யுத்தம் நின்றது. பரந்தாமன் மணி கிடந்த இடத்தை நோக்கிச் சென்றார். தமது திருக்கரங்களால் மணியை அகற்றினார். மணியின் சூட்டினால், முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளியே வந்தன. கருணைபொங்க அக்குஞ்சுகளைக் கையில் ஏந்தி பகவான் முத்தம் கொடுத்தார். எங்கிருந்தோ இரு பறவைகளும் பறந்து வந்தன. நன்றியுடன் பகவானின் திருக்கைகளிலிருந்து குஞ்சை கொத்திச் சென்றன.

அண்மையில் மதுரை ஆசிரமத்தில் அந்தர்யோகம் நிகழ்ச்சிக்காகச் சென்ற நான், குருஷேத்திரத்தில் நடந்த அந்தச் சம்பவத்திற்கு நிகரான ஒரு அனுபவாமிர்தத்தை அம்மாவின் பக்தை ஒருவரிடமிருந்து கேட்டறியும் வாய்ப்புக் கிடைத்தது. மதுரை ஆசிரமத்தில் அந்தர்யோகம் நிகழ்ச்சி நல்லபடியாக நடந்து முடிந்தது. பக்தர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஒரு பக்தை அருகில் விளையாடிக்கொண்டிருந்த அமிர்த வைசாக் என்ற சிறுவனை எனக்கு அறிமுகப்படுத்தினார். இது என்னோட பேரன். இன்று அவன் உயிரோடு இருப்பதற்கு அம்மாவின் கருணை தான் காரணம் என அவர் தொடங்க, என் காதுகளைக் கூராக்கிக் கொண்டேன். அம்மாவிடம் வர ஆரம்பித்த பிறகு தங்களது வாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பற்றிக் கூறினார். "வாழ்வா, சாவா" என்ற நிலையில் எங்கள் குடும்பம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அந்நிலையில் என் கணவர் முதன்முதலாக அம்மாவை அமிர்தபுரியில் தரிசித்தார். அம்மா அவரிடம், "மகனே! உனது குழந்தைகளைக் கொண்டுவா" என்றார்.

அம்மாவின் அழைப்பை எங்களால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதுமட்டுமல்ல, எங்களது மோசமான பொருளாதார நிலையால் சுமார் ஓராண்டிற்குப் பிறகுதான் எங்களால் அமிர்தபுரிக்குச் செல்ல முடிந்தது. குடும்ப நிலையை விவரிக்க வாக்குகளின்றி கண்களில் நீர் மல்க அம்மாவிடம் செல்ல, "மகளே! மகனிடம் எல்லோரையும் கொண்டு வரச் சொன்னேன். வந்துவிட்டீர்களல்லவா? அம்மா காப்பாற்றுகிறேன். கவலைப்படாதீர்கள்" என்றார்.

பக்தை: எங்கோ வாழும் இந்த ஏழைகளை அம்மா நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறாரே என்று நினைத்தபோது உள்ளம் நெகிழ்கிறது.

இதற்குப் பின், அவர்களது பொருளாதார நிலையில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. அவர்களது மூத்த மகளின் திருமணம் நடந்தது. அவருடைய மகன் தான் இந்த அமிர்த வைசாக். குழந்தை பிறந்து இரண்டு மாதம் ஆன போது அவனுக்குச் காய்ச்சல் வரவே மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவனைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தையின் இதயத்தில் ஓ ட்டையிருப்பதாகக் கூறினர்.

பக்தை: அவ்வாண்டு மதுரை பிரம்மஸ்தான ஆலய ஆண்டுவிழாவிற்காக மதுரைக்கு வருகைபுரிந்த அம்மாவை வரவேற்பதற்காக பக்தர்கள் கூடியிருந்தனர். எங்கள் குடும்பத்தினரும் அக்கூட்டத்தில் நின்றிருந்தோம். பேரனை நான் தூக்கிக்கொண்டேன். அம்மா வரும் நேரம் நெருங்க நெருங்க ஆசிரம வளாகத்தில் கூட்டம் அதிகரித்தது. அம்மாவின் கார் ஆசிரமத்தின் முன் வந்து நின்றபோது, அங்கே ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து பேரனைக் காப்பாற்ற நான் குழந்தையைக் கணவரின் கைகளில் கொடுத்தேன். அம்மா வந்துவிட்டார். இரு கைகளையும் நீட்டியவாறு அம்மா மெல்ல நடந்து வந்தார். இத்தனை கூட்டத்திற்கு இடையிலும் அம்மா அமிர்த வைசாக்கை நோக்கிப் புன்னகை சிந்தினார். அவனைக் கை நீட்டி வாங்கி, அவனது இதயத்தில் கை வைத்துத் தடவினார். யாரும் சொல்லாமலே அம்மா குழந்தையின் நிலையை அறிந்திருந்த காரணத்தால் தான் அப்படிச் செய்கிறார் என்று புரியவே அம்மா என்று வாய்விட்டு அழுதேன். பிறகு அம்மாவிடம் குழந்தைக்கு முதல் சோறு ஊட்டுவதற்காகக் (அன்னப்பிராசனம்) கொண்டு வந்தோம். குழந்தையின் நிலையை அம்மாவிடம் சொல்லி அவரது அருளைப் பெற

விரும்பினோம். ஆனால், யாரும் சொல்வதற்கு முன்பே அம்மா, "குழந்தைக்குப் பிரச்சனையுள்ளதை அம்மா அறிவேன். எய்ம்ஸ் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள்" என்றார்.

அம்மா கூறியபடி பேரனை எர்ணாகுளத்திலுள்ள அம்மாவின் எய்ம்ஸ் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். அங்குள்ள மருத்துவர்கள் அவனுக்கு நுரையீரலில் அடைப்பிருப்பதாகவும் கண்டுபிடித்தனர். "குழந்தைக்கு 3 வயதான பின்னரே அறுவை சிகிச்சை செய்ய முடியும்" என்று சொன்னார்கள். நாங்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானோம். அதற்குள் குழந்தையின் நிலை என்னவாகுமோ, அறுவை சிகிச்சை வெற்றிபெறுமா, குழந்தையால் அறுவை சிகிச்சையைத்தாங்கிக் கொள்ள முடியுமா? என்றெல்லாம் எண்ணிப் பயந்தோம். "அம்மா நீயே கதி" என்று சரணடைந்தோம்.

'அம்மா, மருத்துவர்களின் ஆலோசனைப்படியே செய்ய வேண்டும்' என்று கண்டிப்பாகச் சொன்னார். அதே சமயம், 'அம்மா பார்த்துக் கொள்கிறேன்' என்றும் கூறினார். (நமே பக்த: ப்ரணச்யதி - எனது பக்தன் அழிவதில்லை) என்று பரந்தாமன் பார்த்தனுக்குச் சொன்னது போல் அம்மாவும் வாக்களித்தார் என்றே தோன்றுகிறது)

சிகிச்சைக்குக் கையில் பணமில்லை. ஆனால், அம்மா பார்த்துக் கொள்கிறேன் என்ற அம்மாவின் வார்த்தை ஒன்றுதான் எங்கள் மனத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அம்மா கைவிடமாட்டார். குழந்தையைக் காப்பாற்றுவார் என்ற உறுதியான நம்பிக்கை இருந்தது.

அமிர்த வைசாக் மற்ற பிள்ளைகளைப் போல் இல்லாமல் மிகவும் வித்தியாசமான குழந்தையாக இருந்தான். சாதாரணமாகக் குழந்தைகள் விளையாட்டுப் பொம்மைகளை வைத்து விளையாடுவார்கள். இவனோ, அம்மாவின் படங்களை வைத்து விளையாடுவான். இவனுக்கு, அம்மாதான் எல்லாம். அம்மாதான் இவனது தோழி இவனுடைய விளையாட்டுப் பொருள், இவனுடைய தெய்வம்.... அனைத்தும் அவனுக்கு அம்மாதான்! இப்படிப்பட்ட குழந்தையை அம்மா காப்பாற்றாமல் விடுவாரா என்ன!

அறுவை சிகிச்சைக்கான நாள் நெருங்கியது மதுரை மடத்துப் பொறுப்பிலிருந்த பிரம்மசாரியிடம், "அம்மா கண்டிப்பா ஆபரேஷனுக்கு வர்றதா என்கிட்ட சொல்லியிருக்காங்க. நீங்களும் கண்டிப்பா வரணும்" என்றான் வைசாக். பிஞ்சின் கபடமற்ற வெள்ளையுள்ளம் கண்டு பிரம்மச்சாரி கண்கலங்கினார். "அறுவை சிகிச்சைக்காகக் குழந்தையை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டுசெல்ல வேண்டும் இவனோ மும்முரமாக விளையாடிக் கொண்டிருக்கிறான், அடம்பிடிக்கிறான். என்ன செய்வது, எப்படி இவனை வழிக்கு கொண்டு வருவது" என்று நர்ஸ் திகைத்தார். ஒரு பக்தர் "ஆபரேஷன் தியேட்டரில் அம்மா இருக்கிறார். அங்கே அவர் பஜனை பாடுகிறார்" என்று சொல்லிப்பாருங்கள் அவன் கண்டிப்பாக வருவான் என்றார். அவர் சொன்னது போலவே நர்ஸும் அவனிடம் சொல்ல, சிறுவனும் தனது விளையாட்டை நிறுத்தினான். ஆபரேஷன் தியேட்டருக்குள்ளிருந்து பஜனைப் பாடலின் ஒலி ஸ்பீக்கர் வழியாகத்தவழ்ந்து வர (எய்ம்ஸ் மருத்துவமனையில் அம்மாவின் பஜனைகளை ஒலி பரப்புவது வழக்கம்!) அம்மா உண்மையிலேயே அங்கே பஜனை பாடுகிறார் என்று நம்பினான். நர்ஸுடன் சென்றான். அறுவை சிகிச்சை சுமார் 9.00மணி நேரம் நீண்டு நின்றது. அம்மாவின் திருவருளால் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததாக மருத்துவர்கள் அறிவித்தார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு அமிர்த வைசாக் மயக்கம் தெளிந்து கண் திறந்தான். என்னிடம், "ஆச்சி! ஆபரேஷன் தியேட்டருக்குள் நான் போனது முதல் காளிமா என் அருகிலேயே அமர்ந்து இருந்தார். என்னை நோக்கிச் சிரித்தவாறு அம்மா என் கூடவே இருந்தார்" என்றானே பார்க்கணும்!

இப்படிச் சொல்ல அவனுக்கு யார் கற்றுக் கொடுத்திருக்கப் போகிறார்கள்? இதே வாக்கை நம்மைப் போன்ற கலங்கிய இதயமுள்ளவர்கள் சொன்னால், வெறும் பொய் என்று ஒதுக்கித் தள்ளிவிடலாம். ஆனால், வெள்ளையுள்ளம் கொண்ட சிறு குழந்தை சொல்வதை நம்பாமல் இருக்க முடியாது. அறுவைசிகிச்சையை முழுக்க முழுக்க இலவசமாகவே எய்ம்ஸ் மருத்துவமனை செய்து கொடுத்தது. (இதைச் சொன்ன அவரது கண்களில் கண்ணீர் துளிர்த்தது.)

"இடைவிடாது என்னையே நினைத்துக் கொண்டிருக்கும் பக்தர்களின் இகபர நலனை நான் பேணுவேன் அர்ஜுனா!" என்று த்வாபர யுகத்தில் கொடுத்த வாக்கை இதோ கலியுகத்திலும் கண்ணபிரான், நம் அம்மாவின்

வடிவில் நிறைவேற்றுகிறான் என்று சொன்னால் அது மிகையாகாது.

பெருகுவது கங்கையின் இயல்பு ஆனால், ஓரிடத்தில் குழியிருப்பின் அங்கே கங்கை நீர் சேகரிக்கப்படுகிறது. தூய உள்ளத்தோடும். பணிவோடும் நாம் செய்யும் பிரார்த்தனை நம் இதயத்தில் ஒரு குழி வெட்டுவதற்குச் சமமாகிறது. அங்கே அருள் நிறைந்து நிற்கும்.

பறவைக்குஞ்சுகளாயினும் சரி, மனிதராயினும் சரி, சகல உயிரினங்களின் மீதும் இறைவனின் அருட்பார்வை படத்தான் செய்கிறது. கருணை சொரிவதற்கு எந்தவிதமான காரணத்தையோ, தகுதியையோ அவன் எதிர்பார்ப்பதில்லை. நம்மைப் போன்ற அற்பமனிதர்கள் தான் கணக்குப் பார்த்து அன்பு செலுத்துவோம். ஆனால், இறைவனுக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. நாம் யாராக இருந்தாலும் நம்மை நமது குறைகளோடு ஏற்றுக் கொண்டு, நம்மிடமிருந்து ஒன்றுமே எதிர்பார்க்காமல் அம்மா நம்மைக் காத்தருள் புரிகிறார்.

ஒரு காரணமும் இல்லாமல் அருள் சொரிபவள் - "ஓம் அவ்யாஜ கருணாமூர்த்தயே நம" என்று லலிதாதேவி பூஜிக்கப்படுவது இக்காரணத்தால் தானோ?

எது எப்படியோ, அப்பக்தையின் அனுபவத்தைக் கேட்டு மனம் அம்மாவின் அருளை எண்ணித் தலைவணங்கியது. இதுபோன்ற எத்தனை அமிர்த வைசாக்குகளின் வாழ்வில் அம்மா தீபம் ஏற்றி வைத்துள்ளார் என்பது யாருக்குத் தெரியும்?

இப்படிப்பட்ட அன்புப்பிழம்பான அம்மாவின் குழந்தைகளான நாம் ஒரு அகலாகவாவது மாறி, அன்பைப் பரப்ப வேண்டாமா? அப்படி மாறாவிடில், அம்மாவின் குழந்தைகள் என்று நம்மைக் கூறிக்கொள்வதில் ஏதாவது பொருளிருக்கிறதா என்ன?

38.சிவப்பு நிற உடையணிந்த வடிவம்

பிர.ரகுநாத்

அம்மாவின் அருளை எடுத்துக் காட்டும் வகையில் பக்தர்களுக்கு ஏற்பட்டுள்ள எண்ணிலடங்கா அனுபவங்களைக் கேட்டிருக்கிறோம். அவற்றில் பல அவர்களுக்குக் கஷ்டங்களும், சங்கடங்களும் ஏற்பட்ட சமயங்களில் அம்மா எவ்வாறெல்லாம் பெருந்துணையாக இருந்தார் என்பதைக் குறிப்பனவாக அமைந்தவை. இப்படிப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும், அம்மாவின் அருள் அவர்களை சூட்சுமமான வகையில் காப்பாற்றியிருப்பதோடு மனதில் ஒரு நல்ல திருப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

சமீபத்தில், நான் ஹைதராபாத்தில் அம்மாவின் பொது தரிசனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பிலிருந்த போது, பலவித வேலைகளுக்கிடையே என் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பத்தைப் பற்றி சற்றி எண்ணினேன்.

சிறுவயதில் இருந்ததை நினைத்துப் பார்க்கும் போது இன்று நான் எவ்வளவோ மாறிப்போயிருக்கிறேன். மேல்நிலைப்பள்ளியில் சேர்ந்தபோது, மிகவும் கூச்ச சுபாவம் கொண்டவனாக இருந்தேன். வீட்டில் மிக அமைதியுடனும், சகமாணவர்களோடு அதிகம் பழகாமலும் இருந்தேன். பல சமயங்களில் மற்றவர்களுடன் பழகும் ஆர்வமின்றி தனிமையையே நாடினேன். சில சமயம். ஏதாவது உடல் நலக் குறைவு ஏற்பட்டு வீட்டிலேயே அடைந்து கிடக்கும் நிலை ஏற்பட்டால், விரக்தியும் தோன்றும். ஆனால் அப்போதெல்லாம் ஏதோவொரு புலப்படாத சக்தி என்னைக் காத்துவருவதை உணர்ந்தேன். அது எப்போதும் சிவப்புநிற உடையணிந்த உருவமாக என் கனவில் தோன்றும். நான் கண் திறந்து பார்க்கும் போது, உடலிலும், மனதிலும் இருந்த வேதனை மாறியிருக்கும் போது, அதுமட்டுமல்ல, ஏதோ ஒருசக்தி என்னை இனம்புரியாத ஆனந்த நிலைக்கு எடுத்துச் செல்வதாக உணர்வேன். அந்த ஆனந்தம் எங்கிருந்து வருகிறது என்று எனக்கு வியப்பாக இருக்கும். அதற்கான காரணம் அப்போது புரிந்ததே இல்லை. அந்த சூட்சுமமான சக்தி என் வாழ்வில் மனவேதனையை அகற்றிவிடுவதால், அது எனக்கு ஒரு உண்மையான அனுபவத்தை அளித்துக் கொண்டிருந்தது என்றே சொல்வேன். கனவில் காட்சி மங்கலாக இருந்தாலும், ஏதோ சிவப்பு நிற உடை அணிந்த

உருவமாகவே இருந்தது. ஆனால் அது பெண் உருவமா அல்லது ஆண் உருவமா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதன் வரவால் என் மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டதால், எப்போதும் அதன் வரவையே எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

சில வருடங்கள் இப்படியே சென்றது. நான் கல்லூரிப் படிப்பு முடிந்து வேலைக்குப் போகத் தொடங்கினேன். என்றாலும், சிறுவனாக இருந்தபோது என்னிடம் இருந்த தனிமை, விரக்தி போன்ற குணத்தில் எந்தவித மாற்றமுமில்லை. அதேபோல் அந்த புலப்படாத சக்தியும் எனக்குத் துணையாக வந்துகொண்டே இருந்தது. இதனிடையில் அந்த அற்புத சக்தியினை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் வளர்ந்தது.

கடவுள் நம்பிக்கை இருந்த காரணத்தால், கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதை விரும்பினேன். இந்நிலையில் ஒருமுறை நான் அமிர்தபுரிக்குச் சென்றேன். அம்மா தன்னைக் காணவரும் எல்லோருக்கும் தரிசனம் அளிப்பார் என்று அறிந்திருந்த நான், அவரைக் காண ஆவலோடு காத்திருந்தேன். தரிசனத்திற்கான வரிசையில் நின்று கொண்டிருந்தபோது, மனதில் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்தன. வரிசையில் நின்றபடி அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மாவின் அருகில் சென்றபோது, இத்தனை நாட்களாக என் கனவில் வரும்வடிவம் வந்தால் ஏற்படுவது போன்ற ஆனந்தம் ஏற்பட்டது.

மாலையில் பஜனை முடிந்து அம்மா உள்ளே சென்றார். கதவுகள் மூடப்பட்டன. தேவிபாவ தரிசனம் விரைவில் தொடங்க இருந்தது. மணிநாதமும், "ஓம் அம்ருதேஸ்வர்யை நம:" என்கிற மந்திர ஒலியும் சூழ்நிலையில் தெய்வீக உணர்வை சேர்த்துக் கொண்டிருந்தன. எல்லோரும் தேவிபாவ தரிசனம் தொடங்குவதைக் காணும் ஆவலுடன் காத்திருந்தார்கள். திரைவிலகியது. சிவப்புநிற பட்டு சேலையில் தேவியாகக் காட்சியளித்த அம்மாவைக் கண்டு அப்படியே திகைத்துவிட்டேன். அந்தக் காட்சி எனக்கு ஏற்கனவே பழக்கப்பட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. சற்று நேரத்தில் என் இத்தனை காலக் கனவு நினைவிற்கு வந்தது. தனிமையில் விரக்தியுடனும் சங்கடத்துடனும் நான் இருந்தபோதெல்லாம் எனக்கு ஆறுதல் அளித்த வடிவமே இது என்பதை உணர்ந்தேன்.

அம்மாவின் அருகிலே சென்றவுடன் பேரானந்தம் என்னை ஆட்கொள்வது போல் தோன்றியது. தரிசனத்திற்கான என்னுடைய முறை வந்ததும். அம்மா என்னை அரவணைத்துக் கொண்டு, என்ன வேண்டும் மகனே? என்று கேட்டார்.

"பக்தியும் அன்பும் வேண்டும். நான் உங்களுடனேயே இருக்க வேண்டும்" என்று கூறினேன். அம்மா சம்மதம் அளிப்பது போன்று புன்னகைத்தார். நான் எவ்வளவு நேரம் அம்மாவின் அரவணைப்பில் இருந்தேன் என்று நினைவில்லை. ஆனால் அந்த அரவணைப்பின் போது, இனம்புரியாத அமைதியும், மகிழ்ச்சியும் எனக்கு ஏற்பட்டன.

தரிசனம் பெற்று நான் எழுந்து செல்லவிருந்த சமயம், அம்மா என்னை மீண்டும் அரவணைத்துக் கொண்டார். என் முதுகையும், நெஞ்சையும் தடவிக் கொடுத்து இப்போது எப்படி இருக்கிறது? என்றார். அப்படியே வாயடைத்துப் போய் பதில் சொல்லாமல் நின்றுவிட்டேன்.

கடைசியில் பதினைந்து வருடங்களாக விடை கிடைக்காத என் கேள்விக்கு இப்போது விடை கிடைத்துவிட்டது என்பதை அறிந்தேன். உடனே, இனி அம்மாவை விட்டுப் போவதில்லை என்று தீர்மானம் செய்தேன். அம்மா என்கிற பேரானந்தத்தில் நான் ஒன்றிவிட விரும்பினேன். அம்மாவின் திருவடிகளில் சரணாகதி அடைவது ஒன்றே வாழ்க்கையில் சிறந்த வழி என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மெல்லிய கார்மேகம் போன்று என் மனதில் இருந்த சந்தேகங்கள் எல்லாம் கலைந்து போயின.

தனிமையையே மேற்கொண்டிருந்த நான், அம்மா எனக்காக அளித்திருந்த சேவையில் இப்போது எப்படியெல்லாம் குழுவோடு சேர்ந்து, கூட்டத்திற்கு இடையில் கூச்சமின்றி செயல்படுகிறேன் என்பதைப் பற்றி எண்ணும் போது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. கனவிலே நான் கண்டுவந்த அந்த உருவம் இப்போது மனித வடிவில் அருகாமையில் இருந்து, எனது ஆன்மிக உணர்வு நிலையை பெருக்கி, தன் கைகளில் என்னை ஒரு பணிவான கருவியாக ஆக்குவதற்காக உதவிக் கொண்டு இருக்கிறது. நிறைவான மனதையும், மகிழ்ச்சியையும் அந்த தெய்வத்தாய் எனக்கு அளிப்பதை வார்த்தைகளால் விளங்கமுடியாது. அம்மாவின் மனிதநேய செயல்களில் எனக்கும் சிறிதளவேனும் உதவிக்கரம் அளிக்க

முடிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். "அம்மாவின் திருவடியில் சரணாகதி அடைந்து, அவருடன் ஒன்றிடும் வரை அந்த அருள் துணை வரவேண்டும்" என்பதே எனது பிரார்த்தனை.

•••••••••••••••••••••••

39.வாழ்வின் பயன்

பிர பிரதீப்

சக்யம்மா, வயது தெரியவில்லை. சுமாராகப் பார்த்தால் 65 - 70 வயது இருக்கலாம். கோழிக்கோடில் ஒரு வித்யாலயத்தில் பெருக்கும் வேலை செய்து வருகிறார். பள்ளியில் தினசரி ஒன்றோ அல்லது இரண்டோ மணிநேரம் பெருக்குவார். அது முடிந்தால் பின்னர் சம்பளம் எதுவும் பெறாமல், பாதைகளை எல்லாம் பெருக்குவதுதான் அவரது வேலை, எழுத்துகளைக் கூட்டிப் படித்து, நவீனகால மனிதனின் வக்கிரமான செய்திகளைப் புரிந்துகொள்ள அவருக்குத் தெரியாது. நவீனகால மனிதர்கள் அறியாத ஒரு சிந்தாந்தம் சக்யம்மாவுக்குத் தெரியும். தனது வாழ்வில் எங்கோ எப்போதோ கேட்ட ஒரு பாடலின் வரிகள் அவரது மனதில் அழியாது இடம்பெற்றுவிட்டது.

தினமும் செய்யும் கர்மத்தின் பலனை
செய்தவனன்றி வேறொருவன் அனுபவிப்பானா?
தான் நிரந்தரம் செய்யும் கர்மபலனை
தான் அனுபவித்தே ஆக வேண்டும்.

கோழிக்கோடு ஆசிரம அடுக்களையில் அமர்ந்து கஞ்சி குடித்துக் கொண்டிருந்த சக்யம்மாவைக் கண்டபோது, அவரிடம் குசலம் விசாரிக்கத் தோன்றியது. "உங்கள் குழந்தைகள் என்ன செய்கிறார்கள்?" அந்தக் கேள்வி அவருக்குப் பிடிக்கவில்லை என்று புரிந்தது. பரபரப்புடன் மனிதர்கள் எல்லாம் அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். பிள்ளைகளின் கல்லூரி அட்மிஷனுக்காக, ஒரு வீடு கட்டுவதற்கான கடன் பெறுவதற்காக, நீதிமன்றங்களில் தீர்ப்பை

எதிர்பார்த்துக் காத்திருக்கும் எல்லைப் பிரச்சனைகளுக்காக என மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மனதில் அடுக்கிவைக்க சிந்தனைகள் எதுவுமில்லை சக்யம்மாவுக்கு, 'ஆறரை வருடங்களுக்கு முன்பு கணவர் இறந்துவிட்டார்' இந்த செய்தியை சொன்ன சக்கியம்மா வருந்தவோ அழவோ இல்லை.

தான் நடந்து வந்த பாதையில் நினைவில் உள்ளவற்றை தனது கிராம மொழியில் விளக்குகிறார். இடையில் நாம் கேட்கும் கேள்விகளுக்கு அவரிடமிருந்து பதிலில்லை. 'என் சந்தேகங்களுக்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லை' என்பதைக் கண்ட நான் மீண்டும். "அம்மாவை எத்தனை வருடங்களுக்கு முன்பு தரிசித்தீர்கள்?" என்று கேட்டேன் பதில் உடனடியாக வந்தது. "10, 12 வருடங்கள் ஆகி இருக்கும்." "முதன்முதலாக அம்மாவை எங்கே தரிசித்தீர்கள்? வள்ளிக்காவில் நோய் தீர வேண்டும் என்றோ, வீடு கட்ட வேண்டுமென்றோ, பிள்ளைக்கு வேலை கிடைக்க வேண்டுமென்றோ அம்மாவிடம் பிரார்த்தித்தது உண்டா? அப்படி ஏதாவது ஆசை மனதில் இருக்கிறதா?"

கேள்வி புரியாமல் சக்யம்மா என் முகத்தைப் பார்த்தார். ஆசைகள் வரும் வழியைப் புரிந்து கொள்வது கடினம். கடலில் அலைகளைப் போல் அது மனித மனங்களில் எழவும், விழவும் செய்கின்றன. நான் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டேன். உறுதியான சற்று உயர்ந்த குரலில் அவர் அப்படி எனக்கு எந்தவித ஆசையும் இல்லை. வாழ்க்கை இப்படியே போனால் போதும் என்ற அவர் தொடர்ந்து பேசினார். கணவர் கல்லுடைக்கும் வேலை செய்துவந்தார். அவர் உடைத்த கற்கள் வீடுகளாயின. மாளிகைகள் ஆயின. ஆனால், சக்யம்மா உறங்குவதற்கு ஒரு சிறிய குடிசை கூட இல்லை. தான் படுத்து உறங்குவதற்கு ஒரு சிறிய குடிசை வேண்டும் என விரும்பாத மனிதர் இவ்வுலகில் உண்டோ? உண்டு. அதற்கு உதாரணமாக சக்யம்மா திகழ்கிறார். இப்போது வித்யாலயத்தில் மட்டுமன்றி மேலும் சில இடங்களில் பெருக்கும் வேலை கிடைத்துள்ளது. வாரத்திற்கொரு முறை அவர்கள் ஏதாவது கூலி கொடுப்பார்கள். கிடைத்தால் சந்தோஷம், கிடைக்காவிட்டால் வருத்தம் ஏதுமில்லை, மாலை மயங்கும் போது தனக்காக இறைவன் ஒதுக்கிய ஒரு இடத்தில் அம்மாவிடமிருந்து பெற்ற மந்திரத்தை ஜபித்தபடி சக்யம்மா படுத்து உறங்குவார்.

சென்ற வருடம் அம்மா கோழிக்கோடு வரும் பரபரப்பில் ஆசிரமம் மூழ்கி இருந்த வேளை, ஆசிரம அலுவலகத்திற்குள் பலர் காணப்பட்டனர். வெளியில் அலட்சியமாகக் கழற்றி வைக்கப்பட்ட விலைமதிப்புள்ள செருப்புகள், அவற்றின் மீது படாமல், சக்யம்மா ஒதுங்கி நின்று கொண்டிருந்தார். அலுவலகத்தில் காணப்படும் கூட்டம் குறைவதற்காக அவர் காத்திருந்தார். கொல்லன் பட்டரையில் ஈக்கு என்ன வேலை? என்பது போல் பலர் சக்யம்மாவை உற்று நோக்கிவிட்டுச் சென்றனர். தன்னருகில் நிற்கும் ஒருவரை நோக்கிப் புன்னகை புரியக் கூட நேரமில்லாத மனிதர்கள். அனைவரும் தங்கள் செருப்புகளை அணிந்து கொண்டு விரைந்து சென்றனர். இப்போது அலுவலகத்தில் கூட்டம் குறைந்து விட்டது. சக்யம்மா அலுவலகத்திற்குள் மெல்ல சென்றார்.

அம்மா வரும் போது அது ஒரு திருவிழாவாக இருக்க வேண்டும். தனது ஊரின் திருவிழா. அந்தத் திருவிழாவின் போது வரும் அனைவரும் அம்மாவைத் தரிசித்துவிட்டுத் திருப்தியுடன் திரும்ப வேண்டும். வாழ்நாளில் பெரும்பாலும் பசியால் வாடிய சக்யம்மாவுக்கு ஒரு ஆசை, அம்மாவைக்காண வரும் அனைவரும் பசியாறி உணவுண்டு செல்ல வேண்டும். அலுவலகத்தி லிருந்த மனிதரின் கைகளில் தனது சேலைத் தலைப்பில் முடிந்து வைத்திருந்த 1001 ரூபாயை எடுத்துக் கொடுத்த சக்யம்மா புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார்.

அது சக்யம்மாவின் இரண்டு மாத சம்பளம் என்பதை அறியும் போதுதான் அந்தத் தொகையின் மதிப்பை நாம் புரிந்து கொள்ள முடியும். அவரது தேவைகள் மிகக் குறைவு, அதிக ஆசைகள் உள்ளவர் எல்லாம் தரித்திரர், ஆசைகளற்றவர் செல்வந்தர் கொடுப்பவர் எப்போதும் ஒருபடி உயரத்தில் இருக்கிறார். பெறுபவர் ஒரு படி கீழே இருக்கிறார். நாம் எங்கே நிற்க வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். தேவையற்ற சிறிய சிறிய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாம் கீழே இறங்கிச் செல்கிறோம். கொடுக்கும் திறனுள்ள நாம் கை ஏந்துகிறோம். சக்யம்மாவை விட நான்கு ஐந்து மடங்கு அதிக வருமானம் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் கையேந்தும் நிலை ஏன் வருகிறது என்ற கேள்விக்கான பதில் மிகவும் எளிதாகும்.

அனைத்தையும் தனக்கு என வாங்கிச் செல்பவர்கள் நிறைந்த

இவ்வுலகில், எது கிடைத்தாலும் ஆசை தீராதவர்கள் நிறைந்த இவ்வுலகில், மேலும், மேலும் சேர்த்து வைத்தும் போதுமென்ற மனம் வராத இவ்வுலகில், தான் கொடுப்பதை உலகம் அறிய வேண்டும் என்று விரும்பும் இவ்வுலகில் சக்யம்மாவுக்கு இடமே இல்லாமல் இருக்கலாம். ஆனால் சக்யம்மா பெருக்கித் துப்புரவு செய்யும் முற்றத்திலும், பாதைகளிலும் நாம் அறியாமல் நடந்து செல்கிறோம் என்பதை மறுக்க முடியாது. ஏப்ரல் 12. மாலை ஐந்துமணி, புதுவருடப் பிறப்பு நெருங்கிவிட்டதை அறிவிக்கும் சுற்றுப்புறம். கோழிக்கோடு ஆசிரமத்திலிருந்து சாலையை அடையும் பாதையில் குனிந்து நின்று பெருக்கிக் கொண்டிருக்கிறார் சக்யம்மா, இப்படி பெருக்குமாறு யாரும் அவரிடம் கூறவில்லை. அம்மாவுடன் அவருக்குள்ள உறவை அவர் ஆசிரமத்திடமும் காட்டுகிறார். அம்மாவின் ஆசிரமத்தை அம்மாவின் உடல் என்று அவர் நம்புகிறார். அனைவரும் வேலை செய்தும், செய்யாமலும் சம்பாதித்து பணத்தை செலவழித்து விழா கொண்டாடும் போது, சக்யம்மா சம்பளம் வாங்காமல் வேலை செய்வதில் திருப்தி காண்கிறார். மலர்ந்தாலும், வாடி மண்ணில் விழுந்தாலும் நறுமணம் பரப்புகின்ற மலர்கள் நம்மிடம் சொல்வது என்ன?

40.அவல் முடிச்சு

சுவாமி அம்ருதாத்மானந்தபுரி

அம்மாவின் பிறந்தநாள் நெருங்கும் வேளையில் 25 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அம்மாவின் ஒரு பிறந்தநாள் நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. அம்மாவின் பிறந்தநாள் விழாவுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அன்று, அம்மாவின் பிறந்தநாள் விழா என்பது ஒருசில பக்தர்கள் ஒன்று கூடி நிகழ்த்தும் சிறிய விழாவாகும். அம்மாவின் திருப்பாதபூஜைதான் இதன் முக்கிய நிகழ்ச்சியாகும். அந்தப் புனித நன்னாளைக் கொண்டாடி மகிழ இன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் உள்ளனர். அன்று, நூற்றுக்கும் குறைவான பக்தர்களே கொண்டாடினர்.

உச்சிவெயில் வேளையிலும் மென்மையான தென்றல் வீசியது. அப்போது மடத்தின் அலுவலகத்தை நோக்கி சுமார் 15 பேர் வந்தனர். கூட்டத்தில் மூன்று நான்கு சிறுவர்களும் இருந்தனர். வெயிலால் வாடிய முகம் இருந்தாலும், கண்களில் ஒளி சிந்தியது. அலுவலகத்தின் சிறிய அறைக்குள்

இடமில்லாது இடித்துக் கொண்டு நின்ற அவர்களில், வயது முதியவரான ஒருவர் என்னருகில் வந்து, "நாங்கள் வடநாட்டிலிருந்து வருகிறோம். அம்மாவைத் தரிசிக்க வந்தவர்கள் நாங்கள்" என்று கூறினார்.

இதைக் கேட்ட நான் திடுக்கிட்டேன். அம்மாவைத் தரிசிக்க இவர்கள் இவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கிறார்களா? அக்காலத்தில், அவ்வளவு தூரத்திலிருந்து அம்மாவைக் காண பக்தர்கள் வருவது மிகவும் அதிசயமான நிகழ்ச்சியாகும். ஆர்வத்தை அடக்க முடியாத நான் அவரை நோக்கி, "அம்மாவைப் பார்த்துவிட்டீர்களா, தரிசனம் கிடைத்ததா?" என்று கேட்டேன்.

"அம்மாவைக் கண்குளிரத் தரிசித்தோம். தரிசனமும், ஆசியும் கிடைத்தன. எங்களுக்குப் பரமதிருப்தி" என்று பதிலளித்தார். இப்போது இவர்கள் ஏதாவது உதவி பெறும் நோக்கத்துடன் அலுவலகத்திற்கு வந்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் என்னுள் எழுந்தது.

அப்போது, வயதானவர் முன்வந்து, என் முன்னால் இருந்த மேசைமீது சிறிய துணி முடிச்சை வைத்து, அதை அவிழ்த்தார். அதில் சில்லறை நாணயங்கள் இருந்தன. அம்மாவின் மீதுள்ள அன்பு மற்றும் சமர்ப்பணத்தை வெளிப்படுத்துகின்றன, வியர்வையும், உழைப்பும், கண்ணீரும் கலந்த நாணயங்கள்.

"அம்மாவுக்கு எங்களின் பிறந்தநாள் காணிக்கை, தினமும் வேலை முடிந்து வரும் போது, ஒவ்வொரு நாணயத்தை அம்மாவுக்காக எடுத்துவைப்போம். அது தான் இது. நாங்கள் அனைவரும் விவசாயிகள்."

உப்புச்சுவை நிறைந்த அந்த நாணயங்கள் என் மனதை அலைக்கழித்தன. நெஞ்சிலும், வயிற்றிலும் கனல் ஏந்தி, மாலை வரை மலைகளில் எலும்பு முறிய வேலை செய்யும் இவர்கள் அம்மாவைத்தேடி வந்திருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவைகளோ, அங்கலாய்ப்போ இல்லை. இவர்களைப் பொறுத்தவரை, வாழ்வில் துன்பம் நேரிடும் போது அதைத் தாங்கிக் கொள்வதற்கு அம்மாவின் அருள் துணையிருந்தால் போதுமானது.

நான் சிந்தனையிலிருந்து விடுபட்டுப் பார்த்தபோது, அவர்கள் போயிருந்தனர்.

ஆதரவற்றவர்கள், துன்பப்படுபவர்கள், ஆன்மீக சாதகர்கள் என அனைவரின் சக்தி ஊற்றாகத் திகழ்பவர் அம்மா, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீராமரும், ஸ்ரீ கிருஷ்ணரும், கிறிஸ்துவும், நபியும் வாழ்ந்திருந்தனர் என்ற அறிவு, நமது முன்னோர்கள் மூலம் நமக்குக் கிடைத்தது அவர்களின் உயரிய இலட்சியங்களை நமது முன்னோர் நமக்கு அளித்தனர். அதேசமயம். அம்மா என்ற அறிவு நமக்கு நேரடி அனுபவமாகும். அது, நாம் காணவும், தொட்டு அறியவும் கூடிய அறிவாகும். அம்மா நம்மை அரவணைக்கும் வேளையில் நமக்கு சகல நன்மைகளையும் அளிக்கிறார். ஒரு பிரமாணத்தின், ஒரு புத்தகத்தின் அவசியமின்றி இந்த அறிவை அனுபவிப்பதற்காக இவ்வளவு தூரத்திலிருந்து இவர்கள் வந்திருக்கிறார்கள்.

இறைவன் அன்பின், தூய்மையின் வடிவமாவார் என்பதை அறியவேண்டுமெனின், சாதாரண மனிதர்களுக்கு நேரடி அனுபவம் ஏற்பட வேண்டும். அம்மாவின் சந்நிதி இறைவனின் சந்நிதி என்பதைச் சிறிய குழந்தை கூடப் புரிந்துகொள்கிறது. ஒளிசிந்தும் அம்மாவின் அன்பானது மனித மனங்களிலுள்ள வருத்தமெனும் இருளை அகற்றுகிறது. அம்மாவின் கரங்களில் அடைக்கலம் அடைபவர்கள் வாய்விட்டு அழுகிறார்கள்; மனதைக் கழுவிவரும் அந்தக் கண்ணீரானது. "நான் இறைவனைக் கண்டேன்" என்று அறிவிக்கிறது.

திடீரென்று, "அவர்கள் ஏதாவது சாப்பிட்டார்களா, சாப்பிடாமல் இவ்வளவு தூரம் பஸ்ஸில் பயணம் செய்ய வேண்டாமா?" என்ற நினைவு மனதில் எழுந்தது. அவர்களுக்குப் பின்னால் சென்ற நான், "சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றேன்.

"வேண்டாம் அம்மாவைத் தரிசிப்பதற்காக வந்தோம். இன்று ஒருவேளை உணவு உண்டது போதும் இனி நாங்கள் வீட்டிற்குச் சென்று சாப்பிடுகிறோம்" என்றனர்.

"மகனே, பயணத்திற்குத் தேவையான பணம் மட்டுமே அவர்கள் கைகளில் இருக்கும்" என அம்மா மனதிற்குள் கூறுவது போல் இருந்தது. விசாரித்தபோது, அது உண்மையாக இருந்தது. இதை அறிந்த நான், "சாப்பிட்டு விட்டுதான் போகவேண்டும்" என்று வற்புறுத்தி, அவர்களை உணவருந்தச் செய்தேன்.

சாதாரணமாக, அலுவலக விஷயங்களில் அம்மா தலையிடுவதில்லை. ஆனால், வியர்வையின் நறுமணம் கமழும் இந்த அவல் முடிச்சை அம்மாவின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என விரும்பினேன். அன்று பஜனைக்குப் பிறகு அதை எடுத்துச் சென்று அம்மாவின் பாதங்களில் வைத்தேன். என்னென்னவோ கூற மனம் விரும்பினாலும், ஒரு வார்த்தை கூட என் நாவிலிருந்து எழவில்லை. நாணயங்களின் முடிச்சை அம்மா ஒரு முறை பார்த்தார். அனைத்தையும் அறிபவரான அவர் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்... உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

துவாபர யுகத்தில், குசேலன் கொண்டுவந்த அவலைச் சுவைத்த பகவானின் முகபாவம் இப்படித்தான் இருந்திருக்குமோ! பொதுவாக, உழைப்பின் பலனாக வியர்வை பெருகும் உடலும், இனிமையான மனமுமே அல்லவா சத்குருவிற்கு மிகவும் விருப்பம். அம்மாவின் அருளுக்கு அவர்கள் பாத்திரமாகிவிட்டனர் என்பது எனக்குப் புரிந்தது. நமஸ்கரித்துவிட்டு நான் அறையிலிருந்து வெளியேறிய போதும் அம்மாவின் கண்கள் மூடியே இருந்தன.

அமிர்தபுரியில் இரவும் பகலும் தேவலோகத்தைப் போல் இருக்கும். மனிதனின் 12 வருடங்கள் தேவர்களின் ஒருநாளுக்குச் சமம் என்பது போன்றது இது. இங்கே நாட்கள் நிமிடங்களாக, நிமிடங்கள் நொடிகளாகப் பறக்கும். பல மாதங்களுக்குப் பிறகு வடநாட்டுப் பக்தர்கள் மீண்டும் வந்தனர். இன்று அவர்களின் கண்களில் மட்டுமல்ல, முகத்திலும் ஒளி படர்ந்திருந்தது.

பெரியவர்: சுவாமி, எங்களை நினைவிருக்கிறதா?

நான்: நினைவிருக்கிறது. (உங்கள் முகங்கள் என் மனதின் ஆழத்தில் பதித்தவை என்று சொல்லத் தோன்றியது)

அம்மாவைத் தரிசிக்க வந்து ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன. இதற்கிடையில் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை, அவர்களுக்கிடையில் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை, அவர்களுக்குக் கிடைத்த அம்மாவின் அருளை அவர் விவரித்தார். அவருடைய மருமகன் லாட்டரி சீட்டுக் கடை வைத்திருந்தார். இவர் அமிர்தபுரிக்கு

வந்துவிட்டுச் சென்றபின், அடுத்தமாதம் மருமகன் விற்ற லாட்டரி சீட்டிற்கு முதல் பரிசு கிடைத்தது. அதன் கமிஷனாக மிகப்பெரிய தொகை அக்குடும்பத்திற்குக் கிடைத்தது. இம்முறை அவர் சில நூறுரூபாய் நோட்டுகளையும், ஒரு வெள்ளி நாணயத்தையும் காணிக்கையாகச் செலுத்தினர்.

"அம்மாவின் அருளால் எங்கள் கஷ்டங்கள் மிகவும் குறைந்துவிட்டன. இதைப் பெற எங்களுக்கு எந்தவிதத் தகுதியும் இல்லையெனினும், அம்மா தமதருளை எங்களுக்கு வாரி வழங்கியுள்ளார்" என்றார். பெரியவர். இனிப்போ, கசப்போ எந்த அனுபவமாக இருந்தாலும் அதைப் பிரசாதமாகக் கருதி, பணிவுடனும், மனநிறைவுடனும், பிரார்த்தனை மனோபாவத்துடனும் ஏற்றுக் கொள்பவர்களே பாக்கியவான்கள்.

சுமார் 25 வருடங்களுக்கு முன்பு நடந்த இந்த நிகழ்ச்சி இப்போது என் நினைவில் வந்தபோது, அம்மா அதை எழுதத் தூண்டியது ஏனோ! சுகத்தைப் போலவே துன்பத்தையும் கைநீட்டி வரவேற்கவும், கண்ணீரிலிருந்து மலர் மலரும்படிச் செய்யவும் கூடிய மந்திரம் அம்மாவுக்கு மட்டுமே சொந்தமாகும்.

41.நாமும் நல்லவர்களாவோம்

பிர.விஜயாம்ருத சைதன்யா

"தமது வாழ்வே தாம் உலகுக்கு வழங்கும் செய்தி" என்று அம்மா கூறுவார். அம்மாவின் ஒவ்வொரு அசைவும் அந்த அளவு பொருள்பொதிந்ததாகும். அம்மா எதையும் கூறவேண்டிய அவசியமில்லை; அவரது வாழ்வே ஆன்மீக சாஸ்திரத்திற்கான விளக்கவுரையாகும் இருப்பினும், ஆன்மீகத்தைப் பற்றி அறியவேண்டும் என்று ஆவல் கொண்டோரின் கேள்விகளுக்கு அமிர்தமயமான பல உபதேசங்களை அம்மா அருளிவருகிறார்.அவை வெளிப்பார்வைக்கு மிக எளிமையாக இருப்பினும் வேதாந்தத்தின் சாரமானது மிக மென்மையான பட்டால் மூடி நமக்குத் தரப்படும் கருணையின் அன்புப் பரிசாக விளங்குவது சாஸ்திரம் படித்தவர்களுக்குப் புரியும். அதேசமயம், அந்த வார்த்தைகளின்

ஆழத்தையும், பரப்பளவையும் நாம் அளப்பதற்கு அம்மாவின் அருளின்றி முடியாது.

அம்மா, "இறைவன்மீது நாம் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும்" என்று சொல்வதுண்டு. ஆனால் நம்மிடம் ஒரு குறை இருக்கிறது. இறைவன் நமக்கு எவற்றை எல்லாம் தந்துள்ளார் என்பதை நாம் புரிந்துகொள்வதில்லை. நம்மிடம் இல்லாதவற்றைக் கண்டுபிடித்து. அவற்றை நினைத்து வருந்துவோம். இறைவனைப் பழிப்போம்.

சென்ற வருடம் அம்மாவின் கட்டளைப்படி பல பள்ளிகளுக்குச் சென்றேன். அவ்வமயம் ஒரு சிறுமியின் புத்தகம் ஒன்றை எடுத்துத் திறந்து பார்த்தபோது பல புகைப்படங்கள் அதிலிருந்து சிதறித் தரையில் விழுந்தன. அவளது தந்தை அவளுக்குக் கொடுத்த படங்கள் அவை, எந்தப் பொருளாவது வேண்டும் என்ற ஆசை அவளுக்கு எழும்போது, இவற்றைப் பார்க்குமாறு அவர் கூறியிருக்கிறார். வாழ்வின் இரண்டு நேரெதிரான எல்லைகளை எடுத்துக் கூட்டுபவையாக அவை இருந்தன. ஒரு படத்தில் ஒருபுறம், நவீன யுகத்தின் விலைமதிப்புமிக்க செருப்புகள்; மறுபுறம், ஆபிரிக்காவில் வாழும் ஒரு குழந்தையின் படம், அவன் இரு பிளாஸ்டிக் பாட்டில்களை கயிற்றால் தைத்துக் கட்டி உருவாக்கிய செருப்புகளை அணிந்துள்ளான். ஆனால், அவனுக்கு எந்தவிதக் குறையுமில்லை. இரண்டாவது படத்தில், ஒருபுறம் அளவுக்கதிகமான பருமனுள்ள ஒரு சிறுமி மற்றொருபுறம் உணவின்றி எலும்பும் தோலுமாக இருக்கும் குழந்தையின் அவலநிலை. யாரிடம் சென்று தங்கள் குறையைக் கூறுவது, ஒரு புறம் கணினியில் ஒரே மாதிரியான வீடியோ கேம் விளையாடியதால் சலிப்படையும் சிறுவனின் படம், மறுபுறம் மண்டை ஓட்டைத் தவிர விளையாட வேறு பொருள் இல்லாத குழந்தையின் படம். ஒருபுறம் நுரை மெத்தையில் படுத்து ஆனந்தமாகச் சிரிக்கும் சிறுமியின் படம் மறுபுறம், நடுத்தெருவின் மேடுபள்ளங்களும், சரளைக் கற்களும் எலும்புகளைக் குத்த. மீளாத் துயிலை எதிர்நோக்கியபடி கிடக்கும் சிறுவனின் படம்.

ஒரு செருப்புக்காக 2000 அல்லது 3000 ரூபாயை நாம் செலவழிக்கும் போது, ஒரு வேளை உணவு கிடைக்காதவர்களையோ. கொளுத்தும் வெயிலிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஒரு செருப்புக்

கிடைக்காதவர்களையோ நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. நமக்கு முன்னால் வாழும், துயரத்தில் வாடும் மக்களை ஒருமுறை திரும்பிப் பார்ப்பவர்களுக்கு, இறைவன் நமக்கு அளித்துள்ள அருளையும், ஆசியையும் புரிந்துகொண்டு நன்றி செலுத்த மட்டுமே முடியும். இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு நாளும் எந்தவித மனக்குறையும் இல்லை.

ஆனால், மனதில் ஆசை அதிகரித்தால் அங்கே புத்தி மறைக்கப்படும். இறைவன் நமக்குத் தந்துள்ளவற்றின் மதிப்பை நாம் அறியாமல் போவோம். ஒருமுறை ஒரு குருவும், சீடனும் புனித யாத்திரைக்குப் புறப்பட்டனர். கதைகள் கூறியபடியும். காட்சிகளை ரசித்தவாறும் அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்தனர். பயணத்தின் இடையில், ஒரு மலை உச்சியில் சிறிய குடிசை அமைத்து அதில் தங்கினர். ஒருநாள் பிக்ஷை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தபோது திடீரென்று பலத்த காற்றும், மழையும் வந்தன. மின்னல் வெளிச்சத்தில் மிகவும் கஷ்டப்பட்டு அவர்கள் குடிசையை அடைந்தனர். பலத்த காற்றால் குடிசையின் முக்கால் பாகம் இடிந்துவிட்டது. சீடன் வருத்தத்தால் இறைவனைக் குறை கூறினான். "எங்களுக்குப் படுத்துறங்க இருந்த ஒரே குடிசையையும் நீ இடித்துவிட்டாயே! உன்னை வணங்குவதன் பலன் இதுதானா?" அதேசமயம், குரு குடிசையின் கால்பாகம் இடியாமல் இருப்பதைக் கண்டார். அவர், "பகவானே! நீ எவ்வளவு கருணை மிக்கவன்! இவ்வளவு பலத்த காற்று, மழையிலும் நாங்கள் படுத்துறங்க இந்த இடத்தை இடியாமல் பாதுகாத்து வைத்துள்ளாயே! உனக்கு நன்றி" என்றார். அதன்பின் சீடனைப் பார்த்து, "நாம் இருவரும் படுத்துறங்க இந்த இடம் போதுமானது" என்று கூறினார். இதுதான் சரியான மனோபாவமாகும்.

நம்மிடம் இல்லாதவை எவை என்று கண்டுபிடித்து வருந்தாமல், கிடைக்காததை நினைத்து அழாமல், இறைவன் நமக்கு எவ்வெவற்றைத் தந்துள்ளார் என்பதைப் புரிந்துகொண்டு, அதற்காக அவருக்கு நன்றி கூற இயலவேண்டும்.

இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று சொல்வது ஏன்? நன்றி கூறினால்தான் இறைவன் அருள்புரிவாரா? நம்மைப் போல் நன்றி கூறும் போது மகிழ்பவரா இறைவன்? ஒருநாளும் இல்லை. இறைவனுக்கு நம்முடைய நன்றி தேவையில்லை. ஆனால், நன்றி கூறுவதன் பின்னால் ஒரு தத்துவம்

இருக்கிறது. நாம் எப்போது நன்றி கூறுகிறோம்? நாம் பேருந்திற்காகக் காத்து நிற்கும் போது ஒரு கார் வந்து நம் அருகில் நிற்கிறது. அதன் உரிமையாளர் நம்மைக் காரில் ஏற்றிச் சென்று நாம் செல்ல வேண்டிய இடத்தில் இறக்கிவிடுகிறார். இறங்கிச் செல்லும் வேளையில் நாம் அந்தக் காரின் உரிமையாளரை நோக்கி, "மிக நன்றி, பேருதவி புரிந்தீர்கள்" என்று கூறுவோம். அதேசமயம், நமது சொந்தக் காரில் பயணம் செய்யும் நாம் நம்முடைய டிரைவருக்கு நன்றி சொல்வதில்லை. ஏனெனில், அது நம் பணத்தைக் கொடுத்து வாங்கிய கார், நாம் சம்பளத்திற்கு வைத்துள்ள டிரைவர் என்ற எண்ணம் நம் உள்ளத்தில் இருக்கிறது. அதனால் நாம் நன்றி சொல்வதில்லை. நாம் எதிர்பாராத ஒரு உதவி கிடைக்கும்போதுதான் நாம் நன்றி சொல்கிறோம். நன்றி சொல்லும் போது. நாம் பெறுவதற்கு எந்தவிதமான தகுதியோ, உரிமையோ இல்லாத ஒரு உதவி நமக்குக் கிடைத்தது என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். நமது திறமையால் அது கிடைக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்கிறோம். கிடைத்த உதவியானது. நமக்கு உதவியவரின் கருணையால் கிடைத்தது என்பதை அறிகிறோம். இதுபோல் நாம் அனுபவிக்கும் சுக சௌகரியங்கள் எல்லாம் உண்மையில் நமக்கு தகுதி உள்ளதால் கிடைத்தவை என்று சொல்வதற்கில்லை. காரணமின்றிக் கருணை பொழியும் கடலான இறைவனால் எதைத்தான் அளிக்க முடியாது? நாம் இறைவனுக்கு நன்றி கூறும்போது, நமக்கு அனைத்தையும் வழங்குபவர் இறைவன் என்ற உண்மையை அங்கீகரிக்கிறோம். நம் செழிப்பின் காரணமாகத் திகழ்பவர் இறைவன் என்பதை நாம் உணர்கிறோம். (வார்த்தைகளால் நன்றி கூறவேண்டும் என்பதில்லை. மனோபாவம் தான் முக்கியம்) இவ்வாறு செய்யவில்லை எனின், நம்முடைய திறமையால் தான் அந்த உதவி கிடைத்தது என்று நம்மையறியாமல் நாம் கருதிவிடுவோம். சிறிதளவு சாஸ்திரம் படித்தவராக இருந்து விட்டாலோ, இவற்றைப் பெறுவதற்கான எல்லாத் தகுதிகளும் எனக்கு உண்டு எனக் கருதி அகந்தை கொள்வோம். அது இறை அருளைப் பெறுவதற்குத் தடையாகும். மாறாக, நன்றி கூறுவதோடு, நாம் பெற்ற எல்லாச் சிறப்புகளுக்கும் காரணம் இறைவனே என்று கருதினால், அது கர்மயோக அனுஷ்டானமாக மாறும். கர்மயோகத்தின் மூலமே ஆன்மிகம் துவங்குகிறது. ஒவ்வொன்றைப் பெறும் போதும், நான் இறைவனின் கைகளில் ஒரு கருவியே என்று உணர்வது மனத்தூய்மைக்கு வழிவகுக்கிறது, நம்முடைய நன்றி வெளிப்பாடு. அனைத்தும் இறைவடிவமே என்று அறியும் உயர்நிலையை அடைவதற்கான படிக்கட்டுக்களாக மாறும்.

நம்முடைய மனதில் நிறைந்துள்ள அறியாமை இருளானது இதை அறிவதற்குத் தடையாக நிற்கும். இன்று ஆசை, கோபம் என்னும் கார்மேகங்கள் நம்முடைய மனதிலுள்ள இறைவன் என்னும் கதிரவனை மறைத்திருக்கின்றன. ஆனால், பயப்பட ஏதுமில்லை. எந்தக் காற்றானது மேகத்தைக் கொண்டுவந்து சூரியனை மறைக்கிறதோ, அதே காற்று மேகத்தை விலக்கி சூரியன் பிரகாசிக்கவும் உதவும். அதுபோல், எந்த மனதின் அறியாமை இருள் நம்முடைய உண்மை வடிவை மறைத்ததோ, அதே மனதில் நற்சிந்தனைகள் எழுந்தால், விவேகம் தோன்றினால் அது அறியாமை இருளை நீக்கி, நமது மெய்வடிவைக் காட்டித் தரும். இதற்கான மிக எளிதான மார்க்கம் நம்முடைய உள்ளத்தில் அம்மாவை, சத்குருவை எழுந்தருளச் செய்வதாகும்.

காம, குரோதங்களின் கட்டுகளை அறுப்பது மிகக் கடினமான செயல் என்றாலும், அம்மாவின் சாந்நித்தியத்தில் அது மிக எளிதாகும். கம்ஸனின் சிறைச்சாலையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் பிறந்த போது, வசுதேவரைப் பிணைத்திருந்த சங்கிலிகள் உடைந்து சிதறின. அதுபோல் நம் உள்ளத்தில் குரு தோன்றினால், அதாவது நம் உள்ளத்தில் அம்மாவுக்கு இடமளித்தால், முண்ட கோப நிஷதம் கூறுவது போல் சித்யந்தே ஸர்வ ஸம்சயா (எல்லாச் சந்தேகங்களும் அகலும்) நம்முடைய மனதின் எல்லாப் பிணைப்புக்களும் நீங்கி, சந்தேகங்கள் அனைத்தும் அகலும்.

மனதில் தீய சிந்தனைகளின் எழுச்சி உண்டாகும் போதும் அம்மாவின் நினைவுகள் நம் உதவிக்கு வரும். வஸுதேவர் பகவானைத் தலையில் தாங்கி யமுனை நதியைக் கடக்க முயற்சி செய்தபோது முதலில் மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால், யமுனை நீரைப் பகவான் தமது திருப்பாதங்களால் தீண்டியதும், பொங்கிப் பெருகிவந்த நதி அமைதியடைந்தது. பகவானுக்கு யமுனை வழிவிட்டது. அதுபோல், நம்முடைய மனதில் அம்மாவின் திருப்பாத நினைவுகள் இருந்தால் மனதில் ஆசை, கோபம் போன்றவற்றின் அடங்காத அலைகள் எல்லாம் அடங்கிவிடும். யமுனை வழிவிட்டதுபோல் எல்லா எதிரான சூழ்நிலைகளும் நமக்கு வழிவிடும்.

ஆனால், சிலர், "நான் பல தவறுகள் செய்திருக்கிறேன். இறைஅருளைப் பெற எனக்குத் தகுதி இருக்கிறதா?" என்று சிந்திக்கக் கூடும். சங்கராச்சாரியாரின் தேவி அபராத க்ஷமாபண ஸ்தோத்திரத்தில் ஆதிசங்கரர் பின்வருமாறு பிரார்த்தனை செய்கிறார்.

"ப்ருதிவ்யாம் புத்ரஸ்தே ஜனனி
பஹவ; ஸந்தி ஸரளா
பரம் தேஷாம் மத்யே
விரளதரளோஹம் தவ ஸுத:
மதீயோயம் த்யாக: ஸமுசிதமிதம்
நோ தவ சிவே
குபுத்ரோ ஜாதை க்வசிதபி குமாதா
ந பவதி"

ஏ அம்மா! ஜகதம்பா! எண்ணற்றோர் உனது பக்தர்கள், அவர்களுக்கு இடையில் மிக அற்பமானவனும், விவேகமற்றவனுமான ஒரு மகன் நான். என்னைக் கைவிடுவது உனக்கு அழகல்ல, ஏனெனில், தீய குழந்தைகள் உலகில் காணப்படலாம். ஆனால், குணமற்ற தாய் ஒருநாளும் இருக்க மாட்டாள்.

அதுபோல், தவறு செய்யாதவர் யாருமில்லை. ஆனால், அம்மாவுக்கு நம்மைக் காப்பாற்றவே முடியும், குறைகளைச் சிந்தித்து பிறவியை வீணாக்குவது சரியல்ல, துன்பமெனும் படுகுழியில் தானே சென்று விழுவது கூடாது.

வாழ்வில் எல்லாம் நாம் எதிர் பார்ப்பது போல் நடக்கவேண்டும் என்பதில்லை. அது ஒருநாளும் நடவாத காரியமாகும். உயர்வும், தாழ்வும் வாழ்வில் இயல்பானவை. ஒரு உயர்வு இருந்தால் தாழ்வும் உண்டு. பரிசை விரும்பினால் தண்டனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். துன்பம் வேண்டாம் என்றால், சுகமும் வேண்டாம் என்று விலக்க வேண்டும். ஒன்றை ஏற்றுக்கொண்டால் மற்றொன்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்று மட்டும் கிடைப்பது இயலாத செயல், சொல்லப் போனால், ஒருவிதத்தில் சிறிதளவு துக்கம் இருப்பது நல்லது எனலாம். இல்லாவிடில் நாம் அனைவரும் இறைவனை மறந்துவிடுவோம். தேவலோக அனுபவம் அதையல்லவா சுட்டிக்காட்டுகிறது. தேவர்களில் பெரும்பாலோர் இறைவனை நாடுவதில்லை. ஏனெனில், அங்கே துயரமில்லை. நோய் நொடிகளில்லை. நரை திரைகள் இல்லை. என்றும் சுகபோகத்துடன் வாழ்கிறார்கள். அதனால் அவர்கள் இறைவனைத் தேட முனைவதில்லை. இவ்வாறு மதி மறந்து வாழும்போது அஸுரர்கள் படையெடுத்து வருவர். வேறு வழியில்லாத நிலையில் அனைவரும் இறைவனைச் சரணடைவர். துன்பமே பெரும்பாலும் நமது கண்கள் திறக்க வழிசெய்கிறது.

ஒரு ஜீவன் மனிதப்பிறவி கிடைக்க பல்லாயிரம் பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பலன் தேவை என்று சநாதன தர்ம சாஸ்திரம் சொல்கிறது. அதிர்ஷ்டவசமாக, இம்முறை நமக்கு அந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஆனால் மனிதப்பிறவியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் நாம் இறந்து போகிறோம். ஸ்ரீமத் பாகவதத்தில்

நிருதேஹமாத்யம் ஸுலபம் ஸு
துர்லபம்
ப்லவம் ஸுகல்பம் குரு
கர்ணதாரம்
மயானுகூலேன நபஸ்வ தேரிதம்
புமான் பவாப்திம் ந தரேத் ஸ;
ஆத்மஹா

ஸ்ரீமத் பாகவதம் 11:20:17

மனித உடலானது பிறப்பு இறப்புகளும், நோய்நொடிகளும் நிறைந்த, மிகுந்த துன்பம் நிறைந்த இந்த சம்சாரக் கடலைக் கடப்பதற்கு உரிய தோணியாகும். இங்கே தோணியில் பயணம் செய்வது ஜீவனாகும். கருணையே வடிவான குருவே ஜீவனை லட்சியத்தை அடையச் செய்வதற்குப் படகோட்டியாக வருகிறார். குருவின் கருணையாகும் காற்று நமக்கு சாதகமாக வீசுகிறது. இச்சூழ்நிலையில் இந்த சம்சாரக் கடலைக் கடக்க நமக்குக் கஷ்டப்பட நேரிடாது. ஆனால், இவ்வளவும் இருந்தும் சிறிதளவும் அதற்காக முயற்சி செய்யாதவர்களை தற்கொலை செய்து கொள்பவர்களின் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஆரோக்கியமுள்ள உடல் நமக்கு இருக்கிறது. கருணை பொழிவதற்குத் தயாராக அம்மா நம்முடன் இருக்கிறார். நம்முடைய பக்கத்திலிருந்து சிறிதளவு முயற்சி மட்டும் நமது வாழ்வைப் பொருள் பொதிந்ததாக மாற்றப் போதுமானது. மனிதனாகப் பிறந்துவிட்டு ஒரு மகாகுருவின் சாந்நித்தியத்தைப் பயன்படுத்த முடியவில்லை என்றால், அவர் அருளுக்குப் பாத்திரமாக முடியவில்லை என்றால் அது தற்கொலையே ஆகும்.

தற்கொலை செய்து கொள்பவர்களின் பட்டியலில் சேராமல் இறைவன் நமக்குத் தந்துள்ளவற்றை நன்கு புரிந்துகொண்டு இறைவனுக்கு நன்றி கூறி, நற்சிந்தனைகளுடன் அம்மாவுக்கு மனதில் ஒரு இடம் அளித்து, அவரது அருளுக்கு நாம் பாத்திரமாவோம்.

42.சம நோக்கு

பிர.ராம்குமார்

சமர்த்த ராமதாஸ் ஒரு நாள் பிக்ஷைக்குச் சென்றார். ஒரு பெண் தனது வீட்டுத் திண்ணையை சாணியால் மெழுகிக்கொண்டிருந்தாள். "பவதி பிக்ஷாம் தேஹி" என்று ராமதாசர் குரல் கொடுக்க, சாணித்துணியை ராமதாஸ் ஸ்வாமியின் முகத்தில் வீசி எறிந்தாள் அவள்.

ஸ்வாமி அந்தத் துணியை எடுத்துச் சென்று நன்றாகத் துவைத்தார். பின்னர், நூல் நூலாக எடுத்துத் திரித்தபின் அத்திரியால் சிவன் கோவிலில் தீபமேற்றினார். இறைவா! அந்தத் தாய்க்கு என்ன கஷ்டமோ தெரியவில்லை. அவளைக் காப்பாற்று என்று உள்ளம் உருகி வேண்டினார். தனக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்தார் அவர்.

இதே போல், புத்தர் ஒருநாள் பிக்ஷைக்குச்சென்றார். ஒருமனிதன் அவர் மீது காறித் துப்பினான். புத்தர் முகத்தைத் துடைத்துக் கொண்டு, "இன்னும் ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?" என்று வினவினார். புத்தருடன் சென்ற ஆனந்தனுக்குக் கோபமாக வந்தது. அவர் புத்தரிடம், "பகவானே தாங்கள் அனுமதி தாருங்கள். அவனுக்கு நான் நல்ல பாடம் புகட்டுகிறேன்" என்று சொன்னார். புத்தர் அமைதியான குரலில், "சொற்களால் தனது உணர்ச்சிகளை சரிவர விளக்க முடியாத காரணத்தால், செயல்மூலம் அவற்றை வெளிப்படுத்தினான். அது அவன் குற்றமல்ல, மொழியின் குற்றமே" என்றாராம்.

ஆனால், அன்று இரவு முழுவதும் அந்த மனிதனால் தூங்கவே முடியவில்லை. நாம் முகத்தில் துப்பினபோதும் அவர் அமைதியாக இருந்தாரே என்று நினைத்து வருந்தினான். மறுநாள் காலை, புத்த பகவானைக் காண ஓடோடி வந்தான். பகவான் குளித்துவிட்டுக் கரை ஏறிக் கொண்டிருந்தார். அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

புத்தரின் இடத்தில் நாமிருந்தால் என்ன செய்திருப்போம்? ஒரு பத்திரிகையாளர்கள் கூட்டம் நடத்தி நமது மகிமையைத் தண்டோரா போட்டிருப்போம். ஆனால், புத்தர் என்ன சொன்னார் தெரியுமா? "இவர் இப்போதும் ஏதோ உணர்ச்சிபெருக்கான நிலையிலிருக்கிறார். அதுதான்

இப்படி நடந்து கொண்டார். உணர்ச்சிகளை வெளிப்படுத்த வாக்குகள் பலவீனமானவை'' என்றார்.

புத்தபிரான், அந்த மனிதன் துப்பியதை எப்படிப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லையோ, அதேபோல் அவன் காலில் விழுந்ததையும் பெரிதாகக் கருதவில்லை.

இதைத்தான் நமது ஆகமங்கள், 'சமசித்ததை' (சமநோக்கு) என்று கொண்டாடுகின்றன. அதாவது எந்தச் சூழ்நிலையிலும் மனதின் சமநிலையை இழக்காதிருப்பது என்பது அதன் பொருள். ஏதாவது துக்கம் வரும் போது, நீர்மூழ்கிக் கப்பல் போல் நமது மனது துக்கத்திலேயே ஆழ்ந்துவிடுகிறது. மகிழச்சியான சூழ்நிலையிலோ, நாம் விண்ணிற்கும் மண்ணிற்கும் குதித்து, என் திறமையால்த்தான் வென்றேன் என்று மார்தட்டிக் கொள்கிறோம். இந்த மாறுபட்ட மனோபாவங்கள் நமது மனதின் பக்குவமின்மையை எடுத்தியம்புகின்றன.

பகவத்கீதையில் எத்தனையோ முக்கியமான தத்துவ உபதேசங்கள் இருப்பினும், ''வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் சமநோக்கு வேண்டும். சமத்துவமே யோகமாகும்'' என்கிறது, அதாவது ''சமத்வம் யோகமுச்யதே'' என்ற உபதேசமே மிகவும் முக்கியமான உபதேசமாகும், என்று அம்மா சொல்வதுண்டு. அம்மாவின் வாழ்வு, சமநோக்கின் உத்தமமான உதாரணமாக நம் முன் விளங்குவதை நாம் காணலாம். அம்மா முள்பாதையில் தான் நடந்து வந்துள்ளாா, என்ற உண்மை அம்மாவின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும். அம்மாவின் உயர்ந்த ஆன்மிக நிலையைப் புரிந்து கொள்ளாத சுற்றமும், சமூகமும் அவருக்குத் தீங்கிழைத்துத் தோற்றுப் போயின.

அண்மையில் அமிர்தபுரிக்கு வந்திருந்த அமெரிக்கப் பிரபல தொலைகாட்சி சேனல்களில் ஒன்றான ஏ.பி.ஸியின் பெண் நிருபர் அம்மாவிடம், அம்மா! சிறுவயதில் உங்களுக்கு தீங்கிழைத்தவர்களிடம் உங்களது மனோ பாவம் எப்படியிருந்தது? என்று கேட்டார்.

அம்மா சொன்னார். ''அவர்கள் தீங்கிழைக்கிறார்கள் என்ற சிந்தனையே அம்மாவிற்கு இருந்ததில்லை. அம்மாவிற்கு அது ஒரு பொருட்டாகவே தோன்றவில்லை. தனது பிஞ்சுக் கால்களால் ஒரு குழந்தை தாயின் மார்பில்

எட்டி உதைக்கும் போது தாய்க்கு அந்தக் குழந்தை மீது சினம் வருமா என்ன? உதைத்த காலை அன்போடு முத்தமிடுவாள், அம்மாவின் மனோபாவமும் அதுபோலத்தானிருந்தது'' இதைக் கேட்ட எங்களால் கண்ணீரை அடக்க முடியவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் அம்மா பஜனை பாடிக்கொண்டிருந்த போது, அம்மாவை நோக்கி ஒரு இளைஞன் கத்தியோடு ஓடிவந்தான், நாங்கள் அவனை அப்புறப்படுத்தினோம். அம்மாவோ ஒன்றுமே நடக்காதது போல் தொடர்ந்து பஜனை பாடிக் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்ததே அன்று பஜனை ஹாலில் கூடியிருந்த ஆயிரமாயிரம் பக்தர்களுக்குத் தெரியாது. அவனை நாங்கள் காவலர்களிடம் ஒப்படைக்க முனைந்தபோது, 'போகட்டும் விடுங்கள்' என்றார் அம்மா.

பல ஆண்டுகளுக்கு முன், இதே போல் தன்னைக் கொல்ல வந்தவனை மன்னித்தது மட்டுமல்லாமல், அவனை மருத்துவமனையில் சென்று கண்டு, அவனுக்கு ஆறுதலளித்தார் என்று நாம் அம்மாவின் வாழ்க்கை வரலாற்றில் படித்திருக்கிறோம். கல்லூரி நாட்களில் அம்மாவின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலாகப் படிக்கும் பாக்கியம் கிடைத்த எனக்கு அம்மாவிற்குத் தீங்கிழைத்த எல்லோர் மீதும் சொல்லொணா சினம் வந்தது. ஆசிரமத்தில் சேர்ந்து எத்தனையோ ஆண்டுகள் கழிந்த பின்னும், அம்மாவின் சுற்றத்தார் மீதிருந்த சினம் போகவே இல்லை. எனது இதே மனோபாவம் பல பிரம்மச்சாரிகளிடமும் இருந்தது. ஆனால் அம்மாவின் சுற்றத்தாரிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றத்தைக் காண எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அன்று அம்மாவை எதிர்த்தவர்கள். இன்று 24மணி நேரமும் அம்மாவிற்காகச் செயலாற்றுகிறார்கள். சுனாமி நிவாரணத்தின் போது இதை நாங்கள் தெளிவாக காண முடிந்தது. அம்மாவிடம் மடத்தின் மீதும், ஆசிரமவாசிகள் மீதும் அவர்கள் அளவு கடந்த அன்பு கொண்டுள்ளார்கள். ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், அவர்களின் மனமாற்றத்திற்குக் காரணம் அம்மாவே என்பது நமக்குப் புரியும். அவர்கள் அம்மாவை எதிர்த்தபோதும், அம்மாவிற்குப் பல தொல்லைகள் கொடுத்தபோதும் அவர்களை அம்மா வெறுக்கவில்லை. அறியாமையால் செய்யும் செயலாகக் கருதி அவர்களை மன்னித்து அரவணைத்தார். அம்மா அவர்களை நிராகரிக்காமல் அவர்களையும் தனது மக்களாக ஏற்றுக் கொண்டதால் தான் பிற்காலத்தில் அவர்கள் மனம் மாற முடிந்தது.

பழுதாகிவிட்ட கடிகாரம் கூட ஒருநாளைக்கு இருமுறை சரியான நேரம் காட்டும். 10 கொலைகளைச் செய்த கொலையாளி கூடத் தனது குழந்தைச் செல்வத்தைக் காணும்போது மனதில் அன்புப் பெருக்கை உணர்வான். அவனுக்குள்ளும் அன்பிருக்கிறது என்பது தெளிவாகிறதல்லவா? "தீப்பொறி அளவே உள்ள அவ்வன்பை ஊதி ஊதிப் பெரிதாக்கினால், அவனுள் உள்ள அறியாமை என்னும் காட்டை அழித்துவிடமுடியும்" என்று அம்மா சொல்வதுண்டு. சமநோக்குள்ள ஒரு மகானால் மட்டுமே இப்படி இயம்பவும் அதுபோல் வாழ்ந்து காட்டவும் இயலும்.

சென்ற ஆண்டு, அம்மா ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டிருந்த போது, கேரளத்தில், தன்னைப் பகுத்தறிவுவாதி என்று கருதும் ஒரு நபர் அம்மாவைப் பற்றி மிகவும் மோசமான முறையில் மேடையில் பேசினார். அவரது விமரிசனங்கள் பல பத்திரிகைகளில் வெளியாயின. ஆசிரமவாசிகளும், பக்தர்களும் இதனால் மிகுந்த மனவேதனையும், கோபமும் கொண்டார்கள். பல பக்தர்கள் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும், தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். உடனடியாக, தன்னை விமரிசித்தவரை எதிர்த்து பக்தர்களோ, ஆசிரமவாசிகளோ தொலைபேசி மூலமாகவோ, கடிதங்கள் மூலமாகவோ எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கக் கூடாது என்று ஐரோப்பாவிலிருந்து அம்மாவின் அன்புக் கட்டளை வந்தது. வேறு வழியின்றி எல்லா எதிர்ப்புகளும் அடங்கின. இது நடந்து சில நாட்களில் அம்மா எனக்கு போன் செய்தார். நான் எனது மனக்குமுறலை அம்மாவிடம் கொட்டித்தீர்த்தேன். "அம்மா ஏன் இப்படி எல்லோரின் கைகளையும் கட்டிவிட்டீர்கள் தங்களின் தாயைப் பழிப்பவனை எந்த மகனாவது சும்மா விடுவானா? அவனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டாமா?" அம்மா சமூகத்திற்குச் செய்யும் நற்பணிகளில் கோடியில் ஒரு அம்சமாவது அவன் செய்திருக்கிறானா? அம்மாவை விமர்சிக்க அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று புலம்பினேன். அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட அம்மா "நீ சொல்வதிருக்கட்டும். அவனும் என்மகன் தானே! அம்மாவை எதிர்த்துப் பேசுவதால் அவனுக்குக் கொஞ்சம் பணம் கிடைக்கும் என்றால் கிடைத்துவிட்டுப் போகட்டுமே! பிறரது தூண்டுதலால் தான் அப்படிப் பேசினான். பாவம்!" என்றார் அம்மா. தொடர்ந்து "நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல், சாதனையில் கவனம் செலுத்தினால் போதும்" எனச் சொல்லித் தொலைபேசியை வைத்துவிட்டார். நான் வாயடைத்து நின்றேன்.

அந்த மனிதரின் மனதில் இதுவரை எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்றாலும், "நான் எவ்வளவுதான் மாதா அமிர்தானந்தமயியை விமரிசித்துப் பேசினாலும், அவர் என்னை எதிர்த்து ஒரு வார்த்தை கூட இதுவரை பேசியதே இல்லை, அவரின் மனோபாவம் பாராட்டுதலுக்குரியது" என்று அண்மையில் சொல்லியிருக்கிறார். அவரது உள்மனதில் ஏதோ ஒரு மூலையில் அம்மாவின் அன்பு ஒரு சிறிய அளவிலாவது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே தோன்றுகிறது.

தன்னைக் கொல்ல வந்தவனையும், தன்னை எதிர்த்தவரையும், தன்னை விமரிசிப்பவனையும், மகனே! என்றழைத்துப் பொறுத்தருள அம்மாவைப் போன்ற சமநோக்குள்ள மகான்களால் மட்டுமே இயலும். **பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே** என்று பாரதியார் பாடியதை அம்மா இதோ வாழ்ந்து காட்டுகிறார்.

"அன்றும் இன்றும் உங்களுக்கு இயலாது போனதாகத் தோன்றுவது யாது?" என்று ஒரு பத்திரிகையாளர் அம்மாவிடம் கேட்க, "அன்றும், இன்றும் என்றும் யாரையும் வெறுப்பது எனக்கு இயலவே இயலாது" என்று பளிச்சென்று அம்மா சொன்னார். அம்மாவின் இந்த உன்னத நிலையைப் பற்றி நம்மால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது. பிறரை வெறுப்பது நமது சகஜநிலையாக இருக்கிறது. பரிதாபகரமான இந்த நிலையிலிருந்த நம்மை அம்மா கைபிடித்து அந்தப் பேரன்புப் பெருநிலைக்கு கொண்டு செல்வாராக! நாமும் ஒருநாள் சமநோக்கு பெறுவோமாக.

43. அகத்தூண்டுதல்

பிரம்மசாரிணி டாக்டர்.ப்ரியா

கதிரவன் உதயமானதும் தாமரை இயல்பாக மலர்வதுபோல், ஒரு சற்குருவின் சாந்நித்தியத்தில் அகமுகமான மாற்றம் மிக இயல்பாக நிகழ்வதாக மறைகள் ஓதுகின்றன. அம்மா அத்தகு மாபெரும் மாற்றத்தை உலகெங்கிலும் ஏற்படுத்தி வருகிறார். அம்மாவின் மனிதநேயத் தொண்டுகள் எண்ணிக்கையில் அடங்காதவை. அதற்கும் மேலாக, வழியறியாது மனம் வாடும் லட்சக்கணக்கான பக்தர்களை அம்மா அரவணைத்து ஆறுதல் அளித்துவருகிறார். இது உடலளவில் அம்மா நடத்தி வரும் அதியற்புத செயலாகும். ஆனால், இவை அனைத்திற்கும் மேலாக. நமது சிந்தனைக்கு அப்பாற்பட்ட பரிமாணம் ஒன்று உள்ளது. அது பிறருக்கு நன்மை புரிதல், குறைந்தபட்சம் அம்மாவின் தியாகம் நிறைந்த வாழ்வின் ஒரு துளியாவது தனது வாழ்வில் செயல்படுத்தவேண்டும் போன்ற நல்விருப்பங்களை மக்கள் மனதில் தூண்டுவதாகும். அம்மாவின் மனிதநேயத் தொண்டுகளை நம்மால் கணக்கெடுக்க இயலலாம். அதுபோல், அம்மா இதுவரை எத்தனை பேரை அரவணைத்து ஆறுதல் அளித்துள்ளார். என்ற எண்ணிக்கையை அறிவதிலும் வெற்றி பெறக்கூடும். ஆனால், எத்தனை இதயங்களில் அம்மா நற்சிந்தனைகளை எழுப்பியுள்ளார் என்பதைக் கணக்கெடுக்கவே முடியாது. பிறருக்கு வழங்கும் இன்பத்தின் சிறப்பை அம்மா, முதியவர், இளையதலைமுறை, சிறார்கள் என்ற பேதமின்றி லட்சக் கணக்கானோர் இதயங்களில் விழிப்புறச் செய்து வருகிறார்.

ஒரு நிருபர் அம்மாவிடம், "இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை" போன்ற நாடுகளில் சுனாமி ஏற்பட்ட போது, பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிக்காண 200 கோடி ரூபாய்க்கும் மேலாக அம்மா செலவழித்ததாக கேள்விப்பட்டேன். அத்துடன் அமெரிக்காவில் ஏற்பட்ட கத்ரீனா புயல் நிவாரணம், புஜ்ஜில் பூகம்பம் ஏற்பட்ட போது மூன்று கிராமங்களை தத்து எடுத்தது. மற்றும் பல இயற்கைச் சீற்றங்களின் போது உடலாலும், பணத்தாலும் சேவை செய்தது பற்றியும் அறிந்தேன். இவ்வளவு பணம் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று கேட்டார். அம்மாவின் பதில் எளிமையானதாகவும், பொருள் பொதிந்ததாகவும் இருந்தது. அம்மா, இவ்வுலகின் பல்வேறு பாகங்களில் உள்ள அம்மாவின் குழந்தைகளின்

முயற்சியால், அவர்களின் உதவியுடன் ஆசிரமம் இவ்வளவு பெரிய தொகையை செலவழிக்க முடிந்தது என்றார். இது ஒரு மகானின் சாந்நித்திய மகிமையாகும். இவ்வுலகில் பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பப்படுவதைக் காணும் போதும், நாம் சுயநலச் சிந்தனையுடன் தான் வாழ்ந்து வருகிறோம். ஆனால், அம்மாவோ தனது வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் பிறர் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுகிறார். இதைக் காணும்போது, நாம் முயற்சி செய்தால், நிச்சயமாக நம்மிடம் நல்லதொரு மாற்றம் ஏற்படும் என்பதைப் புரிந்துகொள்கிறோம். கொடுப்பதில் இருக்கும் இன்பத்தை உணர்கிறோம். இவ்வுலகில் அம்மா ஏற்படுத்திவரும் மிகப்பெரிய மாற்றம் இதுவாகும்.

அம்மாவின் முன்னுதாரணத்தால் கவரப்பட்ட பலரைப் பற்றிய சம்பவங்கள் உள்ளன. அவற்றுள் என் நெஞ்சை நெகிழச்செய்த சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சில வருடங்களுக்கு முன்பு அம்மா அமெரிக்காவிலுள்ள சியாட்டிலுக்கு விஜயம் செய்தார். அப்போது ஒரு பெண்மணி முதல்முறையாகத் தனது ஆறுவயது மகளுடன் அம்மாவைத் தரிசிக்க வந்தார். தரிசனம் முடிந்தபிறகு அச்சிறுமி அழ ஆரம்பித்தாள். தாயார் அவளைத் தேற்றுவதற்குப் பல வழிகளில் முயன்றும், பலனேதுமில்லை. அவள் எதற்காக அழுகிறாள் என்பதை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. இறுதியில், அவளது கண்ணீர் அம்மாவின் கவனத்தை ஈர்த்தது. அம்மா அவளைத் தன்னருகில்அழைத்தார். சிறுமியின் கண்ணீரைத் துடைத்தபடி அவளது அழுகைக்கான காரணத்தைக் கேட்டார். சிறுமி, "சிலர் என்னிடம் நீங்கள் தெய்வீகத் தாய் என்றும், கேட்டதை வழங்கும் கற்பகமரம் போன்றவர் என்றும் சொன்னார்கள். நான் விரும்புவதை நீங்கள் உண்மையிலேயே எனக்குத் தருவீர்களா?" என்று கேட்டாள். அம்மா சிரித்தார். பின்னர். "நான் முயற்சி செய்கிறேன் நீ கேட்க விரும்புவது என்ன?" என்று கேட்டார். அதற்கு அவள், நான் உங்களைப் போல் ஆக விரும்புகிறேன். ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியை அளிப்பதன் மூலம் இவ்வுலகைக் காக்க விரும்புகிறேன்" என்றாள். என்ன அருமையான விருப்பம்! அதுவும் ஆறுவயது சிறுமிக்கு! நம்மில் பெரும்பாலோர் கற்பகமரத்தைக் காண நேர்ந்தால், இச்சிறுமி கேட்டது போன்ற வரத்தை நிச்சயமாகக் கேட்கமாட்டோம். இவ்வரத்தைக் கேட்க அச்சிறுமிக்குத் தூண்டுதலாக அமைந்தது எது? அதுதான் அம்மா. அம்மாவுடன் செலவிட்ட சில நொடிகளில்

அச்சிறுமியின் களங்கமற்ற உள்ளத்தில் தன்னலமற்ற, தூய விருப்பம் எழுந்தது.

ஐரோப்பாவில் உள்ள ஒரு பெண்ணுக்குப் பக்கவாதத்தால் இடுப்புக்குக் கீழே உள்ள பகுதி செயலிழந்துவிட்டது. இதனால், அவள் எப்போதும் சக்கர நாற்காலியைப் பயன்படுத்த நேர்ந்தது. அம்மாவைத் தரிசித்தபோது, அவளுக்கு சேவை செய்யும் விருப்பம் எழுந்தது. ஆனால், அவளது உடல் நிலையோ சேவை செய்வதற்கு ஏற்றதாக இல்லை. அவள் அம்மாவின் அருகில் அமர்ந்து, பஜனையைக் கேட்டு மகிழ்ந்திருக்கலாம். மாறாக, ஏதாவது சேவை செய்வதில் அவள் உறுதியாக இருந்தாள். அவள் ஒரு அட்டையில், 'சேவை' என எழுதிக் கையில் பிடித்துக் கொண்டு, நிகழ்ச்சி நடைபெறும் ஹாலிற்குள் சுற்றி சுற்றி வந்தாள். அவள் கையில் சேவை என்ற குறிப்பைத் தாங்கிய அட்டையைக் கண்ட மக்கள் அவளருகில் சென்று அதைப் பற்றி விசாரித்தனர். அதற்கு அவள், "நம் ஒவ்வொருவரிடமும் இவ்வுலகில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஆற்றல் இருப்பதாக அம்மா கூறுகிறார். ஒவ்வொரு தனிமனிதனும் நற்செயலாற்ற முடியும். என்னைப் பாருங்கள் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், நீங்கள் பாக்கியம் செய்தவர்கள் நல்ல ஆரோக்கியமுள்ள உடல் உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த பாக்கியத்தை நீங்கள் உணர்வீர்கள் என்றும், குறைந்த பட்சம் சிறிதளவு நேரத்தையாவது பிறரது சேவைக்காக ஒதுக்கப் பயன்படுத்துவீர்கள் என்றும் நம்புகிறேன்" என்று பதிலளித்தாள். இவ்வார்த்தைகள் கேட்டவர்களின் மனதைக் கவர்ந்தது, சேவையில் இவளுக்கிருந்த ஆர்வத்தைக் கண்டவர்களில் சிலர், அம்மாவிடம் சென்ற போது, இந்தியாவுக்கு வந்து தன்னலமற்ற தொண்டாற்ற விரும்புவதாகத் தெரிவித்தனர். நிகழ்ச்சி முடிந்து அம்மா சென்ற பிறகு, அந்தப் பெண் "அம்மா இங்கிருந்து சென்றுவிட்டார் என்பதற்காக நான் ஏன் எனது சேவையை நிறுத்தவேண்டும்?" என்று நினைத்தாள். எனவே அவள் தினசரி ஒரு மணிநேரம் சக்கர நாற்காலியைத் தானே இயக்கியபடி சாலைகளில் சென்று இதே சேவையைச் செய்து வந்தாள். இந்தப் பெண்ணைச் சந்தித்த ஐந்து பேர் தன்னார்வத் தொண்டாற்றுவதற்காக அமிர்தபுரி ஆசிரமத்திற்கு வந்தனர். அங்கு அமிர்த குடீரத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வீடுகட்டும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள சான்ரமோன் நகரில் ஒரு பாடகர் இருக்கிறார். பனிச்சறுக்கு விளையாட்டின் போது ஏற்பட்ட பெரும் விபத்தில் இவரது நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டது. முகவாய்க்கட்டைக்குக் கீழே உள்ள உடல் பாகங்கள் அனைத்தும் செயலிழந்துவிட்டன. அவரால் கண்களை மட்டுமே அசைக்க முடிந்தது. கடந்த பல ஆண்டுகளாக அவர் அம்மாவைத் தரிசித்து வருகிறார்.

தனது இசைத் திறமையைப் பயன்படுத்தி அம்மாவின் சேவைகளுக்கு தன்னால் ஆன சேவையை ஆற்ற முடியவில்லையே என வருந்தினார். இத்துன்பம் தாங்க முடியாததாக ஆயிற்று. அப்போது அவரது மனதில் ஒரு திட்டம் வடிவெடுத்தது. அதன்படி அவர் ஆங்கில எழுத்துகளைக் கண் அசைவுகளின் மூலம் வெளிப்படுத்த முதலில் கற்றார். தொடர்ந்து ஆங்கில இசையின் ஒவ்வொரு ஸ்வரத்தையும் வெளிப்படுத்தும் கண் அசைவுகளையும் கற்றார். பல வருட முயற்சிக்குப் பிறகு, அவர் இனிய பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டை வெளியிட்டார். அதிலிருந்து கிடைத்த பணத்தை அம்மாவின் சேவைப் பணிகளுக்கு அளித்தார். உடலளவில் குறைபாடுள்ள இந்த பாடகரை, இந்த இசைத்தகட்டை உருவாக்கச் செய்த ஆற்றல் எது? அது அம்மாவிடமிருந்து பெற்ற அகத்தூண்டுதலாகும்.

இவை போன்ற பல சம்பவங்கள் உள்ளன. ஜப்பானைச் சேர்ந்த, சக்கர நாற்காலியில் வாழ்நாளைக் கழிக்கும் ஒரு வாலிபன் பாரதத்திற்கு வந்து, 20 தினங்கள் ஏழைகளுக்காகக் கட்டப்பட்ட அமிர்தகுடீரம் வீடுகளுக்கு வெள்ளை அடித்தான். நிகழ்ச்சியின் போது அம்மா அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார். அப்போது அவரருகில் வந்த சிறுமி, தனது செலவுக்காகப் பெற்றோர் தந்த பணத்தைச் சேமித்து வைத்திருந்த உண்டியலை அம்மாவிடம் கொடுத்தாள். 12 வயதுச் சிறுவன் ஒருவன் வார இறுதியில் தனக்கு கிடைக்கும் விடுமுறை நாளில், செல்வந்தர்களின் வீட்டுத் தோட்டங்களில் களைகளைப் பறிப்பதால் கிடைக்கும் பணத்தை அம்மாவின் சிறுவர் காப்பகத்திற்கு அளித்தான். வயதான மூதாட்டி ஒருவர், வசிக்க இடமின்றி சாலை ஓரங்களில் வாழும் ஏழைகளுக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்வதன் மூலம், அவர்கள் மீது அன்பு பாராட்டவும் சிலர் இருக்கிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்தி வருகிறார். இவை போன்ற சேவைப் பணிகளில் லட்சக்கணக்கான மக்கள் ஈடுபடுவதற்குக் காரணமாக, தூண்டுதலாக

அமைந்தவர் நம் அன்புக்குரிய அம்மா ஆவார். அம்மாவால் அகத்தூண்டுதல் பெற்று சேவைப் பணிகளில் ஈடுபடும் மக்களால் கவரப்பட்ட பலர் நற்செயல்களில் ஈடுபடுகிறார்கள். இது ஒரு சங்கிலித் தொடர்போன்ற நிகழ்வாகும். இதுதான் அம்மா நிகழ்த்தும் மிகப் பெரிய அற்புதமாகும். தொப்பியிலிருந்து முயலை வரவழைப்பதோ, மந்திரத்தால் மாங்காயைப் பழுக்க வைப்பதோ பெரிய அதிசயமல்ல, ஒருமந்திரவாதி கூட இவற்றைச் செய்து விடக்கூடும், ஆனால் ஒவ்வொரு நொடியையும் பிறருக்காவே வாழ்வதும், தனது வாழ்வையே உதாரணமாக மாற்றி, ஒவ்வொருவரையும் நல்லவராக மாறுவதற்கு வழிசெய்வதும் தான் மாபெரும் அதிசயமாகும். சாதாரண மனிதர்களால் இத்தகு அரிய செயலைச் செய்ய முடியாது. பேரன்பின் வடிவாக - இறை அவதாரமாக - வந்தவருக்கு மட்டுமே இது சாத்தியமாகும். அத்தகு தெய்விக அன்னையான அம்மாவின் சாந்நித்தியத்தில் வாழும் நாம் அனைவரும் பாக்கியசாலிகள். நமது அன்பிற்குரிய அம்மாவால் அகத்தூண்டுதல் பெற்று, நாம் ஒவ்வொருவரும், அவருடைய மிகச் சிறிய அம்சமாகவாவது மாற முயற்சிப்பதற்கு அம்மா அருள்புரியட்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

44.வாழ்வின் பயன்

பிர.பிரதீப்



அம்மாவை ஒருமுறையாவது காண்பதற்காக உலகின் வெவ்வேறு பாகங்களிலிருந்தும் அமிர்தபுரிக்கு மக்கள் வருவதுண்டு போலந்திலிருந்து நான்கு முறை ஆந்த்தேமெக்கொவிஸ்கி அம்மாவைக் காண்பதற்காக பாரதத்திற்கு வந்திருக்கிறார். போலந்தின் தலைநகரான வொழ்ஸாவில் பிறந்த, ஒரு காவல் அதிகாரியான மெக்கொவிஸ்கியின் வயது அறுபதை நெருங்கிய போதுதான் ஒரு ஆசை உதித்தது. பாரதத்திற்கு ஒரு தீர்த்தாடனம் செல்ல வேண்டும். அதுவும் பாதயாத்திரை! கிட்டத்தட்ட 7000 கி.மீ தூரமுள்ள பாரதத்திற்கு! அவர் 2007 செப்டம்பர் 7ம் திகதி பயணத்தை ஆரம்பித்தார்.

அமிர்தபுரியில் அம்மாவின் குடிசைக்கு முன்னால் அமர்ந்தபடி மெக்கொவிஸ்கி தன் பயண அனுபவங்களைப் பங்கிட்ட போது மிகவும் பணிவுடன் பேசினார். பேச்சிற்கு இடையில் பலமுறை அம்மாவின் மகிமைகளை நினைவுகூர்ந்தது போல் கைகளைக் கூப்பி வணங்கினார். அம்மாவைக் காண அவர் நான்கு முறை விமானத்தில் வந்தார். பாரதத்திற்கு வந்து சில தினங்கள் அம்மாவுடன் செலவழித்த பிறகு போலந்திற்கு திரும்பிச் சென்று விடுவார். இதுதான் வழக்கம்.

இம்முறை அவர் பல நாடுகளைக் கடந்து, அபாயம் நிறைந்த பாதைகளைக் கடந்து, உயிரைப் பணயம் வைத்துப் பயணம்செய்திருக்கிறார். உறவினர்களும், நண்பர்களும் இம்முயற்சியை கைவிடுமாறு பலமுறை கூறினர். "ஆந்த்ரே உனக்குப் பையித்தியமா? இம்முயற்சி ஆபத்தானது" என்றனர். பலப்பல கலாச்சாரப் பிரச்சனைகள்; மாறுபட்ட காலநிலை; பழைய விளையாட்டு வீரரும், காவலருமான மெக்கோவிஸ்கி சிறிதும் பின்வாங்கவில்லை. அவர் தனது பயணத்தை ஆரம்பித்தார். அம்மாவின் ஒரு பாக்கெட் சைஸ் போட்டோவும் 25கிலோ உள்ள தனது உடை முதலியவை அடங்கிய பையுடன் அவரது பயணம் ஆரம்பமாயிற்று. போலந்து, உக்ரைன், மள்டோவா, துருக்கி, ஈரான், பாகிஸ்தான் வழியாக பாரதத்திற்கு நடைப்பயணம்.

அறியாத மொழியும் பண்பாடும் காணப்படும் என்பதை அறிந்து கொண்டு அவர் புறப்பட்டார். அவருக்குத் தனது தாய்மொழியான போலிஷ் மொழியில் மட்டுமே பேசத் தெரியும். உக்ரேனியன், துருக்கி, பெர்சியன் (ஈரான்மொழி) உருது இவற்றின் எதுவும் அவருக்குத் தெரியாது. அம்மாவின் நினைவுகளும், அவரது அருள்மொழிகளுமே வழித்துணை.

15 மாதங்கள் தொடர்ந்த இந்த பாதயாத்திரையின் முடிவில், 2008 டிசம்பர் 10ம் தேதி அம்மாவின் சந்நிதியை அடைந்தார். அப்போது மெக்கோவிஸ்கி எங்கும் எதிலும் அழகையே தரிசித்தார். எந்நாட்டில் பிறந்தவராக இருந்தாலும், எம்மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அனைவரும் அன்புக்காகவே ஏங்குகின்றனர். அன்பைப் பகிர்ந்தளிக்கவே அவர்கள் தவிக்கிறனர். அப்படி இல்லாமல் இருந்திருந்தால் தன்னால் 7000கி.மீ தூரத்தைக் கடந்து அமிர்தபுரியை அடைந்திருக்க முடியாது என்பது அவரது

உறுதியான கருத்தாகும்.

"பயணத்தின் இடையில் , மாலையில் இருள்பரவ ஆரம்பித்ததும் அருகில் காணுகின்ற ஒரு வீட்டிற்குப் புன்னகையுடன் ஏறிச் செல்வேன். அந்த வீட்டின் சொந்தக்காரரும் என்னை நோக்கிப் புன்னகை புரிவார். எனது பாக்கெட்டிலிருந்து அம்மாவின் புகைப்படத்தை எடுத்து அவரிடம் காட்டுவேன். அவர் ஆச்சரியத்துடன் புகைப்படத்தைப் பார்க்கும் போது நான், இது என் அம்மா, அம்மாவைக் காண போலந்திலிருந்து நடந்து பாரதத்திற்குப் போகிறேன் இன்று இரவு இங்கே தங்கலாமா? என்று கேட்பேன். அவர் மகிழ்ச்சியுடன் சம்மதமளிப்பார்? அம்மாவைக் குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. மென்னகை புரியும் அம்மாவின் முகம் அவர்களைக் கவர்கிறது. ஒளிசிந்தும் கண்கள் அவர்களை நோக்கி, இந்தத் தோள்களில் யார் வேண்டுமானாலும் தலைசாய்க்கலாம். தாங்கமுடியாத வேதனைகளை எல்லாம் என் தோள்கள் தாங்கிக் கொள்ளும் நான் அனைவரின் அம்மா ஆவேன் என்று கூறும்.

எல்லாச் சுகசௌகரியங்களும் நிறைந்த இந்த உலகில் அன்பிற்கு மட்டும் குறைவந்து விட்டது. அத்தகைய உலகில் அன்புப் பொக்கிஷமான அம்மாவைத் தேடி ஒருவர் பாதயாத்திரையாகச் செல்ல வேண்டுமெனில் நிச்சயமாக அவருக்குத் தேவையானதைச் செய்து கொடுக்க வேண்டியது எங்கள் கடமையல்லவா, என அவர்கள் நினைத்திருக்கக் கூடும். அவர்கள் தயாரிக்கும் விருந்தை சந்தோஷத்துடன் சாப்பிட்டபின், அம்மாவின் அன்பைக் குறித்து சிந்தித்தவாறே படுத்து உறங்குவார். "வஸுதைவ குடும்பகம்" என்ற சொல்லை இந்த போலந்துக்காரர் அறிந்திருக்க வழியில்லை. அம்மாவின் மூலம் அது நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை என நாம் உறுதியாக நம்பலாம்.

யுக்ரைனில் மைனஸ் 20டிகிரி குளிர். சில நாடுகளில் தாங்கமுடியாத வெப்பம் ஆகியவற்றுடன் பசி, தாகத்தை சகித்துக் கொண்டு அவர் பயணம் செய்திருக்கிறார். கால்கள் சோர்ந்துவிடும் போது, கண் முன்னால் வழி தெரியாமல் இருக்கும் போது பாக்கெட்டிலிருந்து அம்மாவின் புகைப்படத்தை எடுப்பார். அம்மாவின் புன்னகை சிந்தும் முகம் அவருக்கு சக்தியை அளிக்கும். பாதை தெரியும், இவ்வுலகம் அழகானதென்றும், எல்லோரும் நல்லவரே

என்றும் நம்பவும் கூறவும் செய்யும். மெக்கொவிஸ்கி, ஏதாவது பிரச்சனைகள் ஏற்படுகிறது என்றால் அது அரசியல்வாதிகளும், மீடியாக்களும் உருவாக்கி வைக்கும் பிரச்சனைகளே ஆகும் என்றார். பல நாடுகளைக் கடந்து பலமொழி பேசும் மக்களுடன் பழகிய அவரது அனுபவம் தவறாகுமா? 15மாதங்கள் தனது கையிலிருந்த திசைகாட்டும் கருவியின் உதவியுடன் திசை தவறாமல், காலநிலை நன்றாக இருந்தால் தினசரி 15 அல்லது 20 கி.மீ நடப்பார். கடும்பனியாக இருந்தால், காலநிலை மோசமானதாக இருந்தால் 12கி.மீ நடப்பார். இந்தப் பயணத்தின் போது ஏற்பட்ட அனுவங்களை நூல்வடிவில் எழுத அவர் தீர்மானித்திருக்கிறார்.

அவர் வாழ்வின் நடுப்பகுதியில் தான் அம்மாவை முதன்முதலாகக் கண்டார். பாரதப் பண்பாட்டால் கவரப்பட்ட மெக்கொவிஸ்கி சிறிதும் தாமதிக்காமல் தனக்கு ஒரு பாரதப் பெயர் தருமாறு அம்மாவிடம் அன்புடன் வேண்டினார். அம்மா அன்புடன் அவருக்கு அளித்த பெயர் 'இந்திரஜித்' (இந்திரனை வென்றவன்) என்பதாகும்.

இந்திரஜித் அமிர்தபுரியை அடைந்து ஒரு மாதம் தங்கினார். பின் நாட்டிற்குப் புறப்பட்ட போது "அம்மா என் வாழ்வு பயன் நிறைந்ததாகிவிட்டது. அம்மா போலந்திற்கு வரவேண்டும். அன்புநிதியான, அனைவரையும் அரவணைக்கும் தூய்மையே வடிவான அம்மா எங்களுக்கு வேண்டும், அங்குள்ள எனது சகோதரர்கள் நீட்டிய கரங்களுடன் அம்மாவைக் காணக் காத்திருக்கிறார்கள்" என்றார்.

அம்மா, ஒரு மஞ்சள் நிறத் துணியால் மொட்டைத் தலையைச் சுற்றி கட்டிய அவரை அரவணைத்தார். அப்போது, அவரது கையில் நூலால் கட்டியிருந்த திசைகாட்டும் கருவியை ஆர்வத்துடன் பார்த்தார். பின்னர் அதை அவரது கழுத்தில் அணிவித்தார். இந்திரஜித்தை மீண்டும் அரவணைத்த அம்மா. அவரது காதில் ஏதோ கூறினார். தரிசனம் முடிந்து எழுந்த இந்திரஜித்தின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது அம்மாவை காணத் தவித்து, கண்ணீரை அடக்கிக் காத்திருந்த ஒரு குழந்தையின் ஆனந்தக் கண்ணீர்த் துளிகள்.

45.எப்பணியும் திருப்பணியே

பிர.இராம்குமார்

அம்மா ஐரோப்பிய - அமெரிக்கப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது, அமிர்தபுரியில், ஒரு ஆசிரமவாசி மற்றொருவரிடம், "உங்கள் மீது துர்நாற்றம் வீசுகிறதே! என்ன காரணம்?" என்று வினவினார். மற்றவர், வித்தியாசமானதொரு தொண்டாற்றிவிட்டுத் திரும்புகிறேன் அதனால்தான் துர்நாற்றம் வீசுகிறது என்று சொன்னார். முதலாமவர் "கணினிகள் என்று முதல் துர்நாற்றம் வீசத் தொடங்கின? நீங்கள் கணினித்துறையில் தொண்டாற்றுபவரல்லவா?" என்று வினவ, மலத் தொட்டியைத் (செப்டிக் டேங்க்) துப்புரவு செய்யும் பணி தொடங்கியுள்ளதை அவர் கூறினார். "இத்தொண்டாற்றும் வாய்ப்பு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே கிடைக்கும் என்பதால் அதை நழுவவிட விரும்பவில்லை" என்றார்.

ஆம், சுமார் பத்தாண்டுகளுக்குப் பின் ஆசிரமத்திலுள்ள 4. மிகப் பெரிய மலத்தொட்டிகள் நிரம்பி விட்டன. கழிவுகளை அகற்ற ஒரு தனியார் நிறுவனத்தை முதலில் அணுகினோம். நான்கு தொட்டிகளையும் துப்புரவு செய்ய 10 நாட்கள் வேண்டிவரும் என்றும், அதற்கு 70000 ரூபாய் தேவை என்றும் சொன்னார்கள். அதுமட்டுமல்ல, சாதாரணமாக, துப்புரவுத் தொழிலாளர்கள் குடித்துவிட்டுத் தான் இப்பணியைச் செய்வார்களாம். இதன் காரணத்தைக் கேட்ட போது, "அப்பொழுதுதானே அவர்களால், துர்நாற்றத்தையும், அருவருப்பையும் சகித்துக்கொள்ள முடியும்?" என்ற எதிர்வினா பதிலாக வந்தது.

ஆனால், ஆசிரமத்தில் குடித்து விட்டுப் பணியாற்ற அவர்களை அனுமதிக்கவில்லை. இதனால் வெறுப்படைந்த தொழிலாளர்களில் மூவர் அரைகுறை மனதோடு தொட்டிக்குள் இறங்கினர். இருவர் தொட்டிக்கு வெளியிலிருந்து லாரிக்குக் கழிவு நிறைந்த வாளிகளைக் கொண்டு செல்ல நின்றார்கள். வேண்டாவெறுப்புடன் தொடங்கிய பணி, ஒவ்வொரு அரை மணிநேரத்திற்குப் பிறகு தடைப்படும். அவர்கள் வேலையை நிறுத்திவிட்டு, தொட்டியிலிருந்து வெளியே வருவார்கள். ஆசிரம வளாகத்திற்கு வெளியே சென்று புகைப்பிடித்துவிட்டு, வெற்றிலை போடுவார்கள். இப்படியாக ஆறுமணிநேரம் வேலை பார்த்த அவர்கள் வேலையை நிறுத்தினார்கள்.

ஒருநாளில் ஒரு லாரி மனிதக் கழிவுகளை மட்டுமே அவர்களால் அப்புறப்படுத்த முடிந்தது. இவ்வாறு, மூன்று தினங்கள் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை செய்தனர். விரைவில், ஆசிரமம் முழுவதும் இதே பேச்சானது. அன்று இரவு சாப்பாட்டு வேளையில், சில மூத்த பிரம்மசாரிகள், சுமார் 14 வருடங்களுக்கு முன் அம்மா நிகழ்த்திய லீலையொன்றை நினைவு கூர்ந்தார்கள்.

அடுத்த நாள், ஆசிரமத்தில் பல மூத்த பிரம்மசாரிகளுக்கு அம்மா சந்நியாசம் கொடுக்கவிருந்தார். சந்நியாசம் பெறப்போகிறவர்கள் எல்லோரும் மூன்று நாட்களாக, மௌன விரதம், உண்ணா நோன்பு மேற்கொண்டு, தீவிர சாதனை புரிந்து வந்தார்கள், அம்மா சந்நியாசம் கொடுக்கப் போகும் புனிதமான காட்சியைக் காண ஏராளமான பக்தர்கள் வந்திருந்தார்கள். இரவு சுமார் ஒன்றரை மணியிருக்கும். அம்மா, தமது அறையிலிருந்து வெளியே வந்தார். ஆசிரமத்தின் முன் வளாகத்திலிருந்த மலத்தொட்டியின் மூடியை அம்மாவே அகற்றி, உள்ளே டார்ச் அடித்துப் பார்த்தார். தொட்டி நிரம்பிக் காணப்பட்டது. உடனடியாகத் துப்புரவுப் பணியைத் தொடங்கினார். பல ஆசிரமவாசிகள் அப்பணியில் பங்குகொள்ள ஓடோடி வந்தார்கள், திடீரென்று அம்மா, மறுநாள் துறவறம் மேற்கொள்ளப்போகும் பிரம்மசாரிகளை, இப்பணியில் கலந்துகொள்ள அழைத்துவருமாறு கூறினார். நாளை உலகிற்கு அர்ப்பணமாகி, தங்களது உடல் மாண்டுவிட்டதாகப் பாவித்து ஆத்ம பிண்டமிட்டு, அதிகாலையில் விரஜா ஹோமம் செய்யப்போகும் நாளைய துறவிகள் எல்லோரும் அங்கே வந்தார்கள். பிர, பிரணவாம்ருத சைதன்யாவிடம் (சுவாமி பிரணவாம்ருதானந்தபுரி) அம்மா, மாணவிகள் விடுதியின் துப்பரவுத் தொட்டியிலிருந்து ஒரு வாளிக் கழிவை அள்ளிக் கொடுத்து, **"இந்தா இதுதான் பெண்ணின் மேனி எழில்"** என்றார். "வைராக்கிய சதகம்" முதலான பற்பல ஆன்மிக நூல்களில் அடங்கியுள்ள உட்பொருளை அம்மா எளிய மலையாளத்தில் சொல்லிவிட்டதாக அவருக்குத் தோன்றியது. மற்றொரு பிரம்மசாரியின் கைகளில் அம்மா கழிவைக் கொடுத்தபோது, ஒரு துளி அவரது உதட்டருகே பட்டது. பாயசம்! எனச் சொல்லி அம்மா துள்ளிச் சிரித்தார். ஒரு துறவி வெறுப்புணர்வை அறவே கடக்க வேண்டும். அவருக்கு அருவருப்பென்பதே இருக்கக் கூடாது என்ற பாடத்தை அம்மா புகட்டினார்.

இப்படியாக, சுவையான பழைய சம்பவங்களை சிலர் நினைவுகூர,

மலத்தொட்டியை வாடகைத் தொழிலாளிகளைக் கொண்டு துப்புரவு செய்வதற்குப் பதிலாக நாமே துப்புரவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் பலர் மனதில் தோன்றியது. அடுத்த நாள் காலை எங்களது முடிவை அத்தனியார் நிறுவன முதலாளியிடம் தெரிவித்தோம். அவர் "இப்பணியிலிருந்து விலகுவதில் எங்களுக்கு மகிழ்ச்சியே. ஆனால், இவ்வளவு பெரிய 4 தொட்டிகளைச் சுத்தம் செய்வதென்பது விளையாட்டல்ல, சுமார் 13லாரி கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டிவரும் என்பதை மறக்க வேண்டாம்" என்றார். "இதே பணியில் ஈடுபட்டுவரும் எங்களுக்கே இது அரிதாகத் தோன்றும் போது. இதைப்பற்றி ஒன்றும் தெரியாத பிரம்மசாரிகளால் என்ன செய்துவிட முடியும்?" என்ற தோரணையில் அவர் பேசினார். அம்மாவின் அருளால் இப்பணியைச் செய்து முடிக்க முடியும் என்ற திட நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. பல பிரம்மசாரிகள் இப்பணியில் பங்கெடுக்க முன்வந்தார்கள். ஒரு சமயத்தில் 12 அல்லது 13பேர் தொண்டாற்றினால் போதுமானது என்பதால், இப்பணியில் ஈடுபட விழைந்தவர்களை இரு பிரிவாகப் பிரித்து, ஒரு நாளைக்கு ஒரு பிரிவினர் தொண்டாற்றுவது என்று முடிவெடுத்தோம்.

லலிதாஸஹஸ்ரநாம அர்ச்சனையோடு, சேவை இனிதே தொடங்கியது. முன் அனுபவம் உள்ள நான்கு பிரம்மசாரிகள் உடல் முழுவதும் மண்ணெண்ணெயைத் தேய்த்த பிறகு, சுமார் 30 அடி ஆழமும் 60 அடி அகலமும் உள்ள தொட்டிக்குள் இறங்கினார்கள்.

லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை முடிந்தது. கழிவுத் தொட்டிக்குள்ளிருந்து, ராம ராமௌ, ராமா என்ற சப்தம் கேட்டது. ஆம் பிரம்மச்சாரிகள் சமஸ்கிருதப்பாடங்களை நினைவுகூரத் தொடங்கினார்கள். அருவருக்கத் தக்கதாகப் பணியாளர்கள் கருதிய அதே வேலை, எங்களுக்குத் திருவிழாவாக மாறியது. "ஒரு சாதகன் விருப்பு வெறுப்புகளைக் கடந்து செல்லுதல் இன்றியமையாதது" என்ற அம்மாவின் உபதேசத்தை இதோ இவர்கள் நினைவுகூர்வதாகவே எனக்குத் தோன்றியது.

சம்ஸ்கிருதப்பாடங்களைத் தொடர்ந்து பஜனைப் பாடல்கள் ஆரம்பமாயின. இதற்கு முன், ஒருமுறை கூட வாய்விட்டுப் பஜனை பாடியிராத என் போன்றவர்களுக்கும் பஜனை பாடும் வாய்ப்புக் கிடைத்தது. "அம்மா

உந்தன் கைவளையாய் ஆகமாட்டேனா?" என்ற பஜனையைப் பாடியபடி வாளிவாளியாகக் கழிவுகளைக் கைகள் அகற்றின. இப்படியாக, அன்றைய மாலைக்குள் 5 லாரி கழிவுகள் அகற்றப்பட்டுவிட்டன.

அடுத்தநாள், மிக உயர்ந்த அத்வைதக் கருத்துகள் அடங்கிய மாண்டூக்ய உபநிஷத வகுப்பிற்குப்பின் கழிவகற்றும் திருப்பணி மீண்டும் தொடங்கியது. அத்வைதத் தத்துவங்களை ஒன்றரை மணிநேரம் செவியால் பருகியபின், இதோ அவற்றைச் செயல்முறைப்படுத்தும் பணி தொடங்கியது.

சுறுசுறுப்பாக வேலை நடப்பதற்கு இடையில், அத்தனியார் நிறுவன உரிமையாளர் வந்தார். "இவர்கள் என்ன பெரிதாகச் செய்து கிழித்துவிடப் போகிறார்கள்? மீண்டும் நமது தயவைத்தான் நாடுவார்கள்" என்று எண்ணி அவர் வந்திருக்கக் கூடும். இறைநாமத்தை ஜபித்தபடியும், பஜனை பாடியவாறும் பிரம்மசாரிகள் பணியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு அவர் வாயடைத்து நின்றார். தனது பணியாளர்கள் குடித்துவிட்டு வேண்டாவெறுப்புடன் கடனே என்று செய்யும் வேலையை நாங்கள் இறைவழிபாடாக, திருப்பணியாகச் செய்வதைக் கண்டு அவர் வியந்தார். "அம்மா உங்களுக்கு மிகச் சிறந்த பயிற்சி அளித்துள்ளார்! நினைத்ததை நடத்தும் மனோபலம் உங்களுக்கு இருக்கிறது" என்றார்.

அவருடைய பணியாளர்கள் ஒரு நாளைக்கு ஒரு லாரிக் கழிவை மட்டுமே அகற்ற, அம்மாவின் குழந்தைகளான நாங்கள் ஒரு நாளில் ஐந்து லாரிக் கழிவை அகற்றினோம்.

மூன்றாவது கழிவுத் தொட்டியைத் துப்புரவு செய்யும் போது அதற்குள் ஒரு தவளைக் குடும்பம் இன்பமாக வாழ்வதைக் கண்டு அதிசயமடைந்தோம். "இவர்களுக்கு எப்படியாவது சுதந்திர உலகைக் காட்டித் தரவேண்டும். நாற்றம் நிறைந்த இந்தத் தொட்டியிலிருந்து இவர்கள் விடுதலை பெற உதவவேண்டும்" என்று நினைத்த நாங்கள் அவர்களைத் தொட்டியிலிருந்து வெளியேற்றினோம். வெளியுலகை முதன்முறையாகத் தவளைப் பெற்றோரும், குழந்தைகளும் கண்டனர். நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். எங்களது மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை. தங்கள் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் நாங்கள் குலைத்துவிட்டதாக அக்குடும்பம் நினைத்தது

போலும், திருதிருவென விழித்த தவளைகள், தலைவன் வழிநடத்த, ஒன்றன்பின் ஒன்றாக மீண்டும் அக்கழிவுத் தொட்டிக்குள்ளேயே குதித்தன.

மனித வாழ்வின் முக்கிய நோக்கமான விடுதலையை நுகர விழையாமல், உலகியல், சுகங்களிலேயே மூழ்கி மனிதன் ஆனந்தம் காண்பதைப் பாரதியார் சுட்டிக் காட்டும் 'வேடிக்கை மனிதர்களை' இத்தவளைக் குடும்பம் நினைவூட்டியது. அன்று மாலையோடு கழிவுத் தொட்டிகளைத் துப்புரவு செய்யும் திருப்பணி இனிதே முடிவடைந்தது. இரண்டு நாட்களில், நான்கு தொட்டிகளில் இருந்த மொத்தக் கழிவுகளும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. எல்லாம் முடிந்தபோது, ஆசிரம நாய்க்குட்டியான 'தும்பன்' வாலாட்டியபடியே ஓடிவந்தான். தொட்டிக்குள் நின்ற பிரம்மசாரிகளை எட்டிப்பார்த்துத் தன் அன்பை வெளிப்படுத்தினான். இவ்விரு நாட்களும் அம்மா புகட்டிய பல அரிய பாடங்களைச் செயல் முறைப்படுத்தும் வாய்ப்பை அவரே தந்தருளினார்.

மனதில் பக்தியும், அன்பும் நிறைந்திருக்கும் போது எப்பணியையும் விருப்பத்தோடு செவ்வனே செய்ய இயலும்; எப்பணியும் இறைவனுக்குச் செய்யும் பூஜையாக மாறும்; மனதைச் சுத்தம் செய்யும், கர்மயோகமாக அமையும். இறைவனின் எல்லையற்ற அருளானது மடைதிறந்து பாயும் நதிபோலே நம்மை நோக்கிப் பெருகிவரும். சரியான மனோபாவத்தோடு ஆற்றப்படும் எப்பணியும் திருப்பணியே.

உலகிற்குச் சுயநலமற்ற சேவை செய்யும் போது நீங்கள் அம்மாவுக்குதான் தொண்டு செய்கிறீர்கள்.

- அம்மா



46.குண்டலினி சக்தி



எல்லா உயிர்களுக்கும் மூலசக்தியாகக் குண்டலினி சக்தி இருக்கிறது. முதுகெலும்பின் அடிப்பகுதியில் சுறுண்டு படுத்துறங்கும் பெண்பாம்பின் வடிவில் இது இருக்கிறது. குருவருளாலும் இடைவிடாத தியானத்தாலும் இது விழித்தெழுகிறது. அதன் பின் இது தனது துணைவனைத் தேடி முதுகெலும்பின் நடுவிலுள்ள சுஷும்னை நாடி வழியாக மேலே ஏறுகிறது. இவ்வழியே மூலாதாரம், சுவாதிஸ்தானம், மணிப்பூரகம், அனகதம், விசுத்தி, ஆஞ்ஞும், ஆகிய ஆதாரங்கள் உள்ளன. மிகவும் சூஷ்மமான இவை ஒவ்வொன்றும் ஆன்மிக ஆற்றல் குவிந்திருக்கும் நிலையமாகும். இதனை யோகா திருஷ்டியால் மாத்திரமே உணரலாம். ஒவ்வொரு ஆதாரத்தையும் குண்டலினி சக்தி கடந்து செல்லும் போது உடலிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அரைத்த மிளகாயை உடலெங்கும் பூசியது போல் எரிச்சல் உண்டாகின்றது. பெரும் உஷ்ணம் ஏற்படுகிறது. இடையிடையே மயிர்க் கூச்செறிகிறது. மயிர்க்கால்களில் நீர் கசிகிறது. சில சமயம் நீர் வெளியேறுவது அதிகமாக இருக்கும். சில நிலைகளில் மென்மையான அங்கங்களிலிருந்து இரத்தம் கசிவதும் உண்டு அப்போது உடல் எலும்புக்கூடுபோல் மெலிந்துவிடும். முதன் முதலாக இவ்வனுபவங்களைப் பெறும் சாதகன் பயந்து விடலாம். எனவே **குண்டலினி யோகசாதனையை அனுபூதி பெற்ற சற்குருவின் துணையுடன் செய்ய வேண்டும்.** இச்சாதனைக் காலத்தில் சாதகன் விழிப்புடனும் கவனமாகவும் இருக்க வேண்டும். கருத்தரித்துள்ள தாயைக் காப்பது போல் சாதகன் கருத்துடன் பேணுவது அவசியம். தேவையின்றி உடலை அசைக்கக் கூடாது. மெத்தையிலுள்ள மடிப்புகளைக் கூட உடல் தாங்காது . எனவே மெத்தையிற் படுக்கக் கூடாது. சமமான வழவழப்பான பலகை மீது படுக்க வேண்டும். முதுகெலும்புக்கு அதிர்ச்சி ஏற்பட்டால் அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும். குண்டலினி சக்தி விழித்தெழுந்த சாதகனிடம் ஓர் அலாதியான கவர்ச்சி இருக்கும். இதனால் மயங்கிப் பெண்களும் மற்றவர்களும் அவனை

நாடுவர் இந்நிலையில் அவனுக்கு வழிகாட்டத் தக்க சற்குரு இல்லாவிடின் சாதகன் புலனின்பத்தில் விழுந்து விடலாம். அதனால் அவன் சேகரித்து வைத்த ஆன்மிக ஆற்றலெல்லாம் வீணாகிவிடும்.

குண்டலினி சக்தி ஓர் ஆதாரத்தை அடைந்ததும் அந்த ஆதாரம் மலர்ந்து விரிகிறது. அதன் பின் அடுத்த ஆதாரத்திற்குக் குண்டலினி சக்தி செல்கின்றது மூலாதாரத்திலிருந்து உடலிலுள்ள ஆறு ஆதாரங்களையும் தாண்டிய பின் இச்சக்தி தலையிலுள்ள ஆயிரம் இதழ் தாமரைப்பூ வடிவான சகஸ்ராரத்தை அடைகிறது. அப்போது உடல் குளிர்ந்து புத்துணர்ச்சி பெறுகிறது. உடலெங்கும் அமிர்ததாரை பாய்கிறது. உடல் புதிய ஆன்மிக ஆற்றலின் நிலையமாக மாறி அமைகிறது. வேர்கள் நீரையும், சத்தையும் பூமியிலிருந்து உறிஞ்சி இலைகளுக்கு அனுப்புகின்றன. இலைகள் அவற்றைத் தக்கபடி மாற்றி அமைத்து வேர் உட்பட செடியின் ஒவ்வொரு பகுதிக்கும் உரிய நிலையில் அதை அனுப்புகின்றன. இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட சக்தி அச்செடியை வளர்க்கவும் பாதுகாக்கவும் செய்கிறது. இதுபோல் மூலாதாரத்திலிருந்து புறப்பட்ட குண்டலினி சக்தி சகஸ்ராரத்தை அடைந்ததும் அமிர்த தாரையாக மாறி நரம்புகள் மூலம் உடலெங்கும் பரவுகிறது. இதனால் போஷிக்கப்பட்ட உடல் தேஜஸ்க்கும், சக்திக்கும், அட்டமா சித்திகளுக்கும், அளவற்ற ஆன்மிக ஆற்றலுக்கும் இருப்பிடமாகிறது.

அம்மா.

47.வெள்ளைச் சேலை கட்டிய கறுப்பு மாது

கைலைமணி வேல். சுவாமிநாதன்


மீசாலை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகேஸ்வரி, தனது நான்கு பிள்ளைகளுடன் ஜேர்மனியில் வசித்து வருகின்றார். கணவரின் உதவியை இழந்த இவர் பிள்ளைகளை வளர்க்க மிகவும் கஷ்டப்பட்டார். அயலவர்களின் உதவியோ, உறவினர்களின் ஆதரவோ கிடைக்காத நிலையில் இவரின் முழுக்குடும்பமும் சொல்லொணாத் துன்பத்தில் மூழ்கினர். நான்கு பிள்ளைகளும் பதின்நான்கு வயதுக்கு உட்பட்டவர்கள்

பாடசாலைக்குச் செல்பவர்கள். இதனால் செலவு அதிகம் வருமானமோ குறைவு ஒரு பிள்ளை காக்காய் வலிப்பு நோயால் பீடிக்கப்பட்டிருந்தது. பல டாக்டர்களிடம் எடுத்துச் சென்றும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இக்காலகட்டத்தில் திருமதி நாகேஸ்வரியின் கனவில் ஒரு வெள்ளைச்சேலை கட்டிய கறுப்பு மாது கனவில் அடிக்கடி தோன்றிவந்தார். இது மீசாலையிலுள்ள தங்களது வீட்டுக்கு அருகாமையில் தாம் வழிபட்டு வந்த குலதெய்வமான காளி அம்மனின் குறைபாடாக இருக்குமெனக்கருதி அக்காளி அம்மனுக்குப் பொங்கிப்படைக்கும்படி தனது பெற்றோருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தார். காளி அம்மனுக்குப் பொங்கிப்படைத்த பின்பும் அத்திருவுருவம் தொடர்ந்தும் காட்சியளித்து வந்தது.

ஒரு நாள் ஒரு தமிழ்ப் பெண்மணியை நாகேஸ்வரி சந்திக்க நேர்ந்தது. அவர் தனது கரத்தில் ஒரு வித்தியாசமான காப்பை அணிந்திருந்தார். அதைக் கண்ட நாகேஸ்வரி அக்காப்பை எங்கு வாங்கினீர்களென்று வினவ அவரும் அம்மாவின் தேவி பாவ தரிசனத்திற்குச் சென்ற போது அங்கு வாங்கியதாகக் கூறினார். அம்மாவா? அவர் யார்? எனக் கேட்ட போது தென் இந்தியாவின் கேரளத்தைச் சேர்ந்த மாதா அமிர்தானந்தமயிதேவி என்று கூறி அம்மாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகம் ஒன்றை அடுத்த நாள் கொண்டு சென்று கொடுத்தார். அப்புத்தகத்தின் முன் அட்டையிலிருந்த அம்மாவின் படத்தைக் கண்டதும் சாட்சாத் இந்த அம்மாவையே தான் கனவில் கண்டதாக உணர்ந்தார் அப்புத்தகம் முழுவதையும் அவர் அன்றிரவே வாசித்து முடித்தார். மனச்சஞ்சலத்தால் வாடுபவர்களை அத்துன்பத்திலிருந்து தனது அருட்சத்தியால் அரவணைத்து முத்தமிட்டு துயர்களைத் துடைக்கின்றார் அம்மா என்பதை அப்புத்தகத்தின் வாயிலாக அறிந்து கொண்டார். தனது துன்பங்களையும் போக்க தனக்கும் அம்மா ஒருவர் இருக்கின்றார் என்ற துணிவையும் பெற்றார். அம்மாவின் மடியில் கிடந்து கதறி அழுது தன் துன்பங்களைக் கொட்டித்தீர்க்கும் நாள் கூடிய விரைவில் கிட்டுமென அசையாத நம்பிக்கை கொண்டார். அன்றிலிருந்து அவர் குடும்பமே அம்மாவின் பக்தர்களானார்கள் அம்மா ஜேர்மனிக்கு வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். நாகேஸ்வரியின் குடும்பத்திற்கு ஏற்பட்ட சஞ்சலங்களும் துயர்களும் படிப்படியாகக் குறையத் தொடங்கின. இதனால் மகிழ்சியடைந்த குடும்பத்தினர். 1998ம் ஆண்டு ஐப்பசி மாதம் அம்மா ஐரோப்பிய விஜயத்தின் போது ஜேர்மனிக்கும் வருகின்றார் என்று



அமிர்தபுரி தரிசன மகாமண்டபத்தில் மூத்த துறவிகளும் பிரமச்சாரிகளும், சீடர்களும் புடை சூழ பக்தவாத்தியங்களுடன் அம்மா நடுநாயகமாக வீற்றிருந்து இருகரங்களையும் உயர்த்திய வண்ணம் பக்தி ரசம் பொருந்திய இன்னிசைக் கானமழை பொழிகின்றார்.



அறிந்த நாகேஸ்வரியின் குடும்பத்தினர் ஒரு வானில் 800 கீ.மீ தூரம் பிரயாணம் செய்து அம்மாவின் நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்திற்குச் சென்றார்கள். அங்குள்ள தரிசன மண்டபம் பல ஆயிரக்கணக்கான அம்மாவின் பக்தர்களால் நிரம்பி வழிந்தது. இதனால் அம்மா மண்டபத்திற்குச் செல்லும் பாதை ஓரமாக அம்மாவின் வருகையை வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தனர். நாகேஸ்வரி தன் குடும்பத்திற்கும் அம்மாவின் ஆலிங்கனம் கிடைக்குமா? என ஏங்கித்தவித்தார். அம்மா மண்டபவாயிலை நோக்கி வரும் போது பாதையோரத்தில் நின்ற பக்தர்கள் முண்டியடித்து அம்மாவை நோக்கி நகர்ந்தனர். நாகேஸ்வரி குடும்பத்தினர் சனநெருக்கத்துக்குள் செல்ல முடியாத நிலையில் பின்தங்கி நின்றனர். அம்மா மண்டபத்தை நோக்கி வரும் போது நாகேஸ்வரியின் குடும்பத்தைக் கண்டுவிட்டார். உடனே அவர்களை நோக்கி வந்து "எப்படி நல்ல சுகமாய் இருக்கிறாயா? பயப்பட வேண்டாம் அம்மா உன்னுடன் இருக்கிறேன். உனது கஷ்டங்கள் எல்லாம் படிப்படியாகத் தீரும்" எனக்கூறியபடி தரிசனமண்டபத்தை நோக்கி விரைந்து சென்றார்.

மேடையில் மூத்த துறவிகளும், பிரம்மச்சாரிகளும், சீடர்களும் பக்க வாத்தியங்களுடன் புடை சூழ அம்மா நடு நாயகமாக வீற்றிருந்து இருகரங்களையும் உயர்த்திய வண்ணம் பக்திப் பாடல்களைப் பாடினார். அதன்பின் மலையாளத்தில் அருளுரை ஆற்றினார். ஒரு மூத்த துறவி அதை மொழிபெயர்த்துக் கூறினார். அதன் பின் அம்மா பார்வதிதேவியாய் வேடமணிந்து, தேவிபாவ தரிசனமளித்தார். தமது ஆசனத்தில் இருந்து கொண்டு பக்தர்களை ஒவ்வொருவராக வரவழைத்து தனது மார்பில் அணைத்து, முத்தமிட்டு, அவர்களின் குறைபாடுகளைக் கேட்டு அறிந்து, அதற்குரிய பரிகாரங்களையும் அவர்களின் காதுகளில் ஓதினார். சகலருக்கும் வீபூதி, பூக்கள், பழம், ரொபி போன்றவற்றை பிரசாதமாக வழங்கிக் கொண்டிருந்தார். நாகேஸ்வரி குடும்பத்தினரும் அம்மாவின் அரவணைப்புக்கு ஆளானார்கள். அன்று கிட்டத்தட்ட 6000ம் பக்தர்களுக்கு அம்மா ஆசி வழங்கினார்.

அம்மாவின் அரவணைப்பின் பின் நாகேஸ்வரியின் குடும்பத்தினரின் துன்பங்கள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கின. காக்கை வலிப்பால் பீடிக்கப்பட்ட அவர் பிள்ளை எதுவித வைத்தியமுமின்றி சுகமடைந்தது. மூத்த மகளுக்கு கண்நிறைந்த கணவன் கிடைத்தார். அவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு இருதயத்தில் இரு துவாரங்கள் இருப்பதாக டாக்டர்கள்

கூறினர். அதை ஆறுமாதங்களின் பின் சத்திரசிகிச்சை மூலம் துவாரத்தை அடைக்கலாம் எனக் கூறியிருந்தனர். நாகேஸ்வரி தன் முதற்பேரனுக்கு இக்கதியா? என அழுது புலம்பினார். அம்மாவை நினைத்து நினைத்து கண்ணீர் வடித்தார். அம்மா எமக்கு துணையாக இருக்கும் போது நாம் ஏன் துயர்பட வேண்டும் எனக் கருதி மனம் தெளிந்தார். அம்மா அவுஸ்ரேலியாவுக்கு விசயம் மேற்கொள்ளப் போகின்றார் என்ற செய்தியை அம்மாவின் மாத்ரு வாணி மாத இதழ் மூலம் அறிந்தார். அம்மாவின் தரிசனத்திற்காக ஜெர்மனியிலிருந்து அவுஸ்ரேலியா சென்ற ஒரு அன்பரிடம் தனது பேரனின் படத்தைக் கொடுத்து அம்மாவிடம் காட்டி பரிகாரம் தேடிவரும் படி கூறினார். அந்த அன்பர் அம்மாவிடம் எதுவும் கூறாமல் அப்படத்தைக் கொடுத்ததும் அம்மா அதை சிறிது நேரம் உற்றுப் பார்த்தார். பின் அக்குழந்தையின் நெஞ்சை பல முறை தடவினார். அதன் பின் "இக்குழந்தைக்கு இருதயத்தில் துவாரங்கள் உள்ளன. அவை கூடிய விரைவில் அடைபட்டு விடும் பயப்படவேண்டாம் என்று நாகேஸ்வரியிடம் கூறும்படியும், வீபூதியைக் கொடுத்து தினமும் அக்குழந்தையின் நெஞ்சில் பூசும்படியும்" கூறினார். அம்மா கொடுத்தனுப்பிய வீபூதியை நாகேஸ்வரி தன் பேரனின் நெஞ்சில் பூசி வந்தார் ஆறுமாதமானதும் தனது பேரனை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார். அங்குள்ள டாக்டர்கள் அப்பிள்ளையைச் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லுமுன் எக்ஸ்ரே மூலம் பரிசோதனை செய்த போது குழந்தையின் இருதயத்தில் இருந்த துவாரங்கள் அடைபட்டிருந்தன. இதைக் கண்ட டாக்டர்கள் அதிசயித்தனர். பலமணித்தியாலங்களாக ஆலோசித்தனர். புரியாத புதிராக இருக்கிறது என்று கூறி மலைத்தனர். அப்பொழுது நாகேஸ்வரி டாக்டர்களுக்கு அம்மாவின் அருளால் தான் எனது பேரனின் இருதயநோய் குணமானதெனக் கூறிமகிழ்ந்தார். அந்த அம்மாவை தாங்களும் சென்று தரிசிக்க வேண்டுமெனக் கூறி அம்மா ஜேர்மனி வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர் அந்த ஜேர்மன் டாக்டர்கள்.

நாகேஸ்வரியின் மூன்று பிள்ளைகள் அரச புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியா, பூனா (வடஇந்தியா) போன்ற இடங்களிலுள்ள சர்வகலா சாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். அங்கு பகுதி நேரவேலை செய்யும் பணத்தை தாயாருக்கு அனுப்பி அம்மாவின் சமய சமூகப் பணிக்கு செலவிடும் படி கூறியுள்ளனர். அம்மாவின் கருணையினாலும் அருளாலும் தன் குடும்பம் மேல்நிலை அடைந்து வருவதை நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் நாகேஸ்வரி தன் குடும்பம் மேன்மையடைந்ததைப் போல் அகில உலகிலுள்ள

சகலரும் அம்மாவைப்பற்றி அறிந்து அவரின் அருளையும், தரிசனத்தையும் பெற்று உய்வடைய வேண்டுமென்ற நல் நோக்கத்தில் 1999ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை அம்மா செய்து வரும் அற்புதங்களையும் சமூகத் தொண்டுகளையும், துண்டுப் பிரசுங்கள் மூலமும் சிறிய, பெரிய புத்தகங்கள் மூலமும் பல்லாயிரக்கணக்கில் பிரசுரித்து இலங்கை, ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளில் உள்ளவர்களுக்கு இலவசமாக வினியோகித்து வருகின்றார். 2008ஆம் ஆண்டு தனிச்சிங்களத்தில் 5000 புத்தகங்கள் பிரசுரித்து இலங்கையில் வெளியிட்டார். அதற்கான காரணத்தை இப்படிக் கூறியுள்ளார். நாகேஸ்வரி "எமது சிங்களச் சகோதரர்களும் அம்மாவைப் பற்றி அறிய வேண்டும். அம்மாவின் மூலம் இலங்கையிலும் சாந்தியும், சமாதானமும் நிலவவேண்டுமென்ற" நோக்கத்திற்காகவே இக்கைங்கரியத்தைச் செய்தேன் என்றார். 2004ம் ஆண்டு சுனாமியால் வீடுகளை இழந்த மக்களுக்கு அம்மா களுத்துறை மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் மூன்று மாடிக் குடிமனைகளைக் கட்டி பல நூற்றுக்கணக்கான வீடுஇழந்தவர்களை அதில் குடியமர்த்தியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாகேஸ்வரியும் நான்கு பிள்ளைகளும் அம்மாவிடம் மந்திரதீட்சை பெற்றுள்ளனர். அம்மாவின் பேரில் சமய,சமூகத் தொண்டுகளும் செய்து வருகின்றனர். நாகேஸ்வரி தன் பேரப்பிள்ளைக்கு அம்மாவின் கையாலேயே அன்னப்பிரசானம் செய்வித்தார். அதன்பின் வித்தியாரம்பமும் செய்வித்தார். அம்மா வருடா வருடம் ஜேர்மனி, போலந்திற்குச் செல்லும் பொழுது நாகேஸ்வரி குடும்பம் அம்மாவைத் தவறாது சென்று தரிசித்து வருகின்றனர். அவர் பிள்ளைகள், அம்மாவின் தலைமை ஆச்சிரமமான கேரளத்திலுள்ள அமிர்தபுரிக்கும் சென்று அம்மாவை தரிசித்து வருகின்றனர்.

அம்மாவின் பேரில் மீசாலையில் பழைய புகையிரதநிலையத்திற்கு அருகில் காணி ஒன்றை விலைக்கு வாங்கி அதில் பெரிய மண்டபம் ஒன்றை நிறுவிவருகின்றார். அம்மா நிச்சயம் வட இலங்கைக்கும் வருவார் என்ற அசைவற்ற நம்பிக்கையிலுள்ளார். அங்கு வந்து அவ்வாச்சிரமத்தில் தங்கியிருந்து இலங்கையின் உக்கிர போரினால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான அகதிகள், அனாதைகள், விதவைகள், அங்கவீனர்கள், மனநோயாளிகள் போன்றோர் வடிக்கும் இரத்தக் கண்ணீரைத் துடைக்க அம்மாவின் வருகை வரப்பிரசாதமாக அமையுமெனக் கருதுகின்றார்.

அம்மா பாலால் மூலவருக்கு
அபிஷேகிக்கின்றார்



அமிர்தானந்தமயிதேவி அம்மாவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிரமஸ்த்தான ஆலயத்தின் விக்கிரகத்தில் சிவன், அம்பாள், வினாயகர், இராகு ஆகிய தெய்வத்திருவுருவங்கள் ஒரே சிவலிங்கத்தில் நான்கு பக்கங்களிலும் அமைந்துள்ளன. இது வேறு எங்கும் காணமுடியாத தொன்றாகும். பக்தர்கள் நான்கு திசைகளிலுமிருந்து ஒரே நேரத்தில் பார்த்து வணங்கக் கூடியதாக உள்ளது. பெண் துறவிகளும் இதற்குப் பூசை செய்கின்றனர்.



பிரமஸ்த்தான ஆலயம்

ஸ்ரீமாதா அமிர்தானந்தமயி தேவியின் தேவிபாவதரிசனம்



48.சுனாமியால் இலங்கைத் தீவில் திருப்பாதம் பதித்த ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயிதேவி

கைலைமணி வேல்.சுவாமிநாதன்

எங்கள் இலங்கைத்தீவில் 26.12.2004ம் ஆண்டு காலை ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் மக்கள் பட்டதுயரம் அளப்பரியது, சொல்லவொண்ணாதது. இச் சுனாமியால் பாதிப்படைந்த நாடுகளின் தேவையை அறிந்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிய முதற் பரோபகாரி மாதா அமிர்தானந்தமயிதேவியே. சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளுக்கு விசுவாசம் மிக்க தமது துறவிகளை அனுப்பிவிட்டு, இலங்கைக்கு தானே நேரில் வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்கூறி 15000 சேலைகளும், வேட்டிகளும் கொடுத்தார். அப்பொழுது இந்நாட்டின் ஜனாதிபதியாய் இருந்த சந்திரிக்கா குமாரதுங்க அவர்களினதும், முன்னாள் பிரதமரும் தற்போதய ஜனாதிபதியுமாகிய மகிந்த ராஜபக்ஷாவினதும் வேண்டுகோளுக்கு இணங்க தென்மாகாணத்திலுள்ள தேக்காவத்தையிலும், கிழக்கு மாகாணத்திலுள்ள பெரிய நிலாவணையிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அம்மா நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழக் கூடிய பலமான மாடிவீடுகளைத் தமது துறவிகளின் மேற்பார்வையில் கட்டிக் கொடுத்தார். இதற்கு ஏற்பட்ட செலவு கிட்டத்தட்ட ஏழரைக் கோடி ரூபாவாகும். மேலும் இலங்கை அரசாங்கம் சம்மதித்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிறுவர் இல்லங்களையும், அனாதைப்பெண்களுக்கு ஓய்வூதியத்தையும் வழங்கவும் அம்மா முன்வந்தார்.

சுனாமியாலும், பூகம்பத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சம் வீடுகளையும் அதனால் ஏற்பட்ட விதவைகளுக்கு மாதா மாதம் ஓய்வூதியத்தையும் சிறுவர் இல்லங்களையும், வயோதிபர் இல்லங்களையும் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமைத்துத் திறம்படப் பராமரித்து வருகிறார். அம்மாவின் இப்பாரிய திட்டங்களைச் செயல்ப்படுத்த முதுகெலும்பாய் உள்ளவர்கள் அவரின் பல்லாயிரக்கணக்கான ஆன்மீகத் துறவிகளும், தொண்டர்களுமே. இப்படியான பெரும் செலவில் பொதுப்பணிகளையும், அருட்பணிகளையும் செய்யும் இந்த அம்மா ஒரு தனவந்தரா? அல்லது கோடீஸ்வரியா?


இல்லவே இல்லை. கேரளாவிலுள்ள பறய கடவு என்ற சிறிய கிராமத்தில் மீனவர் குடும்பத்தில் பிறந்த ஐந்தாம் ஆண்டும் படிக்காத ஏழைப்பெண்ணே, உலகத்திலுள்ள பெரிய கோடீஸ்வரர்களின் கொடைகளையும் விஞ்சுமளவுக்கு தானதர்மங்களைச் செய்து வருகின்றார்.

அம்மாவின் மகிமைகளையும், அற்புதங்களையும் அறிந்த மக்கள் அவரிடம் சென்று தங்களின் துயரங்களையும், நோய்களையும் கூறி அவற்றை நீக்கும்படி பயபக்தியுடன் வேண்டினர். அம்மா அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வந்தார். இச் செய்தி பிறதேசங்களுக்கும் பரவியது.அங்குள்ள பலர் அம்மாவின் கிராமமான பறய கடவுக்கு வந்து அதாவது அமிர்தபுரிக்கு வந்து அங்கு அம்மாவுடன் சேர்ந்து வாழவும் தொடங்கிவிட்டனர். இன்று அமிர்தபுரி ஆச்சிரமத்தில் 4,000 க்கு மேற்பட்ட பக்தர்களும், பிரமச்சாரிக ளும், பிரமச்சாரிணிகளும் அங்குள்ள மாடிக் கட்டட அறைகளில் இருந்து கொண்டு தியானப்பயிற்சியையும் சமய சமூகத் தொண்டுகளையும் ஆற்றி வருகின்றனர். பிற நாட்டவர்கள் 1987 தொடக்கம் அம்மாவைத் தங்கள் நாடுகளுக்கு அழைத்துச் சென்று அம்மையின் ஆசியையும் அருளையும் பெற்றுவருகின்றனர். இன்று அம்மாவுக்கு 191 நாடுகளில் சீடர்களும் ஆச்சிரமங்களும் உண்டு. அவர்கள் உலகளாவிய ரீதியில் மக்களுக்குச் சமய, சமூகத் தொண்டுகளைச் செய்து வருகின்றனர்.


2003ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் அம்மாவின் ஐம்பதாவது பிறந்த நாள் விழா கொச்சியிலுள்ள பிரமாண்டமான விளையாட்டு மைதானத்தில் நான்கு நாட்களாக நடைபெற்றது. இதில் 191 நாடுகள் உட்பட 5 இலட்சம் மக்கள் பங்கு பற்றி அம்மாவின் அருளையும் ஆசியையும் பெற்றனர். அந்நாட்களில் அம்மா 23 3/4 மணித்தியாலங்கள் தொடர்ந்திருந்து அவரிடம் வந்த பக்தர்களை அன்புடன் அரவணைத்து முத்தமிட்டுப் பிரசாதங்களையும் கொடுத்து அவர்களின் துன்பங்கள் தீர, ஆசியையும் வழங்கினார். இந்நிகழ்ச்சி யின் போது அம்மா உணவோ, நீராகாரமோ, ஆறுதலோ எடுக்கவில்லை. இருந்த இடத்தைவிட்டு நகரவுமில்லை. அம்மா ஒரு அவதார தெய்வம். அதற்கு ஏது பசி, தாகம், தூக்கம், களைப்பு, துயர், துன்பம், அம்மாவிடமிருந்து அருளென்னும் நதி இப்பிரபஞ்சம் முழுவதும் பாய்கின்றது. சகலரது துன்பங்களையும் துடைக்கின்றது.

அம்மா தமது 22 ஆவது வயதில் கிருஷ்ண பாவதரிசனம் அளித்து மக்களின் குறைகளைத் தீர்த்து வந்தார். ஆறு மாதத்தின் பின் தேவியின் ஐக்கியமான அனுபூதியையும் பெற்றார். இதன் பின் அம்மா கிருஷ்ண பாவத்திலிருந்தும் தேவி பாவத்திலிருந்தும் அருளாட்சி புரிந்து வந்தார். 1983 ஆம் ஆண்டின் பின் கிருஷ்ணபாவ தரிசனத்தை நிறுத்தி தேவிபாவ தரிசனத்தில் மட்டும் காட்சியளித்து வந்தார். அதையும் தற்சமயம் குறைத்துக் கொண்டுள்ளார். நான் எனது மனைவியுடன் 2002ம் ஆண்டு பறயகடவிலுள்ள அமிர்தபுரிக்குச் சென்று அம்மாவின் தேவி பாவதரிசனத்தைக் கண்டு களித்தேன். அம்மா அன்று பிற்பகல் நாலு மணி தொடக்கம் தனது ஆசனத்தில் இருந்து கொண்டு பக்தர் ஒவ்வொருவரையும் தன்மடியில் கிடத்தி ஆரத்தழுவி முத்தமிட்டு அவர்களின் குறைகளை அறிந்து அதை நிவர்த்திசெய்து பிரசாதப் பொட்டலங்களையும் வழங்கினார். அன்று 20,000ம் பக்தர்களுக்குத் தரிசன அனுமதி இலக்கத்துண்டு வழங்கப்பட்டது. (Token No.) மறுநாட் காலை 9.00 மணியளவிற்தான் தரிசனம் நிறைவேறியது. நாங்கள் இருவரும் அம்மாவின் மடியில் கிடந்தபோது எங்கள் காதுகளில் ஆசிகளைக் கூறி, 'நீங்கள் இலங்கையர்கள் தானே?' என்று வினவி தன் அருகில் இருக்கும் படியும் கூறினார். நாங்கள் அம்மாவின் அருகில் இருந்து கொண்டு அம்மாவின் அஷ்டோத்தர சதநாமவளியையும் (108) ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமவளி (1000) யையும் ஓதிக் கொண்டிருந்தோம். அம்மாவின் மடியில் பக்தர்களைக் கிடக்கவைக்கும் தொண்டுகளைச் செய்யும் சீடர்கள் களைப்படைந்து மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருமுறை மாறிக் கொண்டிருந்தனர். அம்மாவோ தொடர்ந்து பக்தர்களை அணைத்தும் முத்தமிட்டுக் கொண்டும் இருந்தார். அவரின் முகத்தில் வாட்டமோ, களைப்போ தென்படவில்லை. பக்தர்களின் குறைகளைக் கேட்கும்போது அதற்கேற்றவாறு முகபாவம் மாறிக்கொண்டே இருந்தது. முத்தமிட்டுக்கன்றிய அம்மாவின் கன்னம் கறுத்திருந்தது. இறுதியில் பாதபூசையும், ஆரத்தியும் நடைபெற்றன. தமது அறைக்குச் செல்லும் வழியில் இருந்த பக்தர்களின் கரங்களை முத்தமிட்டுக் கொண்டே சென்றார். தமது அறையின் வாசலில் குழுமியிருந்த சீடர்களுடன் சிரித்துக் கலகலப்பாகப் பேசிவிட்டு, தம் அறைக்குட் புகுந்தார்.

சிறிது நேரத்தின் பின் தன் அறையிலிருந்து வெளியே வந்த அம்மா, பொதுஜன மலசல கூடங்களைச் சென்று பார்வையிட்டார். அவை அசுத்தமாய் இருப்பதைக் கண்டு விளக்குமாற்றால் தண்ணீர் ஊற்றிச் சுத்தம் செய்தார்.



துன்பத்தால் கதறி அழும் மூன்று பக்தர்களை ஒரே நேரத்தில் கட்டி அணைத்து ஆறுதல் அளிக்கும் அம்மா.



பாரமான கொங்கிறீற் கற்களை டிராக்டரில் ஏற்றும் அம்மா.

அதன்பின் ஆச்சிரமத்திற்குரிய கோ சாலைக்குச் சென்றார். அங்குள்ள மாடுகளுக்குத் தீவனம் போதியதாகக் கொடுக்கப்படாமையால் புல்லுக்கட்டை எடுத்து அவைகளுக்குத் தன் கரத்தால் ஊட்டி அவைகளைக் கட்டி அணைத்து முத்தமிட்டார். அதன் பின் கட்டடவேலை நடக்கும் இடத்திற்குச் சென்று செங்கட்டிகளைத் தலையிற் சுமந்து சென்று அங்குள்ள கட்டடத் தொழிலாளர்களை ஊக்குவித்தார். அதன்பின் சமையற் கூடம் சென்று அங்குள்ள தொண்டர்களுடன் தானும் சேர்ந்து சமையலுக்கு உதவினார். அதன்பின் காரியாலயத்திற்குச் சென்று அங்கு அம்மாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அரச உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அப்பொழுது நேரம் பிற்பகல் நாலு மணி. இவற்றை எல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த நாம் எங்கள் அருகால் சென்ற காவியுடைதரித்த பிரமச்சாரியிடம் "அம்மா தன்னை வருத்தி நாட்கணக்காக ஊண், உறக்கமின்றி தொடர்ந்து கடினமான வேலைகளைச் செய்கின்றாரே இது அவருடைய தேக நலத்தைப் பாதிக்காதா?" என்று அவரை வினவியபொழுது அவர் பகர்ந்ததாவது; "அம்மா கிழமைக்கணக்கில் தொடர்ந்து இரவு பகலாக ஊண், உறக்கமின்றி செயற்படும் தெய்வீகத்தன்மை கொண்டவர். இருந்தும் இங்குள்ள மூத்த துறவிகள் அம்மாவை சிறிது நேரமாவது ஓய்வெடுக்கும்படி பலமுறை வேண்டிய பொழுதும், தான் ஊதுபத்தி போல் மக்களுக்குச் சேவை செய்யப் பிறந்தவள்" என்று கூறுவாராம். அம்மா இதுவரை 35 வருடங்களில் கிட்டத்தட்ட இரண்டு கோடியே எண்பது இலட்சம் மக்களைக் கட்டி அரவணைத்து ஆறுதல் அளித்துள்ளார். வெளிநாட்டவர்கள் அம்மா வைக்கட்டி அணைக்கும் தாய் (Huging Mother) என அழைப்பர்.

அம்மாவுக்கும் ஏனைய ஆன்மீகத் தலைவர்களுக்கும் இடையில் பாரிய வித்தியாசத்தை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அனேகமான தபோதனர்கள் தம் திருமேனியை வேண்டத் தகாதவர்கள் தீண்டுவதை விரும்புவதில்லை. வேறு சிலர் ஒரு தரத்தினரைத் தீண்ட அனுமதித்தும் ஏனையோரிடமிருந்து விலகியும் கொள்வர். தீவினைப்பயன் மிக்கவர்கள் தம்மைத் தீண்டியதனால் தம் உடல் எரிவதாகவும் ஒரு சிலர் பகர்ந்துள்ளனர். சிலர் மகா பாவிகள் தம்மைத் தீண்டினால் தம் தபோபலம் குன்றிவிடுமெனக் கருதுகின்றனர். அம்மாவோ சகலரையும் வரித்து இழுத்து ஆரத்தழுவுகின்றார். காரணம் அவர் ஒரு அவதார தெய்வம்.

அம்மா தமது சீடர்களுக்கும், தொண்டர்களுக்கும் பூசை புனஸ்காரங்களுடன் தவ, தியானப் பயிற்சிகளை அளிப்பது மாத்திரமல்லாமல், சமூகப் பணியையும் ஆற்ற ஊக்குவிக்கின்றார். இதைச் சுவாமி விவேகானந்தரும் "உலகத்துக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிரு" என்கின்றார். அனைத்து உயிர்களையும் தம் உயிராகக் கருதி அன்பையும், கருணையையும் பொழியும் படி போதிக்கின்றார். தீராத கடும் நோயினால் வேதனைதாங்க முடியாமல் அம்மாவை நினைந்து கதறி அழும் தீவிர பக்தர்களின் நோயை நீக்கி அதைத் தன் வசமாக்கி அதன் வேதனையால் துடிதுடித்து சில நாட்களுக்கு அவஸ்தைப்படுவார். அம்மாவின் அணுக்கத் தொண்டராக இருந்த ஒரு பிரமச்சாரிணி அம்மாவின் பணியைத் தொடர்ந்து செய்ய தனது மாதவிடாய் தடங்கலாக இருக்கிறது எனக்கூறி மனம் நோக, அம்மாவும் அப்பிரமச்சாரிணியின் மாதவிடாயை நிறுத்தி வைத்தார். அப்பிரமச்சாரிணி சிறிது காலத்தின் பின் மடத்தைவிட்டு வெளியேறியபோது அவரின் மாதவிடாயை மீண்டும் தொடரச் செய்தார்.

மந்திர தீட்சையைக்கூட கேட்பவர்களின் தகமை அறிந்தே கொடுக்கின்றார். அம்மாவுடன் அன்னியோன்னியமாகப் பழகிய சிலருக்கு சிறிது காலம் கழித்தே தீட்ஷா மந்திரத்தை வழங்கினார். தீட்ஷா மந்திரங்களைக் கேட்பவர்களுக்கு அவர்களின் இஷ்ட தெய்வத்தை தம் ஞான சக்தியால் அறிந்து அத்தெய்வங்களுக்குரிய மந்திரத்தையே ஓதுகின்றார். பிள்ளைவரம் கேட்டு அம்மாவிடம் அணுகிய பலரில் அதற்குத் தகமையுள்ளவர்களுக்கு மட்டுமே பிள்ளைப் பேற்றை வழங்கியுள்ளார். அம்மாவின் அருளால் கருத்த தரித்த ஒரு பக்தை 16வது மாதத்தில் பிள்ளையைப் பிரசவித்தார். தாயும் சேயும் சுகமாக வாழ்கின்றனர்.

மரணத்தறுவாயில் அம்மாவைத் தேடிவந்த பக்தர்களையும், மிருகங்களையும் தம்மடியில் வைத்து முத்தியின்பத்தை வழங்குகின்றார். ஆரம்ப காலத்தில் பெற்றோரிடமிருந்து அம்மா சில மாதங்கள் பிரிந்திருந்த போது தூரத்திலிருந்து ஒரு பசு தினமும் வந்து அம்மாவுக்குத் தனது பாலை ஊட்டியது. நாயும் பருந்தும் உணவுகளைக் கொண்டுவந்து அம்மா முன் போட்டன. அம்மாவின் உடன் பிறந்த சகோதரன் சுபகன் மரண மடைந்தான். பெற்றோர்களும், ஏனைய சகோதரர்களும் அவன் பிரிவாற்



நாயையும், பக்தர்களையும் வேறுபாடின்றி அரவணைத்து முத்துமிட்டு அபயமளிக்கும் அம்மா.



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் அம்மாவின் கரங்களைக் கைப்பற்றிய வண்ணம் கதறி அழுது ஆறுதல் பெறும் காட்சி



2002இல் ஜெனீவாவில் காந்தி - கிங் அகிம்சைக்கான விருதைப் பெறுகின்றார் அம்மா



செடிகளுக்கும் பூமாலை இட்டு வணங்குகின்றார் அம்மா.


துன்பப்பட்டபோது, அம்மா அவர்களிடம் "வேதனைப்படாதீர்கள் சுபகன் மூன்று வருடத்தில் எங்கள் சகோதரியின் பிள்ளையாகப் பிறக்கப் போகின்றான்" என்று ஆறுதல் கூறி, அவனுக்கு சிவன் என்ற நாமத்தையே வைக்கவேண்டுமென்றார். அம்மாவின் அருள்வாக்கால் மூன்று வருடத்தில் சிவன் பிறந்தான். தற்சமயம் அவன் நல்ல பக்திமானாக விளங்குகின்றான். அம்மாவுடன் அன்னிய நாட்டவர்கள் எந்த மொழியில் பேசினாலும் அதைக் கிரகிக்கும் தெய்வீக சக்தி படைத்தவர். சித்து வேலைகள் செய்வதை அம்மா விரும்புவதில்லை. அற்புதங்கள் மட்டுமே செய்கின்றார். அம்மா சாதி, சமயம், மொழி, நாடு, ஏழை, பணக்காரன், படித்தவர், பாமரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், தொற்று நோயாளிகள், சுகதேகிகள் என்றபேதம் எதுவும் இல்லாதவர். மரம், செடி, கொடி, மிருகங்களையும் அணைத்து முத்தமிடுபவர். உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் அம்மாவின் பிள்ளைகளே என்பார். அம்மா புரிகின்ற அற்புதங்கள் ஏராளம் ஏராளம். அவை சொல்லவொண்ணாதது. அவற்றில் ஒன்றை மட்டும் இங்கு கூறவிழைகின்றேன்.

அம்மாவின் நூற்றுக் கணக்கான வைத்தியசாலைகளில் முதன்மையாக இருப்பதுவும், தென் ஆசியாவிலேயே சிறந்ததுமான கொச்சியிலுள்ள அதிநவீன எய் ம் ஸ் (A.M.I.S) (Amirta Institute of Medical Science) வைத்தியசாலையாகும். இதில் 1,300 நோயாளிகளின் படுக்கைகளுண்டு 10 சத்திரசிகிச்சைக் கூடமும் (Operation Theatre) உண்டு. இதன் நிர்வாக இயக்குனர் ஒரு மலையாளியாவார். இவர் முன்பு அமெரிக்காவிலுள்ள ஒரு பிரபல வைத்திய சாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றினார். அம்மா அமெரிக்கா சென்றபோது, அவரின் தரிசனத்தைப் பெறவந்த அவ் அதிகாரியிடம் உமது உடம்பில் ஒரு பயங்கர நோயின் அறிகுறி தென்படுகின்றது, அதற்குரிய வைத்தியத்தைச் செய்யுமாறு கூறினார். அம்மாவின் கூற்றை அப்பொழுது அவர் நம்பவில்லை. இருந்தபோதும் அவர் பல வைத்தியசாலைகளில் பல பரிசோதனைகளை மேற்கொண்டும் அப்படி ஒரு நோயின் அறிகுறி இருப்பதாகத் தென்படவில்லை. அம்மா அடுத்த வருடம் அமெரிக்காவுக்குச் சென்றபோது வைத்திய அதிகாரியும் அம்மாவின் தரிசனத்திற்குச் சென்றார். அப்பொழுது அம்மா "உமது நோய்க்கு இது வரை எதுவித வைத்தியமும் செய்யவில்லையா? இப்பொழுதும் அந்த நோய் இருக்கின்றது" என்று கூறினார். அம்மாவின் கூற்றை நம்ப முடியாமல் இருந்த வைத்திய அதிகாரி மீண்டும் வேறுபல பரிசோதனைகளை

மேற்கொண்டபோது அம்மா கூறியது போல் அந்நோய் ஆரம்பநிலையில் இருப்பதைக் கண்டு, அதற்குரிய வைத்தியத்தையும் செய்தார். தனது நோயை பல விஞ்ஞான பரிசோதனையின் பின் அறிந்ததை, அம்மா தனது ஞானக்கண் கொண்டு சில நொடிகளில் அறிந்ததை உணர்ந்த அவ்வைத்திய அதிகாரி அம்மாவின் தெய்வீக சக்தியால் ஈர்க்கப்பட்டு எய்ம்ஸ் வைத்தியசாலையில் நிர்வாக இயக்குனராக இன்று தொண்டாற்றி வருகின்றார்.

அம்மாவின் பெயரில் உலகளாவிய ரீதியில் நூற்றுக் கணக்கான பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும், வைத்தியசாலைகளும், சிறுவர் இல்லங்களும், வயோதிபர் இல்லங்களும், அனாதைகள் இல்லங்களும், பிரமஸ்தான ஆலயங்களும், 300 ற்கு மேற்பட்ட ஆச்சிரமக் கிளைகளும் 1000 ற்கு மேற்பட்ட சற்சங்க சமித்திகளும், திறம்பட நடைபெற்று வருகின்றன. குஜறாத் மாநிலத்தில் 2001ம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1,500 வீடுகளும் பாடசாலைகளும், நூல் நிலையங்களும், வைத்தியசாலைகளும் கட்டிக்கொடுத்துப் பராமரித்தும் வருகின்றார். அகில இந்திய ரீதியாக 50,000 ஏழை மக்களுக்குத் தினமும் உணவளித்து வருகின்றார். ஒரு இலட்சம் ஏழை வயோதிபர்களுக்கும், விதவைகளுக்கும் ஓய்வூதியம் மாதா மாதம் வழங்கப்பட்டு வருகிறது. 1,25,000 வீடுகள் திட்டமிட்டுக் கட்டப்பட்டு அம்மாநிலங்களில் உள்ளோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. வருடா வருடம் அம்மாவின் பிறந்த நாளன்று பல நூற்றுக்கணக்கான ஏழை மணமக்களுக்கு நகைகளும் உடுப்புகளும் கொடுத்துத் திருமணம் நடாத்தப்பட்டு வருகிறது.

அம்மா முக்காலத்தையும் அறிபவர் என்பதற்கு ஒரு பயங்கர நிகழ்ச்சியை இங்கு கூறவேண்டியுள்ளது. 2003ம் ஆண்டு ஆடி மாதம் ரோட் ஐலண்ட் என்னும் இடத்தில் நடைபெற்ற தேவிபாவ தரிசனத்தின்போது அங்குள்ள மக்களுக்கு 2004ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்திற்கு அடுத்தநாள் கடற்கரையோர மக்களுக்கு கடலால் பேரழிவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு தென்படுகின்றதென்று எதிர்வு கூறினார். அதை மக்கள் அவ்வளவாகக் கருத்திற் கொள்ளவில்லை. அம்மாவின் பறயகடவுக் கிராமமும், அமிர்தபுரியும் கடலோரத்தில் இருப்பதால் முன் எச்சரிக்கையாக அம்மா பல்லாயிரக் கணக்கான ஏழைகள் அமிர்தபுரிவந்து ஓய்வூதியம் பெறும் நாளான 26ம் திகதியை பிற்போட்டு அன்று எவரும் அமிர்தபுரிக்கு வரவேண்டாம் என



களுத்துறை மாவட்டத்திலுள்ள தேக்க-வத்தையில்
கட்டப்பட்டுள்ள நிரந்தர குடியிருப்புகள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள பெரியநீலாவணையில்
(கல்முனை) கட்டப்பட்டுள்ள நிரந்தர
குடியிருப்புக்கள்



இலங்கையில் சுனாமியால் வீடுகளை இழந்த தெற்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு அம்மாவால் கட்டிக்கொடுக்கப்பட்ட மூன்றுமாடிக்குடி மனைகள். இதற்கு முன்னோடியாக அம்மா 15000 சேலைகளையும், வேட்டிகளையும் வழங்கினார்.

அறிவித்தும் இருந்தார். கடற்கரையோர மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படியும் கூறினார். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் 2004ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட சுனாமியிலிருந்து அம்மாவின் அருளால் காப்பாற்றப்பட்டனர்.

உலகப் புகழ்பெற்ற B.B.C. நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அம்மா இப்படிப்பதிலளித்தார்.

நிருபர் :- அம்மா! எப்படி உங்களால் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களை ஊண், உறக்கமின்றிக் கட்டித்தழுவி ஆசீர்வதிக்க முடிகின்றது?

அம்மா :- "எப்படி ஒரு ஜீவநதி இரவு பகலாகத் தொடர்ந்து பாய்ந்து மக்களுக்குப் பயன் தருகின்றதோ, அப்படியே என்னிடமிருந்து ஊறும் அன்பு, கருணை என்னும் தெய்வீகநதி பக்தர்களை அரவணைத்து அவர்களின் அக, புற நோய்களை துடைக்க வைக்கின்றது. நதியின் ஓட்டம் இயற்கைபோல் இதுவும் இயற்கையே" என்றார் அம்மா.

2003ம் ஆண்டு மார்கழி மாதம் (10-01-2003) அம்மா இராமேஸ்வர மீனவர்களுக்கு அமிர்தகுடிதம் திட்டத்தின் கீழ் 108 இலவச வீடுகளை வழங்குவதற்குச் சென்றிருந்தபோது நானும் என் மனைவியுடன் இராமேஸ்வரம் சென்றேன். நாங்கள் இருவரும் அதிகாலை நான்கு மணிக்கு அம்மாவிடமிருந்து மந்திர தீட்சையைப் பெற்றோம். அம்மா 2006ம் ஆண்டு இலங்கை வந்தபோது, வெள்ளவத்தையிலுள்ள ஒரு வீட்டில் அம்மாவின் தரிசனத்தைப் பெற்றோம். அப்பொழுது எனது மனைவி தனக்குக் கொடுத்த தீட்சை மந்திரத்திலுள்ள சந்தேகத்தைக் கேட்டபோது அம்மா உடனே "உங்கள் இருவருக்கும் ஒரே மந்திரத்தைத்தானே தந்தேன்" எனக்கூறி அந்த மந்திரத்தையும் ஓதினார். அப்பொழுது நாங்கள் இருவரும் திகைத்தோம். அம்மாவின் தெய்வீகத்தன்மையை நினைந்து கண்ணீரமல்கி அவர் திருப்பாதத்தில் வீழ்ந்து வணங்கினோம். தினமும் பலருக்குத் தீட்சா மந்திரத் தைக் கொடுத்துவரும் அம்மா 3 வருடங்களுக்கு முன் எமக்கோதிய மந்திரத்தை உடனே கூறினார் என்றால். அவர் தெய்வ அவதாரம் அல்லாமல் வேறு என்ன என்று கூறுவது.

23.02.2007 ல் அம்மா சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு

வீடுகளைக் கையளிக்க வந்தபோது அம்மாவுக்கு மாலை அணிவித்து லட்டுகளைப் பிரசாதமாக வைத்து நிகழ்ச்சி நிறைவேறும் வரை அவரருகில் நின்று ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமாவளியை ஓதும் பெரும் பாக்கியத்தையும் பெற்றோம்.

அம்மா உலக அரங்கிற்பெற்ற பரிசில்களும் பட்டங்களும், ஆற்றிய சொற்பொழிவுகளும் பல. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது.

- 1993 இல் அம்மா சிக்காக்கோவில் நடைபெற்ற சர்வமதப்பேரவையின் நூற்றாண்டு விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இங்குதான் 1893 இல் சுவாமி விவேகானந்தர் உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவை ஆற்றினார்.

- 1995 ஆம் ஆண்டு நியூயோக்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொன்விழாவின் போது விஷேட சொற்பொழிவாற்றினார்.

- 2000 ஆம் ஆண்டு நியூயோக்கில் நடைபெற்ற அகில உலக சமாதான உச்சிமகாநாட்டில் தலைமைப் பேருரையாற்றினார்.


- 2002 ஆம் ஆண்டில் காந்தி கிங் அகிம்சைக்கான விருதைப் பெற்றார். (Award)

- 2002 ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற அகில உலக பெண்கள் சமய ஆன்மீகத் தலைவிகளின் மகாநாட்டில் தலைமைப் பேச்சாளராகச் சொற்பொழிவாற்றினார்.

- 2004 இல் பார்சிலோனாவில் நடைபெற்ற அகில உலகச் சமய மகாநாட்டில் தலைமைச் சொற்பொழிவாற்றினார்.

- 25.05.2010 இல் நியூயோக் பல்கலைக்கழகம் அம்மாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 160 வருட பாரம்பரியம் கொண்ட இப் பல்கலைக்கழகம் இதுவரை திபேத்திய மதத் தலைவர் தலாலாமாவுக்கும், அம்மாவுக்கும் மட்டுமே கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.





முக்கிய அறிவிப்பு

ஆசிரமத்திலிருந்து வெளிவரும் மாத இதழ் மாத்ருவாணி சம்பந்தமான விவரங்களைத் தெரிந்து கொள்ள matruvani@amritapuri.org. என்னும் விலாசத்திற்கு e.mail செய்யவும்.

அமிர்தபுரியில் (ஆசிரமத்தில்) தங்கும் வசதி பற்றிய விவரங்களை அறியவும். ஆசிரமத்திற்கு வருவதற்கு முன் விவரம் அறிவிக்கவும் தொடர்புகொள்ள வேண்டிய e.mail விலாசம்: stay@amritapuri.org.

மாத்ருவாணி சந்தாப் படிவம்

மாத்ருவாணியின் சந்தாதாரராக: சந்தா எண்ணைப் புதுப்பிக்க விரும்புகிறேன். ஆண்டுச் சந்தா ரூ.50 ஆயுள் சந்தா ரூ.500

சந்தா எண்..... மணி ஆர்டர் / டிராப்ட் அனுப்புகிறேன்.

பெயர் .....

முகவரி .....

.....

மாவட்டம்..... பின்.....

☐ஆண்டு சந்தா ☐ஆயுள் சந்தா ☐3வருட சந்தா ☐5வருட சந்தா

☐தமிழ் ☐மலையாளம் ☐ ஆங்கிலம் ☐ ஹிந்தி ☐ கன்னடம்

☐தெலுங்கு ☐ மராட்சி ☐ குஜராத்தி ☐ பெங்காலி

அவசியமானதில் சரி செய்யவும்.

ட்ராப்ட் நம்பர்..... வங்கி.....

மணி ஆர்டர் ரசீது நம்பர்.....

தேதி.....

.....

அனுப்ப வேண்டிய முகவரி: The Publisher

தபால் அட்டை

வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை 600 017.

வாசகர் கருத்தாய்வு

அன்புள்ள வாசகர்களுக்கு,

வானதி பதிப்பகத்தின் வெளியீடுகள் குறித்த தங்கள் கருத்துகளை அறிந்துகொள்ள விரும்புகிறோம். தாங்கள் வாங்கிய புத்தகம் ரூ. 250 அல்லது அதற்கு மேல் விலையுள்ள புத்தகமாக இருந்தால் ரூ.300 மதிப்புள்ள புத்தகங்களை இலவசமாகப் பெறுவதற்கான வாய்ப்பு இது.

பெயர் ..... வயது .....

முகவரி .....

.....

.....

தொலைபேசி ..... மின்னஞ்சல் .....

☐ ஆன்மிகம் ☐ வரலாறு ☐ அறிவியல் ☐ சமையல் ☐ சுயமுன்னேற்றம்

☐ பொது ☐ நாவல்கள் ☐ சிறுகதைகள் ☐ கட்டுரைகள்

☐ குழந்தைகள் ☐ கவிதை ☐ இதழ்கள் ☐ மொழிபெயர்ப்பு

வானதி பதிப்பகத்தின் எந்த புத்தகத்தை முதன்முதலில் படித்தீர்கள்?

.....

தங்களுக்குப் பிடித்த வானதி பதிப்பக புத்தகம் எது? ஏன்?

.....

.....

தங்களுக்குப் பிடிக்காத வானதி பதிப்பக புத்தகம் எது? ஏன்?

.....

.....

வானதி பதிப்பகத்தின் எந்தெந்த புத்தகங்களை இனி வரும் காலங்களில் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

.....

.....

தங்களுடைய மேலான கருத்துகளை எங்களுக்கு எழுதுங்கள். *anuradhaimanian@gmail.com* என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் தங்கள் கருத்துகளை அனுப்பலாம்.

அன்புடன்,

அனுராதா இளங்கோவன்

The Publisher

அம்மாவின் வரலாறும், போதனைகளும், சொற்பொழிவுகளும் நிறைந்த 50ற்கு மேற்பட்ட நூல்கள் பல மொழிகளில் வெளிவந்துள்ளன. மாத சஞ்சிகையான மாத்ரு வாணி 15 மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அம்மாவின் அமிர்தபுரி ஆசிரமத்திற்கு விமானம் மூலம் கொச்சி அல்லது திருவனந்தபுரம் விமான நிலையம் சென்று அங்கிருந்து 120கி.மீ தூரத்தை தரைமார்க்கமாகச் சென்று அமிர்தபுரி ஆச்சிரமத்தை அடையலாம். புகையிரத வண்டி மூலம் செல்வதாயின் கொல்லம் புகையிரத நிலையத்தை அடைந்து அங்கிருந்து 36கி.மீ தூரத்தை பேருந்து மூலமோ, வேறு வாகனங்கள் மூலமோ கருநாகப்பள்ளியூடாக வள்ளிகாவிலுள்ள அமிர்தபுரிக்குச் செல்லலாம்.

ஆச்சிரமத்தின் விலாசம்:

மாதா அமிர்தானந்தமயி மடம்.
அமிர்தபுரி அஞ்சல்,
கொல்லம் மாவட்டம்,
கேரளம் - 690525.
தொ.இல:- 0476-2896278, 0476-2896399, 0476-2897578
பக்ஸ் இல:- 0476-2897678
E-mail:- mam@amritapuri.org
Website:- www.ammachi.org

எனது இறுதிமூச்சின் போதும் என் கரங்கள் துன்பத்தால் வாடுபவர்களை அரவணைத்து, முத்தமிட்டு, ஆறுதல்கூறி, அவர்களின் கண்ணீரைத் துடைப்பதே எனது ஒரே ஒரு ஆசையாகும். "அம்மா"

லோகா! ஸமஸ்தா! ஸுகினோ! பவந்து
(எல்லா உலகங்களும் இன்புற்றிருப்பதாகுக.)
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!



ஸ்ரீ மாதா அமிர்தானந்தமயிதேவி அம்மாவின் அமிர்தபுரி ஆச்சிரமத்தில் 4000 க்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பக்தர்களும், பிரமச்சாரிகளும், பிரமச்சாரிணிகளும், சீடர்களும் அங்குள்ள மாடிக்கட்டட அறைகளில் இருந்து கொண்டு தியானப் பயிற்சியையும் சமய சமூகத்தொண்டுகளையும் ஆற்றி வருகின்றனர். அம்மாவுக்கு 199 நாடுகளில் சீடர்களும், ஆச்சிரமங்களும் உண்டு உலகளாவிய ரீதியில் நூற்றுக்கணக்கான பாடசாலைகளும், பல்கலைக் கழகங்களும் வைத்தியசாலைகளும், சிறுவர் இல்லங்களும், வயோதிபர் இல்லங்களும், முந்நூறுக்கு மேற்பட்ட ஆச்சிரமக்கிளைகளும், ஆயிரத்திற்கு மேற்பட்ட சற்சங்கச்சமித்திகளும் திறம்பட இயங்கி வருகின்றன. அகில இந்திய ரீதியாக கிட்டத்தட்ட 50,000 ஏழைகளுக்கு தினமும் உணவளித்து வருகின்றார். வீடுகள் அற்ற ஏழைகளுக்கு 1,25000 வீடுகளைத் திட்டமிட்டுக் கட்டிக்கொடுத்தும் வருகின்றார். அம்மாவின் பிறந்த நாளன்று (புரட்டாதி 27ம் திகதி) வருடாவருடம் நூற்றுக்கணக்கான ஏழை மணமக்களுக்கு பவுண் நகைகளும் உடுப்புகளும் கொடுத்து திருமணம் நடாத்தி வருகின்றார். அம்மா இதுவரை 35 வருடங்களில் கிட்டத்தட்ட இரண்டு கோடியே எண்பது இலட்சம் பக்தர்களைக் கட்டி அரவணைத்து அவர்களின் துயரங்களை நீக்கியுள்ளார். அம்மா உலகரங்கில் பெற்ற பட்டங்களும், விருதுகளும், ஆற்றிய தலைமை அருள் உரைகளும் ஏராளம்.



Printed by: Luxmi Printer - 2448545, 2586751